www.padippakam.com



# இரக்கமற்ற கோழைகளின் அரசியலும், மனித அவலங்களும்

பி. இரயாகரன்

படிப்பகம்

www.padippakam.com

# இரக்கமற்ற கோழைகளின் அரசியலும் மனித அவலங்களும்

கட்டுரைகள்

**பி. இரயாகரன்**

**வெளியீடு**

**Tamil Circle Publication**
**France**

**இலங்கையில் -**

சகல முன்னணி
புத்தகக் கடைகளிலும்

**தமிழகத்தில் -**

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002,
இந்தியா.
தொலைபேசி 28412367

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

Irakkamada Kolaikalen Araceyalum Manitha Avalangalum /
Katturaikal / Author P. Rayakaran (C) /
32, rue Trouillet Derel 92600 asnieres
sur seine France / www.tamilcircle.net
tamilcircle@yahoo.no
First Edition : 10th November 2008 / Pages : VIII + 267
Sri Lankan Price : 270/= / Indian Price : 140/=

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com


| | | | |
|---|---|---|---|
| 01. | முன்னுரை | | |
| 02. | மக்கள் போராட்டம் என்றால் என்ன? | 1 | - 5 |
| 03. | தமிழ் மக்களின் சொந்தத் தீர்வு எது? | 6 | - 10 |
| 04. | மக்கள் என்பவர்கள் யார்? | 11 | - 14 |
| 05. | மக்களின் அடிப்படையான அரசியல் உரிமைகளை மறுப்பவர்கள் யார்? | 15 | - 18 |
| 06. | தோற்ற வழியும், தோற்காத வழியும் | 19 | - 23 |
| 07. | தமிழ் மக்களுக்கு எதிரான இரண்டு துரோகக் கும்பல்கள் | 24 | - 27 |
| 08. | வன்னி மக்களின் துயரங்கள் | 28 | - 31 |
| 09. | புலியிசம் என்பது என்ன? | 32 | - 35 |
| 10. | தமிழ் மக்களா புலியை பாதுகாக்கின்றனர் எனின் இல்லை, இந்த அரசு தான் பாதுகாக்கின்றது | 36 | - 41 |
| 11. | பாசிசப் புலி தோற்றுக் கொண்டிருக்கின்றது | 42 | - 48 |
| 12. | புலிகள் பின்வாங்குகின்றார்களா? அல்லது தோற்கின்றார்களா? | 49 | - 51 |
| 13. | புலிகள் போராட்டம் தோற்றுப் போவது ஏன்? | 52 | - 62 |
| 14. | புலியிசத்தை யாராலும் இனி காப்பாற்ற முடியாது. | 63 | - 70 |
| 15. | மக்களின் எதிர்பார்ப்பும், புலித் தலைவரின் அலட்சியமும் | 71 | - 73 |
| 16. | தவறாக வழிநடத்தப்படும் போராட்டம் தோற்கடிக்கப்படும் | 74 | - 80 |
| 17. | தமிழ் தேசியம் என்பது வேறு, புலித்தேசியம் என்பது வேறு | 81 | - 83 |
| 18. | தமிழ் தேசியம் என்பது தமிழன் ஒருவன் ஆளும் போராட்டமல்ல | 84 | - 86 |
| 19. | புலிகளும் ஆயுதத்தைக் கீழே போட்டால்! | 87 | - 91 |
| 20. | மனித அவலங்களை அரசியலாக்குகின்றனர் | 92 | - 93 |
| 21. | "அற்புத"மான பாசிச அலட்டல் | 94 | - 104 |
| 22. | புலியெதிர்ப்பை அரசியலாக கொண்டவர்கள் சார்பாக, தேனீ எமக்கு சொல்ல முனைவது என்ன? | 105 | - 126 |
| 23. | "புலியை அழிக்க பிசாசுடன் கூடியுள்ளோம்" புலியெதிர்ப்பு தத்துவஞானியின் பிரகடனம். | 127 | - 139 |
| 24. | பிசாசுகளுடன் மட்டுமல்ல, பேய்களுடனும் சேர்ந்தும் புலியை ஒழிக்கும் துரோகிகள் | 140 | - 141 |




படிப்பகம்

www.padippakam.com

25. புலித் தமிழீழமும், புலியொழிப்பும், தமிழ்மக்களின் பிரச்சனையைத் தீர்க்குமா! 142 - 143
26. புலியொழிப்பு அற்பவாதிகளும் நாங்களும் 144 - 147
27. எதிரியின் கைக்கூலிகளால் ஒருநாளும் ஜனநாயகத்தை உருவாக்க முடியாது 148 - 153
28. கிழக்குப் பாசிட்டுகள், வடக்கைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கு விடுத்த படுகொலை மிரட்டல் 154 - 158
29. புலியல்லாத ஒரு கொலைக்களமும், புலியெதிர்ப்பின் நிலைப்பாடும் 159 - 161
30. அரசியலில் வித்தை காட்டுவது 162 - 174
31. சிங்கள பேரினவாதமும் இராணுவ சர்வாதிகாரமும் கைகோர்த்து நிற்கின்றது. 175 - 176
32. மகிந்த சிந்தனை என்றால் என்ன? 177 - 181
33. புலி ஒழிப்பையா பேரினவாதம் நடத்துகின்றது? 182 - 184
34. யாழ் மக்கள் சுபீட்சமோ, பேரினவாத "ஜனநாயக"த்தில் கிடைக்கின்றதாம்! 185 - 189
35. தமிழன் என்றால் எதிரியா? தமிழன் என்றால் புலியா? 190 - 194
36. இனச் சுத்திகரிப்பு நடத்தும் பாசிட்டுகள் 195 - 199
37. சிங்கள முதலாளித்துவ பேரினவாதக் கட்சிதான், ஜே.வி.பி 200 - 204
38. ஜே.வி.பி முதலாளித்துவக் கட்சியே 205 - 208
39. புண் இருந்தால் சீழ் இருக்கும் 209 - 213
40. (கிழக்கு) மக்களின் பிரச்சனைகள் என்ன? 214 - 233
41. அரசு சாராத அமைப்புகள் யுத்தத்துக்கு துணைபோகும் கிரிமினல்களே 234 - 236
42. தேசியத்தை மறுப்பது என்பது சாராம்சத்தில் உலகமயமாதலை ஆதரிப்பதுதான் 237 - 240
43. உலகமயமாதல் நலன்களும், இந்திய நலன்களும் முரணானவையா? புலிகளின் நலன்கள் இந்த முரண்பாட்டிலா நீடிக்கின்றது? 241 - 247
44. பிரான்சில் தொடரும் புலிக் கைதுகள், ஏகாதிபத்திய தன்மை வாய்ந்தவையா? 248 - 252
45. பெரும்பான்மை திட்டம் பேரினவாதமே என்பதை இனம் காண்பதும், மாற்றாக குறைந்தபட்ச ஜனநாயகத் தீர்வும் 253 - 267



படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

அவலமும் துயரமும் நிறைந்த ஒரு சமூகம்தான் தமிழ் இனம். இன்று எனது தமிழ் சமூகத்தின் இருப்பபே கேள்விக்குள்ளாகியுள்ளது. இப்படி எந்த நம்பிகையுமற்ற நிலையில், எந்தத் துரும்புமின்றி சிதைக்கப்பட்டுள்ளது. மக்களை தலைமை தாங்கி செல்லும் வகையில், எந்த மாற்றும் கிடையாது.

இந்தப் போக்கினை அம்பலப்படுத்தும் கட்டுரைகளைக் கொண்ட ஒரு தொகுப்பு நூல் இது. பல்வேறு மனித அவலங்களை ஒருங்கே பேச முனைகின்ற இந்த நூல், உங்களுடன் இதைபற்றி உரையாட முனைகின்றது.

சிங்களப் பேரினவாதிகளும், புலிகளும், புலியல்லாத அரசு சார்பு குழுக்களும், தமிழ் மக்களை இரக்கமற்ற வகையில் தமது அடிமைகளாகவே நடத்துக்கின்றனர். மக்கள் அந்த கொடூரத்தை எதிர்கொள்ள முடியாது, அடங்கி ஒடுங்கி கைகட்டி நிற்கின்றனர். இப்படி இருத்தல் தான், தமிழ் மக்களுக்கு அழகு என்று பரஸ்பரம் கூறிக்கொள்கின்றனர்.

இதை மீறி எதையும் ஆக்கபூர்வமாகச் செய்யமுடியாது. அவை செய்யக்கூடாத ஒன்று. இப்படி எதையும் இவர்கள் அனுமதிப்ப தில்லை. இது மீறப்படும் போது, காணமல் போதல், கடத்தல், படுகொலை மூலம் பதிலளிக்கப்படுகின்றது. காலத்துக்கு காலம், இப்படி மாறி மாறி, தமிழ் இனத்தையே அழித்து சிதைத்து வந்தனர், வருகின்றனர்.

இந்த மனித துயரத்தை மனதால் நினைத்துப் பார்க்க முடியாது. இதை எழுத்தில் கொண்டு வரமுடியாது. அந்தளவுக்கு இந்த துயரம் கொடூமையானது, கொடூரமானது. அன்றாடம் இதை வாழ்வாக அனுபவிப்பவன் படுகின்ற வேதனைகள், படு பயங்கரமானவை.

உரிமையை கோரிய சமூகம், இன்று வாழ்வையே பறிகொடுத்து



படிப்பகம்

நிற்கின்ற பரிதாபம். சின்னச் சின்ன அற்ப உணர்வுகளைக் கூட, துயரம் நிறைந்த வாழ்வாக அனுபவிக்கின்ற ஒரு இனமாக தமிழினம் சிதைந்துவிட்டது. சாதாரணமான வாழ்வைக் கூட இயல்பாக வாழமுடியாத வகையில், மக்கள் விரோத சக்திகளின் கொடூரமான நடத்தைகள் செயல்கள் பதிலளிக்கின்றன.

இதனால் குடும்ப உறுபினர்களை இழந்து புலம்பும் குழந்தை, மனைவி, தாய். இப்படி பல உறவு சார்ந்த சமூகச் சிதைவுகள். அவர்களின் சொந்த அன்றாட வாழ்கையில் தொடரும் பற்பல சோகங்கள். இதை அற்பத்தனமாகவே எடுத்து, கண்டும் காணமல் விட்டுவிடுகின்ற புறக்கணிப்புகள். மனித உணர்வுகள் மீது, உணர்ச்சியற்று கல்லாகிப் போன சமூகத் தன்மை.

இதில் கணவனை இழக்கும் ஒவ்வொரு பெண்ணும் சந்திக்கும், மனித உணர்ச்சியும் உணர்வும் சார்ந்த பாலியல் நெருக்கடிகள். சமூகத்தில் இதை கண்டு கொள்ளாத அசாமந்தமான வக்கிரமான போக்குகள். ஒழுக்கமென்ற பெயரில், சமூக அதிகாரம் கொண்ட அதிகார மையங்கள். இப்படி எண்ணற்ற உளவியல் சார்ந்த, மனம் சார்ந்த மனித துயரங்கள். கண்ணுக்கு புலனாகாத வகையில், சமூகத்தினுள் சீழ் பிடித்து நாறுகின்றது.

இதன் மேல்தான் ஜனநாயகம் தேசியம் என்று, ஒன்றையொன்று எதிராக நிறுத்தியபடி அரசியல் நடனம் ஆடுகின்றனர். இவர்கள் மூச்சுக்கு மூச்சு மக்களின் விடுதலையைப் பற்றி பேசுகின்றனர். இந்த நூல் இதை அம்பலப்படுத்துவதுடன், சாதாரண மனிதனின் உள்ளடத்துடன் உணர்வுடன் நின்று பேச முற்படுகின்றது.

இப்படி மனித அவலங்களை பற்றி, மக்களுடன் பேச முற்படுகின்றது இந்த நூல். நாம் தீர்வாக ஒன்றை மட்டுமே கூற முற்படுகின்றோம். நாங்கள் வாழ்வில் உணர்கின்ற எங்களது பிரச்சனைக்கு, ஒரு தீர்வைத் தேடி நாங்கள் போராடாத வரை, மாற்று தீர்வு என எதுவும் எமக்கு கிடைக்கப்போவதில்லை. எப்படிப் போராடுவது என்பது கூட, நாம் எமது சொந்த சூழல் சார்ந்து கற்றுக்கொள்வதில் தான் அடங்கியுள்ளது. இதைவிட மாற்று எதையும், யாரும் தங்கத்தட்டில் ஏந்தி வந்து தரப்போவதில்லை.

19.12.2007

www.padippakam.com



# மக்கள் போராட்டம் என்றால் என்ன?

இது பிரதான முரண்பாட்டில் மட்டும் தனித்து இயங்குவதில்லை. மாறாக சமூகத்தில் நிலவும் அனைத்து முரண்பாடும், பிரதான முரண்பாட்டுடன் முழுமை தழுவியதாகவே இயங்குகின்றது. உதாரணமாக இனம், சாதி, வர்க்கம் என எந்த முரண்பாட்டிலும் ஒன்று எப்போதும் முன்னிலை பெற்ற போதும், மக்கள் இயக்கம் என்பது அந்த ஒன்றுக்குள் மட்டும் குறுகிவிடுவதில்லை.

ஒரு முரண்பாடு சார்ந்து ஒரு குறுகிய எல்லையில் போராட்டம் குறுகும் போது, அது இயல்பாகவே வரட்டுத்தனமாக மாறிவிடுகின்றது. இதனால் மக்களிடையே நிலவும் அனைத்தும் தழுவிய பன்முக முரண்பாடுகளை எதிராகப் பார்க்கின்ற அதேநேரம், அதை ஒடுக்குகின்ற போக்கும் வளர்ச்சியுறுகின்றது. உண்மையில் இந்த குறுகிய வரட்டுத்தனமான தன்மை என்பது, பிரதான முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய வகையில் பார்ப்பதை படிப்படியாக மறுத்து விடுகின்றது.

பிரதான முரண்பாட்டை சுரண்டுகின்ற வர்க்கம் தலைமை தாங்குகின்ற நிலை உருவாகும் போது, அதுவே முற்றாகவே மக்களுக்கு எதிரானதாக மாறிவிடுகின்றது. இதனால் பிரதான முரண்பாடு சுயநலம் சார்ந்து, அது சுரண்டும் வர்க்கத்தின் அற்ப தேவைகளை பூர்த்திசெய்யும் ஒரு முரண்பாடாக சீரழிகின்றது.

இந்த மக்கள் விரோத அரசியலை விமர்சிக்க மறுப்பவர்கள், இதற்குள் வம்பளப்பதன் மூலம் அரசியல் இழிதனத்தை கொண்டு பிழைக்கின்ற சுரண்டும் வர்க்கத்தினராகி விடுகின்றனர்.

பாராளுமன்ற அரசியல் கட்சிகள் முதல் பாராளுமன்றம் செல்லாத இயக்கங்கள் வரை, சுரண்டும் வர்க்க நலனை பேணுவதில் உள்ள வர்க்க ஒற்றுமையை நாம் காணமுடியும். அவர்கள் மக்களின்



படிப்பகம்

www.padippakam.com



வாழ்வியல் அவலத்தை உருவாக்கி, அதன் மூலம் தாம் மட்டும் பிழைத்துக் கொள்கின்றனர்.

இந்த வகையில் ஒரு இலட்சம் மக்களை பலியிட்ட தமிழீழப் போராட்டத்தை எடுப்போம். இப் போராட்டம் 25000 பேரை விடுதலையின் பெயரிலும், 10000 பேரை துரோகியின் பெயரிலும் கொன்று குவித்துள்ளது. பல பத்தாயிரம் விதவைகளை உற்பத்தி செய்துள்ளது. சில ஆயிரம் ஊனமுற்றவர்களை உற்பத்தி செய்தன் மூலம், சமூகமே ஊணமாக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தால் பல ஆயிரம் பேர் காணாமல் போய்விட்டனர். குடும்பங்கள் பிரிந்து ஆழமாகவே சிதறிவிட்டன. சமூக சீரழிவுகள், சமூக விதையாக எங்கும் எதிலும் ஊன்றப்பட்டுவிட்டன.

இது மட்டுமா! இல்லை. கோடி கோடியாக சொத்திழப்பு. சொந்த மண்ணை இழந்த புலம்பெயர்வுகள். எங்கும் சீரழிந்து போன அகதி வாழ்க்கை. சொந்த மண்ணை இழந்துவிடுகின்ற துயரம். ஒரு இனம் சிதறடிக்கப்பட்டு, சீரழிக்கப்பட்டுவிட்டது. ஒரு இனம் தனது தேசிய அடையாளங்களுடன் வாழமுடியுமா என்றளவுக்கு மாபெரும் வக்கிரமத்தை புகுத்திவிட்டனர். கண்ட கண்ட தெரு நாய்களெல்லாம், கண்ட கண்ட இடத்தில் மக்களை அடிபணிய வைத்துள்ளனர். இப்படி மக்கள் மீள முடியாத, வாழ்வின் அவலங்கள்.

இப்படி எத்தனை விதமான மனிதம் சார்ந்த உளவியல் துயரங்கள். அச்சம், பீதி, பயம், நித்திரை இன்மை, நம்பிக்கையீனங்கள், அவநம்பிக்கைகள், பாலியல் சிக்கல்கள், கண்ட கண்ட நாய்களுக்கு எல்லாம் சலாம் போட்டு வாழ வேண்டிய வாழ்க்கை. இப்படி எத்தனை எத்தனை மன அழுத்தங்கள். நம்பிக்கையற்ற வாழ்கை, விரக்தியே வாழ்வின் போராட்டமாகிவிட்டது. எங்கும் எதிலும் இதுவே தலைவிதி. துரோகி தியாகி என்ற எல்லைக்குள், மலடாக்கப்பட்டு விட்ட சமூகம்.

இந்தப் போராட்டம் இதை மட்டுமா தந்தது? இல்லை. சில ஆயிரம் முஸ்லிம் மக்களை கொன்று குவித்துள்ளது. அந்த மக்களுக்கும் முடிவற்ற அகதி வாழ்வு. தமது வாழ்ந்த மண்ணையே துறந்து விட்ட மனித அவலங்கள். இப்படி சொந்த நிலத்தை இழந்து, உழைத்த உழைப்புக்களை இழந்து, சொத்தையும் இழக்க வைத்துள்ளது போராட்டம். அத்துடன் பல பத்தாயிரம் சிங்கள மக்களையே கொன்று குவித்துவிட்ட போராட்டம்.

இந்தப் போராட்டம் எதைச் சாதித்தது. எதைச் சாதிக்க போகின்றது?



படிப்பகம்

www.padippakam.com



சரி மக்களுக்கு எதை பெற்றுத்தரப் போகின்றது. எதுவுமில்லை. மனித துயரத்தைத் தவிர வேறு எதையும் அல்ல.

இந்த அவலத்தில் இருந்து மக்கள் மீள முடியாத வகையில் விலங்குகளை போட்டபடி, ஒரே வர்க்கம் பல பெயரில் பலவிதமான குறுகிய தனது சொந்தக் கோசத்துடன், அனைத்தின் மீதும் ஆதிக்கம் வகிக்கின்றது. இந்த வகையில்,

1. பேரினவாதிகள் சிங்கள மேலாதிக்க கோசத்துடன் புலி ஒழிப்பு பற்றி சதா ஊளையிட்டுக் கொண்டு, தமிழ் மக்களை ஒடுக்கி மேலும் மேலும் ஆக்கிரமிக்கின்றது. இதன் மூலம் தமிழ் மக்களையும், சிங்கள மக்களையும் ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து சுரண்டுகின்றது.

2. புலியெதிர்ப்பு புலி ஒழிப்புவாதிகளோ புலியை ஒழித்தால்தான், தாம் சுதந்திரமாக தமிழ் மக்களை சுரண்டி வாழவும், அடக்கவும் முடியும் என்ற கனவுடன் புலி ஒழிப்பு பற்றி உளறுகின்றனர்.

3. புலிகள் தமது குறுகிய இனத் தேசியவாதமாக புலித் தமிழீழத்தை வைப்பதன் மூலம், தாம் மட்டும் சுரண்டி வாழும் வர்க்க வாழ்வைக் கொண்டு, தமிழ் மக்களை இழிவான நிலைக்கு அடிமைப் படுத்துகின்றனர்.

4. ஏகாதிபத்தியமும், இந்தியாவும் சமாதானம், மனிதவுரிமை மீறல் என்று கூறி இலங்கையில் தலையிட்டபடி, மொத்த மக்களையும் அடிமைப்படுத்தி சுரண்டுகின்ற மனித உரிமை மீறலை நிறைவேற்றி வருகின்றனர்.

இந்த எல்லைக்குள்தான், தமிழ் மக்களை வழிநடத்த முனைகின்றனர். இதை மீற முடியாத வகையில், இதற்குள் தமது அதிகாரத்தைக் கொண்டு அடிமைப்படுத்தியுள்ளனர். ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய வகையில், மக்களை இதற்குள் சிறைவைத்து அழகு பார்க்கின்றனர். மக்களை துயரப்படுத்துகின்ற இந்த அரசியல் சக்திக்கு, இவர்கள் கவர்ச்சியாக ஜனநாயகம் மனித உரிமை, உரிமைப் போராட்டம் என்ற விதவிதமான பெயர்கள்.

இப்படியான அரசியல் மூலம், மக்கள் பெற்றது என்ன? கடந்த மூன்று பத்து வருடங்களாக, இந்த அரசியல் மனித அவலத்தைத் தவிர வேறு எதையும் பெற்றுத்தரவில்லை. ஏன் இனியும் இந்த அரசியல் எதையும் பெற்றுத் தரப்போவதில்லை.



படிப்பகம்

www.padippakam.com



மக்கள் எதையும் தாம் பெறவேண்டும் என்றாலும், மக்கள் தமக்காக தாமே போராட வேண்டும். இது மட்டும் தான் உண்மை! யாராலும் இதை மறுக்க முடியுமா?

ஆனால் இதை மறுப்பவர்கள் தான், இன்று முழு சமூகத்தையும் ஆட்டிப்படைக்கின்றனர். மக்கள் சுயமாக சிந்திக்க, செயல்பட அனுமதிப்பதில்லை. புலியொழிப்பு, புலித் தமிழீழம் மட்டுமின்றி, இரண்டுக்கும் இடையில் ஒருமைப்பாடு காணும் சமாதானம் என்று கூறியபடி, முழுச் சமூகத்தையும் இதற்குள் அடிமைப்படுத்துகின்றனர்.

மக்கள் தாம் சுயமாக தீர்வு காணும் அனைத்து வழியையும், சிந்தனை முறைகளையும் அடக்குகின்றனர், ஒடுக்குகின்றனர்.

ஏகாதிபத்தியமும், பேரினவாதிகளும், குறுந்தேசிய வாதிகளும், புலியொழிப்புவாதிகளும் எந்த முரண்பாடுமின்றி, மக்கள் சுரண்டப் படுவதை ஆதரிக்கின்றனர். அதற்கு துணையான அரசியலையும், நடைமுறையைக் கொண்டு மக்களின் அடிமை வாழ்வை பாதுகாப்பதில் ஒன்றுபட்டு நிற்கின்றனர். தம்மையும், தமது சந்தர்ப்பவாதத்தையும் மூடிமறைக்க, நயவஞ்சகமாக பிரதான முரண்பாட்டை தீர்த்த பின் மற்றவைகளை தீர்க்க உள்ளதாக கூறி, மற்றவற்றை பின்போடுகின்றனர். இதேபோல் சமூக ஒடுக்குமுறைகளாகவுள்ள ஆணாதிக்கம், இன முரண்பாடுகள், சாதியம், பிரதேசவாதம் போன்றவற்றை, தமது வர்க்க நலனுக்கு ஏற்ப பாதுகாத்தபடி, அதை பேசுவதையே அனுமதிப்பதில்லை. அதை தாம் தமது வழியில் தீர்ப்பதாக கூறிக் கொண்டு திட்டமிட்ட வகையில் பாதுகாக்கின்றனர்.

மக்கள் இதை எதிர்த்து வாழ முடியாது. போராட முடியாது. தம் மீதான சுரண்டலை, தம் மீதான சமூக ஒடுக்குமுறையைப் பற்றி மூச்சுக் கூட விடமுடியாது. புலியொழிப்பு வாதிகளும், புலித் தமிழீழ வாதிகளும், இரண்டுக்கும் இடையில் ஒருமைப்பாடு காணும் சமாதானவாதிகளும், மக்கள்தம்மீதான அனைத்து ஒடுக்குமுறை பற்றியும் பேச அனுமதிப்பதில்லை. இதைத்தான் அவர்கள் மனிதனின் சுதந்திரம் என்கின்றனர், மனிதனின் ஜனநாயகம் என்கின்றனர்.

இதற்கு வெளியில் மனிதம் தனது ஜனநாயகத்தையும், தனது சுதந்திரத்தையும், தனது சொந்த விடுதலையையும் கோருகின்றது. மக்களின் எதிரியோ, மக்களை ஒடுக்குகின்ற வழிகளில் அதை பாதுகாக்கின்ற அரசியல் வழிகளில் தெளிவாக எம்முன் உள்ளான். அவனை ஒழிக்கும் மக்கள் போராட்டமின்றி, மக்களின் விடுதலை



படிப்பகம்

www.padippakam.com



கிடையாது. இது சாத்தியமற்றது என்று கூறுபவன் யார் என்று பார்த்தால், மீண்டும் அந்த எதிரிதான். அவன் வேறு யாருமல்ல, சுரண்டி வாழும் அந்த வர்க்கத்தின் பிரிதிநிதி தான். அவன் கடந்த மூன்று பத்து வருடங்களாகவே, இதைக் கூறிக் கொண்டு ஒரு சுரண்டும் வர்க்கமாகவே வாழ்கின்றான். இதன் மூலம் அந்த வர்க்கம் நடத்துகின்ற சுபீட்சமான வாழ்க்கையின் விளைவுகள் தான், இன்று எம் மக்கள் அனுபவிக்கின்ற மொத்த மனித அவலமுமாகும். இதிலிருந்து மீள்வதற்காக சிந்திப்பதும், போராட முனைவதையும் விட மாற்று வழிகள் எதுவும் கிடையாது.

***05.08.2007***



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் மக்களின் சொந்தத் தீர்வு எது?

இந்த விடையில் எமது நிலை என்பது தெளிவானதும், வெளிப்படையானதுமாகும். தமிழ் மக்களுக்கு வெளியில், எமக்கு என்று தனியான சொந்த நிலைப்பாடு எதுவும் கிடையாது. ஆனால் இதை புரியாத மாதிரி குழப்புவதில் தான், பிற்போக்கு சக்திகளின் சொந்த வர்க்க அரசியலே அடங்கிக் கிடக்கின்றது.

தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வாக, பொதுவாக இரண்டு வழிகள் தமிழர் தரப்பில் வைக்கப்படுகின்றது. இவ்விரண்டும் மக்களின் சொந்த நிலைப்பாட்டுக்கு எதிரானவை.

1. புலிகளால் புலித் தமிழீழம் வைக்கப்படுகின்றது.
2. புலியெதிர்ப்பு அணியால் புலியொழிப்பு வைக்கப்படுகின்றது.

இப்படி ஆதிக்கம் பெற்ற இந்த இரண்டு அரசியல் போக்கும், தத்தம் வழிகள் மூலமே, தமிழ் மக்களின் பிரச்சனையை தாம் தீர்க்க முடியும் என்கின்றனர்.

சரி தமிழ் மக்களின் பிரச்சனைகள் என்ன என்றால், அதை வறட்டுத்தனமாக ஒருமையில் திணிக்கின்றனர். அதை வெறும் பேரினவாதமாகவும், வெறும் புலியாகவும் காட்டுகின்றனர். இதற்கு அப்பால் சிந்திக்க, செயல்பட யாரையும் அனுமதிப்பதில்லை. குறிப்பாக அதன் அரசியல் சாரத்தை முன்வைக்க மறுப்பவர்கள். முன்வைக்க முனைபவர்களை ஒடுக்குவதே, இவர்களின் வர்க்க அரசியல் நிலையாகும். வலதுசாரி அரசியலின் கடைந்தெடுத்த கேடுகெட்ட போக்கிரிகளே இந்தக் கோட்பாட்டின் பிரதிநிதிகள்.

இதனால் இதை சாதிப்பதில் பேதம் எதுவுமற்ற மனித விரோதிகள் பேய்களுடனும் பிசாசுகளுடனும் கூடி இதை சாதிக்க முனைவதாக பிரகடனம் செய்கின்றனர். கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இந்த இரண்டு வழியில் பயணிக்கின்றனர். ஆயிரம் ஆயிரம் மக்களை இந்த வழியில் இவர்கள் கொன்று போட்டுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com



இந்த இரண்டு வழியை முன்வைப்பவர்கள், தெளிவாகவே மக்களை அணிதிரட்டுவதை நிராகரிக்கின்றனர். மக்களை அணிதிரட்டுவது சாத்தியமற்றதொன்று என்று, தமது சொந்த சுத்துமாத்து வழிகளில் கூறியே, அனைத்து மக்கள் விரோத செயலையும் செய்கின்றனர்.

நாம் இந்த இரண்டு வழியையும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் நிராகரிக்கின்றோம். நாம் முன்மொழிவது இந்த இரண்டு வழிக்கும் முற்றிலும் நேர்மாறானது. நாம் முன்வைப்பது புலியொழிப்போ, புலித்தமிழீழமோ அல்ல. மாறாக மக்கள் தமது சொந்த விடுதலைக்காக, தாம் போராடுவதேதான். இதை இந்த இரண்டு தரப்பும் தெளிவாக நிராகரிக்கின்றனர். இந்த வழியை, இன்று வரை சாத்தியமற்றது என்று இருதரப்பும் கூறுகின்றனர். குறுக்கு வழியில் குறுக்காக ஓடி இதைச் சாதிக்க முடியும் என்கின்றனர் அவர்கள். மக்கள் இதை சாதிக்க முடியாது என்பதால், அவர்கள் ஒதுங்கி வாழமுனைகின்றனர்.

இப்படித்தான் அன்று இந்தியா உதவியில்லாத தமிழீழமா என்றனர். இப்படி மக்களை நிராகரித்த படி, அன்னிய சக்திகளின் தயவில் இயங்கத் தொடங்கியவர்கள், படிப்படியாக மக்களையே எட்டி உதைக்கத் தொடங்கினர். மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சனைகள் தமது இந்த இலட்சியத்துக்கு எதிரானதாகவும், துரோகத்தனமானதாகவும் சித்தரித்தனர். அதை முன்வைத்தவர்களை துரோகிகளாக காட்டிக் கொன்றனர். இப்படி உள்ளியக்க வெளியியக்க படுகொலைகள் மூலம், அன்னிய சக்திகளின் தயவில் நின்று தமிழீழம் என்றனர்.

இப்படி தாம் மக்களுக்காக போராடி, மக்களின் விடுதலையை பெற்றுத் தரப்போவதாக கூறிக்கொண்டு, மக்களை ஒடுக்குவதன் மூலம் அரசியல் செய்தனர். இன்றும் அதைச் செய்கின்றனர். 1970 களிலும், 1980 களிலும் தமிழ்த் தேசியம் என்ற பெயரில் இயங்கிய காலத்தில் கூட, இவர்கள் மக்கள்தாம் தமது சொந்த விடுதலைக்காக போராட வேண்டும் என்பதை தெளிவாக நிராகரித்தவர்கள். இப்படி அன்று முதல் அந்த மக்களுக்கு எதிராக இயங்கத் தொடங்கியவர்கள். மக்கள் தமக்காக தாம் போராட முடியாதவர்கள் என்றனர். மக்கள் போராட்டம் என்பது சாத்தியமற்றது என்றனர். இதை மீறிய போது, யார் சாத்தியமற்றது என்றனரோ, அவர்கள் மக்கள் போராட்டங்களையும் அக்கருத்துக்களையும் ஈவிரக்கமின்றி ஒடுக்கினர். மக்கள் மத்தியில் தமது சொந்த விடுதலை சார்ந்து போராடிய போது அல்லது மக்கள் பிரச்சனை முன்னுக்கு வந்த போதெல்லாம் அதை ஒடுக்கத் தொடங்கினர்.



படிப்பகம்

www.padippakam.com



வெறும் இளைஞர்கள் போராட்டம், மக்களின் வாழும் உரிமையை மறுக்கத் தொடங்கினர். அதாவது மக்கள் உழைத்து வாழ்ந்த வாழ்வு சார்ந்த அன்றாட போராட்டம் ஒருபுறம், மறுபுறம் உழையாது பெற்றோரில் தங்கி வாழ்ந்த இளைஞர்களின் போராட்டம். இப்படி இரண்டு போராட்டம், இரண்டு திசையில் நேர் முரணாக விலகிச்சென்றது. உழைத்து வாழ்பவர்கள் மக்களாக தமது வாழ்வுக்காக போராடி வாழ, உழையாது வாழ்பவன் போராடுவதாக கூறிக்கொண்டு சுரண்டி வாழும் முரண்நிலை உருவானது. இதுவே இன்று வரை தொடருகின்றது. இரண்டு வர்க்க உள்ளடக்கத்தில் பிரிந்து, ஒட்டமுடியாத சமூக உறவுகளை கொண்டதாகிவிட்டது. இப்படி மக்கள் சார்ந்த கருத்தை, மக்கள் செயல்பாட்டை ஒடுக்கினர்.

இந்த அரசியலைக் கொண்டவர்கள், இன்று வரை அந்த அரசியலை சுயவிமர்சனம் செய்தது கிடையாது. ஏன் புலியொழிப்புவாதிகளான புலியெதிர்ப்பு அணி, புலியின் அரசியலை விமர்சித்து அரசியல் செய்ய விரும்பாத அரசியல் மர்மம், இந்த அரசியல் சூக்குமத்தில் அடங்கிக் கிடக்கின்றது.

மக்கள் பற்றிப் புலி என்ன கருத்து கொண்டு உள்ளதோ, அதே கருத்தைத்தான் புலியொழிப்புவாதிகளும் கொண்டுள்ளனர். மக்கள் போராடுவதற்கு உதவாதவர்கள் என்பதே இவர்களின் அரசியல் வர்க்க நிலைப்பாடாகும். இவர்களின் பார்வையில் மக்கள் பணத்தைத் தமக்கு தரவும், தமது வர்க்க நோக்கத்துக்கு பின்னால் கைதட்டவும், தம் பின்னால் வால் பிடிக்க வேண்டும் என்பதைத் தாண்டி இவர்கள் சிந்திப்பதுமில்லை. உண்மையில் அதை அனுமதிப்பதுமில்லை. இதன் அடிப்படையில், மக்களை வெறும் மந்தைக் கூட்டமாக வைத்திருக்க முனைகின்றனர். இதைத்தான் புலியும் சரி, புலியொழிப்பும் சரி, தமது சொந்த அரசியலாக முன்வைக்கின்றது.

புலியை ஒழிப்பதன் மூலம் அல்லது தமிழீழம் மூலம் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தீர்ந்துவிடுமா? இல்லை. இந்த வகையில் புலியெதிர்ப்பு கும்பல் புலியொழிப்பை முன்வைக்கின்றது. இதற்கு புலியின் பாசிச நடத்தைகளைக் காட்டி, இந்தக் கேடுகெட்ட இழிவான அரசியலை முன்வைக்கின்றனர். புலியை ஒழித்தால், தமிழ் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பெற்றுவிடுவார்கள் என்று கூறவும் கூட செய்கின்றனர். புலிகள் என்ன சொல்லுகின்றார்கள். புலிக்கு எதிரானவர்களை அழித்தால், தமிழீழத்தை பெற்று தமிழ் மக்கள் சுபீட்சத்தை அடைவார்கள் என்றார்கள்.

இப்படி ஒரு அரசியல் மாயையை விதைப்பதன் மூலம், தமிழ்



படிப்பகம்

www.padippakam.com



மக்களை ஏமாற்றுவதில்தான், இவர்களின் நாய்ப் பிழைப்பே நடக்கின்றது. தமிழ் மக்களை இந்த எல்லைக்குள் முடக்கி, தமக்குள் இதன் அடிப்படையில் எதிர்ரெதிர் முகாம்களாக பிரிந்து, வம்பளப்பதையே இரு தரப்பும் விரும்புகின்றனர்.

புலியெதிர்ப்புக் கும்பல் விரும்புவது போல் புலியை ஒழித்தால், தமிழ் மக்கள் வாழ்வில் பாலும் தேனும் ஓடுமா? எப்படி? புலியெதிர்ப்பு முன்வைக்கும் புலியொழிப்புக் கும்பல் இதற்கு பதிலளிக்காது. மக்கள் இதைப் புரிந்துகொள்ள முடியாத வகையில், ஒரு அரசியல் சூனியத்தில் இதை ஏற்க வைக்க முனைகின்றனர். ஆனால் மக்கள் இதற்கு எதிராக, தமது சொந்த வாழ்வுரிமைக்காக தனித்தனியாக தன்னளவில் போராடுவது அன்றாடம் நிகழ்கின்றது. இல்லையெனின் அவர்களுக்கு உயிர் வாழ்வில்லை. இதற்கு வெளியில் தான் புலித் தமிழீழமும், புலியொழிப்பும் மக்கள் விரோதமாக இயங்குகின்றது. மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சனைக்கு வெளியில், இவை அன்றாடம் பூதாகரப்படுத்தப்படுகின்றது.

இந்த வகையில் புலியின் அரசியல் சரி, புலியொழிப்பு அரசியல் சரி, வர்க்க உள்ளடக்கத்தில் ஒன்றே. மக்களின் சமூக பொருளாதார பிரச்சனையை முன்னெடுப்பதற்கு எதிரானவர்கள். இப்படி மக்களின் சொந்த வாழ்வியல் பிரச்சனைகளில் இருந்து, இருதரப்புமே அன்னியமானவர்கள். அதாவது மக்கள் தாம் தமக்காக சொந்த சமூக பொருளாதார கோரிக்கையுடன் போராடுவதை எதிர்ப்பவர்கள் இவர்கள். இதை சாத்தியமற்ற ஒன்றாகவே எப்போதும் எங்கும் காட்டுகின்றனர், காட்ட முனைகின்றனர். நாம் இதை எதிர்ப்பதால், நாம் அவர்களின் முதன்மை எதிரியாக உள்ளோம். மக்கள் தாம் தமக்காக போராடுவதே உண்மையான விடுதலை என்ற நிலைப்பாட்டை நாம் கொண்டவர்கள் என்பதால், அவர்களில் இருந்து தெளிவாக அரசியல் ரீதியாக வேறுபட்டவர்கள். அதாவது இதற்கு வெளியில் எந்த நிலைப்பாட்டையும், அது சார்ந்த நடைமுறையையும் கடுமையாக எதிர்ப்பவர்களாக நாம் உள்ளோம். புலித் தமிழீழம் மற்றும் புலியொழிப்பு பேர் வழிகளின் மக்கள் விரோத செயல்களை எதிர்ப்பதனால், அதனை எதிர்கொண்டு தனித்து போராட வேண்டியுள்ளது.

எப்படி மக்கள் அரசியல் அனாதைகளாக வாழ்கின்றனரோ, அப்படித் தான் எமது கருத்தும். மக்களின் சமூக பொருளாதார பிரச்சனைகள் சமூகத்தில் கேட்பாரின்றி அனாதையாகி ஒடுக்குமுறைக்கு எப்படி உள்ளாகின்றதோ, அது சார்ந்த எமது கருத்தும் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகின்றது. இப்படி மக்களின் சொந்த வாழ்க்கை



படிப்பகம்

www.padippakam.com



எப்படி ஊடகவியலால் இருட்டடிப்பு செய்யப்படுகிறதோ, அப்படி மக்கள் கருத்தும் இருட்டடிப்பு செய்யப்படுகின்றது.

புலித்தமிழீழம், புலியொழிப்பு என்ற இரண்டு கருத்தும் முன்மைபெற்ற ஒன்றாக உள்ளது. அதாவது ஆதிக்கம் பெற்ற ஊடகவியல் மூலமும், பண ஆதிக்கம் மூலமும், பேரினவாத துணை கொண்டும், ஏகாதிபத்திய துணை கொண்டும் தமிழ் மக்களை இக்கருத்துக்கள் ஆக்கிரமித்து நிற்கின்றது. இந்த இரண்டு பிரதான மக்கள் விரோத நிலைக்கு எதிராக எமது போராட்டம் தனித்துவமானது. இதற்குள் மட்டும் உலகைப் பார்க்கும் சிலருக்கு, இவை அன்றாட கொதிப்பாக இருக்கின்றது. ஆனால் எமது போராட்டம் கடுமையானது. அநேகமாக தன்னந் தனியாகவே, கடுமையான பல நெருக்கடிகள் ஊடாகவே நகர்கின்றது. ஆனால் எமது இந்தப் போராட்டம் மக்கள் உள்ள வரை, அரசியல ரீதியாக யாராலும் வெல்லப்பட முடியாதது.

தமிழீழமா! புலியொழிப்பா! அல்லது இரண்டுமா! என அனைத்தையும் தீர்மானிப்பது யார்? தமிழ் மக்கள் தாம் தம் மீதான சொந்த ஒடுக்கு முறையை இனம் கண்டு, தமது சொந்த விடுதலைக்கான தமது சொந்த போராட்டம் மூலம் தாமே போராட வேண்டும். இதைவிடுத்து புலித் தமிழீழம் என்று புலிகளோ அல்லது புலியொழிப்பு என்று புலியெதிர்ப்பு கும்பலோ, தான் தீர்மானித்த ஒன்றை தமிழ் மக்களுக்கு திணிப்பது மக்கள் போராட்டமல்ல. இது தமிழ் மக்கள் மீதான பாரிய ஒரு அரசியல் வன்முறையாகும்.

மக்கள் தாமே தமக்காக போராட வேண்டும் என்பதை மறுக்கின்றதும், அதை வழிகாட்ட முனையாத அனைத்துமே, மக்கள் விரோதத் தன்மை கொண்டவை. மக்கள் போராட்டம் சாத்தியமற்றது என்று கூறிக்கொண்டு, இப்படி மக்களுக்கு எதிராக செயல்படுபவர்கள் கடைந்தெடுத்த மகா அயோக்கியர்கள். மக்களின் பிரச்சனைகளை விடுத்து, அதை பின்போட்டு, புலித்தமிழீழம் அல்லது புலியொழிப்பே இன்று முதன்மையானது என்று கூறுபவர்கள் அனைவரும், மக்களின் முதுகில் குத்தும் முதன்மைத் துரோகிகளாவர்.

***03.07.2007***



படிப்பகம்

www.padippakam.com



# மக்கள் என்பவர்கள் யார்?

அரசியலில் ஈடுபடுபவர்கள் அனைவருமே, மக்கள் என்ற பதத்தை பொதுவாக பயன்படுத்துகின்றனர். இதேபோல் சமூகம் சார்ந்து தன்னார்வமாக செயல்படுபவர்களும் கூட, தாமும் மக்களுக்காக செயல்படுவதாக கூறுகின்றனர். இப்படி மக்களுக்காக தாம் செயல்படுவதாக காட்டிக் கொள்வதன் மூலம், மக்களை ஏமாற்றிப் பிழைப்பதே இன்றைய அரசியலாகிவிட்டது.

இதற்காக சலுகைகள், ஆசைகாட்டுதல், மோதவிடுதல், எதிரிகளை கற்பித்தல், வன்முறைக்கு ஏவுதல் என்று பலவிதமான அற்பமான இழிவான உத்திகளை கையாளுகின்றனர். உள்ளொன்றும் புறமொன்றாகவும் செயல்படுவதே, நாகரிகமான மக்கள் செயல்பாடாகி விடுகின்றது. இதையே ஜனநாயகம் என்கின்றனர்.

இது இலங்கை முதல் உலகம் வரையிலான, பொதுவான ஒன்றாகிவிட்டது. மக்கள் ஏமாறுவதும் ஏமாற்றப்படுவதுமே பொதுத் தொண்டாகவும், ஏன் அதுவே ஜனநாயக அரசியலுமாகிவிட்டது. இது இயல்பான ஒன்றாகவும், இது இன்றி இவையில்லை என்ற நிலைக்குள், மனித உணர்வுகளை சிதைத்துவிட முனைகின்றனர்.

உண்மையில் இவர்கள் உருவாக்கும் சமூக விளைவுகளை பொறுப்பு ஏற்பது கிடையாது. அதற்காக மனம் வருந்துவதும் கிடையாது. மனித சிதைவுகளையும், மனித அவலங்களையும் உருவாக்குகின்ற ஒழுங்கில், மக்கள் பற்றிய பொய்மையான கபடத்தனமான ஈனத்தனமான செயல்களில் ஈடுபடுகின்றனர்.

இதன் பின்னணியில் அவர்களுக்கு என்று சொந்த வர்க்க நலன்கள் உண்டு. இதை பாதுகாக்கவே, இதைப் பெறவே மக்கள் என்ற பதத்தை பயன்படுத்திக் கொள்கின்றனர். மக்களின் அடிமை நிலைதான், இவர்களின் வாழ்வாகின்றது. இது இந்த அரசியல் அரங்கில் வெளிப்படையானது. மக்கள் எந்தளவுக்கு அடிமையாக்கப்



படிப்பகம்

www.padippakam.com



படுகின்றனரோ, அந்தளவுக்கு சிலருக்கு மேலானதும் உயர்வானது மான வாழ்வு கிடைக்கின்றது. இதுவே எதார்த்த உலக உண்மை.

ஆகவே இவர்களுக்கு மக்கள் தேவைப்படுகின்றனர். இதனால் மக்கள் என்ற பதத்தை முறைகேடாகப் பயன்படுத்துவதில், இவர்கள் வெட்கப் படுவது கிடையாது. எந்த சுய கழிவிரக்கம் கூட கொள்வது கிடையாது.

மக்களை இனமாக, மதமாக, சாதியாக, மொழியாக, நிறமாக, பாலாக, பிரதேசமாக பற்பல விதத்தில் பிளப்பதில், மக்கள் என்ற பதத்தை குறுகிய எல்லையில் குறுக்காக பிளக்கின்றனர். இதற்கு அவர்கள் இயற்கை சார்ந்த பிளவுகளை, நீண்ட வாழ்வு சார்ந்த வாழ்வியல் பிளவுகளை, மனித முரண்பாடுகளை முன்னிலைப்படுத்தி, மனித குலத்தை பிளந்து ஒன்றுக்கொன்று எதிராக நிறுத்திவிடுகின்றனர். ஒரு கூட்ட மக்களை மற்றொரு கூட்டத்துக்கு எதிராக நிறுத்திவிடுகின்றனர். இதற்கு அமைவாகவே மக்கள் என்ற சொல்லை, மிக இழிவாக கேடுகெட்ட வகையில் பயன்படுத்து கின்றனர்.

ஒரு பகுதி மக்களுக்கு எதிராக, தன் தரப்பு மக்களை வெறி ஊட்டி விடுகின்றனர். இதன் மூலம் தமது வர்க்க நோக்கில், சுரண்டுவதே அன்றாட நிகழ்ச்சியாகிவிடுகின்றது. இந்த எல்லைக்குள் உணர்வுபூர்வமான தலையீட்டை, அணிதிரட்டலை உருவாக்குவதன் மூலமே, அரசியல் முதல் தன்னார்வ நிறுவனங்கள் வரை மக்களை பிளந்து இயங்குகின்றன.

மக்கள் இப்படி இதற்குள் பந்தாடப்படுகின்றனர். மக்கள் சாதியாக, மதமாக, இனமாக, மொழியாக, நிறமாக மோதவிடப்படுவதன் மூலம், தமக்குள் உள்ள வர்க்க ரீதியான மோதலை மறைக்க முனைகின்றனர். அதாவது மற்றொரு சமூகம் மீதான சமூக மோதலாக மாற்றிவிடுகின்றனர். இப்படி இரண்டு மக்கள் கூட்டத்தை மோதவிட்டு, மக்களின் பின் சுரண்டும் வர்க்கம் குளிர்காய்கின்றனர்.

மக்கள் கூடிவாழ்வதை மறுத்து, மக்களை பிளந்து அவர்கள் தமக்குள் முரண்பாடுகளுடன் வாழவைப்பதை பாதுகாக்கின்ற அரசியலைத் தான், ஜனநாயகம் என்கின்றனர். ஜனநாயகம் என்பது மக்கள் பிளவுக்குள்ளாக்கி வாழ்வதையும், அதைப் போற்றிப் பாதுகாப்பதுமே என்றாகிவிட்டது. மக்கள் என்ற பதத்தை இதற்குள் பயன்படுத்துவதில் உள்ள மோசடித்தனம்தான், பொதுவான வாழ்வியல் சமூக ஒழுங்காகி விடுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



சமூகத்தை தனிமனிதனுக்கு எதிராக நிறுத்தி தனிமனிதன் சமூகத்தை சுரண்டுவது போல், மக்கள் கூட்டத்தை மற்றொரு மக்கள் கூட்டத்துக்கு எதிராக நிறுத்தி சிலர் சுரண்டுகின்றனர். சமூகத்தையும், மக்கள் கூட்டத்தையும் எதிராக நிறுத்துவதில்தான், சுரண்டும் வர்க்கத்தின் வாழ்வும் அதன் ஜனநாயகமும் உள்ளது.

இதற்கு மாறாக மக்கள் என்பவர்கள் தாம் பரஸ்பரம் இணங்கி சமூகமாக வாழ்வதையே அடிப்படையாக கொண்டவர்கள். மக்கள் கூட்டம் என்பது, தமக்கு இடையில் உள்ள மனித முரண்பாடுகளை களைந்து, பிரிவுகளை கடந்து, பிளவுகளை நீக்கி வாழ்வதை அடிப்படையாகக் கொண்டது. இப்படி சக மனிதனை சுரண்டுவது, இழிவுபடுத்துவது, அடக்குவது, ஒடுக்குவது என அனைத்தும் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதே மனிதத் தன்மை.

இதற்காக அவற்றை இனம் கண்டு போராடுவது, இந்த வகையில் மக்களை அணிதிரட்டுவதில்தான், மக்கள் என்ற பதம் உண்மையானது, நேர்மையானது. அதாவது மக்கள் தமது சொந்த விடுதலைக்காக, அவர்கள் தாமே போராட வேண்டும். இதை வழிகாட்டும் நடைமுறைகள், கோட்பாடுகளே உண்மையானது நேர்மையானது.

சமூகத்தில் நிலவும் எந்த சமூகப்போக்கிலும், எந்த சூழலிலும் இந்த முழுமையைக் கவனத்தில் கொண்டு போராட மறுக்கின்ற அனைத்தும், பிற்போக்கானது. உண்மையில் மக்களை பிளந்து மோதவிடுகின்ற சூழ்ச்சியை அடிப்படையாக கொண்டது. எந்த முரண்பாட்டையும் முழுமையில் காண மறுக்கின்ற முயற்சிகள் அனைத்தும், நிச்சயமாக அந்த மக்களுக்கே எதிரானது.

இப்படி மக்கள் கூட்டத்தை எதிரியாக பிரிக்கின்ற கோடு, எதிரியை மக்களுக்கு எதிராக பிரிப்பதில்லை. இப்படி எதிரியை மிகப் பாதுகாப்பாக வைக்கின்றது. மக்கள் வேறு, எதிரி வேறு என்று தெரிந்து கொள்ள முடியாத சூக்குமத்தில், மக்களின் எதிரி பாதுகாப்பாக இருக்க முனைகின்றான்.

சக மனிதனை சுரண்டுதை, அடக்குவதை, ஒடுக்குவதை, இழிவுபடுத்து வதை தமக்குள் உள்ளடக்கியபடி வாழ்வதும், அந்த மக்களை மக்கள் என்று விளிப்பது பொய்யானதும், போலியானதுமாகும். தனக்குள், தனது சொந்த மக்களுக்குள் சமூக ஒடுக்குமுறையை களைய மறுத்தபடி, மற்றவன் பற்றியும் மற்றைய மக்கள் கூட்டம் பற்றியும் பேசுவது என்பது, சொந்த மக்களை



படிப்பகம்

www.padippakam.com



ஏமாற்றுகின்ற கபடத்தனமாகும்.

தான் செயல்படும் சொந்த அரசியல் தளத்தில், சொந்த நடைமுறை தளத்தில், அனைத்து சமூக ஒடுக்குமுறையையும் களைய மறுக்கின்றவர்கள், அதை முன்வைத்து போராடாதவர்கள் அனைவரும் மாபெரும் அரசியல் போக்கிரிகளாவர்.

சமூக ஒடுக்குமுறைகளை சொந்த அமைப்பில், சொந்த கோட்பாட்டில், சொந்த பிரசாரத்தில் முன்வைக்க மறுத்து, அதை பிரசாரம் செய்ய மறுப்பவர்கள், அதை காலத்தால் பின்போடுபவர்கள் எல்லோரும் கடைந்தெடுத்த மக்கள் விரோதிகளாவர்.

இவர்களே இன்று மக்கள் என்று கூறிக்கொண்டு, மக்களின் முதுகில் குத்துகின்ற அரசியல் அரங்கில் ஆதிக்கம் வகிக்கின்றனர். இவர்களை மனித குலம் இனம் கண்டு போராடாத வரை, உலகில் எந்த சமூகத்திலும் எந்த பிரச்சனைக்கும் தீர்வுகளை அந்த மக்கள் கூட்டம் கண்டறிய முடியாது. மாறாக சமூகம் கையாலாகாத்தனம் கொண்ட, சுரண்டும் வர்க்கத்தின் அடிமைகளாகவே வாழ்வர்.

***01.08.2007***



படிப்பகம்

www.padippakam.com



# மக்களின் அடிப்படையான அரசியல் உரிமைகளை மறுப்பவர்கள் யார்?

மக்களின் அடிப்படையான அரசியல் உரிமைகளைத் தெரியாமல், தெரியவிடாமலே அரசியல் செய்கின்றனர். யாரும் மக்களின் அடிப்படையான அரசியல் உரிமைகள் என்ன என்ற கேள்வியையும், அது எப்படி இந்த அமைப்பில் மறுக்கப்படுகின்றது என்பதையும் உரையாடுவது கூட கிடையாது. தனது உரிமை, தான் என்ற சுயநல எல்லைக்குள் அரசியல் செய்யப்படுகின்றது. சுற்றிவளைத்துப் பார்த்தால், இவர்களிடம் பொது உலக கண்ணோட்டம் கிடையாது. புலித் ''தேசியம்'' புலியெதிர்ப்பு ''ஜனநாயகம்'' இதற்குள் அனைத்து சிந்தனை முறையும் வடிகட்டப்படுகின்றது. ''தமிழ் தேசியம்'' முதல் ''தமிழ் ஜனநாயகம்'' வரை இப்படித்தான், இதற்குள்தான் இயங்கு கின்றது.

இதை உருவாக்கத்தான் உள்ளியக்க படுகொலைகள் முதல் இனம் காணப்பட்ட அரசியல் படுகொலைகளும் அரங்கேற்றப்பட்டன. ஒன்று இரண்டல்ல. ஆயிரம் பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். மக்களின் விடுதலைக்காக போராட முனைந்த அரசியல் முன்னணிப் படை இப்படி அழிக்கப்பட்டது. இன்று இதை அரசியல் ரீதியாக யார் தான் நினைவு கூருகின்றனர். நாம் மட்டும்தான். அவர்கள் எதைக் கோரி தம்மை தியாகம் செய்தனரோ, அதை நாம் மட்டும்தான் அரசியல் ரீதியாக இன்றும் முன்னிறுத்துகின்றோம்.

இந்த அரசியல் படுகொலைகளை செய்தவர்கள் எங்கே? அவர்கள் வேறு யாருமல்ல, இன்றும் ஆதிக்க அரசியலில் உள்ளவர்கள் தான் அவர்கள். ஜனநாயகம் பேசுகின்ற புலியெதிர்ப்புவாதிகள். தேசியம் பேசுகின்ற புலிகள். இவர்கள்தான், மக்களுக்காக போராடியவர்களை கொன்று போட்டவர்கள்.

இவர்கள் யாரும் இன்று வரை, மக்களின் அரசியல் அடிப்படை உரிமை களை ஏற்றுக்கொள்வது கிடையாது. அதற்காக போராடியது



படிப்பகம்

www.padippakam.com



மில்லை, போராடுவதும் கிடையாது. இவர்களின் ''தேசியம்'', ''ஜனநாயகம்'' எதுவாக இருந்தாலும், இதைத்தான் செய்கின்றனர். இரண்டையும் ஒன்றுக்கு ஒன்று, எதிராக நிறுத்தி மக்கள் விரோத அரசியல் செய்கின்றனர்.

அன்று கொல்லப்பட்டவன் யார்? அவன் எதைக் கோரினான். அவன் தனது அமைப்பினுள் ஜனநாயக உரிமையைக் கோரினான். சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தைக் கோரினான். இப்படி அவன் சகல சுரண்டலையும் எதிர்த்தான். சகல ஒடுக்குமுறையையும் எதிர்த்தான். தனது இயக்கம் அதை ஆதரிப்பதை எதிர்த்தான். உள்ளியக்க மத்தியிலும், வெளியிலும் பிரசாரம் செய்தான். இயக்க தலைமைகள் இந்தக் கோசத்தை வைத்து மக்களை ஏமாற்றியது இப்படி அம்பலமாகத் தொடங்கியது. இதனால் உள்ளியக்க படுகொலைகளை வீச்சாக நடத்தினர். பின் வெளியியக்க படுகொலைகள் நடத்தினர். ஆரம்ப இயக்கப் படுகொலைகள் இவை தான்.

மக்களைச் சார்ந்து நின்று, மக்களின் அரசியல் உரிமைகளுக்கு தலைமை தாங்கியவர்கள், தாங்கக் கோரியவர்கள் கொல்லப்பட்டனர், சிதைக்கப்பட்டனர். இப்படி மக்களின் அடிப்படை உரிமைகளை முன்னிறுத்தியவன் வேட்டையாடப்பட்டான். இதை இன்று புலிகள் மட்டும் செய்வதாக காட்டுவது, புலியெதிர்ப்பு புல்லுருவிகளின் நவீன கொலைகார அரசியற் பிழைப்பாகின்றது. புலிகளைப்போல் மிக அதிக படுகொலைகளை இதற்காக நடத்தியவர்கள் இவர்கள்தான்.

இப்படி தமிழ்ச் சமூகத்தின் முன்னணிச் சிந்தனைமுறையையும், அறிவியல் முறையையும் வெட்டியெறிந்தனர். தமிழ் மக்களின் உண்மையான தியாக மனப்பான்மை கொண்ட தலைவர்களை அழித்தனர். இதன் மூலமே மக்களை தமது கொலைத்தனத்துக்கு ஏற்ற மந்தைக் கூட்டமாக்கினர். கவர்ச்சி வாதம், இயக்க வாதம், கோசவாதம், நம்பிக்கைவாதம், தனிமனித வழிபாட்டு வாதம் என்று குறுகிய வரட்டு எல்லைக்குள், சமூகத்தின் அறிவை அதன் கருத்தை, அதன் மனிதத்தை வெட்டிச் சிதைத்தனர். பின் இதற்குள் இன்று வரை வம்பளந்து, அவர்கள் அரசியல் செய்கின்றனர்.

மக்கள் தனக்காக, தனது உரிமைக்காக போராடக் கூடாது என்பது இவர்களின் அடிப்படையான அரசியல் சித்தாந்தம். மக்கள் சுய உணர்வை பெறுவதையும், அது சார்ந்த எந்த அறிவுத் தேடலையும் தடுப்பதே, இவர்களின் மைய அரசியல் நீரோட்டம். இதை இன்று வெறும் புலிகள் மட்டும் செய்யவில்லை. புலியல்லாத புலியெதிர்ப்பு



படிப்பகம்

www.padippakam.com



தரப்பும் கூடிச் செய்கின்றது. தனித்தும் கூடியும் செய்ய கூட்டுத் தளங்களும் உண்டு.

இதைத் தான் அன்று புலிகள் மட்டுமல்ல, புலியல்லாத அனைத்து மிகப்பெரிய ஆயுதமேந்திய இயக்கங்களும் செய்தன. 1983 -1984 களில் அரசியல் ரீதியாக உட்படுகொலைகளை பெருமெடுப்பில் செய்யத் தொடங்கினர். இதன் தொடச்சியில்தான், இன்றுவரை தமிழ் மக்கள் தமது அரசியல் உரிமையைப் பற்றிப் பேச முடியாத நிலை. அதை இன்று சிந்தனை முறையிலும் கூட வெளிப்படுத்த முடியாதளவுக்கு அரசியல் அராஜகம் தலைவிரித்தாடுகின்றது.

மக்களின் அடிப்படையான அரசியல் உரிமைகள் தமிழ் மக்களுக்கு எதிரானதா? அதாவது இது தேசியத்துக்கு எதிரானதா? ஜனநாயகத்துக்கு எதிரானதா? அறிவியல் பூர்வமாகவும் சரியான மனிதத் தன்மை உள்ள ஒவ்வொருவரும் அரசியல் ரீதியாக பதிலளித்தேயாக வேண்டும். இன்று அரசியல் செய்கின்றவர்கள் இதை ஏற்று, மக்களின் உரிமைகளுக்காக செயற்படுகின்றனரா? சமூகத்தில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் சுயமாக அரசியல் ரீதியாக பதிலளித்தாக வேண்டும். ஒவ்வொன்றையும் இதனடிப்படையில் பரிசீலித்தாக வேண்டும்.

மக்களின் உரிமையை மறுக்கின்றவர்கள், சமூதாயப் பிரச்சினைக்கு தீர்வை எங்கிருந்து எப்படித் தேடுகின்றனர். யார் மக்களின் அரசியல் உரிமையை மறுக்கின்றனரோ அந்த அரசியலை, மாற்று வழியில் வைப்பதை மாற்று அரசியல் என்கின்றனர். மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை முன்வைத்து, மக்கள் தமது பிரச்சனையைத் தீர்க்கும் வழியை பிரசாரம் செய்வது கிடையாது. அதனடிப்படையில் மக்களை அணிதிரட்டுவது கிடையாது. புலி மற்றும் புலியெதிர்ப்பு இரண்டும், இப்படித்தான் ஒருங்கிணைந்தும் பிரிந்தும் இயங்குகின்றது. மக்களின் அரசியல் சுபீட்சத்துக்கு இவர்கள் வைக்கும் அரசியல் தீர்வு தான் என்ன? யாராலும் இதை விளக்க, எந்த அடிப்படை அரசியலும் கிடையாது.

இப்படி மக்களின் அடிப்படையான அரசியல் உரிமைகள் தமிழ் மக்களுக்கு எதிரானது என்று, புலி மற்றும் புலியெதிர்ப்பு தரப்பு கூறுகின்றது. இதனால் மக்களின் அடிப்படை உரிமையைப் பேச முனையும் எம்மை, கடுமையாக எதிர்க்கின்றனர். அரசியல் ரீதியாக இதை மறுக்க முடியாது என்பதால் அரசியல் மௌனமும், சந்தர்ப்பம் கிடைக்கும் இடத்தில் தனிநபர் அவதூறு தாக்குதலையும் கண்மூடித்தனமாக நடத்துகின்றனர். இதனால் மக்களின்



படிப்பகம்

www.padippakam.com



அடிப்படையான அரசியல் உரிமைகள் தமிழ் மக்களுக்கு எதிரானது என்ற, அவர்களின் அரசியலை கனவை பாதுகாக்க கனவு காண்கின்றனர்.

நாம் மக்களின் அடிப்படையான அரசியல் உரிமைகள் தமிழ் மக்களுக்கு எப்படி எதிரானது என்றால், வரட்டுத்தனமாக விரட்டிப் பதிலளிக்கின்றனர். புலித் தேசியமே அனைத்துக்கும் முதல் என்கின்றனர். இல்லை புலியெதிர்ப்பு ''ஜனநாயகம்'' அனைத்துக்கும் முதல் என்கின்றனர். இப்படி வரட்டுத்தனமான வரட்டு வாதங்கள். உண்மையில் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகள், இந்த இருபோக்குகளையும் பின்பற்றுகின்ற அரசியலுக்கு எதிரானதாக மாறிவிடுகின்றது. இப்படி இவர்கள் அரசியல் பார்வையிலே, மக்கள் விரோத அரசியல் உணர்வு வறட்டுத்தனமாகி மிதப்பாகிக் கிடக்கின்றது. அது மக்களுக்கு எதிராகவே, பலதளத்தில் தொடர்ந்து இயங்குகின்றது.

மக்களின் அடிப்படையான அரசியல் உரிமைகளை மறுப்பதே, சுரண்டும் வர்க்கத்தின் ஒரேயொரு ஆயுதம். இது மட்டும் போதும், அவர்கள் யார் எந்த வேஷத்தில் வந்தாலும் புரிந்து கொள்ள. இதை எதிர்த்துப் போராடுவது தானே, மனித வரலாறு.

***24.11.2007***



படிப்பகம்

www.padippakam.com



# தோற்ற வழியும், தோற்காத வழியும்

இரண்டு பத்து வருடமாக தோற்றுக் கொண்டே இருக்கும் இரண்டு பிரதான வழிகள், இலங்கையில் பல பத்தாயிரம் மக்களை கொன்று போட்டுள்ளது. இன்னமும் கொன்று போடுகின்றது. இப்படி மனித அவலங்களோ எல்லையற்ற துயரமாகி, அவை பரிணாமித்து நிற்கின்றது.

இப்படி இலங்கை மக்கள் சந்திக்கின்ற பிரச்சனைகளுக்கு, எந்தத் தீர்வும் அந்த மக்களிடம் இருந்து இதுவரை கிடையாது. இப்படி சரியான தீர்வுகளின்றி, சரியான வழிகாட்டலின்றி, மனித அவலம், தொடர்ச்சியாக தீர்வாக மீண்டும் மீண்டும் திணிக்கப்படுகின்றது.

இந்த வகையில் பிரதான முரண்பாடாகி மக்கள் சந்திக்கின்ற பிரச்சனைகளோ இரண்டு. அவை பிரதேசத்துக்கு பிரதேசம் ஒன்று மற்றொன்றாகி முதன்மையாகின்றது. அவை எவை?

1. பேரினவாதம். இது தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுத்து, தமிழனை பாசிச வழிகளில் அடக்கியொடுக்கு கின்றது.

2. புலிகள். இது தமிழ் மக்களின் சுயாதீனமான அனைத்து செயல்பாட்டையும் ஒடுக்கி, தனது பாசிச வழிகளில் தமிழ் மக்கள் மூச்சுக் கூட விடமுடியாத வகையில் ஒடுக்குகின்றது.

இப்படி தமிழ் மக்களுக்கு எதிரான இரண்டு பிரதான ஒடுக்குமுறை அம்சங்கள் காணப்படுகின்றது. இவ்விரண்டு தரப்பும் ஒன்றையொன்று எதிரியாக கருதியபடியே, தமிழ் மக்களை ஒடுக்குவதில் தமக்குள் ஒன்றுபடுகின்றது. ஏன் இப்படி மக்களை ஒடுக்குகின்றனர்? இந்தக் கேள்விக்கான விடையில்தான், இதைப் புரிந்து கொண்டு தீர்வுகளையும் காணமுடியும்.



படிப்பகம்

www.padippakam.com



ஆனால் இதை யாரும் உணர்வதுமில்லை, உணர்த்துவதுமில்லை. இதை உணராது இருக்க வேண்டும் என்பதிலும், இந்த இரண்டு போக்குக்கும் வெளியில் சிந்திக்காதவகையில் இருக்கும் அரசியலே, எங்கும் எதிலும் திணிக்கப்படுகின்றது. மக்களின் மேலான ஒடுக்குமுறைக்குரிய காரணங்களின் அடிப்படையில் யாரும் செயல்படுதுமில்லை. மாறாக தமிழ் மக்களை ஒடுக்குகின்ற அதே அரசியல் நோக்குடன் தான், அனைத்துத் தரப்பும் செயல்படுகின்றனர், செயல்பட முனைகின்றனர்.

உண்மையில் தமிழ் மக்களை வெவ்வேறு தளத்தில் ஒடுக்குகின்ற, இந்த இரண்டு பிரதான பிரிவுகளின் சமூக பொருளாதார நலன்கள் தான், ஒடுக்குமுறைக்கான அடிப்படைக் காரணமாகும். இதை யாரும் எந்த வகையிலும் மறுக்க முடியாது. இதுவல்லாத வெற்றிடத்தில், காரணமல்லாத எந்த நோக்கத்திலும், அரசியல் அல்லாத கற்பனையில், யாரையும் யாரும் ஒடுக்கமுடியாது. சமூகங்கள் கொண்டுள்ள பல்வேறு ஏற்றத்தாழ்வான சமூக முரண்பாடுகளைப் பாதுகாக்கவே, இரண்டு தரப்பும் முனைப்புடன் முனைவதால் தான் மக்களை ஒடுக்குகின்றனர். மக்கள் எதிரிகளின் அரசியல் தளம், இதற்குள் தான் செயல்படுகின்றது.

இப்படியாக பேரினவாத அரசு மற்றும் புலிகளின் செயல்பாடுகள் உள்ளது. இதையொட்டி இதற்குள் இயங்கும் இரண்டு பினாமி பிரிவுகளும், விதிவிலக்கின்றி மக்களை ஒடுக்கும் அரசியலைக் கொண்டே தமது அரசியலை உமிழ்கின்றனர். இவர்களின் ஜனநாயகம் என்பது, மக்களின் சமூக ஒடுக்குமுறையை பேணிப் பாதுகாப்பது தான். இவர்கள் மக்கள் என்று கூறுவது எல்லாம், சமூக ஒடுக்குமுறையை பாதுகாக்கும் எல்லைக்கு உட்பட்டதே. இதைப் பேணி பாதுகாக்க முனைபவர்கள், சமூக முரண்பாடுகளை தற்போதைக்கு தீர்க்க முடியாது என்று கூற முனைகின்றனர். புலிகளும் சரி, புலியல்லாத தரப்பும் சரி, இதைத்தான் சொல்லுகின்றது. புலிகள் அனைத்தையும் தமிழீழத்தின் பின்னர் என்கின்றனர், புலியல்லாத தரப்பு அனைத்தையும் புலியொழிப்பின் பின்னர் என்கின்றனர். இப்படி இருதரப்பும் ஊரையும் உலகத்தையும் ஏமாற்றி, பொய்யான போலியான படுபிற்போக்கான அரசியலை மக்களுக்கு எதிராக திட்டமிட்டு திணிக்கின்றனர்.

பிரதான அதிகாரப் பிரிவுகள் சமூக முரண்பாட்டை மூடிமறைக்க, சமூக முரண்பாட்டின் ஒன்றை தீவிரமாக்கி விடுகின்றனர். இதற்குள் ஒரு யுத்தத்தை இவர்களே வலிந்து சமூகங்கள் மீது திணித்து விடுகின்றனர். பின் யுத்தத்தைக் காரணம் காட்டி, சமூகங்களின்



படிப்பகம்

www.padippakam.com



உள்ளார்ந்த அனைத்து சமூக முரண்பாட்டையும், எதுவுமற்ற ஒன்றாக காட்டிவிட முனைகின்றனர் அல்லது இப்போதைக்கு இவை பிரச்சனைகளல்ல என்கின்றனர். இப்படியாக தமிழ் மக்களின் பிரச்சனைகளை திரித்து, தமது வர்க்க நோக்குக்கு ஏற்ப ஏதாவது ஒன்றை மக்களின் தலையில் கட்டி விடுகின்றனர்.

பின் அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வாக இரண்டு வழியை வைக்கின்றனர்.

1. பேரினவாதத்தில் இருந்து விடுபட புலித் தமிழீழம்
2. புலிப் பாசிசத்தில் இருந்து விடுபட புலியொழிப்பு

இப்படி இதற்குள்ளாக இலங்கையின் முழு சமூகத்தையும் கட்டிப்போடுகின்றனர். இரண்டு தரப்பும் இதற்குள் ஒன்றையொன்று தழுவிக்கொண்டு, சமூகங்களை நார்நாராக பிளந்துபோடுகின்றனர். இதற்குள் தீர்வுகாணும் வழிகள் பற்றிய கற்பனையை விதைத்து, கடந்த இரண்டு பத்து வருடங்களாக பல பத்தாயிரம் உயிர்களை பலியிட்டனர். ஒருவரை ஒருவர் ஈவிரக்கமின்றி கொல்லுகின்றனர்.

நேரடியாகச் செயல்படுபவர்கள் ஒருபுறம். மற்றவர்களும் இந்த இரண்டு பிரிவுக்குள்ளும் பினாமிகளாக செயல்படுவதால், சமூக வழிகாட்டல் இன்றி மனித அவலங்கள் தொடர்ந்து பெருகுகின்றது. இதனால் இதற்கு வெளியில் மூன்றாவது மாற்றுவழி பற்றி, எந்த சமூக முன்முயற்சியும் யாராலும் முன்வைக்கப்படுவதில்லை, முன்னெடுக்கப்படுவதுமில்லை. புலித் தமிழீழம் அல்லது புலி ஒழிப்பு இதற்குள் தமிழ் மக்கள் நலமடிக்கப்படுகின்றனர். இதற்கு மாறாக செயல்பட்டவர்கள் அழிக்கப்பட்டனர். அத்துடன் திட்டமிட்ட வகையில், சமூக ஆதிக்கம் பெற்ற பிற்போக்கு கூறுகளைக் கொண்டு புறக்கணிக்கப்படுகின்றது. இதுதான் இன்றைய நிலை.

புலித் தமிழீழம், புலியொழிப்பு என்ற இரண்டும், இரண்டு பத்து வருடமாக தோற்றுப் போன இரண்டு வழிகளாகும். மக்களின் தீர்வாக முன்வைக்கப்பட்ட இந்த வழிகள், இதுவரை எதையும் சாதிக்க வில்லை. ஆனால் இதற்குள்தான், இன்னமும் அரசியல் விபச்சாரம் தொடருகின்றது.

இந்த இரண்டு வழிகளும் மேலும் மேலும் மனித அவலத்தைத் தவிர, எதையும் உருப்படியாக வைக்கவுமில்லை, சாதிக்கவுமில்லை, இனியும் சாதிக்கப் போவதுமில்லை. புலித் தமிழீழமாகட்டும், புலியொழிப்பாகட்டும், இரண்டு பத்து வருடங்களுக்கு மேலாகவே தோற்றுக் கொண்டு இருக்கின்றது. இந்த தோற்றுப் போன வழிக்கு



படிப்பகம்

www.padippakam.com



பின்னால் தான், மீண்டும் மீண்டும் வேதாளமாக ஏற முயலுகின்றனர். இதற்குள் புலியல்லாத தரப்பும் சரி, அரசு அல்லாத தரப்பும் சரி, இந்த ஓட்டைச் சட்டியில் குதிரை ஓட்ட முனைகின்றனர்.

கடந்தகாலம் முழுக்கவே தோற்றுப்போன இந்த இரண்டு வழிக்கப் பால், தோற்காத வழியுண்டு. இதுவரை யாரும் முன்னெடுக்காத வழி. இது மட்டும் தான், மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கான ஒரேயொரு வழி. அது சமூகங்கள் தமது முரண்பாடுகளை தீர்ப்பதற்கான அடிப்படையில், தீர்வுகளை காண்பதற்கான வழி.

மேலே குறிப்பிட்டது போல் இதுவரை முன்னெடுக்காத, வெறும் வார்த்தையாக அது சிதைக்கப்பட்டுள்ளது. இதை முன்னெடுக்க மறுப்பவனும், ஒடுக்குபவனும், இதை தோற்றுப் போனதாகவே சதா காட்டமுனைகின்றான். இது சாத்தியமற்றது என்கின்றான். தமிழீழத்தின் பின் அல்லது புலியொழிப்பின் பின் என்று, இருவரும் ஒரே ரெக்கோட்டை ஒரேவிதமாக போடுகின்றனர்.

இதைக் கோரியவனை, முன்னெடுத்தவனை கொன்று போட்டபடி, இது சாத்தியமற்றது என்று அவனே கூறுகின்றான். அத்துடன் இதை இன்றைய உலகத்துக்கு சாத்தியமற்றதாகவும், அதற்கு எதிரான அவதூறையும் கட்டமைக்கின்றான். இதற்கு எதிராக எல்லாம் அவனாகவே இருக்கின்றான். இந்த வழி மீது நம்பிக்கையீனத்தை பலவழிகளில் திணிக்கின்றனர். மக்கள் தமக்காக தாம் போராடும் வழி, கடுமையான அவதூறையும் ஒடுக்குமுறையையும் சந்திக் கின்றது.

ஆனால் இது தோற்காத, தோற்க முடியாத வழி. மக்கள் தமக்காக தாம் போராடுவது. இது எப்படி தோற்றுப் போகும்? இந்த வழியில் தோற்பவன் யார் என்றால், ஒடுக்குமுறையாளன்தான். மக்களின் சமூக அவலத்தை விதைப்பவன்தான் தோற்றுப்போவான். புலி மற்றும் புலியல்லாத தளத்தில், இதை தடுத்து நிறுத்தும் அரசியல், இந்த வழியை இழிவுபடுத்துகின்றது, கேவலப்படுத்துகின்றது. மக்கள் தமது விடுதலையை தாம் பெறும் நோக்கில், சமூக முரண்பாடுகளையும் தீர்க்கும் வழியில் போராடுவதையும், போராடக் கோருவதையும் எதிர்த்து, அதை சிதைகின்றவன் யார் என்றால் மனித குலத்தின் எதிரிதான். மக்கள்தாம் தமக்காக போராடாத வழியில், சிலர் அதை தீர்ப்பார்கள் என்ற அரசியல் படுபிற்போக்கானது. மக்கள் தாம் தமக்காக போராடுவது என்பது, உயர்ந்தபட்ச ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டது. இதைவிட உயர்ந்த ஜனநாயகத்தை யாராலும் முன்வைக்க முடியாது. இதைச் செய்ய மறுக்கின்ற புலி



படிப்பகம்

www.padippakam.com



மற்றும் புலியல்லாத தரப்புகளில் இருந்து, இதற்கு கடும் எதிர்ப்புள்ளது. அதாவது மக்களின் எதிரிகளின் எதிர்ப்பு, இதற்கு இயல்பாகவுண்டு. இதை எதிர்த்து இதற்கு எதிராக செயல்படாது, தமிழ் மக்களின் பிரச்சனைக்கு வேறு எந்தத் தீர்வும் சாத்தியமற்றது.

***24.07.2004***



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் மக்களுக்கு எதிரான இரண்டு துரோகக் கும்பல்கள்

தமிழ் மக்களின் முதன்மை எதிரியான சிங்களப் பேரினவாதம், தமிழ் இனத்தின் இருப்புக்கே வேட்டுவைக்கின்றது. அதை வெறுமனே புலிப் பயங்கரவாதமாக காட்டுகின்றது. தமிழ் இனத்துக்கு எந்த அரசியல் உரிமையும் கிடையாது என்று சொல்வதே, அதன் அரசியல் சூக்குமமாகும். காலனித்துவ காலம் தொடக்கம் பேரினவாத சக்திகள் படிப்படியாக தமது பேரினவாத தமிழ் விரோத செயல்களை செய்து வருகின்றது. இதை இன்று வெறும் புலிப் பயங்கரவாதமாக திரித்து உலகறியச் செய்கின்றது. ஒரு இனம் திட்டமிட்ட வகையில் பேரினவாதிகளால் தொடர்ச்சியாக அழிக்கப்படுகின்றது.

இந்த பேரினவாதத்துக்கு துணையாக, அக்கம்பக்கமாக இரண்டு தமிழ் துரோகக் கும்பல்கள் செயல்படுகின்றன. இவர்கள் தமிழ் மக்கள் தமக்காக தாம் போராட முடியாதவர்கள் என்று கூறியபடி, அவர்களை அடக்கி அடிமைப்படுத்தி வைத்தபடி தமது துரோகத்தை அரசியலாக்க முனைகின்றனர். தமிழ் மக்களுக்கு எதிரான இந்த இரண்டு துரோகிகள் யார்?

1 புலிக் கும்பல்
2. புலியெதிர்ப்புக் கும்பல்

தமிழ் மக்களின் அனைத்து சமூக வாழ்வாதாரங்களையும் அன்றாடம் அழித்தபடி, இந்த துரோகிகள் தமிழ் மக்களுக்காக தாம் போராடுவதாக கூறுகின்றனர். மக்கள்தாம் தமது சொந்த விடுதலைக் காக போராட வேண்டும் என்பதில் நம்பிக்கையற்ற இந்த துரோகக் கும்பல்கள், குறுங்குழுவாத அரசியலைச் செய்கின்றனர். தமிழ் மக்கள் தமக்காக போராட எந்த லாயக்குமற்றவர்கள் என்பதே, இவர்களின் அடிப்படையான அரசியல் கோட்பாடாகும். கடந்த 25 வருடங்களுக்கு



படிப்பகம்

www.padippakam.com



மேலாக இதனடிப்படையில் செயல்படும் இவர்கள், தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுத்ததும், கொடுப்பதும் அவர்களின் சொந்த வாழ்வியல் இழப்பையும் அவலத்தையும் தான்.

தமிழ் மக்கள் இந்த மக்கள் விரோத இரண்டு துரோக வழிகளிலும் சிக்கி படாதபாடுபடுகின்றனர். அவர்கள் அனைத்தையும் இழந்துவிட்டனர். இவர்களிடம் தமது சுய கௌரவத்தை இழந்து விட்டனர். நடைப்பிணமாக, தலையாட்டி பொம்மையாக மாற்றப்பட்டு விட்டனர். தமிழ் மக்கள் எதையும் சுயமாக சிந்திக்கவோ, சுயமாக செயல்படவோ எந்த உரிமையற்றவராகி விட்டனர். இதை வெறுமனே புலிகள் மட்டும் செய்யவில்லை. புலியெதிர்ப்புக் கும்பலும் சேர்ந்தே செய்தனர், செய்கின்றனர்.

20 வருடங்களுக்கு முன்னர் புலிகள் மாற்று இயக்கத்தை அழித்த பின், புலியெதிர்ப்பாக இந்த பிற்போக்கு கூறுகள் திரிபடைந்தன. அதற்கு முன் அனைத்து குழுக்களும் மக்களை எதிர்த்து நின்றன. இதனடிப்படையில் நூற்றுக்கணக்கான உள்ளியக்க படுகொலைகளை நடத்தினர். இதன் மூலம் மக்கள் நலன்களுக்கான போராட்ட கூறுகள் ஒழித்துக்கட்டப்பட்டன. மக்களுக்கான போராட்டம் என்பது, தேச விடுதலைக்கு எதிரானதாக காட்டி, தமிழ் மக்களுக்கு எதிரான துரோகத்தை அரசியலாக அரங்கேற்றினர்.

இப்படிப்பட்ட ஒரு அரசியல் தொடர்ச்சியில்தான், மக்கள் விரோத துரோகமே இந்தக் குழுக்களின் அரசியலாகியது. இதுவே புலியின் இயக்க அழிப்பின் பின், புலியாகவும் புலியெதிர்ப்பாகவும் சமூகத்தை பிளந்துகாட்ட முனைந்தனர். புலிகள் அனைத்தையும் தியாகம் துரோகம் என்று இரு வரையறையில் முத்திரை குத்தினர். புலியெதிர்ப்பு கும்பல் தாம் அல்லாத அனைத்தையும், புலியாக முத்திரை குத்தினர். மக்கள் நலன் சார்ந்த எந்த கூறையும், அதற்கான போராட்டத்தையும் தொடர்ச்சியாக புலிகளும், புலியெதிர்ப்பு துரோகிகளும் தமிழ் மக்களிடையே அனுமதிக்கவில்லை.

இயக்க ஒழிப்பின் பின்பும் அதற்கு முன்னரும் மக்களில் நம்பிக்கையற்று இந்தக் குழுக்கள், தமிழ் மக்கள் தமக்காக தாம் போராட வேண்டும் என்பதை மறுத்து முதன்மையான துரோகி களானார்கள்.

தமிழ் மக்கள் தமக்காக தாம் போராட முடியாதவர்கள் என்று இவர்கள் அன்று முதல் இன்று வரை கூறிக்கொள்வதன் மூலம், தமது மக்கள் விரோத பாசிச நிலையை அரசியலாக கையிலெடுத்தனர். தாம்



படிப்பகம்

www.padippakam.com



போராடி தமிழ் மக்களின் விடுதலை பெற்றுத் தரப்போவதாக பறைசாற்றிக் கொண்ட இந்த துரோகிகள், மக்களை நாயிலும் கீழாக அடிமைப்படுத்தினர். மக்களை தமது தேவைக்கு பயன்படுத்தும் எல்லைக்குள் அடிமைப்படுத்தி, அவர்களின் அடிப்படை உரிமைகளை இன்றுவரை மறுத்து நிற்கின்றனர். அதை மீறுவதை துரோக மாக்கினர்.

புலித் தமிழீழம், புலியொழிப்பு ஜனநாயகம் என்று கூறியபடி, அனைத்தையும் இதற்குள் கட்டுப்படுத்தி சமூகத்தை அடக்கியொடுக்கினர், அடக்கியொடுக்குகின்றனர். மக்கள் இதற்கு வெளியில் சிந்திக்கவும், செயல்படவும் முடியாத வகையில், படுகொலை அரசியலை நடத்தினர், நடத்துகின்றனர்.

இதை சாதிக்க அன்னிய சக்திகளின் கைக்கூலிகளாகி விட்டனர். பேய்களுடனும், பிசாசுகளுடனும் கூடிக் குலாவுகின்றனர். அவர்களின் உதவியையும், வழிகாட்டலை பெறுவதுடன், ஆயுதங்களில் மட்டும் தங்கி நிற்கும் துரோகிகளாக உள்ளனர். இப்படி தமிழ் மக்களின் உள்ளேயான முதன்மையான எதிரிகளாவர். எதிரிக்கு எதிராக மக்கள் போராட்டத்தை நடத்தவிடாது தடுக்கின்ற, பாசிட்டுகளாக துரோகிகளாக உள்ளனர்.

கடந்த 20, 25 வருடமாக இவர்கள் கூறிக்கொள்வது, தமிழ் மக்கள் தமக்காக தாம் போராட மாட்டார்கள் என்ற மக்கள் விரோத பாசிசக் கோட்பாட்டைத் தான். இதைக் கூறிக் கொண்ட இந்த இரு துரோகக் கும்பலும், தமிழீழத்தையோ ஜனநாயகத்தையோ மீட்கவில்லை, மீட்கப்போவதுமில்லை. மாறாக அதை பரஸ்பரம் தத்தம் சொந்த துரோக வழிகளின் குழி தோண்டி புதைத்தனர், புதைக்கின்றனர்.

புலித் தமிழீழம் பெற தாம் அல்லாதவர் படுகொலைகளையும், ஜனநாயகத்தை பெற புலியொழிப்பு படுகொலைகளை அரசியலாக கொண்ட இந்த துரோகக் கும்பல்கள் செயல்படுகின்றன. இதற்கு பல்வேறு மட்டத்தில் பேய்களும் பிசாசுகளும் உதவுகின்றனர். தமிழ் மக்கள் இதற்கு வெளியில் மூச்சுவிட முனைந்த போது எல்லாம், படுகொலைகள் மூலம் பதிலளித்தனர், பதிலளிக்கின்றனர்.

இவர்கள் தமது முரண்பாட்டின் இடையே, இரண்டு வழிதான் உண்டு என்கின்றனர். அதாவது புலித் தமிழீழம் அல்லது புலியொழிப்பு, இதை முன்வைக்கின்ற புலிகள், புலியெதிர்ப்பு வாதிகள் மட்டுமே உள்ளனர் என்கின்றனர். இதற்கு வெளியில் சிந்திக்கவும் செயல்படவும் யாருக்கும் அனுமதியுமில்லை, உரிமையுமில்லை. இது



படிப்பகம்

www.padippakam.com



தான் உண்மை.

உண்மையில் மக்கள் தமக்காக தாம் போராடும் உரிமை கிடையாது என்று கூறும் இந்தக் கும்பல், அரசியல் படுகொலைகளையும் பாசிச வெறியாட்டத்தையும் அதன் மீது நடத்துகின்றனர்.

மக்கள் தமது சொந்த விடுதலைக்காக போராடுவதை தடுப்பதில், புலிகள் முதல் புலியெதிர்ப்பு புலியொழிப்புவாதிகள் வரை ஊக்கமாக பங்காற்றுகின்றனர். மக்களின் அடிப்படை உரிமைகளைப் பற்றி யாரும் பேச முடியாது என்கின்றனர். அதற்குரிய காலம் இதுவல்ல என்கின்றனர். அனைத்தையும் தமிழீழத்தின் பின் அல்லது புலியொழிப்பு ஜனநாயக மீட்பின் பின் என்கின்றனர்.

இப்படி கூறியபடி அனைத்தையும் இதற்குள் பரஸ்பரம் கட்டுப்படுத்தியபடி வெறியாட்டமாடுகின்றனர். தமிழ் மக்கள் தமக்காக தாம் சொந்தமாக போராட முடியாது என்பதும், அதை அவர்கள் செய்ய முடியாதவர்கள் என்று கூறும் இவர்கள், அதை தடுப்பதன் மூலம் சொந்த வலதுசாரி பாசிச சூறையாடலை தமிழ் மக்கள் நிலைநிறுத்த முனைகின்றனர்.

தமிழ் மக்கள் மீதான அனைத்து சமூக ஒடுக்குமுறையிலும் இருந்து விடுபடுவதற்காக போராடுவதை தடுக்கின்றவர்கள் இந்த இரு துரோகிகளுமாவர். தமிழ் மக்கள் தாம் அணிதிரளவோ, அதை முன்வைத்து போராடவோ அனுமதிக்காது ஆயுத வன்முறையையும் ஊடக வன்முறையையும் கையாளுகின்றனர். தமது பாசிச அதிகார வெறிகொண்டு, தமிழ் மக்களை உள்ளிருந்து ஒடுக்குபவர்கள் வேறுயாருமல்ல, இந்த இரு துரோகிகளும்தான். இதை வேரறுக்காது, தமிழ் மக்களின் சொந்த விடுதலை கிடையாது.

***29.08.2007***



படிப்பகம்

www.padippakam.com



# வன்னி மக்களின் துயரங்கள்

புலிகளின் தனிமனித பயங்கரவாதம் உருவாக்கிய இராணுவ வாதங்கள் சொந்த நெருக்கடியில் சிக்கி திணறுகின்றது. இப்படி மக்களின் வாழ்வியலில் இருந்து அன்னியமாகிய புலியிசம், தொடர்ச்சியாகவே தோற்கின்றது. இதன் விளைவு பேரினவாதத்தின் வெற்றியாகின்றது. புலிகளின் அரசியல் தமது சொந்த வர்க்க நலனுக்குள், அதுவும் குறுகிய ஒரு சிறு கும்பலின் நலனாகிவிட்ட நிலையில், அதை தனது சொந்த இராணுவ வழிகளில் தொடர்ச்சியாகவே பாதுகாக்க முனைகின்றனர்.

இதன் விளைவு தமது சொந்த தோல்வியை தவிர்ப்பதற்கான தற்காப்புக்கான இறுதி யுத்தத்தை, தமிழீழத்துக்கான இறுதி யுத்தமாக கூறிக்கொண்டு நடத்துகின்ற வெறியாட்டம் தான், இன்றைய வன்னித் துயரம். இதற்காக எல்லாவிதமான பாசிச கூத்துகளையும் மக்கள் மீது நடத்துகின்றனர்.

இப்படி புலிகள் தமது சொந்த அதிகார வன்முறைக்கு உள்ளாகக் கூடிய அனைத்து மக்களின் மீதும், இந்த புலிப் பயங்கரவாத வன்முறையை ஏவி விட்டுள்ளனர். மக்கள் புலிகளில் இருந்து விலகி தாமும் தம்பாடும் என்று வாழ்ந்தவர்களை, இனி அப்படி வாழமுடியாது என்பதை புலிகள் தமது வன்முறை மூலம் வீட்டுக்கு வீடு தமது அடாவடித்தனத்தால் உணர்த்தி வருகின்றனர்.

முன்பு வீட்டுக்கு ஒருவர் புலியில் இணையவேண்டும் என்று கட்டாயப்படுத்தி இணைத்தவர்கள், இன்று வீட்டில் ஒருவரைத் தவிர அனைவரையும் புலியுடன் பலாத்காரமாக இணைக்கின்றனர். முன்பு குழந்தைகளை பலாத்காரமாக திருடியவர்கள், இன்று சமூகத்தையே சூறையாடுகின்றனர். மக்கள் ஒடி ஒளிய முடியாத வகையில் மக்களையே கண்காணிக்கும் புலியிசமும், மறுபக்கம் மக்கள் பற்றிய முழு விபரத்தையும் திரட்டிவைத்துக் கொண்டு அலையும் சமூக விரோத லும்பன்கள்.



படிப்பகம்

www.padippakam.com



வீடுவீடாக புகுந்து, குழந்தைகளை குற்றவாளிச் சமூகமாக இழுத்துச் செல்லுகின்ற புலிக் காட்டுமிராண்டித்தனம். இதை தடுக்கும் பெற்றோருக்கு அடி உதை, கை கால் முறிப்பு முதல் மரணம் வரை பரிசாக கிடைக் கின்றது. எங்கும் இதை உணர்ந்தும், அனுபவித்தும், தெரிந்து கொண்டும் வாழ்கின்றது வன்னிபெரு நிலப்பரப்பு.

இது சார்ந்த மரணவோலங்கள் கேட்காத வன்னிக் கிராமம் கிடையாது. ஒவ்வொரு நாளும் வன்னிக்காடெங்கும் இது எதிரொலிக்கின்றது. மறுபுறம் புலிகளினால் பலாத்காரமாக இழுத்துச் செல்லப்படுபவர்கள், கட்டாயப் பயிற்சிக்குள்ளாகின்றனர். இதன்போது, அதை மீறுபவர் களுக்கு அடி உதை முதல் மரணம் வரை அன்றாடம் புலியிசத்தின் தீர்ப்பாகின்றது.

இப்படி ஆங்காங்கே உயிரற்ற சடலங்கள் பெற்றோரிடம் கொடுக்கப்படு கின்றது. ஏன் எப்படி இந்த மரணம் நிகழ்ந்தது என்று யாரும், சொந்த சுயவிசாரணையை செய்யமுடியாது. மரணங்களும், மரண ஓலங்களுமே கிராமங்களில் பொது நிகழ்ச்சி நிரலாகிவிட்டது. இதைக் கடந்து வாழ்தல் என்பது, புலி நிர்வாகத்தில் சாத்தியமற்ற ஒன்றாகிவிட்டது. மரணத்தின் வருகை புலியிசத்தின் வழியில் மட்டுமல்ல, பேரினவாதத்தின் குரூரத்தாலும் கூட விதைக்கப் படுகின்றது.

வன்னி நிலப்பரப்பு எங்கும், எதிலும் கண்காணிப்பும், தண்டனைகளும். வன்னியில் நிகழும் மரணங்களில் சுய ஒப்பாரியைக் கூட வைக்கமுடியாது. புலியிசத்தின் ஆட்சி, அதன் நீதி, அதன் ஒழுக்கம், அதன் பண்பாடு என அனைத்துமே இதுவாகிவிட்டது.

புலியிசத்தின் பாசிச கொடுங்கோலே, சமூக செங்கோலாக திணிக்கப் பட்டுவிட்டது. யாரும் ஏன் எதற்கு என்று மூச்சுவிட முடியாது. அனைத்தையும் தலையில் சுமந்த படி, பீதி பொருந்திய ஒரு ஊமையாக வாழுகின்ற சமூக வாழ்க்கையைத் தான், சுபிட்சமாக காட்டுகின்ற புலியிசத்தின் வக்கிரம்.

மக்கள் தாம் ஏன் எதற்கு புலிகளின் நுகத்தடியின் கீழ் இப்படி நடைப்பிணமாக வாழ்கின்றோம், மரணிக்கின்றோம் என்று கூட தெரியாத அளவுக்கு, மனித துயரங்கள்.

எங்கும் எதிலும் புலிகளின் அத்துமீறல்கள். இவை அனைத்தும் புலித் தமிழீழத்தின் பெயரில்தான் அரங்கேற்றுகின்றன. இதன் மூலம்தான், தமிழ் மக்களுக்கு சொர்க்கத்தை பெற்றுத்தரப்



படிப்பகம்

www.padippakam.com



போகின்றார்களாம்! அதற்காக மக்கள் புலிப் பயங்கரவாதத்துக்கு இரையாவதை கண்டுகொள்ளக் கூடாது என்பதே புலிக்கட்டுப்பாடு. இதையே தமிழீழப் போராட்டத்தின் போராட்ட வழி என்று கூறுகின்ற புலிப் பாசிசமும், அரங்கேறுகின்றது.

ஆனால் இந்த புலியிசம் தோற்றுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு வினாடியும் மக்களிடம் புலிகள் தோற்கின்றனர். இந்த தோல்வி கிழக்கில் மட்டுமல்ல வன்னியிலும் தொடங்கிவிட்டது. இதை ஒரு பாரிய இராணுவ வெற்றி மூலம் வெற்றியாக காட்டி தடுக்கின்ற கடந்த கால புலி உத்திகள், வன்னித் தோல்வியை தவிர்த்துவிடாது.

கிழக்கில் பேரினவாதத்தின் வெற்றி என்பது, கிழக்கு மக்களிடம் புலிகள் தோற்றதன் விளைவாகும். இந்த தோல்வி என்பது, வெல்ல முடியாத அரசியல் நிபந்தனைகளாலானது. இதே நிலைமை வன்னியில் இன்று எதார்த்தமாகிவிட்டது. பேரினவாதத்தின் சொந்த கூலி மனப்பாங்கைத் தாண்டி, அது தனது ஆக்கிரமிப்பு வெறியுடன் வெல்லும் அளவுக்கு, புலிகள் மக்களில் இருந்து நிரந்தரமாகவே அன்னியமாகிவிட்டனர். மக்களை வெறும் மந்தைகளாக்கி, அவர்களை நடைப்பிணமாக்கியவர்கள் புலிகள். இப்படி அடக்கியொடுக்கியதன் விளைவால், மக்கள் தமது சொந்த சுயத்தை இழந்துவிட்டனர். மக்கள் தாம் தப்பிப்பிழைக்கவே, அங்குமிங்குமாக நாயிலும் கீழாக அலைபாய்கின்றனர்.

மக்களுக்கு வெளியில் வன்முறையை நம்பி இயங்கும் லும்பன் கும்பல், அதுவும் மனித பண்பாடற்ற காட்டுமிராண்டிகளால் ஒருநாளும் மக்களை தலைமை தாங்கமுடியாது.

மனிதத்தை நேசிக்கவோ, மனிதத்தை வாழவைக்கவோ இவர்களால் முடியாது. தட்டிச் சுருட்டி தின்பதில் தொடங்குகின்ற புலியிச வக்கிரமே, அனைத்துமாகி மிதக்கின்றது.

இந்த மக்களை காப்பாற்ற, வழிகாட்ட யாரும் கிடையாது. ஒருபுறம் பேரினவாதம் மறுபக்கம் புலியிசம். இதற்குள் புலியெதிர்ப்பு அணி புலியொழிப்பு என்று, மக்களின் முதுகில் குத்தி தனது துரோகத்தை காறி உமிழ்கின்றது. இப்படி இலங்கை வாழ் தமிழ் மக்களின் துயரங்களில் வாழ்கின்ற புல்லுருவிகளின் செயல்பாடுகளே அரசியலாகின்றது.

மக்களுக்காக, அவர்களின் சொந்த விடுதலைக்கான எந்த அரசியல் வழிகாட்டலையும், ஏன் எந்த முயற்சியையும் யாரும் செய்வது



படிப்பகம்

www.padippakam.com



கிடையாது. இதுவே மக்களின் துயரத்தை தொடர்ச்சியாக பலமடங்காக்குகின்றது. சுற்றிச் சுற்றி இந்த மக்கள் விரோத அரசியல் சாக்கடைக்குள் மக்களை ஆழ்த்தி, மனித துயரத்தை தக்கவைத்து பிழைப்பதே எதார்த்தமாகி, அதுவே அரசியலாகி விடுகின்றது. இதற்கு வெளியில் சிந்திக்கவும், மக்கள் தமக்காக தமது சொந்த விடுதலைக்காக போராடவும் வேண்டியுள்ளது. இதை மறுத்து நிற்கும் அனைத்தையும், அம்பலப்படுத்தி போராட வேண்டிய காலகட்டத்தில் தான், இந்த வன்னித் துயரம் மக்களின் தலைவிதியாக மக்கள் விரோதிகளால் திணிக்கப்பட்டுள்ளது.

***31.07.2007***



படிப்பகம்

www.padippakam.com



# புலியிசம் என்பது என்ன?

படுகொலை, கொள்கை கோட்பாடற்ற மாபியாத்தனம். தாம் ஏன், எதற்காக, எந்த இலட்சியத்துக்காக, எப்படி போராடுகின்றோம் என்பதை சொல்ல முடியாத கும்பல். இவர்களுக்கும் மனித குலத்துக்குமான உறவு என்பது, கடைந்தெடுத்த பாசிசம்.

இவர்களின் மொழி படுகொலை தான். இதுவல்லாத வேறு எந்த ஒரு அரசியலும் கிடையாது. அதனிடம் அரசியல் தர்க்கம் கிடையாது. விவாதிக்கும் அரசியல் நேர்மை கிடையாது. இலட்சியம் என்பது வெறும் கோசமாக மாறிவிட்ட நிலையில், மக்களை வெறும் மந்தைகளாக மாற்றிவிட்ட நிலையில், அடக்குமுறையைத் தவிர அதனிடம் ஒரு அரசியல் மொழி இருப்பதில்லை.

இப்படிப்பட்ட அரசியல் அனாதைகளின் இருப்பு என்பது, அரசியல் படுகொலைகள் மூலம் தம்மை தக்கவைப்பது தான். இப்படி 10000 க்கு மேற்பட்ட தமிழர்களை இனம் கண்டு கொன்றதன் மூலம் தான், புலியிசம் இன்று வரை நீடிக்கின்றது. அதுமட்டுமல்ல ஊர் உலகத்தில் உள்ள இலங்கைத் தமிழரை எல்லாம் புலிகளின் அதிகாரத்தின் முன் நிறுத்தினால், மற்றொரு 10000 பேரை உடனடியாகவே கொல்லும் ஒரு பட்டியலையும் வைத்துள்ளனர். அந்தளவுக்கு மக்களுக்கு எதிரான செயல்பாடுகள், வீங்கி வெம்பி காணப்படுகின்றது. உண்மையில் இதற்குள் அதன் தர்க்கம், அதன் அரசியல் எல்லாம். இதுவே சாரமாகி புலியிசம் உயிர்வாழ்கின்றது.

இதை செய்வதற்கும், நியாயப்படுத்துவதற்கும் அது கையாளும் தர்க்கம் என்பது, இழிவானதும் கேடுகெட்ட துரோக வழிகளுமே. எடுத்த எடுப்பில் துரோகி, எட்டப்பன், பொம்பளைப் பொறுக்கி, நிதி மோசடிக்காரன், கைக் கூலி என்று முத்திரை குத்தி கட்டமைப்பதே புலியிச அரசியல். புலியின் அரசியலே இதுதான். இதற்கு வெளியில் அ, ஆ எதுவும். தெரியாது. அவர்கள் கட்டமைக்கின்ற அவதூறுகளுக்கு அரசியல் அடிப்படைகள், ஆதாரங்கள் எதையும்



படிப்பகம்

www.padippakam.com



முன்வைப்பதில்லை. மாறாக பொய்யும் புரட்டும், கற்பனையும் புளுகும், அதர்மமான வழிகளில் வரலாற்று மோசடி செய்து விதம்விதமாக கட்டமைப்பதே அவர்களின் பாசிச மொழி.

உண்மையில் இதை கேட்பவன் மந்தையாகவும், கேள்வி கேட்கும் ஆற்றலற்ற மலட்டுக் கூட்டமாகவும், விசுவாசமே அறிவாகவும் கொண்ட சைக்கோக்களாக வைக்கப்படுகின்றனர். உள்ளடக்கத்தில் அரை லூசுகள். எந்த சொந்த உணர்வு அற்றவர்கள். வெறியேற்றப்பட்டு முறுக்கிவிடப்பட்டால் சுழலும் பொம்மை இயந்திரங்கள். சுய ஆற்றலற்றது. சுய அறிவற்றது. சுய புத்தியற்றது.

கற்றல், கற்பித்தல், கேட்டல், கேட்டவற்றை விவாதித்தல் என அனைத்தும் இவர்களுக்கு மறுக்கப்படுகின்றது. அப்படி இருந்தால் மட்டும்தான், தேசியம் என்று ஊட்டப்படுகின்றது. இதை கடைப்பிடிக்கின்ற அடிமைத்தனத்தை இயல்பான ஒன்றாக, அதையே பெருமையாக மாற்றிவிடுவதே புலியிசம்.

ஒன்றையே கேட்கவும், அதையே மீள ஓதவும் தூண்டப்படுகின்றது. மற்றையவற்றை பார்க்காமல் கேட்காமல் இருக்கவும் கூடிய, பண்ணை மந்தைகளாக வேலியிட்டு அடைக்கப்படுகின்றனர். இவர்கள் தான் புலி விசுவாசிகள்.

இவர்கள் தம் விசுவாசத்தை சந்தேகிக்க முடியாது. இதன் மேல் அறிவியல் பூர்வமாக, எதையும் உணர்ந்து செயல்படுவது கிடையாது. உண்மையில் மனித அறிவுக்கும், புலி விசுவாசத்துக்கும் இடையில் எந்த உறவும் இருப்பதில்லை. எதிர்நிலை மனப்பாங்கே உண்டு. அறிவு என்பது புலிக்கு எதிரான துரோகம் என்பதே, இவர்களின் அகராதி கூறுகின்றது. சமூதாயத்தின் கருத்தை கேட்காத வண்ணம், இவர்களின் சொந்தக் காது இறுக அடைக்கப்பட்டு, கண் கட்டப்பட்டு, வாய் பொத்தப்பட்ட நிலையில்தான், புலி விசுவாசிகள் கூட்டம் உருவாக்கப்படுகின்றது. கத்து என்றால் அது கத்தும், அழு என்றால் அழும். சிரி என்றால் சிரிக்கும். இதற்கு வெளியில் அதனிடம் எந்த உணர்ச்சியும் கிடையாது.

இந்தக் கூட்டத்துக்கு சில வான வேடிக்கைகள் போதும். இதன் மூலம் விசுவாசத்தின் பலனை அடைந்ததாக அவர்களை நம்ப வைக்க முடியும். இப்படிப்பட்ட அற்புதமான புலியிசம்தான், எமது சமுதாயத்தில் இன்றுவரை ஆதிக்கம் வகிக்கின்றது.

உண்மையில் தமிழ் தேசிய போராட்டத்தின் சரியான தேசியக்



படிப்பகம்

www.padippakam.com



கூறுகள், எந்த எதிரியையும் அரசியல் இராணுவ கூறுகளில் வெல்லப் போதுமானது. படுகொலைகளுக்கு பதில், அவதூறுகளுக்கு பதில், பாசிசத்துக்கும் மாபியாத்தனத்துக்கும் பதில், உயர்வான மனித விழுமியங்களைக் கொண்டது. அந்தளவுக்கு தமிழ் தேசியம் மக்களின் வாழ்வை அடிப்படையாகவும், அவர்களின் சமூக பொருளாதார கூறுகளைக் கொண்டது. அது கொண்டுள்ள அரசியல் சாரம், அதன் அரசியல் தர்க்கம், மனித குலம் சார்ந்தது. மனிதக் கூட்டுறவை உருவாக்கும் அடிபடையில் மிகப்பலமானது. அதன் உண்மையான தர்க்கமும் சாரமும், படுகொலையையோ, பாசிசத்தையோ மாபியாத்தனத்தையோ அடிப்படையாக கொண்டதல்ல. மாறாக அது தன்னளவில், அதன் உண்மை மிகப்பலமானது. எந்த எதிரியையும் வெற்றிகொள்ளக் கூடியது.

புலிகள் இதை மறுக்கின்றமையால் தான், பாசிசமும், மாபியாத் தனமும் அவசியமாகின்றது. தமிழ் தேசிய அரசியலைக் கைவிட்டு, படுகொலையை தனது மொழியாக்குகின்றது. தன்னைச் சுற்றி அறிவற்ற கூட்டத்தை, பினாமிகளை, பிழைப்புவாதிகளை உருவாக்கிக் கொள்கின்றது. அறிவுக்கு பதில் அரை லூசுகளைக் கொண்ட லும்பன்களை, சமூக அறிவியல் மேதைகளாக புழுக்கவைக்கின்றது.

இப்படி இதை வழிநடத்தும் பாசிட்டுகள். அதற்கேற்ற பினாமிக் கூட்டங்கள். இதற்கு பின்னால் சில லூசுகள். அதற்கு ஏற்ற பன்னாடைகள். இதுவே எங்கும் நிரம்பிய புலியிசம். இதுவே புலியிசத்தின் தாற்பரியம். வேடிக்கை என்னவென்றால், பாசிட்டுகளைத் தவிர, மற்றவர்கள் தம்மை தாம் மறைத்துக்கொண்டு, ஊர் பெயர் தெரியாத பெயர்களில் சந்தர்ப்ப வாதிகளாக இருந்தபடி பிழைப்பதும், ஊளையிடுவதும். அரை லூசுகளாக, அதற்கேற்ற பன்னாடைகளாக, அவதூறுகளை புனைவதும் புணர்வதுமாக இவர்கள் அரசியல் வாழ்கின்றது. அறவியல் பூர்வமாக, அரசியல் ரீதியாக விவாதிக்க வக்கற்று விடுகின்றனர். சொந்த இலட்சியத்தைக் கூட, கருத்தியல் ரீதியாக வைக்க முடியாதளவுக்கு லூசுக் கூட்டமாகிவிடுகின்றது. குறைந்த பட்சம் ஒரு விடயத்தை விளங்கிக்கொள்ளும் மனித ஆற்றல், மனித அறிவு, மனித நேர்மை எதுவுமற்றவர்களாகி விடுகின்றனர். மாறாக மோசடிகள், அறிவின்மையும், அயோகியத்தனமும், ஒழுக்கக்கேடும் கொண்டு புலித் தேசியத்தையே விபச்சாரம் செய்பவர்களாகி விடுகின்றனர்.

தமிழ் தேசியம் என்றால் என்னவென்று அறிவியல் பூர்வமாக, விளக்க முடியாதவர்கள் இவர்கள். அதை காட்டுமிராண்டித்தனமான வழிகளில், முடிவாக படுகொலை மூலம் பதிலளிப்பவர்கள். இதுதான்



படிப்பகம்

www.padippakam.com



இவர்களின் தேசியம். இதனால் இது தமிழ் தேசியமல்ல, புலியிசமாகின்றது. புலித் தேசியத்தை புலியிச பாசிச வழிகளில், மற்றவன் மீது கொத்திக் கிளறுவது, நலமடிப்பதுமே இவர்களின் உயர்ந்தபட்ச ஊடக வரையறை.

தமிழ் மக்கள் என்று இவர்கள் கூறும் அந்த மக்களின் சமூக பொருளாதார அரசியல் வாழ்க்கையையே நலமடித்து, அதை அறுப்பவர்கள் இவர்கள். இவர்கள் கூறும் அந்த தமிழ் மக்களுக்கு அடிப்படையான ஜனநாயக உரிமையை வழங்க முடியாது என்பவர்கள் தான், தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்கின்றனர். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள், புலிகளை அரசியல் அனாதையாக்கும் என்றவர்கள் தான் இந்தப் புலிகள். இவர்கள் தான் தமிழ் மக்களுகாக போராடுகின்றனர். தமிழ் மக்கள் இவர்களைத் தான் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

தமிழ் மக்கள் அடிப்படை மனித உரிமைகளையும், அவர்களின் அரசியல் சமூக பொருளாதார வாழ்வையும் மறுப்பவர்கள். அதை குழிதோண்டிப் புதைக்கும் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும், எந்த அரசியல் பொருளாதார ஒட்டுறவும் கிடையாது. மக்களுடனான உறவின் மொழி காட்டுமிராண்டித் தனமான பாசிச உறவே. இந்த தமிழ் மக்கள், தமக்கான அடிப்படை உரிமையைக் கோரினால் கிடைப்பதோ அவதூறுகளும், பட்டங்களும், மரணங்களும். விதவிதமான பட்டங்கள். விதவிதமான படுகொலைகள். இதுதான் புலியிசம். இது தான் பிரபானிசம். துரோகி, பொம்பளைப் பொறுக்கி, எட்டப்பன் என்று நீண்ட பட்டியல். இதையும் தாண்டினால் பச்சைத் தூசணம். முடிவாக படுகொலை. இதுதான் எமது தேசத்தின் புலியிசத்தின் அரசியல் வரலாறு. பேரினவாதத்தின் நுகத்தடியின் பின்னால் கட்டமைக்கப்பட்ட, தமிழ் மக்களின் வரலாறு இப்படித்தான் உள்ளது.

***13.06.2007***



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் மக்களா புலியை பாதுகாக்கின்றனர் எனின் இல்லை, இந்த அரசுதான் பாதுகாக்கின்றது

அரசியலில் உள்ள பலருக்கு இது புரிவதில்லை. உண்மையில் இனச்சுத்திகரிப்பு என்பது பேரினவாதத்தின் கொள்கையாகும். கொழும்பில் புலிகளின் இருப்புக்கு காரணம் இந்த அரசு. இனப்பிரச்சனையை தீர்த்தால், புலிகளின் இருப்பு என்பது சாத்திய மில்லை. இதற்கு தடையான இந்த அரசை அல்லவா, நாம் விரட்டி அடிக்க வேண்டும்.

மாறாக இனச் சுத்திகரிப்பு என்பது, தமிழ் மக்களை கொலைக் களத்துக்கு அனுப்புவதுதான்.

1. புலியல்லாத பிரதேசத்து மக்களை வலுக்கட்டாயமாக புலியின் இராணுவத்தில் திணிப்பதாகும்.

2. இதில் இருந்து தப்ப, அரசுடன் இயங்கும் துரோக கூலிக் குழுக்களில் நிர்ப்பந்தித்து இணைப்பதாகும்.

இதற்கு வெளியில் வாழ்வதற்கு ஏற்ற சூழல் அனைத்தையும், புலிகளும் அரசும் மறுக்கின்றது. உண்மையில் இந்த இரு கொள்கையும் தான் அமுலில் உள்ளது. தமிழ் மக்களின் பரிதாபகரமான வாழ்க்கை இதற்குள்ளாகவே அமைகின்றது. இதை தீவிரமாக்க விரும்பிய அரசு, இனச் சுத்திகரிப்பை முன்னெடுக்கின்றது.

இந்த நிலையில் கொழும்புச் சம்பவத்துக்கு பேரினவாத அரசு மன்னிப்பு கோரியுள்ளதாம். நல்ல அரசியல் வேடிக்கை. போலித்தனமானதும், ஊரையும் உலகத்தையும் ஏமாற்றுகின்ற அரசியல் நாடகம். கொழும்புச் சம்பவத்தின் பின்னால் இருந்த



படிப்பகம்

www.padippakam.com



அரசியல் என்ன? காலாகாலமாக தமிழ் மக்கள் மேலான, பேரினவாத அரசியல் நடைமுறையின் ஒரு அங்கம் தான் கொழும்புச் சம்பவம். இன்று இதற்கு தலைமை தாங்கும் சிறிய பாசிச குழுவே, இதை வழிநடத்தியது. இது இன்று அம்பலமாகியுள்ள நிலையில், மன்னிப்பு என்பது வெறும் நாடகம். பேரினவாத நிலையே தான் இச்சம்பவத்துக்கு காரணமாக இருக்க, வெறும் சம்பவத்துக்கு மட்டும் மன்னிப்பு கோருவது என்பது பேரினவாத சூழ்ச்சிதான்.

இன்று இலங்கையில் என்றுமில்லாத அளவுக்கு, இரு பாசிச குழுக்களின் உச்சக்கட்ட அதிகாரத்துக்குள் மக்கள் பிய்த்து எடுக்கப்படுகின்றனர். ஒவ்வொரு மக்களும், அவர்களின் விருப்பத்துக்கு மாறாக அடையாளப்படுத்தப்படுகின்றனர். மொத்தத்தில் சிறிய பாசிச குழுக்களின் பிடியில், மக்களின் தலைகள் போட்டுடைக்கப்படுகின்றது. ஒருபுறம் ராஜபக்ச தலைமையிலான பாசிச குழு, மறுபக்கம் பிரபாகரன் தலைமையில் உள்ள சிறிய பாசிசக் குழு. பாசிசத்துக்கு புதிய வரலாறு அவரவர் மொழியில் எழுதுகின்றனர். மக்களின் அவலத்துக்கு வடிகால் கிடையாது.

புலிகள் வலிந்து சண்டையை தொடங்கிய போது இருந்த நிலை ஒருபுறம். மகிந்த ஆட்சிக்கு வந்த பின் சண்டை தான் வழி என்று கூறிக்கொண்டு நடத்துகின்ற வெறியாட்டம் மறுபுறம். ஒட்டு மொத்தத்தில் எங்கும் வெறி கொண்ட இராணுவ தயாரிப்புகள். இதற்கு ஏற்ப கடத்தலும் படுகொலைகளும். மக்கள் இதற்குள் பலியா கின்றனர். மக்களின் சொந்த அபிப்பிராயங்கள் மிதிக்கப்பட்டு, அங்குமிங்குமாக சீரழிக்கப்படுகின்றது. மக்கள் விரும்புவதோ அமைதியையும் சமாதானத்தையுமே. இதை மறுப்பவர்கள் யார்?

1. புலிகள்
2. பேரினவாத அரசு

மக்களின் விருப்பத்தை மறுப்பதில் உள்ள வக்கிரம் தான், இவர்களின் பாசிச அரசியல். மக்களின் ஒற்றுமைக்கும், ஐக்கியத்துக்கும் வேட்டு வைக்கின்றது இவர்களின் சுயநல இராணுவ வெறியாட்டங்கள்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் ஒன்றுதான் கொழும்புச் சம்பவம். இது ஒரு இன சுத்திகரிப்பு. இனக்கலவரம் முதல் அனைத்தும் மக்களுடன் மக்களாக வாழ முடியாதவர்களின் ஈனத்தனம் தான்.

இதில் தமிழருடன் ஒரு நாட்டில் ஒன்றாக வாழமுடியாது என்பதை, மறுபடியும் கூறுவது என்பதற்கு பேரினவாதத்தின் இருப்புத்தான் காரணம். அன்று புலிகள் முஸ்லிம் மக்களை தமிழ் மக்கள் என்று



படிப்பகம்

www.padippakam.com



கூறியபடி வெளியேற்றவில்லையா! மக்களுடன் மக்களாக வாழ அஞ்சும் கோழைகளின் வெறியாட்டங்கள்தான் இவைகள்.

இன்று கொழும்பில் இருந்து வெளியேற்றிய நிகழ்வு, தமிழர்கள் தனித்து பிரிந்து வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதையே கூறுவதாகும். புலிகள் மறுபக்கத்தில் இருக்கின்றார்கள் என்பதால், இது பொய்யாகிவிடுவதில்லை. தமிழ் மக்கள் மேலான ஒடுக்குமுறை என்பது, சாதாரண அடிப்படை மனித உரிமையை மறுப்பதில் இருந்தே தோன்றுகின்றது.

பேரினவாத தர்க்கத்தையும், நடைமுறையையும் புலிகளின் பெயரால் செய்கின்றனர். இன்று அனைத்தையும் புலிகளைச் சொல்லி செய்வதும், அதை சொல்லி நியாயப்படுத்துவதும், பேரினவாதத்தின் வால்களாக இருப்பதும், அரசியல் போக்கிடமற்றவர்களின் சூழ்ச்சியா கின்றது.

புலிகள் தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கின்றார்கள் என்பதால், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் பேரினவாதிகளால் மறுக்கப்படுவதை நியாயப்படுத்தி விடமுடியுமா!

கொழும்பு வெளியேற்றம், புலிகளின் கொழும்புத் தாக்குதல் தான் இதை உருவாக்கியது என்ற காரணங்கள் மூலம் புலியை சிலர் விமர்சிக்க முடியாது. அரசியல் ரீதியாக புலி அரசியலைக் கொண்ட வர்களின் எதிர் நிலைவாதம், இப்படித்தான் கட்டமைக்கப்படுகின்றது. அரசியல் ரீதியாக புலிகளை விமர்சிக்க முடியாது போனவர்களின் நிலை இது. ஒரு போராட்டம், அதன் தாக்குதல் வடிவங்கள் என்ற எல்லைக்குள், எங்கும் தாக்குதல்கள் நடந்தேயாகும். இதைக்கொண்டு அரசை நியாயப்படுத்துவது, தமிழ் மக்களை பற்றி அக்கறைப்படுவதாக நடிப்பது எல்லாம் அரசியல் அற்பத்தனமாகும்.

புலிகளின் தாக்குதல் பற்றிய மதிப்பீடுகள் என்பது, புலிகள் மக்கள் பற்றி கொண்டுள்ள அரசியல் நிலை சார்ந்தது. இதில் இருந்து தான் விமர்சிக்க முடியும். அதற்கு அரசியல் வக்கு கிடையாது.

1. இன்று தமிழ் மக்கள் யுத்தத்துக்கு பதில் அமைதியை, சமாதானத்தை வேண்டி நிற்கின்றனர். அதை மறுக்கின்ற புலி அரசியலை விமர்சிக்க வேண்டும். இந்த வகையில் தாக்குதல் விளைவுகளை அரசியல் ரீதியாக, தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி விமர்சிக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



2. இது போன்ற தாக்குதல்களின் பின்னணியில் மக்கள் நலன்கள், அரசியல் நலன்கள் எதுவும் தமிழ் மக்கள் சார்ந்து இருப்பதில்லை. இதை தெளிவுபட அரசியல் பொருளாதார ரீதியாக சுட்டிக்காட்ட வேண்டும்.

3. புலிகள் தமது குறுகிய குழுவின் சொந்த அரசியல் நலனுக்காவே இதை செய்கின்றனர் என்பதை தெளிவுபடுத்தவேண்டும்.

4. புலிகள் இதுபோன்ற தாக்குதலின் போது, மக்களின் அவலங் களையிட்டு அக்கறைப்படுவதில்லை. இதை அம்பலப்படுத்த வேண்டும். மக்களின் அவலங்கள் எப்படி ஏன் அதிகரிக்கின்றது என்பதை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்த வேண்டும்.

இதைவிடுத்து புலியின் தாக்குதல்தான் காரணம் என்பது அரசியல் கோமாளிகளின் கூத்தாகும். சரி புலிகள் ஏன் தாக்குதல் நடத்துகின்றனர் என்றல்லவா ஆராய வேண்டும். இப்படிப் பார்த்தால் தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்க்காமையல்லவா காரணமாகும்.

தமிழ் மக்களின் பிரச்சனைகளை அரசியல் பொருளாதார ரீதியாக முன்னெடுக்காத புலியின் பாசிச நடத்தைகளை அம்பலப்படுத்த வேண்டும். இதுதான் மக்கள் பற்றி கொண்டுள்ள அரசியல் கரிசனை. இன்று சிங்கள பேரினவாதம், இனப்பிரச்சனையை தீர்க்க மறுப்பது அல்லவா அனைத்துக்குமான காரணம். அதை புலிகள் கோர மறுப்பதும் மற்றொரு காரணமல்லவா.

இன்று புலிப் பாசிசத்தின் இருப்பு, தமிழ் மக்களின் உரிமையை மறுப்பதில்தான் உள்ளடங்கியுள்ளது. இதை சிங்கள பேரினவாத மாகட்டும், புலி பாசிட்டுகள் ஆகட்டும், இதுவே இரண்டுக்கும் பொருந்தும். தமிழ் மக்களின் உரிமையை மறுப்பது தான் புலிப் பாசிசத்தின் இருப்பாகும்.

யுத்தத்தின் மூலம், இராணுவ வழிகளில், பிரச்சனையை தீர்க்க முனைகின்ற நிலைதான், கொழும்புச் சம்பவம். புலிகள் பேரினவாதத்தின் செல்லக் குழந்தை. பேரினவாதம் என்ற தாய் இல்லை என்றால், புலிகள் இல்லை. இது எல்லோருக்கும் தெரிந்த, அரசியல் ரீதியான உண்மை.

இந்த நிலையில் எல்லாத் தமிழர்களும் புலிகள் என்ற அடிப்படையில் தான், கொழும்புச் சம்பவம் அரங்கேறியது என்பது வெட்கக்கேடானது. அவர்கள் கூறிய காரணமோ நகைச்சுவையானது.



படிப்பகம்

www.padippakam.com



1. தமிழர்கள் காரணம் எதுவும் இன்றி கொழும்பில் இருக்கின்றனராம்.

2. அவர்களின் சுயவிருப்பின் அடிப்படையில் வெறியேற்றப்பட்டனராம்.

புலிகள் அன்று முஸ்லீம் மக்களை வெளியேற்றிய போது, அவர்களின் பாதுகாப்புக்காக அவர்களின் உழைப்பைத் திருடிய பின் வெளியேற்றியதாக கூறியவர்கள். இதுபோல, இந்த பாசிசமும் தலைவிரி கோலமாகவே தன்னை விளக்கியது. பேரினவாதத்தில் பொதிந்து காணப்படும் பாசிசத்தின் நகைச்சுவையே இதுதான். அண்ணளவாக 10 முதல் 15 இலட்சம் தமிழ் மக்கள் கொழும்பில் வந்து வாழ்வதற்குரிய காரணங்கள் கட்டாயம் வைக்க வேண்டும் என்று கோருவதென்பது கேடுகெட்ட தனமாகும். பேரினவாதத்தை ஏன் எதற்கு ஒரு கோமணமாக கட்டி வைத்துள்ளீர்கள் என்று, முதலில் நாட்டு மக்களுக்கு கூறுங்கள். இதை விடுத்து தமிழ் மக்களிடம் கோருவது என்பது கோமாளித்தனமாகும். பேரினவாத அரசின் கொள்கை தான், தமிழ் மக்கள் இவ்வளவு தொகையாக கொழும்பில் வந்து வாழக் காரணமாகும். காரணமே நீங்களாக இருக்க, அதை தமிழ் மக்களிடம் கோருவது, பின் சம்பவத்தை வீழ்ந்தடித்துக் கொண்டு ஆளுக்காள் கண்டிப்பதும் அயோக்கியத்தனம்.

1. அதிக அளவில் தமிழர்கள் கொழும்பில் வந்து வாழ்வதற்குரிய முதல் காரணமே யுத்தம்தான். யுத்த நெருக்கடிகளில் இருந்து தப்பவே இதுவே போதுமான காரணமாகும்.

2. புலிப் பாசிசத்தின் எல்லைக்குள் வாழ முடியாத தமிழ் மக்கள், பெருமளவில் அங்கிருந்து தப்பி வருகின்றனர். புலியல்லாத பிரதேசத்தில் வாழவே, புலிப் பிரதேசத்து மக்கள் விரும்புகின்றனர்.

3. உலகமயமாதல் ஒருபுறமும், மறுபுறம் கிராமப்புர பொருளாதாரம் அழிக்கப்பட்ட நிலையில், வாழ்வுக்காக தொழிலைத் தேடி கொழும்பு நோக்கி மக்கள் வருகின்றனர்.

4. இலங்கையில் தொழில் வாய்ப்புகள் மறுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலைக்கே அரசு வழிகாட்டுகின்றது. இப்படி இன்று மத்திய கிழக்கில் அண்ணளவாக 25 00 000 (25 லட்சம்) பேர் வேலை செய்கின்றனர். அரசின் கையாலாகாத இன்றைய நிலைக்கு ஏற்ப, வெளிநாட்டு வேலைதேடி மக்கள் வந்து குவிகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



5. கொழும்புக்கு யுத்த பிரதேசத்தில் இருந்து வருவது இலகுவானது மல்ல. அதிக செலவு பிடிக்க கூடியதுமான இந்த நிலையில், பலரை நிரந்தரமாகவே தங்கவைத்து விடுகின்றது.

இப்படி பற்பல காரணங்கள் கொழும்பை நோக்கி மக்கள் வரக் காரணமாகும். இதை ஆதாரபூர்வமாக விளக்கிவிட முடியாது. இப்படியான நிலையை உருவாக்கியவர்கள் புலிகள் அல்ல. இந்த அரசு தான். இந்த மக்களை அகற்ற முனைந்தது, அதற்கு வைத்த வாதங்கள், படுபிற்போக்கானவை. பேரினவாத இனச் சுத்திகரிப்பு கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

இந்த மக்களுக்குள் மிக சிறிய எண்ணிக்கையான புலிகள் ஒழித்துக் கொள்வது என்பது சர்வசாதாரணமானது தான். இதைச் சொல்லிக் கொண்டு அந்த மக்களை அடித்து விரட்டுவது என்பது, இனச் சுத்திகரிப்பாகும். புலிகளின் இருப்புக்கான அரசியல் காரணங்களை தீர்க்க மறுக்கின்றவர்கள் அல்லவா முதல் குற்றவாளிகள். அவர்களை அல்லவா இந்த அரசில் இருந்து விரட்ட வேண்டும். அவர்களை அல்லவா சுத்திகரிக்கவேண்டும். இதைச் செய்ய நீங்கள் தயாரா?

***11.06.2007***



படிப்பகம்

www.padippakam.com



# பாசிசப் புலி தோற்றுக் கொண்டிருக்கின்றது

வன்னியை இராணுவம் கைப்பற்றாமலே, புலிகள் தோற்றுக் கொண்டிருக்கின்றனர். புலிப் பாசிட்டுகளின் வரலாறு இப்படித்தான் முடியும். பாசிட்டுகளின் சொந்த வரலாற்று விதி, இப்படித்தான் நடக்கும். பாசிசம் ஏற்படுத்தியுள்ள போலியான பிரமைகளும், பிரமிப்புகளும் சாய்ந்து பொடிப்பொடியாக நொருங்கும் போது, பாசிட்டுகள் வரலாற்றில் நிற்பதற்கே இடமிருக்காது.

ஒரு இனத்தையே காவு கொண்டு உருவான பாசிட்டுகள், வரலாற்றில் நீடித்ததாக வரலாறு கிடையாது. அது போல் அவர்களின் சொந்த பாசிச வரலாறு அவர்கள் மீதே நிச்சயமாக காறி உமிழும். நாம் விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி, இது நடந்தேயாகும்.

புலிகளிடம் இன்றும் தக்கவைத்துள்ள பலம், அவர்கள் நினைத்த இடத்தில் நினைத்ததை செய்ய முடியும் என்ற பிரமை, அனைத்தை யும் விலைக்கு வாங்கமுடியும் என்ற திமிர், இவைகள் எதுவும் இதை தடுத்து நிறுத்தி விடாது. அந்த சக்தி அவற்றுக்கு கிடையாது.

புலி பாசிட்டுகள் கருதுவது போல், மனித இனம் என்பது வெறும் இயந்திரங்களல்ல. அவர்கள் பாசிசத்துக்கு தலையாட்டும் பொம்மை களுமல்ல. எப்படி வாழ்ந்தாலும், நீண்ட காலம் அடங்கியொடுங்கி வாழ்வது கிடையாது.

புலிகள் பாசிச கொலை வெறியாட்டங்கள் மூலம், முழுச் சமூகத்தையும் செயலற்றதாக்கினர். இப்படித் தான், தனக்கு இசைவாக அனைத்தை யும் அடிமைப்படுத்தினர். இதனால் சமூகம் அடங்கியொடுங்கி பாசிசமே மனித வாழ்வென்று நம்பி வாழ்ந்ததும் கிடையாது, வாழ்வதும் கிடையாது. அது தனது சொந்த வழிகளில், இதை எதிர்த்து இயங்குகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



மக்கள் புலிப் பாசிசத்துக்குள் அடங்கியொடுங்கி கிடந்தாலும், பாசிசத்துடன் என்றும் உடன்பட்டதில்லை. அதன் கோரமான செயல்பாட்டில் பங்குபற்றியதில்லை. தனது பந்த பாசங்கள் கொல்லப் படுவதையும், மிருகத்தனமாக அடக்கியொடுக்கப்படுவதையும், ஒருநாளும் உள்ளார அங்கீகரித்ததில்லை. இதைப் பகிரங்கமாக தெரிவிக்க முடியாவிட்டாலும், அதில் இருந்து விலகி மௌனமாக ஒதுங்கி விடுவதன் மூலம் எதிர்ப்பு ஆரம்பமாகின்றது. இப்படித்தான் புலியை எதிர்த்து, புலியை தம்மில் இருந்து அந்த மக்கள் ஒழிக்கின்றனர், ஒழித்துக்கட்டுகின்றனர். புலிகளை ஒழிப்பதில் மக்கள் வெற்றி பெற்று வருகின்றார்கள்.

இன்றும் மாபெரும் பாசிச கட்டமைப்பைக் கொண்டுள்ள புலிகள், மாபெரும் இராணுவ இயந்திரமாக காணப்பட்ட போதும், அது நொருங்கிக் கொண்டு இருக்கின்றது. இதை இனியும் சரிசெய்ய முடியாது. அதன் செயற்பாட்டுக்குரிய, உணர்வு பூர்வமான பாசிச நலன்கள் மெதுவாக அவர்களின் உள்ளேயே அன்னியமாகி வருகின்றது.

ஏன் இன்றும் புலிகள் வெளிப்படையாக மிகப்பெரிய ஒரு இராணுவம். தமிழ் மக்களின் அனைத்து செல்வவளங்களையும், அவர்களின் மூச்சுக்களையும் கூட ஒருங்கிணைத்த ஒரு பாசிச இராணுவ இயந்திரம் தான். தாம் தமது பாசிச நலன்களுடன் தப்பிப் பிழைக்க, தமது பிரதேசத்தில் வாழ்கின்ற முழு மக்களையும் பலாத்காரமாகவே இராணுவ மயமாக்குகின்றது. இன்றும் தாம் இல்லாத இடங்களில் கூட, தமது அதிகாரத்தையும், அடக்குமுறையையும் கொண்டு, அனைத்தையும் தமக்கு அடிபணிய வைக்கின்றது. ஏன் யாரையும் விலைக்கு வாங்கவும், பிழைப்புவாத பினாமிகளைக் கொண்டு அனைத்தையும் தாமாகக் காட்டவும் கூடமுடிகின்றது. அவர்களால் இந்தா புலிகள் வெல்லுகின்றனர், இந்தா அரசு தோற்கின்றது என்று அனைத்துப் பினாமி ஊடகவியலிலும் கூட கூறமுடிகின்றது.

அத்துடன் சர்வதேச வலைப்பின்னலை அடிப்படையாகக் கொண்ட உளவுப்பிரிவையும், ஆயுதம் ஏந்திய குண்டர்களையும் கொண்டு இயங்கமுடிகின்றது. சர்வதேச ரீதியாக தமிழ் மக்களுடனான புலிகளின் அரசியல் உறவு என்பது, மாபியாத்தனத்துடன் தொடர்ச்சியாக இன்றும் பாதுகாக்க முடிகின்றது.

உலகின் பல பாகத்தில், புலிப் பாசிச மாபியாத்தனத்தை அடிப்படையாகக் கொண்ட மக்கள் விரோத நிலையை தக்கவைக்க முடிகின்றது. இதற்குள்ளாக கூட்டங்கள், சதிகள், இரகசிய சூழ்ச்சித்



படிப்பகம்

www.padippakam.com



திட்டங்களை இன்றும் தீட்ட முடிகின்றது. ஏகாதிபத்திய மக்கள் விரோத நாசகாரர்களுடன் சேர்ந்து சதியாலோசனைகளையும் செய்ய முடிகின்றது. இப்படி எங்கும், எதிலும், எல்லாவிதத்திலும் அமர்க்களமான சதிகள், காய் நகர்த்தல்கள், சுத்துமாத்துக்கள். அனைத்துமே மக்களின் பெயரில் இன்றும் புலிகளால் செய்ய முடிகின்றது.

இந்தளவு இருந்த போதும், புலிகளின் பாசிச வரலாறு முடிவை நோக்கி நகருகின்றது. இதை நம்ப முடியாதவர்கள், நம்ப மறுப்பவர்கள், புலிகளின் வரலாற்றின் சொந்த விதியை அவர்களின் கண்ணால் காண்பார்கள். அது தவிர்க்க முடியாதது. இது எமது சொந்த விருப்பங்களோ, கற்பனைகளோ அல்ல. மாறாக புலிப் பாசிசம் உருவாக்கிய சொந்த வரலாற்றின், இறுதிக் கால கட்டம் தான் அரங்கேறுகின்றது. அதையே நாங்கள் எடுத்துக் காட்டுகின்றோம்.

இவை எவையும் பேரினவாதத்தின் சொந்த இராணுவ வெற்றிகள் அல்ல. பேரினவாதத்தால் தமிழ் மக்களை ஒருநாளும் வெல்ல முடியாது. அப்படி இருக்க, எப்படி புலிகள் தோற்கின்றனர்?

உண்மையில் தமிழ் மக்கள்தான் புலிகளைத் தோற்கடித்துக் கொண்டு இருக்கின்றனர். புலிப் பாசிசத்தை அவர்கள் தமது சொந்த வழியில் ஒழித்துக் கட்டுகின்றனர்.

புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான தொப்புள் கொடியை புலிகளே அறுத்து, பாசிசம் என்னும் இடை மதிலால் அதைப் பிளந்துவிட்டனர். இப்படி தமிழ் மக்களுடன் இருந்த தொப்புள் உறவை மறுத்து, சொந்தத் தாயையே எட்டி உதைத்தனர். இப்படி தாயின் தாலாட்டை உதறியும், தாயின் அரவணைப்பை எட்டியும் உதைத்த புலிகள், பாசிட்டுகளாகி தறிகெட்டு அதிகார வெறியில் திமிரெடுத்துத் திரிந்தனர். அராஜகத்துடன் கூடிய லும்பன் தனம் மூலம், சமூகத்தையே நலமடித்தனர். புலிகளை உருவாக்கிய தமிழ் சமூகமே, இவர்களைக் கண்டு அஞ்சி நடுங்கியது. தமது சொந்த வாயைப் பொத்தி, மௌனமாகி, படிப்படியாக ஒதுங்கிக் கொண்டதன் மூலம், புலிகளின் இருப்புக்கு இப்படியேதான் வேட்டு வைத்தனர், வைத்து வருகின்றனர்.

இதன் விளைவு, பலமான இந்த பாசிச இயந்திரத்தில், வெடிப்புகளையும் சிதைவுகளையும் அன்றாடம் உருவாக்குகின்றது. இதற்கு தலைமை தாங்குவோர் முதல் கீழ் அணிகள் வரை, படிப்படியாக புலிகளின் பாசிச இலட்சியத்தில் நம்பிக்கை



படிப்பகம்

www.padippakam.com



இழந்துவிட்டனர். வெற்றுத்தனமான குருட்டு நம்பிக்கைகள், பொய்யான பரப்புரைகளை நம்பி ஊர்ந்தவர்கள், தொடர்ந்து நடக்க கால்கள் இல்லை என்பதை காண்கின்றனர். எல்லா இடத்திலும், எல்லா நேரத்திலும் ஊர முடிவதில்லை. தாம் எதற்காக போராடுகின்றோம் என்பதைக் கூட, அவர்களால் இன்று உணர முடிவதில்லை.

ஏன் தமது பக்க அரசியலை சொல்ல அவர்களிடம் எந்த மக்கள் அரசியலும் கிடையாது. அனைத்தையும் இராணுவ வெற்றிகள் மூலமும், அனைத்தையும் தியாகி துரோகி என்றும் பறைசாற்றி நின்றவர்களின் தகவல் மையம் முற்றாக செயல் இழந்துவிட்டது. 400க்கு மேற்பட்ட புலி இணையங்கள், அவர்களின் ஊதுகுழல் ஊடகங்கள் வம்பளக்க செய்தியின்றி, வீரம் பேச நாதியின்றி படுத்து உறங்குகின்றது. பேரினவாதிகளுக்கு இடையில் நடக்கும் குத்துவெட்டுகளை, புலி முரண்பாட்டைச் சார்ந்து புலிகளின் தகவல்கள் முக்கி முனங்குகின்றது.

கிழக்கு முதல் வன்னிவரை புலிகள் இராணுவ ரீதியில் தொடர்ச்சியாக யுத்தம் செய்ய முடியாத நிலைக்குள் அவர்கள் சென்றுவிட்டனர். உணர்வு பூர்வமாக யுத்தம் செய்யும் மனநிலையை புலி அணிகள் இழந்துவிட்டன. யுத்தத்தை வழிநடத்துபவர்கள் தமது பாசிச போராட்டம் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர். மக்களில் இருந்து அன்னியமாகியதன் விளைவு, தனிமைவாதத்தில் சிக்கி நாற்றமடிக்கும் பிணமாய் அழுகிச் சிதைகின்றனர். எங்கெல்லாம் அவர்கள் எதிரியின் யுத்த முனையை எதிர்கொள்கின்றனரோ, அங்கெல்லாம் அவர்கள் இழப்பதற்கு ஆயுதங்களையும் உயிரையுமே வைத்துள்ளனர். இதனால் அன்றாடம் புலிகளின் ஆயுதங்களும், புலிகளின் உடல்களும் எதிரியால் கைப்பற்றப்படுகின்றது. புலிகளின் வரலாற்றில் இப்படி நடந்து கொண்டிருப்பது இதுதான் முதல் தடவை மட்டுமின்றி, இதுவே இறுதியானதுமாகும்.

இராணுவத்தை தாக்க வருபவர்கள் அன்றாடம் தாக்கிவிட்டு தப்பிச் செல்ல முடிவதில்லை. புலியல்லாத பிரதேசத்தில் தாக்குதல்கள் நடத்த முனையும் போது, அம்முயற்சிகள் தோல்வி பெறுகின்றன. எதிரி முன்கூட்டியே இவற்றைக் கைப்பற்றுவது, முறியடிப்பது அன்றாட நிகழ்ச்சியாகின்றது. புலியல்லாத பிரதேசத்தில் பேரினவாதம் நடத்துகின்ற படுகொலைகள், கடத்தல்கள் மூலம், புலிகளின் சிறு செயற்பாடுகள் கூட முடக்கப்படுகின்றது. புலிகள் பணத்தைக் கொடுத்து எதிரியை வாங்கி நடத்திய தாக்குதல்கள், அனைத்தும் படிப்படியாக இல்லாது ஒழிக்கப்படுகின்றது. புலிகளின் உளவு சார்ந்த



படிப்பகம்

www.padippakam.com



தகவல் மையமே அதிர்ந்து ஒடுங்கி முடங்குகின்றது.

புலிகளின் நிதியாதாரங்கள் முதல் வரி மற்றும் கப்பம் போன்றன ஒரு தேக்கத்தின் எல்லையை எட்டியுள்ளது. புலம்பெயர் சமூகத்தில் நடைபெறும் கைதுகள், முழு செயல்பாட்டை முடக்கி வருகின்றது. சர்வதேச ரீதியான புலிகளின் இரகசியமான ஆயுத செயல்தளம், முழுவீச்சில் இயங்க முடியாது அழிந்து வருகின்றது.

இப்படி எங்கும் எதிலும் பாரிய நெருக்கடிக்குள் புலிகள் சிதைந்து அழிகின்றனர். புலிகளின் உள்ளே பாரிய சந்தேகங்கள், இடைவெளிகள். தலைமைக்குள் பரஸ்பரம் நம்பிக்கையீனம். இப்படி புலிகள் தனக்குள்ளேயே சிக்கி, உள் முரண்பாடுகள் கொதிநிலையை அடைந்து வருகின்றது. கைதுகள் சித்திரவதைகள், குற்றச்சாட்டுகள் பொதுவான உள்ளியக்க விதியாகிவிட்டது. இதுவே அன்றாடம் பெருகிச் செல்லுகின்றது. உயிரோட்டமாக, உணர்வுபூர்வமாக, நம்பிக்கை விசுவாசத்துடன் செயல்பட முடியாத நம்பிக்கையீனம், அமைப்பையே சூனியமாக உருவாக்கிவிட்டது.

சூனியம் வைத்தது போல் ஒவ்வொன்றாக தகர்கின்றது. எங்கும் எதிலும் அதிருப்தி. நம்பிக்கையீனங்கள் மலிந்து போய்விட்டது. இலட்சியப்பற்று என்பது மறந்து, அதை அறவே காணமுடியாத ஒன்றாகிவிட்டது.

தமிழ் மக்கள் எப்படி தமது அழிவுக்கான யுத்தத்தை வெறுக்கின்றனரோ, அப்படி புலிகளின் அணிகள் கூட புலிகளின் யுத்தத்தை விரும்பவில்லை. யுத்தம் வலிந்து திணிக்கப்படும் போது, தோல்வியும் மரணமும் முன் கூட்டியே தீர்மானமாகி விடுகின்றது.

எதற்காக இப்படி போராடுகின்றோம், மரணிக்கின்றோம் என்பது கூட தெரியாத சோகம். விளைவு உள் மோதல்கள், அமைப்பு ஆட்களை இல்லாது ஒழித்தல் என்பது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. அனைத்தையும் கட்டுப்படுத்த, வன்னி மண்ணில் உருவாக்கப்பட்டுள்ள ஒரு கும்பலின் காட்டுத்தனமான அதிகாரம். இதுவொரு அராஜக லும்பன்களாக, மக்கள் மேலான வன்முறையையே தனது போராட்டமாக மாற்றிவிட்டது. ஒவ்வொரு வீட்டுப் பெண்ணையும் இவர்கள் கற்பழித்தால் கூட, கேட்க நாதியற்ற வன்னிச் சமூகமாக இவர்களால் இழிவுக்குள்ளாகி வருகின்றனர். அந்தளவுக்கு வன்முறையின் கோரம், கொடூரம். இப்படி கொடூரமாக இயங்கும் அராஜகத்தையே அடிப்படையாகக் கொண்ட புலிக்கும்பல் ஒருபுறம், மறுபக்கம் ஒழுங்குபடுத்தப்பட்ட இதனுடன் தொடர்பற்ற புலி இராணுவம்.



படிப்பகம்

www.padippakam.com



லும்பன்கள் நடத்துகின்ற மனித விரோத சமூக இழிவாடல்கள், ஒழுங்குபடுத்தப்பட்ட இராணுவத்தின் உட்கட்டமைப்பின் உணர்வையே சிதைக்கும் வண்ணம் அதற்கு நஞ்சிடுகின்றது. கட்டாயப்படுத்தி பலாத்காரமாக கடத்தி வரப்படும் ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும், தனக்கு நேர்ந்த துயரக் கதை முதல் தனது சொந்த சமூகத்துக்கு நேருகின்ற அவலத்தை சொல்லி புலம்புவதன் மூலம், புலிகளின் இராணுவம் கறையான் புற்றெடுக்கின்றது. புலிகளின் இராணுவத்தில் நடக்கும் உணர்வு ரீதியான சிதைவு, முழு இராணுவக் கட்டமைப்பையும் சிதைக்கும் தொற்று நோயாகின்றது. தாம் யாருக்காக இதையெல்லாம் செய்கின்றோம் என்ற விடைதெரியாத சோகம், சொல்லி மாளமுடியாது. உணர்வு ரீதியாகவே அதற்குள் மாண்டு போகின்றனர்.

வன்னியை இராணுவம் பிடிக்காமலே, வன்னி தோற்றுக் கொண்டு இருக்கின்றது. பேரினவாதம் ஒரு தீர்வுப்பொதியை வைத்துவிட்டால், அது புலிக்குள்ளான புதிய மோதலாக சிதைவாக மாறிவிடும். தீர்வு புலியைப் பிளக்கும், சிதைக்கும். உட் குழுக்கள், கொடுப்பதை ஏற்றுக்கொள்ளக் கோரும் முரணான மனநிலை, யுத்தம் செய்ய விரும்பாமை மேலும் அதிகரிக்கும். இதை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் மீதான அவநம்பிக்கை உருவாகும். சந்தேகங்கள் புலிகளை மேலும் அம்பலமாக்கும். மக்கள் மத்தியில் இதன் விளைவும், அதன் எதிர்வினையும் புலிக்கு எதிரானதாக மாறும்.

புலிகளை யுத்தமின்றி தோற்கடிக்கக் கோரியேதான், உலகம் தீர்வை முன்வைக்கக் கோரி அரசை நிர்ப்பந்திக்கின்றது. இனவாதிகள் இடையிலான முரண்பாடுதான், புலியை இன்னமும் பாதுகாக்கின்றது. உலகளவில் அதிகார மட்டத்தில் இருந்து எழும் யுத்தத்துக்கு எதிரான குரல்கள், யுத்தம் மூலம் புலிகளை தோற்கடிப்பதை விட ஒரு தீர்வுப் பொதி மூலம் புலியை அழிக்க முடியும் என்பதை தெளிவாக கண்டு கொண்டுள்ளது. இதற்குரிய நிலைமை மிகவும் கனிந்து காணப்படுகின்றது. வன்னியில் இன்றைய நிலைமைகள், புலியை தோற்கடித்துவிடும்.

மறுபக்கத்தில் பேரினவாத வக்கிரம் மேலோங்கி நிற்கின்றது. புலிகள் உணர்வு ரீதியாக யுத்தம் செய்ய முடியாத மனநிலையைப் பயன்படுத்தி, யுத்தம் மூலம் வெற்றி கொள்ள எண்ணுகின்றது. பேரினவாத சிங்கள பாசிட்டுகள், புலிகளின் மக்கள் விரோத நிலையை அடிப்படையாக கொண்டு, இந்த வெற்றிகளைத் தமது வெற்றியாக காண்பிக்கின்றனர். புலிக்கு எதிரான மக்களின் உணர்வை தனக்கு சார்பாக மாற்றி, அவர்களை புலிகளிடம் இருந்து தனிமைப்படுத்தி,



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் இனத்தை யுத்தம் மூலம் வெல்ல முனைகின்றது.

புலிகள் கடந்த காலத்தில் மாற்று இயக்கத்தை, மாற்றுக் கருத்தாளனை நர வேட்டையாடி கொன்று குவித்து, மக்களை இதன் பின் அண்டவிடாது தனிமைப்படுத்தி அழித்தனர். அதையே இன்று பேரினவாதம் அப்படியே புலிகளாக இனம் காணப்பட்டவர்கள் மீது, அதன் ஆதரவாளர்கள் மீது கையாளுகின்றது. புலிகளுடன் தொடர்பு கொள்ளாத வரை உனக்கு ஆபத்தில்லை என்ற புலி விதியையே கையாளுகின்றது. புலியைப் போல், புலியையே வேட்டையாடுகின்றது. அதன் ஆதரவாளர்களை முடக்குகின்றது. புலிகளில் இருந்து மக்களை தனிமைப்படுத்தி வெல்லுகின்றது.

புலி ஆதரவாளர்கள் முதல் புலிகள் வரை அரசு சிறைச்சாலை பாதுகாப்பானது என்று கருதி நூற்றுக்கணக்கில், சுயபாதுகாப்பு கோரி சிறையில் வாழமுனைகின்றனர். அங்கு பாதுகாப்பு உறுதி என்று கருதி, புலியைச் சார்ந்தவர்கள் மக்களிடமிருந்து விலகி வாழும் சூழலை பேரினவாதம் உருவாக்கியுள்ளது. மக்களுடன் புலிகள் வாழமுடியாத நிலை. இப்படி பல தளத்தில் புலிகள் தமது சொந்த பாசிச வழிகளில் தோற்றுக் கொண்டிருப்பது என்பது, தற்செயலானதல்ல. இதுதான் பாசிசத்தின் வரலாற்று விதி. மக்களைக் கடந்து எந்த வரலாறும் நிலைத்தாக ஒரு மனித வரலாறு கிடையாது.

***08.09.2007***



படிப்பகம்

www.padippakam.com



# புலிகள் பின்வாங்குகின்றார்களா? அல்லது தோற்கின்றார்களா?

அவர்கள் கூறுவது போல் பின்வாங்குகின்றார்கள் என்றால், ஏன் எதற்காக? இதன் பின் எந்த காரணத்தையும் அவர்கள் முன்வைக்க முடியாது. எப்போதும் காரணத்தை முன்வைக்க முடியாத ஒரு பாசிச வழிப் போராட்டத்தை நடத்துபவர்கள். எந்த விளக்கத்தையும் முன்வைக்கவோ, செயலாற்றவோ வக்கற்றவர்கள், தோற்றுக் கொண்டிருப்பதை இப்படித்தான் பரிதாபகரமாக கூறமுடியும்.

சரி நீங்கள் கூறுவது போல் பின்வாங்குகின்றீர்கள் என்றால், ஏன் பெரும் தொகையான ஆயுதங்களை கைவிட்டு விட்டு ஒடுகின்றீர்கள். அதற்கும் இது போன்ற ஒரு குருட்டு விளக்கம் வைத்து இருப்பீர்களே. உலகெங்கும் மக்களை ஏமாற்றியும், மிரட்டியும் பெற்ற பணத்தில் வாங்கிய ஆயுதங்கள். எத்தனையோ உயிர்களைப் பலியிட்டு பெற்ற ஆயுதங்கள், கேட்பாரின்றி கிழக்கில் விட்டுவிட்டு ஒடுகின்றனர். மக்கள் மேலான பாசிசம், மக்களின் எதிரியுடனான யுத்தத்தில் புலிகளை தோற்கடிக்கின்றது. புலிகள் என்ற பிசாசை மக்கள் தோற்கடிக் கின்றனர். அந்த வெற்றிடத்தில் மற்றொரு பாசிசப் பேய் குடிகொள் கின்றது. இது அந்த சிங்கள பேரினவாத பேய்களின் வெற்றியல்ல. இங்கு யாரும் அந்த மக்களை வெல்லவில்லை. மக்களின் எதிரிகள் யாரும், அவர்களை வெல்ல முடியாது.

இங்கு புலிகளின் எந்த பின்வாங்கலும் நிகழவில்லை. மாறாக புலிகள் மக்களிடம் தோற்றதன் விளைவாய் எதிரியுடன் தோற்றுக்கொண்டு இருக்கிறார்கள். மக்களையே சொந்த எதிரியாக கருதி அவர்களை அடக்கியொடுக்கி வைத்திருந்த ஒரு இயக்கத்தின் முடிவு என்பது, காலத்தால் செல்லரித்து நிர்ணயமாகின்றது. மக்கள் மேல் நீடிக்கும் பாசிச கட்டமைப்பு ஒருநாள், பொலபொலவென திடீரென உதிரும். அந்தக்கணம்வரை பாசிசமே அதன் சமூக இருப்பாகும். அந்த பாசிச சமூக தகர்வை நோக்கி தலைமை வேகமாக உருண்டோடுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



துரதிஸ்டவசமாக தமிழ் மக்களின் எதிரி அதைப் பயன்படுத்தி, தனது சொந்த வெற்றியாக காண்பிக்கின்றான். அதன் பின்னால் புலியெதிர்ப்பு அன்னக்காவடிகள் அரோகரா போடுகின்றனர்.

சர்வதேச வலைப்பின்னலைக் கொண்ட உளவுப்பிரிவையும், ஆயுத ஏந்திய குண்டர்களையும் கொண்ட புலிகள், தமிழ் மக்களுடனான அரசியல் உறவு என்பது மாபியாத்தனமாகும். இவ் மாபியா இயக்கம் அனைத்தையும் தழுவிய ஒரு பாசிச இயக்கம், மக்களின் வாழ்வுசார் போராட்டத்தில் தங்கியிருக்க முடியாத, முரண்நிலையை அடிப்படையாகக் கொண்ட இயக்கம். தமிழ் தேசியம் என்பது அதன் உள்ளடக்கத்தில் இந்த பாசிச கும்பலிடம் அறவே இல்லாமல் போன நிலையில், மக்கள் எதைத்தான் கொண்டு புலிகளை ஆதரிக்க முடியும்.

புலிகளிடம் தேசியத்தின் எந்தக் கூறும், அரசியல் ரீதியாக கிடையாது. வெறும் கோசம், மற்றும்படி அவர்களின் இயங்குதளம் பாசிசத்தையும் மாபியாத்தனத்தையும் அடிப்படையாக கொண்ட இராணுவ வாதமாக மட்டும் உயிர்வாழ்கின்றது.

இதுவும் அம்பலமாகி, திவாலாகி, திக்குத் தெரியாத நடுகாட்டில், அனாதையாக தனது சொந்த மரணத்தை நோக்கி அலைகின்றது. இதில் இருந்து மீள, புலிகள் அதிரடியான தாக்குதல் மூலம், ஒரு மாயையை உருவாக்க முனைகின்றனர். உருவேற்றப்பட்ட மாயையில் காரியத்தை சாதிக்கும் பிரபாயிசம், இந்த எல்லைக்குள் மலினப்பட்ட நிலையில் அதற்காக குலைக்கின்றது. மாயையை உருவாக்கும் முயற்சிகள் கூட வெற்றிகரமாக்க முடியாத ஒரு நிலையில், அவை கூட முறியடிக்கப்படுகின்றது. எங்கும் நம்பிக்கையீனங்கள். அவமானங்கள், அனாதைகளின் நடமாட்டம். எதையும் சொல்ல முடியாதபடி, சொல்வதற்கு எதுவுமின்றி வெறித்துப் பார்க்கின்றது. புலிப்பினாமி ஊடகவியலோ அடிவாங்கிய சாரைப்பாம்புபோல், உயிருக்காக துடிக்கின்றது.

இந்த நிலையில்தான் கட்டுநாயக்க விமானத்தளம் மீதான விமானத் தாக்குதலை புலிகள் நடத்தினர். உயிர் மீண்ட யேசுவின் கற்பனைக் கதை போல், புலிகளும் உயிர்தெழுந்துள்ளதாக காட்டவே உருவாடினர். ஆகாகா அற்புதம், புலிகள் பலம் பெற்று வரலாறு மீண்டுவிட்டது என்றனர். இது தென்னாசிய சமநிலையையே தகர்த்துவிட்டது என்றனர். வயிற்றுக் குத்து வந்தவன் போல் அங்குமிங்கும் புரளும், பற்பல உப்புச் சப்பில்லாத ஆய்வுகள், இதை புலி புத்துணர்ச்சிக்கான ரொனிக்காக (குளிசையாக) கடை விரித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com



சிலருக்கு கண நேர அரிப்பு சார்ந்த அற்ப மகிழ்ச்சி, தமிழ் சமூகமோ எதற்கும் நாதியற்று குலுங்கிக் குலுங்கி அழுகின்றது. அரசோ இதை சர்வதேச தலையீட்டுக்குரிய ஒன்றாக்க, பெரிதாக்கி சர்வதேச தலையீட்டை இதற்குள்ளும் ஆழமாக்குகின்றது.

மக்களிடம் தோற்ற புலிகள், எதிரியுடன் யுத்தமுனையில் அடிவாங்கிக் கொண்டிருகின்றார்கள். ஒரு அதிரடியான எந்தத் தாக்குதலும் (இதை செய்யும் இராணுவ ஆற்றல் புலிகளிடம் அழிந்துவிடவில்லை), அவர்களை மீட்காது என்ற உண்மை முதன்மையானது. மக்களிடம் இருந்து முற்றாக தோற்ற புலிகளின் மீட்சி என்பது சாத்தியமற்ற ஒன்று. மண்ணில் யுத்தத்தையே வெறுக்கும் மக்களின் முன், பாசிசம் யுத்தத்தை திணிக்க முனைகின்றது. மறுபக்கம் யுத்தம் வேண்டும் என்று சில புலம்பெயர் மலடுகளின் கூச்சலால், புலியின் மீட்சியை உருவாக்க முடியாது. புலம்பெயர் நாடுகளில் யுத்த விரும்பிகளாக உள்ள மலட்டுக் கூட்டம், யுத்தத்தை வெறுக்கும் மக்களின் உணர்வுகளை நலமடிக்க முடியாது. அதாவது யுத்தத்தின் தேவையை மக்கள் முன் உருவாக்க முடியாது. பாசிசத்தைக் கொண்டு மக்களை அடக்கி அடிமைப்படுத்தலாம், ஆனால் மக்களை ஒருநாளும் வெல்லமுடியாது. புலிகள் ஒவ்வொரு கணமும் மக்களிடம் மேலும் மேலும் அன்னியமாகி ஆழமாக தோற்கின்றனர். இதனால் எதிரியுடனான யுத்தத்தில் தோற்கடிக்கப்படுகின்றனர்.

***08.04.2007***



படிப்பகம்

www.padippakam.com



# புலிகள் போராட்டம் தோற்றுப் போவது ஏன்?

புலிகள் விசுவாசிகளோ, கண்ணை மூடிக்கொண்டு வழிபடும் போது தாம் தோற்கவில்லை என்று கருதுகின்றனர். அது அவர்களின் வெறுமையான வரட்டு நம்பிகை தான். வேறு சிலரோ புலிகள் செல்லும் பாதை இன்னமும் சரியானது என்கின்றனர். எந்த சுயவிமர்சனத் துக்கும் புலிகள் உள்ளாகத் தேவையில்லை என்கின்றனர். எல்லாம் சரியாக உள்ளதாக வரட்டுத்தனமாக கூறமுனைகின்றனர்.

புலிகள் தோற்று வருகின்றனர் என்று நாம் கூறுவதை, துரோகமாக, எட்டப்பத்தனமாக வழமைபோல் காட்டுகின்றனர். இது எப்படி தோற்காமல் முன்னேறுகின்றது என்று அவர்களால், காட்ட முடியாதுள்ளது. புலிகள் எதைத்தான், தமிழ் மக்களுக்கு பெற்று தருவார்கள் எனக் கூட அவர்களால் கூற முடிவதில்லை.

இப்படிப்பட்ட புலிப்போராட்டம் பல பத்தாயிரம் மக்களின் மனித உயிர்களை காவு கொண்டது. போராட்டத்தின் பெயரில், இரண்டு பத்தாயிரம் இளமையும் துடிப்பும் தியாக உணர்வும் கொண்டவர்களை தியாகி என்ற பெயரில் பலியிட்டுள்ளனர். புலியுடன் முரண்பட்டதால் இதேயளவு எண்ணிக்கை கொண்ட துடிப்பும் ஆர்வமும் தியாக உணர்வும் கொண்டவர்களை துரோகிகள் என்று முத்திரை குத்தி கொன்றனர்.

இப்படி ஒரு சமூகமே புலியின் சொந்த நலன் சார் அரசியலுக்குள்ளான மதிப்பீட்டுக்குள்ளாகியது. துரோகி அல்லது தியாகி என்ற அரசியல் வரையறைக்குள் அனைத்தையும் வரட்டுத்தனமாக உள்ளடக்கினர். அதற்குள்தான் அவர்கள் போராட்டம் நடத்தினர். புலிகளின் குறுகிய அறிவுக்கு ஏற்ப, அவை மிக எளிய அரசியல் சமன்பாடாகியது. இப்படி அதன் அரசியலே குறுகிப்போனது.

இதுவே பின்னால் பணம் தர மறுத்ததால் துரோகியாகியது. போராட வர மறுத்தால் துரோகியாகியது. கேள்வி கேட்டால் துரோகியாகியது.



படிப்பகம்

www.padippakam.com



கட்டாய இராணுவ பயிற்சிக்கு வரமறுத்தால் துரோகியாக்கியது. இப்படி அரசியல் மாபியாத்தனமாகி, துரோக தியாகி என்ற குறுகிய அரசியலுக்கு மேலும் வக்கிரமாகி வழிகாட்டியது.

இப்படி புலிகள் எதை விரும்பினரோ, அதற்கு மாற்றான அனைத்தையும் துரோகமாக்கினர். இதற்கு மரண தண்டனை வரை பரிசாக வழங்கினர். இப்படித்தான் இப்போராட்டம் படிப்படியாக தன்னை குறுக்கிய வட்டத்துக்குள் சுருங்கி வந்தது.

இதில் இருந்து மீள்வதன் மூலம் தான், தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்பதே எமது ஆதங்கமான விமர்சனங்கள். இதைத்தான் இவர்கள் துரோகத்தனமாக காட்டுகின்றனர். இதன் மூலம் அரசியல் ரீதியாக தாம் நீடித்து விடலாம் என்று, மெய்யாகவே இவர்கள் நம்புகின்றனர்.

இது இயல்பாக புலிகளை ஆதரித்தால் அது தியாகம், புலிகளை எதிர்த்தால் அது துரோகமாகி விடுகின்றது. இது சமூகத்தின் மீதான, கொடுமையிலும் கொடுமையாகியது. புலிகள் கண் அசைவுக்கு இசையாத எதுவும், உயிர்வாழ முடியாத அவல நிலை. இப்படி இலகுவான அரசியல் வரையறை சார்ந்த வரட்டுக் கொடுமை. இப்படித் தான், தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு புலிப்போராட்டம் வழிநடத்தப்பட்டது. இதற்குள் தான், புலிகளின் மொத்த அரசியல் வடிவமும் இயக்கப்படுகின்றது.

புலிகளின் சொந்த விருப்பங்கள்தான், தமிழ் தேசியமாக காட்டப்பட்டது. இதற்கு உட்படாத அனைத்தும் துரோகமாகியது. இப்படித்தான், இதற்குள்தான் புலிகளின் வரலாறு உருண்டது. இதை கண்காணிக்க, இதை நடைமுறைப்படுத்த படுகொலைகள், புலியின் நடைமுறை அரசியலாகியது. இதை நியாயப்படுத்தவே சொந்தப் பலியிடல். இதையே புலிகள் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் என்றனர்.

இதற்கு ஆதரவை பெறுவதும், ஆட்களை திரட்டுவது என்பதும், இயல்பான சமூகத்தின் போராட்ட உணர்வில் செய்யப்படவில்லை. தேச மக்களின் அடிப்படையான அரசியல் உரிமைகளில் இருந்து செய்யப்படவில்லை. மாறாக தமது சொந்தக் கருத்தை ஒற்றைப் பரிணாமத்தில் திணித்து, தமது சொந்த புலி நலனை சாதிக்க முனைந்தனர்.

இப்படி மக்கள் நலன்கள் புலிகளின் நலன்களில் இருந்து வேறுபட்டதால்தான், கருத்து தளத்தை குறுக்கி கட்டுப்படுத்த



படிப்பகம்

www.padippakam.com



வேண்டிய நிலை புலிக்கு ஏற்பட்டது. மக்களின் போராட்டத்தில் இருந்த புலிகள் அன்னியமாகிச் செல்ல, மக்களின் கருத்துச் சுதந்திரத்தை வெட்டியெறிந்தனர். மக்களோ கருத்துகளற்ற நடைப்பிணமாகினர்.

இப்படி சமூகத்தின் பன்மைத் தன்மையை அழித்து, ஒற்றைப் பரிணாமத்தில் மக்கள் முன் கருத்தைத் வரட்டுத்தனமாகவே திணித்தனர். இப்படி மூளைச்சலவை செய்யப்பட்ட மக்கள் கூட்டத்தை தம் பின்னால் வைத்துக்கொண்டு, வெம்பிய பிஞ்சுகளை உள்வாங்கினர். அறிவியல் ரீதியாக சமூகத்தில் சிந்தித்து செயலாற்ற முடியாத, கடைநிலையில் உள்ள சமூகப் பிரிவையே புலிகள் உள்வாங்க முடிந்தது. இதை வைத்து பிழைத்துக் கொள்ள விரும்பிய ஒரு அறிவுப் பகுதி இதை தனக்காக பயன்படுத்தியது.

இப்படி போராட்டம் மக்களில் இருந்து அன்னியமாகி, படிப்படியாக ஒரு பிரிவின் குறுகிய சொந்த நலன் சார்ந்த போராட்டமாகியது. இதன் யுத்த தந்திரமும், பிரசாரத் தந்திரமும் என்பது, குறுகிய தமது இருப்பு சார்ந்த ஒன்றாகியது. இதுவே மிகமிக மலிவான அரசியலாகியது.

எதிரிகளைத் தாக்குவதும், எதிரி திருப்பி மக்களை தாக்குகின்ற போது அதை வைத்து அரசியல் செய்வதுமாக மாறியது. மக்களின் அரசியல் கோரிக்கைகள் எதுவும் இதற்குள் இல்லாத வகையில், போராட்டம் ஆழமாகவே ஒரு குறுகிய வழியில் குறுக்கப்பட்டது.

இப்படி மக்கள் தாம் போராடாத வகையில், புலிகள் அவர்களை கண்காணித்துக் கொண்டனர். மக்களை புலிகளின் வெறும் மந்தைக் கூட்டமாக்கினர். மேயவிட்டால் அதில் ஓடி மேயும் வகையில், மக்களின் உணர்வை உணர்ச்சியை மலடாக்கினர். மக்களின் உணர்ச்சியை தூண்ட எதிரி மீது தாக்குதலை நடத்தி, எதிரி மக்கள் மேல் தாக்குதலை நடத்துவதை உருவாக்கும் புலிகளின் குறுகிய யுத்த தந்திரம் அரசியலாகியது.

மக்களை அணிதிரட்டாத புரட்சி பற்றி பேசும், சேகுவேராவின் கோட்பாடுகளில் ஒன்றுதான் இது. இப்படித்தான், இதற்குள் தான் புலிகள் மக்களின் உணர்வை, உணர்ச்சியை அறுவடை செய்தனர். இப்படி புலிகள் மக்களை போராட்டத்தில் இருந்து அன்னியமாக்கினர். புலியின் செயலுக்கு ஏற்ப உணர்வும் உணர்ச்சியும் என்ற எல்லைக்குள், போராட்டம் கீழ் இறங்கியது.

மக்களை தமக்கு வாலாட்டவும், குலைக்கவும் பழக்கப்படுத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com



எந்த சுயமுமற்ற மக்கள் கூட்டத்துக்கு, வேடிக்கையும் வித்தையும் (இராணுவ சாகசங்களையும்) காட்ட வேண்டியிருந்தது. இராணுவம் மீதான தாக்குதல்கள் மூலம், ஊதிவிட்ட பலூன் போல் உணாச்சிவசப்படுத்தும் வித்தையை புலிகள் நடைமுறைப்படுத்தினர். மறுபக்கத்தில் தாக்குதல் இல்லாத போது, காற்றுப் போன பலூன் போல் உணர்ச்சியை இழந்து அது புலியை விறாண்டுகின்றது.

இதில் உள்ள சோகம் என்னவென்றால், மக்கள் மட்டுமல்ல சொந்த புலிப் படையே இந்த நிலைக்குள் சோர்ந்து துவண்டு போவதுதான். புலியின் முன்னணி தளபதிகளுக்கும் இந்த கதி ஏற்பட்டுவிடுகின்றது. தலைவர் புலிகளின் தளபதிகளுக்கே எல்லாளன் படையைக் காட்ட வேண்டிய அளவுக்கு, நிலைமை நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. தலைவர் தாக்குதலை நடத்தி தம் மீது நம்பிக்கையை உருவாக்க வேண்டியுள்ளது. இப்படி சொந்த புலித் தளபதிகளினதும், அணிகளினதும் நம்பிக்கையைப் பெற வேண்டிய அளவுக்கு அவலம். இதனாலேயே தாக்குதல்களை செய்து காட்ட வேண்டிய கட்டாய நிலை.

இப்படி புலிகளின் அரசியலே, இராணுவ தாக்குதல்தான். அதைச் சுற்றித்தான் புலிகள் உருவாக்கப்பட்டனர். அமைப்பையும், தன்னையும் பாதுகாக்க இராணுவத் தாக்குதல் என்ற குறுகிய எல்லைக்குள், இப்படி புலிகள் முடங்கிவிட்டனர். போராட்டம் இப்படி குறுகிய எல்லைக்குள் சிதைந்தது. இப்படியான நெருக்கடிக்குள் புலிகளும், புலிகளின் தலைவரும் சிக்கியுள்ளனர்.

மீள்வதற்கான தமது பாதைகள் குறுகி, அவற்றை தாமே மூடிவிட்டனர். இனி புலிகள் அரசியல் பேச முடியாது. இராணுவத்தைக் கொன்றும், மற்றவனைக் கொன்றும், அதையே அரசியலாக செய்யப் பழக்கப்பட்ட ஒரு இயக்கம், இயல்பாகவே தனிமைப்பட்டு விடுகின்றது. குறுகிய எல்லைக்குள் சுருங்கி, வெளிவர முடியாது தானாகவே மரணிக்கத் தொடங்குகிறது.

மக்களில் இருந்து அன்னியமாக, அது பணக்கார இயக்கமாகியது. பணத்தை குவிப்பதே, அதன் சொந்த அரசியல் இலட்சியமாகியது. இதனால் தன்னை ஒரு மாபியா இயக்கமாக வளர்த்துக் கொண்டது. இதன் மூலம் மக்களை சார்ந்து இருத்தல் என்பதற்குப் பதில், பணத்தை சார்ந்து இயங்குதல் என்ற வகையிலும் தன்னை மாற்றிக் கொண்டது.

இதற்கு ஏற்ப நவீன ஆயுதங்கள் புரட்சி செய்யும் என்பது புலிகளின்



படிப்பகம்

www.padippakam.com



மற்றொரு அரசியல் சித்தாந்தம். இப்படி நவீன ஆயுதங்கள் கொண்ட தேசியத்தைக் கட்டினர். இதன் முன் மக்களோ அந்த நவீன ஆயதங்களை வேடிக்கை பார்த்தனர். அதைப்பற்றி கதைத்தனர். நவீன ஆயதங்கள் புரட்சி செய்ய, மக்களை வேடிக்கை பார்ப்பதன் மூலம் போராட்டத்தில் இருந்து அவர்களை ஒதுக்கி வைத்தனர்.

இப்படி குறுகிப்போன புலிகளின் அரசியல் மற்றும் யுத்த தந்திரத்தை வரையறுத்துவிட முடியும். இதற்குப் பின்னால் மக்களின் அரசியல் உணர்வும், உணர்ச்சியும் கிடையாது. மக்கள் மந்தைகளாக, வேடிக்கை பார்ப்பவர்களாக வைத்துக் கொண்ட அடக்குமுறை தான், புலிப் போராட்டம். தமிழ் மக்களுக்கும் புலிக்குமான அரசியல் உறவு இதற்கு உட்பட்டது தான்.

இப்படி கூனிக் குறுகிக் போன போராட்டமாகியது. இதற்கு மக்கள் அரசியல் கிடையாது. மக்கள் சார்ந்த நோக்கம் கிடையாது. இதுவே கடந்து போனதும், இன்றும் ஒரு சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளது.

இதுவல்லாத சமூகத்தின் இருந்த அனைத்துக் குரல்களையும் வெட்டிச்சாய்த்தனர். கண்மூடித்தனமான அரசியல் படுகொலைகள் மூலம், சமூகத்தை இருண்ட சூனியத்துக்குள் தாழ்த்தி அடிமைப் படுத்தினர். தம்மை தாம், தமிழரின் ஏகப்பிரதிநிதிகளாக்கிக் கொண்டனர். இந்த கொடுமை என்பது சமூகத்தில் உயிர் உள்ள அனைத்து சமூகக் கூறுகளையும் பிடுங்கி எறிந்தது. சமூகமோ மூச்சுத்திணறி தானாக மடியத் தொடங்கியது.

புலிகளின் இந்த பாசிசத்தை எதிர்கொள்ளமுடியாது திணறிய மற்றைய குழுக்கள், வேட்டையாடப்பட்டனர். ஆயிரம் ஆயிரமாக கொல்லப் பட்டனர். இப்படி போராட்டம் என்பது சமூகத்தில் இருந்து அன்னியமாகி, தன்னைக் குறுக்கி அழிக்கத் தொடங்கியது.

புலிப் பாசிசத்தின் கோரப்பிடியில் இருந்து தப்பியவர்கள் கண்மண் தெரியாத திசையில் ஓடினர். அதில் ஒரு பகுதியை இந்திய இலங்கை அரசுகள், தமது சொந்த அரசியல் இராணுவ கூலிக் குழுக்களாக மாற்றின. இப்படி புலிகள் தமக்கு எதிரான எதிரியை பலப்படுத்தினர். எதிரியின் பக்கத்தில், தமிழரின் ஒரு பிரிவை செல்லுமாறு எட்டி உதைத்தனர்.

இப்படி தொடர்ச்சியாகவே புலிகள் சமுகத்தினுள் எதிரிகளை உற்பத்தி செய்தனர். ஒரு பாசிச சூழலை சமூகத்தின் முன் வித்திட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com



புலிகளின் கொடுமைகள் பலவாகப் பெருகியது. இதனால் தமிழ்ச் சமூகம் தானாகவே தப்பியோடத் தொடங்கியது. எதிரியின் பிரதேசம் பாதுகாப்பானதாக கருதும் அளவுக்கு, புலிப் பாசிசம் அவர்களை விரட்டியது. இதுவே சமூக எதார்த்தமாகியது. மக்கள் தப்பியோடாத வாறான புலிகளின் பாஸ் மற்றும் தடைகள் இதை தடுத்து நிறுத்திவிடவில்லை.

தப்பியோட முனைந்தவர்கள் கதியோ, தமது பொருளாதார வாழ்வையே இழந்தனர். கொழும்பு என்பது சுயமாக வாழமுடியாத எல்லைக்குள் பொருளாதார சுமைக்குள் மக்களை அன்னியமாக்கியது. வாழ வழியற்று அதை தேடியவர்கள், அரச கூலிக் குழுக்களின் வலையில் இலகுவாக சிக்கிக்கொள்ளத் தொடங்கினர். இப்படி புலிகள் போராட்டம், எதிரியை பலப்படுத்தும் வகையில் மக்கள் விரோதத்தை அரசியலாக்கியது. இப்படி வரலாற்றில் நம்ப முடியாத ஒன்று தான், நம்பும்படியாக நடந்தது.

இப்படி புலிகள் தம்மைச் சுற்றி, சதா எதிரியை உற்பத்தி செய்தனர். நம்பமுடியாத வேகத்தில் அது பெருகியது. அது பல தளம் கொண்ட, பல முனைப்புக் கொண்ட ஒன்றாகியது. உண்மையில் அவர்களாக அதில் ஓடிச் சென்றது கிடையாது. மாறாக புலிகள் தான் எதிரியை பலப்படுத்தும்படி, தமது பாசிசத்தை சமூகம் மீது நிறுவினர். இப்படி தம்மைத்தாம் குறுக்கி வந்தனர்.

இப்படி புலிப் போராட்டம் என்பது ஆக்கத்துக்கு பதில், அழிவைக் கொண்ட ஒன்றாக மாறியது. புதிது புதிதாக எதிரியை உற்பத்தி செய்யும் போராட்டம் தான், புலித் தேசியமாகியது. சமூகத்தின் பல்வேறு கூறுகளை உண்மையான தமிழ் தேசியமாக்க அதனால் முடியவில்லை. மாறாக தமிழ் தேசியத்துக்கு பதில், புலித்தேசியத்தை வைத்த, ஒரு குறும் கும்பலாகவே சீரழிந்து வந்தனர். அது தனக்குள் தானே ஒரு கிணற்றுத் தவளையாக முடங்கிக் கொண்டது. பரந்து விரிந்த மனித சமூகத்துடன் எப்படி இணைவது என்பதை, அதனால் நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. அந்தளவுக்கு அதன் அரசியல் குறுகியது.

அவர்கள் தமது குறுகிய புலி அரசியலைக் கொண்டு, ஒடுக்கப்பட்ட மக்கள் கூட்டத்தை மேலும் ஒடுக்கினர். இப்படி உண்மையான தேசியத்துக்கு தலைமை தாங்க வேண்டிய புரட்சிகரமான மக்கள் புறக்கணிக்கப்பட்டனர். இப்படி தேசியத்துக்கு தலைமை தாங்கும் தகுதியை புலிகள் இழந்தனர். புலிகளின் இராணுவ பொம்மைகளின் ஆட்சியை, மொத்த மக்கள் மேல் திணித்தனர். அனைத்தும்



படிப்பகம்

www.padippakam.com



இராணுவ வகைப்பட்ட இராணுவ ஆட்சியாகியது. தமிழ்த் தேசியப் போராட்டத்தின் நியாயமான தன்மை என்பது, இராணுவத் தன்மையாகி, அதையே அது மறுக்கத் தொடங்கியது. ஒரு இராணுவ சூனியம் தோற்றுவிக்கப்பட்டது.

ஒடுக்கப்பட்ட மக்கள் மேலும் மேலும் ஆழமாக ஒடுக்கப்பட்டனர். சமூக உள் முரண்பாடுகளான ஒடுக்குமுறை ஒருபுறம். அதன் மேல் சிங்கள பேரினவாத ஒடுக்குமுறை மறுபுறம். புலிகள் ஒடுக்குமுறை, மக்கள் தமது வாழ்வையே தாங்கிக் கொள்ளமுடியாத அவலமான வாழ்வுக்குள் வீழ்ந்தனர். சமூகம் தப்பிப் பிழைக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

புலிகள் இதை எதிரியின் நடவடிக்கையாக முத்திரை குத்தினர். இப்படி புலிகள் அரசியல் என்பது குறுகிவந்தது. தன்னை நியாயப்படுத்த, சமூகத்தில் எதிரியை உற்பத்தி செய்வதே புலி அரசியலாகியது. சமூக முரண்பாடுகளையே புலிகள் தமது எதிரிக்குரிய அடையாளமாக்கினர். தமது எதிரிகளின் அடையாளம், இந்த முரண்பாடுகளினான அடையாளமாக மாற்றினர். இப்படி தமிழ் மக்களின் எதிரிகள் என்று, ஆயிரமாயிரமாக புலிகள் உருவாக்கினர். இப்படி சமூகமே புலிக்கு எதிராக மாறியது. தமிழ்த் தேசியமே புலிக்கு எதிராக மாறியது. தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை மறுத்து, புலி உரிமையை அதனிடத்தில் திணித்துவிட்டனர். இதை கண்காணிக்க மக்கள் மேல் வன்முறையை ஏவினர்.

உண்மையில் இப்படி தமிழ்ச் சமூகம் சொல்லவும் மெல்லவும் முடியாத பாரிய அவலத்தையும், சோகத்தையும் சந்தித்தனர். மக்கள் புலிகளுடன் வாழமுடியாத ஒரு நிலையை அடைந்தனர். புலிகளுடன் இருப்பதில் இருந்தும் தப்பியோடவே விரும்பினர். இப்படி போராட்டம் மக்களிடம் இருந்து விலகிச்சென்றது.

இலட்சம் இலட்சமாக தமிழ் சமூகம் பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டு அன்னிய நாட்டுக்கு தப்பி ஓடினர். புலிகளின் பாசிசமே தேசிய மொழியாகி, அது மட்டும் தான் தேசமென்னும் நிலையில் மக்கள் அங்கு வாழமுடியவில்லை. புலியின் பொருளாதார கொள்கையால், தமிழ் தேசிய பொருளாதாரம் அழிக்கப்பட்டது. மக்கள் எப்படியும் புலிகளுடன் வாழமுடியாத நிலை.

இப்படி மேற்கு நோக்கி புலம் பெயர்ந்த ஓடியவர்கள் 10 இலட்சத்தை தாண்டிவிட்டது. இது மட்டுமா இல்லை. மேற்கு நோக்கி புலம்பெயர முடியாதவர்கள், சிங்களப் பகுதிகளை நோக்கி ஓடினர். அதுவும்



படிப்பகம்

www.padippakam.com



பத்து இலட்சமாகி விட்டது. இதைவிட இந்தியாவில் ஒன்றில் இருந்து இரண்டு இலட்சம் மக்கள் புலம் பெயர்ந்தனர். மத்திய கிழக்கு நோக்கி புலம்பெயர்வு என்று, ஒரு தேசிய இனமே புலம் பெயர்ந்தது. புலிகள் வைத்த தேசியத்துடன் மக்கள் நிற்க முடியவில்லை. அவர்களுடன் ஒன்றாக சேர்ந்து வாழ முடியவில்லை.

இப்படி புலிப்போராட்டம் மக்களையே சொந்த மண்ணில் இருந்து விரட்டி அடித்தது. அது மக்களை தலைமை தாங்கும் தகுதியையும், மக்களுக்காக போராடும் தகுதியையும் இழந்தது. மக்களைப் போராட்டத்தில் இருந்து விரட்டி அடிக்கும் பாசிசத்தை விசிறி அடித்தனர்.

புலிப் பாசிசம் சொந்த மக்களை மட்டும் ஓடு என்று துரத்தவில்லை. தமிழ் மக்களுடன் சேர்ந்து போராடிய முஸ்லிம் மக்களை, கூட்டாகவே அடித்து விரட்டினர். வாழ்ந்த பூமியை விட்டே அவர்களை துரத்தினர். புலிகளின் குறுகிய புலிப்போராட்டம், அனைத்து மக்களையும் துரத்தி அடித்தது. மக்கள் தமது வாழ்வுக்காக போராட வேண்டியவர்கள், தமது வாழ்வை இழந்தனர். குறைந்தது மக்களுக்காக போராட வேண்டியவர்களால், மக்கள் வாழ்வை இழந்த அவலம். இப்படி இந்தப் போராட்டம், தமிழ் மக்களுக்கு எதிராக மாறியது. இதை தவறு என்றவர்களை துரோகி என்றனர். வெட்டியும், கொத்தியும், சுட்டும் போட்டனர்.

இப்படி போராட்டம் என்ற பெயரில் மக்கள் சிதைக்கப்பட்டு சின்னாபின்னமாக சிதறியோடிய அவர்கள் உதைப்பட்ட நிலையில், ஐயோ போராட்டமே வேண்டாம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். போராட்டம் என்பது வெறுமனே, புலிகளின் அபிலாசைக்குள் சுருங்கி வெம்பியது.

இந்த வெம்பிப்போன அரசியல் சமூகத்தின் இழிவான ஆதிக்கத்தை சார்ந்த தன்னை நிலை நிறுத்த முனைந்தது. யாழ் மையவாதம் தலைக்கேற, பிரதேசவாத உணர்வுகளை கொண்டு முழு தமிழ் சமூகத்தையும் இதற்குள் ஒடுக்கினர். பிரதேசவாத உணர்வுகளையும், அது சார்ந்த ஒடுக்குமுறையை தக்கவைத்தபடி, பிரதேச ரீதியாக மக்களைப் பிரித்தாளுவதை கையாண்டனர். இன்று இதன் விளைவால் பிரதேசங்கையே விட்டு ஓட வேண்டிய அளவுக்கு, புலிகள் பிரதேசவாத அரசியல் இருண்டு போனது. வெளிச்சதுக்கு பதில் இருட்டு என்பதே புலி அரசியல்.

எங்கும் எதிலும் சூனியவாதம். புலிப் போராட்டம் அறநெறியற்ற



படிப்பகம்

www.padippakam.com



ஒன்றாகியது. பொதுவாக இந்த சமூக அமைப்பில் நிலவும் தந்தைக்குரிய வழிகாட்டல் கிடையாது. தாய்க்குரிய கனிவு கிடையாது. தலைமைக்குரிய சமூகப் பொறுப்பு கிடையாது. அடி உதை, வெட்டுக் கொத்து, போட்டுத் தள்ளுதல், சதியும் சூதும், பொய்யும் புரட்டும், இதுவன்றி புலியில்லை என்றாகிவிட்டது.

இப்படி சர்வதேச ரீதியாக, தமது இழிசெயல்களால் அம்மணமானார்கள். சர்வதேச மக்களைச் சார்ந்து இருப்பதற்கு பதில், அந்த மக்களை ஒடுக்கிய அரசுகளின் தயவுகளை வேண்டி நிற்குமாறு தள்ளிவிட்டனர். அவர்களோ புலிகளின் மக்கள் விரோத செயல்களை பட்டியலிட்டு, அவர்களைத் தனிமைப்படுத்தி தடை செய்து ஒடுக்குகின்றனர். இப்படி புலிகள் உலகளவில் தனிமைக்குள் சிக்கிச் சிதைகின்றனர்.

இந்தியாவில் ராஜீவை வெறும் தனிமனித பழிவாங்கும் உணர்வுடன் கொன்றதன் மூலம், இந்தியாவிலும் தமக்கான அரசியல் கிறுக்குத்தனம் கொண்ட சூனியத்தை நிறுவிக் கொண்டனர். எங்கும் எதிலும் தனிமைப்பட்டு, ஒரு சிறிய கிணற்றுக்குள் நின்று கத்தும் தவளையாக மாறினர்.

இவர்கள் ஒரு அரசியல் பேச்சுவார்த்தையைக் கூட நடத்தும் தகுதி தமக்கு கிடையாது என்பதை நிறுவினர். அரசியல் சூனியமாகிவிட்ட நிலையில், தமது நலன் என்ற எல்லைக்குள் நின்று அதிலும் தம்மை அம்மணமாக்கினர். தமிழ் மக்களின் அரசியல் உரிமை என்பதற்குப் பதிலாக அவர்கள் பேசியதோ அற்பத்தனமானவை. இப்படி ஒரு அரசியல் இராஜதந்திரமே கிடையாது. தமிழ் மக்களை தலைமைதாங்கி வழிநடத்திச் செல்லும் தகுதி தங்களுக்கு கிடையாது என்பதை பேச்சுவார்த்தையிலும் மீள நிறுவினர்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமையை பேச்சுவார்த்தையில் கோருவது தான் அடிப்படையானது. பேரினவாதத்தின் அரசியல் இருப்பில் கைவைத்து, அரசியல் பேசத்தெரியாத முட்டாள்கள் என்பதை நிறுவினர். சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மக்களுக்கு வைக்கும் அரசியல் தீர்வை அல்லவா அவர்கள் கோரியிருக்க வேண்டும். இது கூட தெரியாமல் புலிகள் அரசியல் நடத்தினர். இப்படி புலி அரசியல் பேரினவாத அரசை பாதுகாக்கும் அரசியலாகிப் போனது. தமிழ் மக்களின் அரசியல் உரிமையை மறுக்கும் புலிகள், எப்படி அதை அரசிடம் கோருவர் என்பதே இங்கு நிதர்சனமாகியது.

இந்தியாவை நிர்ப்பந்திக்கும் வகையில், இந்தியா வாலாட்டாத வகையிலும், இந்திய மாநிலங்களுக்கு குறைந்த எதையும் நாம் பேச



படிப்பகம்

www.padippakam.com



முடியாது என்று அழகாகவும் ஆணித்தரமாகவும் இராஜதந்திரமாகவும் கூறியிருக்க முடியும். இப்படி உலகை வெல்வதற்கு எத்தனையோ இராஜதந்திர அரசியல் வழிகள் இருந்தது. எல்லாவற்றையும் புலிகள் நாசமாக்கினர்.

எங்கும் எதிலும் இருட்டு. தமிழ் மக்கள் வெளிச்சத்தைப் பார்க்க எந்த வழியுமில்லை. இந்த நிலை தொடர்ந்தால், இன்னும் பத்து வருடத்தில் தமிழ் மக்கள் எம்மண்ணில் வாழ்ந்தார்கள் என்று சொல்லும் வகையில் எதுவும் எஞ்சாது. தமிழ் இனமே இன்று குறுகி சிறுத்துவிட்டது. இலங்கையில் இரண்டாவது பெரிய இனம், நாலாவது சிறிய இனமாக எப்போதே மாறிவிட்டது. மக்கள் சொந்த வாழ்வைத் துறந்தோடுகின்றனர். தமிழ் மக்கள் அங்கு வாழ்வதற்காக இருக்கமாட்டார்கள் என்ற நிலைக்கு, புலிகள் தமிழ் மக்களின் வாழ்வுக்கான சூழலை அழித்துவிட்டனர்.

புலிகள் போராட்டம் தோற்றுப் போவது இப்படித் தான். எங்கும் எதிலும் தோல்வி. அவர்களை வாழ வைத்த, இராணுவ சாகசங்கள் கூட பெரும் தோல்வியில் முடிகின்றது. மீள்வதற்கான மீட்சிக்கான பாதை கிடையாது. சுயவிமர்சனம் என்ற மீள்வதற்கான பாதையை, எல்லாம் சரியாக சிறப்பாக நடப்பதாக நம்பும் கொங்கிரீட்டைப் போட்டு அடைத்து வைத்துள்ளனர்.

இப்படி கடந்து வந்த வரலாறு எங்கும் பாரிய மனித விரோதத்துடன் அரங்கேறியது. மனித விரோதமல்லாத எதையும், அவர்கள் உருவாக்கியது கிடையாது. தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் மக்களுடையது என்பதையே மறுத்தனர். அனைத்தையும் புலியாக்கி, புலிப் போராட்டமாக்கி குறுக்கினர். வெறும் வரட்டுத்தனமான நம்பிக்கையைக் கொண்டு, உயிராற்றல் உள்ளவற்றை கருக்கினர். குறுகி குறுகி, வன்னிக்குள் முடங்கிய நிலைக்குள் சென்றுவிட்டனர்.

அங்கு வாழ்ந்த மக்களை தப்பியோடாத வண்ணம் சிறைப்பிடித்தனர். தம்மைச் சுற்றி தமது பாதுகாப்புக்காக அவர்களை நிறுத்தியுள்ளனர். மக்கள் வெளியேறாத வண்ணம், ஒரு திறந்த வெளிச் சிறையில் மக்களை அடைத்துள்ளனர். புலிகள் தமது குறுகிய வட்டத்தை சுற்றி நடக்கின்றனர். அவர்களுக்கு மனித கேடயங்களாகவே வன்னி மக்கள் பயன்படுத்தப்படுகின்றனர்.

இப்படி வன்னியில் ஒரு லட்சம் மக்கள் புலிகளால் சிறைவைக்கப் பட்டுள்ளனர். அவர்களை பலாத்காரமாக ஆயுதபாணியாக்கு



படிப்பகம்

www.padippakam.com



கின்றனர். இந்த மக்களைக் கொண்டுதான், மீட்சிக்கான புலிகளின் இறுதி தற்கொலைக்கு ஒப்பான தமது தாக்குதலை நடத்த முனைகின்றனர்.

ஆனால் புலிகளின் ஆயுதம் ஏந்திய படைப்பிரிவும், அவர்களால் கட்டாயப்படுத்தப்பட்ட மக்களின் உளவியல் என்பதும், போராடும் ஆற்றலை இழந்துவிட்டது. யுத்தத்தை விரும்பாத மக்கள் முன், யுத்தம் வலிந்து திணிக்கப்படுகின்றது. இது எண்ணிக்கையற்ற மனித இழப்பையும், தமிழ் தாய்மையையுமே தொப்புள் கொடியுடன் அறுத்தெறிகின்றது. மனித அவலமும், மனிதத் துயரமும், வன்னி மேல் கவிழ்ந்து கிடக்கின்றது. மனித வாழ்வே பிணமாகி நாற, மக்கள் நடைப்பிணமாகி விட்டனர். தாம் எதற்கு உயிருடன் வாழ்கின்றோம், ஏன் வாழ்கின்றோம் என்று தெரியாத ஒரு நரக வாழ்க்கை.

புலிகள் என்ற குறுகிய சூனியத்தில், எல்லாமே பூச்சியமாகிவிட்டது. இவை இன்று இராணுவத்தின் வெற்றியாக மாறுகின்றது. புலிகளின் பாரிய மனித இழப்புகளாக மாறி வருகின்றது. தமிழ் மக்களின் சூறையாடிய பொருட் செல்வம், எதிரியிடம் அன்றாடம் சென்றுவிடுகின்றது அல்லது அழிந்து விடுகின்றது. தமிழ் மக்கள் பெறப் போவது என்ன? இறுதியில் எதுவுமில்லை. இழப்புகளைத் தவிர எதுவுமில்லை. தமிழர்கள் வாழ்ந்த பூமியில், தமிழர்கள் வாழ்வார்களா என்ற நிலை கூட இன்று உருவாகியுள்ளது. இது தான் இன்றைய உண்மையான எதார்த்தம். தமிழ் மக்கள் எப்போதோ யார் யாரிடமெல்லாமோ இழிந்து நலிந்து தோற்றுவிட்டார்கள். இப்படி தமிழ் மக்களை உருவாக்கி, அதற்கு தலைமை தாங்கியவர்கள், இன்று தாங்கமுடியாது அதற்குள் தோற்றுப் போகின்றனர்.

***08.12.2007***



படிப்பகம்

www.padippakam.com



# புலியிசத்தை யாராலும் இனி காப்பாற்ற முடியாது

புலி தான் விரும்பினாலும் கூட, தனது சொந்த புலிப்பாசிச முகத்தை மூடிமறைக்கவே முடியாது. அண்மைக் காலமாக மீளவும் புலிகளின் பாசிச அரசியலை ஓதத் துவங்கிய யோகி, தனது வானொலிப் பேட்டி ஒன்றில் ''தமிழகம் உட்பட புலம்பெயர் நாடுகளில் பரப்புரைப் பணிகள் - தடைகளுக்கு முகம் கொடுப்பது எப்படி?'' என்று புலம்பியுள்ளார். புலிகள் சந்திக்கும் தொடர் நெருக்கடிகளில் இருந்து மீளும் நப்பாசை, இதில் பிரதிபலிக்கின்றது. இதனால் அனைத்து புலி ஊடகங்களும் இதனை முதன்மை கொடுத்து பிரசுரித்துள்ளன.

ஆனால் நிலைமை என்ன? மக்களுக்கு எதிரானவர்களை, மக்களே தோற்கடிக்கின்றனர். இதுதான் நடக்கின்றது. இதனைக் கூட புலிகளால் உணர முடியாதளவுக்கு, புலியிசம் பிரபானிசமாகி எங்கும் எதிலும் புளுக்கின்றது. இப்படி புலியிசம் தனக்குள்ளாகவே, அழுகி நாறுகின்றது. மறுபக்கத்தில் மக்களே தமது சொந்த வரலாற்றுப் போக்கை தீர்மானிக்கின்றார்கள். இந்த வரலாற்றுப் போக்கில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பிணநாற்றத்துடன் கூடிய சொந்த மரணத்தை கண்டு, புலிகள் உளறத் தொடங்குகின்றனர். தனது புலியிசத்தை தாமே வலிந்து நடுச் சந்தியில் நிறுத்திவிட்டு, மூச்சிரைக்க அலம்புகின்றனர்.

புலிகள் தாமே வலிந்து உருவாக்கிய இந்த புலியிச நெருக்கடிகளை களைவதற்கு, புலியிசம் முனையவில்லை. மாறாக அதை பாதுகாக்க, புறநிலை மாற்றத்தைப் பற்றி கனவு காண்கின்றனர். தமது எதிர்கால மரணத்தை, புறநிலை மாற்றம் தடுக்கும் என்ற சுயநம்பிக்கையை கனவாகக் காண்கின்றனர். அதை நிகழ்காலத்தில் சொல்லி, ஒப்பாரியாகவே புலம்புகின்றனர்.

புலிகள் தொடர்ச்சியாக சந்திக்கின்ற அரசியல் இராணுவ நெருக்கடிகள், அகநிலை சார்ந்ததே ஒழிய புறநிலை சார்ந்ததல்ல. அகநிலையில் மாற்றமின்றி, புற நிலையில் எந்த மாற்றமும் நிகழாது. இந்த அரசியல் உண்மையை மறுக்கும் புலி யோகி, புறநிலை மீது அனைவரையும் கண்ணை மூடிக்கொண்டு ஓடக் கோருகின்றார்.



படிப்பகம்

www.padippakam.com



அக நிலையை பற்றி பேசக் கூடாது என்ற நிபந்தனைதான், இதில் உள்ள வேடிக்கை. இப்படி வித்தை காட்டி, முக்கி முணங்கியாவது ஈன வேண்டும் என்கின்றார். தாய் மரணித்தாலும், முண்டத்தை ஈனுவது முக்கியம் என்கின்றார்.

போராட்டத்தின் பெயரில் ஆயிரம் ஆயிரம் மக்களின் இரத்தத்தை குடித்துவிட்டு, புலியிசம் அனைத்தையும் தூக்கிவைத்து வேடிக்கை காட்டமுனைகின்றனர். பாவம் யோகி, தானே தனக்கு ஊதி, தானே ஆடும் நம்பிக்கை. அதை அவர் கூறும் விதம் தான் நகைச்சுவையானது. ''அதனை வழிநடத்துகின்ற தலைவரிடம் உண்டு.'' என்கின்றார். அனைத்தையும் தலைவரின் மீது பொறுப்பாய்ப் போட்டுவிட்டு, மறுபடியும் தப்பி ஓடிவிடுகின்றார். ஒரு அரசியல் வழி, அரசியல் நம்பிக்கை என்று எதையும் முன்வைத்து, மக்களை அகவழி சார்ந்து வழிகாட்ட முடிவதில்லை.

சரி ''அதனை வழிநடத்துகின்ற தலைவரிடம் உண்டு.'' என்று கூறும் இந்த யோகி, கடந்த காலத்தில் எப்படி புலிகளில் இருந்து காணாமல் போனார்? அன்று அவரை வழிநடத்திய தலைவர் மாத்தையாவுக்கு அரசியல் எடுபிடியாகி திரிந்த, அந்த அன்றைய நம்பிக்கைகள் என்னவாயிற்று! மாத்தையாவின் கால்களைச் சுற்றியதால், புலிகளின் வதை முகாம்களைத் தரிசித்து, அதைத் தாண்டி புனர்ஜென்மம் பெற்று வந்த வேகத்தில் புலம்ப வைக்கின்றது.

எந்த நம்பிக்கையும், எந்த முன் முயற்சியும், புலிகளின் உள்ளான ஒரேயொரு அகமாற்றத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மட்டும் தான் சாத்தியம். ஆனால் அது புலியிச வரலாற்றில் இனியும் எப்போதும் நிகழாது. புலியிசம் என்பது மக்களுக்கு எதிராக மட்டும் தான், நிலைபெற்று நீடிக்க முடியும் என்பதால், மாற்றம் என்பது இனியும் நிகழமுடியாது. புலியிசத்தின் முடிவுதான் அதன் வரலாறாக மாறும்.

இந்த நிலையில் எந்த மாற்றமும் புறத்தில் நிகழ்ந்தாலும், புற மாற்றங்கள் புலியிசத்துக்கு எதிரானதாகவே செயல்படுமே ஒழிய, சார்பாக மாறாது. சார்பாக மாற்ற, புலிகளுக்கும் மக்களுக்கும் எந்த அரசியல் பொருளாதார உறவும் கிடையாது. புலிகள் தமது எதிரியாக, மக்களை நிறுத்தி வைத்து, அதையே அரசியல் செய்வதுதான் புலியிசமாகும்.

இந்த நிலையில் யோகி ''புலம்பெயர் வாழ் தமிழர்கள் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்க வேண்டும். அதாவது என்னவெனில், நாங்கள்



படிப்பகம்

www.padippakam.com



உதவுவோம், தோற்றால் உதவமாட்டோம் என்ற மனநிலை இருக்கக் கூடாது. நாங்கள் எவ்வளவுக்கெவ்வளவு சிக்கல்களை, சிரமங்களைச் சந்திக்கிறோமோ அந்த நேரத்தில்தான் அவர்கள் எங்களுடன் உறுதியாக இருக்க வேண்டும். இந்நிலைப்பாட்டில் உறுதியாக நிற்க வேண்டும். அதில் தெளிவாக இருக்க வேண்டும். எங்களுக்குரிய பணி என்னவென்று சொன்னால் அங்கு போராடுகின்ற நோக்கம் இதுதான். எங்களுடைய குறிக்கோளில் தடம்புரண்டதில்லை.'' மக்களையே வெறுக்கின்ற, சதா வெறுப்பேற்றுகின்ற புலியிச குறிக்கோள்தான் என்ன? மக்களின் சமூக பொருளாதார வாழ்வாதாரங் களுக்கும், புலிகளுக்கும் என்ன அரசியல் பொருளாதார உறவு உண்டு. மக்களின் குறிக்கோள் வேறு. புலியின் குறிக்கோள் வேறு. இவை ஒன்றுடன் ஒன்று ஒட்டமுடியாதவை.

இப்படி தடம் புரண்டு வெகுதூரம் சென்றுவிட்ட வண்டியை, மீளவும் தண்டவாளத்தில் ஏற்றமுடியாது. ஏன், அதை மீள ஏற்றவே புலிகள் அனுமதிப்பதில்லை என்பதில் உள்ள குறிக்கோளில் மட்டும், அவர்கள் தடம் புரளாது ஒட முனைகின்றனர். இது அவர்களின் சொந்த அழிவு வரை என்பதில், அவர்கள் தடம் புரண்டது கிடையாது.

''தோற்றால் உதவமாட்டோம் என்ற மனநிலை இருக்கக் கூடாது.'' என்கின்றனர். இப்படி மக்களா சொன்னார்கள். இல்லை. நீங்கள் தான் தோற்றவனுக்கு உதவக் கூடாது, என்று சொல்லி வந்தீர்கள். ஏன் இதை இப்போது மறந்து போனீர்கள்? தோற்றவர்களுக்கு வரலாற்றில் இடமில்லை என்று கூறியவர்கள் யார்? நீங்கள் தான். கிட்லர் பாணியில் கூறியவர்கள் நீங்கள். இப்படி வரலாற்றையே மாற்றி எழுதியவர்கள் நீங்கள். வெற்றி என்று கூறி, அனைத்தையும் உடைத்தெறிந்தீர்கள். உங்கள் தோல்விகளை, அழகாக பூசி மொழுகினீர்கள். பாட்டுப் பெட்டியை அலறவிட்டு, அதை மட்டும் கேள் கேள் என்றீர்கள். இன்று, வெடிச் சத்தமும் பிணமும் இன்றி, எந்த வீட்டுச் சோறும் அவியமாட்டேன் என்கின்றது. பிணத்தை அறுத்து, அதையே அவித்து அவித்து கொட்டி என்ன பயன். அதுவே வினையாகி உங்களுக்கு எதிராக எழுந்து நிற்கின்றது. அனைத்தும் பொய்யும் போலியுமாகி நிற்கின்றது.

இந்த நிலையில் நீங்கள் கூறுகின்றீர்கள் ''நாங்கள் எவ்வளவுக்கெளவு சிக்கல்களை, சிரமங்களைச் சந்திக்கிறோமோ அந்த நேரத்தில்தான் அவர்கள் எங்களுடன் உறுதியாக இருக்க வேண்டும்.'' என்கின்றீர்கள். சரி அந்த ''அவர்கள்'' யார்? ''எங்களுடன்'' என்ற நீங்கள் யார்? உங்களுக்கும் அவர்களுக்கும் என்ன அரசியல் உறவு உண்டு? சரி, ஏன் அந்த ''அவர்கள்'' உங்களுடன் ''உறுதியாக இருக்க



படிப்பகம்

www.padippakam.com



வேண்டும்.'' சதா ''அவர்களுக்கு'' எதிராக செயல்படும் நீங்கள், அவர்களை உறுதியாக எம்முடன் இருக்கவேண்டும் என்பது அரசியல் வேடிக்கைதான்.

மறுபக்கத்திலோ மக்கள் உங்களுடன் உறுதியாக நிற்கின்றனரா என்பதற்கு முன்னர், உங்களால் அப்படி நிற்க முடியுமா என்று அரசியல் ரீதியாக பாருங்கள். எங்கே உங்கள் கடந்தகால வீம்புகள் எல்லாம் ஓடி ஒளித்துவிட்டது. ஏன் சவுக்களை அடிக்கின்றது? அரசியல் என்பதை அடிதடியாக்கினீர்கள். நாலு சொற்களில் அரசியல் செய்தீர்கள். இதைச்செய்த பலர் காணாமல் போகின்றனரே, ஏன்? கோட்டை கொத்தளங்களாக உருவான பிரமைகளும் நம்பிக்கைகளும், மணல் மேடாக சரிந்து வீழ்கின்றனவே ஏன்? உங்கள் உறுதியெல்லாம் இப்படிப் பொலபொலவென சிதைந்து போனது ஏன்?

இதை சிந்திக்கும் ஆறாவது மனித அறிவு புலியிசத்திடம் கிடையாதா? நீங்கள் ஆறறிவற்ற புலியாகத்தான் இருக்க விரும்புகின்ற வீம்புத்தனம் தான், உங்களையே இன்று ஓடவைக்கின்றது. வன்முறையை நம்பி, கொள்ளையை ஆதாரமாகக் கொண்ட, கோட்பாடற்ற வெறும் நம்பிக்கைகள் எதையும் பாதுகாக்காது. சொந்த அமைப்பே கண் மண் தெரியாது ஓடத் துவங்கி விடுகின்றது.

நம்பிக்கை என்றால், எதன் மீது நம்பிக்கை? எதன் மீது தான், மக்களை உறுதியாக நிற்கக் கோருகின்றீர்கள்? இன்று எப்படி கடந்தகால தியாகங்கள் தூற்றப்படுகின்றதோ, அப்படி எல்லாத் தியாகங்களும் தூற்றப்படும். இது இந்த புலி அரசியல் உள்ளடக்கத்தில், பொதிந்து காணப்படுகின்றது. உங்கள் முன்னாள் குரு மாத்தையா கதையை, இப்படித்தான் இன்று உங்களால் தூற்றப்படுகின்றது. உங்களுடன் காலாற நடந்த கருணா கதியும் அதுதான். போற்றுவதும், தூற்றுவதும் அக்கம்பக்கமாகி அரசியலாகிவிடுகின்றது. நாளை முழுப்புலிகளின் தியாகத்தையும் தூற்றுவது கூட, உங்களால் மட்டுமே சாத்தியமானது. அதுவே உங்கள் கடந்த காலம். இப்படியான அரசியல் வங்குரோத்து புலியின் உள்ளேயே, அனைத்தையும் செயலற்றதாக்கின்றது.

அதை பிரதிபலித்த யோகி கூறுகின்றார் ''பொதுவாக மனித இயல்பு எப்படிப்பட்டதென்றால், வெற்றிகளைக் கண்டு பூரிப்பதும், தோல்வி களைக் கண்டு துவளுவதும்தான். இந்த இயல்பு பொதுவானது. இருந்தாலும் நாங்கள் நம்பிக்கையோடு இருக்கின்ற மனிதர்கள், இதனையெல்லாம் பொதுவாகப் பார்க்கின்ற மனிதர்கள், தெளிவான பார்வை உடையவர்களுக்கு நம்பிக்கையூட்டி, தொடர்ச்சியாக



படிப்பகம்

www.padippakam.com



அவர்களது பங்களிப்புக்கு உற்சாகமூட்டி, தொடர்ந்து செயற்பட வேண்டிய சூழல்தான் இருக்கிறது. அதாவது வெற்றியின்போது பலர் கூட இருப்பார்கள். தோல்வியின்போது ஒருவரும் உடன் இருக்க மாட்டார்கள் இதனைப் பலமுறை சந்தித்திருக்கிறோம்.'' ஏன் உடன் இருக்கமாட்டார்கள்? இந்த கேள்விக்கு புலியிசம் பதிலளிக்காது, பதிலளிக்க முடியாது. வெற்றியும் தோல்விகளும் அந்த மக்களுடைய தாக இருக்காத வரை, அது தாம் அல்லாத அன்னியனுடையதாக பார்க்கப்படும். இதில் சம்பந்தப்படாத மக்கள், அதில் இருந்து ஒதுங்கிச் செல்வது இயல்பு. வெற்றியும் சரி, தோல்வியும் சரி, மக்களின் சொந்த வாழ்வுடன் தொடர்பற்ற ஒன்றாக இருப்பதன் மொத்த விளைவு இது.

இந்த நிலையில் வெற்றி பெறும் போது யார் குதூகலிக்கின்றனர்? இதன் மூலம் இலாபம் பெறுபவர்கள் தான். தோல்வி பெறும் போதோ, சுயநலத்துடன் அதைவிட்டுவிட்டு தப்பி ஒடுகின்றார்கள். புலியிசத்தின் பின் உள்ளவர்கள் சுயநலப் பேர்வழிகளே. ''உலக அரசியல் என்பது, அரசு என்பது தன்னலம் சார்ந்ததே'' என்ற உங்கள் சொந்த விதிக்கமையவே ஒடுகின்றனர். தப்பமுடியாது அகப்பட்டவன் மட்டும், தொடர்ந்து இப்படி உளறமுடிகின்றது. சுயநலத்தை அடிப்படையாக கொண்ட புலியிசம், மக்களின் இயக்கமல்ல. இதற்கேற்ற சுயநல இயக்கம் தான், புலியிசம். மக்கள் இதில் சம்பந்தப்படாத வகையில், இதையொட்டி வாழ்கின்றவர்களாகவும், ஒதுங்கி வாழ்கின்றவர்களாக வே உள்ளனர். கணிசமானவர்கள் பொழுதுபோக்க கொறிப்பதன் மூலம், இதையொட்டி வம்பளந்து காலத்தை கழிப்பவர்கள். தோல்வி ஏற்படும் போதும், அதையும் தூற்றி, பொழுது போக்குபவர்களும் இவர்கள்தான். இப்படித்தான் இந்த இயக்கம் உள்ளது.

இப்படிப்பட்ட இயக்கத்தில் நம்பிக்கையூட்ட, அகநிலையாக மக்களை அரசியல் ரீதியாக அணுகுவதில்லை. மாறாக புறநிலையை நம்பக் கோருகின்றனர். ''அதனால் அனைத்துலக ரீதியாக அரசு மட்டங் களிலும், மக்கள் மட்டங்களிலும் ஒரு விழிப்புணர்வு இருக்கத்தான் செய்கிறது. இது தொடர்பான சில கருத்துருவாக்கங்களையும் பார்க்கத்தான் செய்கிறோம். ஆனால் அவையெல்லாம் செயல்வடிவம் பெற வேண்டும். முன்பைவிட அனைத்துலகம் என்பது தமிழ் மக்கள் விடயத்தில் ஆழமான ஒரு விழிப்புணர்வை இப்போது பெற்றுள்ளது என்பது உண்மை. அது ஒரு முழுமையான விழிப்புணர்வு பெற்ற நிலைமைக்கு அப்பாற்பட்டு செயற்படுமானால், நாங்கள் போராடத்தான் வேண்டும். அதற்குப் பக்கபலமாக புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களும் நிற்கத்தான் வேண்டியிருக்கும்.'' என்ன அறிவுசார் அரசியல்! புலிகள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதன் போதான மனித அழிவுகளையும் சிதைவுகளையும் காட்டி, ஏகாதிபத்தியம் முதலைக்



படிப்பகம்

www.padippakam.com



கண்ணீர் வடிக்கின்றது. அதைத்தான் புறநிலை மாற்றமாக புலிகள் காண்கின்றனர். சொந்த மரணத்தைக் கூட, அரசியலாக காட்டி ரசிக்கின்ற மனவிகாரங்கள். ஏகாதிபத்தியம் வடிக்கும் முதலைக் கண்ணிரை, ஆறாக மாற்றிவிட முடியும் என்று புறநிலை மீது நம்பிக்கை ஊட்டுகின்ற விபச்சாரங்கள். புலிகள் இந்தக் கற்றுக்குட்டித்தனத்தையே அனைவரையும் நம்பக் கோருகின்றனர். ஏகாதிபத்தியம் என்பது ஏகாதிபத்தியம்தான் என்பதையே, இது மறுக்கின்றது.

ஏகாதிபத்தியத்தை ஏகாதிபத்தியமாக அறிவித்து, மக்களின் தேசியத்தை முன்னெடுக்க மறுக்கின்றவர்களின், வரட்டுத்தனமான குளறுபடிகள் இவை. ஏகாதிபத்தியத்துக்கு தொண்டூழியம் செய்து, தமிழ் தேசியத்தின் உண்மைத்தன்மையை அழிக்கின்ற வழியில் தமிழ் மக்களை விபச்சாரம் செய்யக் கோருகின்றனர். புலிகள் அழியும் போது ஏற்படும் மனித அழிவுகளையே, மூலதனமாக்கி புலிகள் பிழைக்க முடியுமா என்று பாருங்கள் என்பதை இது கோருகின்றது.

இப்படிப்பட்ட நிலையில் புலியிசத்தால் எதையும் தன்னளவில் நம்பிக்கையைக் கொடுக்க முடியவில்லை. அதை ''காலமும் சூழலும் வருகின்றபோது, அனைத்தும் தானாகக் கனியும் என்ற நம்பிக்கையுடன் போராடுவோமே தவிர, வேறு ஒரு வழியும் இல்லை'' என்கின்றனர். தீர்க்கதரிசனமிக்க வழிகாட்டும் உங்கள் தலைவர் எங்கே? எல்லாவற்றையும், எல்லா நேரத்திலும் வழிகாட்டியதாக கூறிய தலைவருக்கே மொட்டை அடித்து, அதை ''காலமும் சூழலும்'' என்று கூறும் கால கட்டத்தில் புலிகள் சரிந்து வீழ்ந்து நிற்கின்றனர். ஏன் இந்த நிலை? இதைவிட ''வேறு ஒரு வழியும் இல்லை'' என்று புலியிசத்தால் ஒப்பாரிவைக்க முடிகின்றது.

இப்படி சிதைந்து சின்னாபின்னமாக மாறும் புலிகள், தமது சொந்த சுயநலத்தையே உலக அரசியல் என்கின்றனர். ''உலக அரசியல் என்பது, அரசு என்பது தன்னலம் சார்ந்தே செயற்படும். தமிழர்களைப் பொறுத்தவரையில், எங்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளைப் பொறுத்தவரையில், நியாயமான சில குறைபாடுகள் இருக்கலாம். அதனை ஒதுக்கி வைத்துவிட்டு, இந்தப் போராட்டத்துக்குப் பின்னால் முழுமையான அர்ப்பணிப்போடு, அந்தப் போராட்டத்தினுடைய சரியான விடயங்களை தெளிவாகச் சொல்லிக் கொண்டு வந்தாலே போதும். அதில் இடையிடையே குழப்பம் இருக்கத் தேவையில்லை. இதில் நடுநிலைமை என்று ஒன்றில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்'' அரசியல் என்பதை சுயநலம் சார்ந்தது என்கின்றார். அரசு என்பது சுயநலம் சார்ந்தது என்கின்றார்.



படிப்பகம்

www.padippakam.com



இப்படி தியாகத்தையே கொச்சைத்தனமாக்குகின்றனர். அரசியலும், அரசும் சுயநலம் சார்ந்தது என்று கூறும் இவர்கள், தமிழ் மக்களுக்கும் இதைத்தான் சொன்னார்கள், செய்தார்கள். இதற்காக ஆயிரக் கணக்கான கொலைகள். தமிழ் மக்களின் அடிப்படை வாழ்வையே இதற்காக அழித்தனர். ''எங்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளைப் பொறுத்தவரையில்'' என்று கூறுவது, புலியின் நலனைத்தானே ஒழிய, மக்களின் நலனையல்ல. இந்த சுயநலம் சார்ந்து ''நியாயமான சில குறைபாடுகள் இருக்கலாம்''. ஆனால் அதைப்பற்றி யாரும் பேசக் கூடாது என்கின்றனர். அதாவது ''அதனை ஒதுக்கி வைத்துவிட்டு'' புலியின் சொந்த சுயநலத்துக்காக மக்கள் தியாகம் செய்து மாரடிக்கவேண்டும் என்றாகின்றது. மக்களாகிய நீங்கள் தியாகத்தை செய்யுங்கள், ஆனால் அதைக் குழப்பக் கூடாது என்கின்றனர். என்ன சுயநலம். புலியிசம் என்பது இதுதான் என்கின்றனர். ''இதில் நடுநிலைமை என்று ஒன்றில்லை'' என்கின்றனர். மக்களுக்காக பேசக்கூடாத புலியிசம், இதற்குள் இரண்டில் ஒன்று என்று எதுவுமில்லை. பின் நடுநிலையாவது மண்ணாங்கட்டியாவது.

''கொப்புத் தட்டுகின்ற வேலைகளை நீங்கள் பார்க்க வேண்டாம்'' என்கின்றனர். கொப்புத்தட்டுவதல்ல மக்களின் வேலை. தமது வாழ்வுக்கு இடைஞ்சலாக உள்ள அந்த ஆலமரத்தையே அகற்றுவது தான். இந்த ஆலமரம் அமெரிக்காவாக இருந்தாலும் சரி, புலிகளாக இருந்தாலும் சரி, மக்களுக்கு ஒன்று தான். ''கொப்புத் தட்டி'' எதுவும் மக்களுக்கு சார்பாக மாறிவிடாது. ''கொப்புத் தட்டுகின்ற''தாக புலியிசம் எதை கருதுகின்றதோ, அதற்கு மாறாக கொப்புகள் தானாகவே உயிரற்றதாகி பட்டு ஒடிந்துகொண்டு இருக்கின்றன. இதனால் தான் ''காலமும் சூழலும் வருகின்றபோது, அனைத்தும் தானாகக் கனியும் என்ற நம்பிக்கையுடன் போராடுவோமே தவிர, வேறு ஒரு வழியும் இல்லை'' என்று புலம்ப வேண்டியுள்ளது.

தமது இருப்பு சார்ந்த புலம்பலை ''தமிழ்த் தேசிய உணர்வை, தமிழரின் தொன்மையை, எங்களுடைய விடுதலைப் போராட்டத் தினுடைய ஆழமான அர்ப்பணிப்பு உணர்வை கேள்விக்குறியின்றி வெளியிட வேண்டும். இந்த விடயத்தில் அவர்கள் குழம்பிக் கொண்டிருக்கக் கூடாது'' என்கின்றனர். யார் குழம்பியுள்ளனர் என்றால், அது புலிகள் தான். இதனால், அதென்ன எனத் தெரியாது பிரதிபலிக்கின்றது. ''தமிழ்த் தேசிய உணர்''வு தான் என்ன? ''தமிழரின் தொன்மை'' என்ன? '' ஆழமான அர்ப்பணிப்பு உணர்''வு என்ன?

இதன் அரசியல் அர்த்தம் தெரியுமா உங்களுக்கு? மக்களை



படிப்பகம்

www.padippakam.com



அடக்கியொடுக்கி வாழும் புலியிசம், இதன் உணர்வை, உணர்ச்சியை நலமடிக்கும் பாசிட்டுகள் தானே. மக்களின் அடிப்படை அரசியல் உரிமையை மறுத்து, எந்த அரசியல் உரிமையையும் யாராலும் பெறமுடியாது. சுயநலம்தான் அரசியல், அரசு என்று விளம்பரம் செய்யும் புலியிசம், அந்தளவுக்கு மக்கள் விரோதத் தன்மை கொண்டவைதான். மக்கள் தான் தமது வரலாற்றை எழுதுபவர்களே ஒழிய, புலிகள் அல்ல. வரலாறு இதற்கு மாறாக தலைகீழாகி விடாது.

***23.09.2007***



படிப்பகம்

www.padippakam.com



# மக்களின் எதிர்பார்ப்பும், புலித் தலைவரின் அலட்சியமும்

வருடாவருடம் மக்களின் வேறான எதிர்பார்ப்புகளின் மத்தியில், புலிகளின் தலைவர் பிரபாகரன் உரையாற்றுவது வழக்கம். வருடம் ஒரு முறை தான், அவரின் கருத்து என்ற ஒன்றை அவர் வாயால் மக்கள் கேட்க முடியும் என்ற நிலை. மக்கள் அவரிடம் இருந்து எதிர்பார்ப்பது ஒன்று. அவர் உரையாற்றுவது வேறொன்று.

அவர் இந்த தமிழீழம், நாம் கொள்கையில் நேர்மையானவர்கள், பொறுமையின் எல்லையில் காத்துக் கொண்டிருக்கின்றோம், எமது பலத்தை காட்டியுள்ளோம், அடிகுத்து, என்றவாறாக உரையாற்றுபவர். இதை மக்கள் கேட்க மட்டும்தான் முடியும். அபிப்பிராயம் சொல்லவோ, விமர்சனம் செய்யவோ முடியாது. புலியை வைத்து ஏய்த்துப் பிழைக்கும் கூட்டத்துக்கு இது மட்டும் போதுமானதாக இருப்பது வழக்கம். அவர்களை திருப்தி செய்யும் வகையில் தான் உரை அமையும். ஏன் புலித்தலைவரின் நோக்கமும் அதுவே தான். சென்ற முறையும் அதற்கு முந்திய முறையும் கூட அது அவ்வளவாக எடுபடவில்லை. இம்முறையும் சென்ற முறையை கூட தாண்டாது, அவ்வளவுக்கு அது சோடமிழந்திருக்கின்றது.

தமிழ் மக்கள் புலித் தலைவரிடம் எதை எதிர்பார்க்கின்றனர்

தாம் நிம்மதியாக வாழும் மனித சூழலை எதிர்பார்க்கின்றனர். பேரினவாதம் கொட்டம் அடித்தாலும், புலிகளாவது ஆறுதலளிக்கக் கூடிய வகையில் தம்முடன் நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் அதை எதிர்பார்க்கின்றனர். இதைப் புலிகள் தமது மக்களுக்கு ஏற்படுத்த மாட்டார்களா என்ற எதிர்பார்ப்புடன் வாழ்வை கையில் பிடித்துக்கொண்டு வாழ்கின்றனர். தமது துயரத்தை சொல்லி அழக் கூட ஒரு மக்கள் தலைவன் கிடையாது என்ற நிலையில், ஊமையாகி ஊனமாகி நடுங்கிக் கிடக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



மக்கள் தம்மை சக மனிதனாக, சகல உரிமைகளும் கொண்ட சக மனித ஜீவியாக, புலித் தலைவரின் உரிமைகளுக்கு நிகராக, தம்மை மதிப்பதையே அவர்கள் கோருகின்றனர். தமது பிரச்சனைகளைக் காது கொடுத்து கேட்க மாட்டார்களா என்ற எதிர்பார்ப்புடன்தான், மக்கள் நடைப்பிணமாக வாழ்கின்றனர்.

புலித் தலைவர் தனது குடும்பம், தனது குழந்தை, தனது ஆட்களை நடத்துகின்றது போன்று, எமக்கு ஒரு தந்தையாக, குடும்ப உறுப்பினராக உறவினராக, ஏன் ஒரு மக்கள் தலைவனாக இருக்க மாட்டாரா என்று அங்கலாய்க்கின்றனர். புலிக்கு மட்டும் தலைவராக இருந்து, மக்களாகிய தம்மை ஒடுக்குவதை கண்டு அஞ்சி நடுங்குகின்றனர். மக்களாகிய தம்மையும் ஒரு மனிதனாகக் கூட நடத்தமாட்டாரா என்று அங்கலாய்க் கின்றனர்.

வன்னியில் அன்றாடம் மக்கள் பலாத்காரமாக யுத்தமுனைக்கு அனுப்பப்படுகின்றனர். மக்கள் முன், புலித் தலைவனால் யுத்தம் வலிந்து திணிக்கப்படுகின்றது. கட்டாயப்படுத்தி அனுப்பப்படும் மனிதம், உணர்ச்சியற்ற பிணமாகவே சண்டைக்குள் இறக்கப்படுகின்றனர். அங்கு மீண்டும் ஒருமுறை யுத்த முனையில் அவர்கள் கொல்லப்படுகின்றனர்.

இதனால் மனித சாவு நிகழாத நாட்கள் கிடையாது. மரண ஒப்பாரிகள் கேட்காத கிராமங்கள் கிடையாது. ஒவ்வொரு வீட்டையும், நிலைகுலைய வைத்துள்ள மரணங்கள். யார் யாருக்கு ஆறுதல் சொல்வது என்று தெரியாதளவில் மரணங்கள். தமது குழந்தைகளை பிள்ளை பிடிகார புலிகளிடம் தொலைத்து விட்டு பரிதவிக்கும் மக்கள். குழந்தையின் பிணத்தை எதிர்பார்த்து, வாசலில் காத்துக்கிடக்கும் மக்கள். இதுதான் அந்த மக்களின் வாழ்வியல். இதைத்தான் புலித்தலைவன் மக்களுக்கு கொடுத்துள்ளான். ஏன் இந்த பூமியில் தின்னக் குடிக்க எதையும் தலைவர் விட்டுவைக்கவில்லை.

எதையும் சொந்தக் குடும்பத்தில் கூட வாய்விட்டு பேச முடியாது. எங்கும் எதிலும் அச்சம். வாய் பேசாது ஊமையாகிய மனங்கள். தமது துயரத்தையே தமக்குள் பொத்திக்கொண்டு வாழ்கின்ற, அடிமை வாழ்க்கை.

இப்படி ஆயிரம் ஆயிரம் மனித துன்பங்களை சுமந்து நிற்கின்ற ஒரு பூமியின், தலைவர் தான் புலித் தலைவர். இந்த புலித் தலைவரிடம் இருந்து மக்கள் எதிர்பார்ப்பது, இதில் இருந்து விடுதலைதான். புலிகளிடம் இருந்து அவர்கள் எதிர்பார்ப்பது, தமது வாழ்வின்



படிப்பகம்

www.padippakam.com



மீட்சியைத்தான். தமிழ் மக்களாகிய தம் மீதான, புலிகளின் அடக்குமுறையை அல்ல.

வெல்ல முடியாத ஒரு புலி யுத்தத்தைக் கொண்டு, விடுதலை காண்பதாக கூறுவதை மக்கள் நம்பத் தயாராகவில்லை. தமிழ் மக்களாகிய தமக்கு புலிகள் தரமறுக்கும் சொந்த விடுதலையைத் தான், புலித்தலைவரிடம் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

உழைப்பு இல்லை. நிவாரணமில்லை. குழந்தைகள் இல்லை. குடும்பங்கள் சிதைந்து விட்டன. உற்றார் உறவினர் எல்லாம் அழிந்து சிதைந்து சின்னாபின்னமாகிப் போய்விட்டார்கள். எஞ்சிக்கிடப்பது தனிமை. வாய் விட்டுப் பேச முடியாத சூனியம். புலம்பக் கூட முடியாத கண்காணிப்பு. இப்படி மனித அவலத்தால் நிறைந்த, மகிழ்ச்சியற்ற ஒரு பூமியாகிவிட்டது. இதைத்தான் புலித் தலைவர் மக்களுக்கு பரிசாக்கியுள்ளார்.

மக்கள் தலைவரின் உரையில் எதிர்பார்ப்பது இதில் இருந்து ஒரு மீட்சியைத்தான். களைத்துப் போன சண்டையைப் பற்றிய வீறாப்போ, தோற்றுக்கொண்டு இருக்கும் சண்டை பற்றிய நம்பிக்கையோ அல்ல. சமாதானம் பற்றிய உறுதியையோ, அன்னிய நாடுகள் பற்றிய நம்பிக்கையீனம் பற்றிய தலைவரின் ஒப்பாரியையோ அல்ல. மனித வாழ்வின் மீட்சிக்கு, மனிதனின் மகிழ்ச்சிக்குரிய ஒரு நல்ல தலைவனின் உண்மையான மனித அக்கறையை, அதையொட்டிய நடைமுறையை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

***26.11.2007***



படிப்பகம்

www.padippakam.com



# தவறாக வழிநடத்தப்படும் போராட்டம் தோற்கடிக்கப்படும்

மனித வரலாற்றில் இவை பலமுறை நிறுவப்பட்டு இருக்கின்றது. மனித வரலாறு எப்படி வர்க்கப் போராட்ட வரலாறோ, அப்படி அவை தவறான போராட்ட வரலாறாகி அவை தோற்கடிக்கப்பட்டுள்ளது. இது மனித வரலாறு. மக்களுக்காக மக்களால் நடாத்தப்படும் போராட்டம் என்பது மறுக்கப்பட்டு, அது சிலருக்கான சிலர் நலன் சார்ந்த போராட்டமாக மாறும் போது, அது தோற்கடிக்கப்படுகின்றது.

இது இன்று இலங்கையில் வரலாறாகின்றது. புலிகளின் தவறான வழிகாட்டலால் இது அரங்கேறுகின்றது. இது நிறுவப்படும் நாட்கள் எண்ணப்படுகின்றது. புலிகளின் பின் ஆயிரம் ஆயிரம் படைகள் இருக்கலாம், நவீன ஆயுத பலம் இருக்கலாம், இருந்தும் எந்தப் பிரயோசனமுமில்லை. ஒரு போராட்டத்தைச் சரியாக வழிநடத்தத் தவறுகின்ற போது, அது நிச்சயமாக தோற்கடிக்கப்படும்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் கூறுவது போல் ''எமது விடுதலை இயக்கத்தையும் எமது விடுதலைப் போராட்டத்தையும் சிங்களத் தேசம் எப்போதும் தவறாகவே புரிந்துகொள்கிறது. குறைத்தே மதிப்பீடுசெய்கிறது.'' என்பதால், இதை வென்று விட முடியாது. வெல்வதற்கும், எதிரியை தோற்கடிப்பதற்கும் சில அரசியல் நிபந்தனைகள் உண்டு.

தமிழ் மக்களின் நியாயமான போராட்டம் என்பது மட்டும், புலிகளின் போராட்டத்தை வெற்றியாக்கிவிடாது. புலிகளின் ஆயுதங்களும், ஆட்பலமும் வெற்றியைத் தீர்மானிப்பதில்லை. பொதுவாக இதில் எதிரி பலமாக இருந்தும், அவன் தோற்கடிக்கப்பட்ட வரலாறுகள் உண்டு. இதுவே எதிர்நிலையிலும் பொருந்தும். முதலில் இந்த உண்மையை புலிகள் சுயவிமர்சனமாக உணர மறுப்பது என்பது, அவர்களின் தோல்விக்கான முதல் படியாகும்.



படிப்பகம்

www.padippakam.com



யுத்தத்தை வெல்ல வேண்டும் என்றால், மக்களை வெல்வதுதான் யுத்தத்தின் முதல் வெற்றி. மக்களை தோற்கடித்துக்கொண்டு, எதிரியை வெல்வது என்பது நினைத்துக் கூட பார்க்க முடியாத ஒன்று. புலிகள் அதைத்தான் மீளமீளச் செய்கின்றனர். மக்களை உருட்டிமிரட்டி அடிமைப்படுத்தி வைத்துக் கொண்டு, யுத்தத்தை செய்வதா சரியான யுத்ததந்திரம்?

மக்கள் தமது யுத்தமாக ஒரு யுத்தத்தைக் கருதி அதை அவர்கள் நடத்தாத வரை, எந்த யுத்தத்தையும் வெல்லமுடியாது. மக்கள் யுத்தத்தை வெறுக்கும் போது, மக்கள் யுத்தத்தில் இருந்து தப்பியோடும் போது, தோல்வியும் தவிர்க்க முடியாது. மக்கள் மேல் யுத்தத்தை புலிகள் திணிக்கின்றனர். யுத்த அவலம் மக்களை யுத்தம் செய்யத் தூண்டும் என்ற புலிகளின் 30 வருட சித்தாந்த இராணுவ வழியும், ஒரு தலைப்பட்சமான பிரசாரமும் தோல்வி பெற்று வருகின்றது.

மக்கள் மேல் திணிக்கப்படும் யுத்த பின்னணியிலோ, மக்களிடம் எந்த இலட்சியமுமில்லை, உறுதியுமில்லை, வீரமுமில்லை. அதை எல்லாம் புலிகள் காவு கொண்டு விட்டனர். மக்கள் எல்லாவற்றையும் புலிகளிடம் இழந்து விட்டனர். மக்களோ நடைப்பிணம். அஞ்சி நடுங்கி வாழும் கோழைகளாக்கப்பட்டுள்ளனர். இப்படி இருப்பதே தமிழ் இனம் என்ற அளவுக்கு, அவர்கள் மேல் ஒடுக்குமுறை. இவர்களால், இப்படிப்பட்ட அச்சத்திலுறைந்த மக்களைக் கொண்டு, எப்படி வெற்றிகரமான யுத்தத்தை செய்ய முடியும்.

புலிகளே மக்களை செயலற்ற தலையாட்டும் பொம்மைகளாக்கி விட்டனர். அதுவே புலிகளை தோற்கடிக்கின்றது. இந்த நிலையில் தான் பிரபாகரன் ''எதையும் தாங்கும் இதயத்துடனும் இரும்பை யொத்த இலட்சிய உறுதியுடனும் அஞ்சாத வீரத்துடனும் எமது வீரர்கள் சமராடும் வரை, எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம்.'' என்கிறார். இப்படிச் சொல்ல வைப்பது எது? தொடர்ச்சியான தோல்வி, நம்பிக்கை இழந்த நிலையில் இதைச் சொல்ல வைக்கின்றது. மக்களை தோற்கடித்து, சிங்கள பேரினவாதத்தை வெல்ல வைக்கும் அரசியல் இப்படி சரணடைய வைக்கின்றது.

மக்களை புலிகள் தமது அதிகாரத்துக்கு உட்படுத்தி பொம்மை களாக்கி விட்டு, உருவேற்றப்பட்ட கீ கொடுக்கும் பொம்மைகளை நம்பித்தான் புலித் தலைவர் நிற்பதை சொல்லுகின்றார். இது புலிகள்



படிப்பகம்

www.padippakam.com



சந்திக்கும் நெருக்கடியின் உச்சத்தைக் காட்டுகின்றது. இதில் தோற்றால் குற்றவாளிகள் யார்? தான் அல்ல என்பதே, சொல்லவரும் செய்தியின் மற்றொரு சாரம்.

உண்மையில் சிங்களப் பேரினவாதம் புலிகளின் கழுத்தில் கையை வைக்கவில்லை. புலிகள்தான் தமது சொந்தக் கழுத்தில் கையை வைத்துள்ளனர். தற்கொலைக்கு ஒப்பான பாதையில், புலிகள் தமது தலையை தூக்கி கயிற்றில் மாட்டிவைத்துள்ளனர். இந்த நிலைமையின் தீவிரத்தையே, புலிகளின் மாவீரர்தின உரை பிரதிபலிக்கின்றது.

சொந்த அணிகளின் உறுதி, இலட்சியம், வீரம் என்று கூறுமளவுக்கு, புலிகளின் நெருக்கடி எதார்த்தமாகி அவர்கள் உணருகின்றனர். ஆனால் அது ஏன் தமக்கு ஏற்பட்டது என்பதை அவர்கள் சுயபரிசோதனை செய்வதில்லை. பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில்தான் ஏறுகின்றது. புலிகளும் மக்களும் கொண்டுள்ள உறவு தான், அனைத்தையும் தீர்மானிக்கின்றது. ஆனால் இதை புலிகள் நிராகரிக் கின்றனர்.

இன்று புலிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு என்பது, என்றுமில்லாத அளவுக்கு பிளவு ஆழமாகிச் செல்லுகின்றது. நினைத்துப் பார்க்க முடியாத மனித அவலத்தையும் சுமையையும், மக்கள் மேல் புலிகள் திணிக்கின்றனர். மக்கள் இதில் இருந்து விலகி ஓடவும், தப்பிச் செல்லவும் விரும்புகின்றனர். இது தான் யுத்த பூமியில் வாழும் மக்கள் ஒவொருவரினதும் நிலையாகும். பேரினவாதத்துக்கு அப்பால், புலிகளின் அரசியல் நடத்தைகளே இதை தீவிரமான எதிர் நிலைக்கு மாற்றியுள்ளது. மக்களோ புலிகளை கண்டு அஞ்சி நடுங்குகின்றனர்.

இப்படி மக்களைத் தலைமை தாங்கும் தலைமைப் பண்பே புலிகளிடம் கிடையாது. அதனிடம் ஒரு மனிதாபிமான, மக்கள் நலன் என, எதுவும் கிடையாது. ஒரு தலைமை ஒவ்வொரு மனிதனையும் வெல்லும் வகையில், இணங்கிச் செல்லும் வகையில் கையாளவேண்டிய பொறுப்புள்ள தலைமைப் பண்பை, புலிகள் நிராகரித்துவிட்டனர். மாறாக மக்களை உருட்டி மிரட்டி, அடிதடி மூலம் பணியவைத்தும், கொன்றும் மக்களுக்கு தலைமை தாங்க முடியாது. இதை செய்பவனுக்கு தலைமை தாங்க முடியும். அது தான் புலியில் நடக்கின்றது. இவனிடம் உண்மையான உணர்வுள்ள உறுதி, இலட்சியம், வீரம் இருப்பதில்லை.



படிப்பகம்

www.padippakam.com



இப்படித்தான் புலிகள் தோற்கடிக்கப்படுகின்றனர். தனது புதைகுழியை தானே வெட்டிக்கொண்டு செயல்படும் போது, தோல்வி தவிர்க்கப்பட முடியாது. இதில் இருந்து மீள்வதற்கு ஒரு வழிதான் உண்டு. அது புலிகள் தம்மைத் தாம் அரசியல் ரீதியாக, மக்களுக்காக சுயவிமர்சனம் செய்வதுதான். தம்மை முழுமையாக சுயவிமர்சனம் செய்தால் மட்டும் தான், புலிகள் தமது தோல்வியில் இருந்து தப்ப முடியும். உருவேற்பட்ட புலி உறுப்பினரின் உறுதி, இலட்சியம், வீரம் இதைப் பாதுகாக்காது.

இதுவே பேரினவாதத்தின் வெற்றியாக மாறுவதை தவிர வேறு வழியில்லை. இப்படி நிலைமை இருக்க, அற்புதன் எம்மை மற்றொரு கோணத்தில் பார்க்க கோருகின்றார். ''போர் களத்தில் உருமாற்றி யுள்ள சமூக வர்க்க நிலை காரணங்களைக் கருத்தில் எடுக்க வேண்டும். புலிகளின் உள் நிகழ்ந்துள்ள வர்க்க நிலைப்பட்ட மாற்றங்களையும் இரயாகரன் கண்டு கொள்ள வேண்டும். புலிகள் என்னும் இயக்கம் எப்போதுமே ஒரே நிலையில் இருக்கிறது என்பது ஆரோக்கியமான அறிவியற் பார்வை கிடையாது.'' என்கின்றார். நீண்ட துயரமிக்க வகையில் மக்களை அதில் இருந்து அன்னியமாக்கி அனுங்குபிடியாகவே ஒருதலைப்பட்சமாக நடத்தப்படும் யுத்தம், பல விளைவுகளை உருவாக்குகின்றது. வர்க்கம், சாதி, பால், இனம், பிரதேசவாதம் என்று பல தளத்தில், பல சிதைவுகளையும், ஏன் இறுக்கத்தையும் கூட உருவாக்கியுள்ளது. இந்த எதார்த்தம் எழுப்பும் உண்மைகளை நாம் மறுக்கவில்லை.

பொதுவாக அனைவரும் அறிய நிலவும் இந்த உண்மைகளை நாம் எப்படி பார்க்கின்றோம் என்பதுக்கு அப்பால், புலிகள் எப்படிப் பார்க்கின்றனர் என்பது தான் நிலைமையினை தெளிவாக்கும். சமூக முரண்பாடுகளை இணக்கமாக புலிகள் கையாளுகின்றனரா? முஸ்லிம் மக்கள் பற்றி புலிகளின் நிலையில் என்ன சுயவிமர்சனத்தை செய்துள்ளனர். வடக்கு கிழக்காக பிரிந்து போய்விட்ட பிரதேசவாத யாழ் மையவாதம் மீது, புலிகள் என்ன சுயவிமர்சனத்தை செய்துள்ளனர்? ஒடுக்கப்பட்ட சாதியத்தை சார்ந்தா புலிகள் உள்ளனர்? ஒடுக்கப்பட்ட வர்க்கங்களைச் சார்ந்தா புலிகள் உள்ளனர்?

இது இல்லை என்பதும், இதை தீவிரமாக மறுப்பவர்களாக புலிகள் உள்ளனர். இதனால்தான் மக்கள் ஒடுக்கப்படுகின்றனர். மக்கள் போராட்டம் என்பது, ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவைச் சார்ந்து நிற்பதன் மூலம்தான் சாத்தியம். ஒடுக்கப்பட்ட மக்களை சார்ந்து நிற்காமை, மக்கள் போராட்டமாக மாற்ற முடியவில்லை. இதைதான் நாங்கள் கோருகின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com



எம்மிடம் அற்புதன் இவற்றைப் பார்க்கக் கோருவது என்பது தவறானது. புலித் தலைமையை நோக்கி இவற்றை எழுப்புங்கள். புலிகள் தம்மை சுயவிமர்சனம் செய்தாக வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள். அதை செய்யுங்கள், அதைக் கோருங்கள். அது மட்டும் தான், தமிழ் மக்களின் உண்மையான தேசியத்தை உயிருடன் பாதுகாக்கும்.

இங்கு நாம் சுயவிமர்சனம் என்கின்ற போது, பாட்டாளி வர்க்க நிலைக்கு அவர்கள் வரவேண்டும் என்று நாம் கூறவில்லை. குறைந்தபட்சம் தேசிய முதலாளித்துவ நிலைக்கு, தம்மை சுயவிமர்சனம் செய்தாக வேண்டும். தேசியத்தை உண்மையாக தமது கையில் எடுக்கும் நிலைக்கு வரவேண்டும். தேசியத்துக்கு என்று இரண்டு கூறுகள் உண்டு.

1. பாட்டாளி வர்க்க சர்வதேசிய நிலை
2. தேசிய முதலாளித்துவத்தின் தேசிய நிலை.

குறைந்தபட்சம் இந்த இரண்டாவதை புலிகள் சுயவிமர்சனம் மூலம் வந்தடைவதன் மூலம்தான், புலிகள் தம்மையே காப்பாற்ற முடியும். இதன் மூலம் தேசிய முதலாளிகள் ஒடுக்கப்பட்ட வர்க்கப் பிரிவுகளை உள்ளடக்கிய, ஒரு இணங்கிய போராட்டத்தை முன்னெடுப்பது அவசியம். இது மறுக்கப்படும் போது தேசியமே மறுக்கபட்டு, போராட்டம் தோற்கடிக்கப்படும்.

இந்த சுயவிமர்சனம் என்பது அரசியல் ரீதியானது. மக்களின் நலனுக்கு உட்பட்டதே. புலியெதிர்ப்பு ராகவன் கூறுவது போன்ற மக்கள் விரோத எதிர் புரட்சிக்கல்ல. ராகவன் புலிகளிடம் கோருவது சுயவிமர்சனமல்ல, அது எதிர்ப்புரட்சி. அதை அவர் ''.. மற்றைய அரசியல் கட்சிகள் அது தேசியக் கூட்டணியாக இருந்தாலென்ன முஸ்லிம் காங்கிரசாக இருந்தாலென்ன ஈபிடிபி ஆக இருந்தாலென்ன அவர்களது அரசியலை சுயாதீனமாக செய்ய வழி விட வேண்டும். விடுதலை புலிகளுக்கு தங்களது அரசியல் பலத்தில் நம்பிக்கை இருந்தால் மற்றைய அரசியல் கட்சிகளை பற்றி கவலைப்பட தேவையில்லை. சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை பெற விடுதலை புலிகள் இவ்வாறான விட்டு கொடுப்புகளை செய்தால் சர்வதேச சமூகத்தின் கவனம் இலங்கை அரசின் அத்துமீறல்கள் பக்கம் நிச்சயம் திரும்பும்.'' என்கின்றார். இது எதிர்ப்புரட்சி.

ராகவனின் இந்த புலியெதிர்ப்பு நிலையுடன் நாம் தெளிவாகவே முரண்படுகின்றோம். நாங்கள் சுயவிமர்சனம் செய்யக் கோருவது, மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை அங்கீகரிக்கக்



படிப்பகம்

www.padippakam.com



கோரித்தான். இன்னுமொரு புலி அரசியலை செய்யும், அவர்களின் ஒடுக்குமுறை உரிமையை அல்ல. அவர்களும் புலியைப் போல், மக்களின் உரிமையை அங்கீகரிப்பவர்கள் அல்ல. புலிகள் அதைச் செய்தால், அதுபோல் அவர்கள் செய்தால் அது வேறு.

புலியெதிர்ப்பு ராகவன் அரசியல் கோருவது சுயவிமர்சனமல்ல. தமிழ் மக்களை தமது பங்குக்கு வேட்டையாட, உரிமையை புலியிடம் கோருவது தான். நாங்கள் கோருவது, மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை அங்கீகரிக்கும் படிதான். இதையே சுயவிமர்சனம் செய்யக் கோருகின்றோம். இதைவிடுத்து பேரினவாத சிங்கள அரசுடன் கூடி தமிழ் மக்களை ஒடுக்கும் குழுக்களின் உரிமைகளை யல்ல.

ஏகாதிபத்திய நன்மதிப்புகளை அல்ல. மக்களுக்கு எதிரான ஏகாதி பத்தியத்துக்கு எதிரான போராட்டம் அவசியமானது. புலியெதிர்ப்பு ராகவனுக்கு ''சர்வதேச சமூகத்தின் நம்பிக்கை'' என்பதற்கு, அவரின் புலியெதிர்ப்பு ஏகாதிபத்திய அரசியலே வழிகாட்டுகின்றது. மாறாக ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராடி, உலக மக்களின் நம்பிக்கை யை பெற வேண்டும். இதை புலிகள் சுயவிமர்சனமாக செய்து போராடாத வரை, போராட்டத்தின் தோல்வி என்பது தவிர்க்க முடியாதது.

இவை எவற்றையும் செய்யாது புலிகளின் தலைவரின் உரை அமைகின்றது. தமது, அதாவது புலிகளின் ".. சோகமான நிகழ்வைச் சிங்களத் தேசம் வெற்றிவிழாவாகக் கொண்டாடி மகிழ்கிறது.'' என்பதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை நிவர்த்தி செய்ய சுயவிமர்சனத்தை செய்தாக வேண்டும். இல்லாது ''இதன் பாரதூரமான விளைவுகளை அது விரைவில் சந்தித்தே ஆகவேண்டிவரும்.'' என்று கூறுவதால், மேலும் போராட்டம் தோற்கடிக்கப்படும். பாரதூரமான விளைவுகள் என்பது, புலிகள் பாணியில் சிங்கள மக்கள் மேலான கண்மூடித்தனமான தாக்குதலைத்தான் புலிகள் அர்த்தப்படுத்துகின்றனர். இது மேலும் போராட்டத்தை தோற்கடிக்கும்.

இப்படி தவறை அர்த்தப்படுத்தி அதை நடைமுறைப்படுத்திக்கொண்டு ''எம்மக்களின் அன்றாடச் ஜீவியம் சீரழிந்த போதும் எமக்காக எந்தவொரு நாடோ, எந்தவோர் அமைப்போ குரல் கொடுக்கவில்லை. ஆதரவோ அனுதாபமோ தெரிவிக்கவில்லை. உலகமே கண்ணை மூடிக்கொண்டு, பாராமுகமாகச் செயற்படுகிறது.'' என்பது, தமிழ் மக்களின் வாழ்வுக்கான, அவர்களின் மீட்சிக்கான அரசியல்



படிப்பகம்

www.padippakam.com



பாதையல்ல. மீட்சிக்கான பாதை மக்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதும், அவர்கள் சார்ந்து நின்று போராடுவதும் தான். மக்கள் தமது விடுதலைக்காக, தாம் போராடுவது தான். இதை நோக்கி புலிகள் தம்மை சுயவிமர்சனம் செய்தல்தான், அவர்கள் முன்னுள்ள ஒரேயொரு மாற்று அரசியல் வழியாகும்.

இல்லாது ''எதையும் தாங்கும் இதயத்துடனும் இரும்பையொத்த இலட்சிய உறுதியுடனும் அஞ்சாத வீரத்துடனும் எமது வீரர்கள் சமராடும் வரை, எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம்.'' என்றால், இன்னும் 10 ஆயிரம் உயிர்களைப் பலிகொடுத்து, புலிகள் தமது பாசிச அரசியல் வாழ்வையே முடிப்பர்.

***03.12.2007***



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேசியம் என்பது வேறு, புலித்தேசியம் என்பது வேறு

புலியெதிர்ப்போ இதை ஒன்றாகவே பார்க்கின்றது. புலிகளும் கூட இதை ஒன்றாகவே காட்டுகின்றனர். மார்க்சியவாதிகள் இதை வேறுவேறாக காண்கின்றனர். இதனால் மட்டும்தான், மார்க்சிய வாதிகள் மக்களைச் சார்ந்து நிற்க முடிகின்றது. தனிப்பட்ட நான் என்ற தனிமனித தனமல்ல, மக்களைச் சார்ந்து நிற்பது. இரண்டும் வேறு என்ற அடிப்படையிலான அரசியல் அம்சம் தான், மக்களைப் பற்றி எம்மை பேச வைக்கின்றது.

இரண்டும் ஒன்று என்ற அம்சம், மக்களைப்பற்றி சிந்திக்க வைப்பதில்லை. இதுவே எதார்த்தமான உண்மை. தேசியத்தை புலிகள் ஊடாகப் பார்க்கின்ற புலியெதிர்ப்பு வாதம், இரண்டும் பிரதான மக்கள் விரோத நிலையை இயல்பாகவே எடுக்கின்றது.

1. மக்களின் உண்மையான தேசியத்தை முன்னெடுக்க அது தானாகவே மறுக்கின்றது.

2. மக்களையும் புலிகளையும் ஒன்றாக்கி, மக்களை எதிர் நிலைக்கு தள்ளிவிடுகின்றது.

இதற்குள்தான் இன்று புலியெதிர்ப்பு அரசியல் உள்ளது. இல்லையென்று யாராலும் சொல்ல முடியாது, நிறுவவும் முடியாது.

ராகவன் பேசும் புலியெதிர்ப்பு அரசியலைப் பாருங்கள் ‘‘தமிழ் சிங்கள தேசியவாதம் இரண்டும் அதன் அரசியல் தளத்தில் ஒன்றல்ல. ஆனால் கருத்தியல் நோக்கில் ஒன்றாக இருக்கிறது. சிங்கள தேசியவாத கற்பிதத்தின் அதே தளத்தில்தான் தமிழ் தேசியவாதமும் கட்டப்பட்டிருக்கிறது. தேசியம் கற்பிதம் என்பதற்கான கருத்து தேசிய இனமாக கற்பனை பண்ணுவதே. தமிழன் என்பதற்கான அடையாளம்



படிப்பகம்

www.padippakam.com



என்பது என்ன என்பதை ஆழ்ந்துநோக்கினால் அது புரியும். சாதிய படிமுறையை கற்பிதம் என கூறுவது அபத்தம். சாதி உருவாக்கப் பட்டது. ஆனால் அது கற்பிதமல்ல.'' என்கின்றார்.

''அரசியல் தளத்தில் ஒன்றல்ல. ஆனால் கருத்தியல் நோக்கில் ஒன்றாக இருக்கிறது'' இது என்ன? கருத்துக்கு வெளியில் அரசியல், அரசியலுக்கு வெளியில் கருத்து. அபத்தத்திலும் அபத்தம். இதையே திரோக்கியம் பேசும் தேசம்நெற் சேனனும் சொன்னார்.

என்ன அரசியல் ஒற்றுமை. இதையே சேனன் ராகவனுடன் உடன்படுவதாக கூறினார். ''சிங்கள தேசியவாத கற்பிதத்தின் அதே தளத்தில் தான் தமிழ் தேசியவாதமும் கட்டப்பட்டிருக்கிறது'' என்பது, தேசியத்தை கொச்சைப்படுத்துவது. இங்கு சிங்கள தேசியம் உருவாக் கப்படவில்லை. சிங்கள பேரினவாதம்தான் உருவாக்கப்பட்டது. கற்பித்தல் என்ற வார்த்தையே தவறானது. இல்லாத ஒன்றை கற்பித்தால் மட்டும்தான், அது கற்பிதம். சிங்கள பேரினவாதம் கற்பிக்கப்படவில்லை, மாறாக அது சமூக பொருளாதார பண்பாட்டு கூறுகளாகவே எதார்த்தத்தில் உள்ளது. இதில் இருந்து முற்றாகவே சிங்கள தேசியம் வேறுபட்டது. சிங்கள தேசியம் என்பது, தமிழ் தேசியத்துக்கு எதிரானதாக இருப்பதில்லை. மாறாக அது இலங்கை தேசியமாக பரிணாமிக்கும்.

அது உள்ளடக்க ரீதியாக ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்ட தேசியமாகவே அமையும். உண்மையான தேசியம், தமிழ் சிங்கள ஐக்கியத்தைக் கொண்டுவரும். சரியான தமிழ் தேசியம் கூட, சிங்கள மக்களின் உரிமைகளையும் அங்கீகரித்து தனது போராட்டத்தை அவர்களுடன் சேர்ந்து வலுப்படுத்தும். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஒரு நிலையில்தான், இனங்களுக்கு இடையில் ஐக்கியம் என்பது இயல்பானதாக அமையும். இல்லாத தளத்தில், அங்கு இன ஒடுக்குமுறைதான் இருக்கும்.

''தமிழ்த் தேசியவாதமும் கட்டப்பட்டிருக்கிறது. தேசியம் கற்பிதம் என்பதற்கான கருத்து தேசிய இனமாக கற்பனை பண்ணுவதே'' என்பதே தவறானது. சிங்கள பேரினவாதம், தமிழ் தேசிய வாதத்தை உருவாக்கவில்லை. மாறாக தமிழ் இனம் ஒரு தேசமாக, தேசியமாக இருந்தனர், இருக்கின்றனர் என்பதே உண்மை. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக இருந்தனர். ராகவன் கூறுவது போல் ''தேசிய இனமாக கற்பனை பண்ணுவதே'' என்பது, இல்லாத பொய்மைகள் மேல் அல்ல. வெறும் கற்பனையாக, எதுவுமற்ற பொய்மைகள் அல்ல. மாறாக தமிழ் இனம் தேசமாக, தேசிய இனமாக இருந்தனர்,



படிப்பகம்

www.padippakam.com



இருக்கின்றனர் என்பதே உண்மை. ஒரு நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் சேர்ந்து இருக்கமுடியும் என்ற எல்லைக்குள் வாழ்ந்தவர்கள் தான், தமிழ் மக்கள். இப்படி இணங்கி வாழமுடியாதவாறு சிங்கள பேரினவாதம் நிர்ப்பந்தித்த போதுதான், சிறுபான்மை தேசியவாதமாக ஒரு போராட்டம் மேலெழுகின்றது. இது கற்பிதமாக கட்டமைக்கப் பட்டதல்ல. குறிப்பாக பிரபாகரனின் கற்பனையான கற்பித மல்ல. இதுபோல் சிறுபான்மையினத்தின் கற்பனையோ, கற்பிதமோ அல்ல. மாறாக ஒடுக்குமுறைக்கு எதிரான மக்களின் போராட்டம்.

ராகவன் கூறுவதைப் பாருங்கள் ''சாதிய படிமுறையை கற்பிதம் என கூறுவது அபத்தம். சாதி உருவாக்கப்பட்டது. ஆனால் அது கற்பிதமல்ல.'' இந்த வாதம் புலியெதிர்ப்பின் மொத்த அரசியல் தளத்தையும், நகைச்சுவையாக்கி விடுகின்றது. தேசியம் கற்பிதம் என்றால், சாதியமும் கற்பிதம்தான். சாதியம் உருவாக்கப்பட்டது என்றால், தேசியமும் அப்படி உருவாக்கப்பட்டதுதான். சாதியம் கற்பிக்காது உருவாக்கப்பட்டது என்றால், சாதியத்தை பாதுகாக்கின்ற சராத்தையே அரசியல் ரீதியாக பிரதிபலிக்கின்றது.

இங்கு கற்பிதம் என்பதும், உருவாக்கப்பட்டது என்பதும், அரசியல் ரீதியாக கேலிக்குரியது. யாரும் எதையும் கற்பிக்கவோ, உருவாக்கவோ முடியாது. மாறாக அவை பொருள் வகைப்பட்ட சமூக உறவுகளால் ஆனது. இது திடீரென யாரும் உருவாக்கவோ, கற்பிக்கவோ முடியாது. அது போல் நீக்கவும் முடியாது.

சாதியம் என்ற பொருளாதார உறவுகள் உருவான பின்பு தான், அது சாதியமாகின்றது. தேசியம் என்ற பொருளாதார உறவுகள் உருவான பின்புதான், அது தேசியமாகின்றது. இது இயல்பான சமூக பொருளாதார முரண்பட்ட சமூக ஒட்டத்தில் உருவாகின்றது.

இதை வெற்றிடத்தில் கற்பிக்கவும் முடியாது. இதை வெற்றிடத்தில் உருவாக்கவும் முடியாது.

***03.12.2007***



படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்த் தேசியம் என்பது தமிழன் ஒருவன் ஆளும் போராட்டமல்ல

தேசியம் என்பது தமிழன் ஒருவன் ஆளும் போராட்டமாக வரையறுப்பதுதான், போராட்டம் பற்றி புலி மற்றும் புலியெதிர்ப்பு தரப்பின் மனிதவிரோத கூறுகளுக்கான அடிப்படையாக உள்ளது. இதனாலேயே மனிதர்கள் தங்களைத்தாமே ஆள்வதற்கும், தமது சமூகத் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட போராட்டமாக தேசியத்தை காண மறுப்பதும், இன்று அரசியல் எதார்த்தமாக வுள்ளது.

இதற்கேற்ப தேசியத்தை சிதைத்துவிடுகின்றனர். பின் போராடுவதாக காட்டுவது, அதை நியாயப்படுத்துவது, தேசியத்தை மறுத்தல் மூலம் தேசியத்தைக் கொச்சைப்படுத்துவது, என்ற போக்குகள் நிகழ்கின்றது. இதனடிப்படையில் புலியெதிர்ப்பு ராகவன் தேசியத்தை எதிர்க்கக் கூறுவதைப் பாருங்கள். ''நாடளாவிய தேசியம் தனது பிரஜைகளை தவிர மற்றவரை அன்னியராக்குகிறது. இன ரீதியான தேசியம் இன்னுமொரு படி மேலே போய் தனது இன வரைவிலக்கணத்துள் பொருந்தாத அனைவரையும் அன்னியராக்குகிறது.'' சுத்தமான அரசியல் சூனியவாதம். தேசியம் அல்லாத, தேசிய பிரஜைகள் யார் இருக்க முடியும். ஒரு நாட்டின் தேசிய பிரஜைகள் என்பது, அந்த மண்ணை தனது மண்ணாக கொண்ட அனைவரையும் குறிக்கின்றது. இது எப்படி இல்லாத ஒன்றை அன்னியமாகும். கற்பனையில் யாரும் அதை உருவாக்கி, அன்னியமாக்கிவிட முடியாது.

தேசியம் கொண்டுள்ள சமூகக் கூறுகளை மறுக்கின்ற போதுதான், சமூகப் பிரிவுகள் அன்னியமாகின்றன. இது தேசியத்தின் குற்றமல்ல. இதை முன்னனெடுக்கின்ற சமூகப்பிரிவுகளை உள்ளடக்கிய ஆதிக்க வர்க்கங்களின் குற்றமாகும்.

தேசியத்தின் சமூகத் தன்மையை மறுக்கும் போது, அந்த தேசியம் பிற்போக்கு கூறாகிவிடுகின்றது. தேசியம் என்பது சமூகக் கூறாக,



படிப்பகம்

www.padippakam.com



மனித வாழ்வைச் சுற்றி இயங்குகின்றது. சமூகத்தில் நிலவும் ஒவ்வொரு ஒடுக்குமுறைகளையும் களையாது, தேசம் சரியான தேசியப் போராட்டத்தை உருவாக்காது. இதற்கு மேல் தேசியத்துக்கு மாற்று விளக்கம் கிடையாது. சமூகத்தில் நிலவும் அனைத்து ஒடுக்கு முறையையும், தேசியம் களையப் போராட வேண்டும். இதுவல்லாத எதுவும் தேசியமல்ல.

இதற்குப் புறம்பான தேசம், தேசியம் பற்றி வரையறைகள், உள்ளடக்க ரீதியாக பிற்போக்கானது. அது தனது போராட்டத்தை மக்களைச் சார்ந்து எடுத்துச் செல்லமுடியாது. அதுவே மக்கள் மேலான ஒடுக்குமுறை கொண்ட ஒன்றாக பரிணமிக்கின்றது. ஒற்றைப் பரிணாமத்தில் தேசியத்தை காட்டி, அதையே மறுப்பது என்பது, அதற்குரிய முற்போக்கு சமூக பாத்திரத்தை மறுத்தலாகும். சமூகம் சார்ந்த எந்தப் போராட்டமும், முற்போக்கான சமூகக் கூறுகளா லானது.

இதைக் காணவிடாது அதை திரிப்பது என்பதே புலியெதிர்ப்பு அரசியல் சாரம். இது தேசியத்தை புலியில் இருந்து காட்டுகின்ற நயவஞ்சகத் தனமாகும். புலிக்கு வெளியில் வேறு தேசியம் இருக்க முடியாது என்று புலியெதிர்ப்பு, புலி அரசியல்தான் இதைக் கூறுகின்றது.

''தேசியவாதம் ஒரு புறம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை ஒற்றைப் பரிமாண அடையாளத்துள் குறுக்குகிறது. மறுபுறம் சமூக யதார்த்தமாக இருக்கும் வர்க்க சாதி ஏற்ற தாழ்வுகளை கலாசார வேறுபாடுகளை பிரதேச வேறுபாடுகளை மூடி மறைக்கப் பார்க்கிறது.'' இதை புலிகள் செய்வதால், புலிகளாகவே தேசியத்தை சிந்திக்கும் ராகவனாலும் மீள கூற முடிகின்றது.

''சமூக யதார்த்தமாக இருக்கும் வர்க்க சாதி ஏற்ற தாழ்வுகளை கலாசார வேறுபாடுகளை பிரதேச வேறுபாடுகளை மூடி மறை'' க்காத தேசியம் இருக்கமுடியாது என்று கூறுவது தான், புலித் தேசியம். அதுபோல்தான் புலியெதிர்ப்பு தேசியமும் கூறுகின்றது. என்ன அரசியல் ஒற்றுமை. வர்க்க சாதி ஏற்ற தாழ்வுகளை கலாசார வேறுபாடுகளை பிரதேச வேறுபாடுகளை களையக் கோரி போராட்டம், இந்த மண்ணில் நடந்துள்ளது. இதை வசதியாக வசதி கருதி மூடிமறைப்பது தான் புலியெதிர்ப்பு அரசியல். உண்மையில் இதற்காக போராடியவர்கள் நினைவுகளைக் கூட, இவர்கள் அங்கீகரிப்பது கிடையாது. அந்தளவுக்கு இதை களைவதற்கு எதிரானவர்கள் இவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் அமைதி வேண்டி தீர்வுகளைத் தேடும் இந்த கனவான்கள், இதை களைவதை தமது தீர்வுத் திட்டத்தில் சேர்க்கவே மறுக்கின்றனர். இங்கு இவர்களே அதை மூடி மறைக்கின்றனர். வர்க்க சாதி ஏற்ற தாழ்வுகளை கலாசார வேறுபாடுகளை பிரதேச வேறுபாடுகளை களையும் தீர்வுத் திட்டத்தை, இவர்கள் முன்வைப்பதில்லை. அதை களைய போராடுவது கிடையாது. நீங்களே அதை மறுக்கும் போது, புலிகள் போன்ற பாசிச இயக்கங்கள் எந்த மாத்திரத்தில் இதைக் களைந்துவிடும்.

மற்றவனுக்கு சொல்ல முன் உங்கள் வேலைத்திட்டம் இதை எப்படி களைய முனைகின்றது என்றல்லவா வைக்க வேண்டும். தேசியம் அதை சமூக வேறுபாடுகளை களையாது என்றால், எதுதான் அந்த வேறுபாடுகளைக் களையும். உங்கள் அரசியல் தீர்வுகளும் கூட அதை நிராகரிக்கின்றது. தேசியத்தை எதிர்க்க இப்படி பூச்சாண்டி காட்டுகின்றீர்கள்.

உண்மையில் எங்கும் இதை மூடிமறைத்து பாதுகாக்க விரும்புவது, அது கொண்டுள்ள வர்க்க அரசியல் தான். அது புலியாக இருந்தால் என்ன, புலியெதிர்ப்பாக இருந்தால் என்ன, இரண்டும் ஒன்றுதான். ''சமூக யதார்த்தமாக இருக்கும் வர்க்க சாதி ஏற்ற தாழ்வுகளை கலாசார வேறுபாடுகளை பிரதேச வேறுபாடுகளை மூடி மறை''த்து பாதுகாப்பதுதான். இது புலித்தேசியத்தின் கூறு மட்டுமல்ல, புலியெதிர்ப்பு தேசிய மறுப்பின் கூறும் கூட.

பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் ''சமூக யதார்த்தமாக இருக்கும் வர்க்க சாதி ஏற்ற தாழ்வுகளை கலாசார வேறுபாடுகளை பிரதேச வேறுபாடுகளை'' களைய போராடுகின்றது. இதை தேசியத்திலும் சரி, தீர்விலும் சரி இதையே தனது வேலைத் திட்டமாக கொள்கின்றது.

***04.12.2007***



படிப்பகம்

www.padippakam.com



# புலிகளும் ஆயுதத்தைக் கீழே போட்டால்!

முகம் தெரியாத தோழர் ஒருவர் எம்மை நோக்கி எழுப்பிய கேள்விகளும் பதில்களும், அரசியல் முக்கியத்துவம் கருதி பிரசுரிக்கின்றோம்.

1. புலிகளும் ஆயுதத்தை கீழே போட்டால் என்னவாகும்? புலிகளுக்கு பதிலாக தங்களது தீர்வு என்ன?

2. புலிகள் வழி தவறானது என சொன்னால் எனது நண்பன் கேட்கிறான் சரி வேறு என்ன தீர்வு என்று? இந்த கேள்விக்கு என்ன பதில் நான் அளிக்க?

3. புலிகளின் பாசிசம் என்ற விசயத்தை பேச ஆரம்பித்ததும் இந்த கேள்வி வந்தால் என்ன பதில் சொல்லலாம்?

இவைகள்தான் கேள்விகள். ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய கேள்விகள். புலிகளை விமர்சிக்கும் போது அவர்களை ஆதரிப்போர், தமது அரசியலற்ற சொந்த குருட்டுத்தனத்தை அடிப்படையாகக் கொண்டு திருப்பியடிக்கும் தர்க்கமும் இதுவேயாகும்.

புலிகள் ஆயுதத்தை கீழே போட்டால் என்ன நடக்கும்? இதை நாம் இரண்டு கோணத்தில் பார்க்கமுடியும்.

1. புலிகள் ஆயுதத்தை கீழே போட்டால் தமிழ் மக்கள் என்ன செய்வார்கள்? மக்கள் தமது கடந்தகால அவலங்களுக்காக புலிகளை பழிவாங்குவார்கள். இங்கு சாதாரண மக்களைக் குறிப்பிடுகின்றேனே ஒழிய, மக்களுக்கு அரசியல் ரீதியாக துரோகமிழைத்த எந்த துரோக குழுக்களையும் மக்களாக குறிப்பிடவில்லை. புலிகள் தமது வரலாற்றில் மக்களுக்கு இழைத்த கொடூரங்கள், கொடுமைகளை அடிப்படையாக கொண்டே இந்த எதிர்வினைகள் அமையும்.



படிப்பகம்

www.padippakam.com



அதே நேரம் இவற்றைக் கருவாக கொண்ட, உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு, எழுச்சி பெற்ற மக்கள் இலக்கியங்கள் உருவாகும். புலிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு என்பது, பகை முரண்பாடு தான். மக்களுக்கும் புலிக்கும் இடையிலான உறவுகள், துப்பாக்கி முனையில்தான் நீடிக்கின்றது. துப்பாக்கிகள் இன்றி புலிகள் என்ற அமைப்பு உயிர் வாழவே முடியாத அரசியல் அவலம். அவர்களிடம் எந்த அரசியல் மொழியும் கிடையாது, பாசிசம் ஒன்றேயுள்ளது.

2. புலிகள் ஆயுதத்தை கீழே போட்டால் தமிழ் மக்களின் நிலை என்ன? சிங்களப் பேரினவாதம் புலிகளின் கீழ் உள்ள மக்களையும், தனது பேரினவாதப் போக்கில் அடிமைப்படுத்தும். ஆனால் அதை மக்கள் அரசியல் ரீதியாக புரிந்து கொள்ளும் ஆற்றல் அற்றவராக இருப்பர். அதைத்தான் புலிகள் ஏற்படுத்தி வைத்துள்ளனர். யாழ்ப்பாணம் முதல் கொழும்பு வரை வாழும் தமிழ் மக்களின் நிலைமையே, எங்கும் பொதுவில் ஏற்படும். இராணுவ கெடுபிடி படிப்படியாக குறையும்.

தமிழரின் உரிமைகள் எதுவும் வழங்கப்படமாட்டாது. தமிழ் மக்கள் அதைக் கோரப்போவதுமில்லை. தமிழரின் உரிமைகள் என அனைத்தையும் புலிகளே அரசியல் ரீதியாக அழித்துவிட்ட நிலையில், தமிழரின் உரிமை என்னவென்று தெரியாத பாசிச அறிவே தமிழரின் அறிவாகிவிட்டது. தமிழ் மக்கள் தமது சொந்த வாழ்வியல் உரிமைகளையே, புலிகளிடம் இழந்துவிட்டனர். அவையே எதுவென தெரியாத அடிமை நிலையில், பேரினவாதத்திடம் எதைத்தான் புதிதாக கோரமுடியும். ஒருபுறம் தமிழ் மக்களின் உரிமைகள் அனைத்தையும் பறித்துவிட்ட புலிகள், மறுபுறமாக அதை பேரினவாதத்திடமா கோர முடியுமா?

புலிகள் கோரும் உரிமை என்பது அஞ்சி உயிர்வாழ்வது, தமிழன் தமிழனை ஆளுதல் தான். அதாவது புலிகள் தமிழ் மக்களை அடக்கி ஆளுதல். தமிழ் மக்களின் முன்னுள்ள புதிர், ஏன் தமிழன் தன்னை அடக்கி ஆள வேண்டும் என்பதுவே. அரசியல் ரீதியாக தமிழ் மக்களால் புரிந்துகொள்ள முடியாத ஒன்று. மக்களை அரசியல் ரீதியாக புலிகள் தம் பின்னால் அணிதிரட்டவில்லை. அரசியல் இருந்தால் அல்லவா அது நடக்கும். புலிகள் ஆயுத முனையில், பாசிசத்தை அடிப்படையாக கொண்டு மக்களை அடிமைப்படுத்தி வைத்துள்ளனர். மக்கள் புலிகளில் இருந்து அன்னியமாகி, அதுவே இன்று பகை முரண்பாடாகிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com



இதனால் புலிகள் ஆயுதத்தை கீழே போடமாட்டார்கள். மக்களைக் கண்டு சதா அஞ்சும் புலிகள், ஆயுதங்களின் மேல் காதல் கொண்ட மனநோயாளராகிவிட்டனர். ஆயுதமே அனைத்துமாகிவிட்டது. அதன் ஆகக் கூடிய உணர்வு சார்ந்த அதன் மொழியோ (பெண்ணைக் குறிக்கும் கெட்ட வார்த்தைகள்) தூசணமாகும். இன்று பணத்தைக் கொண்டு உலகெங்கும் கோலாட்டம் போடுகின்றனர்.

ஆயுதத்தைக் கீழே போடுதல் என்பது புலிகளின் தற்கொலைக்கு ஒப்பானதே ஒழிய, அது மக்களின் அரசியல் தற்கொலையல்ல.

அரசியல் ரீதியாக மக்களை அடக்கியாளுவதை ரசிக்கும் அதிகார வெறிபிடித்தவர்கள், ஆயுதத்தை தானாக ஒருநாளும் கீழே போடுவது கிடையாது. போட்டுவிட்டால் என்று விவாதிப்பது, விமர்சனத்தை குறுக்கு வழியில் தவிர்ப்பதற்காகத்தான்.

ஆயுதத்தை தானாக கீழே போடாத ஒரு கற்பனை விடயத்தைப் பற்றி விவாதிப்பதன் நோக்கம், பாசிசத்தை நியாயப்படுத்தத்தான். ஏன் புலிகளின் பாசிசத்தை நிறுத்தக் கோரி விமர்சிக்காமல், விமர்சிக்கின்றவர்களைப் பார்த்து ஆயுதத்தை கீழே போட்டால் என்று விவாதிக்கின்றனர். இது உண்மையில் மக்களின் மேலான பாசிச புலி நடத்தைகளை தக்கவைப்பதாகும். மாற்றத்தை விரும்பாத, மக்களின் உரிமைகளை அங்கீகரிக்க மறுக்கும் கற்பனையான எடுகோளில் நடத்தும் விதண்டாவாதம்.

மக்களைச் சுரண்டித் தின்னும் அதிகார வர்க்கங்கள், தமது சொந்த வர்க்க நலனுடன்தான் அனைத்தையும் கையாளும். வர்க்க நலன்களை அடிப்படையாகக் கொண்டுதான், பாசிச சக்திகள் இயங்கும். இதற்கு இசைவாகத்தான் ஆயுதத்தை பற்றிய முடிவை எடுக்கும்.

பதிலாக என்ன தீர்வு? தீர்வு எப்போதும் எங்கும் மக்களின் நலனை அடிப்படையாக கொண்ட மாற்றுப் போராட்டம்தான். மக்களுக்கு வெளியில் விடுதலைப் போராட்டம் என்பது பொய்யானது. மக்கள் தமக்காக, தமது சொந்த விடுதலைக்காக போராடுவதுதான் போராட்டம். இதை மறுக்கும் புலிகள் தமது ஆயுதத்தை கீழே போட்டால், மக்கள் தமது விடுதலையின் ஒரு படியை எட்டுவர். புலிகளின் கையில் உள்ள ஆயுதம் தான், மக்களின் உண்மையான விடுதலைப் போராட்டத்தை தடுக்கின்றது என்பது உண்மையல்லவா. புலிகளின் ஆயுதம் சிங்கள பேரினவாதத்தை புலிகளின் சொந்த நலனில் இருந்து எதிர்க்கின்ற அதேநேரம், தமிழ் மக்களின்



படிப்பகம்

www.padippakam.com



விடுதலைப் போராட்டத்தையும் அது எதிர்க்கின்றது.

புலிகளின் ஆயுதம் ஏந்திய வன்முறையும், அதனை நியாயப்படுத்தலும் மக்களுக்கு எந்த விடுதலையையும் பெற்றுத் தருவதில்லை. தமிழ் மக்களின் எஞ்சிக்கிடக்கும் உரிமைகளையே புலிகளும் பேரினவாதிகளும் சேர்ந்து அழிக்கின்றனர். இந்த வகையில் அதை நாம் ஆதரிக்க முடியாது. மாறாக கீழ் இருந்து மக்களை அரசியல் ரீதியாக அணி திரட்டுவது தான் மாற்று வழி. இதை விட தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய எந்த மாற்று அரசியல் வழியும் கிடையாது.

இது சாத்தியமா? இதுவும் புலிகளும் புலி அல்லாத புலியெதிர்ப்பாளர்களும் எழுப்பும் கேள்விதான். இந்த இரு பிரிவுகளின் அரசியல் நோக்கமும், தமது வர்க்க நலனில் இருந்து மக்களை கீழே இருந்து தட்டியெழுப்பும் போராட்ட வழியை நிராகரிப்பது தான்.

மக்களுக்கான எந்தப் போராட்டமும், எவ்வளவு தான் நெருக்கடிகள் இருந்தாலும் கீழ் இருந்து தான் கட்டமுடியும். மக்களுக்கு வெளியில் மக்களுக்கான போராட்டங்கள் வீங்கி வெம்பி வெடிப்பதில்லை. மக்கள் தமக்காக தாமே போராடவேண்டும். மக்களின் சொந்த விடுதலைப் போராட்டம் என்றால், அப்படித்தான் அமையும். இந்த அரசியலை எடுத்துச் செல்வதுதான் சரியான அரசியல்.

இதை விடுத்து மற்றொரு பிரதானமான எதிரியைக்காட்டி மறுபுறத்தில் பாசிசத்தை ஆதரிக்க முடியுமா? முடியாது. பாசிசம் என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் மேலான, சுரண்டு வர்க்கத்தின் அதிவுயர்வான ஒடுக்கும் ஒரு சுரண்டல் கருவி. மக்களுக்கு எதிரான, அவர்களை அடிமைப்படுத்துகின்ற எதையும் ஆதரிக்க முடியாது. நாங்கள் மக்களுடன் நிற்கப் போகின்றோமா? அல்லது மக்களை அடக்கும் பாசிட்டுகளுடன் நிற்கப் போகின்றோமா? அடுத்து இரண்டு பாசிச சக்திகள் தமது சொந்த நலனுக்காக மக்களை அடிமைப்படுத்தியபடி, மோதிக் கொள்வதில் நாம் எந்தப் பக்கம் என்று கேட்பது அறிவுள்ள கேள்வியாக அமையுமா? நாங்கள் மக்கள் பக்கத்தில் நின்று, இரண்டு பாசிசத்தையும் எதிர்க்கும் அரசியல் நேர்மை எமக்கு உள்ளதா என்று உரசிப் பார்க்க வேண்டும்.

பாசிசத்தை எதிர்த்துப் போராட வேண்டும். மக்களின் அரசியல் பொருளாதார நலனுக்காக போராட வேண்டும். மக்களுக்கு வெளியில் உள்ளவற்றை எல்லாம், ஏன் நாம் ஆதரிக்க வேண்டும்?



படிப்பகம்

www.padippakam.com



புலிகள் ஏன் மக்களுக்காக போராடக் கூடாது? இதை ஏன் பொதுவில் நாம் கேட்பதில்லை.? அதை செய்யக் கோரிய அரசியல் விமர்சனம் தான், சரியான மக்கள் போராட்டத்தை எடுத்துக் காட்டும், சரியான போராட்டத்தை தெளிவுபடுத்தும். இதை சுயமாக செய்வதுதான் நேர்மையான அரசியல். இதன் போது சரியான போராட்டத்தை அடிப்படையாக கொண்ட சுயமான அணிதிரட்டல் நிகழும். மறுபக்கத்தில் புலிகளிலும், துரோகக் குழுக்களிலும் உள்ள மக்களின் விடுதலையை நேசிக்கும் பிரிவை, மக்களின் விடுதலைக்கு எதிரான சக்திகளுக்கு எதிராக அணிதிரட்டும். மக்களுக்கான போராட்டம் உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் நடப்பதற்கு ஏதுவாக, மக்களின் விடுதலைப் போராட்டத்தை சரியான அரசியல் பொருளாதார ரீதியில் வெளிப்படுத்துவது இன்றைய வரலாற்றுக் கடமை.

***05.05.20007***



படிப்பகம்

www.padippakam.com



# மனித அவலங்களை அரசியலாக்குகின்றனர்

எங்கும் எதிலும் ஒரு பிழைப்புத்தனம். அரசியல் என்பதே நக்குத்தனமாகி விட்டது. (தமிழ்) மக்களின் பிரச்சனைகளை இனம் காணுதல் அருவருப்புக்குரிய ஒன்றாகிவிட்டது. மக்களின் வாழ்வியல் நெருக்கடிகளின் அடிப்படையில் இயங்குதல், அதற்காக குரல் கொடுத்தல், என அனைத்தையும் மறுத்து இயங்குவதே அரசியலாகி விட்டது. இப்படி குரூரமாகி நிற்பவர்கள், மனித அவலங்கள் மீது நீந்தி நீச்சலடிக்கின்றனர்.

புலியெதிர்ப்போ, பேரினவாத வெற்றிகளை தமது சொந்த வெற்றியாக கொண்டாடுகின்றது. இதை அரசியலாக கொண்டே அவர்கள் குலைக்கின்றனர். இந்த வகையில் புலியெதிர்ப்புக் கருத்துலகம் கருத்தை கட்டமைக்கின்றது. மறுபக்கத்தில் புலிகள் தமது சொந்த தோல்விகளை, தந்திரோபாயமான பின்வாங்கல் என்று காட்ட முனைகின்றனர். இதை மூடிமறைக்க "குரூரத்தனமான ஒரு சில தாக்குதலை நம்பி அவர்களின் அரசியல் நடுக் கடலில் தத்தளிக்கின்றது.

மக்கள் நிலையோ துன்பகரமானது. உடுத்த உடுப்புடன் மக்கள் ஓட்டமும் நடையுமாக அங்குமிங்குமாக ஓடுகின்றனர். வாழ்வதற்கான அனைத்து பிழைப்பு வழிகளையும் இழந்த மக்கள் கூட்டம், நாயிலும் கீழாக இழிந்து போகின்றனர். ஒரு நேரக் கஞ்சிக்கே, தெரு நாய்கள் போல் உணவுப் பொருட்களைத் தேடி அலையும் மற்றொரு மக்கள் கூட்டம். வாழ்வை பறிகொடுத்த மக்கள் கூட்டத்தின் கதி இதுவென்றால், வாழ்விழந்து பரிதபிக்கும் மற்றொரு மக்கள் கூட்டம் வாய் பொத்தி அழுகின்றது.

பொத்திப் பொத்தி வளர்த்த தமது சொந்தக் குழந்தைகளை, கட்டாய பயிற்சியின் பெயரில் புலிகளிடம் பறிகொடுக்கின்றனர். இதை எதிர்த்து வாய் திறக்க முடியாத பாசிச வெறியாட்டம். தமிழ்செல்வன் போன்ற விளம்பர பொறுக்கிகள் மட்டும் தான், எதையும் எந்த அபிப்பிராயத்தை



படிப்பகம்

www.padippakam.com



யும் சொல்லமுடியும் என்ற நிலை. மக்களின் அன்றாட உணர்வு, அவர்களின் பரிதாபகரமான நிலை எதையும் யாரும் பிரதிபலிக்க முடியாது. இதை மீறி மக்களின் சூடான மூச்சுகள் எழும் போதும், அடியையும் உதையையும் சித்திரவதையையும் புலிகள் பரிசளிக்கின்றனர். இதனால் அங்கு மரணங்கள் கூட அன்றாடம் நிகழ்கின்றது.

வன்னியில் வாழும் மக்களின் நிலை இதுவென்றால், மறுபக்கம் பேரினவாத கொலைகாரக் கும்பல் தமிழ் மக்களின் குழந்தைகளை கொன்று குவிக்கின்றது. ஜனநாயகத்துக்கு திரும்பி கூலிக் கும்பலாகவே இயங்கும் குண்டர்களுடன் சேர்ந்தே, இளம் தளிர்களை வகை தொகையின்றி கொன்று குவிக்கின்றனர். கடத்தல், காணாமல் போதல், கொன்று போடுதல் வரலாறு காணா உச்சத்தை எட்டி நிற்கின்றது. ஒவ்வொரு தமிழ்த் தாயினதும் கருப்பையிலேயே உயிர்களை பலிகொள்ளுமளவுக்கு இந்த அராஜகம் நடதேறுகின்றது.

இப்படி தமிழ்ப் பேசும் மக்களின் அவலம், இராணுவ அலுக்கோசு களின் வக்கிரங்களுக்குள் அமுந்தி போகின்றது.

***01.04.2007***



படிப்பகம்

www.padippakam.com



# "அற்புத"மான பாசிச அலட்டல்

''இணையப் போலிப் புரட்சியாளரும் ஈழ விடுதலைப் போரும்'' என்ற தலைப்பில், தமிழ் மணத்தில் அற்புதன் என்ற, ''அற்புத''மான புலிப் பாசிட் எம்மீது தனது புலிப் பாய்ச்சலை நடத்தியுள்ளது. அந்த புலிப் பாசிச பாய்ச்சலின் உள்ளடக்கத்தைப் பார்ப்போம்.

''மாக்சியப் பண்டிதர்களாகவும், அறிவுஜீவிகளாகவும் தங்களைத் தாங்களே மகிடம் இட்டுக் கொண்டு இணையத்தில் மாக்சியம், புலிப்பாசிசம், நலமடித்தல், மக்கள் விடுதலை, புதியஜனநாயகப் புரட்சி என்று வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரியாமல் மனநோயாளரைப் போல் புலம்பிக் கொண்டிருக்கும் பல போலிகளுக்கும், கீழ் இணைத்துள்ள, இதயச் சந்திரன் வீரகேசரியில் எழுதி உள்ள எதிர்வினை பொருந்தும். கொழும்பில் இருந்து வெளிவரும் சிறிலங்கா அரச ஊதுகுழல் ஆன தினகரனில் வந்த ஒரு பந்தி எழுத்துக்கு, எதிர்வினையாக என்று அதில் குறிப்பிடப் பட்டுள்ளது, இவ்வாறான ஒரு கட்டுரை சி.சிவசேகரத்தால் எழுதப்பட்டு இணையத்தில் பல பெயர்களில் பதிவிடும் ஒரு இணையப் போலிப் புரட்சியாளர் ஒருவரால் படி எடுத்துப் போடப்பட்டிருந்தது.''

இவர் குறிப்பிடும் சிவசேகரம், இதயச்சந்திரன் பற்றி விவாதத்துக்குள் செல்வது அவசியமற்றது. இதயச்சந்திரன் விவாதம் உப்புச்சப்பற்றது. புலிப் பாசிசத்துக்கு குடைபிடிக்கும் நாயுண்ணிகளின் வெற்று அலட்டல். பத்திரிகைகளை மிரட்டி அடிபணிய வைத்து, மாற்று விவாதங்களை அடக்கியொடுக்கியபடி, புலிகளின் எடுபிடிகள் மட்டுமே குலைக்க முடியும் என்ற நிலையில், பாசிச அலட்டல் அது. இந்த பாசிச அலட்டலுக்கு பின்னால் இருப்பது, வெற்று வேட்டுத்தனம். இந்த அலட்டலை விடுத்து ''அற்புத''மான இந்த பாசிச அலட்டலைப் பாாப்போம்.

''மாக்சியம், புலிப் பாசிசம், நலமடித்தல், மக்கள் விடுதலை, புதிய



படிப்பகம்

www.padippakam.com



ஜனநாயகப் புரட்சி என்று வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரியாமல் மன நோயாளரைப் போல் புலம்பிக் கொண்டிருக்கும் பல போலிகளுக்கும்'' பதிலளிக்கின்றாராம்.

சரி எப்படி? அதை மட்டும் அவர் சொல்ல மாட்டார். தலைவரின் மாவீரர் தின செய்திக்காக, வாயைப் பிளந்து திருவிழாவுக்காக காத்து நிற்கும் கூட்டம் போல், இவர் சொல்லும் வரை நாம் தவம் இருக்கவேண்டியதுதான். இதற்கெல்லாம் அர்த்தம் தெரிந்த அற்புதமே, முடிந்தால் உங்கள் புலியின் நுண் மார்க்சிய வழியில் இதை விளக்குங்களேன். இதற்கு பதில் வழமையான புலி நுண் மார்க்சிய அரசியல் வழியில், துப்பாக்கிக் குண்டை பரிசாக தருகின்ற வழியில் பதிலளித்துவிடுவார்களோ என்று அச்சப்படுகின்றோம்.

உங்களுக்கு நன்கு தெரிந்த ஆனால் எமக்கு தெரியாத இவற்றை விளக்கி, சரியான வழியில் எம்மை வழிகாட்டிச் செல்லுங்களேன். ஏன் அதை செய்ய முடிவதில்லை. இப்படி செய்திருந்தால், இலங்கையில் பல பத்தாயிரம் உயிர்களை புலிகள் பலி கொண்டிருக்க வேண்டிய அவசியமிருந்திருக்காது. ஏன் அதை மட்டும் செய்ய முடிவதில்லை. ''மார்க்சியம், புலிப் பாசிசம், நலமடித்தல், மக்கள் விடுதலை, புதிய ஜனநாயகப் புரட்சி என்று வார்த்தைகளுக்கு அர்த்தம்'' தெரிந்து போராடியவர்களை வேட்டையாடிய புலிகளின் பாசிச வண்டவாளத்தை தண்டவாளத்தில் நிறுத்தி, இணையத்தில் ஓட்டமுடியாது.

நீங்கள் குறிப்பிடுகின்றீர்கள் எமக்கு மனநோய் என்று. நல்லது அப்படியே வைத்துக் கொள்வோம், மனநோயற்ற நீங்களாவது சுயபுத்தியுடன் இதை விளக்குங்களேன். பொத்தாம் பொதுவிலான அலட்டல், வெற்றுத்தனமான காழ்ப்பை அடிப்படையாகக் கொண்ட அவதூறுதான் இது.

''தமிழ் ஈழமக்கள் இந்தப் போலிப் புரட்சியாளர்களின் போலித் தனங்களை நன்கு அறிவார்கள். மக்களால் நிராகரிக்கப்பட்டு இணையத்தில் இவ்வாறு புரட்சிகரப் படங்காட்டிக் கொண்டிருக்கும் இவர்கள் பற்றிய புரிதலை இடதுசாரிச் சிந்தனை உடைய தமிழ் நாட்டுத் தோழர்களிடம் அம்பலப்படுத்துவதற்காக இந்தப்பதிவு இங்கு இடப்படுகிறது.''

நல்லது தமிழ் நாட்டு இடதுசாரிகளுக்கு தெரியப்படுத்த முனையும் நீங்கள், மேலுள்ளவற்றை அவர்களுக்கு விளங்கப்படுத்துங்கள். முடிச்சுமாற்றி தொழிலைச் செய்வதை விடுத்து, அது பற்றிய



படிப்பகம்

www.padippakam.com



விளக்கங்கள்தான் தேவை. அவர்கள் அதை வெற்றிடத்தில் புரிந்துகொள்ள முடியாது. சரி ''தமிழ் ஈழமக்கள் இந்தப் போலிப் புரட்ச்சியாளர்களின் போலித் தனங்களை நன்கு அறிவார்கள்'' ஆகாகா அற்புதம். பெயருக்கு ஏற்ப அற்புதம். புரட்சி பேசும் நீங்கள், உங்களுடைய புரட்சி என்ன என்றாவது சொல்லுங்கள். பிரபாகரன் மாவீரர் தினத்தில் அலட்டும் போது சொன்னால்தான் அதுவும் தெரியும். அதுவும் அவர் கழித்த மலத்துக்குள் புழுக் கிண்டித் தேட வேண்டிய பரிதாபம் தமிழ் இனத்துக்கு. அந்தளவுக்கு வெற்று வேட்டுத்தனமும், மக்கள் விரோதமும் பொங்கிவழியும். சரி எல்லாம் தெரிந்த புண்ணியவானே, உங்கள் புரட்சி என்ன? பாசிச மரமண்டைகளே அதையாவது சொல்லுங்கள். நாங்கள் போலிகள் என்று நீங்கள் கூறுவது போலவே இருக்கட்டும், போலியற்ற நீங்கள் மக்களுக்காக எதை எப்படி செய்கின்றீர்கள். அதையாவது சொல்லுங்களேன். உங்கள் புரட்சிகர தத்துவம் என்ன நடைமுறை என விளம்புங்கள். மக்களை மாபியா பாணியில் சுரண்டும் திருட்டுக் கூட்டத்தை பற்றி நாம் பேசுகின்றோம் என்பதை மறக்க வேண்டாம். மண்டையில் போட்டும், மிரட்டியும், மக்களை அடக்கி ஆள்வதுதான் புரட்சியோ? தெரியாமல்தான் கேட்கின்றோம், தெரிந்தால் சொல்லுங்களேன்.

''புலிகள் மேல் உள்ள தனிப்பட்ட காழ்ப்புணர்வே இவர்களின் இந்த மன வியாதிக்கான அடிப்படை. மக்களின் அரசியல் அபிலாசைகளைப் புரிந்து கொள்ளாமல், சித்தாந்தத்தை நடைமுறையுடன் இணைக்காமல், கிளிப்பிள்ளைகளைப் போல் புரட்சிகரமான சொற்களை உமிழ்வதே இவர்களின் நடைமுறையாக இருந்து வந்துள்ளது. சுத்தியலையும், சிவப்பு அட்டைப் புத்தகங்களையும் காட்சிப்படுத்துவதுதான் மாக்சியம் என்றும், சீனாவில், ரசியாவில் நடந்தது தான் புரட்சி என்றும், மாக்சிசத்தை அறிவியல் அடிப்படையில் அணுகாமல் அதனை ஒரு மதத்தைப் போல் அணுகும் இந்தப் போலிச் சித்தாந்திகள் வரலாற்றின் போக்கைத் தீர்மானிக்கப் போவதில்லை.''

நல்லது, தனிப்பட்ட காழ்ப்புணர்வை என்ன என்ன என்று இனங்காட்டுங்க ளேன். வெற்று சொற்களுக்கு வெளியில் அதை செய்யும் அரசியல் அருகதை கூட பாசிட்டுகளுக்கு கிடையாது. நாங்கள் எழுதிய கட்டுரைகளில், அதை எடுத்துக்காட்டுங்களேன். நாங்கள் புலியை மட்டும் எதிர்க்கவில்லை. இலங்கை அரசு முதல் உலகம் வரை எதிர்த்து எழுதுகின்றோம். அங்கும் மனநோய் முற்றி, தனிப்பட்ட காழ்ப்புணர்வு தான் என்றால் அதையும் விளக்கமாய் சொல்லிவிடுங்கள். அர்த்தம் தெரிந்த நீங்கள்தான் சொல்ல வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com



அதைவிடுத்து பல்லிளித்து விளம்பர பாணியில் அரசியல் செய்யும் தமிழ்ச்செல்வன் போல், மூடிமறைத்து சித்து விளையாட்டில் ஈடுபடுகின்றீர்கள். இந்த வக்கிரத்தை பார்ப்பனியம் குத்தகைக்கு எடுத்து வைத்திருக்கின்றது என்றால், புலிப் பாசிட்டுக்களான நீங்களுமா?

''மக்களின் அரசியல் அபிலாசைகளைப் புரிந்து கொள்ளாமல், சித்தாந்தத்தை நடைமுறையுடன் இணைக்காமல், கிளிப் பிள்ளைகளைப் போல் புரட்சிகரமான சொற்களை உமிழ்வதே இவர்களின் நடைமுறையாக இருந்து வந்துள்ளது.'' நல்லது மக்களின் அபிலாசைகள் என்ன? அதையாவது சொல்லுங்கள். சொல்லுக்கு வெளியில், இதையும் தலைவரிடம் கேட்கவேண்டுமோ? மக்களின் அபிலாசைக்காக போராடும் புலிகள் என்கின்றீர்கள், அதை எப்படி எங்கே நடைமுறைப்படுத்துகின்றார்கள்? தெரிந்தால் அதையாவது சொல்லுங்கள்.

''சித்தாந்தத்தை நடைமுறையுடன் இணைக்காமல், கிளிப்பிள்ளை களைப் போல் புரட்சிகரமான சொற்களை உமிழ்வதே இவர்களின் நடைமுறையாக இருந்து வந்துள்ளது.'' இது தவறு தான். சித்தாந்தமும் நடைமுறையும் ஒன்றிணையவேண்டும் என்பதை நாம் நிராகரிக்கவில்லை. ஆனால் அதை புலிகள் எப்படி செய்கின்றார் கள்? அதை முதல் உலகறியச் சொல்லுங்கள். மக்களின் அபிலாசை களை அடிப்படையாகக் கொண்ட சித்தாந்தம், அச்சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட நடைமுறையை புலிகளின் பாசிச வழியில் ஒளிவீசிக் காட்டுங்களேன். ஏனிந்த வார்த்தைப் புலம்பல். புரட்சிகரமான சொற்களை நாம் முன்வைக்கின்றோம் என்பதை நீங்கள் ஒத்துக்கொண்டு, வெளிப்படும் அவதூறோடான உங்கள் காழ்ப்புணர்வு, எமக்கு மனநோயில்லை என்பதையும், தனிப்பட்ட காழ்ப்புமல்ல என்பதையும் நிறுவுகின்றது. நடைமுறையுடன் இணைத்தல் என்பது, வரலாற்றுக்குரிய ஒன்றுதான். படுகொலையும், காட்டுமிராண்டித் தனமும் புலி புரட்சியாக நிலவுகின்ற ஒரு நிலையில், நீங்கள் உங்கள் பாசிச வழியில் எம்மை நோக்கி கேள்வி எழுப்பி விடுவது இலகுவானது. படுகொலையும், காட்டுமிராண்டித்தனமுமற்ற அரசியல் வழியில் நின்று, இதைச் சொன்னால் அது நியாயம். அதை முதலில் செய்யுங்கள். கொலைகார கும்பலின் பக்கப்பாட்டுக்கு ஏற்ப, கும்மியடிக்கும் நீங்கள் எல்லாம் நடைமுறை பற்றி பேச வருகின்றீர்கள். இந்த மனித விரோத மாபியா பாசிசச் செயல்களை அம்பலப்படுத்தி போராடுவது, மரணத்துக்கு ஒப்பானது. அதுவே எமது இன்றைய நடைமுறை.



படிப்பகம்

www.padippakam.com



''அண்மையில் மயூரன் தனது வலைப் பதிவில், சரிநிகரில் இருந்து படி எடுத்து நேபாள மாவோக்களின் தலைவர் பிரச்சண்டாவின் பேட்டியை இணைத்திருந்தார். பிரச்சண்டா இந்த வரட்டுச் சித்தாந்த குழுவாதத்தை வெகுவாக விமர்சித்து இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.''

பிரச்சண்டா பேட்டி, அதன் உள்ளடக்கம், அதில் உள்ள அரசியல் நேர்மை, புலியின் பாசிசத்தில் ஒரு சதவீதத்துக்கு கூட பொருந்தாது. அவர் வரட்டுச் சித்தாந்தம் என்று கூறுவது சரியானது. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கானது. அவர் கோட்பாட்டை விட்டுச் செல்லவில்லை. அவரின் கருத்து வெளிப்படுத்தும் உள்ளடக்கம், ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிக்கான எதார்த்தம் சார்ந்து வெளிப்படுகின்றது. அவர் மக்களை ஏமாற்ற முனையவில்லை. புரட்சியின் முதல் கட்டத்தில் உள்ள, பல்வேறு வர்க்கத்தின் நலன்களை சரியாகவே உயர்த்துகின்றார். பிரதான எதிரி, அதாவது நிலப்பிரபுத்துவ வர்க்கத்தை தனிமைப்படுத்தி ஒடுக்குவதில் உள்ள, அவரின் பொது அணுகுமுறை மிகச்சரியானது. புலிகளைப் போல் எதிரியல்லாத யாரையும் எதிரியாக்கவில்லை. மக்களை நண்பர்களை, புரட்சிகர சக்தியாக முன்னிலைப்படுத்துகின்றார். இந்த வகையில் ஒரு நேர்மையான ஐக்கிய முன்னணிக்காக உழைக்கின்றார்.

அவர் எம்மை விமர்சிக்கின்றார் என்ற உங்கள் கண்டுபிடிப்பு நகைப்புக்குரியது. அதை எப்படி எந்த வகையில் என்று நிறுவவேண்டும். அவர்கள் உங்களைப் போன்றவர்களின் வங்குரோத்துச் செயலை, பொது உலகில் அம்பலப்படுத்துகின்றனர். உலகுக்கு வழிகாட்ட போவதாக சூளுரைத்துள்ளார். அவர் உலக மக்களை நம்புகின்றார். புலிப் பாசிச மாபியாக்கள் போலல்ல. உங்கள் இந்த குருட்டுத்தனமான வாதத்தின் நோக்கம், புலிகளை ஆதரிக்காவிட்டால் வரட்டுவாதி என்பது, ஆதரித்தால் வரட்டுவாதியல்ல என்பதே உங்கள் புலிக் கண்டுபிடிப்பு. அதை அவர் வரட்டுவாதமாக குறிப்பிடவில்லை.

''21 ஆம் நூற்றாண்டுக்கான நடைமுறை மாக்சிசம் பற்றியும் கலப்புப் பொருளாதாரம் பற்றியும் அவர் பேசி இருந்தார். போன நூற்றாண்டில் நிகழ்த்தப்பட்ட ரசியப் புரட்சியோ அன்றி சீனப் புரட்சியோ இந்த நூற்றாண்டுக்கும், எங்கும், எப்போதும் பொருந்தும் என்று எதிர்பார்ப்பது அறிவிலித்தனம். ஒவ்வொரு போராட்டத்தின் அக மற்றும் புற நிலைகளும் சர்வதேச சூழலும், பூகோள அரசியலும் வேறுபடுகிறது. மாறாக மாக்சிசத்தின் அடிப்படைகளைப் புரிந்து, சிங்கள பேரினவாதத்திற்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய



படிப்பகம்

www.padippakam.com



சக்திகளுக்கு எதிராக நுண்ணிய அரசியற் தளத்தில் நடைமுறை ரீதியாக இயங்கும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமைச் சக்திகளான புலிகளின் அரசியலை இவர்கள் இன்னும் உள்ளார்ந்தமாக புரிந்து கொள்ளவில்லை, அவ்வாறான புரிதல் ஏற்படாததற்கான அடிப்படைக் காரணம் இவர்களின் சிந்தனையின் வரட்டுத் தனமும், இயற்கையாக புலிகள் மேலெழும் தனிப்பட்ட காழ்ப்புணர்வுமே.''

பிரச்சண்டாவுக்கு ஒரு பாசிச பொழிப்புரை. மாவீரர் தின உரைக்கு பொழிப்புரை சொல்லிப் பிழைக்கும் கூட்டம், பிரசண்டாவுக்கு பொழிப்புரை. பிரசண்டா பெயரிலும் மானம் கெட்ட நாய்ப் பிழைப்பு.

''21 ஆம் நூற்றாண்டுக்கான நடைமுறை மாக்சிசம் பற்றியும் கலப்புப் பொருளாதாரம் பற்றியும் அவர் பேசி இருந்தார்.''

மாக்சிசம் நடைமுறை நாட்டுக்கு நாடு மட்டுமன்றி, காலத்துக்கும் ஏற்பவும் அதை கையாளுகின்ற வடிவங்களும் மாறும். புரட்சிகர சூழல், வர்க்கங்களின் நிலை, மாறுபட்டதாக உள்ள நிலைமையில், கம்யூனிசத்தை நோக்கிய பயணம் நேர்கோட்டு வழியில் ஒரு சீராக செல்வது கிடையாது. ஒரே மாதிரியான, ஒரே வடிவிலான புரட்சிகள் சாத்தியமில்லை. புரட்சிகள் இயந்திரமாக, இயந்திரகதியில் உற்பத்தி செய்வதில்லை. வர்க்க போராட்டத்தின் உள்ளடக்க விதிகளும், சுரண்டல் பற்றிய சித்தாந்தமும், சுரண்டல் உள்ளவரை மாறிவிடுவதில்லை. மாக்சியம் புதிய உலக நிலைமைகளையும், மாற்றத்தையும் உள்வாங்கி வளர்த்தெடுக்கப்படுகின்றது. ''கலப்புப் பொருளாதாரம்'' பற்றிய அவரின் கருத்து மிகச் சரியானது. இது இப்போது தான் முதல் முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டதல்ல. சீனா, சோவியத் எங்கும் இந்த முறை புரட்சியில் கையாளப்பட்டு இருக்கின்றது. நேபாளக் கம்யூனிஸ்ட்டுகள் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களை தூக்கியெறியும் போராட்டத்தில், அதற்கு எதிரான அனைத்து வர்க்கங்களையும் உள்ளடக்கிய ஒரு ஐக்கிய முன்னணியை மேலிருந்து கட்டியுள்ளது. இது புதிய ஜனநாயக புரட்சிக்கு முந்தைய, ஜனநாயக புரட்சிக்குரிய கட்டத்தை அடிப்படையாகக் கொண்டது.

இந்தவகையில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை அவர் தெளிவாக முன்வைக்கின்றார். பாட்டாளி வர்க்க புரட்சி வேறு. இதில் இருந்தும் சோசலிச புரட்சி வேறு. இதில் இருந்தும் புதிய ஜனநாயக புரட்சி வேறானது. புரட்சியின் வெவ்வேறு காலகட்டமும், வெவ்வேறு வர்க்கங்களின் அணி சேர்க்கையை இனம் காண்பதில் தான், இந்த



படிப்பகம்

www.padippakam.com



வெற்றி அடங்கிக் கிடக்கின்றது. இதில் ஜனநாயக புரட்சிக்குரிய குறிப்பான வர்க்க சூழல் சார்ந்து, அதை தெளிவாக முன்வைக்கின்றார். இதில் எந்தத் தவறுமில்லை. இதை மாக்சியத்துக்கு எதிரானதாக திரிக்க முடியாது. அவர் இதை முன்னெடுப்பது ஒடுக்கப்பட்ட மக்களின் புரட்சிக்காகத் தான். அதை அவர் கைவிட்டால், அதாவது நிலப்பிரபுத்துவ வர்க்கத்தை ஒழித்து நிலத்தை மறுபங்கிடுவதைக் கைவிடுவாரேயானால், அவர் வரலாற்றில் மாக்சியத்துக்கு துரோகத்தை இழைத்து மக்களின் முதுகில் குத்துவார்.

''மாக்சிசத்தின் அடிப்படைகளைப் புரிந்து, சிங்கள பேரினவாதத்திற்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக நுண்ணிய அரசியற் தளத்தில் நடைமுறை ரீதியாக இயங்கும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமைச் சக்திகளான புலிகளின் அரசியலை இவர்கள் இன்னும் உள்ளார்ந்தமாக புரிந்து கொள்ளவில்லை, அவ்வாறான புரிதல் ஏற்படாததற்கான அடிப்படைக் காரணம் இவர்களின் சிந்தனையின் வரட்டுத் தனமும், இயற்கையாக புலிகள் மேலெழும் தனிப்பட்ட காழ்ப்புணர்வுமே'' என்கின்றார்.

அதாவது புலிகளை மாக்சிய சக்திகள் என்கின்றார். ''ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக நுண்ணிய அரசியற் தளத்தில் நடைமுறை ரீதியாக'' செயற்படுகின்றனராம். உலகத்தை முட்டாளாக கருதுகின்ற குதர்க்கம். இப்படிக் கூறுவதற்கு உள்ள துணிச்சல்தான், பாசிசத்தின் திமிர். ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, மக்களுக்கு தெரியாமல், நுண் என்ற மாய மந்திரத்தின் துணையுடன் போராடுகின்றனராம். அதுவும் இந்த அற்புதத்துக்கு தெரிந்துவிடுகின்றது.

நுண் தளத்தில் மக்களுக்கு தெரியாது, ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தை நடத்துகின்றனராம். முக்கியமாக மக்களுக்கு அவை தெரியக்கூடாது. யார் போராடுவது என்றால், எல்லாம் வல்ல தலைவர் மட்டும். அவர் நுண் தளத்தில் சொன்னால், மக்கள் வேத வாக்காக கருதி, ஏகாதிபத்தியத்தை தூக்கியெறிவார்களாம். புலுடா விடுவதில் மகாகெட்டித்தனம் என்ற நினைப்பு இவர்களுக்கு.

''சிந்தனையின் வரட்டுத் தனமும், இயற்கையாக புலிகள் மேலெழும் தனிப்பட்ட காழ்ப்புணர்வுமே.'' இந்த நுண் அரசியலை புரிந்து கொள்ளத் தடை என்கின்றார். ஐயா அதை ஊர் அறிய, நீங்கள் புரிந்து கொண்ட, அந்த நுண் தளத்தைச் சொல்லுங்கள். உங்களுக்கு அவை தடையல்லவே. ஏன் சொல்ல முடிவதில்லை. ''பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்''



படிப்பகம்

www.padippakam.com



சுய அறிவற்ற கூட்டம், தலைவரின் மாவீரர் தின செய்தியில் ஏதும் வருமா என்று நம்பி நிற்கும் பிழைப்புவாத கூட்டத்துக்கு, எதைத்தான் சுயமாக மக்கள் சார்பாக காட்டமுடியும். பொறுக்கி நக்குகின்ற கூட்டம், எங்கேயாவது குண்டு வெடித்தால், பத்து இராணுவம் செத்தால் அதை கொண்டு உருவாடுகின்ற கூட்டம், மக்களைப்பற்றி எதைத்தான் கூறமுடியும். அதை அரசியலாக கொண்டு, பேசித் திரியும் கூட்டம், எதைத்தான் இந்த நுண் தளத்தில் கூறமுடியும். தமிழ் மக்களை நலமடித்து விட்டு, இப்படி வள்ளென்று குலைக்க முடிகின்றது.

‘‘இந்த வரட்டுச் சித்தாந்திகளின் அரசியல் மலட்டுத் தனமே, இவர்களால் ஒரு மக்கள் மயப்பட்ட பரந்துபட்ட வெகுசன அமைப்பை கட்டி எழுப்ப முடியாதற்கான அடிப்படைக் காரணம். வெறுமையாக புரட்சிகரச் சொற்களை உமிழும் இவர்கள் உண்மையில் மாக்சிசத்தை ஒரு நடைமுறைச் சித்தாந்தமாக அன்றி, உச்சாடனம் செய்யும் மந்திரமாகவும், மாக்சையும், லெனினையும், மாவோவையும் கடவுளர்களாகவும், அவர்களின் கூற்றுக்களை எதுவித விமர்சனமும் அற்ற வேத வாக்குகளாகவும் கருதிக் கொண்டதன் வெளிப்பாடே அன்றி வேறொன்றும் இல்லை. இவர்களின் அரசியல் என்பது சொன்னதை மீள ஒப்புவித்தல் என்பதுடன் மட்டுமே நின்று விடுகிறது. ஒரு சித்தாந்தத்தை அதன் நடை முறையுடனும் அது கூறப்பட்ட காலப்பகுதியின் அக, புற நிலைகளுடனும் இவர்கள் விளங்கிக் கொள்ளவில்லை. ஒரு சித்தாந்தத்தின் அடிப்படை அதன் தர்க்கமும், சிந்தனையுமே அன்றி வெறும் சொல்லாடல்கள் அல்ல. பிரச்சண்டா குறிப்பிடுவது போல் மக்கள் அமைப்பொன்றை நிறுவுவதற்கு ஒரு அடிப்படை வேண்டும். அந்த அடிப்படை மக்கள் மத்தியில் இருக்கும் பிரதானமான ஒடுக்குமுறையின் எதிர் நிலையாகவே அமைய முடியும். அரசியல் யதார்த்தம் என்பதுவும் நுண் அரசியல் என்பதுவும் அதுவே. நேபாளத்தில் நிலவுடமை அடிப்படையிலான மன்னர் புரட்சியே பிரதானமான ஒடுக்குமுறைக் கருத்தியலாக இருக்கிறது. சிறிலங்காவில் அது சிங்களப்பெளத்த பேரினவாதமாக இருக்கிறது. ஒரு மக்கள் மயப்பட்ட அரசியல் இயக்கம் இந்தப் பிரதான முரண்பாட்டை அடிப்படையாக வைத்தே கட்டி எழுப்பப்படமுடியும்.’’

பாவம் பிரசண்டா. ஒரு வலதுசாரி கொலைகார பாசிட்டுகள், ஒரு இடதுசாரி ஒடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்தை கூறி நக்கலாமென்று தெரிந்திருக்க நியாயமில்லைதான்.

‘‘இவர்களின் அரசியல் என்பது சொன்னதை மீள ஒப்புவித்தல் என்பதுடன் மட்டுமே நின்று விடுகிறது.’’ சொன்னதை மீள ஒப்புவிப்பவர்கள் யார்?. சுயசிந்தனை அற்று, மக்களை சிந்திக்கவே



படிப்பகம்

www.padippakam.com



கூடாது என்று நலமடித்தவர்கள் யார்? தலைவர் சொன்னதை தவிர, யாரும் வேறுவிதமாக சிந்திக்கக் கூடாது. புலிகள் சொன்னதைத் தவிர வேறு எதுவும் பேசக் கூடாது. இதுதான் புலிகளின் நுண் புரட்சியாக்கும்.

''இந்த வரட்டுச் சித்தாந்திகளின் அரசியல் மலட்டுத் தனமே, இவர்களால் ஒரு மக்கள் மயப்பட்ட பரந்துபட்ட வெகுசன அமைப்பை கட்டி எழுப்ப முடியாததற்கான அடிப்படைக் காரணம். வெறுமையாக புரட்சிகரச் சொற்களை உமிழும் இவர்கள் உண்மையில் மார்க்சிசத்தை ஒரு நடைமுறைச் சித்தாந்தமாக அன்றி, உச்சாடனம் செய்யும் மந்திரமாகவும்,''

இதுதான் கட்டி எழுப்ப முடியாததற்கு காரணம் என்கின்றார். எதைக் கட்டியெழுப்ப என்பது சூக்குமம். புலிகள் மாற்றுக் கருத்தை அங்கீகரித்து, குறைந்தபட்ச முதலாளித்துவ ஜனநாயகத்தை அங்கீகரித்தா உள்ளனர்? இவர் என்னதான் கூறுகின்றார்? இப்படியான நிலையில் செயற்படாமல் இருக்கின்றனர் என்று கூற வருகின்றாரா? வெகுஜன அடிப்படையை கட்டியெழுப்பும் தடைக்கு, எமது வரட்டுவாதமே காரணம் என்கின்றார். இதை புலிகள் தடுக்கவில்லை என்கின்றாரா?. ஒரு பாசிட்டின், வடிகட்டிய முட்டாளின் உளறல் இது. இவை எல்லாவற்றையும் செய்யமுயன்றவர்கள் 5000 பேரை கொன்ற திமிர்தான் இப்படி இணையத்தில் குலைக்க வைக்கின்றது.

எத்தனை எத்தனையோ முரண்பட்ட மனிதர்களைக் கொன்று குவித்த கொலைகாரக் கும்பல், எம்மைப் பார்த்து ''இணையப் போலிப் புரட்சியாளரும் ஈழ விடுதலைப் போரும்'' எனக் கிண்டல் அடிக்கின்றது. இன்னும் கொல்லும் வெறி அடங்காத இரத்தம் வழியும் பாசிச திமிருடன், வம்பளக்க வருகின்றது. நாம் நாளை இதே காரணத்துக்காக கொல்லப்படலாம். அந்த உணர்வுடன் தான், நாம் உங்களை எதிர்கொள்கின்றோம். உங்கள் வம்புகளை, உங்கள் பாசிச வக்கிரங்களை எதிர்த்து நாம் போராடுகின்றோம் என்றால், அதுவே தான் இன்றைய நடைமுறை. இதில் மரணம் தான் எமக்கு முன்னால் உள்ளது. இது ஒரேயொரு வழிப்பாதையூடாக உள்ளதென்பதை, நாம் புரிந்தேதாம் எழுதுகின்றோம்.

''புலிகள் மேலான காழ்ப்புணர்வே இவர்களை அண்மையில் பிரன்சு அரசின் ஜனநாயக விரோதமான நடவடிக்கைகளை நியாயப்படுத்தி எழுத வைத்துள்ளது. ஒருபுறத்தில் புலிகளை ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளாச் சொல்லிக் கொண்டே இன்னொரு பக்கத்தில் அந்த



படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்தியக் கூட்டின் புலிகள் மீதான, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மீதான நடவடிக்கைகளை ஆதரித்தும் இவர்களால் எழுதமுடிவது இவர்களின் அரசியல் வங்குரோத்துத் தனத்தின் உச்சக்கட்டம். ஏகாதிபத்தியங்களின் உண்மையான அடிவருடிகள் யார் என்பதை தோழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மாக்சிய முத்திரை குத்தல்களுக்கு அப்பால் சென்று தோழர்கள் இவர்களின் போலித் தனத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.''

நல்லது நுண் அரசியல் புலிவாதியே. ''இவர்களை அண்மையில் பிரன்சு அரசின் ஜனநாயக விரோதமான நடவடிக்கைகளை நியாயப்படுத்தி எழுத வைத்துள்ளது'' என்கின்றீர்கள். பிரஞ்சு அரசின் ஜனநாயக விரோத செயல் என்று எதை குறிப்பிடுகின்றீர்கள்! அவர்கள் கைதைச் செய்தவர்கள், அந்த அமைப்பை தடை செய்யவில்லையே, ஏன்? அதன் செயற்பாட்டை முடக்கவில்லையே ஏன்? எங்கு எப்படி ஜனநாயக விரோதம் உள்ளது? அதை ஒருக்கால் ஊரறிய சொல்லுங்களேன்! அவர்கள், அவர்களது நாட்டின் சட்ட எல்லைக்குள், இதை நுட்பமாக கையாளுகின்றனர்.

புலிகள் பாரிசில் நடத்தியது என்ன? ஜனநாயகம் என்றால் என்னவென்றே தெரியாதவர்கள், அதை சதா மூச்சுக்கு மூச்சு ஒடுக்குபவர்கள் எதை செய்திருப்பார்கள்? அனைத்தும் வெளிப்படையானது. ஒரு சட்ட எல்லைக்குள் இயங்கத் தெரியாதவர்கள். பாசிச வழிகளில், ஜனநாயகத்தை முழுங்குபவர்கள். அவர்களின் மொழிகள், ஆணைகள், அடி உதை மிரட்டல் ஏன் மரணம் வரை அனைவருக்கும் தெளிவானது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக, நாம் நிற்பதை இது தடுத்துவிடாது. நாளை எம் மீது தாக்குதலை அவர்கள் நடத்தினாலும், நாம் இந்த நாட்டின் சட்டப் பாதுகாப்பை கோருவதை, இந்த நாடு ஏகாதிபத்தியம் என்பதால் தடுத்து விடமாட்டது. நாங்கள் ஒரு சட்ட அமைப்புக்குள் நீதியைக் கோருவோம்.

அது ஒரு ஏகாதிபத்தியமாக இருந்தாலும், அந்த நாட்டில் வாழும் மனித உரிமையை மறுப்பதை நாம் ஆதரிக்கமுடியாது. ஒரு நாட்டின் சட்டம் அங்கீகரிக்கும் எல்லைக்குள், அதை மீறுபவனுக்கு எதிராக அந்த சட்ட வடிவங்களில் போராடுவது தவிர்க்க முடியாதது. புலிகளை நாம் ஆதரிக்க வேண்டும் என்றால், மனித உரிமைகளை புலிகள் அங்கீகரிக்கவேண்டும்.

சட்டப்படியாக இயங்க வேண்டும். மாறாக மாபியாத் தளத்தில் இயங்கும் ஒரு குழுவை, விடுதலை இயக்கமாக நாம் அங்கீகரிக்க



படிப்பகம்

www.padippakam.com



முடியாது. பாதிக்கப்பட்ட மக்களின் நீதி எவ்வளவு முக்கியம் என்பதே, மிக முக்கியமானது. ஒருவன் பாதிக்கப்பட்டிருந்தாலும் கூட, அதற்காக குரல் கொடுப்பது மாக்சியம். இதே பாரிசில் சபாலிங்கம் கொலை, நாதன் கஜன் கொலை, லட்சுமி வீடு புகுந்து சூறையாடல், குகநாதன் மீதான கொலை மிரட்டல், சோபாசக்தி மீதான மிரட்டல், எத்தனை எத்தனையோ உண்டு.

இதையெல்லாம் கொலைவெறியுடன் ஆதரிக்கும் நீங்கள், நுண் அரசியல் வழியில் இதை புலிகள் செய்வதாக மார்பு தட்டுவது எமக்கு கேட்கின்றது. எமது மரணம் தான் இதற்கு பரிசென்றால், நாம் அந்த மரணத்தை உங்களின் நுண் அரசியலுக்காக முத்தமிடத் தயாராகவே உள்ளோம்.

***16.04.2007***



படிப்பகம்

www.padippakam.com



# புலியெதிர்ப்பை அரசியலாக கொண்டவர்கள் சார்பாக, தேனீ எமக்கு சொல்ல முனைவது என்ன?

தங்களைப் போல் எப்படி அரசியல் விபச்சாரத்தை செய்வது என்பதை, எமக்கு விளக்க முனைகின்றனர். தேனீ தனது ஏழாவது வருட நிறைவை ஒட்டிய இணையச் செய்தியில், எமக்கு பதில் சொல்ல முனைவதன் மூலம், தமது சொந்த விபச்சார அரசியல் என்ன என்பதையும் எடுத்துக்காட்ட முனைகின்றனர். மக்களின் முதுகில் எப்படி தாங்களும், தங்கள் வழி வந்தவர்களும் சவாரி செய்கின்றனர் என்பதை சொல்லி, அதை எமக்கும் கற்றுத்தர முனைகின்றனர். இதில் வேடிக்கை என்னவென்றால், எமது கருத்துக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் கிடையாது என்கின்றனர். அதாவது ''திரும்பத்திரும்ப ஒரே விடயத்தை வெவ்வேறு வசனங்களில் கூறுவது, சும்மா கிறுக்குவதுபோன்று எழுதுவது, திட்டு எழுத்துகள் போன்றவற்றுக்கு தேனீ ஒருபோதும் மதிப்பளியாது.'' என்றவர்கள், அதே செய்தியில் எமக்கு எதிராக நீண்ட ஒரு பதிலை முன்வைக்கின்றனர். அவர்களின் ஏழாவது வருட அறிக்கை, எமக்கு எதிராக அமைந்ததன் மூலம், புலிகளையல்ல எம்மை எதிர்கொள்வதே அவர்களுக்கு இன்று சவாலாகவுள்ளது. அவர்கள் அதை சவாலாக கொண்டு, முன்வைத்த நீண்ட கருத்தைப் பார்ப்போம்.

''ஜனநாயகத்தின் குரல்களான ரி.பி.சி. வானொலி மற்றும் தேனீ இணையத் தளத்தின் வருகையின் பின்னர் இன்று தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பாக பல புதிய இணையத்தளங்கள் வெளிவந்துள்ளன. இவ்விணையத் தளங்களில் பெரும்பாலானவற்றை தேனீயின் இணைப்புகளில் பார்வையிடலாம். இவ்விணையத் தளங்களின் பல்வேறு பரிமாணங்களையும் பிரித்தறிந்து தனித்தனியே உற்றுநோக்காது கண்மூடித்தனமாக அனைத்துமே வெறும் புலி



படிப்பகம்

www.padippakam.com



எதிர்ப்பு இணையத்தளங்களென முத்திரை குத்துபவர்களும் எம்மிடையே இருக்கத்தான் செய்கின்றார்கள். தமிழ் சமூகத்தினை புலி எதிர்ப்பு, புலி ஆதரவென இரண்டாகப்பிரித்துவிட்டு தாங்கள் இரண்டு பிரிவினரையும் ஒப்புநோக்கும் திறனாய்வாளர்களாக (அதுவும் தாங்கள் மாத்திரம்தான் ஏதோ அங்கீகாரம் பெற்ற ''இடது'' என்கின்ற நினைப்புடன்) இவர்கள் வலம் வருகின்றார்கள். புலிப்பாசிசத்திற் கெதிராகவும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடுபவர்களை புலி எதிர்ப்பென்ற வகையறாக்களாக வர்ணிக்கும் இவர்களின் நோக்கம் எமக்கு புரியாதல்ல. “புலிகளை முற்று முழுதாக அழிப்பது என்பது தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்தை முற்றுமுழுதாக அழிப்பதாகிவிடும்'' என்ற தமிழ்த்தேசியத்தின் மீதான அளவற்ற காதலால் (தீவிர தேசிய வாதம்) புலிகளை திருத்த வேண்டுமென்று கருதும் இவர்கள், தமிழ் ஊடகங்களின் புலிப்பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தை புலி எதிர்ப்பென குறுக்கிவிடப் பார்க்கின்றார்கள். இதன் மூலம் நேரடியாகவே புலி எதிர்ப்பென்ற வகைக்குள் தங்களை அடக்க வேண்டாம் என்றும் கோருகின்றார்கள். அப்படியானால் இவர்கள் யார்? புலி எதிர்ப்புக்கும் புலி ஆதரவுக்கும் இடையிலிருப்பதாக கூறும் இவர்கள் யார்? புலி எதிர்ப்புக்கும் புலி ஆதரவுக்கும் இடையில் என்ன இருப்பதாக இவர்கள் கூற முற்படுகின்றனர்? ஜனநாயகத்திற்கும் பாசிசத்திற்கும் நடுவில் எந்தக்கருத்தோட்டத்தை புகுத்த விளைகின்றனர்? கடந்த இரு தசாப்தகால புலிகளின் நடவடிக்கைகள் அனைத்தையும் வரிசைப்படுத்துவதன் மூலம் புலிகளை ஒரு பாசிச இயக்கமென பகிரங்கமாக அறிவிக்க முன்வருவார்களா? அல்லது புலிகள் ஒரு “தேசிய விடுதலை இயக்கம்'' என்பதையாவது பகிரங்கமாக தெரிவிப்பார்களா? “மக்கள் நலன், மக்கள் நலன்'' எனக்கூறிவிட்டு, முழு இலங்கை மக்களினதும் விரோத இயக்கமான வேலுப்பிள்ளை பிரபாகரனை தலைமையாகக் கொண்ட புலிகளின் பிடிகளிலிருந்து மக்களை விடுவிக்கப்போராடும் ஜனநாயக சக்திகளைப் பார்த்து புலியெதிர்ப்பென்றும், இன்னும் சொல்லப்போனால் ஆதாரங்கள் எதுவுமில்லாமல் இலங்கை அரசு ஆதரவென்றும் பொய்க்கதைகள் புனைகின்றார்கள். புலியெதிர்ப்பென்பதே புலியென்ற இருத்தலை அங்கீகரிக்காதவர்கள். பாசிசத்திற்கென்ன அங்கீகாரம்? பாசிசத்தை நிர்மூலமல்லவா செய்யவேண்டும்.

இந்த மக்கள் நலன் அதிகாரிகள் வெறும் குழப்பவாதிகள். புலிகள் தொடர்பாகவும் இலங்கையிலுள்ள தேசிய இனங்களின் பிரச்சனை தொடர்பாகவும் சரியான நிலைப்பாடு எடுக்கத்தெரியாதவர்கள். 1972 ஆம் ஆண்டின் பின்னர் உருவாகிய தமிழ்த்துரோகிகள் ஒழிப்பு அலை, 1980களில் ஆயுதமேந்திய தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டமென



படிப்பகம்

www.padippakam.com



வர்ணிக்கப்பட்டு, 1986ஆம் ஆண்டு ரெலோ அழிப்பின் பின்னர் தமிழ்த்துரோகிகள் ஒழிப்பு போராட்டமாகவே தொடர்ந்தது. “புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம்'' என்பது “புலிகளின் தாகம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் குருதி'' என்பதாக மாற்றங்கொண்டுள்ளது. இதனால் இலங்கையிலுள்ள தேசிய இனங்களின் பிரச்சனையென்பது புலிப்பாசிஸ்டுகளால் முற்றுமுழுதாக உருமாற்றப்பட்டுள்ளது. (இதைப்பற்றி மிகவும் விரிவாக எழுதப்பட வேண்டும், பரந்தளவில் விவாதிக்கப்பட வேண்டும்) இப்போது பாசிசம் என்ற தடையை அகற்றாமல் இலங்கையிலுள்ள தேசிய இனங்களின் பிரச்சனை முற்றுமுழுதாக தீர்க்க முடியாது என்ற நிலைக்கு நாங்கள் வந்தடைந்துள்ளோம் என்பதே யதார்த்தம். கடந்த இரு தசாப்த காலத்தில் இலங்கையிலுள்ள தேசிய இனங்களின் பிரச்சனை தொடர்பாக தென்னிலங்கை ஆளும்வர்க்கங்களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் இலங்கையிலுள்ள தேசிய இனங்களின் பிரச்சனையை தீர்ப்பதற்கான ஓரளவிற்கேனும் சாதகமான சூழலையே ஏற்படுத்தியுள்ளது. தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள இச்சாதகமான சூழலை, இலங்கையிலுள்ள தேசிய இனங்கள் நுகர முடியாமல் இருப்பதற்கும் புலிகளே காரணம். எந்தவொரு சமூகத்திலும் பிரதானமாக நிலவும் ஒரு கருத்தோட்டத்திற்கு எதிராக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கருத்தோட்டங்களும், அவ்வாறான பல்வேறு வகைப்பட்ட கருத்தோட்டங்களை சீர்தூக்கிப்பார்க்கும் மேலும் பல கருத்தோட்டங்கள் நிலவுவது சர்வசாதாரணமானதே. ஆனால் தமிழ் சமூகத்தில் பிரதானமாக புலி எதிர்ப்பு, புலி ஆதரவென இரண்டு பிரதான கருத்தோட்டங்கள்தான் நிலவுவதாக இந்த மூன்றாம் பாதையாளர்களுக்குத் தெரிகின்றது. புலி எதிர்ப்பு, புலி ஆதரவு என்ற இரண்டையும் நிராகரித்து தமது மூன்றாம்பாதையை கவனத்திற்கொள்ளுமாறு, அவரவர்கள் தம்பாணியில் வேண்டுகோள் விடுக்கின்றார்கள். மூன்றாம்பாதையை நிராகரிக்கும் நாலாம் பாதையும், நாலாம்பாதையை நிராகரிக்கும் மேலும் பல நூறு, ஆயிரம் கருத்தோட்டங்களினூடாகவே சரியான கருத்தென்பதை நாம் வந்தடைய முடியும் என்பதை இந்த சித்தம் கலங்கியவர்கள் மறந்து விடுகின்றனர்.

தேனீ இணையத்தளத்தின் அபரீதமான வளர்ச்சியையும் கடந்த ஆறு வருட காலத்தில் தமிழ் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினையும் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் தொடர்ச்சியாக தேனீ மீது அவதூறுகளையும் வசைகளையும் பொழிந்து வருகின்றனர். புலிகளிலிருந்து புலி அல்லாதவர்களென தங்களைக் கூறிக்கொள் பவர்கள்வரை அவதூறுகளையும் வசைகளையும் பொழிவதில்



படிப்பகம்

www.padippakam.com



முன்னிற்கின்றார்கள். தேனீயை வம்புக்கிழுத்து ஜனநாயகக்குரலினை மழுங்கடிக்கும் திட்ட அட்டவணையைக் கொண்டவர்களின் சூழ்ச்சிகளுக்கு தேனீ ஒருபோதும் பலியாகாது. தேனீயைப்போன்றே, தேனீயின் பல இலட்சம் வாசகர்களும் பண்பாடற்றவர்களின் கூச்சல்களை எளிதில் அசட்டை செய்துவிடு கின்றார்கள். தேனீயில் வெளியாகும் கருத்துகளுக்கு விமர்சனப்பண்புடன் தெரிவிக்கப்படும் எதிர்வினைகளுக்கு மாத்திரமே தேனீ பதிலளிக்க கடமைப்பட்டுள்ளது. திரும்பத்திரும்ப ஒரே விடயத்ததை வெவ்வேறு வசனங்களில் கூறுவது, சும்மா கிறுக்குவதுபோன்று எழுதுவது, திட்டு எழுத்துகள் போன்றவற்றுக்கு தேனீ ஒருபோதும் மதிப்பளியாது.''

இப்படி முதன் முதலாக, முக்கி முனங்கி, அதுவும் பெயர் குறிப்பிடாது, (நாங்கள் மட்டும்தான், அதாவது தமிழ் அரங்கமும் ஒருசில எழுத்தாளர்களும் தான், இக்கருத்து சார்ந்த எழுத்துலகில் உள்ளனர்.) எமக்கு எதிராக தேனீ முன்வைத்த கருத்து. தேனீ தனது ஏழாண்டு நினைவையொட்டி வெளியிட்ட அறிக்கையில், தமிழரங்கம் அவர்களுக்கு மிகப் பெரிய சவாலாக இருப்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது. எமது கருத்தை எதிர்கொள்ள முடியாது, அவர்கள் பாணியில் பல கேள்விகளை எழுப்புகின்றனர். முத்திரை குத்துகின்றனர். பல விளக்கத்தை, பரிதாபகரமாக எமக்கு எதிராக முன்வைக்கின்றனர்.

எம்மிடம் இப்படிக் கேட்கின்றனர் ''கடந்த இரு தசாப்தகால புலிகளின் நடவடிக்கைகள் அனைத்தையும் வரிசைப்படுத்துவதன் மூலம், புலிகளை ஒரு பாசிச இயக்கமென பகிரங்கமாக அறிவிக்க முன்வருவார்களா?'' இப்படி கேட்கும் இவர்கள், எமது கருத்துகள் தெரியாத வண்ணம், ஊர் உலகத்தின் கண்ணையே புலியைப் போல் கட்டி வைத்துவிட்டு, மற்றவன் கேனயன் என்ற நினைப்பில் இப்படி உளறுகின்றனர். எமது புலம்பெயர் சமூக செயல்பாடாக வெளிவந்த சமர் முதல் முதலிலேயே, புலிப்பாசிசத்தை அம்பலப்படுத்த தொடங்கியவர்கள் நாங்கள். நீங்கள் இலக்கியம் என்ற பெயரில், வம்பளந்து கொசுறு அடித்த காலத்தில் எல்லாம், தன்னந் தனியாக பாசிசத்துக்கு எதிராக போராடியவர்கள். புலம்பெயர முன்பு, புலிக்கும் மற்றைய இயக்கங்களுக்கும் எதிரான போராட்டங்கள் பலவற்றை நடத்தியவர்கள் மட்டுமல்லாது தலைமை தாங்கியவர்கள். அனைத்து இயக்க பாசிசத்தையும் எதிர்த்து, அந்த மண்ணில் மக்களுடன் மக்களாக நின்று முன்னெடுத்தவர்கள். எந்த மாற்று இயக்கமும் இதற்காக போராடவில்லை. நாங்கள் சுயாதீனமாகவும், அமைப்பு ரீதியாகவும் தலைமை தாங்கி போராடியவர்கள். இதனால் மக்களுக்காக மட்டும் போராடிய எம்மில், பலர் கொல்லப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com



நாங்கள் சந்ததியார் நடத்திய போராட்டத்தின் பின்னணியில், தீப்பொறி நடத்திய போராட்டத்தின் பின்னணியில், புளாட் நடத்திய பின்தளமகாநாட்டின் உள்ளேயும், ரெலோவில் நேரு (நேரு பின் எம்முடன் இணைந்த போது ரெலோவால் கொல்லப்பட்டவர். இதற்கு எதிராக ஒரு இலட்சம் துண்டுப் பிரசுரத்தை விநியோகித்தோம். இதன் போது பலர் தாக்கப்பட்டனர்.) போன்றவர்கள் நடத்திய போராட்டத்தில், ரெலோ தாஸ்சுக்கு அரசியல் ரீதியாக வழிகாட்டும் பின்னணியில், ஈ.பி.ஆர்.எல்.எப் செழியன் தாஸ் நடத்திய போராட்டத்தின் பின்னணியில் எல்லாம், இப்படி பல நூறு போராட்டங்களின் மக்கள் நலனை முன்னிலைப்படுத்திய போராட்டத்தில், நாம் அவர்களுக்கு துணை நின்று அக்கம்பக்கமாக மக்கள் நலனை முன்னிறுத்தி போராடியவர்கள்.

புலிப்பாசிசம் என்பதை நீங்கள் சொல்லும் முன்னமே, நாம்தான் கோட்பாட்டு ரீதியாக முன்வைத்தவர்கள். எம்மிடமிருந்து இந்த புலிப்பாசிசம் என்ற சொல்லை இரவல் எடுத்தவர்கள், இன்று அதைத் தாமே முதன் முதலாக முன்வைத்ததாக கரடி விடுகின்றனர். அத்துடன் எம்மிடமே பாசிசத்தை பற்றி கதைக்க முடியுமா, என்று எதிர்க்கேள்வி கேட்கின்றனர். வரலாற்றை இருட்டடிப்பு செய்து மிதக்கின்ற இந்தப் பொறுக்கி அரசியல் பிழைப்புவாதிகள், கண்ணை மூடிக் கொண்டு பால் குடிக்கும் பூனைகளுக்கு வேண்டுமானால் கதை சொல்லலாம். ஆனால் உண்மை அதுவாகிவிடாது.

இவை எல்லாம் அரசியல் வேடிக்கைதான். புலிப் பாசிசத்தை தொடர்ச்சியாக எதிர்த்து போராடியதில் நாங்கள் மட்டும்தான் தனித்துவமானவர்கள். புலிப் பாசிசத்தின் கடந்தகால நிகழ்வுகள் மீது, வேறு யாரும் எதிர்வினையாற்றியதை விட, நாங்கள்தான் முழுமையான அதன் வரலாறு முழுக்க எதிர்வினையாற்றியவர்கள். புலிகளை மட்டுமல்ல, அனைத்து இயக்கத்துக்கும் எதிராக நாம் போராடியுள்ளோம். புலி இயக்கம் இன்று வெறும் பாசிச இயக்கம் மட்டுமல்ல. அது கொள்ளைக்கார, கொலைகார, மாபியா இயக்கம் கூட. இதை வெறும் சம்பவ ரீதியாக நாங்கள் வகைப்படுத்தவில்லை. அரசியல் ரீதியாக, உங்களிடமிருந்து வேறுபட்ட வகையில் அறிவித்தவர்கள்.

பாசிச இயக்கமாக அறிவிக்க முடியுமா? என்று கேட்கின்றனர். எமது போராட்ட வரலாறு நீண்டு கிடக்கும் போது, புலியைப் போல் புலியெதிர்ப்பை மட்டும் தான் படிப்பவரா? என்ற சந்தேகத்தை நாம் முன்வைக்கமுடியும். புலிகள் ஒரு பாசிச இயக்கம் என்பதை, அனைத்து புலியெதிர்ப்புக் கும்பலையும் விட தெளிவாக



படிப்பகம்

www.padippakam.com



முதன்முதலாக முன்வைத்தவர்கள் நாங்கள். இவர்களின் புலியெதிர்ப்பு, புலியின் பாசிசத்தை அது கொண்டுள்ள சமூக பொருளாதார கொள்கை அடிப்படையில் கூறியதேயில்லை. எம்மிடம் இருந்து அதை வெறும் சொல்லாக பொறுக்கி அதை ஒப்புக்கு புலம்புகின்றனர். புலி கொண்டுள்ள சமூக பொருளாதார பாசிச கொள்கையைத்தான், புலியெதிர்ப்பும் கொண்டுள்ளது. இதை மீறி புலி அரசியலுக்கு வெளியில் புலியெதிர்ப்பிடம் வித்தியாசங்கள் எதுவும் கிடையாது.

''மக்கள் நலன், மக்கள் நலன்'' எனக்கூறிவிட்டு, முழு இலங்கை மக்களினதும் விரோத இயக்கமான வேலுப்பிள்ளை பிரபாகரனை தலைமையாகக் கொண்ட புலிகளின் பிடிகளிலிருந்து மக்களை விடுவிக்கப்போராடும் ஜனநாயக சக்திகளைப்பார்த்து புலியெதிர்ப் பென்றும், இன்னும் சொல்லப்போனால் ஆதாரங்கள் எதுவுமில்லாமல் இலங்கை அரசு ஆதரவென்றும் பொய்க்கதைகள் புனைகின்றார்கள். புலியெதிர்ப்பென்பதே புலியென்ற இருத்தலை அங்கீகரிக்காதவர்கள். பாசிசத்திற்கென்ன அங்கீகாரம்? பாசிசத்தை நிர்மூலமல்லவா செய்யவேண்டும்.'' என்கின்றனர்.

மக்கள் நலனை தூக்கினால் புலியெதிர்ப்பு என்கின்றனர்.

எம்மைப் பார்த்து இவ்வாறு கேட்கின்றனர். புலியை நிர்மூலமல்லவா செய்ய வேண்டும். பாசிசத்தை எப்படி அங்கீகாரம் செய்யமுடியும்? நல்லதொரு வேடிக்கை. தேனீ ஆசிரியர் நித்திரை கொள்கின்றார் போலும். புலி அரசியலை ஒழிக்க வேண்டும், பாசிசத்தை எதிர்த்து போராட வேண்டும் என்பதை, புலியெதிர்ப்புக் கும்பல் கும்பகர்ணன் நித்திரையில் கனவு கண்டு எழ முன்னமே, அதற்கு எதிராக போராடியவர்கள் நாங்கள். வரலாற்றை இருட்டடிப்பு செய்து, திரித்து உண்மைக்கு மாறாக அனைத்தையும் புனையலாம்.

பொய்யர்களாக, புரட்டுப் பேர்வழிகளாக கடந்தகால போராட்டத்தையே திரிப்பதைப் பார்ப்போம்.

''புலிப்பாசிஸ்டுகளால் மாற்றுக்கருத்துக்கொண்ட பல்லாயிரக்கணக் கானவர்களின் குரல்வளைகள் அறுத்தெறியப்பட்டு, ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில்தான் மாற்றுக் கருத்துக்களின் ஒரேயொரு குரலாக தேனீ இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது.'' என்கின்றனர்.

இதில் இரண்டு அப்பட்டமான பொய்களை இந்த புரட்டுப் பேர்வழிகள்



படிப்பகம்

www.padippakam.com



முன்வைக்கின்றனர்.

1. ''மாற்றுக்கருத்துக்களின் ஒரேயொரு குரலாக'' தாம்தான் போராட்டத்தை தொடங்கியதாக ஊருக்கும் உலகத்துக்கும் கதைவிடுகின்றனர்.

2. ''மாற்றுக்கருத்துக்களின் ஒரேயொரு குரலாக'' முதல் இணையத்தை தொடங்கியதும், தாமே என்கின்றனர்.

இரண்டுமே அப்பட்டமான வெளிப்படையான பொய். மாற்றுக் கருத்துக்கான எமது மக்களின் போராட்டம் தொடர்ச்சியானது. பல்வேறு வகையில் பலதரப்பினர் அதற்காக போராடியுள்ளனர். எமது மண்ணிலும் சரி, புலம்பெயர் சமூகத்திலும் சரி, தேனீயின் கூற்று அப்பட்டமான புரட்டை அடிப்படையாக கொண்ட பொய்யாகும். இதை நாங்கள் நிருபிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

இரண்டாவது மாற்றுக் கருத்துக்கான இணையத்தில் தேனீயினதே முதலாவது என்பது அடுத்த பொய். இதற்கு முன்னமே எமது இணையம் இருந்து வந்தது. தேனீயின் இணைய தோற்றத்துக்கு முந்தைய சமர் இதழ்களில், இந்த இணைய வரவு பதிவாகியுள்ளது. இப்படி பொய்யும் புரட்டுமாகவே போராடி வந்தவர்களின் வரலாற்றை திரித்து, சொந்த மக்கள் விரோத வரலாற்றை இட்டுக் கட்டுகின்றனர். பின் ''தமிழ் பேசும் மக்களின் ஜனநாயகக்குரல் தேனீ இணையத்தளம்'' என்கின்றனர். தாம் மட்டுமே, அதாவது புலியெதிர்ப்பு மட்டுமே புலிப்பாசிசத்தை எதிர்த்து போராடியதாக காட்டமுனைகின்றனர். அதைத் தான் முக்கி முனங்கி பேசுகின்றனர். இவர்கள் ''ஜனநாயகக்குரல்'' என்று சொல்வது என்ன?

1. புலியை எதிர்க்கின்ற கருத்துக்கள். ஆனால் அது

2. புலியெதிர்ப்பு கருத்தாக இருக்க வேண்டும்.

3. இந்த அசிங்கங்களை அம்பலப்படுத்தாததாக இருக்க வேண்டும்.

இதைத்தான் இவர்கள் தமிழ் மக்களின் ''ஜனநாயகக்குரல்'' என்கின்றனர். தமிழ் மக்களின் ஜனநாயகத்தை, இப்படி புலிக்கு எதிராக மட்டும் சுருக்குகின்றனர். தமிழ் மக்களின் பிரச்சனைகள் அனைத்தும், புலிப் பிரச்சனையாக காட்டி விடுகின்றனர். இதற்கு அப்பால் எதையும், இவர்கள் வெளியிட்டதாக கூறும் 1500 கட்டுரைகளும் வெளிக் கொண்டு வந்தது கிடையாது. அதை நாம்



படிப்பகம்

www.padippakam.com



தான், எமது கருத்துநிலை மட்டும்தான் வெளிக்கொண்டு வருகின்றது.

''வேலுப்பிள்ளை பிரபாகரனை தலைமையாகக் கொண்ட புலிகளின்..'' என்கிறீர்களே. வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையால்தான் பாசிசம் என்று கூறுகின்ற அரசியல் வக்கிரம் வெளிப்படுகின்றது. புலிகளின் பாசிசம், அது கொண்டுள்ள சமூக பொருளாதார உள்ளடக்கத்தில் இருந்து தோன்றுவதே. இதற்கு பிரபாகரன் தலைமை தாங்க வேண்டிய அவசியம் கிடையாது, கருணாவும், தேனீயும் கூட இந்த சமூக பொருளாதார அரசியலில் பாசிசத்தையே முன்வைப்பர். இந்த நியதி இவர்கள் எவருக்கும் விதிவிலக்கல்ல.

நீங்கள் கூறுகின்றீர்கள் ''பாசிசத்தை நிர்மூலமல்லவா செய்யவேண்டும்.'' என்று. ஆம் நிச்சயமாக, ஆனால் எப்படி? இதற்கு எங்களதும் உங்களதும் வழிமுறைகள் முற்றிலும் வேறு வேறானது. இந்தக் கேள்விக்கு நீங்கள் நேரடியாக பதிலளிப்பது கிடையாது. தமிழ் மக்களுக்கு இதை சூக்குமமாக ஒளித்து ஓதி, அதை மறைத்து சதித்தனமாகத்தான் புகுத்துபவர்கள் நீங்கள். எப்படி இந்த புலிப்பாசிசத்தை நிர்மூலம் செய்வது என்று நீங்கள் பார்க்கின்றீர்கள் என்பதை முதலில் பார்ப்போம்.

இந்த வகையில் புலியை யார் அழித்தாலும், அழிக்க முயலுகின்ற அனைத்தையும் ஆதரிக்க வேண்டும் என்கின்றீர்கள். இந்தவகையில் புலியை அழிக்கும்

1. ஏகாதிபத்தியம்
2. இந்தியா
3. சிங்களப் பேரினவாதம்
4. இவற்றுக்கு கூலிக் குழுக்களாக செயல்படுவர்கள்

என அனைவரையும் ஆதரித்து, பாசிசத்தை ஒழிப்பதைப்பற்றி பேசுகின்றீர்கள்.

இதைத் தவிர உங்களிடம் சுயாதீனமாக பாசிசத்தை நிர்மூலம் செய்யும் வேறு எந்த அரசியல் வழியும் கிடையாது. இதுவே புலியெதிர்ப்பு கும்பலின் ஒரேயொரு அரசியல் சாரமாகும். இதில் இருந்து நாங்கள் முற்றிலும் வேறுபட்ட மாற்று வழியை வைக்கின்றோம்.

நாங்கள் புலிப் பாசிசத்தை நிர்முலமாக்க முன்வைக்கும் வழியென்ன? மக்கள் மட்டும்தான் புலியை தோற்கடிக்க முடியும் என்கின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com



மக்களுக்கு எதிரான, மக்கள் அல்லாத எந்த சக்திக்கு பின்னாலும் நாம் பாசிச ஒழிப்பில் ஒன்றுபடுவதை நாம் மறுதலிக்கின்றோம். அதுவே மற்றொரு பாசிசமாகவே இருக்கின்றது. மக்கள்தான் பாசிசத்தை ஒழிக்க முடியும் என்பது, பலருக்கு ஆச்சரியமான, அருவருப்பூட்டும் ஒரு விடயமாக உள்ளது. இது நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்று என்பதே, இவர்கள் சொல்ல முனையும் வாதங்களில் ஒன்று. இதனால் புலியை ஒழிக்க மக்கள் அல்லாத வழியை ஆதரிக்க வேண்டும் என்பதே, புலியெதிர்ப்பு கும்பலின் அரசியல் சாரமாக உள்ளது. இந்த வகையில் மக்களை சார்ந்து நின்று புலியை அழிப்பதை கோரும் அரசியலை, புலிகள் சார்பு என்று முத்திரை குத்த புலியெதிர்ப்பு கும்பல் முனைகின்றனர்.

புலிகள் முதல் புலியெதிர்ப்புக் கும்பல் வரை மக்கள் பற்றி கதைப்பதும், மக்களின் நலனில் இருந்து அவர்களை சிந்திக்க தூண்டுவது, வெறுப்புக்குரிய ஒன்றாக அவர்கள் முன் உள்ளது. மக்கள் தமது பிரச்சனைக்கூடாக, தமது சொந்த அதிகாரத்தை கைப்பற்றுவது என்ற விடையம் வெறுப்புக்குரிய ஒன்றாக பார்க்கப்படுகின்றது. இதனால் இதற்கு எதிரான வகையிலும், மக்களின் எதிரிகளுடன் சேர்ந்தும், தத்தம் அரசியலை முன்வைக்கின்றனர். இதுவே விடுதலைக்குரிய வழி என்கின்றனர். இதையே முற்போக்கு, மாற்றுக் கருத்து, ஜனநாயகத்தின் குரல் என பலவிதமாக புலம்புகின்றனர். மக்களைச் சார்ந்து நிற்காத இவர்களின் அரசியல் யாருடைய, எந்த மக்களுடைய விடுதலையை பெற்றுத்தரும்?

மக்கள் மட்டும் தான் புலிகளை தோற்கடிக்க முடியும் என்ற எமது நிலைப்பாடு, உங்கள் நிலைப்பாட்டில் இருந்து முற்றிலும் வேறானது. புலிகளை மக்கள் தோற்கடிக்காமல், ஒரு நாளுமே ஏகாதிபத்தியமோ, பேரினவாதமோ அல்லது எந்த புலியெதிர்ப்பு சக்தியும் புலிகளை தோற்கடிக்க முடியாது. மக்கள்தான் புலிகளை தோற்கடிக்க வேண்டும். இந்த வகையில்தான், இன்று மக்கள் புலியை தோற்கடிக்கின்றனர். இது நாங்கள் வைத்த கருத்துக்களால் அல்லது உங்களுடைய புலியெதிர்ப்பு குதர்க்கங்களால் இவை நடக்கவில்லை. மாறாக புலிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு, முற்றிலும் முரணிலைத் தன்மையை அடைந்துள்ளதால், புலிகளை மக்கள் தோற்கடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இது தன்னியல்பாக, அன்றாட புலி நிகழ்ச்சி நிரலின் மீது நிகழ்கின்றது. இங்கு கருணா முதல் பேரினவாதச் சக்திகளின் வெற்றி என்று பலராலும் கூறப்பட்டு, நம்பப்படும் அனைத்தும் மக்கள் தோற்கடித்த வெற்றிடத்தில் நிகழ்கின்றது. இதை மக்கள் விரோத பிற்போக்குவாதிகளின் ஆயுதங்களோ, கூலி கும்பல்களோ தீர்மானிக்கவில்லை. மாறாக



படிப்பகம்

www.padippakam.com



மக்கள் புலிகளை தோற்கடித்துவிட்டதால், புலிகளின் இறுதி கிரியைகள் நடக்கின்றது.

மக்கள் புலிகளை தோற்கடிக்கின்றனர் என்றால், மக்களுக்கும் புலிக்குமான உறவில் உள்ள பாரிய இடைவெளியால் நிகழ்கின்றது. இது தன்னியல்பாக நிகழ்வதால், மக்கள் தமது சொந்த அதிகாரத்தை பெறமுடிவதில்லை. இதனால் படுபிற்போக்கான புலியெதிர்ப்பு சக்திகள், இதைப் பயன்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்றுகின்றனர். உண்மையில் மக்களின் மற்றொரு எதிரி, புதிதாக மக்களை அடக்கியாள புலிக்கு பதிலாக வருகின்றனர். இதைத்தான் நீங்கள் ஜனநாயகம் என்று கூறி, நாயாக வாலாட்டி நக்குகின்றீர்கள். மக்கள் சந்திப்பது மறுபடியும் உங்கள் புதிய பாசிசத்தைத்தான்.

இந்த வகையில் மக்கள் தோற்கடிக்கும் புலிக்கு மாறாக, அந்த வெற்றிடத்தில் புகுந்து கொள்ளும் மக்கள் விரோத கும்பல்கள் புலியைப் போன்ற அல்லது புலியை விட மோசமான மற்றொரு பாசிட்டுக்களே.

தேனீ முதல் அனைத்து புலியெதிர்ப்புக் கும்பலும் பாசிச ஒழிப்பில் ஆதரிக்கும் பேரினவாத பாசிச அரசு, இலங்கையில் நடத்திய மனிதப்படுகொலை புலியை விட பலபத்து மடங்கு அதிகமானது. 1971 இல் 30000 சிங்கள இளைஞர்களை கொன்றது இந்த அரசு, 1989-1990 இல் 60 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் சிங்கள இளைஞர்களைக் கொன்றதும் இதே அரசு தான். இவை எல்லாம் யுத்த முனையில் கூட அல்ல. புலியைப் போன்ற படுகொலைகளே. இதே பேரினவாதம் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய படுகொலை, 20000 முதல் 40000 பேரைக் காவுகொன்றது. இப்படி ஒரு கொலைகார பாசிசக் கும்பல், புலிப் பாசிசத்தை ஒழிப்பது என்று கூறுவதும், அதை ஆதரிப்பதும் புலியெதிர்ப்பு அரசியல் விபச்சாரமாக உள்ளது.

உதாரணமாக அமைதி சமாதான காலத்தில் (கடந்த ஒரு வருடத்துக்கு முன்னமாக) புலிகள் 300 முதல் 1000 பேரைக் கொன்றனர் அல்லது கடத்திச் சென்றனர். இதன் பின்பான அமைதியும் சமாதானமும் கொண்ட யுத்த சூழல் காலத்தில், கடந்த ஒரு வருடத்தில் சிங்கள பேரினவாத பாசிசம் கடத்தி காணாமல் போனோர் தொகை 1000கும் மேலாகும். மோதலற்ற சூழலில், இனம் காணப்பட்டு பேரினவாத பாசிசத்தால் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் மேலாக உள்ளது. இதை எல்லாம் இன்று பேரினவாதம் தான் செய்கின்றது. இதை புலியெதிர்ப்புக் கும்பல் எதிர்ப்பதில்லை, மாறாக ஆதரிக்கின்றது. பாசிச ஒழிப்பின் நட்பு சக்தியின், இச் செயல்கள் தான் பாசிசத்தை ஒழிப்பதற்கான இவர்கள்



படிப்பகம்

www.padippakam.com



முன் உள்ள ஒரே வழியாகும்.

புலியெதிர்ப்புக் கும்பலின் எந்த இணையம், அண்மைக்காலமாக நடக்கும் கடத்தல், மற்றும் கொலைக்காக அரசைக் குற்றம் சாட்டினர்? அரசின் கூலிக்கும்பலாக திரியும் கருணா முதல் பலரும் நடத்தும் கொலைகள், ஆள் கடத்தல்கள் கப்பம் போன்றவற்றை யார் சுட்டிக்காட்டி கண்டித்தனர்? இவர்கள் அதைக் கண்டிக்கவும், சுட்டிக்காட்டவும் மாட்டார்கள். இந்த பாசிச கொலைகார கும்பல்கள் நடத்தும் அரசியல் கொலை வெறியாட்டம், புலிப் பாசிசத்தை ஒழிக்கும் போராட்டத்தின் ஒரு அம்சமாக இவர்கள் முன் உள்ளது. இவர்கள் தான், இவர்களின் பாசிச ஒழிப்பில் துணை நிற்கும் சக்திகள் என்ற வகையில், அதை பாதுகாப்பது இவர்களின் அரசியல் சாரமாகும்.

புலிப் பாசிசத்தை எப்படி ஒழிப்பது என்றால், இது போன்ற இனம் தெரியாத படுகொலைகள் மூலமும், புலிகளை கொல்லும் அரசையும் அதையொத்த கும்பல்களின் நடவடிக்கையை ஆதரிப்பதிலும் தான் இவர்களின் அரசியல் உள்ளது. இதை விட மாற்றாக என்னதான், புலிப் பாசிச ஒழிப்பு வேலைத்திட்டம் என்று இவர்களிடம் தனியாக உள்ளது?

புலிப்பாசிச ஒழிப்பில் உங்களுடைய இந்த அரசியல் வழியை நாங்கள் அங்கீகரிப்பது கிடையாது. அதேபோல் புலிக்கு பதில் மற்றொரு பாசிட்டுகள் வருவதையும் நாம் அங்கீகரிப்பதில்லை. இதை புலி ஆதரவாக அல்லது புலி சார்புள்ளதாக காட்ட முனைவது நகைப்புக்குரியது. கடந்த 25 வருடத்தில், 1980 முதலாகவே நாம் அல்லது நான் இந்த புலிப்பாசிசத்தை தொடர்ச்சியாக விமர்சித்தளவுக்கு, யாரும் இது வரை விமர்சித்தது கிடையாது. இந்த விடையம் தொடர்பாக 1990 க்கு பின் அண்ணளவாக 1000 கட்டுரைகளுக்கு மேல் எழுதியுள்ளேன். முக்கியமான அனைத்து நடவடிக்கைகளையும் விமர்சனத்துக்கு உள்ளாக்கியுள்ளோம். நாங்கள் உங்களைப் போல் கனவு கண்டு திடீரென எழுந்தவர்கள் அல்ல.

திடீர் கனவு கண்டு எழுபவன்தான், மக்களை கண்டு கொள்வதில்லை. வாயில் வந்த மாதிரி உளறுவதே, இவர்களின் அரசியலாகும். இந்த அரசியல் உளறலைப் பார்ப்போம் ''இதன் மூலம் நேரடியாகவே புலி எதிர்ப்பென்ற வகைக்குள் தங்களை அடக்க வேண்டாம் என்றும் கோருகின்றார்கள். அப்படியானால் இவர்கள் யார்? புலி எதிர்ப்புக்கும் புலி ஆதரவுக்கும் இடையிலிருப்பதாக கூறும் இவர்கள் யார்? புலி எதிர்ப்புக்கும் புலி ஆதரவுக்கும் இடையில் என்ன இருப்பதாக இவர்கள் கூற முற்படுகின்றனர்? ஜனநாயகத்திற்கும் பாசிசத்திற்கும்



படிப்பகம்

www.padippakam.com



நடுவில் எந்தக்கருத்தோட்டத்தை புகுத்த விளைகின்றனர்?'' ஏதோ புத்திசாலித்தனமாகவும், தர்க்கமாக விவாதிப்பதாகவும் எண்ணிக் கொண்டு, இப்படி உளற முடிகின்றது. சொந்த பாசிசக் கோட்பாட்டை இதைவிடவும் அழகாக யாரும் வைக்க முடியாது. இந்த பாசிசத்தை, இந்த மக்கள் விரோத நிலையை நாம் புரிந்து கொள்ள முனைவோம்.

''புலி எதிர்ப்புக்கும் புலி ஆதரவுக்கும் இடையில் என்ன இருப்பதாக'' கேட்கின்றனர்? இதை இப்படியும் கூறலாம். புலி எதிர்ப்புக்கும் சிங்கள பேரினவாதத்துக்கும் இடையில் என்ன இருப்பதாக கருதுகின்றீர்கள்? உள்ளடக்க ரீதியாக இதைத்தான் வெளிப்படுத்துகின்றது. இந்தக் கேள்வியை புலியும் கேட்கமுடியும், புலி எதிர்ப்பும் கேட்க முடியும். பாவம் பரிதாபத்துக்குரியவர்கள். ''புலி எதிர்ப்புக்கும் புலி ஆதரவுக்கும் இடையில் என்ன இருப்பதாக'' கருதுகின்றனர் என்று கேட்பவர்கள் , அங்கு மக்கள் இருக்கின்றனர் என்பதை இவர்கள் காண்பதில்லை.

புலி எப்படி மக்களுக்கு எதிராக இருக்கின்றது என்பதை முதலில் இவர்கள் காண்பதில்லை. அந்த வகையில் மக்களின் நலனை உயர்த்தத் தவறுவதன் மூலம், இவர்கள் மக்களுக்கு எதிராக இருக்கின்றனர். இதனால் இடையில் என்ன இருக்கின்றது என்று தெரியாதது போல் கேட்கின்றனர். இடையில் மக்கள் இருக்கின்றனர் என்பதும், மக்களுக்காக போராடுவதையே நாங்கள் முன்னிலைப்படுத்தியும் நிற்கின்றோம்.

புலி ஆதரவு எப்படி மக்களுக்கு எதிராக இருக்கின்றதோ, அது போல் புலியெதிர்ப்பும் மக்களுக்கு எதிராக எதார்த்தத்தில் இருக்கின்றது. புலியெதிர்ப்பு மக்களுக்கு எந்த வகையில், எப்படி ஆதரவாக இருக்கின்றது என்பதைக் காட்டமுடியாது. அதனால் மக்கள் பிரச்சனையை அவர்கள் விவாதிக்க மாட்டார்கள். அதே புலி அரசியல், புலிக் கொள்கை, புலிக் கோட்பாடுகள், இதை விட வேறு எதுவும் இவர்களிடம் கிடையாது. இதை மேலும் விளங்கிக் கொள்ள, புலியெதிர்ப்பு என்பது, புலிக்கு எதிரான அனைத்தையும் சார்ந்து நிற்றலை குறிக்கின்றது. ஏகாதிபத்தியம் முதல் இலங்கை பேரினவாதம் வரையான அவர்களின் அரசியல் பொருளாதார பாசிச செயல்பாட்டை ஆதரிப்பதும், அதை நியாயப்படுத்துவதும், அதற்கு மண்டியிட்டு வாலாட்டுவதும்தான் புலியெதிர்ப்பு. இதற்கும் மக்களுக்கும் என்ன தொடர்பு?

மக்கள் நலனை முன்வைப்பதே எங்கள் கருத்துக்கள். இவ் விரண்டுக்கும் எதிராக உள்ளது. மக்கள் நலன் என்னவென்று சில மக்கள் விரோத புல்லுருவிகள் ஆச்சரியமாகவும், அதே நேரம் இது



படிப்பகம்

www.padippakam.com



ஒரு அதிசயமானதாகவும் கேட்கின்றனர். மக்கள் நலன் என்பது என்ன? நான் எழுதிவரும் மற்றொரு கட்டுரையான, கருணா எப்படி மக்கள் விரோதி என்ற கட்டுரை, அதை தனியாக ஆராய்கின்றது. அப்போது அங்கு அதை அம்பலப்படுத்துவோம்.

''பாசிசத்தை நிர்மூலமல்லவா செய்யவேண்டும்.'' என்ற உங்கள் வாதத்தை எடுத்தால், ஏன் எதற்கு நிர்மூலம் செய்யவேண்டும்? இந்த கேள்விக்கான பதிலை நீங்கள் தர முடியாது. புலிப் பாசிசத்தை எதிர்கொள்வது என்பது, உங்கள் வீட்டுச் சொத்தல்ல. புலிப்பாசிசம் தமிழ் மக்களின் வாழ்வை அழிக்கின்றது. அது எப்படி அழிக்கின்றது. தமிழ் மக்களின் அரசியல் பொருளாதாரம் என அனைத்தையும் அழிக்கின்றது. இந்த வகையில் இந்த பாசிசத்தை எதிர்கொள்வது என்பது, மக்களின் வாழ்வுக்கான அடிப்படையாகும். பாசிசத்தை மக்கள்தான் எதிர்கொள்ள முடியும். தனிமனிதர்கள் இதில் ஒரு அங்கமே ஒழிய, இதற்கு வெளியில் மற்றொரு பாசிட்டுகளுடன் சேர்ந்து இதைக் களையப் போவதாக கூறுவதும், கட்டுரைகளை எழுதுவதும் மக்களுக்கு எதிரான ஒரு பாசிச எதிர்ப்புரட்சிதான்.

மக்களை விட்டுவிட்டு, மக்களை அவர்களின் வாழ்வு சார்ந்த விடயங்கள் மீது அணிதிரட்ட முயலாது, எப்படித்தான் இந்த புலியெதிர்ப்புக் கும்பல் பாசிசத்தை ஒழிக்கமுடியும். உண்மையில் மற்றொரு பாசிட்டுகளின் விபச்சாரத்துக்கு பாய் தான் விரிக்கமுடியும். கருணா என்ற பாசிச கும்பலுக்கும், ஜே.வி.பியின் இனவாதத்துக்கும், இது போன்ற மக்கள் விரோத செயல்கள் அனைத்துக்கும், அதாவது புலிகள் அல்லாத அனைத்துக்கும் மக்கள் அல்லாத அனைத்துக்கும் பாய்விரித்து விபச்சாரம் செய்வதைத் தான், பாசிச ஒழிப்பாக, ஜனநாயக குரலாக, மாற்றுக் கருத்தாக காட்ட முனைகின்றனர். மக்களுக்கு இதற்கு வெளியில் எதையும் இவர்கள் சொல்லி இருப்பதில்லை. இதனால் நாங்கள் தனித்துவமாக மக்கள் வாழ்வியல் பிரச்சனையை முன்வைக்கின்றோம்.

எமது பாசிச ஒழிப்பு என்பது, மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சனை ஊடாக அதைக் களைவதை முன்வைக்கின்றது. இந்த பாசிச ஒழிப்பு என்பது புலிப் பாசிசத்தை மட்டுமல்ல, அதற்குப் பதிலீடாக வர முனையும் புலியெதிர்ப்பு பாசிசத்தையும் ஒழிப்பதையும் கோருகின்றது. ''ஜனநாயகத்திற்கும் பாசிசத்திற்கும் நடுவில் எந்தக்கருத்தோட்டத்தை புகுத்த விளைகின்றனர்?'' இது ஒரு நல்ல எடுப்பான தர்க்கம் தான். ஜனநாயகம் என்றால் என்ன? பாசிசம் என்றால் என்ன? என்ற கேள்வி இங்கு அடிப்படையானது. பாசிசம் என்பதை வெளிப்படையான ஒடுக்குமுறையைக் குறித்து மட்டும் காண்பது, அரசியல் தெரியாத



படிப்பகம்

www.padippakam.com



அப்பாவித்தனமாகும். மக்களை அடக்கியாள பாசிசம் ஏன் எதற்கு ஒரு ஆளும் வர்க்கத்துக்கு அவசியமாகின்றதோ, அதேபோல் இந்த ''ஜனநாயகம்'' ஆளும் வர்க்கத்துக்கு தேவைப்படுகின்றது.

''ஜனநாயகம்'' ஒரு சமூக அமைப்பில் இருப்பதாக கூறும் போது, அங்கு ''ஜனநாயகம்'' மறுக்கப்படுவதாகவே அர்த்தம். அனைவருக்கும் ''ஜனநாயகம்'' இருந்தால், ஜனநாயகம் என்ற சொல் அர்த்தமிழந்து விடும். அதாவது ''ஜனநாயகவாதி'', ''ஜனநாயக அரசு'' என்று கூறுவது பைத்தியக்கார செயலாகிவிடும். ''ஜனநாயகம்'' மறுக்கப்படும் போது தான், ''ஜனநாயகம்'' இருப்பதாக பீற்றப்படுகின்றது. உண்மையில் ''ஜனநாயகத்தை'' அனைவருக்கும் மறுத்தல்தான் ''ஜனநாயகம்'' எனப்படுகின்றது . ''ஜனநாயகம்'' மீதான நெருக்கடி தான் பாசிசமாக மாறுகின்றது. ''ஜனநாயகத்தை'' பாதுகாப்பதாக கூறிக் கொண்டு அதை மறுக்கும் சமூக அமைப்பின் நெருக்கடிதான் பாசிசம். போலியான ''ஜனநாயகத்தைக்'' கொண்டு மக்களை சுரண்டி ஆளமுடியாது என்ற நிலையில் தான், பாசிசமாக வெளிப்படுகின்றது.

பாசிசம், ''ஜனநாயகம்'' பற்றி ஒரு தெளிவான உண்மை இது. இந்த இடத்தில் புலியெதிர்ப்புக் கும்பல் ''ஜனநாயகத்தை'' கொண்டுள்ளதா? எனின் அதுவும் கிடையாது. அதுவும் பாசிசம்தான். புலியை பாசிசமாக இருப்பதாக கூறிக் கொண்ட, மற்றொரு பாசிசக் கும்பல்தான் புலியெதிர்ப்பு. புலியின் மக்கள் விரோத அரசியலையும், அதன் பொருளாதார கொள்கையையும் விமர்சிக்காது அதை முன்னெடுக்கும் யாரும், பாசிசத்தின் எடுபிடிகள்தான். புலியின் அதே கொள்கையைக் கொண்ட கும்பல்தான் புலியெதிர்ப்பும். புலிப்பாசிசத்தின் அனைத்துக்கும் தோற்றுவாயாக இருப்பது, அதன் அரசியல் பொருளாதார கொள்கைதான். இதையே கொண்டுள்ள மற்றவர் களுக்கு அதிகாரம் இல்லாமையால், அவர்களின் பாசிசம் அப்பட்டமாக வெளிப்படுவதில்லை. ஆனால் கருணா கும்பல் முதல் இந்தியாவின் கூலிப்படையாக இயங்கிய ஈ.என்.டி.எல்.எப், ஈ.பி.ஆர்.எல்.எப் முதல் பலரும் இதை ஏற்கனவே நிறுவியவர்கள். மக்களின் அன்றாட வாழ்வியல் போராட்டத்தில் இணங்கி நிற்காத யாரும், ஆயுதத்தை ஏந்தும் போது அவர்கள் பாசிட்டுகளாக இருப்பது அதன் சிறப்பு பண்பாகும்.

''தாங்கள் மாத்திரம்தான் ஏதோ அங்கீகாரம் பெற்ற ''இடது'' என்கின்ற நினைப்புடன்'' என்ற வாதம், உள்ளடக்கத்தில் எம்மீது அதை ஏற்றுக்கொள்கின்றது. நாங்கள் விளக்கம் தரவேண்டிய அவசியம் கிடையாது. ''இடது'' குறைந்தபட்சம் ஏகாதிபத்திய மற்றும் அரசை எதிர்ப்பதை அடிப்படையாக கொண்டு, மக்களை சார்ந்து நிற்க



படிப்பகம்

www.padippakam.com



முயல்தலாகும். இதைக் கொண்டிராத யாரும், தம்மை இடது என்று கருத முனைவது, கருதுவதும் மக்களின் முதுகில் குத்தும் கயவாளிப் பயல்களின் இழிந்த நடத்தையாகும்.

''புலிகளை திருத்த வேண்டுமென்று கருதும் இவர்கள்,'' என்கின்றனர். நாங்கள் உங்களைப் போன்ற சீர்திருத்த வாதிகள் அல்ல. மாறாக புரட்சியாளர்கள், அதாவது கம்யூனிஸ்ட்டுகள். இந்த அமைப்பினை முழுவதையும் மாற்றி அமைக்க விரும்புபவர்கள். இதில் புலிகள் என்ன, யாராக இருந்தாலும், அனைத்து மக்கள் விரோதக் கருத்துக் களையும் மறுப்பவர்கள். மக்கள் அதிகாரம், அதாவது உழைப்ப வனுக்குத்தான் அதிகாரம் என்ற அடிப்படையில், அனைத்து சமூகக் கொடுமைகளையும் மறுப்பவர்கள்.

புலிகள் திருந்த வேண்டும் என்று நாம் தவம் இருப்பதில்லை. உங்களைப் போல் புலிகள் அல்லாத பன்றிகளுக்கு நாய்களைப் போல் வாலைக் குழைப்பவர்கள் அல்ல. நாங்கள் புலிகளை விமர்சனம் செய்கின்ற போது, அந்த அமைப்பில் இணைந்துள்ள, அந்த கருத்தின் செல்வாக்குக்கு உட்பட்ட ஒவ்வொரு மனிதனின் சிந்தனையையும், மக்கள் நலனில் இருந்து பார்க்க கோருகின்றோம். மக்களை சமூக நோக்கில் இருந்து சிந்திக்கத் தூண்டுவதன் மூலம், அவர்களை மக்களின் பக்கம் வென்று எடுத்தல், மக்கள் சார்ந்து நிற்கும் உள் முரண்பாட்டை வளர்த்தல் போன்ற அரசியல் வழி மூலம், சரியான அரசியலுக்கு புலியை அல்ல அதன் ஒவ்வொரு உறுப்பினரையும் வென்று எடுக்க முனைகின்றோம். இதை சீர்திருத்தம் என்பதும், திருத்த முனைவதாக கூறுவதும் அரசியல் அபத்தம். இந்த வழியைத் தான் புலியெதிர்ப்பு மீதும் செய்கின்றோம். சமூகத்தின் அனைத்துக் கூறுகளிலும், அனைத்து முரண்பாடுகளிலும் ஒரு போராட்டத்தை நடத்துவதன் மூலம்தான், ஒரு மக்கள் இயக்கத்தை கட்டமுடியும்.

புலிகளை திருத்தவே இதை முன்வைப்பதாக நீங்கள் கூறுவதும் கருதுவதும், உள்ளடக்கத்தில் மக்கள் மீதும் சமூக உறுப்புகள் மீதான உங்கள் நம்பிக்கையீனத்தில் இருந்தும் பிறப்பதாகும். இன்று பாசிச ஒழிப்பின் பெயரில் பேரினவாதம், கடத்திச் செல்வதையும் கொன்று போடுவதையும் கண்டும் காணாது ஆதரிக்கின்ற நீங்கள், புலியில் 20000 உறுப்பினர்களை கொன்று ஒழிக்கும் பாசிச ஒழிப்பையே மறைமுகமாக முன்வைக்கின்றீர்கள். 20000 புலிகள் இறக்க வேண்டும் என்றால், குறைந்த பட்சம் ஒரு இலட்சம் தமிழ் மக்கள் இறக்க வேண்டும். இது உங்கள் பாசிச ஒழிப்பு வழி. நாங்கள் பாசிச ஒழிப்பில் புலி உறுப்பினர்களை அரசியல் ரீதியாக தெளிவுபடுத்தி வென்று எடுத்தல் என்ற வழியில், மக்களை



படிப்பகம்

www.padippakam.com



அதிகாரத்துக்காக போராடுவதன் மூலம், தமது குழந்தைகளை பாசிசத்துக்கு எதிராக போராட வைப்பதன் மூலம்தான் பாசிசத்தை ஒழிக்கமுடியும்.

உங்களைப் போல் மக்களின் எதிரிகளான அரசிடமோ, அன்னிய சக்திகளிடமோ பாசிச ஒழிப்பை நாங்கள் முன்வைப்பவர்கள் அல்ல. சமூக இயக்கத்தின் அனைத்துப் போக்குகளையும் விமர்சிப்பதன் மூலம், அதில் சமூகத்தை சிந்திக்க வைப்பதன் மூலம், நடைமுறைப் போராட்டத்துக்கு வழிகாட்டுகின்றோம்.

''புலிகளை முற்று முழுதாக அழிப்பது என்பது தமிழ்த்தேசிய விடுதலைப்போராட்டத்தை முற்றுமுழுதாக அழிப்பதாகிவிடும்'' என்ற வாதம், இதன் முன்பின் பகுதியை வெட்டிவிட்டு எடுத்துக் காட்டுவதாகும். புலிகளை அழிப்பது என்பது, பேரினவாதத்தை அழிப்பதுடன் தொடர்புடையது. ஒன்றை மட்டும் அழித்தல் என்பது, நடைமுறையில் சாத்தியமற்றது. இவை இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்கின்றது. இரண்டையும் அழிக்காது, ஒன்றை மட்டும் அழித்தல் என்பது, புலி மற்றும் புலியெதிர்ப்பின் அரசியலாக உள்ளது. புலி பேரினவாதத்தை அழிப்பதைப் பற்றி மட்டும் பேசுகின்றது. புலியெதிர்ப்பு புலியை அழிப்பதைப் பற்றி மட்டும் பேசுகின்றது. இவர்கள் பேச மறுப்பது, மக்களின் நலன்களுக்கு எதிரான அனைத்தையும் அழிப்பதைப் பற்றி. நாங்கள் இரண்டையும் பற்றியும், மக்களுக்கு எதிரான அனைத்தையும் அழிப்பது பற்றி பேசுகின்றோம்.

சரி இங்கு புலியை மட்டும் அழித்தல் என்பதில் கூட, தமிழ் பேசும் மக்களின் பிரச்சனையை கையிலெடுக்காது, அதை மறுத்து நிற்றல் என்பது புலியெதிர்ப்பு அரசியல் சாரமாகும். பேரினவாதத்தை அழித்தலை முன்னெடுக்காது, அந்த அரசியல் உள்ளடக்கத்தில் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையை மறுத்து முதுகில் குத்துவதாகும். இந்த வகையில் தமிழ் மக்களின் நியாயமான விடுதலைப் போராட்டத்தை அழித்தலாகும். புலிகள் அழிகின்ற போது, அந்த இடத்தில் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை முன்னெடுக்காதிருப்பதன் மூலம் , மக்கள் அதிகாரத்துக்கான போராட்டத்தை முன்னெடுக்காத நிலையில், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முற்றாக அழித்தலாகும். இதைத்தான் புலியெதிர்ப்பு செய்கின்றது. மக்கள் மேல் புலிக்குப் பதிலாக புதிய ஒடுக்குமுறையை உருவாக்குகின்ற அரசியல் செயலைத்தான் புலியெதிர்ப்பு செய்கின்றது.

இதை நியாயப்படுத்தும் நீங்கள் ''தமிழ்த்தேசியத்தின் மீதான அளவற்ற



படிப்பகம்

www.padippakam.com



காதலால் (தீவிர தேசிய வாதம்)'' என்றால், அதை நாங்கள் மறுப்பவர்கள் அல்ல. புலிகள் தேசியத்தை என்றும் முன்னெடுத்தது கிடையாது. உங்களைப் போல், மற்றைய இயக்கங்களும் அதை முன்னெடுத்தது கிடையாது. தேசியவாதம் என்பது தமிழ்த் தேசியமாக இருந்தாலும் சரி, இலங்கைக்கான தேசியமாக இருந்தாலும் சரி, உள்ளடக்கத்தில் அது ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதை அடிப்படை யாகக் கொண்டது. அதற்கு ஆதரவான சக்திகளை எதிர்ப்பதாக உள்ளது. இந்த வகையில் அந்த தேசியத்தை நாம் முன் வைப்பதில் தீவிரமானவர்கள் தான். இதை புலியென்று முத்திரை குத்துவது, அப்படி இட்டுக்கட்டுவது, உங்களுக்கே உரிய அரசியல் இழிதன மாகும்.

புலிப் பாசிசம் தேசியத்தின் எந்த சமூக கூறையும் கொண்டு இருக்கவில்லை. அதேபோல் புலியெதிர்ப்பு கும்பலிடமும் அது கிடையாது. அதாவது மக்களின் நலன் சார்ந்த கூறுகள் எதுவும் கிடையாது. அதேபோல் இந்த இரண்டு கும்பலிடமும், முரணற்ற ஜனநாயக பண்பும், அந்த அரசியலும் கூட கிடையாது. மாறாக ஏகாதிபத்திய சார்பு நிலையே இவர்களின் அரசியலாக உள்ளது. துரதிஷ்டவசமாக இந்த ஏகாதிபத்திய கும்பல்களுடன், நாம் அரசியல் வாதம் நடத்த வேண்டியளவுக்கு, சமூக நலன் சார்ந்த அறிவுத் தளத்தில் அரசியல் தரம் தாழ்ந்து வீழ்ந்து மண்டியிட்டு கிடக்கின்றது. இவர்கள் எடுத்துக் காட்டும் மற்றொரு வாதம் ''மக்கள் நலன், மக்கள் நலன்'' எனக்கூறிவிட்டு, முழு இலங்கை மக்களினதும் விரோத இயக்கமான வேலுப்பிள்ளை பிரபாகரனை தலைமையாகக் கொண்ட புலிகளின் பிடிகளிலிருந்து மக்களை விடுவிக்கப்போராடும் ஜனநாயக சக்திகளைப் பார்த்து புலியெதிர்ப்பென்றும், இன்னும் சொல்லப் போனால் ஆதாரங்கள் எதுவுமில்லாமல் இலங்கை அரசு ஆதரவென்றும் பொய்க்கதைகள் புனைகின்றார்கள்.'' புலியெதிர்ப்பு கும்பல் ''பிரபாகரனை தலைமையாகக் கொண்ட புலிகளின் பிடிகளிலிருந்து மக்களை விடுவிக்கப்போராடும் ஜனநாயக சக்திகளைப்பார்த்து'' என்று தமக்குத் தாமே உருவாக்கிக் கொண்ட, கற்பனையில் இதைக் கட்டமைக்கின்றனர். புலியெதிர்ப்பு அணி மக்கள் நலன் கொண்ட சக்தியாக தம்மைக் கூறிக்கொள்வது வேடிக்கையானது. புலியைப் போன்ற அதே அரசியலைக் கொண்டதும், பல் இழந்ததுமான கிழட்டுப் புலிகள். அதே புலி அதிகாரத்துக்காக அலைகின்ற மக்கள் விரோதிகளே, இந்த புலியெதிர்ப்புக் கும்பல். ''மக்களை விடுவிக்கப்போராடும் ஜனநாயக சக்திகளைப்பார்த்து'' என்கின்றனர். எப்படி என்கின்றீர்களா? ஏகாதிபத்தியத்தினதும், பேரினவாதத்தினதும் கால்களை நக்கி மக்களை விடுவிக்கப் போகின்றார்களாம்.



படிப்பகம்

www.padippakam.com



நாங்கள் இதற்கு எதிரானவர்கள். ஒடுக்கப்பட்ட எந்த மக்கள் நலனை முன்னெடுக்கும் யாருடனும், அதில் எமக்கு முரண்பாடுகள் இருந்தாலும், அதை அங்கீகரிக்கத் தயாராகவுள்ளோம். மக்கள் நலன் என்ன என்று ஏகாதிபத்தியம் கூறுவதை கவ்விக் கொண்டு குலைக்கும், எந்த நாய்களுடனும் சமரசம் செய்துகொள்ள நாம் தயாராகவில்லை. மக்களின் எதிரிகள் தான், புலியெதிர்ப்பின் பின் உள்ள ஏகாதிபத்திய வேட்டை நாய்கள். மக்களின் எதிரிகளுடன் கூடிக் கும்மாளம் அடிக்கும் நீங்கள், எப்படி மக்கள் நலனுக்காக போராடமுடியும்? ஏகாதிபத்தியம் மக்கள் நலன் கொண்ட ஒன்றா என்ற கேள்விகளுக்கு முதலில் பதிலளியுங்கள். எல்லாவற்றையும் புலியாக பார்த்து, அதற்குள் அனைத்தையும் வகைப்படுத்துவதுதான், உங்களது இழிந்து கந்தலாகிப் போன அரசியல். தமிழ் மக்களின் போராட்டம் வேறு, புலிகளினது போராட்டம் வேறு என்பதை இனம்பிரிக்க முடியாத புலியெதிர்ப்புக் கும்பல் எப்படித்தான் மக்களுக்காக போராடமுடியும். புலிக்கு எதிராக மக்களின் போராட்டத்தை முன்னெடுக்காத வரை, ஜனநாயகத்தின் கடைந்தெடுத்த எதிரிகள் தான் புலிஎதிர்ப்புக் கும்பலும்.

அடுத்த இந்தக் கும்பல் கண்டுபிடிக்கின்றது ''ஆதாரங்கள் ஏதுமில்லாமல் இலங்கை அரசு ஆதரவென்றும் பொய்க்கதைகள் புனைகின்றார்கள்.'' ஆதாரம் உங்கள் கருத்துக்கள், செயல்கள், உங்கள் அரசியல் நடவடிக்கைகள்தான். பாசிச ஒழிப்பில் ஈடுபடு வதாகக் கூறும் இலங்கை அரசு மற்றும் ஏகாதிபத்தியத்தின் பின்னால், நீங்கள் அணிகட்டி நிற்பது மட்டும் போதுமானது. அவர்களின் கருத்தை முன்னிலைப்படுத்தி, அது சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடுவது போதுமானது. உங்களுக்கும் அவர்களுக்கும் ஏதாவது நேரடி தொடர்புகள் உண்டா என்பது, இங்கு இரண்டாம் பட்சமானது. உங்கள் கருத்துத் தளம், பாசிச ஒழிப்பை முன்வைக்கும் உங்கள் வழிமுறை மட்டும் போதுமானது. மக்களை அணிதிரட்டி, அவர்களின் அதிகாரத்துக்காக போராடாத அரசியல் செயல்பாடுகள் உங்களையும் உங்கள் கும்பலையும் இனம் காட்டிவிடு கின்றது.

''இந்த மக்கள் நலன் அதிகாரிகள் வெறும் குழப்பவாதிகள். புலிகள் தொடர்பாகவும் இலங்கையிலுள்ள தேசிய இனங்களின் பிரச்சனை தொடர்பாகவும் சரியான நிலைப்பாடு எடுக்கத்தெரியாதவர்கள்.'' நல்ல வேடிக்கையான வாதம். குழப்பவாதிகள் என்பது, உங்கள் பார்வையில் சரியானதே. எதைக் குழப்புகின்றோம்? புலியெதிர்ப்பின் பெயரில் மக்கள் விரோத செயற்பாடுகளை விமர்சித்து அதை சிந்திக்கத் தூண்டுவதன் மூலம், பிற்போக்குத் தனங்கள் நொருங்குகின்றது. இதன் எதிர்வினைதான் இப்படி கூற வைக்கின்றது. புலியெதிர்ப்பின்



படிப்பகம்

www.padippakam.com



பெயரில் கட்டப்படும் பொய்யை, அதன் மக்கள் விரோத கூறுகளை அம்பலப்படுத்தும் எமது சரியான நிலையைத் தான் இவர்கள் ''வெறும் குழப்பவாதிகள்'' என்று கூறுவதால், எமது சரியான நிலை தெளிவுபடுகின்றது.

''இலங்கையிலுள்ள தேசிய இனங்களின் பிரச்சனை தொடர்பாகவும் சரியான நிலைப்பாடு எடுக்கத்தெரியாதவர்கள்.'' என்கின்றனர். இதில் புலியெதிர்ப்பு நிலைப்பாட்டை நீங்கள் முதல் வையுங்கள். யார் தெளிவான நிலைப்பாட்டை எடுக்காதவர்கள் என்பது தெளிவாகும். எமது நிலைப்பாடு தெளிவானது. இது எமது எழுத்து முழுக்க செறிந்து காணப்படுகின்றது. உங்களைப் போல் இதை வெறும் வார்த்தையில் அலட்டி, மக்களின் முதுகில் குத்தி, காலத்துக்கும் நேரத்துக்கும் ஏற்ப அரசியல் பிழைப்பு நடத்துபவர்கள் அல்ல.

''இப்போது பாசிசம் என்ற தடையை அகற்றாமல் இலங்கையிலுள்ள தேசிய இனங்களின் பிரச்சனை முற்றுமுழுதாக தீர்க்க முடியாது என்ற நிலைக்கு நாங்கள் வந்தடைந்துள்ளோம் என்பதே யதார்த்தம்.''பாசிச தடையை மட்டுமல்ல, பேரினவாத தடையை அகற்றாமல் தேசிய இனப்பிரச்சனையை தீர்க்கமுடியாது. இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டது. ஒன்றையொன்று சார்ந்து, ஒன்றில் மற்றொன்று தங்கி செயல்படுகின்றது. பேரினவாதமே மற்றொரு பாசிசம்தான். புலியெதிர்ப்பு அதனை இல்லை என்பதே அதன் அரசியலாகும். இலங்கையில் அதிகாரத்தில் பிரதானமாக இரண்டு பாசிச சக்திகள் உள்ளனர். ஒன்று அரசு, மற்றொன்று புலி. அரசுக்கு பின்னால் பல சிறிய குட்டி பாசிசப் புலிகள் உள்ளனர். அதிகாரப் பிரிவுகளாக இரண்டு பாசிச கூறுகளும், அதைவிட கருத்துத் தளத்தில் பாசிச கருத்துகளும், புலி, புலியெதிர்ப்புப் பேரினவாதம் என்று புளுத்துக் கிடக்கின்றது. இவை அனைத்தையும் ஒழிக்காது, தேசிய இனப்பிரச்சனையை முற்றுமுழுதாக தீர்க்க முடியாது. இதற்கு எதிரான போராட்டத்தை மறுப்பது, பாசிசத்தை பாதுகாப்பதுதான்.

கொல்லைப்புறமாக பாசிசத்தை பாதுகாக்கும் வகையில் ''இலங்கை யிலுள்ள தேசிய இனங்களின் பிரச்சனையை தீர்ப்பதற்கான ஓரளவிற்கேனும் சாதகமான சூழலையே ஏற்படுத்தியுள்ளது. தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள இச்சாதகமான சூழலை, இலங்கை யிலுள்ள தேசிய இனங்கள் நுகர முடியாமல் இருப்பதற்கும் புலிகளே காரணம்.'' என்கின்றனர்.

மக்களை ஏமாற்றுகின்ற, அதே நேரம் மோசடி செய்கின்ற ஒரு அரசியல் வாதம். பேரினவாத நிலையை தக்கவைக்க,



படிப்பகம்

www.padippakam.com



முன்வைக்கின்ற குதர்க்கமான தர்க்கவாதம். புலிகள் இதற்கு தடையாக இருப்பதாக கூறுவது கடைந்தெடுத்த பேரினவாத மோசடி. புலிகளுக்கு வெளியில், ஏன் அந்த பாசிச பேரினவாதக் கும்பலால் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை, ஒரு தலைப்பட்சமாக முன்வைக்கமுடியாது யாரை ஏமாற்றுகின்றீர்கள்! உங்களுடைய விசுவாசமான நக்கிப்பிழைப்புக்கு ஏற்ப கதை சொல்வது, மிக மோசடித்தனமானது. தமிழ் மக்களுக்கு வெளியில், அவர்களுக்கு எதிராக எத்தனையோ ஒடுக்குமுறைகளை ஒருதலைப்பட்சமாக பேரினவாத அரசு கொண்டு வந்துள்ளது. இன்று தமிழ் மக்களுக்கு நியாயமான ஒரு தீர்வை முன்வைப்பதை புலிகள் எப்படி தடுக்கமுடியும். உங்களைப் போன்ற புல்லுருவிகள் வாழ்வதற்காக, இதையும் புலிகளின் பெயரில் சொல்லி நாயாக நக்குகின்றீர்கள் அவ்வளவுதான்.

''எந்தவொரு சமூகத்திலும் பிரதானமாக நிலவும் ஒரு கருத்தோட்டத் திற்கு எதிராக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கருத்தோட்டங் களும், அவ்வாறான பல்வேறு வகைப்பட்ட கருத்தோட்டங்களை சீர்தூக்கிப்பார்க்கும் மேலும் பல கருத்தோட்டங்கள் நிலவுவது சர்வசாதாரணமானதே. ஆனால் தமிழ் சமூகத்தில் பிரதானமாக புலி எதிர்ப்பு, புலி ஆதரவென இரண்டு பிரதான கருத்தோட்டங்கள்தான் நிலவுவதாக இந்த மூன்றாம் பாதையாளர்களுக்குத் தெரிகின்றது. புலி எதிர்ப்பு, புலி ஆதரவு என்ற இரண்டையும் நிராகரித்து தமது மூன்றாம்பாதையை கவனத்திற்கொள்ளுமாறு, அவரவர்கள் தம்பாணியில் வேண்டுகோள் விடுக்கின்றார்கள். மூன்றாம்பாதையை நிராகரிக்கும் நாலாம் பாதையும், நாலாம்பாதையை நிராகரிக்கும் மேலும் பல நூறு, ஆயிரம் கருத்தோட்டங்களினூடாகவே சரியான கருத்தென்பதை நாம் வந்தடைய முடியும் என்பதை இந்த சித்தம் கலங்கியவர்கள் மறந்து விடுகின்றனர்.'' இந்த உங்களுடைய வாதம் உங்களுக்கு எதிராகவே மாறுகின்றது. எம்மை புலியென்று முத்திரை குத்தி செயல்படும் உங்கள் அரசியல், இதை மறுபடியும் உங்களுக்கு எதிராக நிறுவுகின்றது. புலி, புலியெதிர்ப்பு என்ற போக்கு, சில அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டு வரையறுக்கப்பட்டது. நாம் மூன்றாவது பாதை இதற்கு வெளியில் வைக்கும் போது, நாலாவது பாதையையும் அதற்கு மேற்பட்ட பாதையையும் நாம் மறுக்க வில்லையே! வர்க்கங்கள் பலவாக உள்ள சமூக அமைப்பில், சமூக முரண்பாடுகள் பலவாக உள்ள அமைப்பில், பல்வேறு கருத்துக்களும், அமைப்புகளும் நிலவுவது இயல்பானது. இதில் எந்த சந்தேகமும் எமக்கு கிடையாது. ஆனால் புலி, புலியெதிர்ப்பு என்ற இரண்டு பாதையும் மக்களுக்கு எதிரான அரசியலைக் கொண்டது என்பதும், அதுவே ஆதிக்கம் பெற்று மக்களுக்கு எதிராக உள்ளது என்பதுவும்



படிப்பகம்

www.padippakam.com



சந்தேகத்துக்கு இடமற்றது.

''தேனீ இணையத்தளத்தின் அபரீதமான வளர்ச்சியையும் கடந்த ஆறு வருட காலத்தில் தமிழ் சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினையும் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் தொடர்ச்சியாக தேனீ மீது அவதூறுகளையும் வசைகளையும் பொழிந்து வருகின்றனர். புலிகளிலிருந்து புலி அல்லாதவர்களென தங்களைக் கூறிக்கொள்பவர்கள்வரை அவதூறுகளையும் வசைகளையும் பொழிவதில் முன்னிற்கின்றார்கள். தேனீயை வம்புக்கிழுத்து ஜனநாயகக்குரலினை மழுங்கடிக்கும் திட்ட அட்டவணையைக் கொண்டவர்களின் சூழ்ச்சிகளுக்கு தேனீ ஒருபோதும் பலியாகாது. தேனீயைப்போன்றே, தேனீயின் பல இலட்சம் வாசகர்களும் பண்பாடற்றவர்களின் கூச்சல்களை எளிதில் அசட்டை செய்துவிடுகின்றார்கள். தேனீயில் வெளியாகும் கருத்துகளுக்கு விமர்சனப்பண்புடன் தெரிவிக்கப்படும் எதிர்வினைகளுக்கு மாத்திரமே தேனீ பதிலளிக்க கடமைப்பட்டுள்ளது. திரும்பத்திரும்ப ஒரே விடயத்தை வெவ்வேறு வசனங்களில் கூறுவது, சும்மா கிறுக்குவதுபோன்று எழுதுவது, திட்டு எழுத்துகள் போன்றவற்றுக்கு தேனீ ஒருபோதும் மதிப்பளியாது.'' இதுவும் உங்களுக்கு எதிராக மாறுகின்றது. புலியும் இதைத்தான் கூறுகின்றது. புலி இணையங்களுக்கும் இலட்சக்கணக்கான வாசகர்கள் உண்டு. இதில் இருந்து நீங்கள் எப்படி தர்க்க ரீதியாக வேறுபடுகின்றீர்கள். மக்களை மந்தைகளாக, அடிப்படை வாழ்வை சாராது உணர்வற்ற செம்மறிகளாக மாற்றி, அவர்கள் மீது செல்வாக்கு செலுத்தி இணையத்தை நடத்துவது, புலி மற்றும் புலியெதிர்ப்பின் அரசியலாகவுள்ளது. புலியைத் திட்டுவது, புலி அல்லாதவர்களை திட்டுவது இந்த இணையங்களின் அரசியலாக உள்ளது.

இவர்கள் கூறுவது போல் ''தமிழ் மக்களுக்கு வெறுமனே இலங்கை அரசியல் நிலவரங்கள் தொடர்பான செய்திகளை வெளியிடுவது என்பதற்கும் அப்பால் இலங்கை அரசியல் பிரச்சனைகள் தொடர்பாக ஆழமான கருத்துக்களையும் கொண்டுசெல்ல வேண்டுமென்பதிலும் தேனீ முனைப்பாக செயற்பட்டு வருகின்றது. இலங்கையிலிருந்து புலம்பெயர் சமூகம்வரை மாற்றுக்கருத்துக் கொண்ட அனைவருக்குமே தேனீ களம் அமைத்துக் கொடுத்துள்ளது.'' இப்படி கூறும் இவர்கள், என்ன அரசியலை மாற்றாக முன்வைக்கின்றனர். புலிகளின் அரசியலை விமர்சிப்பது கிடையாது. புலிகளின் அரசியலை ஒத்த புலியெதிர்ப்பு அரசியல், எதையும் கேள்விக்குள்ளாக்கி விமர்சிப்பது கிடையாது. புலியெதிர்ப்பு அரசியலை முன்னிலைப்படுத்துகின்றது. புலியெதிர்ப்பு அரசியல் எது, அதுவல்லாதது எது என்பதை இவர்கள் முன் கேள்வியாக எழுப்புவோமாயின், இவர்களின் பூசி மொழுகிய



படிப்பகம்

www.padippakam.com



அலட்டல் அம்பலமாகிவிடுகின்றது.

புலி, புலி சார்பு கருத்துக்கு கருத்துச் சுதந்திரம் என்ற அடிப்படையில் எப்படி இயங்குகின்றதோ, அதேபோல் புலியெதிர்ப்பு கருத்துக்கே கருத்துச் சுதந்திரம் என்பதையே புலியெதிர்ப்பு கொண்டுள்ளது. இதைத் தவிர, மாற்றுக் கருத்துக்களுக்கல்ல. மாற்றுக் கருத்து என்பது, பல வர்க்கங்களின் வேறுபட்ட கருத்தாகும். ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் கருத்துகளே, உண்மையான சமூகம் சார்ந்த கருத்தாகும். இந்த வகையில் நாம் எமது போராட்டத்தை தொடர்வது தான், மக்களின் உண்மையான விடுதலைக்கான ஒரேயொரு அத்திவாரமாகும்.

***03.03.2007***



படிப்பகம்

www.padippakam.com



# "புலியை அழிக்க பிசாசுடன் கூடியுள்ளோம்" புலியெதிர்ப்பு தத்துவஞானியின் பிரகடனம்

மக்களின் முதுகில் குத்தி உருவாகும் வரலாற்று துரோகிகள், பிசாசுடன் (ஏகாதிபத்தியத்துடன்) சேர்ந்து மக்களுக்கு ஜனநாயகத்தை பெற்றுத்தரப் போகின்றார்களாம். இந்த கேடுகெட்ட போக்கிரித்தனமான அரசியல் பிரகடனத்தை, நம்புங்கள். புலிகளின் பாசிசத்தில் இருந்து மக்களை மீட்க, புலியெதிர்ப்பு கும்பல் வைக்கும் ஒரேயொரு தீர்வு இதுதான். பிசாசுகளுக்கு உதவும் கூலிப் பட்டாளத்தை உருவாக்கும் வேலைத்திட்டம்தான், புலியெதிர்ப்புக் கும்பலின் அரசியல் நடவடிக்கைகள். இப்படி இந்தப் பிசாசுகள் பெற்றுத் தரும் ஜனநாயகம்? மக்களுக்கானதா? பிசாசுக்கானதா? அறிவு நாணயம் நேர்மை எதுவும் எஞ்சி உங்களிடம் இருந்தால், சொந்தமாக ஒரு மக்கள் அரசியல் உங்களிடம் இருந்தால், இந்த அரசியல் துரோகத்தனத்தை குறைந்தபட்சம் தட்டிக் கேட்பீர்கள். இல்லாது கூடி புலியெதிர்ப்பு கும்பலாக கும்மாளம் அடிக்கும் அனைவரும், இந்த நாற்றம் பிடித்த அரசியல் சாக்கடையில் புரளும் எருமை மாடுகள்தான்.

புலியெதிர்ப்புக் கும்பலின் மதியுரைஞர் சிவலிங்கம், பாரிஸில் நடைபெற்ற கலைச்செல்வனின் இரண்டாம் ஆண்டு நினைவு தினக்கூட்டத்தில்தான், பிசாசுடன் சேர்ந்து புலியை அழிக்கும் தமது ''ஜனநாயகப்'' பிரகடனத்தைச் செய்தார். இப்படி மக்களின் எதிரிகள் புலிகளுக்குள் மட்டுமல்ல, புலியெதிர்ப்புக்குள்ளும்தான் உள்ளனர் என்பதையே, இது மறுபடியும் தெள்ளத்தெளிவாக அம்பலமாக்கு கின்றது.

புலிகளுக்கு ஒரு மதியுரைஞர் பாலசிங்கம் எப்படியோ அப்படி புலியெதிர்ப்பு கும்பலுக்கு ஒரு மதியுரைஞர் சிவலிங்கம். இவர்கள் எல்லாம் மக்களின் தாலியை அறுத்து, அதில் அரசியல் செய்பவர்கள். இந்த கடைந்தெடுத்த ஈனத்தனத்தைச் செய்யவே, பிசாசுடன் கூடி



படிப்பகம்

www.padippakam.com



நிற்கும் அரசியல் அசிங்கத்தை, ஒரு கொள்கைப் பிரகடனமாக பாரிஸில் எமக்கு எதிராக முன்வைத்ததன் மூலம், தமது சந்தர்ப்பவாத மூகமூடியை கழற்றி எறிந்தனர்.

அரசியல் ரீதியாக புலி எதிர்ப்புக்கு (ஒழிப்புக்கு) வெளியில், இவர்களிடம் வேறு எந்த அரசியலும் கிடையாது. மக்களுக்கு என்று சொல்ல எந்த மக்கள் பிரச்சனையும் இவர்களிடம் கிடையாது.

புலிகள் தமது பாசிசம் மூலம் மக்களுக்கு ஏன் ஜனநாயகத்தை மறுக்கின்றனர்? இதைக் கூட அரசியல் ரீதியாக விளக்க முடியாத கோவேறுக் கழுதைகள். புலிகளுடனான இவர்களின் அரசியல் முரண்பாடு என்பதே, புலிகளின் குறிப்பான கொலைகள் பற்றியது மட்டுமே. புலிகள் மக்களுக்கு முன்வைக்கும் அரசியல் தொடர்பானதல்ல. புலிகளின் மக்கள் விரோத அரசியலின், மிகத் தீவிர ஆதாரவாளர்கள் இவர்கள். கொள்கை ரீதியாக, கோட்பாட்டு ரீதியாக முரண்பாடு என்பது கிடையாது.

இவர்களின் முரண்பாடு என்பது, இவர்களுக்கு இடையிலான அதிகாரம் தொடர்பானதே. யார் தமிழ் மக்களை அடக்கியாள்வது என்பது தொடர்பானது. மக்களின் விடுதலை தொடர்பானதல்ல. இந்த வகையில் முன்னைய இன்றைய கொலைகார குழுக்கள் அனைத்தும் கூடிக்குலைக்கின்றனர். மாற்றுக் கருத்து என்ற பெயரில், தமது அதிகாரத்துக்காக புலிகளுடன் முரண்படுகின்றனர். மக்களை எட்டி உதைத்து, பிசாசுகளுடன் கூடி விபச்சாரம் செய்கின்றனர்.

புலிகள் மக்களுக்கு எந்த உரிமையை மறுக்கின்றனரோ, அதை புலியெதிர்ப்புக் கும்பலும் மக்களுக்கு மறுக்கின்றது. மக்கள் தமது சொந்த விடுதலைக்காக, தமது சொந்த அதிகாரத்துக்காக போராடுவதை புலிகள் போல் இவர்களும் அனுமதிப்பதில்லை. அதை கருவறுப்பதுதான் புலியெதிப்பு சிந்தாந்தக் குருவின் பிசாசுத் தத்துவம்.

கடந்தகால வரலாற்றில் யாரெல்லாம் மக்களின் உரிமையை மறுத்து, அதைக் கோரியவர்களைக் கொன்று ஒரு படுகொலை அரசியலை நடத்தினரோ, அவர்கள் எல்லாம் கூடி ''ஜனநாயகத்தை'' மீட்கும் பிசாசுத் தத்துவத்தை ஒப்புப் பாடுகின்றனர். இலங்கையினதும் இந்தியாவினதும் கூலிக் குழுக்களாகவே செயல்படும் கொலைகாரக் கும்பல்கள், புலியை ஒழித்து ''ஜனநாயகத்தை'' மீட்க பிசாசுடன் சேருவதே முற்போக்கான அரசியல் என்கின்றனர்.

இவர்கள் முன்வைக்கும் அந்த பிசாசு யார்? அந்த பிசாசு வேறு



படிப்பகம்

www.padippakam.com



யாருமல்ல, ஏகாதிபத்தியம் தான். புலியை ஒழிக்க, புலியிடமிருந்து தமது ஜனநாயகத்தை மீட்க, பிசாசுகளை விட்டால் வேறு என்னதான் அரசியல் வழி உண்டு என்று எம்மை பார்த்து ஆச்சரியமாக கேட்கின்றனர். இதையே தான் தன்னையும் மாக்சியவாதியாக கூறிக்கொண்ட, சோலையூரனும் கேட்டார். அவர் தன்னை உள்ளடக்கி பொதுவில் ஏகாதிபத்தியவாதிகள் என்கின்றீர்களா என்றார்? மாக்சியவாதியாக கூறிக்கொள்ளும் சோலையூரானின் பரிதாபகரமான ''மாக்சிய'' நிலை இது.

நாம் புலியை பாசிட்டுகள் என்று கூறும் போது, இந்த அளவீடு அதன் கீழ்மட்ட உறுப்பினர் வரை பொருந்தும். அந்த அரசியலை சித்தாந்த ரீதியாக ஏற்றுக் கொண்டு இருக்கும் வரை, அதை பிரதிநிதித்துவம் செய்யும் அனைவருக்கும் பொருந்தும். நீங்கள் ஏகாதிபத்திய துணையுடன் அதன் கோட்பாட்டை உள்வாங்கியபடி புலியை அழிக்க புறப்பட்ட பின், இதை ஏற்றுக்கொண்டு செயல்படும் அனைவருக்கும் பொருந்தும். தலைவர் அதன் தொண்டன் என்பதில், ஏகாதிபத்திய தன்மையில் வேறுபாடு கிடையாது. வேறுபாடு அறியாமையில், அப்பாவித்தனத்தில் கூலிக்கு மாரடிக்கும் செயல்தளத்தில் வேறுபாடு உண்டு. தமிழ் மக்களைச் சார்ந்து நிற்கத் தவறுகின்ற அனைத்தும், ஏகாதிபத்திய, மக்களின் சொந்த எதிரியுடன் கூடி நிற்கின்ற அனைத்தும், ஏகாதிபத்திய தன்மை வாய்ந்தவை.

அன்று இயக்கங்கள் தொடங்கியது முதல், மக்களுக்கு எதிரான அரசியலையே இயக்க அரசியலாக வரிந்து கொண்ட காலம் முதலாக, மக்களை எதிரியாக கருதும் கும்பலா, மக்கள் ஜனநாயகத்தை மீட்கப் போகின்றார்கள்? இன்றும் அவையெல்லாம் மக்கள் விரோத இயக்கங்களாக, சந்தர்ப்பத்துக்கு ஏற்ப நடித்துக் கொள்ளும் இவர்கள், அந்த மக்களின் பிரச்சனையில் இருந்து சமூகத்தை பார்க்கத் தவறுவது தான் வேடிக்கை.

அன்று பேரினவாதத்துக்கு எதிராக தொடங்கிய இயக்கங்கள் எப்படி மக்களுக்கு எதிராக சென்றனரோ, அதேநிலையில்தான் புலி பாசிச ஒழிப்பிலும் அரசியல் நிலையெடுக்கின்றனர். அன்று பேரினவாதத்தை எதிர்கொள்ள மக்களை எட்டி உதைத்த படி, இந்தியாவின் கூலிக் குழுவானவர்கள்தான், இன்று மக்களை அதேபோல் எட்டி உதைத்தபடி பிசாசுகளுடன் கூடி நிற்கின்றனர். மனித விரோத வரலாறு இப்படி நிர்வாணமாகவே காட்சி அளிக்கின்றது.

நாம்(ன்) அன்றைய கூட்டத்தில் இதை அம்பலப்படுத்திய போது, இந்த மனித விரோத பிசாசு செயல்பாடுகள் உணர்ச்சிகரமான



படிப்பகம்

www.padippakam.com



குமுறலுடன் அம்பலமாகியது. அவர்களின் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப, சந்தர்ப்பவாதிகளின் அரசியல் முடிச்சுமாற்றித்தனத்தின் உள்ளார்ந்த அரசியல் கூறை உடைத்தெறியும் வகையில், தமிழ் மக்களுக்கான தீர்வு பற்றிய விடயத்தை கருப்பொருளாக கொண்டு இதை அம்பலமாக்கினோம். தமிழ் மக்கள் தமது பிரச்சனைக்காக தாமே மட்டும் போராடுவதைத் தவிர, வேறு எந்த மாற்று வழியும் கிடையாது என்றோம். இதற்கு வெளியில் மாற்றுவழி உண்டென்றால், அதை முன்வைக்குமாறு சவால் விடுத்தோம். இதற்கு பதிலடியாகவே பிசாசுடன் கூடி புலியெதிர்ப்பை (புலிஒழிப்பை) மாற்றாக முன்வைத்தனர். மக்களுக்கு எதிராக பிசாசுகளுடன் கூடி, மக்களுக்கு ஜனநாயகத்தை பெற்றுத்தரப் போகின்றனராம்.

இப்படி கடந்தகாலத்தில் இந்தியாவுடன் கூடி தமிழீழத்தை பெற்றவர்கள், இந்த தமிழீழம் என்று இன்றும் கூறுபவர்கள் போல், பிசாசுடன் கூடி ஜனநாயகத்தை மக்களுக்கு பெற்றுத் தரப்போகின்றனராம். அரசியலில் பொறுக்கிகளின் சூழ்ச்சிகள் இவை. சொந்த மக்களில் நம்பிக்கை இல்லாதவர்கள். அந்த அரசியல் வழிமுறையை எப்படி என்றும், அது சாத்தியமற்றது என்றும் சதா கிண்டல் அடிப்பவர்கள். அந்த மக்களுக்கு இவர்கள் எப்படி உண்மையாக இருப்பார்கள். ஒரு உண்மையான மக்கள் ஜனநாயகத் துக்காக எப்படி போராடுவார்கள் சொல்லுங்கள். அன்னியருக்கு ஒரு கூலிக் குழுவாக இருந்து, செயல்படுவதில் மட்டும் நம்பிக்கை கொண்டவர்கள். இது மட்டுமே சாத்தியம் என்பவர்கள். மக்கள் வழி சாத்தியமற்றது என்று கூறுவதன் மூலம், இதை மறைமுகமாக திணிப்பவர்கள்.

மாற்றுவழி என்பது, அவர்களே பிசாசுகள் என்று வருணிப்பவர்களுடன் சேர்ந்து புலியை ஒழிப்பது. இப்படி பிரகடனம் செய்வது மட்டுமல்ல, அதை எமக்கு எதிராக சவால் விடுகின்றனர். எப்படிப்பட்ட சமூக விரோத கும்பல் இவர்கள் என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது.

மக்களை சார்ந்து நின்று, அந்த அரசியல் மூலம் மக்களின் தீர்வாக புலியொழிப்பை நாம் கோரிய போது, பிசாசுகளாக மாறியது மட்டுமின்றி பிசாசுகளாகவே பிரகடனம் செய்தனர். இதுதான் அன்றைய நிகழ்வும் நிகழ்ச்சியுமாகியது. இந்த பிசாசுக் கூட்டத்தில் ஆணாதிக்கத்தை ஒழிக்கப் போராடுவதாக கூறிக்கொள்பவர்களும், சாதி ஒழிப்புக்காக போராடுவதாக கூறிக்கொள்பவர்களும், யாழ் மேலாதிக்கத்துக்கு எதிராக போராடுபவராக கூறிக்கொள்பவர்களும், சுரண்டலை எதிர்ப்பதாக கூறிக்கொள்பவர்களுமாகப் பலரும் சேர்ந்து, மக்களின் இந்தப் பிரச்சனை புலி ஒழிப்புக்குள் அடங்காது என்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



வேடிக்கையிலும் வேடிக்கை. இந்த மனித ஒடுக்குமுறை செய்பவர்களுடன் சேர்ந்துதான், புலியை ஒழிக்க முடியும் என்கின்றனர். இப்படித்தான் இது தமிழீழப் போராட்டத்திலும் அடங்கவில்லை என்றவர்களும் இவர்கள்தான். ஏன் புலிகளும் அதைத்தான், இன்று வரை கூறுகின்றனர். வரலாற்றைப் புரட்டினால், இது தெரியும். இப்படி கோரியவர்கள் கொன்றவர்கள் எல்லாம், மக்கள் போராட்டம் என்பது தமது அதிகாரத்துக்கு பிந்தைய விடயமாக கருதும் கருத்துடைய வர்கள். இதைக் கோரியவர்கள், கோருபவர்களை கொன்றது மட்டுமின்றி, தமது எதிரியாகவும் பார்க்கின்றனர். இப்படி மக்களுக்கு எதிரான ஒரு அரசியல் நீட்சியாகவே, இன்றும் அவர்கள் உள்ளனர்.

மக்கள் ஜனநாயகம் என்பது மக்கள் தமது பிரச்சனையைப் பற்றி பேசுவது, அதற்காக போராடித் தீர்வைக் காண்பதும்தான். ஆனால் இதை மறுத்துத்தான் புலிகள் முதல் புலியல்லாத புலியெதிர்ப்பு வரை கொக்கரிக்கின்றது. மக்கள் தமது உரிமைக்காக போராடும் காலம் இதுவல்ல என்று கூறுபவர்கள், அந்த உரிமைகளுக்காக தாம் உண்மையாக இருப்பதாக காட்டிக்கொண்டு மக்களின் முதுகில் குத்துவதே இவர்களின் பிசாசுத் தத்துவம்.

புலி ஒழிப்பின் பின் தனித்தனியாக போராடப் போவதாக கூறுவது வேடிக்கை. புலி என்ன சொல்லுகின்றது. தமிழீழத்தை பெற்ற பின்னர் தான், தாம் இதற்காக போராடுவினமாம். அதாவது புலிகள் தமிழீழத்தை பெற்றபின் போராடுவினமாம். புலியெதிர்ப்பு கும்பலோ புலியை பிசாசுடன் சேர்ந்து ஒழித்த பின் இதற்காக போராடுவினமாம். கூட்டாகவே கொள்கை ரீதியாக, மக்களின் உரிமைக்காக போராட மறுக்கும் பிரகடனமும், அரசியல் உடன்பாடும் புலிக்கும் புலியெதிர்ப்புக்கும் ஒன்றுதான்.

இப்படி மக்களின் பிரச்சனையை கைவிட்டுவிட்டு, மக்களை எப்படி எந்த வழியில் அணி திரட்டமுடியும். மக்கள் போராட்டம் என்பது இதற்கு வெளியில் கிடையாது. மக்களின் பிரச்சனைக்காக, அந்த மக்கள் தாம் தமக்காக போராடுவதுதான் மக்கள் போராட்டம். அது சிலரின் வெறும் வரட்டு தமிழீழமோ அல்லது வெறும் வரட்டு புலியொழிப்போ அல்ல.

இவர்கள் பரஸ்பரம் தமக்குள் குற்றம் சாட்டியபடி, இதற்குள் வரட்டுத்தனமாக அனைவரையும் கட்டிப்போடுகின்ற மக்கள் விரோத வேலையைத்தான் இந்தக் கும்பல் செய்கின்றது. மக்களின் அடிப்படையான அனைத்து பிரச்சனைகளையும் அடையாளம் கண்டு, அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சனையைத் தீர்க்க நாம் கோரியும்,



படிப்பகம்

www.padippakam.com



இதற்கு வெளியில் மக்களுக்கு சார்பான மாற்று அரசியல் வழி எதுவும் கிடையாது என்று நாம் சவால் விட்டோம். இதன் போது புலியெதிர்ப்புக் கும்பல் தாம் அம்பலமாவது கண்டு அதிர்ந்து போனது. எம் மீது புலியெதிர்ப்பு தத்துவமேதை சிவலிங்கம் உட்பட, சோலையூரன் முதல் கீரன் வரை காழ்ப்புடன் சீறிப் பாய்ந்தனர்.

கீரனோ நாலு சுவருக்குள் இருந்து, 20 பவுணில் இணையத்தில் மக்கள் புரட்சி நடத்துவதாக வெம்பிக் கொட்டினார். இந்த சம்பந்தமில்லாத எம்மீதான அரசியல் காழ்ப்பு, எப்படி தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சனைக்கு பதிலளிக்கின்றது என்பது அந்தக் கும்பலுக்குத்தான் வெளிச்சம். புலிகள் என்ன சொல்லினம் என்றால், கதைப்பதை வன்னியில் சென்று கதையுங்கள் என்கின்றனர். அங்கு சென்று போராடுங்கள் என்கின்றனர். இப்படி புலிகள் பேச புலியெதிர்ப்போ நாலு சுவர்களுக்குள் மக்கள் புரட்சியா என்கின்றனர். வன்னி மக்களின் சுதந்திரம் என்றழுகின்றனர்.

வன்னி மக்களின் சுதந்திரமான வாழ்வுக்கு போராட முடியாதவர்கள் என்கின்றனர். அந்த மக்கள் இணையத்தை பார்க்க முடியாது என்கின்றனர். இதனால் பிசாசுக் கூட்டத்துடன் தம்மைப் போல் சேரக் கோருகின்றனர். பிசாசுடன் சேர்ந்து புலியெதிர்ப்பு (ஒழிப்பு) பிரசாரம் செய்யும் இவர்கள், அந்த மக்களிடம் செல்வதில்லை. ஏன் இணையம் பார்க்கும் மக்களிடம் கூட, மக்களின் பிரச்சனையை கொண்டு செல்வது கிடையாது. பிசாசுகளின் அரிதட்டில் இட்டு வடிகட்டி கிடைப்பதைப் பொறுக்கி, தாமே தமக்குள் வம்பளப்பதே இவர்களின் அரசியல். புலி ஊடகவியல் போல், புலியெதிர்ப்பு ஊடகவியல் மக்களின் பிரச்சனைகள் மீது விபச்சாரம் செய்கின்றனர்.

வன்னி மக்களின் சுதந்திரமான வாழ்வு மற்றும் இடப்பெயர்ச்சி பற்றி மட்டும் பேசும் இவர்கள், இலங்கை அரசு அதை மறுப்பதை இட்டோ, ஏன் ஏகாதிபத்திய நாட்டில் இது மறுக்கப்படுவதை இட்டோ அலட்டிக்கொள்ளாத, புலியெதிர்ப்பு ஜனநாயகத்தை பற்றி மட்டும் பேசும் பச்சோந்திகள்.

பிசாசுகளுடன் சேர்ந்து தாம் புலியை அழிப்போம் என்றவர்கள். இதை யாரும் தடுக்க முடியாது என்றவர்கள், இப்படி தனது நெற்றிக் கண்ணையே திறந்த சிவலிங்கம், தனது ஏகாதிபத்திய விஸ்வரூபத்தையே உலகுக்கு முழுமையாக காட்டினார். அற்புதத்திலும் அற்புதம். மானம் கெட்ட நாய்கள், ஏகாதிபத்திய கால்களை நக்குவதைத் தவிர வேறு எந்த மக்கள் அரசியலும் கிடையாது.



படிப்பகம்

www.padippakam.com



இந்தப் பிசாசு யார் என்ற சர்ச்சை பின்னால் வந்த போது, சொந்த சுயவிளக்கம் அளிக்க வெளிக்கிட்ட பரமபிதா சிவலிங்கம், அந்த சிவலிங்கத்துக்கேயுரிய ஆபாச வக்கிரத்துடன் பினாற்றுவதைத் தவிர வேறு எதையும், அற்புதமாக சோடிக்க முடியவில்லை.

தான் பிசாசு என்று குறிப்பிட்டது மனித உரிமை அமைப்புக்களையே என்றார். இப்படி தனது புலியெதிர்ப்பு அரசியல் செயல்பாட்டுக்கு மனித முகம் கொடுக்க முறப்பட்டார். இப்படி சூழ்ச்சியான அரசியல் ஆய்வாளராக பாலசிங்கத்தையே மிஞ்சும் இந்த முட்டாள், முன்னால் இருப்பவனெல்லாம் மாங்காய் மடையன் என்ற நினைப்பு. சிவலிங்கம் தன் வீட்டு மாங்காய் என்ற அவரின் சொந்த நினைப்பு.

சரி சொன்னபடி எடுப்போம். மனித உரிமை அமைப்புக்கள் பிசாசுகள் என்றால், அப்படி பிசாசு என்று தெரிந்துகொண்டு செயல்படுபவன் எப்படிப்பட்ட பொறுக்கியாக இருப்பான். நாங்கள் மக்களின் சமூக பொருளாதார பிரச்சனைகளின் அடிப்படையில், மக்களை அணிதிரட்ட முயலமாட்டோம் என்று கூறி, பிசாசுகளுடன் சேர்வோம் என்று கூறிய இந்த பொறுக்கிதான், புலியெதிர்ப்புக் கும்பலின் அரசியல் குரு. இந்த மக்கள் விரோத செயல்பாடுதான் புலியெதிர்ப்பு அரசியல்.

சரி இந்த பிசாசாக மனித உரிமை அமைப்புகளைக் காட்ட முறப்பட்டது, உள்ளடக்கத்தில் ஏகாதிபத்தியத்தில் இருந்து இவ்வமைப்புக்கள் வேறானவை என இட்டுக்கட்டத்தான். தாம் செய்யும் ஏகாதிபத்திய செயல்பாட்டை, இல்லையென மழுப்ப அவ்வமைப்புக்கள் ஏகாதிபத்தியத்துக்கு அப்பாற்பட்டவையென காட்டி, மக்களுக்கு புலுடா விடுகின்ற முடிச்சுமாற்றித் தனம்தான் இந்த சுயவிளக்கம். இந்த மனிதவுரிமை அமைப்புகளை ஏகாதிபத்தியத்திலும் இருந்து சுயாதீனமானதாக காட்டுகின்ற, ஏகாதிபத்திய நரித்தனம், இதற்குள் வெளிப்படுவது மற்றொரு உண்மை. மனித உரிமைக்காக செயல்படுவதாக கூறுகின்ற இந்த ஏகாதிபத்திய அமைப்புகள், ஏகாதிபத்திய அமைப்புகளல்ல என்கின்றீர்களா? அரசியல் மோசடியில் உங்கள் செயல்பாட்டை நியாயப்படுத்துகின்ற வெளிப்படையான பொறுக்கித்தனம் இது.

மனிதவுரிமை அமைப்புக்கு யார் பணம் கொடுக்கின்றனர். ஏகாதிபத்திய பணத்தில், ஏகாதிபத்திய உலக ஒழுங்குக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட அமைப்புகள் தான் இவை. அதற்காகவே அவை செயல்படுகின்றது. இவை ஏகாதிபத்திய நலன் சார்ந்த,



படிப்பகம்

www.padippakam.com



1. மனித உரிமை மீறலுக்கான சமூகக் காரணங்களை ஆராய்வதில்லை.

2. மனித உரிமையை சொல்லி நடைபெறுகின்றதும், மனித உரிமை அறிக்கையின் அடிப்படையில் நடக்கும் தலையீட்டுக்கும், ஏன் அது உருவாக்கும் மனிதவுரிமை மீறலுக்கும் தாம் பொறுப்பாளியாக இருப்பதில்லை.

3. சக மனிதனின் உழைப்பைச் சுரண்டுவதை மனிதவுரிமை மீறலாகக் கூட அங்கீகரிப்பதில்லை.

இந்த மனித விரோதத்துக்கு, இப்படி வக்கிரமான பலவடிவங்கள் உண்டு. ஏகாதிபத்திய நலன்களுக்கு இசைவாக மட்டும் மனித உரிமை மீறலைப் பற்றி பேசுகின்ற, அரசு சாராத அரச பணத்தில் இயங்குகின்ற ஏகாதிபத்திய நிறுவனங்கள் இவை.

தமிழ் மக்களுக்கு காலாகாலமாக காதில் பூ வைத்து அரசியல் செய்த கூட்டம், இந்த மனித உரிமை அமைப்பு பற்றியும் பொய்மையை விதைக்க முனைகின்றனர். புலிகள் முதல் புலியெதிர்ப்பு வரை இப்படி இதில் ஒத்த நிலைப்பாடு கொண்டுள்ளனர். மனிதவுரிமை அமைப்புகள் ஏகாதிபத்திய நலன்களுடன் தொடர்புடைய அமைப்புகள். இப்படியாக இயங்குகின்ற அரசு சாராத ஏகாதிபத்திய நன்கொடையில் இயங்குகின்ற இந்த அமைப்புகள், மனித உரிமை முதல் பொருளாதார செயல்பாடுகள் வரை ஒன்றுடன் ஒன்று திட்டமிட்ட வகையில் பின்னிப் பிணைந்தவை. ஏகாதிபத்திய நலன்களுக்கு இசைவாக செயல்படுகின்ற அதேநேரம், அதை மூடிமறைக்க மனிதத்தின் ஒரு பகுதியை கையில் எடுத்துக்கொண்டு, மொத்த மனிதனுக்கு விரோதமாக செயல்படும் அமைப்புகள்தான் இவை.

இல்லை இவை ஏகாதிபத்திய அமைப்புகள் அல்ல என்று கூறும் தைரியம், நேர்மை இருந்தால், அதையும் விவாதிக்கவும் நாம் சவால் விடுகின்றோம். மக்களின் முதுகில் குத்தி அரசியல் ரீதியாக சோரம் போவதும், ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்வதும், பிறகு அதற்கு மனிதவுரிமை அமைப்பு என்று பச்சையாக சுயவிளக்கம் வழங்குவதும் விபச்சார தரகனுக்குரிய அதே குணம்தான். இப்படி தமது புனிதத் தன்மை பற்றி ஒப்பாரி வைப்பது, தம்மையும் தமது செயல்பாட்டுக்கும் புனித தன்மை பற்றி கூறி மக்களை ஏமாற்ற முயலுகின்ற வக்கிரம் தான், புலியெதிர்ப்பின் பின் அரங்கேறுகின்றது.

இன்றைய மனிதவுரிமை அமைப்புகள், மனித உரிமை மீறலுக்கான



படிப்பகம்

www.padippakam.com



காரணத்தை ஏன் விமர்சிப்பதில்லை. மனிதவுரிமை மீறலுக்கு காரணம், ஏகாதிபத்திய உலக ஒழுங்குதான். இந்த அடிப்படைக் காரணமே இப்படி வெளிப்படையாக இருக்க, அதை பற்றி பேசாது மனித உரிமை பேசுகிற ஏகாதிபத்திய நிறுவனங்கள்தான் இவை. ஏகாதிபத்திய சர்வதேச தலையீட்டுக்கான நிலைமைகளை தயாரிப்பது, இந்த அமைப்புகளின் தலையாய செயல்பாடுகளாகும். இப்படி மனித முகம் வழங்கி, தனது தூய்மை பற்றிய பிரமையை உருவாக்கி, சதி செய்து மக்களை ஒடுக்குவதற்கு துணை செய்கின்ற அமைப்புகள் தான் இவை.

இந்த கேடுகெட்ட வகையில் ஏகாதிபத்திய பணத்தில் இயங்கும் பிசாசுகளுடன், தான் சேர்ந்து செயல்படுவதாக, நெற்றிக் கண்ணைத் திறந்து சிவலிங்கம் தனது சுயவிளக்கத்தில் புலியெதிர்ப்புக் கும்பல் சார்பாக சூளுரைத்தார். இப்படி ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து செய்கின்ற மனித விரோதத்தை, மூடிமறைக்கலாம் என்று இந்த புலியெதிர்ப்புக் கும்பல் நம்பியதால், அதை வீரமாகவே பிரகடனம் செய்தனர். நாய் வேடம் போட்டு விசுவாசமாக நக்கிக் குலைக்க வெளிக்கிட்டாலும் கூட எதையும் யாராலும் மூடிமறைக்கவே முடியாது.

ஏகாதிபத்தியம் என்றால் என்ன? நீங்கள் ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து செயல்படவில்லை என்று கருதினால், எது ஏகாதிபத்தியத்துடனான செயல்பாடு என்று அதைச் சொல்லுங்கள்? நடத்துவதோ மானம்கெட்ட அரசியல் விபச்சாரம். ஏகாதிபத்திய அரசியல்வாதிகள் முதல் எல்லாவிதமான ஏகாதிபத்திய நிறுவனங்களுடனும் சேர்ந்து கும்மியடிப்பதைத் தவிர, வேறு எதுவும் செய்வதில்லை. அதை புலியெதிர்ப்பு ஊடகவியல் மூலம் வாரியள்ளி கொட்டுவதன் மூலம், அதற்கு அவர்கள் இட்ட பெயர்தான் ஜனநாயகம். மக்கள் தமக்காக, தமது சமூக பொருளாதார உரிமைக்காக போராடுவது ஜனநாயகமல்ல என்பது இவர்கள் தத்துவம். சமூக ஒடுக்குமுறைக்கு எதிராக போராடுவது ஜனநாயகமல்ல, அதுவே ஜனநாயக விரோதம் என்கின்றனர். இதனால் புலி முதல் புலியெதிர்ப்பு வரை போராட மறுத்து, இதை வேட்டையாடுவதையே போராட்டமாக்கியவர்கள்.

இந்த புலியெதிர்ப்பு ஏகாதிபத்திய செயல்பாடுகளை நாம் அம்பலப் படுத்துவதால், நாலு சுவருக்குள் இருந்து 20 பவுண் காசில் மக்கள் புரட்சி செய்வதாக பம்புகின்றனர். சரி இந்த வாதம் எப்படி, நீங்கள் ஏகாதிபத்தியத்துக்கு சேவை செய்வதில்லை என்பதனையோ அல்லது சேவை செய்வதையோ நியாயப்படுத்திவிடும்?

ஏகாதிபத்திய பிசாசுடன் சேர்ந்து செய்வது சரி என்பதையும், அதை



படிப்பகம்

www.padippakam.com



எப்படிச் செய்கின்றோம் என்பதையும் வெளிப்படையாக மூடிமறைக் காது கூற வேண்டியதுதானே. ஏன் சுயவிளக்கம் கொண்ட பிசாசுத் தத்துவம். நாலு சுவருக்குள் 20 பவுண் காசில் இணையம் என்று, ஏன் பேயைக்கண்டது போல் அலறுகின்றீர்கள். மக்களின் முதுகில் குத்தி துரோகம் செய்யும் உங்கள் வண்டவாளங்கள், அந்த ''நாலு சுவருக்குள்'' இருந்து அம்பலமாவதைக் கண்டு குமுறுவதன் பின்னணி எமக்கு புரிகின்றது. நாலு சுவர் இணையத்தை நிறுத்தக் கோரும் உங்கள் பிசாசு ஜனநாயகம், தலைகீழாக நின்று அழுவது புரிகின்றது.

ஜனநாயக விரோதிகள் புலிகள் மட்டுமல்ல, இந்த புலியெதிர்ப்புக் கும்பலும் தான். மக்களின் விடுதலையை கோரியோரைக் கொன்று குவித்த முன்னைய கொலைகார கும்பலும், இன்றைய கொலைகாரர் களுமான புளாட், ஈ.பிஆர்.எல்.எப், ஈரோஸ், ஈ.என்.டி.எல்.எப், ஈ.பி.டி.பி, ரெலோ முதல், கொலைகாரனுக்கு ஆள்காட்டியும் உதவிய கூட்டணி என்று அனைவரும், சேர்ந்து புலியிடமிருந்து ஜனநாயகத்தை மீட்கப் போகின்றார்களாம். புலிகளிடம் அதிகாரத்தில் பங்கு கோரி நடத்தும் அரசியல் சண்டையை மூடிமறைக்க, புலிப் பாசிசம் பற்றி புலியெதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்.

இந்த அதிகாரம் கிடைக்கும் முன்பே, சதியை அடிப்படையாகக் கொண்ட அதிகாரச் சண்டைகள் இவர்களுக்குள். பாரிஸ் கூட்டத்துக்கு முதல் நாள் கூடிய ஜெர்மனிய கூட்டத்தில் இவை அரங்கேறியது. தலித்தியவாதிகள், கிழக்குவாதிகளையும் அழைக்கக் கூடாது என்ற புலியெதிர்ப்பு ஜனநாயக சதி கூட விவாதிக்கப்பட்டது. யாரை அழைக்கக்கூடாது என்று முன் கூட்டியே திட்டமிட்டு அவர்கள் தடுக்கப்பட்டனர். விமான நிலையத்தில் அழைத்து வருவதில் கூட திட்டமிட்ட புறக்கணிப்புகள், சதிகள். இப்படி இந்த ஜனநாயகம் கொடிகட்டிப் பறக்கின்றது. புலியெதிர்ப்பு சித்தாந்த குரு யாரின் பக்கம் என்று காட்டுவதில் உள்ளேயே ஒரு போட்டி, ஒரு சதி. இதைப் பிரதிநிதித்துவம் செய்யும் குழுக்கள், அனைத்து இலங்கை இந்திய அரசுகளின் கூலிக் குழுக்கள். சிலதுகள் பிசாசுகளின் கூலிகள். இவர்கள் எல்லாம் கூடி நின்று, புலியின் ஜனநாயக மீறலைப் பற்றி தமக்குள் ஊளையிடுகின்றனர்.

இப்படி ஊளையிடுவதில் உள்ள கைக்கூலித்தனம் வெளிப்படையானது. இந்த ஏகாதிபத்திய நிலை என்பது அரசியல் ரீதியானது, கொள்கை ரீதியானது. புலியெதிர்ப்பின் உள்ளார்ந்த சித்தாந்தம், கொள்கை ரீதியாகவே ஏகாதிபத்திய தன்மை கொண்டது. இதை யாரும் மறுத்து நிறுவ முடியாது. ஏகாதிபத்தியத்துடன் அரசியல்



படிப்பகம்

www.padippakam.com



ரீதியாகவே சோரம் போய், அதன் பின் வாலாட்டுபவர்கள். இந்த ஏகாதிபத்தியம் என்பதும், அதன் வடிவம் என்பதும் கொள்கை ரீதியானது மட்டுமின்றி வன்முறை வடிவமும் கொண்டது.

புலியெதிர்ப்புக் கும்பலின் செயல்பாடுகள் ஏகாதிபத்திய அதிகார மையங்களுடனும், அதன் மனித முகம் கொண்ட நிறுவனங்களுடன் தொடர்புக்கு உட்பட்டது. இன்று புலிகள் தாம் வேறு, தமது மனித செயல்பாடுகள் வேறு என்று எப்படி காட்ட முனைகின்றனரோ, அப்படிப்பட்ட ஒரு வேறுபாட்டைக் காட்டித் தான் (பலவற்றை மறைத்தபடி), புலியெதிர்ப்புக் கும்பல் தனது துரோகத்தை மனித செயல்பாடாக காட்டமுனைகின்றது.

நாலு சுவருக்குள் 20 பவுண் காசில் இணையம் நடத்துபவர்கள் என்று எம்மைக் கூறி, தாம் மக்கள் மத்தியில் செயல்படுவதாகவும் ஊர்வலங்களை நடத்துவதாகவும், எமக்கு அரசியல் பாடம் நடத்த முனைந்தனர். சரி இவர்களின் ஊர்வலங்கள் மக்களுடன் சம்பந்தப்பட்டதா? பிசாசுகளுடன் கூடித்தான் புலியை அழிப்போம் என்றவர்கள், அதற்கு முற்றாக முரணான வழியான மக்களுடன் கூடி புலியை எப்படி அழிக்கமுடியும். கேட்பவன் கேனயன் என்ற நினைப்பு. இவர்களின் மக்கள் போராட்டம் எப்படிப்பட்டது. சிங்கள உறுமய முதல் கொலைகார கூலிக் குழுக்களின் பிரதிநிதிகள் எல்லாம் கூடி நடத்துவது, மக்கள் போராட்டம் என்கின்றனர். புலியெதிர்ப்புக் கும்பல் தாமே கூடி ஊளையிடுவது மக்கள் போராட்டமல்ல. அதுவும் பிசாசுகளுக்கு மகஜர் கொடுத்துவிட்டு வந்து, பிசாசுக்கு பின்னால் வாலாட்டி திரிவது மக்கள் போராட்டமல்ல. மறுபக்கத்தில் இதை மக்கள் போராட்டம் என்றால், புலியும்தான் உங்களைவிட அதிகளவு உங்கள் போல் ''மக்கள் போராட்டம்'' நடத்துகின்றது. உங்கள் போராட்டம் மக்கள் போராட்டம் என்றால், புலிப் போராட்டமும் மக்கள் போராட்டம் தான்.

புலிகள் பேரினவாதிகளின் மனிதவிரோத செயலை சொல்லி ஊர்வலம் நடத்தி மக்களின் முதுகில் எப்படி குத்துகின்றனரோ, அப்படி புலியைச் சொல்லி நீங்கள் மக்களின் முதுகில் குத்துவது மக்கள் போராட்டமோ? உங்களிடையே அரசியல் ரீதியாக என்ன வேறுபாடு உண்டு?

இந்த புல்லுருவிகளின் திடீர் தோற்றமும், அதன் திடீர் வரலாறும், வரவின் சூக்குமத்தை தெளிவுபடுத்த போதுமானது. இது வைத்த, திடீர் ஜனநாயகமும் அப்படிப்பட்டதுதான்.

இலங்கையில் சமாதானம் அமைதி என்று கூறிக்கொண்டு



படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்திய தலையீடுகள் அதிகரித்த போதுதான், இந்த புலியெதிர்ப்பு புல்லுருவிகளும் அக்கம்பக்கமாக சமகாலத்தில் முளைத்தவர்கள்.

அதற்கு முன்னர் அரசியல் ரீதியாக இனம் காணப்படாதவர்கள். எந்த செயல்பாடுமற்ற உறங்கு நிலையில் இருந்தவர்கள். எதிர்ப்புரட்சிகர சூழல் இன்றி, அரசியல் போக்கற்று, அரசியல் அனாதைகளாகக் கிடந்தவர்கள். அதிகரித்த ஏகாதிபத்திய தலையீட்டுடன், எதிர்ப்புரட்சிகர திட்டத்துடன், பாசிச புலிகளின் நடத்தையை சாதகமாக கொண்டு திடீர் ஜனநாயகவாதி யானவர்கள். இவர்களின் திடீர் ஜனநாயகமோ, கிலோ விலைக்கு விற்கப்படுகின்றது. ஏகாதிபத்தியத்தின் அதிகரித்த தலையீட்டுடன் உருவாகி புல்லுருவிக் கூட்டம் இது. அதற்கு ஏற்ப இதனிடம் மாற்று வேலைத்திட்டம் கிடையாது. மக்களின் சமூக பொருளாதார பிரச்சனைகள் பற்றி, எந்த சமூக அக்கறையும் அற்றவர்கள். இதனிடம் பிசாசுடன் கூடிய, புலி அழிப்புத்திட்டம் தான் உள்ளது.

மக்கள் விரோத பாசிச புலியை அழிக்க வேண்டும் என்றால் ,

1. அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொந்த வழியில் குறுக்கிடும் புலிக்கு எதிராகப் போராடி அழிக்க வேண்டும். அதாவது தமது அதிகாரத்துக்காக, தமது சமூக பொருளாதார விடுதலைக்காக மக்கள் போராட வேண்டும்.

2. இல்லையென்றால் அரசு அல்லது இந்தியா முதலான ஏகாதிபத்தி யங்களின் தலையீடு மூலம், அவர்களின் நலன்களுக்காக புலியை அழிக்க வேண்டும்.

இதில் இரண்டாவது வழியைத்தான் புலியெதிர்ப்புக் கும்பல் வைக்கின்றது. இதுதான் பிசாசுத் தத்துவம். மக்களின் இன்றைய பிரச்சனைக்கு தீர்வை இரண்டாவது வழியில்தான், புலியெதிர்ப்பு வழி காட்டுகின்றது. இதனால்தான் அடிக்கடி தம்மிடம் மாற்று வழி இல்லை என்று நாசுக்காகக் கூறிக்கொண்டு, ஏகாதிபத்திய தலையீட்டுக்கு சாதகமான வழிக்குள் அழைத்துச் செல்லுகின்றனர் திட்டமிட்ட சதிகாரர்கள். நேரத்துக்கும் நிலைமைக்கும் ஏற்ற சந்தர்ப்பவாதிகள். தம்மை மூடிமறைத்தபடி சந்தர்ப்பத்துக்கு ஏற்ப குலைக்கின்ற, குதர்க்கப் பேர்வழிகள்.

ஏகாதிபத்திய தலையீட்டுடன் புல்லுருவிகளாக, திடீர் விட்டில் பூச்சிகளாக உலவுகின்றவர்கள். மக்களின் மனிதவுரிமை பற்றிய பிரச்சனை மீது தம்மை மூடிமறைத்துக் கொண்டு, அசல்



படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்தியம் போல் ஊர் உலகத்தையே ஏமாற்றுபவர்கள். உலகளவில் ஏகாதிபத்திய தலையீடுகளும், அதற்கான நியாயங்கள் எப்படி எந்த அரசியல் வழியில் உருவாக்கப்படுகின்றதோ, அதையே இலங்கை பிரதிநிதிகளாக நின்று செய்து முடிக்க முனைபவர்கள் தான், இந்த புலியெதிர்ப்புக் கும்பல். வரலாற்றில் வேறுவிதமாக இந்த கும்பலை வரலாறு பதிவு செய்வதற்குரிய எந்த தர்க்கமும், இதன் பிசாசு கோட்பாட்டில் கிடையாது. வரலாற்றுத் துரோகிகளாக, காலத்தின் போக்கில் உருவாகி நிற்பவர்கள்தான் இவர்கள். மக்களின் விடுதலைக்கே எதிரான புல்லுருவிகள். இதை இனம் காண்பது, வரலாற்றுத் தேவையாக உள்ளது.

***20.07.2007***



படிப்பகம்

www.padippakam.com



# பிசாசுகளுடன் மட்டுமல்ல, பேய்களுடனும் சேர்ந்தும் புலியை ஒழிக்கும் துரோகிகள்

கிழக்கை பேரினவாதம் கைப்பற்றியது பற்றிய, புலி எதிர்ப்பு (ஒழிப்புக்) கும்பலின் அரசியல் நிலைப்பாடு இதுவாகவேயுள்ளது. குடும்பிமலை யத்தமும் பேரினவாதக் கூச்சலும் ஒன்றாகி, அதுவே கிழக்கு மக்களின் வெற்றிப் பிரகடனமாக, பேரினவாத பாசிசப் பேய்கள் அறிவிக்க, புலியெதிர்ப்புக் கும்பலோ புலிப் பாசிசத்தை ஒழித்ததாக கூறிக் கொண்டாடுகின்றது.

இப்படியாக பேரினவாதம் கிழக்கை புலிகளிடமிருந்து மீட்டுவிட்டதாக ஒருபுறம். ஜனநாயகத்தை மீட்டதாகக் கூறி அதைக் கொண்டாடும் தமிழ் புல்லுருவிகள் மறுபுறம். புலிகளோ தாம் பின்வாங்கி இருப்பதாகவும், கொரில்லாப் போராட்டம் நடத்தப் போவதாகவும், பதிலடி உண்டு என்றும், ஒரு அரசியல் வித்தையைக் காட்டமுனை கின்றனர்.

மக்களோ இந்தக் கும்பலிடம் தோற்றுக்கொண்டு இருக்கின்றார்கள். அரசியல் அனாதைகளாக்கப்பட்டு, விதவைக்கோலம் திணிக்கப்பட்ட நிலையில், வாழ்வு மறுக்கப்பட்டுள்ளனர். இப்படியாக மக்கள் தோற்கடிக்கப்பட்ட நிலையில், வெற்றி பற்றியும் தோல்வி பற்றியுமான கொண்டாட்டங்களும் புறக்கணிப்புகளும். எதுவும் அந்த மக்களுக்காக வல்ல.

உண்மையில் இப்படியாக யார் வென்றனர்? யார் தோற்றனர்? மக்களிடமிருந்து அரசியல் ரீதியாக அன்னியமான கும்பல்களுக்கு இடையிலான சண்டையும், அதன் வெற்றி தோல்வியும் அரசியலாக்கப்படுகின்றது. கிழக்கு வாழ் மக்கள் அனாதைகளாக, நடைப்பிணமாகி விட்டனர். மக்களோ அரசியலில் இருந்து வெட்டிச் சிதைக்கப்பட்ட நிலையில், அரசியலற்ற மந்தைகளாக உருத்தெரியாத



படிப்பகம்

www.padippakam.com



தாக்கப்பட்டுள்ளனர். ஆயுதமேந்திய கொலைகாரக் கும்பல்கள், அந்த மக்களின் வாழ்வின் எல்லாக் கூறுகளையும் நசுக்கிவிட்டனர். அந்த மக்கள் வாழ்விழந்து கிடப்பதையே, அரசியல் வெற்றியாக கருதி இந்த கும்பல் தனக்குள் தவளைகள் போல் சலசலக்கின்றது.

தவறான அரசியல் தவறான போராட்டமாகிவிடுகின்றது. இந்த தவறான போரட்டத்துக்கு எந்தக் கதி நடக்குமோ, அந்த கதியை கிழக்கு மறுபடியும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. மக்கள் மட்டும் தான், தமக்கான எந்த சொந்த வரலாற்றையும் உருவாக்க முடியும் என்பதை, புலிக்கு மட்டுமல்ல புலியல்லாத தரப்புக்கும், அதன் அரசியலுக்கும் கற்றுக்கொடுக்க முனைகின்றது.

மக்களின் அனைத்து உரிமையும் அரசியல் ரீதியாக நலமடிக்கப்பட்ட நிலையில், மக்களால் எதையும் கோரவோ எவையையும் தக்கவைக்கவோ முடியாது. மக்கள் மேல் இதையே வெற்றியாக கருதி பேரினவாதம் கொக்கரிக்கின்றது. மக்களின் சொந்த மீட்சிக்கான வாழ்வுக்கான அனைத்து வழிகளும் இல்லாதாக்கப்பட்டுவிட்டது. அந்த மக்களின் விடுதலை பல பத்தாண்டுகளும் நினைத்துக் கூட பார்க்க முடியாத வகையில் நலமடிக்கப்பட்டுள்ளது.

இந்த மனித அவலத்தை கொண்டாடும் அரசியல் கூத்துகள், அதில் சில முரண்பாடுகளுடன் புறக்கணிப்புகள் என பேரினவாத சக்திகளின் அரசியல் வக்கிரகங்கள். தமிழ் புல்லுருவிக் கூட்டம் இதற்குள் நீந்தி மீன் பிடிக்க முனைகின்றது. இப்படியாக மக்களின் மீட்சி பற்றியும், புலிகளின் பாசிசம் பற்றியும் அரசியல் பாடம் நடத்த முனைகின்றனர். சொந்தத் துரோகத்தையும், பேரினவாதத்தின் கால்களை கட்டிப் பிடித்துக் கிடக்கும் அரசியல் கோமளித்தனங்களையும் விளக்க முனை கின்றனர். பிசாசுகளுடன் மட்டுமல்ல, பேய்களுடன் கூடித்தான், புலி எதிர்ப்பை (புலி ஒழிப்பை) செய்யமுடியும் என்று கும்மியடிக்கும் அரசியல் விபச்சாரமும் ஒருங்கே அரங்கேறுகின்றது. பேரினவாத கூச்சலையும் ஒடுக்குமுறையையும்தான், இந்தக் கும்பல், ஜனநாய கத்தின் வெற்றி என்கின்றது. அதாவது பேரினவாதம் புலியொழிப்பில் வென்றதாக கூற, புலியெதிர்ப்புக் கும்பல் ஜனநாயகத்தை தாம் வென்றதாக கூறுகின்றது. மக்களின் துரோகிகளின் வெற்றி பற்றிய சாரம் இதுதான். மக்கள் புலிகளிடம் தோற்றது போல், இந்த துரோகிகளிடமும் தோற்று அனாதைகளாகி, தமது உரிமைகள் இழந்து நாதியற்றுக் கிடக்கின்றனர்.

***21.07.2007***



படிப்பகம்

www.padippakam.com



# புலித் தமிழீழமும், புலியொழிப்பும், தமிழ்மக்களின் பிரச்சனையைத் தீர்க்குமா?

ஆதிக்கம் பெற்று நிற்கும் எதிர்புரட்சிகர சக்திகள் அனைத்தும், இதற்குள் தமிழ் மக்களுக்கு தீர்வைக் காட்டமுனைகின்றனர். இப்படி கடந்தகால வரலாறு முழுக்க, இதற்குள்ளாகவே ஆயிரம் ஆயிரம் மக்களை கொன்று போட்டனர். இந்த இரண்டு எதிர்புரட்சிகர வழிக்கும் வெளியில், தமிழ்மக்கள் சிந்திப்பதை செயல்படுவதை இருதரப்பும் அனுமதிப்பதில்லை. அப்படியான முயற்சிகளையும், சிந்தனைகளையும், படுகொலைகள் மூலம் இருதரப்பும் தடுத்து பதிலளித்தனர். படுகொலை சாத்தியமற்ற நிலையில், இந்த வழிமுறையை முடிந்தவரை இழிவுபடுத்தினர்.

இருதரப்பும் தமிழ் மக்களைச் சார்ந்து நிற்பதை அரசியல் ரீதியாகவே மறுக்கின்றனர். அரசியல் ரீதியாக மக்களின் உரிமையை அங்கீகரிப்பது கிடையாது. மக்களின் உரிமைகளை, தமது சொந்த வர்க்க நலனுக்கு எதிரானதாகவே பார்க்கின்றனர். இப்படிப்பட்டவர்கள், தாம் தமிழ்மக்களில் அக்கறை உள்ளவராக காட்டி நடிப்பதன் மூலம், தமிழ் மக்களுக்கு எதிராகவே செயல்படுகின்றனர்.

புலிகளை எடுத்தால் அவர்கள் பேரினவாதத்தைக் காட்டுகின்றனர். ஆகவே புலித் தமிழீழத்தை வைத்து தமிழ் மக்களை அடக்கு கின்றனர்.

புலியெதிர்ப்பை எடுத்தால் பாசிசப் புலியை காட்டுகின்றனர். ஆகவே புலியொழிப்பை வைத்து தமிழ் மக்களை அடக்குகின்றனர்.

இவர்கள் தமிழ்மக்களின் பிரச்சனையை இரண்டாக பிரித்துக் காட்டுகின்ற போது, தமிழ் மக்கள் இதற்குள்ளாக மட்டும் வாழவில்லை. அதாவது இரண்டில் ஒன்றே தமிழ் மக்களின்



படிப்பகம்

www.padippakam.com



பிரச்சனை என்று இவர்கள் கூறுவது போல், தமிழ் மக்களின் மொத்த பிரச்சனையை மறுக்கின்றனர்.

பேரினவாதம் தமிழ்மக்களின் மீதான ஒடுக்குமுறையை தீவிரமாக்கிய போது அனைவரும் தமிழீழம் என்றனர். அப்போதும் அனைவரும் சமூக விடுதலையை உள்ளடக்கிய வகையில் தீர்வையும் விடுதலையையும் முன்வைத்தனர். இப்படி சமூகப் பிரச்சனைகளுடன் மக்களை அணுகியவர்கள், நடைமுறையில் அதற்காக போராடவும் மறுத்தனர். மற்றவர்கள் அதற்காக போராடுவதைக் கூட எதிராகப் பார்த்தனர். இப்படி சமூகப் பிரச்சனையை தீர்க்கவே மறுத்தனர். இப்படியே தான் எதிர்புரட்சிகரத் தலைமைகள் உருவானது.

சமூக பிரச்சனையின் அடிப்படையில் அணிதிரண்டவர்கள், சமூகப் பிரச்சனையை முன்வைத்தபோது அவர்களை அடக்கினர். அதை மீறிய போது கொன்றனர். இப்படி எதிர்புரட்சிகர அரசியல் வரலாறே தொடங்கியது. மக்களை ஏமாற்றிய அரசியல் வரலாற்றுத் தொடர்ச்சி, இன்று புலித் தமிழீழம், புலியொழிப்பாகி நிற்கின்றது. புரட்சிகரமான மக்கள் அரசியல் மறுக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு இழிவாடப்படு கின்றது.

தமிழீழம் என்று தமிழ்மக்களின் பெயரில் அவர்களைக் கொன்ற எமது எதிர்புரட்சிகர தலைமைகள், அன்று போல் இன்றும் புரட்சிகரமான சிந்தனையை அனுமதிப்பதில்லை.

தமது வர்க்க நலனை சார்ந்து தமிழ்மக்களை பயன்படுத்தும் எதிர்புரட்சிகர செயல்பாடுகளை, தமிழ் மக்களின் புரட்சிகர செயல்பாடாக காட்டுகின்றனர். இந்த எதிர்புரட்சிகர துரோக வரலாற்றையே தமிழ் மக்களின் தலைவிதியாக, தீர்வாக காட்டுகின்ற அனைத்து முயற்சியையும் முறியடிக்காத வரை, தமிழ் மக்களுக்கு விடுதலை என்பது கிடையாது.

***26.07.2007***



படிப்பகம்

www.padippakam.com



# புலியொழிப்பு அற்பவாதிகளும் நாங்களும்

அற்பவாதிகளோ கோட்பாடின்றி, அரசியல் சதிகளுக்கு பின்னால், சதா ஓடி ஒழித்து விலாங்குகளாக வாழ்பவர்கள். இதையே அரசியலாக, நடைமுறையாக காவடி எடுப்பவர்கள். இந்த அற்பவாதக் கும்பலோ, புலியெதிர்ப்பின் பின் புலியொழிப்பை முன்வைத்தபடி, எம்மைப் பார்த்து முறைக்கின்றது. சதா எமக்கு எதிராக சதியையும், அவதூறையும் உலகெங்கும் பரப்புகின்றது.

இந்த அற்பவாதிகள் தனது தர்க்கவாதத்தில் எமக்கு எதிராக வைப்பதோ, நீங்கள் புலிகளுடனுமில்லை, புலியெதிர்ப்பின் பின்னுமில்லை என்பதே. அதாவது எமது அரசியல் வாதங்கள் மீது விவாதிக்கவோ கருத்துச் சொல்லவோ முடியாது திணறுபவர்கள், இப்படி பதிலளிக்கின்றனர். எந்த விடயம் மீதும், அரசியல் ரீதியாக விவாதிக்க திறனற்றவர்கள். அரசியல் ரீதியாக வலது குறைந்தவர்கள். இதனால் எம்மீது அற்பத்தனமான வழிகளில், அவதூறுகளை முதுகுக்குப் பின்னால் அரசியலாக்க முனைகின்றனர்.

எம்மீது அற்பவாதிகள் வெளிப்படுத்தும் எதிர்வினைகள் ஏன். புலியெதிர்ப்பின் பெயரில் புலியொழிப்பின் பெயரில் அவர்கள் நடத்துகின்ற அரசியல் கூத்துகளையும், துரோகத்தையும், காட்டிக்கொடுப்பையும், அன்னிய சக்திகளுடன் நடத்துகின்ற எடுபிடித்தனத்தையும் நாம் தொடர்ச்சியாக அம்பலப்படுத்துவதால் ஏற்படும் ஆத்திரமே, அற்பவாதிகளின் அவதூறுகளாக மாறுகின்றது.

பேய்களுடனும் (பேரினவாதத்துடன்), பிசாசுகளுடனும் (ஏகாதிபத்தியத் துடன்) சேர்ந்து புலியை ஒழிப்பதை மட்டும் சொந்த வேலைத் திட்டமாக கொண்டவர்கள்தான் புலியெதிர்ப்புக் கும்பல். இந்த புலியெதிர்ப்பு புலியொழிப்பு கும்பலின் இந்த மக்கள் விரோத செயல்பாட்டை, நாம் மட்டும்தான் அம்பலப்படுத்துகின்றோம். பாசிச புலிகளால் இதை அம்பலப்படுத்த, அதனிடம் எந்த மக்கள் நலன் சார்ந்த எந்த அரசியலும் கிடையாது. புலிகளிடம் குறைந்தபட்ச



படிப்பகம்

www.padippakam.com



அரசியல் நேர்மை கூட இல்லாமல் போன நிலையில், புலியெதிர்ப்புக் கும்பல் தனது இழிவான அரசியல் பிழைப்பை நியாயப்படுத்திவிட முனைகின்றது. தமது அரசியல் துரோகத் தனத்தை, புலியைக் காட்டி முற்போக்கானதாக கூறி அரசியல் செய்ய முனைகின்றது. இந்த துரோகத்தை நாம் மட்டும் அம்பலப்படுத்துவதால், புலியொழிப்பு கும்பல் எம்மைக் கண்டு சினக்கின்றது. முடிந்தவரை அவதூறைப் பரப்பமுனைகின்றது. உண்மையில் எமது கருத்தை கருத்தியல் ரீதியாக விவாதிக்க முடியாததன் விளைவு இது.

இன்று பேரினவாதம் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக நடத்துகின்ற பாசிச வெறியாட்டத்தை, புலியொழிப்பாக வரையறுத்து, அதை பாதுகாக்கிறவர்களில் புலியெதிர்ப்புக் கும்பலும் ஒன்று. அரசு மீதான இவர்களின் கண்டனம் என்பது, ஏகாதிபத்தியத்தின் வரையறைக்கு உட்பட்டது. ஏகாதிபத்தியங்கள் முதல் அதன் பணத்தில் இயங்கும் தன்னார்வக் குழுக்கள், எந்தளவில் எந்த வரையறையில் அரசைக் கண்டிக்கின்றதோ, அந்த எல்லைக்குள் தான் புலியெதிர்ப்புவாதிகள் பேரினவாத அரசைப் பற்றிப் புலம்புகின்றனர்.

ஏகாதிபத்திய வரையறைக்கு வெளியில், மக்களின் அடிப்படை உரிமைகளை முன்வைத்து அவர்களுக்காக அரசை எதிர்த்து போராடுவது கிடையாது. இப்படி புலியொழிப்பை மட்டும் வைத்துக் கொண்டு அரசியல் செய்கின்றவர்களின் இழிதனத்தை நாம் மட்டும் தொடர்ச்சியாக அம்பலப்படுத்துகின்றோம். புலித்தமிழீழம், புலியொழிப்பு இரண்டையும் மறுத்து, மக்களின் அடிப்படை உரிமையை முன்னிறுத்துவதை, இவ்விரண்டு பிரிவும் அனுமதிப்பதில்லை, விரும்புவதுமில்லை. மக்கள் மட்டும் தான் எதையும் கோரவும், தமது உரிமைக்காக போராடவும் முடியும் என்ற எமது அரசியல் நிலைப்பாட்டை வெறுக்கின்றவர்கள் தான், எம் மீதான தொடர்ச்சியான இடைவிடாத அவதூறைப் பரப்புகின்றனர்.

மக்களா! புலித்தமிழீழத்தைக் கோருகின்றனர். மக்களா! புலியொழிப்பைக் கோருகின்றனர். இதில் மக்களின் அரசியல் பங்களிப்பு எதுவும் கிடையாது. மக்களை மந்தைகளாக இதன் பின் வரக் கோருகின்றனர்.

புலிகள் துரோகி ஒழிப்பை வைப்பது போல், இவர்கள் புலியொழிப்பை வைக்கின்ற போது, எந்த அரசியல் உள்ளடக்கத்திலும் முரண்படுவது கிடையாது. மக்கள் நலன் எதையும் வேறுபட வேறுபடுத்தி வைப்பது கிடையாது.



படிப்பகம்

www.padippakam.com



புலி ஒழிப்பை கோரும் இவர்கள், அதை எப்படி செய்வது என்பதற்கு சொந்த அரசியல் வழி எதுவும் கிடையாது. மக்களை இதற்காக அணிதிரட்ட, மறுப்பவர்கள் இவர்கள். மாறாக புலி யொழிப்பை ஏகாதிபத்தியம் மற்றும் பேரினவாத நடவடிக்கைகள் மூலமே சாத்திய மானது என்று கூறிச் செயல்படுபவர்கள். இதற்கு நாம் ஒத்துக்கொள்ள மறுப்பதால், எம்மை எதிரியாக காட்டுகின்றனர்.

ஊர் உலகத்தை ஏமாற்ற அரசையும் கண்டிப்பதாக காட்டிக்கொண்டு, புலியொழிப்பை அரசியலாக வைக்கின்றனர். அந்த அரசியல் என்பது சாராம்சத்தில் புலியை ஒழிக்க முனையும், ஏகாதிபத்திய மற்றும் பேரினவாத அரசியல் எல்லைக்கு உட்பட்டதே.

இந்த புலியொழிப்பு புலியெதிர்ப்புவாதிகளோ அற்பவாதிகள் உள்ளடங்கிய ஒரு கொலைகாரக் கும்பல். புலியொழிப்புக்கு வெளியில் இதனிடம் மாற்று அரசியல் எதுவும் கிடையாது. புலியெதிர்ப்பும், புலியொழிப்பும் என்ற இரு கோசமும், இவர்களை ஒரு கும்பலாக்கின்றது.

இந்த கும்பலுடன் புலியெதிர்ப்பிலும் புலியொழிப்பிலும் உடன்படும் பிசாசும், பேயும் அன்னியோன்னியமாக தமக்குள் காதல் செய்கின்றனர்.

இந்த புலியொழிப்புக் கும்பலில் இருப்போர் யார்? முன்னாள் (இன்னாள்) கொலைகார இயக்கங்கள், அதில் இருந்து விலகி விலாங்குகளாக வாழும் அற்பவாதிகள், அரசியல் எதுவுமற்று பொறுக்கி வாழும் கழிசடைகளை உள்ளடக்கிய ஒரு கும்பல். இவர்கள்தான் புலியெதிர்ப்பு புலியொழிப்புவாதிகள். தமக்குள் குத்துவெட்டையும், சதியையும், முதுக்குப்பின்னால் தூற்றுவதையுமே அரசியலாக கொண்டவர்கள் இவர்கள். அரசியல் ரீதியாக, தமக்கென்று சொந்த கொள்கை கோட்பாடற்றவர்கள். இதில் பெரும்பாலானவர்கள் பேய் அல்லது பிசாசிடம் பணம் வாங்கி, அதில் தங்கியும் சார்ந்தும் இயங்குபவர்கள். கணிசமான பிரிவு இரகசியமான கொலைகார, சதிகார கும்பல். கொலைகளைச் செய்வதில்தான் அதன் அரசியலே இயங்குகின்றது. இதற்கு வெளியில் மக்களை வழிகாட்டக் கூடிய அரசியல் எதையும் கொண்டிராத, புலியொழிப்பு கும்பல். இதனால் எமக்கு எதிராக அவதூறை, காழ்ப்பை கொட்டித் தீர்க்கின்றது.

இந்த புலியெதிர்ப்பு புலியொழிப்பு பேர்வழிகள் மக்களிடம் செல்வதில்லை. மக்கள் போராட்டம் என்பது, சாத்தியமற்றது என்பவர்கள். மாறாக பிசாசுடனும், பேய்களுடனும் உறவை



படிப்பகம்

www.padippakam.com



வைத்துக்கொண்டு, அந்த உறவை தமிழ் மக்களிடம் புலியல்லாத மாற்று என்கின்றனர்.

இதை மூடிமறைக்க தம்மை ஜனநாயகவாதிகள் என்றும், முற்போக்கு வாதிகள் என்றும், கலை இலக்கியவாதிகள் என்றும், தலித்திய வாதிகள் என்றும், பெண்ணியல்வாதிகள் என்றும், ஜனநாயகத்துக்கு திரும்பியவர்கள் என்றும் கூறிக்கொண்டுதான், இந்த இழிவான கடைந்தெடுத்த அரசியல் போக்கிரித்தனத்தை செய்கின்றனர்.

மக்களிடம் செல்லாத, மக்களை அணி திரட்டாத, பேய்களையும் பிசாசுகளையும் எதிர்த்து போராடாத ஜனநாயகம் போலியானது. இது முன்வைக்கும் தலித்தியம், பெண்ணியம், கலை இலக்கியம் அனைத்தும் பிற்போக்கானதும், மனித விரோதத்தன்மையும் கொண்டது. இவர்கள் தம்மையும் தமது நடத்தையையும் முற்போக்கானது என்று கூறிக் கொள்வது, மக்களைச் சாராத சூழ்ச்சியை சதியை அடிப்படையாக கொண்டு குலைப்பதேயாகும்.

***08.08.2007***



படிப்பகம்

www.padippakam.com



# எதிரியின் கைக்கூலிகளால் ஒருநாளும் ஜனநாயகத்தை உருவாக்க முடியாது

மக்களின் எதிரிகளாக யார் உள்ளனரோ, அவர்களின் கைக்கூலிகள் தான் புலியெதிர்ப்புக் கும்பல். இதற்கு வெளியில் சுயாதீனமான மக்கள் அரசியல் எதுவும் இந்தக் கும்பலிடம் கிடையாது. இந்த புலியெதிர்ப்பு ''ஜனநாயகவாதிகள்'' மக்களின் எதிரிகளிடம் பணத்தில் அரசியல் செய்வதுடன், அவர்களின் பாதுகாப்பில் நின்று அதற்கு விசுவாசமாக குலைக்கின்ற ஒட்டுண்ணிக் கும்பல். இதை யாரும் இல்லை என்று நிறுவமுடியாது.

இந்தக் கும்பல் கைக்கூலிக்குரிய விசுவாசத்துடன், புலியொழிப்பு என்று வித்தை காட்ட முனைகின்றனர். புலியை எதிரியாக காட்டி, தனக்கு பணம் தருபவனை எதிரியற்றதாக காட்டி எதிரிக்கு வாலாட்டி நக்குகின்றனர்.

எதிரி பற்றிய வரையறை என்ன? மக்களின் வாழ்வாதாரங்களுடன் பின்னிப்பிணையாத அனைத்தும், மக்களுக்கு எதிரிதான். மக்களைச் சார்ந்தே நிற்காத புலிகள், புலியெதிர்ப்புக் கும்பல் கூட, மக்களின் எதிரிதான். மக்களை எதிரியாக்கி செயல்படும் அரசு முதல் ஏகாதிபத்தியம் வரை மக்களின் எதிரிதான். மக்களுக்காக இவர்கள் சிந்திப்பதுமில்லை, செயல்படுவதுமில்லை. மக்களை வேட்டையாடி தமக்கும், சுரண்டும் வர்க்கத்துக்கும் சேவை செய்கின்றவர்கள் மக்களின் எதிரிதான்.

இந்த எதிரி புலியாக இருந்தாலும் சரி, புலியெதிர்ப்பு புலியொழிப்புக் கும்பலாக இருந்தாலும் சரி, ஒன்று தான். அதன் அரசியல் என்பது மக்களைச் சார்ந்து இருப்பதில்லை. மக்கள் தான், தமது சொந்த விடுதலைக்கு போராட வேண்டும் என்பதை மறுப்பவர்கள் இவர்கள். அவர்கள் கூறும் காரணம், மக்களை அணிதிரட்டுவது சாத்தியமில்லை என்கின்றனர். அத்துடன் மக்கள் தமக்காக போராடமாட்டார்கள் என்று



படிப்பகம்

www.padippakam.com



சொல்லி, தரங்கெட்ட அரசியல் விபச்சாரம் செய்கின்றனர். புலியும் சரி, புலியெதிர்ப்பும் சரி, இதைத்தான் அன்று முதல் இன்று வரை சொல்லுகின்றது. அதனடிப்படையில் செயல்பட்டவர்கள் எதையும் பெற்றது கிடையாது. பார்ப்பனியம் போல் சலசலக்கும் இந்த மக்கள் விரோதிகள், பேய்களினதும் பிசாசுகளினதும் வைப்பாட்டிகள்தான்.

இப்படிப்பட்ட இவர்களில், தம்மை முற்போக்கு ஜனநாயகவாதிகளாக காட்ட முனையும் புலியெதிர்ப்பு ''ஜனநாயகவாதிகளின்'' யோக்கியதை என்ன?

ஈ.என்.டி.எல்.எப் என்ற கூலிக் கும்பல், இந்தியா அரசிடம் பணம் வாங்கி இயங்குகின்ற, இயங்க வைக்கப்படுகின்ற ஒரு கொலைகார கும்பல். இந்தியாவின் பாதுகாப்பிலும், அண்மையில் இலங்கை அரசின் பாதுகாப்பில் இயங்கிய கருணா என்ற கும்பலுடன் கூடி செயல்பட்ட, ஒரு கொலைகாரக் கூலிக் கும்பல். இதற்கு மாற்றாக வேறு எந்த வேலைத் திட்டமும் இதனிடம் கிடையாது.

ஈ.பி.டி.பி இலங்கை அரசிடம் பணம் வாங்கி செயற்படும் ஒரு கூலிப்படை. அரசு கொடுக்கும் பணத்தில் கொலை செய்ய கூலிக்கு ஆட்களைத் திரட்டுவதுடன், அரசு பதவியைக் கொண்டு பிழைப்புவாத பிரமுகர்களை அடிப்படையாக கொண்ட ஒரு கூலிக் கும்பல். இலங்கை அரசின் பணத்துக்கு வெளியில் எந்த வேலைத் திட்டமும் இதனிடம் கிடையாது. இலங்கை அரசின் பாதுகாப்பில் நின்று, புலிக்கு நிகராகவே கொலை செய்கின்ற ஒரு கூலிக் கும்பல்.

புளாட், ஈ.பி.ஆர்.எல்.எப் முதல் அனைத்தும் இலங்கை அரசின் பாதுகாப்பில் இருப்பதுடன், அவர்களிடம் பணத்தை பெற்று அரசியல் செய்கின்ற ஒட்டுண்ணிக் கும்பல்கள். அன்றாடம் கொலையும், வரியும் அறவிடுவதே இவர்களின் கைதேர்ந்த அரசியல்.

கருணா என்ற கொலைகார புலிக்கும்பல். இலங்கை அரசின் இன்றைய செல்லக்குழந்தை. புலியொழிப்பின் பெயரில் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல், வரி, கப்பம், அடிதடி, ரவுடித்தனம் என்று, புலியின் அனைத்து வகை வக்கிரத்தையும் கிழக்கில் செய்யும் தனிக்காட்டு ராஜா. இந்த கருணா கும்பலின் அரசியல் என்பது, புலி செய்த கொலைகார அரசியல்தான். இன்று இலங்கை அரசுக்காக கொலை செய்கின்ற, இலங்கை அரசின் ஒரு கொலைகாரக் கூலிக் கும்பல். இந்த கொலைகார அரசியல், கிழக்கை குத்தகைக்கு எடுத்துவைத்துள்ளது. இந்த அரசியல் போக்கிரித்தனத்தை செய்ய,



படிப்பகம்

www.padippakam.com



கிழக்கு வாழ் மக்களின் குழந்தைகளை திருடுகின்ற மக்களின் முதல்தரமான விரோதிகளின் ஒருவன்தான் கருணா. இந்தளவுக்கு இதை சாதிக்க, இலங்கை மற்றும் இந்திய அரசின் பாதுகாப்பும், பணமும் உதவுகின்றது.

கூட்டணியைச் சேர்ந்த ஆனந்தசங்கரி. இலங்கை அரசிடமும் பணம் பெற்று, அவர்களின் பாதுகாப்பில் திடீர் ''ஜனநாயகவாதி''யானவர். அரசு மற்றும் ஏகாதிபத்திய செயல்பாட்டு எல்லைக்கு வெளியில் எந்த மாற்று அரசியலும் கிடையாது. மக்களை நம்பி இவர்கள் குலைப்பதில்லை.

இவர்கள் எல்லாம் ஜனநாயக வாதிகள். தமது சொந்த அமைப்பில் கூட ஜனநாயகத்தின் மூச்சை காட்ட முடியாதவர்கள். கொலை, அடி உதை, மிரட்டல், பணத்தை கொடுத்து விலைக்கு வாங்குவது, ஆசைகாட்டுவது, அடிபணிய வைப்பது, தூக்கியெறிவது என்று, இந்த அமைப்புகளின் உட்கட்சி ஜனநாயகம் உள்ளது. இவர்கள்தான் புலிகளிடம் இருந்து, ஜனநாயகத்தை மீட்கப்போகின்றார்களாம். அதை புலியொழிப்பு என்று கூறிக்கொண்டு, புலியெதிர்ப்பை முன்வைத்து புலியை ஒழிக்க கொலை செய்கின்றனர்.

சொந்த அமைப்பில் ஜனநாயகத்தை, மக்கள் நலத் திட்டத்தை வைக்க முடியாதவர்கள், மக்கள் மேல் தமது சர்வாதிகாரத்தை திணிக் கின்றனர். இலங்கை மற்றும் இந்திய அரசிடமும், ஏகாதிபத்தியத் திடமும் பணமும் ஆயுதமும் வாங்கி திரிகின்ற கூலிக் குழுக்கள் தான் இவை. ஏகாதிபத்தியத் திடம் பணத்தையும், வசதி வாய்ப்பு களையும் பெறுகின்றனர். உலகத்தைச் சுற்றிவர இலவச விமான ரிக்கற்றுகள் முதல் பற்பல சலுகைகள். புலியெதிர்ப்பு புலியொழிப்பை ஊக்குவிக்க, ஏகாதிபத்திய நிறுவனங்கள் பட்டங்களையும் பரிசு களையும் கூட வழங்குகின்றது.

மனிதத்தையே ஏகாதிபத்தியத்திடம் கூவி விற்கும் இந்த புல்லுருவிகள், ஏகாதிபத்திய ஊக்கத்தையும், ஆக்கத்தையும் பெற்றபடி தான் மானிட விடுதலை பற்றி கொக்கரிக்கின்றனர்.

இப்படிப்பட்ட இந்தக் கும்பலில் யோக்கியதை உலகமறிந்தது. இப்படி இலங்கை இந்திய உள்ளிட்ட ஏகாதிபத்திய ஆதரவு பெற்ற இந்த ''ஜனநாயக'' கனவான்கள், மக்களிடம் அரசியல் செய்வது கிடையாது. மக்களிடம் செல்ல எந்த வேலைத்திட்டமும் கிடையாது. சொந்த மக்களை நம்புவது கிடையாது. அதாவது மக்களை நம்பி அரசியல் செய்வது கிடையாது.



படிப்பகம்

www.padippakam.com



அன்னிய பணம், அன்னிய பாதுகாப்புக்குள் நின்று குலைக்கின்ற கொலைகாரக் கும்பல்கள் இவை. இவர்கள் தான் புலிப் பாசிசம் பற்றியும், ஜனநாயக மீட்புப் பற்றியும் பிதற்றுகின்றனர்.

அன்னிய பணத்தில், அன்னிய பாதுகாப்பில் நின்று நடத்துகின்ற அரசியல், மக்களை அவர்களுக்கு அடிமைப்படுத்துவதைத் தவிர வேறு எதையும் செய்வதில்லை. இவர்கள் கடந்த 25 வருடத்தில் இந்தக் குழுக்களும், இந்த குழுக்களைச் சேர்ந்தவர்களின் அரசியல் பித்தலாட்டங்கள், மனித விரோத செயல்பாடுகள் எம்முன்னால் விரிந்து கிடக்கின்றது.

புலியின் பாசிச அரசியலுக்கு மாற்றாக எந்த மாற்று அரசியல் வழியும் இவர்களிடம் கிடையாது. புலிகள் எப்படி மக்களை பார்க்கின்றரோ, அப்படித்தான் இந்தக் கும்பலும் மக்களை பார்க்கின்றது. புலிகள் எப்படி மக்களை நடத்துகின்றனரோ அப்படித்தான் இந்தக் கும்பலும் நடத்துகின்றது. புலிகள் எப்படி மக்களை அடக்கியொடுக்கு கின்றனரோ, அப்படித்தான் இந்தக் கும்பலும் நடக்கின்றது. புலிகள் எப்படி மக்கள் நலன்களையும், அவர்களின் சொந்தப் போராட்டங் களையும் புலித் தமிழீழத்தின் பின் என்கின்றனரோ, அப்படித்தான் இவர்கள் அதை புலியொழிப்பின் பின் என்கின்றனர்.

எல்லா விதத்திலும் புலியாக இருப்பதில், புலியொழிப்பு புலியெதிர்ப்புக் கும்பல் ஒன்றுபட்டே நிற்கின்றது.

இந்தக் கும்பலுக்கும், இதற்கு அன்னக்காவடி எடுத்தாடும் புலம்பெயர் கொள்கை கோட்பாடற்ற எடுபிடிகள், தம்மைத் தாம் ''ஜனநாயக வாதிகள்'' என்கின்றனர். இவர்கள் கூடிக் குலாவி செய்யும் விபச்சாரம் மூலம், ஜனநாயகத்தை மீட்பதாகச் சதிசெய்கின்றனர். நல்ல வேடிக்கையான அரசியல்.

இலங்கை அரசு என்ற பேய்க்கும், ஏகாதிபத்தியம் என்ற பிசாசுக்கும் துதிபாடுகின்ற, அதன் பின்னால் நின்று குலைக்கின்ற இந்த கும்பல், மக்களின் எதிரிகள்தான். இதற்கு வெளியில் எதையும் இவர்கள் செய்வதில்லை.

புலிகள் போல் எந்த விதத்திலும் இவர்கள் குறைந்தவர்கள் அல்ல. புலிகள் பெருமெடுப்பில் கொலைகளைத் தொடங்க முன்பு, புளாட் பாரிய உட்படுகொலைகளை நடத்தியவர்கள். இந்திய இராணுவம் எம்மண்ணை ஆக்கிரமித்து இருந்த காலத்தில் ஈ.என்.டி.எல்.எப், ஈ.பி.ஆர்.எல்.எப் நடத்திய படுகொலைகள் புலியை மிஞ்சியது.



படிப்பகம்

www.padippakam.com



இவர்கள் இன்றுவரை அதை சுயவிமர்சனம், விமர்சனம் செய்ய மறுப்பவர்கள். இன்று ஈ.பி.டி.பி நடத்தும் கொலைகள் புலிக்கு நிகரானது.

புலியெதிர்ப்பின் பின் புலியொழிப்பு அரசியல் நடைமுறையாக இருப்பது கொலைகள் தான். புலியொழிப்பு வேலைத்திட்டமே அதுதான். இன்று வடக்கு கிழக்கில் நடக்கும் கொலை, ஆள்கடத்தல், வரி, கப்பம் எல்லாம் யார் செய்கின்றனர். எல்லாம் இந்த ஜனநாயகவாதிகள் தான். கொலைகளை செய்துவந்த புலிகளை விரட்டிவிட்டு, இவர்கள் கொலை களைச் செய்கின்றனர். இது தான் புலியொழிப்பு. வேறு வழி இவர்களிடம் இதற்கு வெளியில் கிடையாது.

புலியொழிப்பு ''ஜனநாயகவாதிகள்'' புலி படுகொலைக்கு எதிராக குதித்தவர்கள், இன்று கள்ள மௌனத்துடன் அதை செய்வதும் ஆதரிப்பதும் வெளிப்படையானது.

அண்மையில் கிழக்கு சென்ற புலியொழிப்புக்கு தலைமை தாங்கும் தலைவர்கள், கிழக்கை கருணா என்ற புலியொழிப்பு கொலை காரனுக்கு குத்தகைக்கு கொடுத்ததை பெருமையாக பீற்றினர். கொலைகார கருணாவுக்கும் தமக்கு இடையில் மோதலை உருவாக்கும் சதி என்று கூறி, ஜனநாயகத்துக்கே வெடி வைத்தனர். கருணா என்ற கொலைகார புலிக் குழுவுக்கு மாற்றாக, தேர்தலில் பங்குகொள்ள அனுமதி இல்லை என்பதையே, இந்த மோதல் பற்றிய கூற்று பளிச்சென்று விளக்கியது.

கிழக்கில் புலியின் முன்னைய கொலைகார வாரிசும், இன்றைய போட்டி கொலைகாரனுமான கருணா கும்பல் நடத்துகின்ற கொலைகள், மனித உரிமை மீறல்களை, அவர்களால் மக்கள் படும் துன்பத்தை பற்றி பேச முடியாத இவர்கள் ஊமை ஜனநாயக வாதிகளாக மாறி மட்டக்களப்பை சுற்றிப்பார்த்தனர். அதைப் பற்றி பேசினால் அது மோதல், புலிச் சதி என்று கூறும் ஜனநாயகத் துரோகிகள்.

கருணா என்ற புலிக் கொலைகாரன் நடத்துகின்ற வெறியாட்டங்கள், இந்த ஜனநாயகவாதிகளுக்கு இப்படி கண்ணில் தெரியாமல் போகின்றது. எப்படிப்பட்ட பொறுக்கிகள். கிழக்கு மக்களுக்கே அதே யாழ் மேலாதிக்க உள்ளடக்கத்தில் இங்கும் துரோகம் செய்கின்றனர். கிழக்கில் ஜனநாயகம் என்பது கருணாவுக்கு உட்பட்டது என்பது இவர்களின் அகராதி கூறுகின்றது. நாங்கள் அங்கு ஜனநாயக ரீதியாக செயல்பட மாட்டோம் என்கின்றது. இதையே ஆனந்தசங்கரி என்ற



படிப்பகம்

www.padippakam.com



புலியொழிப்பு கனவான் பி.பி.சிக்கு பேட்டியாக கொடுக்கின்றார்.

எங்கள் ஜனநாயகம் புலியை ஒழிப்பதுதான். அதை யார் செய்தாலும், அதை கண்டு கொள்ளமாட்டோம். அதில் ஜனநாயக விரோதம் நடந்தால் அதை ஆதரிப்போம் அல்லது கண்டுகொள்ளவே மாட்டோம் என்கின்றனர்.

இவர்களிள் நோக்கம் மக்களின் ஜனநாயகத்தை மீட்பதல்ல. அதற்கென்று எந்த வேலைத்திட்டமும் இவர்களிடம் கிடையாது. சொந்த அரசியல், மக்களைச் சார்ந்து நிற்றல் என்று, இந்தக் கும்பலிடம் எந்த அரசியல் அகராதியும் கிடையாது. புலியைப் போல் ஒரு பாசிச மாபியாக் கும்பல். புலியை மட்டுமல்ல, இந்த புலியெதிர்ப்பு புலியொழிப்பு பாசிச கும்பல்களையும் இனம் கண்டு மக்களாக ஒழிக்காத வரை, சமுதாயத்தில் ஜனநாயகம் என்ற பேச்சுக்கே இடம் இருக்காது.

***02.09.2007***



படிப்பகம்

www.padippakam.com



# கிழக்குப் பாசிட்டுகள், வடக்கைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கு விடுத்த படுகொலை மிரட்டல்

கருணா தலைமையிலான பாசிச கும்பல், கிழக்கில் புதிய கொலைக் களத்தை உருவாக்கி வருகின்றது. பேரினவாதிகளின் கூலிக்கும்பலாகவே மாரடிக்கும் இந்தக் கும்பல், தமது அரசியல் நக்குண்ணித்தனத்தை, வடக்கு மக்களுக்கு எதிராக வெளிப்படுத்து கின்றது. கிழக்கில் இருந்து புலிகள் ஒழிக்கப்பட்ட நிலையில், கிழக்கு மக்களுக்கு எதிரியாக வடக்கு மக்களைக் காட்டுகின்றது.

உண்மையில் என்ன தான் நடக்கின்றது. இதுவரை கருணா கும்பல் புலிகளை எதிரியாக காட்டி அரசியல் விபச்சாரம் செய்தவர்கள், இன்று எதிரியாக யாரைக் காட்டுவது என்ற புதிய அரசியல் நெருக்கடியைச் சந்திக்கின்றனர். புதிய வளர்ப்பு எஜமானான அரசை, தமது எதிரியாகக் காட்டமுடியாது. அந்த அரசின் தயவில் நக்கி, அதில் உண்ணியாக வாழ்பவர்கள், தமது அரசியல் இருப்பு சார்ந்து புதிய எதிரி தேவைப்படுகின்றது. அந்த வகையில் வடக்கு மக்களையே, தனது எதிரியாக இன்று காட்டத் தொடங்கிவிட்டனர்.

அண்மையில் துண்டுப்பிரசுரம் மூலம் விடுத்த கொலை அச்சுறுத்தல், இதன் ஒரு அங்கம். அரசுடன் தன்னைப் போல் இணைந்து இயங்கும் போட்டிக் கைக்கூலி துரோகக் குழுக்களின் தலைவர்களுக்கு விடப்பட்டது எச்சரிக்கை, உள்ளடக்க ரீதியாக அவ்வச்சுறுத்தல் அவர்களை நோக்கியதல்ல. மாறாக இதன் பின்னணியும், அரசியல் நோக்கமும் தெளிவானது. அதாவது உண்மையில் வடக்கு மக்களுக்கு விடப்பட்ட, ஒரு கொலை அச்சுறுத்தல்தான் இது.

போட்டிக்குழுக்களுடனான கிழக்கு அதிகாரம் தொடர்பான மோதல் என்பது, இந்தப் பாசிச அரசியல் வழிகளில் தான் தீர்க்கப்படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



கருணா என்ற கிழக்குவாதம் பேசும் பாசிச கூலிக் கும்பலால், அரசியல் ரீதியாக மாற்றுக்குழுக்களை எதிர்கொள்ள முடியாது. மாற்றுக் குழு அரசியலை விமர்சித்து அரசியல் செய்ய, இந்தக் கும்பலிடம் எந்த மாற்று அரசியலும் கிடையாது. இதுதான் அரசுடன் சேர்ந்து இயங்கும் அனைத்து கூலிக் குழுக்களின் நிலையும் கூட.

இதுபோல்தான் புலிகளை எதிர்த்து புலியெதிர்ப்பு அரசியல் செய்யும் கும்பல்களிடமும், புலிக்கு மாற்றாக வேறு அரசியல் எதுவும் கிடையாது. இதனால் அது குறுகிய புலியெதிர்ப்பில் ஈடுபடுகின்றது. அரசின் கிழக்கு கூலிக்கும்பலாக செயல்படும் இந்தக் கும்பலின் அரசியல் என்பது, பேரினவாதத் தேவையை ஓட்டியதே. இதுதான் அதன் இருப்பும், அதன் பலமும். இதற்கு வெளியில் மக்களுக்கு முன்வைக்கவென, எந்த சொந்த அரசியலும் கிடையாது.

அரசு வடக்கு கிழக்கென தனது கூலிக் குழுக்களை பிரிப்பதுடன், பிரித்து கையாள்வதுடன், ஒன்றுடன் ஒன்று மோத வைக்கின்றது. இது தான் பேரினவாதத்தின் புலிக்கு பிந்தைய தேவையாகும். வடக்கு கிழக்காக தமிழ் மக்களை மோதவைப்பதே, பேரினவாதத்தின் நீண்ட கால தேவையும் திட்டமும் கூட. இதற்கு தனது கூலிக் குழுக்களை மோத வைப்பது அவசியம். அது படிப்படியாக அரங்குக்கு வரத்தொடங்குகின்றது. இதன் போக்கில், இதை புலிகளின் உதிரியான படுகொலைகளையும் பயன்படுத்துகின்றது. இதில் வெற்றி பெறுவது, பேரினவாத நலன்கள்தான்.

மறுபக்கத்தில் நிலவும் யாழ் மேலாதிக்கம் பற்றிப் பேச இந்த கருணா என்ற அரச கூலிக்கும்பலுக்கு, எந்த அருகதையும் கிடையாது. அதற்குரிய அரசியல் அடிப்படையும் கிடையாது. அதற்கான அரசியல் தகுதியும் கிடையாது.

பேரினவாத சதிக்கும் தேவைக்கும் ஏற்ப, கூலிக்கு மாரடிக்கும் இந்தக் கும்பலால் அரசியல் ரீதியாக யாழ் மேலாதிக்கத்துக்கு எதிராக எதையும் முன்வைக்க முறியடிக்க முடியாது. இதனால் அது அரசியல் ரீதியாக இழிந்து போகின்றது. வடக்கு மக்களை எதிரியாக காட்டி, அவர்களை கொல்லுதல்தான், அவர்களின் எதிர்கால நடவடிக்கையாக பரிணமிக்கின்றது. இப்படி கிழக்கு மேலாதிக்க பாசிட்டுக்களுக்கு, தெரிந்த ஒரேயொரு அரசியல் தமிழ் மக்களை பிளந்து கொல்லுதல் தான்.

முன்பு புலிகள் பேரினவாதத்தை அல்ல, சிங்கள மக்களை எதிரியாக காட்டினர். பேரினவாத அரசியலை எதிர்கொள்ளும் அரசியல்



படிப்பகம்

www.padippakam.com



அடிப்படை அவர்களிடம் இருக்கவில்லை. சிங்களவன் என்று கூறிக் கொலை செய்கின்ற அரசியல் மூலம் தமிழ் தேசியத்தையே கற்பழித்தனர். இப்படித்தான் அனைத்து குழுக்களும் செயற்பட்டன.

இன்று அதன் வழி வந்த கருணா என்ற பாசிட், தனது எதிரியாக இதுவரையும் புலியைக் காட்டி ஒட்டுண்ணியாக வாழமுடிந்தது. கிழக்கை புலிகளிடம் இருந்து பேரினவாதம் கைப்பற்றிய பின், தனது அரசியல் இருப்பைக் காட்ட கருணா கும்பலுக்கு புதிய எதிரி தேவைப்படுகின்றது. தனது எதிரியாக வடக்கு மக்களைக் காட்டுவதைத் தவிர, வேறு எந்த அரசியல் குறுக்கு வழியும் இந்தக் கைக்கூலியிடம் கிடையாது.

இதன் விளைவு எதிர்காலத்தில், வடக்கு மக்களை கிழக்கில் கொல்லுதல் தான் அதன் அடுத்த கட்ட வேலைத்திட்டம். அத்துடன் அவர்களை வெளியேற்றுதல் என்ற நிகழ்ச்சியையும், இந்த கூலிக் கும்பல் செய்யும். இதுதான் பேரினவாத அரசின் நடைமுறைத் திட்டம்.

கருணா கும்பல் மீதான தொடர்ச்சியான பலதரப்பு குற்றச்சாட்டு களுக்கு, புலிகளைப் போல் அதே புரட்டல் பதில். அத்துடன் உருட்டல், மிரட்டல், சுத்துமாத்தும், படுகொலைகள். நாற்றமெடுக்கும் இந்த கிழக்குப் பாசிட்டுகள் கதை மாறாது. இந்த நிலையில் கருணா கும்பலின் ஒடிப்போகாத புதிய பேச்சாளர், ஐயோ இந்த துண்டுப் பிரசுரத்துக்கும் தமக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று பி.பி.சியில் கூவுகின்றார். அப்படி என்றால் யார் இதை வெளியிட்டது எனக் கேட்ட போது, அதைப் புலிகள் என்றார்.

இதில் உள்ள அரசியல் வேடிக்கை என்னவென்றால், புலிகள் இதை வெளியிட்டு இருந்தால், கருணா கும்பலின் கிழக்கு மேலாதிக்க பாசிச நிலையை அவர்கள் பயன்படுத்தியுள்ளனர் அல்லவா! இந்த நிலையில் அதை புலிவிட்டால் என்ன, நீங்கள் விட்டால் என்ன, எல்லாம் ஒன்று தான். உங்கள் நிலைப்பாட்டைத்தான் வடக்குக்கு எதிரான துண்டுப்பிரசுரம் கொண்டுள்ளது. நீங்கள் என்ன சொல்ல நினைக்கின்றீர்களோ, என்ன செய்ய முனைகின்றீர்களோ, எதைச் செய்கின்றீர்களோ, அதையே துண்டுப்பிரசுரம் கொண்டுள்ளது.

இதை புலி விட்டதாக நீங்கள் கூறினாலும் சரி, இல்லை நீங்கள் ஒரு முகவரியற்ற பெயரில் விட்டாலும் சரி, உங்களின் மக்கள் விரோத அரசியல் அதில் அப்படியேயுள்ளது. கறைபடிந்த வக்கிரம், வடக்குக்கு எதிரான அரசியலாகவன்றி எப்படித் தான் பரிணமிக்கும்.



படிப்பகம்

www.padippakam.com



இந்த கிழக்கு பாசிசக் கும்பலிடம், மாற்று அரசியல் எதுவும் கிடையாது. எதிரி இன்றி, கருணா அரசியல் அனாதையாக முடியுமா? முடியாது. அரசிடம் நக்கி வாழ, இன்று வடக்கு மக்கள் என்ற புதிய எதிரி தேவைப்படுகின்றது. இதனடிப்படையில் வடக்கு மக்கள் மேல் படுகொலைகள் நடக்கும். அதை புலியின் பெயரில் கருணா கும்பல் அவிக்கமுனையும். இந்த பாசிசக் கைக்கூலி அரசியலில் எல்லாமே சாத்தியம்.

இந்தக் கூலிக் கும்பல், தாமல்ல என்று கூற தாம் ஜனநாயகத்துக்கு திரும்பியவர்கள் என்கின்றது. தாம் ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்களாம். வேடிக்கை தான். பேரினவாத இராணுவத்தின் கூலிக் கும்பலுக்கு வெளியில், வேறு எதுவுமற்றவர்கள் இவர்கள். தமது இருப்புக்கான செயல் என்பது, கொலை முதல் அனைத்து மனிதவிரோத நடத்தைகள் கொண்ட ஒரு வெறும் கூலிக் கும்பல்.

இந்த கூலி ஜனநாயகவாதிகள், ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்களின் அரசியல் இருப்பும், அதன் நடைமுறையும் என்ன? பேரினவாதத்தின் தயவில், அதன் பாதுகாப்பில், அது கொடுக்கும் பணத்தில் நின்று, தமிழ் மக்களை புலிகளின் பெயரில் வேட்டையாடுவது தான். அத்துடன் தமிழ் மக்களை வடக்கு கிழக்கு மக்களாகப் பிளந்து, வடக்கு மக்களை படுகொலைக்கு அழைத்துச் செல்வதன் மூலம், கிழக்கு மக்களை மேலும் ஒடுக்குவதுதான், இந்த கும்பலில் பாசிச இலட்சியம்.

புலிகளில் இருந்தபோது, இந்த கருணா என்ற பாசிட் எதையெல்லாம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்தானோ, அதையே இன்று பேரினவாதத்துக்காக செய்கின்றான். வாலாட்டி நக்கும் வேட்டை நாயாக, நாய்க்குரிய வேட்டைப் பண்புடன், மக்கள் மேல் இந்த பாசிட் பாய்ந்து குதறுகின்றது. ஊட்டி வளர்ப்பவர்களை எட்டப்பனாக நக்குவதும், மற்றவர்களை வேட்டையாடுவதுமே, இந்தக் கும்பலின் துரோக அரசியலாகும். அன்று யாழ் மேலாதிக்கவாதிகளும் கிழக்கு கருங்காலிகளும் சேர்ந்து, கிழக்கில் முஸ்லிம் மக்களை கொன்று குவித்த வரலாறு எம் முன்னால் உள்ளது. இன்று சிங்களப் பேரினவாத பாசிட்டுகளுடன் சேர்ந்து, வடக்கு மக்களை கொலை செய்ய தூபமிடுகின்றனர். பேரினவாத பாசிச அரசுடன் சோந்து இயங்கும் கிழக்கு கூலிக்கும்பல் களால், வடக்குக்கு எதிராக விடப்படும் அச்சுறுத்தல் என்பது, பேரினவாதத்தின் திட்டமிட்ட சொந்த சதிதான். தமிழ் மக்களை வடக்கு கிழக்காக பிளந்து, அவர்களின் தேசிய கோரிக்கைக்கு வேட்டு வைப்பது, பேரினவாதத்தின் இலட்சியம்.



படிப்பகம்

www.padippakam.com



இந்த பேரினவாத தேவையை, தனது சொந்த வழிகளில் செய்யமுடியாது. அதைக் கிழக்கு மக்கள் ஒருநாளும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதனால் கருணா என்ற கிழக்கு கைக்கூலியைக் கொண்டு சாதிக்க முனைவது, இன்று தெளிவாகவே ஊரறிய அம்பலமாகின்றது.

கருணா எட்டப்பனுக்குரிய சலுகைகள், வசதிகளுடன் களத்தில் இறங்கிவிடப்பட்டுள்ளான். கிழக்கு மக்களை வடக்கு மக்களுக்கு எதிராக நிறுத்தி, பிளக்கின்ற அரசியல் பித்தலாட்டங்களை அரங்கேற்றுவதையே, கருணா மூலம் பேரினவாதம் கோருகின்றது. அதை நோக்கி முன்னேறுகின்ற பேரினவாதபடிகளில் ஒன்றுதான், இந்தத் துண்டுப்பிரசுரம்.

இந்த கிழக்கு பாசிட்டுக்களுக்கு கிழக்கு மக்களின் துயரங்களையும் தீர்க்கும், எந்த அரசியல் அடிப்படையும், அரசியல் நேர்மையும் கிடையாது. தானும் தனது கிழக்கு கும்பலும் நன்றாக பேரினவாதத்தை நக்கி வாழும் கனவில், தமிழ் மக்களை மேலும் பிளந்து பந்தாடுகின்ற வக்கிரமே, இன்று புலியின் பெயரால் அரங்கேறுகின்றது. கருணா என்ற கிழக்கு பாசிட்டின் உதயம், ஒரு கிழக்கு எட்டப்பனின் வரலாறாகவே வரலாறு இதைப் பதிவு செய்யும். மன்னிக்க முடியாத, மனித குலத்தின் எதிரிகள் அணியில், முடிவின்றி தொடர்ந்தும் பலர் போட்டிபோட்டு இணைகின்ற இன்றைய காலகட்டத்தில், அவற்றை சமரசமின்றி தொடர்ச்சியாக அம்பலப்படுத்தி போராடவேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம்.

***10.09.2007***



படிப்பகம்

www.padippakam.com



# புலியல்லாத ஒரு கொலைக்களமும், புலியெதிர்ப்பின் நிலைப்பாடும்

புலியல்லாத கொலைகளுக்கு உடந்தையாக இருத்தலே புலி யெதிர்ப்பின் ஜனநாயகமாகும். இதை ஒரு தலையங்கமாக இட்டு, அதைக் குறித்து எழுத வேண்டிய அளவுக்கு அரசியல் விபச்சாரம் எங்கும் அரங்கேறுகின்றது. புலிகள் செய்யாத கொலைகள், புலியெதிர்ப்புப் பாசிசக் கும்பலால் ஆதரிக்கப்படுகின்றது. ஒன்று இரண்டல்ல ஆயிரக்கணக்கானவர்கள் மீது, இந்த கொலை வெறியாட்டம் நடத்தப்பட்டுவிட்டது. இந்த மனித அவலத்தை மூடிமறைக்க, இனம் தெரியாத கொலைகள் என்ற சூக்குமத்துக்குள் வெறியாட்டம் செய்கின்றனர். மாறாக புலிகளை மட்டும் கொத்திக் கிளறுகின்றனர். இப்படி இந்த புலியெதிர்ப்பு நரிகள் மனித அவலத்தையே ருசிக்கின்ற இழிபிறவிகளாகி இருப்பதையே, முற்போக்கு என்கின்றனர்.

புலிகள் மட்டுமா வகைதொகையின்றி துரோகியாக, சமூக விரோதியாக கொல்லமுடியும்! எம்மாலும் அதை மிஞ்சி செய்ய முடியும் என்பதை பேரினவாதமும், கைக்கூலி கும்பல்களும் செய்து காட்டுகின்றனர். இங்கு ஜனநாயக மீட்பு, பாசிச ஒழிப்பு என்ற பெயரில் இவை செய்யப்படுகின்றது.

புலிகள் செய்தால் அது ஜனநாயக மீறலாக பாசிசம் என்பவர்கள், புலி அல்லாதோர் செய்தால் அது பாசிச ஒழிப்பு என்கின்றனர். அரசியல் ரீதியாக இது ஒரு வேடிக்கைதான். ஆனால் இதுவே, மக்களின் வற்றாத கண்ணீர் காடாகின்றது. தமது குழந்தைகளும், கணவர்களும் கேட்பாரின்றி கொன்று குதறப்படுவதைக் கண்டு, கதறுகின்றனர். தாய்மையின் வலி உருவாக்கும் அவலமான துயரத்தை சிலுவையாக சுமந்தபடி, இராணுவ முகாம்களின் முன் தமது குழந்தைக்காக ஏங்கி நிற்க, அவர்களின் கருப்பைகள் அறுத்தெறியப்படுகின்றது. நாளொரு தோறும், பொழுதொரு தோறும்



படிப்பகம்

www.padippakam.com



பிணங்களே தேசமெங்கும் மிதக்கின்றது. அனாதைகளாக மரணித்துப் போகும் அவலத்தை ஜனநாயகத்துக்கான மீட்பு என்கின்றனர். கிழக்கு இராணுவ சூனிய பிரதேசமாகிவிட்டது. வன்னியில் இருந்து மனித அவலங்கள் தகவல்களாக கசிகின்ற நிலமைகள் இருக்கும் போது கூட, கிழக்கில் மனிதம் நலமடிக்கப்படுகின்ற ஒரு நிலையில், அவை தகவலாக கூட வரமுடியாத அவலம்.

இதை செய்கின்ற அரசையும், அந்த இராணுவத்தையும் போற்றுகின்ற அரசியல் தான், புலிக்கு மாற்று அரசியல் என்கின்றனர். இதற்கு வெளியில் இவர்களின் அரசியலை பூதக்கண்ணாடி கொண்டு தேடினாலும், எதையும் கண்டறிய முடியாது. தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சனைகளை ஒவ்வொன்றாக கண்டறிவதை தீவிரமாக எதிர்க்கின்றவர்கள் இவர்கள்.

இனம்தெரியாத கடத்தல், காணாமல் போதல், இனம் தெரியாத கொலையை செய்தல் என்பதை, புலிகளிடம் இருந்து பேரினவாதம் கையேற்றுள்ளது. இந்த வகையில் புலிகள் ஒருதலைப்பட்சமாக இராணுவம் மீது தாக்குதலை தொடங்கிய பின்பாக, அதாவது 1995 டிசம்பர் முதலாக குறைந்தபட்சம் 2000 க்கு மேற்பட்டவர்கள் இப்படி கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் யுத்த முனையில் அல்ல, வீதிகளிலும் வீடுகளில் வைத்தும் இல்லாதாக்கப்படுகின்றனர். புலிகளின் கடந்தகால நடப்பு பாசிச கொலைகார வரலாறு இதற்கு முன்னால் மண்டியிட்டு பிச்சை வாங்க வேண்டும். மிக குறுகிய காலத்தில், எந்த எதிர்ப்புமின்றி, இவை மூடிமறைக்கப்பட்ட ஒரு நிலையில்தான் இவை நடந்தேறியுள்ளது, நடந்தேறுகின்றது.

புலியெதிர்ப்பு அரசியல் இதை ஆதரிப்பதும், இதைச் செய்ய துணை போவதன் மூலமும் நாடு இரத்த ஆறாகின்றது. புலிகள் செய்தால் அதை வைத்து நக்கிப் பிழைப்பதும், புலியல்லாத கொலைகளை இட்டு கள்ளமௌனம் சாதிப்பதும் இவர்களின் அரசியல் பிழைப்புத்தனமாகும். புலிகள் நடத்தும் பாசிசக் கொலைகளை வெட்டிப் புடுங்கி பிணப்பரிசோதனை செய்வதை ஜனநாயகம் என்பவர்கள், புலியல்லாத இன்றைய கொலைகளை இட்டு கள்ள மௌனம் சாதித்து ஆதரிப்பதே இவர்களின் கடைந்தெடுத்த பாசிச ஜனநாயகமாகும. இந்த மனித அவலத்தை கண்டு காணாமல் மூடிமறைப்பது வெக்கக்கேடு.

இவர்களின் ஜனநாயக அரசியல் எப்படி புலிப் பாசிசத்தை ஒழிக்கும்? இது போன்ற கடத்தல், காணாமல் போதல், படுகொலைகள் ஆதரிப்பதன் மூலமே தான் என்பது தான் புலியெதிர்ப்புக் கும்பலின்



படிப்பகம்

www.padippakam.com



அரசியலாகும். இதற்கு வெளியில் புலிப் பாசிச ஒழிப்புக்குரிய, வேறு எந்த வேலைத்திட்டமும் அரசியல் வழியும் இந்தக் கும்பலிடம் கிடையாது. நடந்துவரும் ஒரு பாரிய படுகொலையை புலியெதிர்ப்பு கும்பல் ஆதரித்து மூடிமறைக்கின்றனர்.

மறுபக்கம் அரசியல் ரீதியாக வக்கற்றுப் போன புலிகள், இதை அம்பலப்படுத்த முடியாது மலடாகிக் கிடக்கின்றனர். இதில்தான் புலியெதிர்ப்புக் கும்பல் மிதக்கின்றது. புலிகள் "துரோகதனமான தாக்குதல் மூலமே அரசியல் செய்கின்ற இழி நிலைக்கு நாயிலும் கீழாக தாழ்ந்து, இந்த மனித படுகொலைக்கு அரசியல் ரீதியாக துணையாக நிற்கின்றனர்.

புலிகள் என்ற பெயரிலும், புலிப் பாசிச ஒழிப்பு என்ற பெயரிலும், மக்களை புலியிடம் இருந்து விடுவித்தல் என்ற பெயரிலும் நடக்கின்ற இந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல் என்ற வக்கிரம் அரங்கேறுகின்றது. மனித உரிமைவாதிகள் என்று தம்மைக் கூறிக் கொள்வோரும், ஜனநாயகத்தின் வாலில் தொங்குபவர்களும் இதற்கு கம்பளம் விரிக்கின்றனர். தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், அவர்களை விடுவிக்க பிறந்ததாக கூறிக்கொண்டு குத்தகைக்கு எடுத்த அவதார புருஷர்கள், தமது கையாலாகத்தனத்தை தமது மலட்டுதனமான "ரோ" நடத்தைகள் மூலம் பீற்றிக் கொள்கின்றனர்.

தேசிய விடுதலை என்ற பெயரில், பாசிச மீட்பு என்ற பெயரில், திருடப்படும் தமது குழந்தைகளை மக்கள் பலிக்கொடுக்கின்றனர். இதன் மூலம் மக்கள் பெற்றவை எவை? பெறப் போவது எவை? உயிர் துடிப்பையே இழந்த, அடிமைகளை கொண்ட வெற்றிடமும் சூனியமுமே.

***01.04.2007***



படிப்பகம்

www.padippakam.com



# அரசியலில் வித்தை காட்டுவது

அரசியலில் வித்தை காட்டுவதும், சமூக அறியாமையை உச்செரிப்பதன் மூலமும், ஒரு சமூகத்தின் புதைகுழிகள் தொடர்ச்சியாக தோண்டப்படுகின்றது. வெளிப்படையானதும், நேர்மையற்றதுமான, அணுகுமுறையுடனான அரசியல் பித்தலாட்டங்கள் அரங்கேற்றப்படும் விதம் சூழ்ச்சிகரமானது.

இப்படி ஒரு பக்கம். மறுபக்கத்தில் இவர்களே புலி அல்லாதவர்களிடையே ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, ஐக்கியம் என்கின்றனர். எப்படி? எதனடிப்படையில்? புலி அல்லாதவரிடையேயான ஐக்கியம் என்பது, இவர்களைப் பொறுத்த வரையில் புலியெதிர்ப்பின் அடிப்படையில் மட்டும்தான். புலிகளும் இப்படித்தான் ஐக்கியம் ஒற்றுமை என்கின்றனர். வேடிக்கையான ஒரே அரசியல்.

இப்படி ஈ.பி.டி.பி, ஈ.என்.டி.எல்.எப், கருணா அணி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ் என்று அனைவரையும் உள்ளடக்கிய வகையில் விட்டுக்கொடுப்புடன் கூடிய ஐக்கியம். இப்படி புலியெதிர்ப்பு அரசியல் கூத்தை ஆடிக்காட்ட முனைகின்றனர். இப்படி உள்ளவர்கள், மக்கள் பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்று கேட்பதோ கேட்க கூடாத கேள்வி.

இப்படி அவர்களோடு கூடி மக்களின் முதுகில் குத்தவரும்படி புலியெதிர்ப்பு அணி கூவுகின்றது. இவையெல்லாம் அண்மையில் சபாலிங்கத்தின் பெயரில் நடத்திய கூத்தில் அரங்கேறியது. எதையும் அரசியல் ரீதியாக செய்வதை மறுக்கும் இந்த புலியெதிர்ப்பு, ரீ.பீ.சீ பின்னால் அனைவரையும் குலைக்க கோருகின்றது. இதன் பின்னால் சுயவிமர்சனம், விமர்சனம், ஜனநாயகம் என்ற பெயரில், எடுப்பார் கைப்பிள்ளை போல் எடுபடுவோரை அப்பாவிகள் என்பதா? அல்லது சந்தர்ப்பவாத பிழைப்புவாதிகள் என்பதா?



படிப்பகம்

www.padippakam.com



**சபாலிங்கம் கூட்டம் ரீ.பீ.சீ கூட்டமாகிய கதை :**

இவை எல்லாம் எங்கே அரங்கேறியது என்றால், 13 ஆண்டுகளுக்கு முன் பாரிசில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சபாலிங்கத்தின் நினைவுக் கூட்டத்தில் அரங்கேறியது. ஒரு மரணத்தைக் கூட, தனது மக்கள் விரோத புலியெதிர்ப்பு அரசியலுக்காக ரீ.பீ.சீ பயன்படுத்தியது. இதை விட வேறு எந்த அரசியலும் ரீ.பீ.சீ க்கு கிடையாது.

இந்தியாவின் கூலிக் குழுவாக பிறப்பெடுத்து, அவர்களை அண்டி வாழ்ந்து கொண்டிருக்கும் ஈ.என்.டி.எல்.எப் வின் வானொலிதான் ரீ.பீ.சீ. அதன் ஒரு உறுப்பினரால் இவ் வானொலி நடத்தப்படுகின்றது. இது அனைவருக்கும் நன்கு தெரிந்த உண்மைதான். ஆனால் அப்படி இல்லை என்ற நினைப்பில் கண்ணை மூடிக்கொண்டு பால் குடிக்கும் பூனையாட்டம் விவாதம் சிலர் செய்ய முனைகின்றனர். இதற்கு எப்போது சுயவிமர்சனம் செய்வார்களோ! தெரியாது.

ரீ.பீ.சீ நடுநிலையாக, எல்லாக் கருத்துக்களையும் உள்வாங்கியே ரீ.பீ.சீ. செயல்படுவதாக கூற முற்படுகின்றனர். அப்படி அவர்கள் எமக்கு சினிமா காட்ட முனைகின்றனர். அந்த வகையில் எம்மையும் அழைக்கின்றனர். தீவிர ஜனநாயகவாதிகளாக பாசாங்கு செய்யும் இவர்கள் அனைவரும், எமது எதிரான கருத்தை மாற்றுக் கருத்தாகவே அங்கீகரித்தது கிடையாது. அரசியலற்ற புலியெதிர்ப்பு கருத்து மட்டும் தான், அதுவும் தம்மை அங்கீகரித்த கருத்தை மட்டும் தான், இவர்கள் மாற்றுக் கருத்தாக கருதுகின்றவர்கள்.

ரீ.பீ.சீ பின் (புலியெதிர்ப்பின் பின்) உள்ள எந்த நபரும் எப்படியும், எந்த இயக்கத்திலும் இருக்கலாம். ஆனால் வானொலி (புலியெதிர்ப்பு தளங்கள்) அப்படி இருக்காது என்று காட்ட முனைகின்றனர். இன்றைய அரசுகளை வர்க்கமற்ற அனைவருக்குமான அரசாக காட்ட முனைகின்ற புல்லுருவிகள் போல், இதுவும் முன்வைக்கப்படுகின்றது.

கருணா என்ற புலிக் கொலைகாரனுக்கு பின்னால் நிற்பவர்கள் முதல் எல்லா மக்கள் விரோத குழுக்களும் இணைந்து அல்லது அதன் எடுபிடிகள் சேர்ந்து வானொலியை நடத்துகின்றனராம். நல்ல அரசியல் வேடிக்கை. காலகாலமாக மக்கள் காதில் பூச் செருகியபடி, அவர்களின் தாலியையே அறுத்த கதை தான் இங்கும். மக்களின் அவலங்களின் மேல், அதைப்பற்றி பேசாது குதிரை ஓட்டுகின்றனர்.

இது ஒருபுறம். மறுபக்கம் யார் எப்படி என்பதற்கு அப்பால், வானொலியின் நோக்கம் என்ன என்பதே அடிப்படையான கேள்வி.



படிப்பகம்

www.padippakam.com



புலிகளை அரசியல் ரீதியாக விமர்சிப்பதை மறுப்பதே, தமது அரசியல் கொள்கை என்கின்றனர். அரசியல் ரீதியாக மக்களை அணுகுவதல்ல அரசியல் என்கின்றனர். மாறாக புலியைப் போல் கொசிப்பு அரசியலை செய்வதே சரி என்கின்றனர். இவர்கள் வானொலியில் செய்வது அரசியல், ஆனால் அரசியல் நாங்கள் பேச மாட்டோம் என்கின்றனர். இது ஒரு மக்கள் வானொலியாம்! வானொலியில் அரசியல் கொசிப்பு அடிப்பதுதான் சரியாம். புலிகள் புலியாதரவு வானொலி நடத்துகின்றனர் என்றால், இவர்கள் புலியெதிர்ப்பு வானொலி நடத்துகின்றனர். மக்களை பற்றி கதைக்கும் அரசியல், வானொலிக்கே தீட்டு என்கின்றனர். இப்படி அவர்கள் நல்ல திருட்டு பார்ப்பனிய பூசாரிகள்தான்.

புலிகளை அரசியல் ரீதியாக விமர்சிக்க மறுப்பதும், மக்களை அரசியல் ரீதியாக விழிப்புற வைப்பதை மறுப்பதுமே, ரீ.பீ.சீ வானொலியின் அடிப்படையான அரசியல் நோக்கமாகும். இந்த வகையில் சிந்திப்பவர்கள், செயல்படுபவர்கள் கூடி கூச்சலிடுகின்றனர். மக்களின் வாழ்வியல் அரசியலை மறுத்து, புலியெதிர்ப்பு கொசிப்பை முன்னிலைப்படுத்துகின்றனர். இப்படியாக மக்கள் விரோத அரசியலை நிலை நிறுத்துவதே, அதன் மைய அரசியல் நோக்கமாகும்.

உண்மையை மூடிமறைக்கும் சூழ்ச்சியும், மூடிமறைக்கப்பட்ட சந்தர்ப்பவாத நரித்தனங்கள் மூலம், தம்மை நடுநிலை வானொலியாக அரங்கேற்ற முனைகின்றனர். சபாலிங்கத்தின் கூட்ட பின்னணியில் மூடிமறைக்கப்பட்ட உள்நோக்கம், கூட்டத்தின் இறுதிவரை மூடிமறைக்கப்பட்டு இருந்தது. இவை இடையிடையே அங்கும் இங்குமாக வெளிப்பட்டது. ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, ஐக்கியம் என்ற பெயரால் இது வெளிப்பட்டபோதும், அது கூட்டத்தின் முடிவில் சொந்த முகத்துடன், தமது குறுகிய நோக்கத்துடன் எழுந்து நின்றது.

சபாலிங்கத்தை இதில் இருந்து புனிதப்படுத்தி, தமது நேர்மையை அப்பழுக்கற்றதாக காட்ட, கூட்டத்தை இரண்டாக பிரித்து நாடகமாடினர். இரண்டாவது கூட்டத்தில் விரும்பியவர்கள் பங்கு பற்றலாம் என்ற நாடகம் அரங்கேறியது. உண்மையில் நேர்மையற்ற அரசியல் வேடிக்கைதான்.

இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்த நண்பர்கள் வட்டம், இரண்டாவது சுற்றில் ரீ.பீ.சீ யின் ஏஜண்டுகளாக (பிரான்சின் பிரதிநிதிகளாக) வெளிப்பட்டனர். சதிகளும், சூதும் அரசியலாகிவிட்ட எமது அரசியல் சூழலில், அதுவே வாழ்வு முறையாக இருப்பதை இது அம்பலமாக்கியது. புலிகள் அதில் மூழ்கிவிட்டனர் என்றால்,



படிப்பகம்

www.padippakam.com



புலியெதிர்ப்பும் அப்படித்தான் என்பதை தனிநபர் வேறுபாடுகளின்றி தொடர்ச்சியாக நிறுவிக் காட்டுகின்றனர்.

புலியெதிர்ப்பு அரசியலாகக் கொண்ட ரீ.பீ.சீ அரசியல் சூழ்ச்சிதான், சபாலிங்கம் நினைவாகிப் போனது. எதையும் வெளிப்படையாக நேர்மையாக வெளிப்படுத்த முடியாத அரசியல் சூதாட்டங்களே, புலியெதிர்ப்பு அரசியலின் உள்ளடக்கமாகும். ரீ.பீ.சீ பின்னால் நடப்பதும் அது தான். மக்களின் அடிப்படையான பிரச்சனைகளை, தமது சொந்த அரசியலாக கொண்டிராதவர்களின் அரசியல் வாழ்வு என்பது, மக்களுக்கு எதிரான சூதும் சதியும்தான். இது தன்னைத்தான் மூடி மறைத்துக் கொண்டே சதா இயங்குகின்றது. இப்படித்தான் அந்தக் கூட்டமும் அன்று அரங்கேறியது. மக்களுக்கு எதைத்தான், இவர்கள் பெற்றுத் தரப் போகின்றார்கள்?

**இனம் காணமுடியாத ஜனநாயகவாதிகள் :**

இந்த கூட்டத்தில் புலி உளவாளிகள் முதல் அனைத்து உளவாளிகளும் கலந்த கொண்ட ஒரு கூட்டம். ஈ.பி.டி.பி, ஈ.என்.டி.எல்.எப், கருணாஅணி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ் என்று அனைத்து தரப்புமாக, மொத்தம் 50, 60 பேர் கொண்ட கூட்டம்.

இவர்கள் எல்லோரும் சேர்ந்தே கொலைகளை கண்டித்தல், புலியிடமிருந்து ஜனநாயகத்தை மீட்டல் பற்றி புலம்பல்கள். வேடிக்கையான அரசியல் தளம். நாங்களும் அதில் கலந்து கருத்துரைப்பது சரியா பிழையா என்ற முரண்நிலையான சொந்த நிலைப்பாடுகள். நாங்கள் மக்களின் வாழ்வு சார்ந்த கருத்தியலை முன்வைப்பதன் மூலம், உதிரியான சிலருக்கு அதை உணர்த்த முடியுமா என்ற முனைப்பின் அடிப்படையில், இதில் பங்கு பற்றி கருத்துக்களை முன்வைக்கின்றோம். உண்மையில் மக்களைப் பற்றி சிந்திப்பவர்களின் போராட்ட வழி என்ன என்பதை, இங்கும் சுட்டிக்காட்ட முனைகின்றோம்.

இந்த வகையில் இந்த கூட்டத்தில் நாம் முன்வைத்த கருத்துக்களைக் கூட, நடுநிலை வானொலியாளர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. எனக்கு நேரம் முடிந்துவிட்டதாக கூறிய அற்பத்தனங்கள். மீண்டும் இதே பாரிஸ் மண்ணில் திடீர் திடீரென அரங்கேறியது. மற்றவர்களை விட அதிக நேரத்தை நான் எடுத்திருக்கவில்லை. மக்களின் நலன், அவர்களின் வாழ்வியல் சார்ந்த அரசியல், மற்றவர்களை விட அழுத்தம் திருத்தமாக முன்வைப்பதை சகிக்க முடியாததன் விளைவு, நேரத்தை வழங்க அவர்களால்



படிப்பகம்

www.padippakam.com



முடியவில்லை. மறுபக்கத்தில் எந்த ஜனநாயகவாதியும் இதை கண்டிக்கவில்லை.

**எனது உரை :**

எமது கருத்துக்கள் ஏற்படுத்தும் உண்மை, உண்மையில் மக்களுக்காக சிந்திப்பவர்களை தடுமாற வைக்கின்றது. மக்கள் விரோத குழுக்கள், நபர்கள் இதனால் அதிர்ந்து போகின்றனர். இதனால் இதை தாம் ஏற்றுக்கொள்வதாக கூறுவது நடக்கின்றது. அதாவது தாம் அதற்கு விரோதிகள் அல்ல என்று காட்டி, சிந்திப்பவனின் குறைந்தபட்ச அரசியல் உணர்வை நலமடித்து சிதைப்பது இவர்களின் கைவந்த மோசடியாகின்றது. உண்மையில் சமூகத்தின் உள்ளார்ந்த பிரச்சனைகளைச் செரித்து, அதன் சுவடே தெரியாது பூசி மொழுகிவிடுவதே கடந்த 30 வருட தமிழ் அரசியலாகும். இதை ஒரு தந்திரமாக, பல தளங்களில் அரங்கேறுகின்றனர். இவை கடந்தகாலத்தில் சொந்த அமைப்பில் ஒரு அரசியல் முரண்பாடாக எழுந்தபோது, உட்படுகொலைகள் மூலம் மூடிக்கட்டியவர்கள், இன்றும் அதை பச்சையாகவே விபச்சாரம் செய்கின்றனர். ஒவ்வொரு கூட்டத்திலும் இவை எழுப்பப்படுவதும், அதை தாம் ஏற்றுக் கொள்வதாக கூறியே அனைவரையும் ஏமாற்றி கூட்டங்களை நடத்து கின்றனர். கடைந்தெடுத்த கயவாளிகள். அரசியல் உள்ளடக்கத்தை ஏமாற்றி மோசடி செய்து மக்களின் முதுகில் காலகாலமாக குத்தி வருபவர்கள். இந்த நிலையில் நாங்கள் மட்டும், நாங்கள் மட்டும் தான், சமூகப் பிரச்சனைகளின் அடிப்படையில் தொடர்ச்சியாக எழுதி வருகின்றோம். இதுவே அனைவருக்கும் எமக்குமான அரசியல் முரண்பாடு.

விட்டுக்கொடுப்பு, ஐக்கியம், ஒற்றுமை என்பதன் பெயரில், மக்களின் அடிப்படையான அரசியல் உரிமைகளை, அரசியல் ரீதியாக நீத்துப் போகச் செய்கின்ற கூத்துகளே உண்மையில் அரங்கேறுகின்றது. இதை எதிர்த்து நாம் குரல்கொடுக்கும் போது, மாக்சியம் என்ற முத்திரை குத்தியே மக்களின் முதுகில் குத்துகின்றனர். நாம் மாக்சியத்தைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்றால், அதை செவிமடுப்பதற்கும் செயல்படுவதற்கும் குறைந்தபட்ச சமூக அறிவு வேண்டும். மக்கள் பற்றியே சிந்திக்காத, அதை வெறுக்கின்ற மக்கள் விரோத ஒட்டுண்ணிக் கூட்டத்தினர்க்கு, எப்படி மாக்சியத்தை முன்வைக்கமுடியும். மற்றவர்களின் எடுபிடிகளாக, கூலிக் கும்பலாக, முன்னைய குழுக்களின் செல்லப்பிள்ளைகளாக, பழைய குழுவாத அடையாளங்களையே நக்குகின்றவர்கள், குறைந்தபட்ச முதலாளித்துவ ஜனநாயகத்தை கூட அங்கு உள்வாங்குகின்றதும்,



படிப்பகம்

www.padippakam.com



பேசுகின்றதுமான அரசியல் தகுதி கிடையாது. எப்படி புலிகளுடன் நாம் மாக்சியத்தை, முதலாளித்துவ ஜனநாயகத்தைப்பற்றி பேச முடியாதோ, அதே நிலைதான் புலியெதிர்ப்பு அணியின் முன்பும் உள்ளது. புலிக்கும், புலியெதிர்ப்பு அணிக்கும் அரசியல் ரீதியாக நாம் வேறுபாட்டை காணமுடியாது. அதனால்தான் இருதரப்பும் தத்தம் தரப்பு அரசியலை முன்வைப்பதுமில்லை, மாற்றுத் தரப்பை அரசியல் ரீதியாக விமர்சிப்பதுமில்லை.

இந்த நிலையில் நாங்கள் சாதாரண தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள், அவர்களின் பிரச்சனைகள் மீது மீண்டும் மீண்டும் விவாதத்தை நடத்த முனைகின்றோம். அதைக் கோரிய எமது விவாதத்தையே மாக்சியம் என்கின்றனர். சரி நீங்கள் மக்கள் நலன் என எதைத்தான், எப்படி, எந்த அரசியல் வழியில் முன்வைக்கின்றீர்கள்? முன்வைக்காத உங்களிடம் எமது இந்தக் கேள்வி அபத்தம்தான். உண்மையில் அரசியல் ரீதியாக சீரழிந்தவர்கள், மக்களின் பிரச்சனையை முன்னெடுப்பது மாக்சியத்தின் கடமை என்பதையே, இந்த முத்திரை குத்தலின் ஊடாக ஒத்துக்கொள்கின்ற தர்க்கம் உருவாகின்றது.

புலியெதிர்ப்பு அணியின் பின்னுள்ள ஈ.பி.டி.பி, ஈ.என்.டி.எல்.எப், கருணாஅணி, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ்சின் அரசியல் என்ன? இவர்கள் எப்படி மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பார்கள்? புலியை விட அரசியல் ரீதியாக எப்படி, எந்த வகையில் மாறுபட்டவர்கள்! வாயைத் திறந்து கூறுங்கள். மௌன விரதமோ. சூழ்ச்சியும், சதியும் ஒருங்கே கொண்ட செயல்பாடுகள்தான் இவர்களின் அரசியல். மக்கள் விரோத சக்திகளின் பின்னால் கூலிக் குழுவாக நிற்கின்றவர்கள். இவர்கள் எப்படி மக்களின் பிரச்சனையை தீர்ப்பார்கள். கடந்த காலத்தில் உட் படுகொலைகள் மூலம் அல்லது அவர்களை ஓரங்கட்டுவதன் மூலம் சொந்த அமைப்புகளின் இந்தக் கேள்விகளுக்கு பதிலளித்தவர்கள். இன்று அவற்றை எல்லாம் கழுவேற்றிய கூலிக்குழுக்கள்தான். சரி அவர்களின் எடுப்பார் கைப்பிள்ளைகளாக புலியெதிர்ப்பின் பின் செல்பவர்களான நீங்களாவது பதிலளியுங்கள்.

இப்படிப்பட்ட நிலையில் சாதியம், பெண்ணியம் போன்ற சமூக ஒடுக்குமுறைகளை ஒழிப்பதில் நாம் உடன்பாடுதான் என்று கூறிக்கொள்கின்றனரே, எப்படி? அதன் அரசியல் வழிதான் என்ன? நீங்கள் செயல்படுகின்ற இயக்கங்கள் அல்லது உங்கள் செயல்பாடுகள் அதை எப்படி எந்த வகையில் ஒழிக்கும்? உண்மையில் இந்த சமூகப் பிரச்சனைகளை ஏற்றுக்கொள்வதாக கூறி செரிக்கின்ற அரசியல்



படிப்பகம்

www.padippakam.com



சதி தான், புலியெதிர்ப்புக் கும்பலின் அரசியல் உத்தியாகும். இதையே புலியும் செய்கின்றது.

உண்மையில் இந்த சமூக ஒடுக்குமுறைகளை பாதுகாக்கின்ற நுட்பமான அரசியல் சதியாகும். இதைத்தான் புலிகளும் செய்கின்றனர். அவர்களும் கூட சமூக ஒடுக்குமுறையை ஏற்றுக்கொள்வதன் மூலம், அதை செரிப்பது அவர்களின் உத்தியும் கூட.

எப்படி கடந்தகால இயக்கங்கள் சோசலிசம் வரை பேசி மக்களின் முதுகில் ஆழமாக குத்தினரோ, அதே உத்தி, அதே தந்திரம் இங்கும். சொற்களில் அதை அலங்கரிப்பது, நடைமுறையில் இருப்பதைப் பாதுகாப்பது. உண்மையில் இவை அரசியல் சதிகள். சமூக முரண்பாடுகளை ஏற்றுக்கொள்வதாக காட்டி அதைச் உட்செரிப்பது, நடைமுறையில் அதை மறுப்பதுமாக அரங்கேறுகின்றது. இதுவே எம்முடன் நிலவும் அடிப்படையான முரண்பாடு. அன்றைய கூட்டம் இதை எல்லாம் செரித்து, ரீ.பீ.சீ யின் குறுகிய நலன்களுடன் தான் நிறைவேறியது.

கடந்து வந்த வரலாற்றில் இருந்தே நாம் தெரிந்து கொள்ளமுடியும் இந்தக் குழுக்கள் சமூக முரண்பாடுகளை களையப் போவதில்லை என்பதை நிறுவியே உள்ளனர். அதைவிட கேடுகெட்ட கூலிக் குழுக்களாக இன்று அவை உள்ளள. ஈ.பி.டி.பி, ஈ.என்.டி.எல்.எப், கருணாஅணி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலொ, பிளாட், ஈரொஸ்சின் கடந்தகால இயக்க நடைமுறைகள், அதன் அரசியல் எந்த வகையிலும் புலிகளில் இருந்து மாறுபட்டது அல்ல. குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரொஸ் பேசிய இடது அரசியல் கூட, அடிப்படையில் புலி அரசியலுக்கு உட்பட்டது தான். ஈ.பி.ஆர்.எல்.எப் அடிமட்டத்தில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்களை அதிகம் அணிதிரட்டிய போதும் கூட, அது வர்க்க ரீதியாக புலி அரசியலையே கொண்டிருந்தது. அதாவது இந்திய எடுபிடிகளாகவே, கூலி கும்பலாகவே உருவானது. அடிமட்ட சமூகத்தில் எழும் சாதி மோதல்களை மட்டும், தனது சொந்த அணி திரட்டலுக்காக பயன்படுத்தியது. உதாரணத்துக்கு இந்தியாவின் வன்னியர், தலித் இயக்கங்கள் போன்றதே.

இந்த இயக்கங்களின் இன்றைய பிரதிநிதிகள் எப்படி தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுவார்கள்? குறிப்பாக இவர்கள் யாரும் புலிகளின் வர்க்க அரசியலை விமர்சிப்பது கிடையாது. புலிகளின் அரசியலை விமர்சித்தால், யாருக்காக? எப்படி? எந்த மக்களுக்காக என்ற விடயம் வெளிப்படுவதை அவர்கள் திட்டமிட்டு தவிர்க்கின்றனர். இதற்கு



படிப்பகம்

www.padippakam.com



பதிலாக விமர்சனமற்ற வெற்றுக் கோசங்களைக் கொண்டு, அரசியல் கொசிப்பை செய்வதன் மூலம் தம்மை மூடிமறைக்க விரும்புகின்றனர். இதுவே இயக்கங்களுடன் இல்லாத, தனிநபர்களின் நிலையும் கூட. அரசியல் ரீதியான விமர்சனம் அற்ற கொசிப்பே, இவர்களின் அரசியலாகி அவர்களின் இருப்பின் மையமாகின்றது.

**ரீ.பீ.சீ பின்னால் வாலாட்டும் ஜனநாயகவாதிகளே!**

நீங்கள் எதைச் சாதிக்க கோமணத்தை கட்டிக்கொண்டு அவசர குடுக்கையாக ஒடுகின்றீர்கள். கடந்த பல வருடமாக நீங்கள் செய்த அரசியல், எதைச் சாதித்தது. எந்த அரசியலை நீங்கள் மக்களுக்காக முன்வைத்தீர்கள். சொல்லுங்கள். இவ்வளவு காலமும் சரியான ஒன்றை உங்களால் ஆதரிக்கமுடிந்ததா? பின்பற்ற முடிந்ததா? இல்லை ஏன்? சரி நீங்கள் இன்று செய்வது சரி என்று உங்களால் சொல்ல முடியுமா? நாளை இதை மறுத்து சுயவிமர்சனம் செய்வீர்களோ?

சரி புலியெதிர்ப்புக்கு (ரீ.பீ.சீ க்கு) பின்னால் எதைச் சாதிக்கப் போகின்றீர்கள்? எப்படி எந்த வழியில்? மக்களுக்காக எதை செய்யப் போகின்றீர்கள்? உங்களால் மக்களுக்காக ரீ.பீ.சீயில் எதையும் செய்யவும் முடியாது. சாதிக்கவும் முடியாது. இதை நீங்கள் இன்று உணர மறுத்தால், வரலாறு உங்களுக்கு திருப்பிக் காட்டும்.

புலியெதிர்ப்புக்கு (ரீ.பீ.சீ) க்கு குடைபிடித்துக் கொண்டு செல்வதற்கு முன், அதன் பின்னால் அணி திரண்டுள்ளவர்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்? ஈ.பி.டி.பி, ஈ.என்.டி.எல்.எப், கருணா அணி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலொ, பிளாட், ஈரொஸ்சுடன் சேர்ந்து புலியை திட்டி தீர்க்கப் போகின்றீர்களா அல்லது அன்னிய சக்திகளுக்கு பாய்விரிக்க போகின்றீர்களா? சொல்லுங்கள். எப்படி தமிழ் மக்களின் பிரச்சனையை புலியெதிர்ப்பு மூலம் தீர்க்கப் போகின்றீர்கள். சம்பந்தப்பட்டவர்கள் இவற்றுக்கு பதில் சொல்வது கிடையாது, நீங்களுமா? இலங்கை பேரினவாத இராணுவப் பிரிவு நடத்துகின்ற இணையச் செய்தியை, புலியெதிர்ப்பு இணையங்கள் தமிழில் மொழிபெயர்த்து விடுவதும், புலிக்கெதிராக வெளிவரும் செய்திகளை வெளியிடுவதன் மூலம், தமிழ் மக்களிடம் எதைச் சாதிக்க முனைகின்றீர்கள். புலிச் செய்தியைப் போல் தான் புலியெதிர்ப்புச் செய்தியும். இதற்குள் அரசியல் ஆய்வு என்ற பெயரில் புலிக் கொசிப்பு. சமூகம், மக்கள் என்று எதுவுமற்ற மலட்டுக் கூட்டத்தின் வக்கிரங்கள் கொசிப்பாகின்றது. இவர்கள் பின்னணியில் ஈ.பி.டி.பி, ஈ.என்.டி.எல்.எப், கருணாஅணி, ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலொ, பிளாட், ஈரொஸ் என்று



படிப்பகம்

www.padippakam.com



அனைத்து மக்கள் விரோதக் குழுக்களும் உள்ளனர். இவர்களை புலியெதிர்ப்பு அணியினர் ஜனநாயகத்துக்கு திரும்பியவர்கள் அல்லது ஜனநாயகவாதிகள் என்கின்றனர்.

இலங்கை அரசுடன், இந்தியா அரசுடன், ஏகாதிபத்தியத்துடன் கூடி கூலிக் குழுவாக நிற்கும் இந்தக் குழுக்களின், கும்பலின் அரசியல், தமிழ் மக்களுக்கு எதிரானதா இல்லையா என்று விவாதிக்க மறுக்கின்ற ஜனநாயகம் தான், இவர்களின் புலியெதிர்ப்புக்கான வேலி.

இந்தக் குழுக்களின் அரசியல் இருப்பு கூலிக் குழுக்கள்தான். யார், எந்த அரசு, இவர்களின் உண்மையான எஜமானர்களோ, அவர்களின் விருப்பப்படி அனைத்தையும் செய்யத் தயாரான காட்டுமிராண்டிகள் தான். ஜனநாயகம் என்பது தங்களைத் தாங்களே புனிதப்படுத்தி காட்டிக் கொள்ள பயன்படுத்தும் பார்ப்பான் கொடுக்கும் தீர்த்தம் தான்.

1. இலங்கை அரசின் கீழ் இயங்கும் ஈ.பி.டி.பியின் ஆயுதப் பிரிவு இயங்கும் தளத்தில் அல்லது அவர்கள் ஆதிக்கம் உள்ள இடத்தில், நீங்கள் யாராவது ஜனநாயக பூர்வமாக அவர்களை விமர்சித்து செயல்பட அவர்கள் அனுமதிப்பார்களா? சொல்லுங்கள் நிச்சயமாக முடியாது.

2. இந்தியாவில் கூலிக்கும்பலாக இயங்கி, அங்கேயே அவர்கள் தயவில் காத்திருக்கும் ஈ.என்.டி.எல்.எப் கும்பல் உள்ள இடத்தில், உங்களால் சுயாதீனமாக செயல்பட முடியுமா? அவர்களை விமர்சனம் செய்ய முடியமா? முடியாது. உங்கள் எல்லோருக்கும் இவை நன்கு தெரியும்.

3. இதேபோல் புலிக் கருணா அணியும். அவர்கள் பிரதேசத்தில் நீங்கள் வாய் திறக்க முடியாது. இதை எல்லாம் மறுக்கும் அரசியல் உங்களிடம் உண்டா?

இதேபோல் தான் மற்றைய குழுக்களும். இப்படிபட்டவர்கள் எல்லாம் கூடித்தான் புலியெதிர்ப்பு கும்பலலாக உள்ளனர். இதற்குள் எத்தனையோ வெட்டுக் குத்துகள். இவர்கள் எல்லாம் ஜனநாயகவாதிகள். வேடிக்கை தான்.

அன்று ரீ.பீ.சீ சார்பாக இயங்கும் முன்னாள் புலி ராகவன் கூட்டத்தை தலைமை தாங்கிய போது, அவரின் புலி ஜனநாயகம் பல்லிளித்தது. நான் பேசும் நேரத்தை மட்டுப்படுத்தியதன் பின்னணியில் இருக்கும்



படிப்பகம்

www.padippakam.com



அரசியல் என்ன? அது புலி அரசியல் தான். அன்று கூட்டம் முடிக்க அவசரப்பட்ட இதே ராகவன், கூறிய காரணம் என்ன? மேலதிக நேரம், கூட்ட மண்டபத்துக்கு அதிக பணத்தை செலுத்த வேண்டும் என்றாரே. கூட்ட ஒழுங்கமைப்பாளர்கள் அதே இடத்தில் இம் மண்டபம் இலவசமானது என்று போட்டு உடைத்தனர். சூதும் சதியும், ஒருங்கே கூட, பொய்யும் புரட்டும் காரணங்களாகின்றது. இவர்கள் தான் புலியெதிர்ப்பு அணி. உண்மையில் இந்த கூட்டத்தின் முடிவில், ரீ.பீ.சீ யின் இரண்டாம் கட்ட கூட்டம் ஆரம்பமாக இருந்த சதி பின்னால் தெரியவந்தது.

இப்படிப்பட்டவர்கள் எல்லோரும் சேர்ந்து புலியெதிர்பாக (ரீ.பீ.சீயாக) குழுமுகின்றனர். எம்மையும் இந்தக் கூத்துக்கு அழைக்கின்றனர். மக்களின் பிரச்சனைகளை கைவிட்டு, உங்கள் கருத்தை முன்வைக்க வாருங்கள் என்ற வாதங்கள். இதில் சிலர் அப்பாவிகள். பலர் அரசியலை வாழ்வாக கொண்டு, வாழமுடியாத நேர்மையற்ற சந்தர்ப்பவாதிகள்.

ஈ.பி.டி.பி, ஈ.என்.டி.எல்.எப், கருணாஅணி போன்ற கூலிக் குழுக்கள், ஜனநாயகத்தின் அரிச்சுவடியைக் கூட அனுமதிக்க மறுப்பவர்கள். மக்களின் சமூகப் பிரச்சனைகளை அடிப்படையாக கொண்டு செயல்படாத வலதுசாரிகள் யாரும், ஜனநாயகத்தை நினைத்துக் கூட பார்க்கமுடியாது. தமது கூலித்தனத்தையும், வலதுசாரி பாசிசத்தையும் நிறைவேற்ற ஜனநாயகத்தை தொட்டுக் கொள்ளவே பயன்படுத்து பவர்கள். இவர்கள் தமிழ் மக்களின் ஜனநாயகத்தை மீட்டுத் தரப்போகின்றார்கள். நல்ல அரசியல் வேடிக்கைதான். இவர்கள் மக்களின் சமூக முரண்பாடுகளை களைந்து, மக்கள் விடுதலையை வென்று தரப் போகின்றார்களாம். முட்டாள்களே நம்புங்கள்.

ஜனநாயக விரோதிகள், மக்கள் உரிமைக்கு எதிரானவர்கள், சமூக ஒடுக்குமுறையை செரித்து அதை மூடிமறைப்பவர்கள், கூடி நடத்தும் வானொலி (புலியெதிர்ப்பு) அல்லது பயன்படுத்தும் வானொலியின் அரசியல் என்ன? அது மட்டும் சூக்குமம். அது தான் புலியெதிர்ப்பு அரசியல். புலியை அரசியல் ரீதியாக விமர்சிக்காத அரசியல் தான் புலியெதிர்ப்பு. இதன் மூலம் தமது புலி அரசியலை பாதுகாக்கின்றனர். புலியின் அதே அரசியலைக் கொண்டு, புலியை கவிழ்க்கும் அரசியல் சதிதான், புலியெதிர்ப்பு அரசியல்.

**மக்களுக்கு வெளியில் விடுதலை உண்டோ?**

உண்டு என்று புலியெதிர்ப்பு சொல்லுகின்றது. அதைச் செய்வதாக



படிப்பகம்

www.padippakam.com



(புலியெதிர்ப்பும்) ரீ.பீ.சீயும், அதன் பின் உள்ளவர்களும் சொல்லுகின்றனர். எப்படி ஐயா? தெரிந்தவர்கள் யாராவது சொல்லுங்கள். மாயமா! மந்திரமா! அல்லது எப்படி அந்த விடுதலை? மக்களின் பிரச்சனையை பேசாது எப்படி மக்கள் விடுதலையைப் பெறமுடியும்? இதை சாதிக்கும் மந்திரக்கோல் வைத்துள்ளனரா? அண்ணைமாரே கோவியாதையுங்கோ, அதை ஒருக்கா விளாவாரியா சொல்லுங்கோ.

உண்மையில் யாருக்கும் அதைச் சொல்லும் தைரியம் கிடையாது. எந்த அரசியல் நேர்மையும் கிடையாது. நாங்கள் சொல்வது தவறு என்று சொல்லும் நேர்மையும் கூட கிடையாது. உண்மையில் இந்த விடயம் மீது விமர்சனம், விவாதம் நடத்தும் அரசியல் அருகதை கூடகிடையாது. சூதும், சதியும் புலியெதிர்ப்பு அரசியலாக இருப்பதால், இந்த நிலை.

மக்களின் பிரச்சனைகளை இனம் காணல், அதை மக்களின் விடுதலைக்காக எழுப்புதல் என்பதை மறுப்பதே இவர்களின் அரசியலாகும். இதையொட்டி விவாதிப்பதை மறுப்பது தான், இவர்களின் ஜனநாயக மறுப்பாகும். அண்மையில் பாரிஸ் வந்த ரீ.பீ.சீ ஆய்வாளர் சிவலிங்கம் அரசின் தீர்வுத்திட்டம் தொடர்பாக பேசிய கூட்டத்தில், மக்களின் பிரச்சனைகளை இனம் காணுதல் என்ற எனது தர்க்கமே பெரும்பான்மையினரின் கருத்தாக மாறியது. இதுவே கூடியிருந்தவர்களின் ஏற்புடைய கொள்கையாக இருந்தது. இதை உருவாக்க சிவலிங்கம் உட்பட்டவர்கள் பொறுப்பாக இருக்க, அக் கூட்டம் கோரியது. ஆனால் அதை உண்மையிலே செய்ய மறுத்தல், செய்யாமல் இருத்தல் புலியெதிர்ப்பின் மையமான அரசியலாகும். மாறாக அரசு அல்லது யாராவது வைக்கின்ற ஒன்றை கவ்விக்கொண்டு வள்வள்ளென்று குலைப்பதே, மக்கள் நலன் என்கின்றனர். புலியெதிர்ப்பின் பின் இருப்பது வேதாளக் கதை தான்.

மக்களின் பிரச்சனைகளை இனம் காணமல் இருத்தல், அதை மூடி மறைப்பது, அதை இனம் காணமல் விட்டுவிடுவதும் என்பதே, இவர்களின் அடிப்படை நோக்கமாக உள்ளது. மக்களின் பிரச்சனையில் இருந்து புலிகளை அம்பலப்படுத்துவதை மறுப்பதே, இவர்களின் தலையாய அரசியல் உத்தியாகும். உண்மையில் புலியின் அரசியலை விமர்சிக்க மறுப்பதே, இவர்களின் அரசியல் நலன்களாகும். இதைப் புரிந்து கொள்ளாமல் விட்டில் பூச்சியாக அதில் வீழ்ந்து மடிபவர்களை, நாம் பரிதாபத்துடன் பார்க்கவே முடியும்.

கடந்து வந்த காலத்தில், எது எந்த அரசியல் புலியை உருவாக்கியது?



படிப்பகம்

www.padippakam.com



உங்களில் யாராவது அதை விவாதிக்க முடியமா? அதை சொல்ல, அதை மாற்ற உங்களால் முடியுமா? முடியாது. அதையே நீங்கள் புலியெதிர்ப்பு அரசியலாக கொண்டுள்ளீர்கள். அதையும் மறுக்க உங்களால் முடியாது. இவை எல்லாம் பற்றி பேசாதா அரசியல் தான், புலியெதிர்ப்பு கொசிப்பு. அதை பற்றி நீங்கள் பேசினால், உங்கள் அரசியல் தெளிவாகும். புலியைப் போல் உங்களுக்கும் புரட்சிகரமான மக்கள் நலன்கொண்ட அரசியல் எதுவும் கிடையாது.

**புலியின் ஊடாகமும், புலியெதிர்ப்பு (ரீ.பீ.சீ) ஊடகமும் :**

அரசியல் ரீதியாக என்ன வேறுபாடு? காட்ட முடியுமா? அரசியல் ரீதியாக காட்ட முடியாது. புலிகள் எப்படி மக்களின் வாழ்வு சார்ந்த அரசியலை நிராகரிக்கின்றனரோ, அதையே புலியெதிர்ப்பும் செய்கின்றது. இந்த எல்லைக்குள் தான், இந்த இரண்டு எதிரெதிரான ஊடகவியலும் இயங்குகின்றது. இரண்டு தரப்புக்கும் மக்கள் பற்றிய எந்த அக்கறையும் கிடையாது. இதனால் அவர்களிடம், மக்களுக்கான அரசியல் அடிப்படையே இல்லாமல் போய்விட்டது. மக்களின் பிரச்சனைகளைப் பற்றி பேசாது விசில் அடிப்பதும், கொசிப்படிப்பதுமே அரசியலாகிவிட்டது.

மற்றவர்கள் சொல்வதை தூக்கிவைத்து விபச்சாரம் செய்வதே இதன் பொது அரசியல் கொள்கையாகிவிட்டது. உதாரணத்துக்கு இந்தியாவின் அரசியல் பொறுக்கிகளாகவே வாழும் குரங்கு ஒன்று சொன்னால் அதை வைத்தும், மறுபக்கத்தில் புலியெதிர்ப்பு அந்த குரங்குகளை ஆளும் அனுமான் சொன்னால் அதை வைத்து ஆடுவதுமாகவே, இவர்களின் கொசிப்பு அரசியல் அரங்கேறுகின்றது. மக்களின் பிரச்சனையை வைத்து பேச வக்கற்றுக் கிடக்கின்றனார் புலியைப் போல் சம்பவங்கள், நிகழ்ச்சிகள் மேல் மிதக்கின்றனர். புலியைப் போல் வெற்று வேட்டுத்தனம்.

மக்களின் அடிப்படை பிரச்சனையைப் பற்றி பேசாது இருத்தல், விளைவுகளைப்பற்றி மட்டும் பேசுவதே இருதரப்பினரதும் உத்தி. உண்மையில் இவை திட்டமிட்ட மக்கள் விரோத செயல்பாடாகும் மக்களின் ஜனநாயகம் பற்றி யார் பேச வேண்டும் என்றாலும், மக்களின் அன்றாட அரசியல் பிரச்சனைக்கு வெளியில் அது பற்றி பேச எதுவும் கிடையாது. அதனால் தான் புலிகள் முதல் புலியெதிர்ப்பு வரை, மக்களைக் கண்டு அஞ்சும் ஜனநாயக விரோதிகளாக இருக்கின்றனர். உள்ளடக்கத்தில் பாசிசத்தை சாரமாக கொண்டு, மக்களை அடக்கி ஒடுக்குகின்றனர். புலிகள் முதல் ஈ.என்.டி.எல்.எப் வரை மக்களை ஒடுக்கும் பாசிசம் தான், அவர்கள் அரசியல் இருப்பின்



படிப்பகம்

www.padippakam.com



அடிப்படையாகும். இந்த ஊடகங்கள் மக்களின் பிரச்சனையை ஒரு நாளும் முன்னெடுக்கப் போவதில்லை. அதை தனித்துவமாக நாங்கள் செய்ய முனைகின்றோம் என்பதே மறுக்க முடியாத உண்மை. ஆம் தனித்து பலவீனமாக இருந்தாலும், பலமாக நாம் அனைத்து தளத்திலும் முட்டி மோதுகின்றோம். இதை விட வேறு அரசியல் வழி எம்முன் இன்று கிடையாது.

***18.05.2007***



படிப்பகம்

www.padippakam.com



# சிங்கள பேரினவாதமும் இராணுவ சர்வாதிகாரமும் கைகோர்த்து நிற்கின்றது

இலங்கையில் ஒரு சிங்கள பேரினவாத இராணுவ சர்வாதிகாரம் நிறுவப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் மத்தியில் கூட, இந்த விடயம் உணரப்படவில்லை. அந்தளவுக்கு புலிப் பாசிசம் எதிர்முகம் காட்டி நிற்கின்றது. இந்த சிங்கள பேரினவாத பாசிச சர்வாதிகாரத்தை தடுத்து நிறுத்த, புலிப்பாசிசமே தடையாகி நிற்கின்றது. தமிழ்பேசும் மக்களின் அரசியல் ஒற்றுமையை உருவாக்குவதற்கு, புலிப்பாசிசம் தடையாக நிற்கின்றது. புலிகள் தமிழ்மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையை மறுக்கும் வரை, இந்த ஒற்றுமை என்பது எப்படி சாத்தியமற்றதோ, அந்தளவுக்கு தமக்கான சொந்த எதிரிகளையும் அன்றாடம் புதிதாக உற்பத்தி செய்கின்றனர். சிங்கள இனவாத பாசிச இராணுவ சர்வாதிகாரம் தமிழ் மக்களுக்கு மறுக்கின்ற அடிப்படை உரிமை மீறல்கள் மீதான எதிர்வினை என்பது, உள்ளடக்கத்தில் எதுவுமற்றதாகி விடுகின்றது.

நிலைமை ஒன்றை மீறி ஒன்று பரஸ்பரம் சமனிலைப்படுத்தப் படுகின்றது. அவை இனம் காணமுடியாத சூக்குமத்தில், அரசியலற்ற வெற்றுத் தளத்தில் சர்வசாதாரணமான நிகழ்வாக ஜீரணிக்கப் படுகின்றது.

பேரினவாத சிங்கள இராணுவ இயந்திரம், சர்வாதிகார பாசிச வழிகளில், சில இரகசிய நபர்களின் வக்கிரங்களுக்கு ஏற்ப பூரணமாக இயக்கப்படுகின்றது.

1. பெருமளவில் வகை தொகையின்றி தெரிவு செய்யப்பட்ட நபர்கள் இன்று கொல்லப்படுகின்றனர்.

2. பலர் அன்றாடம் காணாமல் போகின்றனர்.

3. பெருமளவிலான கப்பமும், அதற்கான கடத்தலும் அன்றாட விடயமாகிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com



4. தமிழர் என்ற அடையாளம், அவர்களை குற்றவாளி சமூகமாக்க போதுமான காரணமாகிவிட்டது. அந்த வகையில் பல செயல்பாடுகள் செய்யப்படுகின்து.

5. தமிழ் மக்களின் உரிமையைப் பற்றி பேசியபடி, அதன் கழுத்தை அறுத்துப் போடுகின்றனர். தமிழரின் உரிமைக்கான அனைத்து சமூகக் கூறையும் அழிப்பது இன்று விரிவாகிச் செல்லுகின்றது.

உண்மையில் தமிழ் மக்களின் தாலியறுக்கப்படுகின்றது. தமிழர்கள் விதைவைக் கோலம் பூண்டு, வெள்ளைச் சீலை அணிந்து நாதியற்று செயலற்று கிடக்கின்றனர். வாழ்விப்போர், வழிகாட்டுவோர் யாரும் கிடையாது. சொந்த மக்கள் தமக்காக, தாம் போராடும் உரிமையை, புலிகளிடமே இழந்து நிற்கின்றனர். இதை மீறினால் புலிப்பாசிட்டுகள் அவர்களை துரோகி என்கின்றனர். அதற்காகவே அவர்களை கொன்று போடுகின்றனர்.

இன்று தமிழ் மக்களின் அரசியல் உரிமையைப்பற்றி யாருக்கும் எந்த அரசியல் அக்கறையும் கிடையாது. புலி, அரசு இதைச் சுற்றியே இயங்கும் வெவ்வேறு பிரிவுகளின் பின்னால், பிழைப்புக்காக நக்குகின்ற கூட்டம் தான் அனைத்துமாகிவிட்டது. தமிழ் மக்களின் அன்றாட வாழ்வு, இருப்பு கேள்விக்குள்ளாகிவிட்டது. அச்சம், பீதி, மன உளைச்சல் இதைத் தவிர, தமிழ் மக்கள் வேறு எதையும் தமது வாழ்வாகப் பெறவில்லை. தமிழ் மக்கள் தமது சொந்த வாழ்வியல் உரிமைக்காக, அதை மறுப்பவர்களுக்கு எதிராக போராடாத வரை, இதுவே தமிழ் மக்களின் தலைவிதியும் கூட. இதற்கு வெளியில் தமிழ் மக்களின் உரிமையை பெற, வேறு எந்த மாற்று உண்மையும் கிடையாது.

***08.06.2007***



படிப்பகம்

www.padippakam.com



# மகிந்த சிந்தனை என்றால் என்ன?

இலங்கையில் அதிகாரத்திலும், பொருளாதாரத்திலும் மகிந்தாவின் குடும்ப ஆதிக்கத்தை நிறுவுவதுதான், மகிந்த சிந்தனை. இதை நிறுவும் ஆட்சி, இன்று என்றுமில்லாத வகையில் நெருக்கடிக்குள்ளாகி நாடு சீரழிகின்றது. மக்கள் தமது அடிப்படை தேவைகளைக் கூட வாங்க முடியாத வகையில், அன்றாடம் விலையேற்றத்தை மகிந்த சிந்தனை திணிக்கின்றது. நாடு சர்வதேசக் கடனை நம்பி, நடுக்கடலில் தத்தளிக்கின்றது. இதையெல்லாம் மூடிமறைக்கவே, புலிப் பயங்கரவாதத்தின் பெயரில் ஒரு யுத்தப் பிரகடனம்.

புலிகள் புலித் தமிழீழம் மூலம், தமிழ் மக்களுக்கு சொர்க்கத்தைப் படைக்கப் போவதாக கூறித் தான், தமிழ் மக்களை ஒடுக்கி ஒரு பாசிச புலிச் சர்வாதிகாரத்தை திணித்துள்ளனர். இதுபோல், அரசு புலிப் பயங்கரவாதிகளை ஒழிப்பதன் மூலம், இலங்கையில் சொர்க்கத்தை உருவாக்கப் போவதாக கூறிக்கொண்டு, இராணுவ சர்வாதிகாரத்தை அனைத்து மக்கள் மீதும் திணிக்கின்றது. இப்படிப்பட்ட மகிந்த சிந்தனை மூலமாக, குடும்ப அதிகாரமும் குடும்பப் பொருளாதாரமும் வீங்கி வெம்புகின்றது.

இதன் விளைவு என்ன. தமிழ் மக்களில் பெரும்பான்மை மக்களை முற்றாகவே அகதி வாழ்வுக்குள் தள்ளிவிட்டது. இதன் விளைவால் அகதி மக்கள், தமது அனைத்து பொருளாதார வளத்தையுமே முற்றாக இழந்துவிட்டனர். வட்டிக்கு விட்டு சம்பாதிக்கும் சர்வதேச நிதி கும்பலிடமும், தன்னார்வ சதி கும்பல்களிடம், மக்கள் தமது உழைப்பு சார்ந்த தன்மானத்தை இழந்து கையேந்தி அலையும் கூட்டமாக மாற்றப்பட்டு விட்டனர்.

வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள், இலங்கையில் எந்தப் பொருளையும் சுதந்திரமாக வாங்கி நுகர முடியாது. அந்தளவுக்கு புலிப் பயங்கரவாதிகளின் பெயரில், ஒரு பொருளாதாரத் தடை. தமிழ் மக்களோ தெரு நாய்களாகப்பட்டு வேட்டையாடப்படுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



அன்றாடம் கைது, கடத்தல், காணாமல் போதல், படுகொலை என்பதே இயல்பான நிலையாகியுள்ளது. தமிழ் மக்களை இரத்தத்தை உறைய வைக்கும் இயல்பான பீதிக்குள், சிறைவைத்துள்ளனர். அனைத்துச் சிந்தனையையும், சுதந்திரத்தையும் இது கண்காணித்து, கருவறுக்கின்றது. ஒட்டுமொத்தமாகவே செயற்படும் சுதந்திரத்தை தமிழ் மக்கள் முற்றாகவே இழந்துவிட்டனர். தமிழ் இனம் தனது தேசிய அடிப்படைகளையும், தேசிய இருப்புக்கான சமூகக் கூறுகளையும் இழக்கும் வண்ணம், அவர்கள் சமூக ரீதியாக இழிந்து போகுமாறு சின்னாபின்னப்படுத்தி சிதைக்கப்படுகின்றனர்.

மகிந்த சிந்தனை இது மட்டுமல்ல. தமிழ் மக்களின் இருப்பு சார்ந்த பொருளாதார அடிப்படைகளையும், ஆதாரங்களையும் திட்டமிட்டு அழிக்கின்றது. ஒவ்வொரு தமிழ் பிரதேசமும், சிங்கள பேரினவாத இராணுவ சூறையாடலுக்குள் சிக்கிச் சிதைகின்றது. தமிழ் இனம் பல கூறுகளாக சின்னாபின்னப் படுத்தப்படுகின்றது.

இப்படி மகிந்த சிந்தனையானது தனது இராணுவ சர்வாதிகாரத்தை, தமிழ் மக்கள் மீது ஒரு தலைப்பட்சமாக திணிக்கின்றது. அதை நடைமுறைப்படுத்த தமிழ் கூலிக் குழுக்களை ஆயுதபாணியாக்கி யுள்ளது. அவர்களிடையே முரண்பாட்டை ஊதி, அதைக்கொண்டு தமிழ் இனத்தை கூறு போடுகின்றது. எங்கும் எதிலும், தமிழரிடையே ஒரு காட்டுமிராண்டித் தனத்தை உருவாக்குகின்றது. அராஜகத்தையே தமிழ் பகுதியில் மகிந்த சிந்தனை உருவாக்கியுள்ளது.

இவை அனைத்தும் புலிகளின் பெயரில், ஒரு இராணுவ சர்வாதிகாரம் மூலம் இவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுவே தமிழ் பிரதேசத்தின் எதார்த்தம். தமிழ் மக்கள் மேலான இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயலை நியாயப்படுத்த, சிங்கள மக்கள் மேல் என்றுமில்லாத சுமையை சுமத்திவிடுகின்றனர். சிங்கள மக்கள் அன்றாட வாழ்வுக் காகவே மாரடிக்கின்ற அளவுக்கு, வாழ்க்கைச் சுமை சுமத்தப்படு கின்றது. இராணுவ இயந்திரம், மக்களின் மொத்த வளத்தையும் சூறையாடிச் செல்லுகின்றது. இந்த மகிந்த சிந்தனையை அமுல்செய்யும் குடும்பம், இதன் மூலம் இலங்கையில் மிகப்பெரிய கோடீஸ்வரக் கும்பலாகின்றது.

இந்த நிலையில் சர்வதேச விலைக்கு, இலங்கைச் சந்தை தடம் புரண்டு செல்லுகின்றது. மக்களின் தேவையை சர்வதேச விலையில் வாங்க நிர்ப்பந்திக்கின்றது மகிந்த சிந்தனை. ஆனால் மக்களின் கூலியோ, சர்வதேச மட்டத்தை கிட்டக் கூட நெருங்க முடிவதில்லை. அத்துடன் இலங்கை நாணயம், அன்றாடம் தனது பெறுமதியை



படிப்பகம்

www.padippakam.com



இழக்கின்றது. இதனால் மக்கள் வாழ்க்கைத் தரம் அன்றாடம் வீழ்ச்சி காண்கின்றது. வாழ்க்கையின் வீழ்ச்சியால், மக்கள் தமது தேவையை பூர்த்தி செய்ய பணம் இருப்பதில்லை. இப்படி மக்களைப் பட்டினியில் தள்ளிவிட்டு, அந்தப் பொருட்களை வாங்கிய கடனுக்காக மகிந்த சிந்தனையை ஏற்றுமதி செய்கின்றது. என்ன ராஜதந்திரம், என்ன வக்கிரம்.

இந்த மகிந்த சிந்தனை தமிழ் மக்களை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் சொந்த நாட்டில் வாழ முடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடிக் குள்ளாக்கியுள்ளது. மறுபக்கம் இராணுவ பொருளாதாரமோ, பாரிய ஊழல் மூலம் கோடிகோடியாக மகிந்த சிந்தனை சுருட்டு கின்றது.

இதை விமர்சிப்பவர்கள், புலிகளின் பெயரில் கைது செய்யப்படு கின்றனர். அத்துடன் கடத்தல், படுகொலை என்ற பொது அச்சுறுத்தலை எங்கும் எதிலும் விடுக்கின்றனர். எங்கும் அச்சத்தையும், பீதியையும் வாழ்வாக்கி விடுகின்றனர். மாபியாத்தனம் சமூகத்தின் போக்கில் வளர்ச்சியுறுகின்றது.

இப்படிப்பட்ட மகிந்த சிந்தனையைப் பற்றி பலரும் சிலாகிக்கின்றனர். சிலர் அதனைப் போற்றுகின்றனர். சிலர் அதைத் திட்டுகின்றனர். இலங்கை ஜனாதிபதியின் மகிந்த சிந்தனையில் இனப்பிரச்சனை முதல் உள்நாட்டு திட்டமிடல் வரை காயடிக்கப்படுகின்றது.

ஜே.வி.பி கூறுகின்றது மகிந்த சிந்தனைப்படி தான், அவருக்கு ஆதரவு வழங்கியதாக! புலியெதிர்ப்பு குள்ளநரி ஆனந்தசங்கரியும், மகிந்த சிந்தனையை ஏற்றிப் போற்றுகின்றது. இப்படி பல விதமானவர்களின், பலவித அரசியல் கிறுக்குத்தனங்கள்.

இப்படிப்பட்ட மகிந்த சிந்தனை எதைத்தான் எதார்த்தத்தில் செய் கின்றது.

1. அது தனது சொந்த குடும்ப அதிகாரத்தை நிறுவியுள்ளது.
2. ஒரு இராணுவ சர்வாதிகாரத்தை, அனைத்து மக்கள் மீதும் திணித்துள்ளது.
3. உலகமயமாதலை தீவிரமாக அமுல்படுத்துகின்றது.
4. தமிழ் இனத்தின் இருப்பையே அழித்து, அதை அடக்கி ஒடுக்குகின்றது.
5. அனைத்து சிந்தனைச் சுதந்திரத்தையும் விமர்சன சுதந்திரத்தை யும் ஒடுக்கி, அதன் உணர்ச்சியையே அறுத்தெறிகின்றது
6. நாட்டின் அனைத்து முற்போக்கு கூறுகளையும் ஒடுக்கி,



படிப்பகம்

www.padippakam.com



பிற்போக்கு கூறுகளை முன்னிலைக்கு கொண்டு வருகின்றது.
7. காட்டுமிராண்டித்தனமான அதிகாரப் பண்பாடும், பொருளாதார சூறையாடலும், சமூக ஒழுக்கமாகின்றது.

இவற்றின் மூலம் இலங்கையை ஏகாதிபத்திய நலன்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் அனைத்தையும் மறு ஒழுங்கமைக்கின்றது. தேசிய கூறுகளை அழித்து விடுகின்றது. மாறாக பிற்போக்கான தேசிய கூறுகள் மூலம், நாட்டை அன்னியனுக்கு தாரைவார்த்து, நாட்டைத் திவாலாக்கி வருகின்றது. தேசிய பொருளாதாரத்தை முற்றாகச் சிதைத்து, பன்னாட்டு முதலாளிகளின் விருப்பமும் தேவையும் பூர்த்தி செய்யப்படுகின்றது. இவை அனைத்தும் புலிப்பயங்கரவாதத்தின் பெயரில் நடக்கும், தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் மூலம் கவனமாக மூடிப் பாதுகாக்கப்படுகின்றது.

இதற்கு ஏற்ற வகையில் இராணுவ சர்வாதிகாரத்தை நடைமுறை யாக்குகின்றது. புலியின் பெயரால், புலிகளை வெற்றி கொள்வதாக பீற்றிக் கொண்டு நடத்துகின்ற ஒரு இராணுவ ஆட்சி தான், மகிந்த சிந்தனை. இப்படி தனது குடும்பத்தவர்கள் மூலம் நிர்வகிக்கின்ற, ஒரு பாசிச சர்வாதிகார கட்டமைப்பாகும்.

இந்த சர்வாதிகார பாசிசம் எப்படி கட்டமைக்கப்படுகின்றது.

1. எதிர்தரப்பை விலைக்கு வாங்குகின்றது. மறுதளத்தில் செயலற்றதாகி முடக்குகின்றது. இல்லாது போனால் போட்டியாளரை உயிருடன் இல்லாது ஒழிக்கின்றது.

2. புலிப்பயங்கரவாதம் என்ற பெயரில் நடக்கும் புலியொழிப்பு என்பது, படுகொலைகள் கடத்தல்கள் காணாமல்போதலாகி விட்டது.

3. தனது கட்டுபாடல்லாத பிரதேசம் முழுவதின் மீதும், ஒரு முழுமையான யுத்த பிரகடனத்தை செய்து, அதையே ஆணையில் வைத்துள்ளது.

4. தமிழ் மக்களின் இருப்பை அழிக்கும் வண்ணம், சகல சமூக பொருளாதாரக் கூறுகளையும் திட்டமிட்டு அழிக்கின்றது. அத்துடன் தமிழர் பகுதிகளை சிங்கள மயமாக்குதல் நடத்துகின்றது.

5. தமிழ் பகுதியிலான பன்னாட்டு நிறுவனங்களின் அன்னிய நிறுவனங்களினதும் தேவைகளை, தனது யுத்த ஆக்கிரமிப்பு



படிப்பகம்

www.padippakam.com



மூலமே கைப்பற்றி தாரைவார்க்கின்றது.

இப்படி ஒட்டுமொத்த மனிதவிரோத செயல்கள் தான் மகிந்த சிந்தனை. அன்னிய மூலதனத்தின் நலன்கள் தான் மகிந்த சிந்தனை. இதற்கு பின்னால் சிங்கள தேசியம் என எதுவும் கிடையாது. மாறாக குடும்ப அதிகாரம் மூலமான, இராணுவ சர்வாதிகாரம் தான் மகிந்த சிந்தனை. இந்த சிந்தனை நோக்கம் என்பது, பாசிச வழிகளில் நாட்டை முற்றாக உலகமயமாக்குவதுதான். இதன் மூலம் இலங்கையில் தனது குடும்ப ஆதிக்கத்தை நிறுவுவதாகும். அதாவது அதிகார அடிப்படையிலும், பொருளாதார அடிப்படையிலும் குடும்ப ஆதிக்கத்தை நிறுவுவதுதான், மகிந்த சிந்தனை. இந்த மகிந்த சிந்தனை மக்களை அடக்கியொடுக்கி செழித்து வாழ்கின்ற ஒரு கும்பலுக்கு, மாமா வேலை பார்க்கின்றது.

***15.09.2007***



படிப்பகம்

www.padippakam.com



# புலி ஒழிப்பையா பேரினவாதம் நடத்துகின்றது?

இல்லை. மாறாக தமிழ் மக்களை ஒழித்துக்கட்டுகின்றனர். தமிழ் மக்களின் ஒவ்வொரு உணர்வையும், புலிப் பாசிசத்தை மூலதனமாகக் கொண்டு பேரினவாதம் வேட்டையாடுகின்றது. தமிழ் மக்களின் இருப்பே இன்று கேள்விக்குள்ளாகி நிற்கின்றது.

புலிகளின் பாசிச பயங்கரவாதத்தை உலகுக்கு காட்டியபடி, அழிப்பது தமிழ் மக்களின் அடிப்படையான வாழ்வியலைத்தான். இந்த அடிப்படையான உண்மையை புலிகளும் சரி, புலியெதிர்ப்பும் சரி மறுதலிக்கின்றது. இந்த வகையில் புலிகளும், புலி எதிர்ப்பும் பேரினவாதத்துக்கு தத்தம் அரசியல் வழிகளில் உதவுகின்றனர்.

ஒருபுறம் பேரினவாதம் தமிழ் மக்களையல்ல புலிகளையே அழிப்பதாக புலியெதிர்ப்பு கூச்சல் போடுகின்றது. மறுபுறம் தமிழ் மக்களுக்காகவே தாம் மரணித்துக்கொண்டிருப்பதாக புலிகள் ஒப்புக்கு ஒப்பாரி வைக்கின்றனர்.

பேரினவாதம் வழமைபோல் தனது பேரினவாத வழிகளில் புலிகளின் பெயரில் யுத்தத்தை செய்கின்றது. தமிழ்பேசும் மக்களின் எந்த பிரச்சனையும், இவர்களான தீர்க்கப்படப் போவதில்லை. தமிழ் மக்களை புலிகளின் பெயரில் அழித்தொழிக்க, காலத்தை இழுத்தடிப்பதைத் தாண்டி, எதையும் பேரினவாதம் செய்வதில்லை. இவர்கள் வைக்கப் போவதாக கூறிக்கொள்ளும் தீர்வுத் திட்டமும் கூட, தொடர்ச்சியாக திட்டமிட்டு கிடப்பில் போடப்படுகின்றது. மாட்டுக்கு குழையைக் காட்டி செல்வது போல், இந்தா தீர்வு என்று ஏமாற்றி வெல்லுகின்றனர். புலியெதிர்ப்பு செக்கு மாடுகள் புலிகள் தான் இதற்கு தடையாக உள்ளனர் என்று உளறிக் கொண்டு, அந்த இனவாத குழையை நோக்கி ஆவலாக அங்கலாய்த்து பறக்கின்றனர். ஆனால் இனவாத எதார்த்தம் காலத்தை நீடிப்பதும், அழித்தொழிப்பை முதன்மைப்படுத்தியுமே தமிழ்மக்கள் மேல் வெறியாட்டம் போடுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சனைகளை தேசிய ரீதியாக, இன ரீதியாக, மொழி ரீதியாக இனம் காண மறுக்கும் இனவாத அரசுகள், புலியெதிர்ப்பும், அந்த மக்களுக்கு ஜனநாயக பூர்வமான அரசியல் தீர்வை வழங்கப் போவதில்லை. இந்த உண்மை மீள மீள மெய்ப்பிக்கப்படுகின்றது. கொடுமையான கொடூரமான யுத்தம் நடத்தப்படுகின்றது. வகை தொகை தெரியாத அளவில் குண்டுகள், தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் பொழியப்படுகின்றது. அழித் தொழிப்பும், சமூகத்தை விரட்டி அடிப்பும் அன்றாடம் நிகழ்கின்றது.

மக்கள் மந்தைக் கூட்டம் போல் விரட்டிவரப்பட்டு, ஒவ்வொருவர் காலிலும் சுயவிலங்கிட்டு தமது இராணுவ பாசிச கோட்டைக்குள் சிறை வைக்கின்றனர். இந்த மக்கள் சுயமாக சிந்திக்கவும், செயலாற்றவும், ஏன் தமது அபிப்பிராயத்தை தெரிவிக்கவும் முடியாத வகையில், ஒரு பேரினவாத அடக்குமுறைக்குள் நாயிலும் கீழாக வைக்கப்படுகின்றனர்.

அனைத்தும் புலியை அகற்றல், புலிப் பயங்கரவாதியிடமிருந்து மக்களை பாதுகாத்தல் என்ற புலியெதிர்ப்பு விளக்கம் தரப்படுகின்றது. புலிகளை எப்போதோ தமிழ் மக்கள், தமது விடுதலையின் எதிரி என்பதை அறிந்து அதில் இருந்து விலகி வாழ்கின்றனர் என்ற உண்மை, பேரினவாதத்தின் சதியை பொய்யாக்கிவிடுகின்றது. மக்கள் எப்போதோ புலிகளை தோற்கடித்துவிட்டனர். பாசிசமின்றி புலிகள் உலகின் எந்த மூலையிலும் உயிர்வாழ முடியாத நிலை. எந்த நிகழ்ச்சியின் பின்பும் பாசிசம் விகாரமாகி வெளிப்பட்டு நிற்கின்றது. தமிழ் மக்களை புதிதாக விடுவிப்பதற்கு என பேரினவாத பாசிச திட்டத்தில் எதுவுமிருப்பதில்லை. பேரினவாத பாசிசம் புலிப்பாசிசத்தை துணையாக கொண்டு, தமிழ்மக்களையே அடக்கி யொடுக்கி அடிமைப்படுத்த விரும்புகின்றது. இந்த வகையில் இன்று கிழக்கு மிக மோசமாக அழிக்கப்படுகின்றது. அந்த மக்களின் வாழ்வு கற்பழிக்கப்படுகின்றது. வரலாறு காணாத புலம்பெயர்வும், இழப்புகளும். சிதைவுகளும். எங்கும் மனித அவலங்கள். வீதியோரங்களில் அனாதை வாழ்வு. புலிப் பயங்கரவாதத்திடம் இருந்தான மீட்சி, இப்படித்தான் நிதர்சனமாகி நிர்வாணமாகி நிற்கின்றது.

இதற்கு பின்னால் அரசியலற்ற கருணா என்ற பாசிச மாபியா கூலி குண்டர் படையும் மற்றைய குண்டர் குழுக்களும் வீரர்களாக பவனி வருகின்றனர். கருணா என்ற மாபியாக் கும்பல் கொழும்பு முதல் வவுனியா வரை கறக்கும் கப்பப் பணம், புலியின் பாசிச மாபியாத்தனத்தை மிஞ்சுவதாகும். இந்த பணம் கூட அந்த கிழக்கு



படிப்பகம்

www.padippakam.com



மக்களுக்கு காட்டவேயில்லை. தாம் மனிதாபிமான பணியில் ஈடுபடுவதாக காட்ட, கமராவுடன் அரசியல் நாடகங்களை நடத்துகின்றனர். இதன் மூலம் புலம்பெயர் பணமும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், வீணி வடிய காத்துக் கிடக்கும் மக்கள் விரோதக் கும்பல்கள்.

பேரினவாதத்தின் கிழக்கு எடுபிடியாகி ஊரைச் சுருட்டுகின்றனர். கருணா குண்டர்கள் மேலான சர்வதேச குற்றச்சாட்டுகள் அதிகரிக்கும் போது, அரசு அவர்களின் மூச்சே வெளியில் தெரியாத வண்ணம் பூட்டிவைக்கின்றது.

கிழக்கு மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக் கொண்டு, இந்த கூலிக் குழுக்கள் எல்லாம் பேரினவாதத்தின் கால்களை நக்குகின்றது. அந்த மக்களின் நிரந்தரமான அடிமை வாழ்வும், பேரினவாதத்தின் அழுங்கு பிடியும் மீட்கவே முடியாத ஒரு சகதியினுள் சென்று கொண்டு இருக்கின்றது. இதையே வரலாறு நிச்சயமாக அனைத்து தரப்புக்கும் நிறுவிக்காட்டுகின்றது.

*07.04.2007*



படிப்பகம்

www.padippakam.com



# யாழ் மக்கள் சுபீட்சமோ, பேரினவாத "ஜனநாயக"த்தில் கிடைக்கின்றதாம்!

ஜனநாயகம் என்றால் புலியல்லாத அனைத்துமே ''ஜனநாயகம்'' என்று கூறுமளவுக்கு அரசியல் குறுகிவிட்டது. தேசியம் என்றால் புலியிசமே என்றளவுக்கு அதுவும் மலினப்பட்டுக் கிடக்கின்றது. இதற்கு வெளியில் வேறுபட்ட சிந்தனை முறை எதுவும் கிடையாது. நாம் இதில் இருந்து வேறுபட்டுப் பார்க்கின்றோம். மக்களின் அடிப்படை உரிமைகளில் இருந்து இதை நோக்குவதால், புலி மற்றும் புலியெதிர்ப்பு பிரிவுகளிடம் இருந்து கடுமையான எதிர்த்தாக்குதலை ஒரே நேரத்தில் சந்திக்கின்றோம். அவர்கள் இதைக் கோட்பாட்டு ரீதியாக எதிர்கொள்ள முடியாது என்பதால்தான், தனிமனித அவதூறுகளாக சந்திக்கின்றோம். அரசியல் ரீதியாக இதைப் புறந்தள்ளிக்கொண்டுதான், மக்களின் உரிமைகளை நோக்கி முன்னிறுத்தி முன்னேற முடியும். இதை எமது அனுபவம் மட்டுமின்றி, விமர்சனமும் சுயவிமர்சனமும் கூட எடுத்துக் காட்டுகின்றது.

பேரினவாத ''ஜனநாயக''த்தில் மக்களுக்கு ''ஜனநாயகம்'' கிடைக்கின்றதா? ஆம் என்று சொல்லுகின்ற, அதை ஆதரிக்கின்ற, கண்டும் காணாமல் விடுகின்ற வகையில் புலியல்லாத ''ஜனநாயக'' தளங்கள் இயங்குகின்றது. இதற்குள்தான், இப்படித்தான் புலியல்லாத தளங்கள் அரசியல் பேசுகின்றது. ஐயா ''ஜனநாயக'' வாதிகளே, இது எப்படி? என்று கேட்டால், நீங்கள் எத்தனை பேர் உள்ளீர்கள் என்று கேட்கிறார்கள். நீ ஒருவன் தானே என்று நக்கலும் நையாண்டியும் அடித்து குலைக்கிறார்கள், கடிக்கின்றார்கள் கடித்துவிட்டு மனநோய் மருத்துவமனைக்கு அனுப்புகின்றார்களாம். இதை மீறி எதையும் அவர்களால் புதிதாக சொல்ல முடிவதில்லை. இப்படித்தான் புலிப் பாசிசத்திலும் இருந்து, யாழ் மக்களை பேரினவாத அரசு காப்பாற்றியுள்ளதாக கூறுகின்றனர். யாழ் மக்களின் வாழ்விலோ,



படிப்பகம்

www.padippakam.com



''ஜனநாயகம்'' பூத்துக் குலுங்குகின்றதாம். இந்தக் கண்கொள்ளாக் காட்சி தான், புலியெதிர்ப்பு ''ஜனநாயக'' அரசியலாகின்றது.

இப்படி யாழ் மக்களுக்கு பேரினவாத அரசும், புலியெதிர்ப்புக் கும்பலும், எல்லா சமூக விரோத கழிசடைகளும் வழங்கியது என்ன? யாரும் இதற்குப் பதிலளிப்பது கிடையாது.

யாழ்குடாவில் மக்கள் வீட்டை விட்டுக் கூட வெளியில் வரமுடியாத அளவுக்கு ''ஜனநாயகம்''. பெடி பெட்டைகளை வீட்டுக்குள் பூட்டிவைக்க வேண்டிய அளவுக்கு, பெற்றோர்கள் படும்பாடு சொல்லி மாளாது. நடமாடும் சுதந்திரத்தைப் பெற்ற எந்தப் பெண்ணும், பாலியல் அடிப்படையிலான சோதனையைத் கடந்து செல்ல முடிவதில்லை. இப்படி ''ஜனநாயக''த் துக்கோ அங்கும் இங்கும் பல பக்கங்கள் உண்டு. இந்த ''ஜனநாயக''த்தில், ஒரு ''ஜனநாயக'' காட்டுத் தர்பாரே நடாத்தப்படுகின்றது. எங்கும் அச்சம் பீதி கலந்த உறை நிலைக்குள் சமூகத்தை திணித்து, ''ஜனநாயகம்'' தழைத்தோங்குகின்றது.

எங்கும் கடத்தல், காணாமல் போதல், படுகொலைகள், பாலியல் வக்கிரங்கள் ஊடாக, யாழ் குடாநாடு அதிபயங்கரமான சமூக பீதிக்குள் திணிக்கப்பட்டுள்ளது. புலிகளிடம் இருந்து மீட்கும் ''ஜனநாயகம்'' இப்படித்தான் உள்ளது.

இதைத்தான் தமிழ் மக்கள், தேசியத்துக்கு பதிலான ''ஜனநாயகம்'' விருப்பம் என்கின்றனர். அந்த ''ஜனநாயக''த்தில் டக்களஸ் ஐயா பொறுக்கிப் போடுகின்றார். இப்படி பொறுக்கிப் போட்டும், போட்டுத் தள்ளியும், பலர் ''ஜனநாயகம்'' பேசுகின்றனர். தமிழ் மக்கள் தம் பின்னால் நிற்பதாக, தமது அலுவலகங்களில் காத்து நிற்பதாக, அவர் செய்யும் புண்ணியங்களை பறைசாற்றுகின்றனர். இப்படித் தான் அங்கு இங்கும் ''ஜனநாயகம்'' மிகச் செழிப்பாய் தழைத்தோங்குகின்றது. இந்த பொறுக்கிப் போடுவதையும், போட்டுத் தள்ளும் ''ஜனநாயக''த்தையும் ஊர் உலகத்திற்கு பறைசாற்ற ஒரு வானொலி. அந்த வானொலிக்கு பெயர், ''ஜனநாயக'' வானொலியாம். இப்படித்தான் இலண்டனில் இருந்தும் ஒரு ''ஜனநாயக'' வானொலி. யாழ் மக்கள் வரை சென்று ஜனநாயகம் பேசி, ஊரோடு உறவாடு கின்றனராம்.

யாழ் மக்கள் அனுபவிக்கும் இன்றைய கொடுமைகளையும், இராணுவ கொடூரங்களையுமா அந்த ''ஜனநாயகம்'' பேசுகின்றது. ''ஜனநாயக''த்தின் பெயரில் பேசுவது, அந்த மக்களின் ஜனநாயகத்தை யல்ல. இப்படி ''ஜனநாயகம்'' பேசுபவன் யார்? டக்ளஸ் ஐயா



படிப்பகம்

www.padippakam.com



இலங்கை அரசின் காசில் ''ஜனநாயகம்'' பேச, வானொலி நடத்துகின்றார். ராஜன் ஐயா இந்திய அரசின் காசில் இலங்கை அரசின் அனுமதியுடன் ''ஜனநாயகம்'' பேசுகின்றனர். இப்படித்தான் பலர் ''ஜனநாயகம்'' பேசுகின்றனர். இப்படி வானொலிகளிலும், இணையங்களிலும் ''ஜனநாயக'' ஆய்வாளர்கள், அபிமானிகள். அவர்கள் எல்லாம் அடித்துச் சொல்வது, இது தான் சுதந்திர விவாதம், கருத்து விவாதம் என்கின்றனர்.

தாம் பேசுவது ''ஜனநாயகம்'', தாம் பேசும் உரிமை ''ஜனநாயகம்'' என்றால் இது அனைத்து அடக்குமுறையாளருக்கும் பொருந்தும். என்ன பேசுகின்றோம் என்பதல்லவா முக்கியம். சமூகத்தை முன்னிறுத்தாத எதுவும், பரந்துபட்ட மக்களின் ''ஜனநாயக''மல்ல.

சமூகத்தை முன்னிறுத்தாது வழிபடும் ஜனநாயகம், மக்களின் அடிப்படை உரிமைகளில் இருந்தல்ல. இதை எதிர்ப்பவர்கள் ஒன்று புலிகள் அல்லது அரசு அல்லது நடுநிலை பேணுவதாகக் காட்டி இரண்டையும் சார்ந்து இயங்குதல் தான், ''ஜனநாயகம்'' என்கின்றனர். மக்களின் அடிப்படை உரிமைகளில் இருந்து, யாரும் ஜனநாயகம் பேசுவது கிடையாது. இந்த விடயத்தில் அரசியல் ரீதியாக வேறுபாடு இவர்களிடையே கிடையாது.

இதைத்தான் பேரினவாத அரசு செய்கின்றது. தமிழ் மக்களை புலிகளிடம் இருந்து பாதுகாப்பதாக கூறும் பேரினவாத அரசோ, மக்கள் மூச்சுக் கூட விடாமல் வைத்திருப்பது தான் ''ஜனநாயகம்'' என்கின்றது. இதற்கு ஆதரவான புலியெதிர்ப்போ தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பேசாது இருத்தலே, ''ஜனநாயகம்'' என்கின்றனர். ''ஜனநாயகம்'' வேண்டும் என்பவர்கள், இப்படி ஒன்றுபட்டு இயங்குகின்றனர். இதைத்தான் இலங்கை வாழ் தமிழ்மக்கள் எங்கும் எதிலும் அனுபவிக்கின்றனர். இப்படித்தான் யாழ் மக்கள் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

யாழ் ''ஜனநாயகம்'' என்பது, கொலை, கொள்ளை, கப்பம் முதல் வர்த்தக சூதாடிகள் ஆட்சி செய்யும் மயான சுதந்திரம். அங்கு வாழும் ஒவ்வொரு மனிதனும் வீட்டை விட்டு வெளியேறினால், நாம் மீண்டும் வீடு திரும்பி வருவோமா என்ற சந்தேகத்துடன் வாழ்கின்றான். இன்று இதுவே யாழ் மக்களின் உளவியல் நோயாகிவிட்டது. ஒவ்வொரு பெண்ணும் தனது குடும்ப ஆண்களை பாதுகாக்க எண்ணி, சதா புலம்புவதே வாழ்க்கையாகிவிட்டது. எங்கும் அச்சம் கலந்த மயானமான ''சுதந்திர'' பூமி. ஒவ்வொரு பெண்களும் ''ஜனநாயகம்'' போட்டுள்ள பாலியல் சோதனைச் சாவடியூடாக தப்பி வாழ முயன்று,



படிப்பகம்

www.padippakam.com



உளவியல் ரீதியாகவே அவள் சிதைந்து போகின்றாள்.

தமது உறவுகளைத் தேடி அலையும் மனிதம். விழும் பிணத்தை நோக்கி பதறி ஓடும் மனிதக் காட்சிகள். ஓவென்று எழும் மனித ஓலங்கள், ஒப்பாரிகள். உருட்டி மிரட்டி வாங்கும் கப்பம். அதிகாரத்தைக் கொண்டே, மக்களை விலைக்கு வாங்கும் அரசியல். இப்படி ''ஜனநாயகமாய்'' பூத்துக் குலுங்கும் பூங்கா யாழ் குடா நாடு.

இப்படி ''ஜனநாயகம்'' அனைத்தையும் விலை பேசும் பொருளாக்கியுள்ளது. மக்களின் சுதந்திரம், ஜனநாயகம் எல்லாம், இன்று எடைக்கு விலை போடப்படுகின்றது. பொறுக்கித்தனங்களும், கைக் கூலித்தனமும், காட்டிக்கொடுப்பும், பிழைப்புத்தனமும், அரசியலாகிவிட்டது. இதுவே சிலரின் வாழ்வுக்கான சுபீட்சத்துக்கான ஒன்றாக மாறிவிட்டது.

எதையும் எப்படியும் செய்யலாம். எப்படியும் கதைக்கலாம். எப்படியும் எழுதலாம் எப்படியும் மழுப்பலாம் என்ற நிலை. இதுவே இன்றைய அரசியல் நடைமுறையும், ஏன் அறிவும் கூட அது தான். மக்களின் வாழ்வியல் கூறுகள் மீதான வெறுப்பு, அனைத்திலும் ஆட்சி செய்கின்றது.

அதிகாரத்தின் முன் வாய் திறக்க முடியாது. இயங்க முடியாது. இதை மீறினால் மரணம் என்பது ''ஜனநாயகம்''. ஜனநாயகத்தின் முன் கருத்து முதல் நபர் வரை இழிவாடப்படுகின்றனர். இழிவாடுவதும், அதற்கான உரிமையுமே கருத்துச் சுதந்திரமாகி விட்டது. இவர்களைக் கொல்வது தான் சரியானது என்பது, ஆதிக்க அரசியல் கோட்பாடாகிவிட்டது. ஆளைக் கொல் அல்லது கருத்தைக் கொல். எப்படியென்றாலும் பரவாயில்லை. உனது வழியில், உனது பாணியில் தாக்குதலை நடத்து என்கின்றது. எங்கும் அராஜகம். கொலை முதல் கருத்து வரை.

அறிவு என்பது இதைத் தாண்டவில்லை. பத்திரிகைத்துறை, அறிவுத் துறை, கோட்பாட்டுத்துறை என அனைத்தும், இதற்குள் மெத்தை போட்டுப் படுக்கின்றது. மனித அவலத்தின் எல்லைக்குள், அதையே அரசியலாக்குகின்றது. அதற்கு இசைவாக இயங்குகின்றது. அவர்களின் இந்த அறநெறியோ, அறிவு சார் அரசியல் ஒழுக்கமாகி விடுகின்றது. இதையே ''ஜனநாயகம்'' என்கின்றனர்.

இந்த ''ஜனநாயகம்'' யாழ்குடாவில் அம்மணமாகி நிற்கின்றது. இது கிழக்கிலோ மற்றைய பகுதியிலோ இல்லை என்பதல்ல. ஆனால்



படிப்பகம்

www.padippakam.com



யாழ்குடாவில் ''ஜனநாயக''த்தின் பெயரில் திட்டமிட்ட அரசியல் படுகொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல் நிறுவனப்படுத்தப் பட்டுள்ளது.

தொடருகின்ற கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல், உயிருக்கு உத்தரவாதம் கேட்டு சரணடைதல் என்ற எல்லைக்குள், சமூகத்தின் உயிர்த்துடிப்பான வாழ்வின் கூறுகளை எல்லாம் வெட்டி எடுத்து விடுகின்றனர். நடைப்பிணமாக மனிதம், மனிதன் நடமாடும் அளவுக்கு யாழ் குடா நாடு மாறிவிட்டது.

சர்வதேச தன்னார்வ அறிக்கைகளுக்குள் மட்டும், இதை சடங்குக்காக பதிவு செய்கின்ற எல்லைக்குள் இது சுருங்கிவிட்டது. அதையும் பேரினவாத அரசு எதிர்த்து சண்டித்தனம் செய்கின்றது. ஏகாதிபத்திய மனித உரிமைமீறல்களைக் காட்டி, தனது பாசிச நடத்தைக்கு நியாயவாதம் பேசுகின்றது. அமெரிக்கா என்ற உலகப் பயங்கர வாதியின் வழியில், இதை பயங்கரவாதப் பிரச்சனையாகக் காட்டி அடாவடித்தனம் செய்கின்றது.

மக்களோ சொல்லொண்ணாத் துன்பத்தை அனுபவிக்கின்றனர். எந்த ''ஜனநாயகமும்'' இதைப் பற்றி கடுகளவு கூடப் பேசுவது கிடையாது. மக்களாகிய நாம் எம்மளவிலாவது பேசியாக வேண்டும். மக்களாகிய நாம் போராடாது, எமது ஜனநாயத்தை ஒருநாளும் மீட்க முடியாது. இதற்கு வெளியில் எந்த தீர்வும் கிடையாது.

***23.11.2007***



படிப்பகம்

www.padippakam.com



# தமிழன் என்றால் எதிரியா? தமிழன் என்றால் புலியா?

இப்படித்தான் குரூரமாக பேரினவாதம் கருதுகின்றது. தமிழன் என்ற அடையாளத்தின் மேல் பாய்கின்றது. இதில் அது சாதி பார்ப்பதில்லை. பால் பார்ப்பதில்லை, பிரதேச வேறுபாடு பார்பதில்லை. வர்க்க அடைாளம் கூட பார்ப்பதில்லை. தமிழைப் பேசுவதால் தமிழனாக பார்க்கின்றது. அதனால் ஒடுக்குகின்றது.

பேரினவாதம் குண்டை வீசும் போதும் சரி, ஒரு பிரதேசம் மீதான தாக்குதலை நடத்தும் போதும் சரி, மக்கள் கூட்டத்தை வெளியேற்றும் போதும் சரி, ஏன் இன்று நடக்கும் கொழும்புக் கைதுகள் கூட, தமிழன் மீதான அடையாளம் மீது தான் மீள மீள பேரினவாதத்தை நிறுவிக் காட்டுகின்றன.

இந்த அரசு என்பது சிங்களப் பேரினவாத பாசிச ஆட்சி தான். இதையே அவர்கள் உறுதிசெய்கின்றனர். தமிழ் மக்களுக்கு இந்த அரசால் மீட்சி கிடையாது என்பதையே, வரலாறு தொடர்ச்சியாக நிறுவிக் காட்டுகின்றது. எப்படித்தான் தமிழ் மக்கள் மீட்சி பெறுவது? தமிழ் மக்கள் சொந்தமாய் மூச்சுக் கூட விட முடியாத வகையில், தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் தாமே தாம் எனக் கூறிக்கொண்டு, அனைத்தையும் தனதாக்கிக் கொண்டு புலிகளின் பாசிசம் எதிர்த்தளத்தில் ஆடுகின்றது.

பேரினவாதத்தின் ஒன்று குவிந்த அந்த பாசிசத்தை எதிர்ப்பதற்கு அதனால் முடிவதில்லை. தனக்குள் ஆயிரம் ஒடுக்குமுறைகளை தக்கவைத்துக் கொண்டுள்ளது. அதை பாதுகாத்தபடி, பேரினவாத ஒடுக்குமுறையை எதிர்கொள்ள முடிவதில்லை. சிங்கள பேரினவாதம் என்ற எதிரிக்கு எதிராக, தமிழ்மக்களை அழைத்துச் செல்ல புலிகளால் முடிவதில்லை. மாறாக சிங்கள பேரினவாதம் தமிழன் என்ற அடையாளம் ஊடாக தாக்குதலை நடத்தும் போது, புலிகள்



படிப்பகம்

www.padippakam.com



தமிழனுக்குள்ளான அடையாளங்கள் மீது தாக்குதலை நடத்துகின்றது. புலிகளால் தமிழ் மக்களை முரண்பாடுகளை களையும் ஒரு புரட்சிகர தலைமை ஊடாக மக்களை வழிநடத்த முடிவதில்லை. முரண்பாடுகள் மீது தாக்குதலை நடத்தி, தமிழரைப் பிளந்து எதிரிக்கு அதை சாதகமாக்கிவிடுகின்றனர். இப்படி சிங்கள பேரினவாதத்தைப் பலப்படுத்தி நிற்கின்றனர்.

இந்த சிங்களப் பேரினவாதமோ, ஒட்டுமொத்த தமிழர் மீது பாரிய தாக்குதலை நடத்துகின்றது. இன்று கொழும்பை மையமாக வைத்து நடாத்துகின்ற இன சுத்திகரிப்பு கைதுகள் பேரினவாத முகத்தை மறுபடியும் நிறுவுகின்றது. இப்படி இலங்கையில் அதி பயங்கரமான சிங்கள பேரினவாதம் மேலெழுந்து நிற்கின்றது.

அரசு, புலிகளின் குண்டு வெடிப்புக்களை காரணம் காட்டி, பேரினவாத பாசிச நடத்தைக்கு நியாயம் கற்பிக்கின்றனர். புலிகள் குண்டு தாக்குதலை வெறும் பயங்கரவாதமாக காட்டப்படுவதை நாம் அங்கீகரிக்க முடியாது. சிங்களப் பேரினவாதம் அரச பயங்கரவாதம், ஒட்டு மொத்த தமிழ் மக்கள் மேல் எவிவிடப்பட்டுள்ளது. அதன் விளைவுகள்தான், மக்களில் இருந்து விலகிய புலிப் பயங்கரவாதம். இதைக்காட்டி தமிழ் இனம் மீது தாக்குதலை நடத்துவதை நாம் அங்கீகரிக்க முடியாது.

புலிகளின் குண்டு வெடிப்புகளை நாம் மற்றொரு கோணத்தில் மட்டும் தான், விமர்சிக்க முற்படுகின்றோம். அப்பாவி மக்கள் மேலான தாக்குதலாக இருப்பதையும், இது போன்ற குண்டு வெடிப்புகள் மூலம் எதையும் தமிழ் மக்களுக்காக சாதிப்பதில்லை என்ற கோணத்தில் இதை விமர்சிக்கின்றோம்.

மாறாக பேரினவாத அரசு இயந்திரம் மீதோ, அதை ஒட்டிய கூறுகள் மீதான தாக்குதலை இட்டு நாம் அக்கறை கொள்வதில்லை. இரண்டும் மக்கள் விரோத ஆளும் வர்க்கங்கள், தமது சொந்த அதிகாரத்துக்காக தாக்குதலை நடத்துகின்றனர். இதையும், இதன் எல்லைக்குள்ளும் அதன் அரசியலை விமர்சிக்கின்றோம்.

அப்பாவி மக்கள் மேலான தாக்குதலை (புலியின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் அரசு செய்தாலும் சரி அல்லது புலி அரசின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் செய்தாலும்) ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழன் என்பதால் தாக்குவது. சிங்களவன் என்பதால் தாக்குவது என்ற அரசியல், படுபிற்போக்கானது.



படிப்பகம்

www.padippakam.com



இன்னொரு கோணத்தில் இதுபோன்ற தாக்குதல் மூலம், புலிகள் அரசியல் ரீதியாக மக்களுக்கு எதை கொடுக்க முனைகின்றனர் என்ற விடயம் எமது விமர்சனத்துக்குரியது. இது போன்ற தாக்குதல் மூலம், தமிழ் மக்கள் மேலான புலிகளின் அடக்குமுறையாக அது மாறுகின்றது. அத்துடன் இது போன்ற தாக்குதலில் ஈடுபடுவோர், எந்த சமூக இலட்சியத்தையும் அடைவதில்லை என்ற உண்மையை, இங்கு நாம் விமர்சன நோக்கில் பார்க்கின்றோம்.

தமிழ் மக்களோ இரண்டு தரப்பால் பலியிடப்படுகின்றனர். இப்படி மீட்சிக்கான பாதை கிடையாது. எல்லாம், எல்லாத்தரப்பாலும் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றது. மக்கள் இடையில் சிக்கி நசுங்குகின்றனர்.

இப்படி தமிழ் மக்களை தலைமை தாங்கி, அவர்களை வழிகாட்ட முடியாது புலிகள் தோற்றுவிட்டனர். இதைப் பயன்படுத்தி பேரினவாத அரசு, ஒருபுறம் புலிகள் மேல் பாரிய யுத்தத்தை தொடுத்துள்ளனர். புலிகள் பாரிய நெருக்கடிகள் ஊடாக சிதைந்து கொண்டிருக்கின்றனர். மறுபக்கத்தில் மொத்த தமிழ் மக்கள் மேலான அரச பயங்கரவாதத்தை, சிங்கள பேரினவாத அரசு ஏவிவிட்டுள்ளது.

இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள தமிழ் பிரதேசம் எங்கும், பேரினவாதம் படுகொலை அரசியலை நடத்துகின்றது. சிங்களப் பகுதிகளில் தமிழ் இனச் சுத்திகரிப்பை நடத்துகின்றனர்.

தமிழன் என்ற அடையாளம் கொல்லவும், சிறையில் தள்ளவும் போதுமான காரணமாகியுள்ளது. தமிழனின் நிலை இது. இன்று இதைச் சுற்றித்தான் சகலதும் இலங்கையில் இயங்குகின்றது.

பேரினவாத அரசு பெரும்பான்மை இன்றி திணறுகின்றது. பெரும்பான்மை இனவாதிகளாக இருந்த போதும், அதிகாரப் போட்டி பெரும்பான்மையை கேள்விக்குள்ளாக்கின்றது. இந்த நிலையிலும் இந்த பேரினவாத தமிழ் விரோத யுத்த அரங்கு, உயர்ந்த இனவாத அதிகாரங்களைக் கொண்டு இயங்குகின்றது. அது உயர்ந்தபட்ச பாசிச நடைமுறையைக் கொண்டு செயல்படுகின்றது. எந்த நெருக்கடியையும் எதிர் கொள்ளும் திறனை, ஜனாதிபதியின் கீழான அவரின் குடும்ப அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும், இராணுவ அதிகாரங்கள் கொண்ட இராணுவ ஆட்சியாக மாறும் போக்கில் இலங்கை வேகமாக மாறிச் செல்லுகின்றது.

அதை நோக்கிய சர்வதேச உறவுகள், சர்வதேச முடிவுகளை



படிப்பகம்

www.padippakam.com



எடுக்கின்றனர். இன்று உள்நாட்டில் பாராளுமன்றத்தின் கீழ் ஆட்சியிருந்தும் கூட, சட்டபூர்வமான இராணுவ ஆட்சிதான்.

இது தமிழ் மக்கள் மேல் முழுமையாக பாய்கின்றது. தமிழர் மீது பல முனைத் தாக்குதலை நடத்துகின்றது. சில மாதத்துக்கு முன் தமிழர்களை வடக்கு கிழக்கு நோக்கி விரட்ட முனைந்தது. இன்று பெருமளவிலான கைது சிறை என்று, தமிழ் இனம் மீதான ஒரு இனவெறித் தாக்குதலைத் தொடுத்துள்ளது.

இப்படி ஒரு இனம் அங்கும் இங்குமாக பந்தாடப்படுகின்றது. விட்டில் பூச்சியாகி, இந்த இனவாத தீயில் மக்கள் வீழ்ந்து மடிகின்றனர். மூச்சுக் கூட விட முடியாத மனித அவலம். புலிகள் பிரதேசத்தின் ஒருவிதம். புலியல்லாத பிரதேசத்தில் மற்றொரு விதம். முடிவற்ற மனித துயரங்கள். ஒரு இனத்தின் அழிப்பு எங்கும் எதிலும் நடந்தேறுகின்றது.

புலியல்லாத சிங்களப் பிரதேசத்தில் வாழ்பவர்கள், ஏதோ ஒரு காரணத்தினால் புலிகளின் பிடியில் இருந்து தப்பி வந்தவர்கள் தான். அவர்கள் தான் இன்று, சிங்கள பேரினவாத சிறைக் கொட்டகைகளில் தள்ளப்படுகின்றனர். ஒரு இனவாதம் இப்படித்தான் செய்யும். ஜெர்மனிய நாசிகள் இப்படித்தான், இந்த வழிகளில் தான் யூதரை வேட்டையாடியது. இலங்கையில் இவை ஆரம்பத்தில் உள்ளது.

தலைமுறை தலைமுறையாக வாழ்வை இழக்கும் தமிழ் மக்கள். வாழ்வில் விடிவின்றி அங்குமிங்கமாக அலையும் வாழ்க்கை. இடைத்தரகர்களின கொண்டாட்டங்கள், ஊடாக தமிழ் இனம் நலமடிக்கப்படுகின்றது.

மலையக மக்களுக்கும் இதே கதி. உலகமயமாதல் வாழ்வையே சூயையாடிவிட, பிழைப்புத் தேடி வரும் தமிழ் மக்களுக்கு இந்தக் கதி. தமிழ் மக்களையே சிறைகளில் இட்டுச் செல்கின்ற ஒரு பேரினவாத அரசு. திரும்பிய இடம்மெங்கும் வாழ்வை இழப்பதை தவிர, தமிழ் மக்களுக்கு வேறு வழி கிடையாது.

புலிகளின் பிரதேசத்திலும் மக்கள் நிம்மதியாக வாழமுடியாது. அங்கு ஒரு காட்டுத் தர்பார். இங்கு மற்றொரு காட்டுத் தர்பார். ஒரு இனம் நிம்மதியாக வாழமுடியாத நிலை. தமிழ் மக்களின் பெயரில் இவர்கள் நடத்துகின்ற அராஜகம் சொல்லி மாளாது. மக்களின் துன்பம், அவர்களின் அவஸ்த்தை, யுத்தம் செய்கின்ற இரு தரப்புக்கும் கொண்டாட்டமாகி களிப்பூட்டுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



இப்படி ஈவிரக்கமற்ற மனித விரோதிகளாகிவிட்ட தமிழ் சிங்கள தலைவர்கள். தமிழ் மக்களுக்கு நிம்மதியான வாழ்வில்லை என்பதே, இன்று இலங்கையில் நடக்கின்ற அனைத்து நிகழ்வுகளும் தொடர்ச்சியாக எடுத்துக் காட்டுகின்றது.

***04.12.2007***



படிப்பகம்

www.padippakam.com



# இனச் சுத்திகரிப்பு நடத்தும் பாசிட்டுகள்

இனத் தன்மை வாய்ந்த பாசிசம் என்பது, இனத்தூய்மையையும் இனவழிப்பையும் முன்வைக்கின்றது. இலங்கையில் இது பலதரம் நன்கு நிறுவப்பட்டுள்ளது. பலர் கொழும்புச் சம்பவத்தை நாசிக்கால வரலாற்றுடன் ஒப்பிட, அவசரமாக கொடுக்கைக் கட்டிக்கொண்டு ஓடுகின்றனர். சொந்த மண்ணில் இதுபோன்ற எந்தனையோ சம்பவங் கள் நிகழ்ந்துள்ளது. அதில் ஈடுபட்டதால் பல பொறுக்கிகளுக்கும் அவை தெரிவதில்லை.

இன்று கொழும்பில் இருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்ட நிகழ்வு, காலகாலமாக தமிழர் பற்றி சிங்கள பேரினவாதிகளின் கொள்கையின் அடிப்படையில் அரங்கேறியது. அதுவும் சிங்கள பேரினவாதிகளுக்கே தலைமை தாங்கும் சிறிய சர்வாதிகார குழுவின் தலைமையில் நடந்துள்ளது. இந்த குழுவின் தலைமையிலான பாசிட்டுகள்தான் இன்று நாட்டை ஆளுகின்றனர்.

இந்த இனச் சுத்திகரிப்பு இன்று நடத்தியவர்களை கண்டிக்கும் தகுதி, இன்று இலங்கை அரசியல் வரலாற்றில் உள்ள யாருக்கும் கிடையாது.

1948 இல் மலையக மக்களின் பிரஜாவுரிமையை பறித்து நாடுகடத்திய போது, இதே இனசுத்திகரிப்பே காரணமாக இருந்தது. அன்று நாடு கடத்த வேண்டிய இடம் மற்றொரு நாடாக இருந்ததால், உடன் நாடு கடத்தப்படவில்லை. அந்த வெட்கக்கேடான செயலுக்கு பாய் விரித்தவர்கள், அதில் படுத்து அரசியல் விபச்சாரம் செய்தவர்கள் எல்லாம், ஏன் இன்னும் அவர்களின் அரசியல் வாரிசுகள் எல்லாம் இன்று கொழும்பு நடவடிக்கையைக் கண்டிக்கின்றனர். அரசியல் விபச்சாரம் இப்படி தான் காலத்துக்கு காலம் புழுக்கின்றது.

பின்னால் ஜே.வி.பி இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற தலைப்பில், மலையக மக்களை எதிரியாக்கியே அரசியல் செய்தவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com



அவர்களை நாடு கடத்திய போது, அதை ஆதரித்து நின்றவர்களின் அரசியல் விபச்சாரம், இனசுத்திகரிப்புதான். இதே ஜே.வி.பி இன்றுவரை தமிழரின் அடிப்படை உரிமையை மறுக்கும், தீவிர இனவாதிகள். இன்று அவர்கள் கூட இதைக் கண்டிக்கின்றனர்.

மிகக் கொடூரமான மற்றொரு வரலாறு உண்டு. புலிப்பாசிட்டுகள் வடக்கில் இருந்த முஸ்லிம் மக்களை, இதேபோல்தான் அன்று வெளியேற்றினர். அவர்களையும் தமிழ் மக்கள் என்று கூறிக்கொண்டே, இதைச் செய்தனர். இன்று வரை அவர்களுக்கு எத்தரப்பில் இருந்தும் நிவாரணம் கிடைக்கவில்லை. மந்திரி பதவிகள் முதல் பேச்சுவார்த்தைகள் வரை, மக்களுக்கு நிவாரணங்களைக் கூட வழங்குவதில்லை. அவர்களின் அவலங்களுக்கு முடிவை கட்டிவிடுவதில்லை.

இனத்தூய்மை, இனநலன், அதை சுற்றிய சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு என்ற போர்வையில் நடத்துகின்ற இனவெறி பாசிசம் தான் இவை.

இது மட்டுமல்ல. தமிழர்கள் என்ற காரணங்களுக்காக சிங்கள இராணுவம் தமிழ் கிராமங்களை மொத்தமாகவே கொன்று போட்ட பல பத்து சம்வங்களும், இந்த மண்ணில் தான் நடந்தது. இதே அடிப்படையில் சிங்களவர், முஸ்லிங்கள் என்ற காரணத்துக்காக, தமிழ் புலிகள் சில பத்து கிராமங்களை மொத்தமாக கொன்றதும், இந்த மண்ணில் தான் நடந்தது. இதை விட எத்தனை இனக்கலவரங்கள் எத்தனை சம்பவங்கள்.

வெட்கம் கெட்ட முறையில் இன்று கொழும்பு நிகழ்ச்சியைக் கண்டிப்பவர்கள், மனித உரிமைகள் பற்றி அழுபவர்களினால் தான், இவை கடந்தகாலத்தில் நடத்தப்பட்டது அல்லது இவர்களின் துணையால், நடத்தப்பட்டவை. இன்றும் ஒரு பக்க சார்பாகத்தான், மற்றொன்றை ஆதரித்தபடியே தான் இதைக் கண்டிக்கின்றனர். உண்மையில் தமிழ் மக்களின் உரிமையை மறுக்கின்றவர்கள் இவர்கள். அது தமிழர் தரப்பாக இருந்தாலும் சரி, சிங்களவர் தரப்பாக இருந்தாலும் சரி, இந்த உண்மையே அனைத்துக்குமான அடிப்படையாகும்.

இவை அனைத்தும் தத்தம் இனத்தைக் காப்பாற்றவே என்று கூறியபடி நடத்துகின்றனர். சக மனிதனை இழிவாடுகின்ற, அவனை துன்பப்படுத்து கின்ற இவர்கள், உண்மையில் தனது சொந்த இன மக்களைக் கூட நேசிப்பது கிடையாது. அன்றாடம் தமது வாழ்வுக்காக போராடும் அப்பாவி மக்களை, நரைவேட்டையாடியவர்கள் இவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com



இவர்களின் நேர்மை, ஒழுக்கம், அவர்களின் இலட்சியம் அனைத்தும் பொய்யும் புரட்டும் நிறைந்தவையாகும்.

சிங்கள பேரினவாதிகளுக்கு தலைமை தாங்கும் பாசிட்டுகள், கொழும்பில் இருந்து தமிழரை அகற்றல் என்ற இனச்சுத்திகரிப்பையும் முன்வைத்தனர். அதன் பின்னர் அதற்கு எதிரான எதிர்வினைகள் கூட ஒரு தலைப்பட்சமானவைதான். எத்தனை கண்டனங்கள். எத்தனை அறிக்கைகள். எத்தனை போராட்டங்கள்.

உண்மையில் இப்படி எதிர்வினையாற்றி கண்டித்தவர்களில் பலர், கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதிகள். மக்களின் முதுகில் குத்தியே பிழைப்பவர்கள். அரசியல் நேர்மை, அரசியல் ஒழுக்கம் எதுவுமற்றவர்கள். மக்களுக்காக செயலாற்றுபவர்களல்ல. நாயில் வாழும் உண்ணிகள். அன்று முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட நிகழ்வை, இதில் எத்தனை பேர் கண்டித்தனர். இன்று வரை அதைக் கண்டிக்கத் திராணியற்றவர்கள் தான் இவர்கள். இன்றுவரை அந்த மக்கள் வாழ்வை இட்டு ஒரு துளி அக்கறை கூட கிடையாது. இப்படிப்பட்ட அரசியல் பொறுக்கிகள்தான், கொழும்பில் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டதைக் கண்டிக்கின்றனர். எங்கு இருந்து இரத்தம் குடிக்க வசதியோ, அதற்கேற்பவாறான ஒட்டுண்ணிகள்தான் இந்த பாசிச ஜென்மங்கள்.

கொழும்பில் இருந்து தமிழ் இன சுத்திகரிப்பை நடத்திய பாசிட்டுகள், 4 மணி நேரம் தான் அவகாசம் வழங்கியதாக சில உண்ணிகள் இரத்தம் வடிய புலம்புகின்றன. அன்று புலிகள் 24 மணி நேரம் வழங்கித்தான் முஸ்லிம் மக்களை வெளியேற்றிய மனிதாபிமானம் பற்றி பேச முனைகின்றனர்.

இப்படி ஒப்பீட்டு பாசிசம் பற்றி, சில உண்ணிகள் நியாயவாதம் பேச முனைகின்றனர். ஐயோ பாவம், அன்று புலிகள் 24 மணி நேரம் வழங்கியது ஏன்? எதற்கு? அந்த மக்களின் சொத்தைக் கொள்ளை அடிக்கத்தான். அவர்களின் முழுச்சொத்தையும் கண்டுபிடித்து திருடவே அவ்வளவு நேரம் எடுத்தது. ஆண் பெண் குழந்தைகள் என வேறுபாடின்றி, ஒவ்வொருவராக நிர்வாணமாக்கி அவர்களின் உழைப்பைத் திருட 24 மணி நேரம் புலிக்கு தேவைப்பட்டது. ஒன்றா! இரண்டா! ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களின் சொத்தையும் திருடி அல்லவா, அவர்களை அனுப்பியவர்கள் புலிகள். கொழும்பில் அந்த திருட்டு நடக்காததால் 4 மணி நேரம் போதுமானது. ஒப்பீட்டில் பார்த்தால், புலிகள் நாசி காலத்தில் யூதர்களின் சொத்தை திருடிய வடிவில், திருடிய பின்பே நாடு கடத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com



இப்படிப்பட்ட அயோக்கியர்கள், அயோக்கியர்கள் தான். மக்களின் வாழ்வை சிதைத்து அதைத் தின்பவர்கள். இதில் அவர் இவர் என்று, பக்கச்சார்பு என்ன வேண்டிக் கிடக்கின்றது. எல்லா மக்கள் விரோதிகளும் தமக்குள் தாம் புழுத்துக்கிடப்பதே, இன்றைய இலங்கை அரசியல். ஆயுதம் ஏந்தினால் என்ன! ஏந்தாவிட்டால் என்ன! இவர்கள் மக்களின் வாழ்வை திருடித் தின்னும் பக்காத் திருடர்கள்தான். இதற்கு ஏற்பவே இலட்சியம், அரசியல் என்பதெல்லாம்.

இன்று இந்த கொழும்பு இனச் சுத்திகரிப்புக்கு பொறுப்பான ஜனாதிபதியோ கடைந்தெடுத்த நல்ல நடிகர். இந்த பாசிச சர்வாதிகார குழுவுக்கு ஏற்ற ஜனாதிபதி. அவர் நாட்டுக்கு ஜனாதிபதி அல்ல. இந்த இரகசிய சதிக்குழுவுக்குத்தான் ஜனாதிபதி. பிரபாகரன் போலவே தான். பிரபாகரன் எப்படி தமிழ் மக்களுக்கு தலைவராக இல்லாது, தனக்குத் தானே தலைவராக இருக்கின்றார். தன்னைச் சுற்றிய ஒட்டுண்ணிக் கும்பலுக்குத் தலைவராக இருக்கின்றார்.

இப்படித்தான் இலங்கை ஜனாதிபதி மகிந்தா. நாட்டில் நடக்கின்ற விடையங்கள் தெரியாத, பச்சைக் குழந்தைதான் இலங்கை ஜனாதிபதி. அப்படி நடிக்கின்ற கடைந்தெடுத்த பாசிட். செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் கொல்லப்பட்ட போது, கொன்றவர்களின் பாதுகாப்புடன் சென்று அஞ்சலி செலுத்தியவர். மட்டக்களப்பில் பலாத்காரமாகவே ஐயரைக் கொண்டு மாலை போட வைத்து மகிழ்ந்த ஜனாதிபதி. இப்படி மாலை போட வைத்த ஐயரை, மறைமுக வினையாக புலிகளைக் கொண்டு கொன்றவர் தான் இலங்கை ஜனாதிபதி.

சமூக விரோத பொறுக்கிகள் ஜனாதிபதியாகும் போது, சிறு குழுவின் பாசிசம் சர்வாதிகாரமாகின்றது. கொழும்பு முதல் நாட்டின் எல்லைவரை சொந்த இரகசிய குழு கடத்தல்கள் கொலைகள் செய்வது பற்றி தெரியாது போல், நடிக்கின்றவர்கள் இவர்கள். பின் இது பற்றி கண்டனம், விசாரணைகள் என்பன எல்லாம் பொறுக்கித்தனத்தின் உச்சம். பாசிசத்தின் தலைமைப் பண்பு இதுதான். தனக்கு தெரியாது போல் நடிக்கின்ற, பாசிச கோமாளித்தனம்.

இப்படி நாட்டில் நடப்பது தெரியாது போல் பாசாங்கு செய்யும் ஜனாதிபதி, ஒரு நாட்டின் தலைவர், அன்றாட செய்தி பத்திரிகையைக் கூட படிக்காதவரா? அப்படி நினைத்துக் கொண்டு, சில உண்ணிகள் ஜனாதிபதியின் மனிதாபிமான மகிமை பற்றி புலம்புகின்றன. எதுவும்



படிப்பகம்

www.padippakam.com



நாட்டின் தலைவருக்கு தெரியாது போல் காட்டுகின்ற அரசியல் வித்தைகள். இதைக் காவிக் கொண்டு குலைக்கும் புலியெதிர்ப்பு நாய்கள். ஏதோ ஜனாதிபதியின் கருணையால் ஜனநாயகம் வந்துவிட்டதாக பாசாங்கு செய்கின்ற அரசியல் பிழைப்பு. நீ ஜனாதிபதியானால் அல்லது பிரபாகரனானால் என்ன செய்வாய் என்று மடக்கும், புலியெதிர்ப்புக்கு அரசியல் வழிகாட்டுவோரின் (ரீ.பீ.சீ முதல் டக்களஸ்சின் இதையவீணை வரை புலம்பும்) அரசியல் பிழைப்பு. மக்களில் நம்பிக்கை இழந்து, பிரபாகரன் ஜனாதிபதி என்று அதற்குள் குலைக்கும் அரசியல் நக்குண்ணித் தனம்.

மறுபக்கத்தில் ஜனாதிபதிக்கு எதுவும் தெரியாது என்று நம்பிக் கொண்டு, அனைவரும் அறிந்த பிரச்சனைக்கு மகஜர்கள், தெளிவுபடுத்தல்கள். எல்லாம் தெரிந்ததாக கூறும் கடவுளிடம் முறையிடுவது போல், அதாவது குருட்டு கடவுளிடம் முறையிடுவது போல்தான் இதுவும். ஜனாதிபதிக்கு கண்ணைத் திறந்து காட்டும் அபிசேகங்கள். பாசிசத்தின் எடுபிடிகள்தான், இப்படி அங்குமிங்குமாக அரசியல் சாக்கடையில் நெளிகின்றனர். இதுவே இன்றைய இலங்கையில் அரசியல் எதார்த்தம்.

***10.06.2007***



படிப்பகம்

www.padippakam.com



# சிங்கள முதலாளித்துவ பேரினவாதக் கட்சி தான், ஜே.வி.பி

ஜே.வி.பி தம்மை பேரினவாதக் கட்சி அல்ல என்கின்றனர். சொல்வதற்கு வெளியில், அதை நடைமுறையில் மக்கள் தாமாகவே உணரும் வண்ணம் நிறுவ முடிவதில்லை. அதேநேரம் இலங்கை வாழ் அனைத்து தொழிலாளர் வர்க்கத்தினரதும், வர்க்க விடுதலைக்காக போராடுவதாக கூறிக்கொள்ள முனைகின்றனர்.

இதன் மூலம் ஜே.வி.பி இரண்டு செய்தியை சொல்ல முனைகின்றது.

1. ஜே.வி.பி தாம் ஒரு இனவாதக் கட்சியல்ல என்கின்றனர்.
2. இலங்கை பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கான கட்சி என்கின்றனர்.

இப்படிக் கூறிக்கொண்டு, இந்த இரண்டுக்கும் எதிரான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டதே ஜே.வி.பி. ஜே.வி.பி ஒரு முதலாளித்துவ கட்சி மட்டுமின்றி, ஒரு இனவாதக் கட்சியும் கூட. சந்தர்ப்பவாத, பிழைப்புவாத நிலைப்பாட்டைக் கொண்ட இக் கட்சி, நேரத்துக்கு நேரம் சோரம் போபவர்கள். சிங்கள மக்களை மட்டுமல்ல, தமிழ் மக்களையும் சதா ஏமாற்றி பிழைக்க முனைகின்றனர். இவர்களுக்கு புலியொழிப்பை முன்வைக்கும் புலியெதிர்ப்புக் கும்பல், புலம்பெயர் நாடுகளில் ஆலவட்டம் பிடிக்கின்றனர்.

ஜே.வி.பி தமிழர் மத்தியில் ஒருவிதமாகவும், சிங்களவர் மத்தியில் வேறு விதமாகவும், இனப்பிரச்சனை பற்றி கருத்துரைக்கின்றனர். இதனால் தேசிய இனப்பிரச்சனை தொடர்பான எந்த ஆவணங்களையும், தமிழில் வெளிப்படையாக முன்வைப்பதில்லை. ஜே.வி.பி தாம் இனவாதிகள் அல்ல என்று கூறும் காரணமே, நகைப்புக்குரியது.



படிப்பகம்

www.padippakam.com



அவர்கள் தாம் இனவன்முறையில் ஈடுபடவில்லை என்பதால், தாம் இனவாதிகள் அல்ல என்கின்றனர். இப்படிக் கூறி அரசியல் ரீதியாக மாயாஜால வித்தை காட்ட முனைகின்றனர்.

இனவாத நடவடிக்கையில் பெரும்பான்மை சிங்கள மக்களும் தான் ஈடுபடவில்லை. ஆனால் சிங்கள பேரினவாதக் கட்சிக்கு பின்னால் அவர்கள் நின்றதன் மூலம், பேரினவாதத்துக்கு உதவினர். அவர்களோ மக்கள். ஆனால் நீங்கள் ஒரு கட்சி. அதுவும் ஒரு பாட்டாளி வர்க்க கட்சியென கூறிக்கொள்பவர்கள். இனவாதத்தில் ஈடுபடவில்லை என்ற வாதம் சரியா பிழையா என்பதற்கு முதல், இந்த இனவாதத்தை எதிர்த்து என்ன செய்தீர்கள். அதைச் சொல்லுங்கள். மானம் கெட்ட வழியில், மக்களை ஏய்த்துப் பிழைக்கும் இவர்களுக்கு அரசியல் ஒரு கேடு.

சரி போலிச் சுதந்திரத்துக்கு முன்னும் பின்னும், இலங்கை முதலாளித்துவ ஆட்சியமைப்பு எப்படி இருந்தது. சிங்கள பேரினவாதம் மூலம் தானே, முதலாளித்துவ ஆட்சியமைத்து வந்தனர். இந்த பேரினவாத அரசியலை எதிர்த்து போராடாத அனைவரும், பேரினவாதத்துக்கு துணை போனவர்கள் தான். இந்த பேரினவாதம் தமிழ் மக்களுக்கு எதிரானதாக இருந்தது. சிங்கள அரசின் பேரினவாத நடத்தையால், தமிழ் மக்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாகினர். இதனால் சிங்கள பேரினவாத அரசுக்கு எதிராக தமிழ் மக்கள் இருந்தனர். மக்கள் விரோத அரசுக்கு எதிரான மக்களை, அணிதிரட்டாத பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பது பொய்யானதும் புரட்டுத்தன்மை கொண்டதுமாகும். இந்த அரசியல் போராட்டத்தை நட்பு சக்தியாக கொள்ளாதவர்கள், வரலாற்றில் இனவாதிகளையே தமது நட்பு சக்தியாக கொண்டனர். இது தான் கடந்த எமது இனவாத வரலாறு. ஜே.வி.பி என்ன விதிவிலக்கா.

சிங்கள பேரினவாத அரசின் அனைத்து செயலுக்கும் உடந்தையாக, செயற்பட்டவர்கள் தான் ஜே.வி.பி. பேரினவாதம் முன்வைத்த பிரதான இனவாத அரசியலை எதிர்த்து, ஜே.வி.பி கிளர்ச்சி எதையும் செய்தது கிடையாது. பேரினவாதிகளின் வழியில் இனவாதத்தை எதிர்த்து மக்களை அணிதிரட்டாது கள்ள மௌனம் சாதித்தபடி, அரசுக்கு எதிராக கிளர்ச்சி என்ற பெயரில் இளைஞர் கும்பல் சதி செய்தனர். இந்த நிலையில், தாம் தமிழ் மக்களுக்கு எதிராக செயல்படவில்லை என்கின்றனர். இப்படி அப்பட்டமான அரசியல் பொய்யை உமிழுகின்றனர். இப்படி தம்மை தூய்மையானவராக புனைந்து கூறுவது, கடைந்தெடுத்த அரசியல் போக்கிரித்தனமாகும்.



படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் இனமுரண்பாட்டை கடந்த 60 வருடமாக முன்னுக்கு கொண்டு வந்த பேரினவாதம், அதை யுத்தம் வரை இன்று இட்டுச்சென்றுள்ளனர். இதை தடுத்து நிறுத்தத் தவறிய முழுப்பொறுப்பும், தமிழ் சிங்கள பாட்டாளி வர்க்கத்தைச் சார்ந்தது. இதை மறுப்பது, பாட்டாளி வர்க்க நிலைப்பாடல்ல. இதை தமிழ் மற்றும் சிங்கள பாட்டாளி வர்க்கம் தடுத்து நிறுத்தியதா? இல்லை. எவர் இதற்கு உரிமையுடன் பதில் கூறமுடியும். ஜே.வி.பி யினால் முடியுமா எனின், முடியாது.

இந்த நிலையில் தம்மை பாட்டாளி வர்க்க கட்சிகளாக கூறிக்கொண்ட வர்கள், இனவாதத்தை பாதுகாத்தனர். இதை எதிர்த்து போராடாததன் விளைவு, இரண்டு இனங்களும் மோதிக்கொள்ளும் பொதுவான இனவாத அரசியல் நிலைக்கு இட்டுச்சென்றது. இந்த நிலைமை உருவாக தாமும் காரணம் என்பதை, அதற்கான பொறுப்பைக் கூட ஜே.வி.பி ஏற்பது கிடையாது. தமிழ் பாட்டாளி வர்க்கம் இந்த போக்கில் சிதைந்து சின்னாபின்னமாகிய நிலையிலும் கூட அது போராடியது. பலர், தமிழ் இனவாத குறுந்தேசியவாதத்தை எதிர்த்து தமது உயிரையே இழந்தனர். உண்மையில் இனவாதத்துக்கு எதிரான குரல்கள், துணிச்சலுடன் தமிழ் பாட்டாளி களிடையே உதிரியாகத் தன்னும் தெளிவாக முன்வைக்கப்பட்டது, முன்வைக்கப்படுகின்றது. இந்த நேர்மையான போராட்டம், இன்றுவரை சிங்கள பாட்டாளி வர்க்கத்தினிடையே துளியளவு கூட கிடையாது. சிங்கள் மக்கள் மத்தியில், சிங்கள பாட்டாளி வர்க்கம் என்று கூறிக்கொண்ட யாரும், இந்த இனவாதத்தை எதிர்த்து ஒரு பாட்டாளி வர்க்க போராட்டத்தை வைப்பது கிடையாது. மாறாக சிங்கள இனவாதத்தின் வாலில் தொங்கிக்கொண்டு, இனவாதிகளாக நாலுகால் பாய்ச்சலில் அதை முந்தமுனைகின்றனர்.

இலங்கையில் பேரினவாத நடவடிக்கையில் சிங்கள அரசுகள் ஈடுபட்டன என்பதை ஏற்றுக்கொள்வதையே இவர்கள் மறுக்கின்றனர். ஜே.வி.பியோ சிங்கள இனவாத கட்சியான சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அரசு அமைப்பதும், ஆதரவு கொடுப்பதுமான அரசியல் விபச்சாரத்தைச் செய்கின்றனர். அதை நியாயப்படுத்த யூ.என்.பியை முதலாளித்துவ கட்சி என்கின்றனர். இரண்டு கட்சியும் ஏகாதிபத்திய நலனை பூர்த்திசெய்யும் முதலாளித்துவ கட்சிகள்தான். இதை எதிர்த்து பாட்டாளி வர்க்கத்துக்காக போராடாது, ஒன்றை மிதவாதிகளாக காட்டி செய்யும் அரசியல், உள்ளடக்கத்தில் பேரினவாதமாகும். இந்த கட்சிகளின் அரசியல் என்பது, பேரினவாதம் ஊடாகவே அரங்கேறுகின்றது. இதை மறுத்தபடி தான், ஜே.வி.பி பேரினவாதத்தின் தூண்களாக செயல்படுகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



பேரினவாத அரசு என்பது, ஜே.வி.பி அரசுடன் இணைந்ததனால் தூய்மையாகி நின்றுவிடவில்லை. மாறாக பேரினவாதம் தொடருகின்றது. அதை புலிப் பாசிசத்தின் பின்னால், மறைக்க விரும்புகின்றனர். இப்படி தொடருகின்ற இனவாதத்தை, எதிர்த்துப் போராடாத அனைவரும் இனவாதிகள்தான். தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாதிகளின் செயல்களை எதிர்த்து போராட முனையாத ஒரு கட்சி, ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சியா? யாரெல்லாம் இனவாத அரசில் சேர்ந்தும், அதை ஆதரித்தும், கள்ள மௌனம் சாதித்து செயல்படுகின்றனரோ, அவர்கள் அனைவரும் இனவாதிகள் தான். ஜே.வி.பி இதுவாகவே இருப்பது ஊர் உலகம் அறிந்தது. பேரினவாதத்துக்கு துணை போகும் ஜே.வி.பி, பேரினவாத நடவடிக்கையை எதிர்த்தது கிடையாது. மாறாக அதற்கு எண்ணை வார்த்து இனவாதத்தை தூண்டினர், தூண்டுகின்றது. பின் இவர்கள் கூறுகின்றனர், தமிழ் மக்களுக்கு எதிராக தாம் எதுவும் செய்யவில்லை என்கின்றனர். இப்படி அரசியல் வேடிக்கை காட்டுகின்றனர்.

தமிழ் மக்களுக்கு எதிராக இயங்கிய சிங்கள பேரினவாத அரசுக்கு எதிராக, அதை எதிர்த்து தமிழ் மக்களுடன் சேர்ந்து எப்படி போராடினீர்கள். அதைச் சொல்லுங்கள். ஏன் வம்புப் பேச்சு. பேரினவாத நடிவடிக்கையை எதிர்த்து போராடாத இவர்கள், அதில் குளிர் காய்ந்தவர்கள். தமிழ் மக்களுக்கு எதிரான செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பேரினவாத போக்கில், அரசியல் செய்கின்ற தீவிர சிங்கள இனவாதிகளாக ஜே.வி.பி இன்று செயல்படுகின்றனர்.

**ஜே.வி.பி தமிழ் மக்களுக்கு எதிராக செயல்படவில்லையா?**

ஜே.வி.பியின் தோற்றமே இனவாதம் தான். சண்முகதாசனுக்கு எதிராக கட்சியில் இருந்து சதி செய்தபடி ஓடிய ஜே.வி.பியின் பிரசாரம், தமிழ் விரோத உணர்வை விதைத்தது. அதில்தான் ஜே.வி.பி பரிணமித்தது. ஜே.வி.பியின் முக்கிய கொள்கை வகுப்புகளில் ஒன்று, மலையக தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே இருந்தது. இந்திய வம்சாவழிகளாக இருந்தாலும், தமிழர்களாக இருந்தாலும், ஜே.வி.பி அவர்களை சிங்கள மக்கள் முன் எதிரியாக நிறுத்தியது. தமிழர்களின் விஸ்தரிப்புவாதமாக அதைக் காட்டியது.

ஜே.வி.பியின் இனவாத அரசியல் தளம், மலையக மக்கள் எதிரான சிங்கள இனவாத கட்சி அரசியல் நடிவடிக்கையுடன் பின்னிப் பிணைந்து சென்றது. சிங்கள இனவாதக் கட்சிகள் எதனடிப்படையில் செயல்பட்டனரோ, அதனடிப்படையில்தான் ஜே.வி.யும் செயல்பட்டது. சிங்கள இனவாதிகள் மலையக மக்களை ஒடுக்கி சிதைத்த போது,



படிப்பகம்

www.padippakam.com



அதை ஜே.வி.பி எதிர்க்கவில்லை. மாறாக தனது பங்குக்கு அதை ஆதரித்து, எண்ணை ஊற்றி வளர்த்தவர்கள் யார் என்றால், ஜே.வி.பி தான்.

அவர்களை உலக தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு பகுதியாக கூட, அங்கீகரிக்க மறுத்த பேரினவாதத்தையே ஜே.வி.பி கொண்டு இருந்தது. இதில் தம்மை பாட்டாளி வர்க்கம் என்கின்றனர். இவர்கள் பாட்டாளி வர்க்க கட்சியா? (இதை விரிவாக அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்) தூ, பிழைப்புவாதத்தை அரசியலாகக் கொண்ட ஒரு இனவாதக் கட்சி தான் ஜே.வி.பி. முழுமையாகவே, சந்தர்ப்பவாதத்தின் ஏகப்பிரதிகள். இலங்கை தொழிலாளர் வர்க்கமான மலையக மக்களையே, இனவாத உள்ளடக்கத்தில் எதிர்த்தவர்கள் இவர்கள். தமிழ் மக்களின் விரோதிகளாக, இனவாதிகளாக செயல்பட்டவர்கள் இவர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களும் மொழிகளும் உள்ள ஒரு நாட்டில், அவர்கள் இணங்கி வாழும் வகையில் அதன் தனித்துவத்தை அங்கீகரிக்க மறுப்பவர்கள் தான் ஜே.வி.பி. இதனால் இனங்கள் மற்றும் மொழிகளுக்கான தீர்வு எதையும் அரசியல் ரீதியாக வைத்து, ஒரு அரசியல் கிளர்ச்சி செய்ய முடியாதவர்கள் தான் இந்த இனவாத ஜே.வி.பி. வேறு அடையாளம் இந்த இனவாதிகளுக்கு வரலாற்றில் கிடையாது.

***20.09.2007***



படிப்பகம்

www.padippakam.com



# ஜே.வி.பி முதலாளித்துவக் கட்சியே

கடைந்தெடுத்த பிற்போக்குவாதக் கட்சி தான் ஜே.வி.பி. தொழிலாளர் வர்க்கத்தின் பெயரில் இயங்குகின்ற, சுரண்டும் வர்க்க நலனுக்கான உழைக்கின்ற கட்சியே ஜே.வி.பி. இதை நாம் இரண்டு பிரதான கூறுகளிலும் இனங்காணமுடியும்.

1. இலங்கை தொழிலாளார் வர்க்கத்தின் கடமைகள் என்ன என்பதில், ஜே.வி.பி நிலைப்பாடுகள் சார்ந்து காணமுடியும்.
2. சமூக ஒடுக்குமுறைகள் மீதான ஜே.வி.பி யின் அரசியல் செயல்தளம் மீதும் இனம் காணமுடியும்.

## இலங்கை தொழிலாளி வர்க்கத்தின் கடமைகள் என்ன?

தனது சொந்த பாட்டாளி வர்க்க ஆட்சியை நிறுவுவதற்காக, ஆளும் வர்க்கத்தை தூக்கியெறிவது தான், அதன் அரசியல் கடமையாகும். அந்த வகையில் ஆளும் வர்க்கத்தை எதிர்த்து கிளர்ச்சிகரமாக புரட்சி செய்யவேண்டும். இதைவிடுத்து, திடட்மிட்ட அரசியல் சதிகளை செய்வதல்ல. மக்கள் தான் தமது புரட்சியை செய்யவேண்டும். மக்களை அதனடிப்படையில் அணிதிரட்ட வேண்டும். இதையா ஜே.வி.பி செய்கின்றது?

ஜே.வி.பி என்ன செய்கின்றது. தூக்கியெறிய வேண்டிய முதலாளித்துவ அரசுடன் அரசில் பங்கேற்கின்றது. சொந்த முரண்பாட்டுடன் வெளியில் இருந்து அரசை ஆதரிக்கின்றனர். அரசின் பெரும்பாலான பல்வேறு நடவடிக்கைக்கு துணை போகின்றது. அதேநேரம் ஒரு மாற்று எதிர்கட்சியாக முரண்படுகின்றனர். பாட்டாளி வர்க்கம் தூக்கியெறிய வேண்டிய வர்க்கத்துடன், கூடி அரசியல் விபச்சாரம் செய்கின்றனர். பாட்டாளி வர்க்க கிளர்ச்சிக்கான, ஒரு அரசியல் போராட்டத்தை நடத்துவதில்லை. மக்களை கீழ் இருந்து அவர்களின் அரசியல் கோரிக்கையின் அடிப்படையில் அணி திரட்டுவதில்லை. மாறாக மேல் இருந்து அரசியல் சதி செய்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



கட்சித்திட்டம் முதல் யுத்த தந்திரம் வரை, பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டது. இனவாதத்தின் பின் அமைப்பாக அணிதிரளும் இந்தக் கும்பல், புத்த மதவாதத்தின் பின்னால் ஓட முனைகின்றனர். ஆட்சியை மேல் இருந்து கைப்பற்ற, அனைத்து மக்கள் விரோத சக்திகளுடனும் ஐக்கிய முன்னணி கட்டுகின்றனர்.

இந்த லாவணி அரசியல் நடத்தும் ஜே.வி.பி, பாட்டாளி வர்க்கத்தின் எதிரியை சார்ந்த அரசை சதிசெய்து கைப்பற்ற முனைகின்றனர். மறுபக்கத்தில் இலங்கை உலகமயமாக்கலில் வேகம் பெற்று செல்லுகின்றது. அதற்கு துணையாகவே இப்படியாக ஜே.வி.பி ஆதரவு வழங்குகின்றனர். இதனால் பாதிக்கப்படும் மக்கள், அன்றாடம் வாழ்வு இழந்து போகின்றனர். ஜே.வி.பி ஆதரிக்கும் அரசு சப்பித் துப்பும் மக்கள், அநாதரவாகி நிற்கின்றனர். ஜே.வி.பி இதற்காக அந்த மக்களை அணிதிரட்டி போராடுவது கிடையாது.

தாம் அரசை கைப்பற்ற, ஐக்கிய முன்னணி அமைத்து நெகிழ்ச்சியாக விடையங்களை கையாளுகின்றனராம். யாருக்காக? எந்த மக்களுக்காக அரசை கைப்பற்ற போகின்றனர்? அந்த மக்களின் அரசியல் கோரிக்கைகள் என்ன? எதுவுமில்லை, சதியை சொந்த நலனாக வைக்கின்ற ஒரு சதிகாரக் கும்பல் தான் ஜே.வி.பி.

இந்த ஜே.வி.பி ஆதரவுடன் ஆட்சி அமைத்த காலத்தில், நாட்டின் நிலைமை என்ன? 1978 ஆம் ஆண்டில் இலங்கை வாழ் மக்களின் கடன் நபருக்கு 2181 ரூபாவாக மட்டும் இருந்தது. இது 2002 இல் 77500 ரூபாவாக இருந்தது. இது 2004 ஆம் ஆண்டில் 96,813 ரூபாவாகவும், 2007 இல் இறுதியில் 153,280 ரூபாவாக அதிகரிக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. ஒருபுறம் திறந்த பொருளாதார கொள்கை அதாவது உலகமய மாதல், மறுபுறம் யுத்த பொருளாதார கொள்கை என இரண்டையும் ஜே.வி.பி என்ற முதலாளித்துவ இனவாதிகள் ஆதரிக்கின்றனர்.

உண்மையில் இந்த கடனோ பிரமிப்பை ஊட்டக்கூடியது. இலங்கை செலுத்த வேண்டிய மொத்த வெளிநாட்டுக் கடன்

| | |
|---|---|
| 1999 | 65,451.4 கோடி ரூபா |
| 2000 | 72,207.9 கோடி ரூபா |
| 2001 | 79,591.8 கோடி ரூபா |
| 2002 | 84,061.9 கோடி ரூபா |



படிப்பகம்

www.padippakam.com



இவை ஜே.வி.பி அரசியல் காலத்திலும் தொடர்ந்து நடக்கின்றது. 1988 இல் இலங்கையின் வெளிநாட்டு கடன் 11430 கோடியாகவே இருந்தது. வட்டி கடன் மீளமைப்பு ஏற்றுமதி வருமானத்தில் 28 சதவீதமாக மாறியது. 2001 இல் வட்டிக்காக மட்டும், இலங்கையில் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாவுக்கும் 25 சதத்தையும் கட்டத் தொடங்கினர். இதுவே 2002 இல் 35 சதத்தையும் கட்டும் நிலைக்கு இலங்கைத் தேசியம் மறுகாலனியாகியது. உள்நாட்டு கடன் மற்றும் மீள் அளிக்கப்பட வேண்டிய வட்டியும் 27500 கோடியாக அதிகரித்தது. இந்தளவு நடக்கின்ற போதும், ஜே.வி.பி என்ன செய்கின்றது. வர்க்கப் போராட்டமா செய்கின்றது. இல்லை. அரசுடன் கூடிக்குலாவி விபச்சாரம் செய்கின்றனர். அரசியல் சதி செய்து ஆட்சியைக் கைப்பற்ற முனைகின்றனர். கடனை ஒருவகையில் பெருக்கும் யுத்தத்தை ஊக்குவிக்கின்றனர். யுத்த செய்ய பணம் வேண்டும். அதை ஜே.வி.பி உழைத்தா கொடுக்கின்றது. நாட்டை விற்று யுத்தம் செய்வதை ஆதரிக்கின்றனர். மக்கள் பட்டினி கிடந்து கடனையும், வட்டியையும் கட்ட வேண்டும் என்பது ஜே.வி.பி கொள்கை. ஜே.வி.பியின் இந்தக் கொள்கையால் பாட்டாளி வர்க்கம் தான் துன்பப்படுகின்றனர்.

இந்த வழியில் தான் பாட்டாளி வர்க்க புரட்சியை ஜே.வி.பி நடத்துகின்றது. உலகமயமாதல் இலங்கையை சூறையாடி வருகின்ற நிலையில், ஜே.வி.பி கண்டும் காணாத ஆதரவுடன் அதை அனுமதிக்கின்றனர். பாட்டாளி வர்க்க கட்சியாக இருந்தால் தானே, அதற்கு எதிராக அது போராடும்.

புலியொழிப்பு பெயரில் தமிழரை ஒடுக்கும் பேரினவாத யுத்தத்தை ஆதரிக்கும் ஜே.வி.பி, அதற்காக நாட்டை விற்றாலும் பரவாயில்லை என்ற வக்கிரமான நிலை. இன்று இதன் மீது மகிந்த குடும்ப சர்வாதிகாரம் நிறுவப்படுகின்றது. அது புலியொழிப்பு என்ற போர்வையில் நடக்கின்றது. அதையும் ஆதரிக்கின்றது. ஜே.வி.பி. கடைந்தெடுத்த அரசியல் போக்கிரிகள் என்பதைத் தவிர, வேறு எதுவும் அவர்களிடம் கிடையாது.

அன்னியனோ உல்லாசமாக நாட்டினுள் புகுந்து சூறையாடுகின்றான். 2001 இல் 8.2 கோடி டொலராக (அண்ணளவாக 820 கோடி ரூபா) இருந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள், 2002 23 கோடி டொலராக (2300 கோடி ரூபாவாக) அதிகரித்தது. இது 2003 இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 5000 கோடி ரூபாவாக இருந்தது. நாட்டில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2003 இன் கடைசிப் பகுதியில் 290 கோடி அமெரிக்க டொலராக (அண்ணளவாக 29000 கோடி ரூபாவாக) அதிகரித்தது. 2004 இறுதியில் 300 கோடி அமெரிக்க டொலராக



படிப்பகம்

www.padippakam.com



(அண்ணளவாக 30000 கோடி ரூபாவாக) உயரும் என்று பெருமையுடன் அரசு அறிவித்து இருந்தது இந்தளவுக்கு நாடு சூறையாடப்பட்டு கொண்டு இருக்கின்றது. ஜே.வி.பி புலியை ஒழிக்கும் அரசுக்கு, காவடியாகி நிற்பதைத்தான் பாட்டாளி வர்க்க புரட்சி என்கின்றனர்.

இலங்கை ஏகாதிபத்தியத்தாலும், அதற்கு துணையான அரசாலும் சூறையாடப்படுகின்றது. ஜே.வி.பி பாட்டாளி வர்க்கத்தின் பெயரில் கம்பளம் விரிக்கின்றது. 1970ஆம் ஆண்டு இலங்கையில் இருந்த 40 சதவீதமான காட்டுப்பகுதி இன்று 22 சதவீதமாக குறைந்து போனது. நாட்டில் மக்கள் ஒரு நேர உணவுக்கு உழைத்து வாழ முடியாது போய்விட்டனர். இதனால் 2001 இல் 12 லட்சம் பேர் அரபு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கு தொழிலுக்குச் சென்றனர். 1998 முதல் 2002 வரையான காலத்தில் வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் அரபு நாட்டு தொழில் செய்யும் பெண்கள் 47800 கோடி ரூபாவை, மற்றவன் குண்டி கழுவி உழைத்தனர். இதுவே இலங்கை பிரதான முதல் வருவாயில் ஒன்றாகிவிட்டது. 1998 இல் இதன் மூலம் 7900 கோடி ரூபாவை திரட்டிய அரசு, 2002 இல் 12000 கோடியை திரட்டியது. இன்று 20 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் மற்றவனுக்கு குண்டி கழுவி வாழ்கின்ற வாழ்க்கை.

40 வருடமாக பாட்டாளி வர்க்க புரட்சி நடத்துவதாக கூறும் ஜே.வி.பி காலத்தில், நாட்டை மூலதனம் சூறையாடுவதை இப்படி பட்டியல் இடமுடியும். இதை மாற்றும் புரட்சிகர நம்பிக்கையைக் கூட ஜே.வி.பி உருவாக்கியது கிடையாது. எந்த புரட்சிகர அரசியல் முன்முயற்சியைத் தன்னும் உருவாக்க முனையவில்லை.

மாறாக சிவப்புக் கொடியையும், தலைவர்களின் படத்தையும், புரட்சிகர வசனங்களையும் கொண்டு பம்மாத்துகின்ற பம்பல்களை கடைவிரிக் கின்றனர். இது பாட்டாளி வர்க்க புரட்சியாகிவிடாது. மாறாக இலங்கையில் ஜே.வி.பி மூலம், முதலாளித்துவ சூறையாடலுக்கு உதவும் நவீன கருவிகள் தான் இவை.

***24.09.2007***



படிப்பகம்

www.padippakam.com



# புண் இருந்தால் சீழ் இருக்கும்

அனுபவ ரீதியான வாழ்வில், அனைவரும் அறிந்த சாதாரண உண்மை. ஆனால் சிங்களப் பேரினவாதிகளும் சரி, புலிகளும் சரி இந்த உண்மையை மறுக்கின்றனர். தமிழ்மக்களின் அடிப்படை உரிமையை இருவரும் மறுக்கின்றனர். ஒருவர் இதை பயங்கரவாதம் என்கின்றார் என்றால், மற்றவர்கள் துரோகி என்கின்றனர். இப்படி புண்ணை வைத்துக்கொண்டு, சீழை நக்குவதே இவர்களின் விபச்சார அரசியலாகும்.

இன்றைய அரசியல் எதார்த்தம் இதுவே. சிங்கள பேரினவாதம் இருந்தால் அதற்கு விளைவு இருக்கும். அதைப் பயங்கரவாதம் என்று கூறவது அடிமுட்டாள்தனமாகும். மக்கள் நலனை முன்னிறுத்தாத இக்கூற்றுகள், தீவிரமான பயங்கரவாதியின் கூச்சலாகும். இந்தவகையில் பேரினவாதிகள், மனித உரிமையை மறுக்கும் பேரினவாதிகள்தான். தமிழருக்கு எதிரான திட்டமிட்ட சிங்கள பேரினவாத அரசியல் சூழ்ச்சிகள், இன்று சிறு குழுவின் இராணுவ சர்வாதிகார பாசிச நிலையை அடைந்துள்ளது. ஆக மொத்தத்தில் மொத்த தமிழ் மக்களையும் சிங்கள மக்களுக்கு எதிரானதாக நிறுத்த முனைகின்றது.

புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு என்ற உண்மை ஒருபுறம். மறுபக்கத்தில் இதையே கூறிக்கொண்டு, இதை வெறும் வார்த்தையாக்கிக் கொண்டு, மக்கள்தான் புலிகள் என்ற சிங்கள பேரினவாதத்தின் பாசிச நடைமுறைகள். சிங்கள பேரினவாத பாசிச இராணுவ சர்வாதிகார வழிகளில், மொத்த தமிழ் மக்களும் குதறப்படுகின்றனர். ஒட்டுமொத்தத்தில் தமிழ்மக்கள் சொல்லொணாத் துயரத்தையும், மனித அவலத்தையும் சந்திக்கின்றனர்.

புலிகள் வேறு, தமிழ் மக்கள் வேறு என்ற உண்மையை மறுக்கும் புலிகள். மறுபக்கத்தில் பேரினவாதமோ இல்லையில்லை, புலிகளும் தமிழ் மக்களும் ஒன்று என்கின்றனர். புலிக்கோ இது மிகவும்



படிப்பகம்

www.padippakam.com



மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகிவிடுகின்றது. பேரினவாதம் இதை உறுதிசெய்யக் கூடிய வகையில்தான், புலி நடவடிக்கைகள் இதற்குள்ளாகவே அமைகின்றது. புலியின் அரசியல் இருப்பு இதற்குள்ளாகவே அமைகின்றது. பாவம் தமிழ் மக்கள். சட்டிக்குள் மடிவதா அல்லது கீழே வீழ்ந்து நெருப்பில் மடிவதா என்று புரியாத பரிதாப நிலை.

எப்படி மடிவது என்பதில் கூட, தமிழ் மக்களுக்கு இன்று சுதந்திரம் கிடையாது. ஒருபுறம் புலிகள் பாசிசமும் கட்டாய பயிற்சியும். மறுபக்கம் சர்வாதிகார பாசிச இராணுவம், தமிழ் மக்களை கூட்டம் கூட்டமாக கொல்வதற்காக ஏற்ற இடத்துக்கு கட்டாயமாக அழைத்துச் செல்லுகின்றது. தமிழ் மக்களின் திரிசங்கடமான நிலை இது. தமிழ் மக்களுக்கு இலங்கையின் எப்பாகத்திலும், எந்த அரசியல் சுதந்திரம் முதல் வாழ்வதற்கான சுதந்திரமும் கூட கிடையாது. சரி இதில் இருந்து மீள்வதற்கான, மீட்சிக்குரிய வழி கிடையாது.

தமிழ் மக்களை கட்டிவைத்துள்ள புலிப் பாசிசம் என்பது, சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக கட்டமைக்கப்பட்டதல்ல. மாறாக தமிழ் மக்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்டதே. தமிழ் மக்களின் உரிமைகள், புலிகளை அரசியல் அனாதையாக்கும் என்று புலிகள் கூறுமளவுக்கு, அப்பாசிசம் காணப்படுகின்றது. மக்களின் உரிமைகளை புலிகளுக்கு எதிரானதாக கருதுகின்ற அளவுக்கு, புலிப் பாசிசம் முத்தி முதிர்ந்து காணப்படுகின்றது. இந்த நிலையில் தான், தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை பேரினவாதிகள் வழங்கமால் இருப்பதையே புலிகள் விரும்புகின்றனர். புலிகள் நடத்திய எந்த பேச்சு வார்த்தையிலும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை புலிகள் முன்னிறுத்துவதில்லை. பேரினவாதம் அதை தமிழ் மக்களுக்கு வழங்கினால் புலிகளும் வழங்கவேண்டும் என்பதால், மக்களின் அடிப்படை உரிமையை மறுப்பதும், அதை வழங்க மறுப்பதும் இவர்களது சொந்த அரசியல் பாசிச நிலையாகும்.

அதாவது புலிகள் தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமையை வழங்கினால், பேரினவாதிகள் அதை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய நிலை உருவாகும். அதேபோல் பேரினவாதம் தமிழ் மக்களுக்கு அடிப்படை மனித உரிமையை வழங்கினால், புலிகள் அதை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும். எனவே இருவரும் அதை மறுப்பதும் மட்டுமின்றி, பரஸ்பரம் கோருவதைக் கூட திட்டமிட்டு தவிர்க்கின்றனர்.

இந்த நிலையில் புலிகள் தமிழ்மக்களின் உரிமைகளையும்,



படிப்பகம்

www.padippakam.com



அவர்களின் அடிப்படை மனித சுதந்திரத்தைக் கூட அனுமதிப்பதில்லை. இந்த உண்மை, சிங்கள பேரினவாதத்தை மிதமாக்கிவிடுவதில்லை. புலியல்லாத தரப்பு பேரினவாதத்தை மிதமானதாக வித்தைகாட்டுவது என்பது, விபச்சாரத் தரகுகளுக்கே உரிய பொறுக்கித்தனமாகும். சிங்கள பேரினவாதம் ஒன்றும் புலியை விட மிதமானதல்ல.

புலியல்லாத தளத்தில் அப்படியொரு பிரமை, நம்பிக்கை விதைக்கப்படு கின்றது. புலிகள் தான் மிக மோசமான பாசிட்டுக்கள் என்றும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்க மறுக்கும் கொலை காரர்கள் என்றும் காட்டியபடி, பேரினவாத பாசிசத்தை தொடர்ச்சியாக பாதுகாக்கின்றனர். இதுவே புலியெதிர்ப்பு அரசியல் சாரமாகும். புலியை அழித்தல், இதற்கு ஏற்ப அனைத்து மக்கள் விரோதிகளையும் சார்ந்து நிற்றல் என்பதே இவர்களின் கொள்கையாகும்.

தமிழ் மக்களினது மட்டுமல்ல, சிங்கள மக்களினதும் முதலாவது எதிரி சிங்கள பேரினவாதம்தான். அதை நண்பனாக காட்டி, மயக்கத்தை உருவாக்கி அதன் பின் அணிவகுப்பதே, புலியெதிர்ப்பின் அரசியல்சாரம். இதற்கு வெளியில் யாரும் மாற்று அரசியல் ஒன்றை முன்வைப்பதில்லை. புலியை அழித்தால் ஜனநாயகம் வரும் என்று சதா ஒப்பாரி வைக்கின்றனர்.

புலிப் பாசிட்டுகளை அரசியல் ரீதியாக இன்று வைத்திருப்பது யார்?

1. பேரினவாதமும், அதை பாதுகாக்கும் பாசிச சிங்கள அரசும்
2. புலியெதிர்ப்பு கொண்டுள்ள புலி அரசியல்

இவ் இரண்டும் தான் புலியை வைத்திருக்கின்றது. அது அரசியல் ரீதியாக, இராணுவ ரீதியாக புலியை பாதுகாக்கின்றது. இந்த இரண்டு பிரிவினரதும் நிலைப்பாடும் புலியை பாதுகாக்குமே ஒழிய அதை அழிக்காது. இந்த உண்மை பலருக்கு வேப்பாங்காயாக இருக்கலாம். ஆனால் இதுவே எதார்த்தமும், உண்மையுமாகும்.

இந்த நிலையில் பேரினவாதம் பற்றி புலியல்லாத தரப்பு கொண்டுள்ள நிலைப்பாடு தான், புலியை பாதுகாக்கின்றது. நாய் வாலை நிமிர்த்தினாலும் நிமிர்த்தலாம், ஆனால் பேரினவாதத்தை நிமிர்த்த முடியாது. பேரினவாதம் பாசிசத்தின் மற்றொரு வடிவம். பேரினவாதத்தின் துணையில் தான், புலிகள் தமிழ்மக்களை அரசியல் விபச்சாரம் செய்கின்றனர். இதேபோல் புலிப் பாசிசத்தின் வடிவில், அதனுள் புகுந்து நிற்கும் பேரினவாதம், தனது பாசிசத் தலைவிரித்து



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் மக்களை தொடர்ச்சியாக வேட்டையாடுகின்றது.

தமிழ் மக்களின் உரிமை பற்றி காலாகாலமாக பேசுகின்ற சிங்களத் தலைமைகள், அதை வழங்க மறுப்பதில் காட்டுகின்ற மனப்பாங்கோ வக்கிரமானது. உண்மையில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமையை வழங்க மறுக்கின்றது. அரை நூற்றாண்டாக காலத்துக்கு காலம், அதை மறுப்பது என்பதும், ஏமாற்றுவதும் தொடருகின்றது.

இன்று அதை புலியைச் சொல்லி செய்கின்றனர். இதை பாதுகாக்கும் புலியெதிர்ப்பு நாய்கள் அதை பாதுகாத்து நின்று குலைகின்றது. சொந்தமாக மக்களை வழிநடத்த எந்த நாய்க்கும் வக்கு கிடையாது. இவர்கள் ஜனநாயகத்தை, அதுவும் புலியல்லாத பாசிட்டுகளின் தயவில் மீட்கப்போகின்றார்கள். நம்புங்கள். இது தான் இவர்கள் வைக்கும் மாற்று வழி.

புலிகளின் பாசிசக் கூறுகளை தனக்கு சாதகமாக கொண்டு, தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமையை மறுப்பது தான், இன்றைய பேரினவாத சதியாகும். சமகாலத்தில் பேச்சுவார்த்தை, ஒரு தலைப்பட்சமான அரசின் தீர்வு பற்றிய முன்மொழிவுகள், நிபுணர் குழுக்கள், தீர்வு பற்றிய திட்ட அறிக்கைகள், விவாதங்கள் என அனைத்தும், தமிழ்மக்களை மட்டுமல்ல ஊர் உலகத்தையும் ஏமாற்றுகின்ற சூழ்ச்சிகள்தான்.

தமிழ் மக்களை அரசியல் ரீதியாக காட்டிக்கொடுக்கும் புலித் தலைமையின் பாசிச இராணுவ வக்கிரங்களை பயன்படுத்திக் கொண்டு, புலியை தனிமைப்படுத்தி தமிழ் மக்களின் முதுகில் குத்தும் பேரினவாதம், எதையும் தமிழ் மக்களுக்கு கொடுக்கப்போவதில்லை.

உண்மையில் இன்று ஆட்சியில் அமர்ந்து இருக்கும் இராணுவ சர்வாதிகார சிறு குழு, பேரினவாதத்தின் ஏக பிரதிநிதிகள். புலிகள் என்றால் தமிழ்மக்கள் என்று கூறிக்கொண்டு, அவர்களை தமது பாசிச இராணுவம் மூலம் வேட்டையாடுகின்றனர்.

தமிழ் மக்களின் எதிரியை, அதன் பலத்தை எதிர் கொள்ளுவதற்கு தேவையான ஐக்கியம் மற்றும் ஒற்றுமையின் எதிரிகள் யார் என்றால்
1. புலிகள்
2. புலியெதிர்ப்புக் கும்பல்

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சனைகளில் இருந்து, அவர்களின் அடிப்படை அரசியல் உரிமைகளில்தான், ஐக்கியம் ஒற்றுமை



படிப்பகம்

www.padippakam.com



உருவாகமுடியும். இதை எதிர்த்து, அதை குழிதோண்டி புதைப்பதில் புலிகள் மட்டுமல்ல புலியெதிர்ப்பு அணியும்தான் காரணமாக உள்ளது. இப்படி தமிழ் மக்களுக்கு எதிராக செயல்படுகின்றனர். இந்த உண்மையை வரலாறு உறைக்கும் படி எம்முகத்தில் அறைந்து கூறுகின்றது. ஆனால் நாம் சுயமிழந்து, சுயமரியாதை இழந்து, அறிவிழந்து, ஏன் எதற்கு என்று கேள்விகளின்றி மறு கன்னத்தையும் காட்டுகிறோம். நாம் இந்த உண்மையை உணர்வோமா! சிந்திப்போமா! அல்லது தமிழ் மக்களின் அழிவுக்கு துணை நிற்போமா!

***10.06.2007***



படிப்பகம்

www.padippakam.com



# (கிழக்கு) மக்களின் பிரச்சனைகள் என்ன?

கிழக்குவாழ் மக்களின் பிரச்சனைகளை அடிப்படையாக கொண்ட விமர்சனம், காலத்தின் முக்கியத்துவம் கருதி முன்வைக்கப் படுகின்றது. புலிக்கு பதிலாக கருணா என்ற ஒரு பாசிட், பேரினவாதத்தின் கூலிப்படையாக வெளிப்பட்டது முதல் அந்த அரசியல் இழிநிலையை அம்பலப்படுத்துவதை காலம் கோருகின்றது. புலியெதிர்ப்பு மற்றும் புலிக்கு மாற்றாக கருணா என்ற மற்றொரு பாசிட்டை முற்போக்காக காட்டுகின்ற வரலாற்று ஓட்டத்தின் ஆரம்பத்திலேயே, இதை அரசியல் ரீதியாக முறியடிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. யாழ் மேலாதிக்கத்துக்கு நிகராக கிழக்கு பிரதேசவாதத்தை முன்வைத்து, அந்த மக்களின் முதுகில் சவாரி செய்வதை அனுமதிக்க முடியாது. போலியாகவும் புரட்டாகவும் அரசியலை திரித்துப் புரட்டி, மக்கள் அரசியல் செய்வதாக பீற்றுகின்ற இந்த பாசிட்டுக்களை இனம் காண்பது அவசியமானது. இந்த வகையில் கிழக்கு மக்களின் வாழ்வு சார்ந்த பிரச்சனைகள் என்ன என்ற ஆய்வுடன் கூடிய விமர்சனம், உள்ளடக்கத்தில் முழு இலங்கை வாழ் மக்களுக்கும் பொருந்தி வரும் அம்சம் அதிகமானது.

புலிகள் என்ற வலதுசாரிய குறுந்தேசிய அமைப்பு அதன் அரசியல் நீட்சியில் இயல்பாகவே பாசிச வடிவத்தை எடுத்துக் கொண்டது. இதன் நீட்சியில் ஒரு கொலைகார, ஒரு கொள்ளைக்கார மாபியா கும்பலாக சீரழிந்தது. ஒட்டு மொத்த மக்களையும் தனக்கு அடிமைப்படுத்தி, அவர்களின் வாழ்வை சீரழித்து சிதைத்து சின்னாபின்னமாக்கியுள்ளது. இந்த வரலாற்று ஓட்டத்தில், அதன் அனைத்து பாசிச மாபியா நடத்தைகளில் தீவிர பங்கு கொண்ட அதன் முக்கிய புள்ளியாக செயல்பட்ட கருணா, அதிகார முரண்பாடுகளால் முரண்பட்ட போது பிளவு நிகழ்கின்றது. உண்மையில் புலிகளின் ஜனநாயகமின்மை, கருணாவின் தனிப்பட்ட அதிகார முரண்பாட்டால் ஏற்பட்ட பிளவு தவிர்க்க முடியாத ஒன்றாகியது. புலிகள் அமைப்பில் இது போன்ற பல உதிர்வுகளும், விலகல்களும் தொடர்ச்சியாக நடந்து வந்துள்ளது. இதற்கு அப்பால்



படிப்பகம்

www.padippakam.com



துரோகியாகவும், இராணுவ மோதலில் வீர மரணங்களாகவும், திடீரென காணாமல் போன நிகழ்வுகள், பாசிச மாபியா கும்பலின் வளர்ச்சியுடன் ஒட்டிப் பிறந்ததாகவே காணப்படுகின்றது.

இந்த வகையில் உள் நிகழ்ந்த அதிகார மோதலில் தோற்ற கருணாவின் பிளவு, தவிர்க்க முடியாததுதான். உள்ளடக்கத்தில் அவரின் தனிப்பட்ட உரிமையும் கூட. பிளவு நிகழ்ந்த பின்பாக 14.3.2004, 20.03.2004 நாம் எழுதிய கட்டுரைகளில், சரியாகவும் தெளிவாகவும் இதை மதிப்பிட்டோம். (பார்க்க வடக்கு-கிழக்கு என்ற பிரதேசவாத பிளவு, ஏன் புலிக்குள் நடந்தது?

பாசிச அமைப்புக்குள்ளான கருணாவின் அதிகார நலன்கள், அதுவே தனிமனித பிளவாகிய போதும், அதற்குள் ஒரு ஜனநாயகக் கோரிக்கை இருந்தது. புலிகள் போன்ற பாசிச மாபியா இயக்க நடைமுறையில், உள்ளியக்க ஜனநாயக மறுப்புக்கு எதிரான உயிர்வாழ்வு சார்ந்த பிரச்சனை கூட ஜனநாயகக் கோரிக்கைதான். கருணா தனிநபர் அதிகார நலனை முன்வைத்து பிரிந்த அந்த அதிகார நலன் சார்ந்த அரசியல் உள்ளடக்கத்தை மறைத்து, அதை இயல்பாக காலகாலமாக நீடித்த யாழ் மேலாதிக்கத்துக்கு எதிரான பிளவாக தனது பிளவை சித்தரித்தார்.

இந்த வகையில் யாழ் மேலாதிக்கத்தை எதிர்த்து போராட வேண்டிய அரசியல் பணிக்கு இது உற்ற துணையாகவும், அதேநேரம் இதன்பால் ஆழமான அரசியல் தெளிவு ஏற்படும் போது கருணா போன்றவர்கள் கூட சரியான மக்கள் நிலையை எடுக்க முடியும் என்ற அரசியல் உண்மையை நாம் நிராகரித்து இருக்கவில்லை. இந்த வகையில் யாழ் மேலாதிக்கம் பற்றியும், மக்களின் நலனை முன்னிலைப்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றியும், நாம் விமர்சன ரீதியாக தொடர்ந்து இடித்துரைத்தே வந்தோம். ஆனால் கருணா மக்களுக்கு எதிராக அதே பாசிச வழியில், யாழ் மேலாதிக்கத்தை இனம் காணத் தவறி, வடக்கு மக்களை எதிரியாக சித்தரித்து, சொந்த மக்களையே ஒடுக்கத் தொடங்கினார். உள்ளடக்கத்தில் தனது அதிகாரத்தையும், அந்த அதிகார மேலாதிக்கத்தை பெறுவதற்காக யாழ் மேலாதிக்கத்தை முன்னிறுத்தி, பிரதேச பிளவை முன்தள்ளி, மக்களை எதிராக நிறுத்தி, ஒரு அதிகார வெறியன் என்பதை நிறுவியுள்ளார். புலிகளின் உள்ளான முரண்பாட்டில் எது அவரின் முரண்பாடோ, அதை இப்படி சாதித்துக் கொண்டார். அதே புலிப்பாசிச மாபியா வழியில், அந்த அரசியல் சாக்கடை மூலம் தன்னை நிறுவிக் கொண்டார். யாழ் மேலாதிக்கத்தை அரசியல் ரீதியாக இனம் காணத் தவறி, குறும் பிரதேச பிளவை முன்தள்ளிய கருணா, மக்களிடையே



படிப்பகம்

www.padippakam.com



பிளவை விதைத்ததன் மூலம் மற்றொரு பாசிச மாபியா புலியை உருவாக்கினார். இப்படி கிழக்கு மக்கள் புதிய பாசிச புலிக்கு அடிமையாகி, தம் வாழ்வை இழக்கின்றனர். இந்த புலி பேரினவாதத்தின் எடுபிடி குண்டர் படையாக, கிழக்கு மக்கள் மத்தியில் தனது சூறையாடலை நடத்துகின்றது. கிழக்கு மக்களின் வாழ்க்கைக்கு எதிராக இந்த பாசிச மாபியா கும்பல் செயல்படுகின்றது.

இதை அம்பலப்படுத்துவது அனைவரினதும் உடனடிக் கடமையாக உள்ளது. அதன் ஆரம்பத்திலேயே இது இனம் காணப்பட்டு, அரசியல் ரீதியாக அழிக்கப்பட வேண்டும். இந்த வகையில் யாழ் மேலாதிக்கத்தை அரசியல் ரீதியாக அடையாளம் காண்பதும், கிழக்கு மக்களின் நலனை முன்னிலைப்படுத்தி போராடுவதும் அவசியமானது. இது மட்டும் தான் முற்போக்காக இருக்கும். அதுவே மக்களின் நலனை முன்னிலைப்படுத்தும். ஆனால் கருணா கும்பல் இதற்கு எதிராகவே செயல்பட்டது. படிப்படியாக மற்றொரு புலி பாசிட்டுக்களாக மாபியாவாகவே தன்னை வெளிப்படுத்த தொடங்கியது. இந்த நிலையில் பேரினவாதத்துடன் அங்குமிங்குமாக ஒட்டி உறவாடியது வெளிப்படத் தொடங்கியது. இந்தியாவின் கைக் கூலியாக அடையாளப்படுத்திக் கொண்ட நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அதேநேரம் இலங்கை இந்திய அரசுகளின் கூலி அமைப்புக்களாக, அவர்களின் வளர்ப்பில் வாழ்ந்த மக்கள் விரோத கும்பல்களுடன் தம்மை இணைத்துக் கொண்டு செயல்படுவதை அறிவித்தனர். இருந்த போதும் கூட, அதை விமர்சிப்பதில் தெளிவாகவும், ஆனால் மக்கள் நலனை முன்னிலைப்படுத்தி சரியான வழிக்கு வரும் வகையில், மென்மையான அணுகுமுறையை கையாண்டோம். குறைந்த பட்சம், மக்களின் அடிப்படையான வாழ்வியல் நலனை அவர்கள் முன்னெடுக்க வேண்டும் என்ற எமது ஆவல் காரணமாக, அதற்கு இசைவான வகையில் விமர்சன முறையைக் கையாண்டோம்.

ஆனால் கருணா கும்பல் மற்றொரு புலியாக, பேரினவாதத்தின் கூலிக் கும்பலாகவே, இந்தியாவின் அரசியல் எடுபிடிகளாகவே தன்னை அடையாளப்படுத்திக் கொண்டது. எந்த விதத்திலும் புலிக்கும், இந்த கிழக்கு புலிக்கும் இடையில் மக்கள் பற்றிய நிலைப்பாட்டில் வேறுபாடில்லை என்பதை மெய்ப்பித்து வந்தது. குறிப்பாக புலியை விட மோசமான அரசியல் நிலையை எடுத்து, எதிரியுடன் கூட்டு சேர்ந்து தனது பாசிசத்தை மக்கள் மேல் கையாண்டது. இந்த பாசிச மாபியா கும்பலை ஆதரிப்பதில் புலியெதிர்ப்பு கும்பல் முற்றுமுழுதாக முழுமூச்சாக செயல்படத் தொடங்கியது. இந்த அரசு சார்பு கும்பலின் பாசிச நடவடிக்கையை முற்று முழுதாக இருட்டடிப்பு செய்தலில், புலியெதிர்ப்பு கும்பலின் பங்கு முதன்மையானது. பல புலியெதிர்ப்பு



படிப்பகம்

www.padippakam.com



நபர்கள் கருணா கும்பலின் பேச்சாளராக, பிரசாரகராகவும் மாறினர். கருணா அரசுடன் சேர்ந்து ஈடுபட்ட பாசிச நடிவடிக்கைகளை, மூடிமறைத்தபடி அதை முற்போக்காக காட்டத் தொடங்கினர். இந்த நிலையில் அதனை முழுமையாக அம்பலப்படுத்தும் வரலாற்று கால கட்டத்தில், நாம் தொடர்ச்சியாக அதனை அம்பலப்படுத்துகின்றோம்.

இந்த கருணா என்ற பாசிச மாபியா கும்பல் பேரினவாதத்தின் இராணுவத் தேவையை பூர்த்தி செய்யும் கூலிக்கும்பலின் செயல்களை நாம் புரிந்துகொள்ள, மக்களின் நலன்கள் என்ன என்பதை தெளிவுபடுத்துவதும் அவசியமாகின்றது.

மக்களின் நலன்கள் என்பது, அரசியல் ரீதியாக அதற்காக போராடுவதைக் குறிக்கின்றது. மக்களுக்காக போராடுவதாக கூறிக் கொள்ளும் யாரும், மக்கள் நலனை இனம் கண்டு போராட மறுப்பது, உள்ளடக்கத்தில் மக்களுக்கு விரோதமான செயலை அடிப்படையாகக் கொண்டது. மக்களின் நலன்களை எப்படி இனம் காண்பது.

1. மக்கள் எப்படியான பொருளாதாரத்தில்,
2. எப்படியான சூழலில்
3. எந்த வகையான உழைப்பில்
4. எந்த வகையான உற்பத்தி உறவில்
5. எந்த வகையான சமூக முரண்பாடுகளில்
6. எந்த வகையான வர்க்க முரண்பாடுகளில்
7. எந்த வகையான அடக்குமுறைகளின் கீழ்

எப்படி வாழ்கின்றனர் என்ற தெளிவும், அதை களையும் போராட்டத்தையும் அடிப்படையாக கொண்டது. மக்களின் வாழ்வுசார் முரண்பாடுகளை தீர்க்கும் உள்ளடக்கத்தில் நின்று போராடுவது தான் மக்கள் போராட்டம். வர்க்க மற்றும் சமூக முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய உள்ளடக்கத்தில் போராட மறுப்பது மக்கள் விரோதத் தன்மை கொண்டது. இதில் ஒன்றை மட்டும் மையப்படுத்தி போராடுவது என்பது, உள்ளடக்கத்தில் பிற்போக்குக் கூறைக் கொண்ட ஒரு போராட்டமாகவே இருக்கும். இது படிப்படியாகவே சீரழியும்.

இந்த வகையில் கிழக்கு மக்களின் பிரச்சனைகள் இனம் காணப்பட்டு, அந்த மக்களின் வாழ்வுக்காக அவர்களுடன் இணைந்து நின்று யாரும் போராடவில்லை. கிழக்கு வாழும் மக்களின் 80 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் மிகமிக வறிய மக்கள். அன்றாடம் ஒரு நேரக் கஞ்சிக்கே வாழவழியற்ற உழைக்கும் மக்களாவர். அன்றாடம் தனது தேவையை பூர்த்தி செய்யாத, உழைப்பு என்ற சகதிக்குள்



படிப்பகம்

www.padippakam.com



உருத்தெரியாது மாண்டு போகின்றவர்கள். ஒரு உயிரின் தேவைகளைக் கூட வெளிப்படுத்த முடியாத வகையில், அவர்களின் அடிமைத்தனம் காணப்படுகின்றது. இந்த விளைவால் குழந்தைகளின் எதிர்காலம் முதல் நவீன அறிவியல் கண்டு பிடிப்புகள் என எதையும் நுகரமுடியாத, உலகமயமாதல் சமூக அமைப்பில் உயிர்வாழ்வதற்கு அவசியமற்ற ஒரு உறுப்பாக வாழ்பவர்கள்.

இந்தளவுக்கும் அந்த மக்கள் வாழும் பூமி அதீதமான இயற்கை வளம்கொண்டது. ஆனால் அந்த மக்கள் வாழ முடியாத அவலம். ஒரு நேர கஞ்சிக்காக அவர்கள் விடும் கண்ணீர், வற்றாத நதிகளாகிவிட்டன. ஒருபுறம் சொந்த நிலத்தைக் கொண்டு வாழமுடியாத அவலம், மறுபக்கம் கூலிக்குச் சென்று வாழமுடியாத அவலம். பெரும்பாலான கிழக்கு மக்களின் நிலை இது. மக்களின் வாழ்க்கை அனைத்தும் இந்த சகதிக்குள் தான் உழலுகின்றது.

ஆனால் அரசியல் செய்தவர்கள், செய்பவர்கள் இந்த உண்மையை மறுத்தபடி, தமது வெட்கக் கேடான இழிந்து போன அரசியலை செய்கின்றனர். இந்த மக்கள் மத்தியில் அரசியல் செய்பவர்களின் வாழ்க்கை முறையோ, இதற்கு நேர்மாறானது. பகட்டுத்தனங்கள், ஆடம்பரங்கள் முதல் அனைத்தும் இந்த மக்களின் இரத்தத்தை உறிஞ்சி வாழ்கின்றவர்களின் சொகுசு வாழ்க்கை தான், அவர்களின் அரசியலாகி நிற்கின்றது.

பேரினவாதம் தமிழ் மக்களை ஒடுக்குகின்றது என்பதை மேலெழுந்த வாரியாக இனம் கண்ட ஒரு போராட்டம், அந்த குறித்த சமூக முரண்பாட்டினுள் மக்களின் வாழ்வு சார்ந்த நிலையை மறுதலித்து அதை முன்னெடுக்கவில்லை. மாறாக இதை பயன்படுத்திக் கொண்டு, அந்த மக்களை ஒடுக்குகின்ற ஒன்றாகவே மாறியது. இது உள்ளடக்கத்தில் யாழ் மேலாதிக்கமாகவும் அடையாளம் காணப்பட்டது. இதை மறுப்பதாக கூறிக் கொண்டு யாழ் மேலாதிக்கத்தை எதிர்ப்பதாக பாசாங்கு செய்தவர்கள், அதை வெறும் பிரதேச ரீதியாக வரையறுத்தனர். யாழ்மேலாதிக்கத்தை எதிர்ப்பதின் பின் உள்ள மக்கள் வாழ்வு சார்ந்த வாழ்வியலை நிராகரித்தது. மக்களின் மற்றொரு எதிரியுடன், மற்றைய சமூக முரண்பாடுகளை களையமறுத்து, அந்த முரண்பாட்டின் ஒடுக்குமுறைக்கு சார்பாக நின்று, மக்களை ஒடுக்குவதில் தான் இவர்களின் அரசியலே அடங்கிக் கிடக்கின்றது. மக்களின் உழைப்பிலான செல்வத்தை உறிஞ்சுவதில்தான், இவர்களின் அரசியல் அடங்கிக்கிடக்கின்றது. அந்த மக்களை அடக்கியொடுக்கி, அவர்களின் உழைப்பைப் புடுங்கி வாழும் வாழ்க்கையைத்தான், அவர்களின் வாழ்க்கையின்



படிப்பகம்

www.padippakam.com



பின்னணியில் காண்கின்றோம். தமக்காக, தமது வாழ்வை மேம்படுத்துவதற்காக மக்களின் பெயரில் போராடுகின்றனர்.

மக்களின் வாழ்வு சார்ந்த வறுமையும், அதனுடன் கூடிய இழிநிலைமை என்பது, இலங்கை தழுவிய சமூக பொருளாதார சுரண்டல் ஆட்சி அமைப்பினால் உருவானது. ஏகாதிபத்திய நலனை பூர்த்தி செய்யும் தரகு முதலாளிகளையும், நிலப்பிரபுக்களையும் கொண்ட இலங்கை அரசு, இலங்கை பூராகவும் மக்களின் வாழ்வை அழித்து வாழ்பவர்களின் நலனைத் தான் ஜனநாயகம் என்கின்றது. பொதுவான இந்த நிலைமையால் ஏற்படும் விளைவு, பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபடுகின்றது. ஒப்பீட்டளவில் கிழக்கு மக்களின் நிலைமையும், அவர்களின் வாழ்க்கைத் தரமும், மற்றைய மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் கீழ்நிலைப் பாத்திரத்தை வகிக்கின்றது. கிழக்கு மக்களின் வாழ்வில் ஒரு விடுதலை வேண்டும் என்றால், அது இலங்கை அரசுக்கு எதிரான போராட்டத்தை அடிப்படையாக கொண்டது. இது உள்ளடகத்தில் அனைத்தும் தழுவிய வகையில் நடத்தப்பட வேண்டும். இதை மறுக்க முனைவதே அபத்தம்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் மேல் இனவொடுக்கு முறையை பேரினவாதம் கையாண்ட போது, அந்த மக்கள் இரண்டு பிரதானமான ஒடுக்குமுறையைச் சந்தித்தனர், சந்திக்கின்றனர்.

1. பொதுவாக இலங்கை முழுவதுமாக காணப்படும் சுரண்டலும், சூறையாடலும்

2. இனவொடுக்குமுறை ஊடாக காணப்படும் அடக்குமுறையும் சூறையாடலும்

இரண்டாவதை மட்டும் எதிர்த்து போராடி தலைமைகள் இயல்பாகவே சுரண்டும் முதலாவது போக்குடன் இணங்கிச் சென்றன. தமிழ் ஆதிக்க சுரண்டும் பிரிவுகளின் போராட்டமாக மாற்றியதால், கிழக்கு மக்கள் மூன்றாவது மற்றும் நான்காவது ஒடுக்குமுறையைச் சந்தித்தனர்.

3. அது யாழ் மேலாதிக்கமாக, குறுந் தேசியமாக, சொந்த மக்களை அடக்கியொடுக்கி சூறையாடும் ஒரு போராட்டமாக மாறியது.

4. கிழக்கு மக்கள் பிரதேச ரீதியான இழிவாடலையும், சமூக ரீதியான புறக்கணிப்பையும், வெறுமனே பயன்படுத்தப்படுவதையும், பிரதேச



படிப்பகம்

www.padippakam.com



ரீதியான புறக்கணிப்பையும், மற்றைய இன மக்களுடன் சேர்ந்து வாழ வேண்டிய நிலையில் இணக்கமற்ற தொடர் மோதலையும், இது போன்று பலவற்றை சந்தித்தனர்.

இப்படி தமிழ் மக்கள் மூன்று சிறப்பான ஒடுக்குமுறையையும், கிழக்கு மக்கள் மேலதிகமான நாலாவது சிறப்பு ஒடுக்குமுறையையும் ஒரே நேரத்தில் அனுபவித்தனர். இந்த மக்களின் மேலான ஒடுக்குமுறைகளை இனம் கண்டு போராடத் தவறுகின்ற எந்த தலைமையும், எந்த அரசியலும் அந்த மக்களுக்கே எதிரானது. இதில் ஒன்றை அல்லது பலவற்றை ஒருங்கே கொண்டு மக்களை அடக்கியொடுக்கும் செயல்தான் கிழக்கில் நடக்கின்றது. உண்மையில் எந்த மக்களுக்காக போராடுவதாக பீற்றிக்கொள்கின்றனரோ, அந்த மக்களின் மேலான ஒடுக்குமுறையை, இவர்கள் மக்களுக்கு அடையாளம் காட்டுவது கிடையாது. ஒன்றை முதன்மைப்படுத்தி, இதன் ஒரு பக்கத்தை மட்டும் முன்னிலைப்படுத்தி, மக்களை ஒடுக்குவதுதான் இவர்களின் அரசியலாகும்.

இந்த மக்களின் விடுதலைக்காக குறித்த பிரதேசத்தை உள்ளடக்கிய யாழ் மேலாதிக்கமோ, கிழக்கு மேலாதிக்கமோ போராடவில்லை. தேசியம் என்ற பெயரில் சிங்கள மக்களை எதிரியாக காட்டி வந்த யாழ் மேலாதிக்கம் போல், யாழ் மேலாதிக்கம் என்ற பெயரில் வடக்கு மக்களை கிழக்கு மேலாதிக்கம் எதிரியாக காட்டுகின்றது. உள்ளடக்கத்தில் மக்களை எதிரியாக காட்டி, மக்களிடையே பிளவை விதைத்து அதில் சிலர் தத்தம் நலனையே அடைகின்றனர்.

ஒரு தேசம், தேசிய மக்கள், பிரதேச மக்கள் என்று எந்தக் கோட்பாடும், மக்களின் இந்த அவல நிலைக்கு காரணமான அரசை எதிர்த்துப் போராடவில்லை. மாறாக அந்த அரசின் பெயரில் மக்களை இழிவாக்கி, சுரண்டுகின்ற அதே கொள்கையை அடிப்படையாக கொண்டு, மக்களுக்காக போராடுவதாக கூறுவது நகைப்புக்குரியது. உண்மையில் இவர்கள் எல்லோரும் மக்களின் அடிமைத்தனத்தில், வாழவிரும்புகின்ற ஒரு வர்க்கத்தின் நலனை மட்டும்தான், இந்த மக்கள் விரோதக் கும்பல் கையிலெடுக்கின்றது.

ஒரு பிரதேச மக்களின் வாழ்க்கை என்பது வர்க்க முரண்பாடுகளால், சமூக முரண்பாடுகளால் சின்னாபின்னப்படுத்தப்படுகின்றது. இப்படித் தான் இலங்கையில் மக்கள் கூட்டம் வாழ்கின்றது. இந்த மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக் கொள்வோர் முதல் அரசியல் செய்வோர் ஒவ்வொருவரும், நிச்சயமாக இந்த வர்க்க மற்றும் சமூக முரண்பாட்டின் ஒரு பிரிவை சார்ந்து நிற்கின்றனர். இந்த வகையில்



படிப்பகம்

www.padippakam.com



தான் யாழ் மேலாதிக்கம் முதல் கருணாவின் பிரதேசவாதம் வரை, ஒரு வர்க்கத்தின் நலனை பிரதிநிதித்துவம் செய்கின்றது. இந்த இரண்டும் சுரண்டும் வர்க்கத்தின் நலனை அடிப்படையாகக் கொண்டு, பெரும்பான்மை மக்களின் உழைப்பைச் சுரண்டும் ஒரு பிரிவுக்கு தலைமை தாங்குகின்றது. பரந்துபட்ட மக்களின் வர்க்க நலனையும் கணக்கிலெடுத்து, அந்த மக்களை பிளக்கும் சமூக ஒடுக்குமுறைகளை இது களைவதில்லை. இந்த வகையில் தான் இது உண்மையில் காணப்படுகின்றது. இதனிடம் மக்கள் நலன் என எதையும் எதிர்பார்க்க முடியாது. மக்களைச் சுரண்டி வாழ்கின்ற, யுத்தம் மூலம் உருவாகும் அராஜகவாத புதுப் பணக்காரக் கும்பலாகத்தான் இருக்கின்றது. அத்துடன், அந்த யுத்த பொருளாதார மூலம் உருவாகும் புதுப்பணக்கார ரவுடிகளின் பாசிச நலனை அடிப்படையாக கொண்டு இயங்குகின்றது. இந்த புதுப் பணக்கார வர்க்கம் மக்களின் அவலத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்தி, அவர்களை மிகக் கோரமாகவே சுரண்டி உருவான ஒரு இழிந்த அராஜகவாத வர்க்கம். இந்த வகையில் உருவான வர்க்கத்தின் உருவாக்கத்துக்கும் இருப்புக்கும், பாசிசமே அதன் சமூக விதியாக இருந்தது.

இந்த நிலையில் இந்த வர்க்கத்தின் சார்பாக போராடிய இந்தக் கும்பல்கள், சமூகத்தில் இழையோடிப் போயுள்ள வர்க்க முரண்பாட்டை சமூக முரண்பாட்டைக் கண்டு கொள்வதில்லை. அப்படி ஒன்று சமூகத்தில் இருப்பதாக கருதுவதைக் கூட அங்கீகரிப்பதில்லை. மாறாக இவர்கள் எதை ஆயுதமாக எடுக்கின்றனர் என்றால், சமூக முரண்பாட்டின் ஒன்றை ஒற்றைப்பரிணாமத்தில் முன்னெடுக்கின்றனர். அதன் முழுமையையும், மற்றைய முரண்பாடுகளையும் கண்டு கொள்வதில்லை. யாழ் மேலாதிக்கம் தமிழ் தேசியத்தில் பேரினவாதமாகவும், கிழக்கு மேலாதிக்கம் பிரதேசவாதத்தில் யாழ் மேலாதிக்கமாகவும் உள்ளது.

இந்த இரண்டும் அந்த மேலாதிக்க உள்ளடக்கத்தில் உள்ள, வர்க்க முரண்பாட்டையும், மற்றைய சமூக முரண்பாடுகளையும் கூட நிராகரிக்கின்றது. தன்னளவிலும், அதாவது தனக்குள்ளும் எதிரிக்குள்ளும் உள்ள வர்க்க முரண்பாட்டை மறுதலிக்கின்றது. இது தனக்குள் உள்ள வர்க்க முரண்பாட்டை மட்டும் மறுக்கவில்லை, எதிரிக்குள் உள்ள வர்க்க முரண்பாட்டையும் மறுதலிக்கின்றது. போராடுபவன் மட்டுமின்றி, எதிரியும் கூட, இதைத்தான் தனது அரசியலாக கொள்கின்றான். மாறாக ஒரு மக்கள் கூட்டத்தை, இன்னொரு மக்கள் கூட்டத்துக்கு எதிராக நிறுத்தி, வழிநடத்த முனைகின்றனர். இது தான் சிங்கள மேலாதிக்கம், யாழ் மேலாதிக்கம்



படிப்பகம்

www.padippakam.com



மற்றும் கிழக்கு மேலாதிக்கத்தின், நடைமுறை சார்ந்த அரசியல் நிலையாகும். சொந்த மக்களை வர்க்க மற்றும் சமூக முரண்பாட்டில் ஒடுக்கியபடி, மற்றைய மக்கள் கூட்டத்தை எதிரியாக காண்பித்து கற்பிக்கின்றது.

இந்த வகையில் தான் குறிப்பாக புலியெதிர்ப்பும் செயல்படுகின்றது. இந்தப் பிரிவு மேற்கூறிய பிரிவுகளினால் கழித்துவிடப்பட்ட அல்லது அந்த போக்கில் அதிகாரத்தை பெறமுடியாது தோற்றவர்கள் முதலாக கொண்ட, சுயமாக மக்கள் நலனை முன்னெடுக்க, ஆதரிக்க முடியாதவர்களின் தங்குமிடமாகும். இது அறவே மக்களின் வர்க்க முரண்பாட்டையும், சமூக முரண்பாட்டையும் நிராகரிக்கின்றது. ஏதாவது ஒரு சமூக முரண்பாட்டில் பகுதியாக தொங்கிக் கொண்டு, அனைத்தையும் புலியாக காண்கின்றது. இலங்கையில் வாழும் அனைத்து மக்களின் எதிரியாக இனம் காணப்பட்ட ஏகாதிபத்தியம், பிராந்திய ஆதிக்க சக்தியான இந்தியா, இலங்கை ஆளும் பேரினவாத அரசு முதல் அரசியல் ரீதியாக இலங்கை இந்திய அரசின் கூலிக் குழுக்களாக உள்ளவர்களை சார்ந்து நிற்கின்றனர் அல்லது அவர்களின் கருத்தை முன்னிலைப்படுத்துகின்றனர். மக்களின் வாழ்வை அழிக்கும் வர்க்க முரண்பாடு, சமூக முரண்பாட்டை நிராகரிக்கின்றனர். இதை அரசியலாக கொண்ட மேற்கொண்ட பிரிவுகளின் அரசியல் தேவையை முன்னெடுப்பவர்களின் அரசியல் தான் புலியெதிர்ப்பாகும். இவர்கள் புலியை நிராகரிக்கும் போது கூட, புலியை வர்க்க ரீதியாகவோ, சமூக ரீதியாகவோ அம்பலப்படுத்துவது கிடையாது.

இந்த வகையில் முரணற்ற வகையில் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை, ஒடுக்கப்பட்ட சமூக முரண்பாடு பிரிவுகளை இவர்கள் சார்ந்து நிற்பதில்லை. மாறாக ஒடுக்கும் வர்க்கத்தையும், ஒடுக்கும் சமூக பிரிவுகளையும் சார்ந்து நிற்கின்றனர். புலியின் நடத்தைகள் மீதும், ஏகாதிபத்திய வரையறைகளை அடிப்படையாகக் கொண்டு, தமது அரசியல் தளத்தை தக்கவைக்கின்றனர்.

மறுபக்கத்தில் இவர்கள் சார்ந்து நிற்கின்ற பிரிவுகளின் நடத்தைகளை விமர்சிப்பதில்லை. ஜனநாயக வேஷதாரிகளாக காட்டிக்கொள்ளும் நிர்ப்பந்தம் காரணமாக, புலியல்லாத தரப்புகளின் செயல்பாட்டை மென்மையாக அணுகுகின்றனர். இந்தவகையில் இவர்களின் இணைய இணைப்புகள், கருத்துகளை வெளியிடுவது முதல் ஒன்றாக விவாதிப்பது வரை, ஒன்றை ஒன்று சார்ந்து செயல்படுகின்றது. மக்களின் எதிர்காலம் பற்றி இவர்கள் அனைவரும் ஒன்றாக ஒரே இடத்தில், ஒரு நோக்கத்தில் கூடி மக்களுக்கு எதிராக விவாதிக்க



படிப்பகம்

www.padippakam.com



முடிகின்றது. இந்த விவாதங்களில், சமூகத்தின் உள்ளான வர்க்க முரண்பாட்டை பற்றியோ, சமூக முரண்பாடுகளைப் பற்றியோ அதாவது ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக எதுவும் விவாதிப்பதில்லை. புலிகளை வர்க்கத்துக்கு அப்பாலான ஒரு சக்தியாக நிலைநிறுத்து வதும், கூடுவோர் வர்க்கங்கள் மற்றும் சமூக முரண்பாடுகள் கடந்த ஒரு நிலையில் புலி எதிர்ப்பில் மிதப்பதுமாக கும்மாளமிடுகின்றனர்.

மக்களின் பிரச்சனைகள் என்ன என்பதை இனம்காண மறுக் கின்றனர். அதை ஒவ்வொன்றாக இனம் கண்டு, அதை முன்னிலைப்படுத்தி போராட மறுக்கின்றனர். இந்த வகையில் இந்த புலியெதிர்ப்பை தெளிவாக, அரசியல் ரீதியாக அடையாளப்படுத்த முடியும், முடிகின்றது. இந்த வகையில் கிழக்கு மேலாதிக்கத்தையும், புலிகளை எதிர்க்கும் சகல பிற்போக்கு கூறுகளையும் ஆதரித்து நிற்கின்றது. மக்களின் ஐக்கியத்தை முன்னிலைப் படுத்துவதை எதிர்க்கும் இவர்கள், பிளவை அகலமாக்குகின்றனர். இலங்கையில் வாழும் அனைத்து மக்களிடையேயான ஐக்கியம், ஐக்கியத்துக்கு எதிரான அனைத்துக்குமான முன்நிபந்தனையாகும். மக்களிடையே ஐக்கியத்தை உருவாக்குவது, இதனடிப்படையில் சமூகங்கள் இணங்கி வாழும் வழிவகைகளை உருவாக்குவது அவசியமானது. இதை சிங்கள மேலாதிக்கம், யாழ் மேலாதிக்கம், கிழக்கு மேலாதிக்கம் முதல் புலி எதிர்ப்பு வரை மறுதலிக்கின்றது.

உண்மையில் சமூகத்தின் வர்க்க முரண்பாடுகளை, சமூக முரண்பாடுகளை ஒட்டு மொத்தமாக மறுத்தபடி, மக்களின் ஐக்கியத்துக்கான முன்னிபந்தனைகளை மறுத்தபடி தான், இந்தப் பிரிவுகள் செயல்படுகின்றது. இந்த அடிப்படையில் மக்கள் நலன் என்று எதையும், இதனிடம் தோண்டியும் எடுக்கமுடியாது. இந்த கும்பலுக்கு இடையிலான அதிகார மோதல்கள் எதுவும், மக்களுக்கான எந்த நலனையும் பிரதிபலிப்பதில்லை.

மக்கள் இடையேயான வர்க்க முரண்பாடு, உள்ளடக்கத்தில் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டது. பெரும்பகுதி மனிதர்களின் உழைப்பை, சிறிய பகுதி திருடி வாழ்வது தான் சுரண்டல். இதன் போதான உற்பத்தி உறவுகள், ஒருவருக்கு எதிராக மற்றவரை நிறுத்துகின்றது. இதன் மூலம் ஒருவனின் உழைப்பை சுரண்டி மற்றொரு பிரிவு வாழ்கின்றது. மனித இனத்தின் அடிமைத்தனம் இதனூடாக கட்டமைக்கப்படுகின்றது. சமூகத்தில் வறுமையும், இல்லாமையும் பெருகுகின்றது. சமூகத்தின் கடைக்கூறில் எஞ்சிக் கிடக்கும் ஜனநாயகத் தன்மை படிப்படியாக சீரழிக்கப்படுகின்றது. உலகம் தழுவிய இந்த நிகழ்வால், சமூக உறுப்புகள் எதையும்



படிப்பகம்

www.padippakam.com



சுயமாக நுகர முடியாது. உதாரணமாக சுரண்டப்படும் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தையும், சுரணடும் குடும்பத்தின் குழந்தையும் ஒரேவிதமான ஒரே கல்வியை, ஒரே கல்விச் சூழலில் பெறமுடியாது. ஒரேவிதமான பொழுதுபோக்கை அனுபவிக்கவோ, நுகரவோ முடியாது. பண்பாடு கலாசாரம் என அனைத்தும் இரண்டு துருவமாக வேறுபடுகின்றது. எப்படி பிரதேசங்களுக்கு இடையில் பண்பாடுகள், கலாசாரங்கள் வேறுபடுகின்றதோ, அப்படித்தான் ஒரு சமூகத் தினுள்ளும் உள்ளார்ந்த வர்க்க வேறுபாடுகள் காணப்படுகின்றது. இது ஒருபுறம்.

மறுபுறம் இதன் காரணமாக சமூக முரண்பாடுகள் காணப்படுகின்றது. மனிதர்களை பிளந்து புதிது புதிதாக கற்பிக்கப்படுகின்றது. அது இனவாதமாக, நிறவாதமாக, பிரதேசவாதமாக, ஆணாதிக்கமாக, சாதியமாக, மதவாதமாக, பற்பல வகையில் காணப்படுகின்றது. இவற்றுக்கான உள்ளார்ந்த தோற்றுவாய்க்கான மூலங்களுக்கு அப்பால், சக மனிதனை ஒடுக்கி, அடக்கி வாழ்கின்ற உள்ளடக் கத்தில், அவர்களின் உழைப்பு சுரண்டப்படுகின்றது என்பதே உண்மை. இந்த ஒடுக்குமுறைகள் மீதான சமூக இழிவுகள் மீதான போராட்டத்தை முன்னெடுக்க தவறுகின்ற, இதற்குள்ளான முரண் பாட்டை முன்னெடுக்க தவறுகின்ற அனைத்தும் மக்கள் விரோதமான வை. அதாவது இன்று இவைகள் எதையும் முன்னெடுக்க தவறுகின்ற யாழ் மேலாதிக்கம் முதல் கிழக்கு மேலாதிக்கம் வரை, உள்ளடக்கத்தில் படு பிற்போக்கானவை. இந்த எல்லைக்குள் தான் புலியெதிர்ப்பும் அரங்கேறுகின்றது.

மக்கள் பிரச்சனைகள் இதற்குள் தான், முழுமையாக காணப்படு கின்றது. இந்த மக்களின் பிரச்சனைகளை நிராகரித்துவிட்டு வெவ்வேறு அதிகாரப் பிரிவுகள், தத்தம் பாசிச முகத்துடன் ஒன்றையொன்று எதிராக காட்டி முட்டி மோதிக் கொள்வதன் மூலம், தத்தம் குறுகிய நலனை மட்டும் அடைவதை நோக்கமாக கொணடது. இதன் பின்னால் எந்த மக்கள் நலனும் இருப்பதில்லை. இந்த வகையில் சிங்கள மேலாதிக்க தேசியமோ, யாழ் மேலாதிக்க தேசியமோ, கிழக்கு மேலாதிக்க பிரதேசவாதமோ, உள்ளடகத்தில் மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்டதல்ல. அனைத்தும் ஒரே அரசியலைக் கொண்டதும், ஒன்றுபடவே மக்கள் விரோதத்தையே அடிப்படையாக கொண்டது. இந்த வகையில் இவை அனைத்தும் புழுத்துக் கிடக்கின்றது.

சின்னசின்ன மக்களின் அன்றாட துயரங்கள் மீதும் கூட அக்கறை காட்டுவதில்லை. இந்த நிலையில் இலங்கை பேரினவாதத்துக்கு



படிப்பகம்

www.padippakam.com



எதிரான யாழ் மேலாதிக்கம், யாழ் மேலாதிக்கத்துக்கு எதிரான கிழக்கு மேலாதிக்க போக்குகள் முதன்மை பெற்ற ஒரு முரண்பாடாக முன்னிலைப்படுத்தப்பட்டு, ஒடுக்குமுறைகள் உச்சத்தில் காணப்படுகின்றது. இதிலிருந்து மக்களை மீட்பதாக கூறிக் கொள்வது என்பதுவும், அனைத்தையும் பூசி மெழுகி நடத்திய மோசடிகளும் அம்பலமாகி சிதைந்து சின்னாபின்னமாகி வருகின்றது. உண்மையில் தாம் போராடுவதாக கூறிக் கொள்ளும் சிங்களப் பேரினவாதமாகட்டும், யாழ் மேலாதிக்கமாகட்டும், அதை ஒழித்துக் கட்டும் எந்த போராட்டத்தையும், இவர்கள் கோட்பாட்டு ரீதியாகவோ, நடைமுறை ரீதியாகவோ கொண்டிருக்கில்லை. சிங்கள பேரினவாதம் என்பதை சிங்களவனின் ஆதிக்கமாக விளக்குவதும், யாழ் மேலாதிக்கம் என்பதை யாழ்ப்பாணத்தானின் ஆதிக்கமாக விளக்குவதும், கிழக்கு மேலாதிக்கத்தை கிழக்கு மக்களின் ஆதிக்கமாக காட்டுவதும் நிகழ்கின்றது. உண்மையில் இதன் மூலம், இதை ஒழித்துக்கட்ட முடியாது. எந்த சமூக சார் மேலாதிக்கத்தையும், முழுமையாக சமூக பொருளாதார அரசியல் ரீதியாக மக்களை அணிதிரட்டி, அந்த மக்களின் தலைமையில் போராடாத வரை இதை ஒழிக்கமுடியாது. மாறாக சில சமூகம் சார்ந்த பொறுக்கிகளின் சுயநலனுக்கான போராட்டமாக எஞ்சுகின்றது.

இது ஆயுதம் ஏந்தும் போது இயல்பாகவே, பாசிச மாபியா குழுக்களின் நலனுக்கானதாக மாற்றம் காண்கின்றது. தத்தம் சொந்த தனிமனித அதிகாரத்துக்கான, தமது பொருளாதார நலனுக்காக, மக்கள் கூட்டங்களை எதிராக காட்டியபடி மனித உறவுகளை சிதைக்கின்றனர். இதுதான் இலங்கையில் ஆதிக்கம் பெற்ற அரசியலாக உள்ளது. இதற்குள் மக்கள் நலன், மனித நேயம் என எதையும் பூதக்கண்ணாடி வைத்துக் கூட, நாம் தேடமுடியாது.

ஒரு மக்கள் கூட்டத்தில் இருக்கின்ற படுபிற்போக்கான பாசிச ஆதிக்கப் பிரிவுகளை, மற்றைய ஆதிக்க பிரிவு அகற்றுவது, அந்த மக்களின் விடுதலையை குறிப்பதாக கூறுவதே, அனைத்து மேலாதிக்க சக்திகளின் அரசியலாக உள்ளது. இந்த கோட்பாட்டாளர்கள் அரசியல் ரீதியாக செய்வது, உண்மையில் அந்த மக்களின் அடிமைத்தனத்தை மற்றைய ஆதிக்க குழுவின் கையில் தாரைவார்ப்பதைத்தான். இதன் மூலம் சில எலும்புகள் கிடைக்கும் என்ற ஒரே காரணத்தினால், மக்களுக்கு எதிராக குலைக்கின்றனர்.

கிழக்கு மக்களின் விடுதலையை மறுக்கும் உள்ளார்ந்த முதன்மை எதிரி, கருணா என்ற பாசிட்டே. கருணா புலியில் இருந்த போதும் சரி, இன்று இலங்கை அரசின் கைக் கூலியாக புது அவதாரம்



படிப்பகம்

www.padippakam.com



எடுத்து தனித்துவம் பெற்ற போதும் சரி, கிழக்கு மக்களின் உள்ளார்ந்த பிரதான எதிரி கருணாவாக இருந்தது, இருப்பது வெளிப்படையானது. கிழக்கு மக்களுக்கு எதிராக அன்று யாழ் மேலாதிக்கத்தின் கோவணமாக இருந்தவர், இன்று சிங்கள மேலாதிக்கத்துக்கு கோவணமாக இருக்கின்றார். இப்படித்தான் கிழக்கு மக்கள் அங்குமிங்குமாக, கருணா என்ற பொறுக்கியின் தலைமையில் மிகக் கேவலமாக இழிவாடப்பட்டனர், இழிவாடப்படுகின்றனர்.

கிழக்கை எடுத்தால் தேசியத்தின் பெயரில் இயங்கிய யாழ் மேலாதிக்க பாசிச மாபியா கும்பலிடமிருந்து, கிழக்கு மேலாதிக்க கருணா என்ற மாபியாக் கும்பலிடம் அதிகாரத்தை இடம்மாற்றுவதன் மூலம், அந்த மக்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை. சொந்த உள்ளூர்வாசி என்ற அடையாளத்தைத் தவிர, வேறு எதையும் புதிதாக மக்கள் அனுபவிப்பதில்லை. கிழக்கு மக்களுக்கு மாற்றம் வரும் என்று நம்ப வைப்பவர்கள், அவரின் பிறப்பை வைத்து (கிழக்கைச் சேர்ந்தவர் என்பதால்) அரசியல் மாற்றத்தை எதிர்வு கூறுகின்றனர். என்ன அரசியல் மக்களுக்கு சேவை செய்யும் என்பது பற்றி, எந்த சமூக அக்கறையும் இவர்களிடம் கிடையாது.

கிழக்கு மக்கள் என்று நாம் கதைத்தால், அன்றாடம் உழைத்து வாழும் கிழக்கு மக்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சனைக்கு தீர்வுகளை முன்வைக்க வேண்டும். அந்த மக்களின் சொந்த அதிகாரத்தை ஏற்படுத்துகின்ற எந்த அரசியல் வேலைத்திட்டத்தையும் முன்வைக்காத யாரும், மக்களின் எதிரிகள் தான். கடந்த எமது 30 வருட போராட்ட காலத்தில், உள்ளியக்க முரண்பாடுகளிலும், இயங்கங்கள் முன்வைத்த அரசியல் கருத்துக்களில் திட்டங்களில் மக்கள் நலன் சார்ந்த சிறிய முளைகள் இணங்காணக் கூடியவை. குறைந்தபட்சம் அதைக் கூட முன்னிறுத்த முடியாத, புதிய செயல்பாடுகள் பழையபடி பாசிசத்தின் வழியில் தொடர்வதை அங்கீகரிக்க முடியாது. கடந்தகாலத்திய மக்கள் நலன் சார்ந்த கூறுகளை இனம் காண்பதே, முதல்படியாக இருக்க வேண்டும்.

கருணா புலிகளில் இருந்து பிரிந்த பின்னால், தான் இருந்த இயக்கமே பாசிச மாபியா இயக்கம் என்பதையோ, அது ஒரு மக்கள் விரோத இயக்கம் என்பதையோ, இன்று வரை ஏற்றது கிடையாது. மாறாக அதில் சில தனிநபர்கள் தான், பிரச்சனைக்குரியவராக காட்டப் பட்டனரே ஒழிய அதன் அரசியல் அல்ல. இன்று வரை அது தான் கருணா குழுவின் நிலையாகும். எந்த அரசியல் மாற்றமும் கிடையாது. தமக்கு இடையிலான அதிகார மோதலில் சம்பந்தப்பட்டவர்களை எதிரியாக காண்பதும், அவர்களை மக்களின் எதிரியாக காட்டுவதே



படிப்பகம்

www.padippakam.com



அரசியலாக உள்ளது. புலிகளை அரசியல் ரீதியாக காணமறுப்பதும், அந்த அரசியலை மறுபடியும் முன்னெடுப்பதும் வெளிப்படையானது. கூறப் போனால் புலிகளில் இருந்து பிரிந்த போது காணப்பட்ட ஜனநாயக உரிமை சார்ந்த ஜனநாயகக் கூறு கூட, அர்த்தமிழந்து சிதைந்து விடுகின்றது.

முதலில் பிரிந்து வந்த இயக்கத்தை அரசியல் ரீதியாக விமர்சிக்க தவறுகின்ற யாராலும், புதிதாக ஒன்றை உருவாக்க முடியாது. புலிகள் பாசிச மாபியா இயக்கமாக இருந்ததை அரசியல் ரீதியாக விமர்சிப்பது தான், சுயவிமர்சனமாக இருந்திருக்கும். இதற்கு வெளியில் சுயவிமர்சனம் என்று எதுவும் கிடையாது. இதைச் செய்ய மறுத்தவர்கள், சுயவிமர்சனத்தை எப்படி செய்ய முன்வரவில்லையோ, அப்படி கடந்தகால மக்கள் விரோத அரசியலையே இன்றும் கொண்டிருப்பது தெளிவானது.

மாறாக தான் இருந்த காலத்தை மக்கள் இயக்கமாக பீற்றிக் கொள்கின்றனர். அண்மையில் வெளியாகிய அவரின் தொலைக்காட்சி பேட்டியில், தான் பிரிந்த பின்பாகத்தான் அது மக்கள் இயக்கமாக இல்லாமல் போனது என்கின்றார். தாங்கள் இப்போது ஒரு மக்கள் இயக்கம் என்கின்றார். கடைந்தெடுத்த பாசிட்டுகளுக்கே உரிய அரசியல் வக்கிரம்.

கடந்தகாலம் முழுக்க அதாவது தொடக்கம் முதலே மக்களுக்கு எதிராகவே செயல்பட்ட ஒரு இயக்கம், எப்படி மக்கள் இயக்கமாகும். இவை மக்கள் இயக்கமல்ல என்பது 1970 அடிப்படையாக கொண்ட பத்தாண்டுகளின் இறுதியிலேயே கடுமையான விமர்சனம் இருந்து வந்தது. இதனடிப்படையில் நடந்த முதலாவது புலிக்குள்ளான பிளவு, மக்கள் இயக்கம் தொடர்பான விவாதத்தில் நிகழ்ந்தது. தனிமனித சர்வாதிகாரம் ஆரம்பம் முதலாகவே அதன் பின்னால் கட்டமைக்கப்பட்டது. கருணா இதற்கெல்லாம் ஒத்தேதான் அந்த இயக்கத்தில் ஒட்டிக் கொண்டு, இதைத் தீவிரமாக கடைப்பிடித்ததன் மூலம் தளபதியானவர். முதன்மையான மக்கள் விரோதிகள் தான், தலைமைக்கு வரமுடியும். இது புலி இயக்கத்தின் பாசிச விதி. இப்படித்தான் கருணா என்ற பாசிட் புலிகளின் அம்மானாகி தளபதியானவர்.

புலிகள் இயக்கம் தொடக்கம் முதலாகவே அதன் அரசியல் பொருளாதார கூறுகள் அனைத்தும், மக்கள் விரோதமாகவே இருந்து வந்துள்ளது. அதை அரசியல் ரீதியாக விமர்சிக்க முடியாதவர்கள், கட்டுகின்ற இயக்கமும் அதே வழிப்பட்டதே. புலிகளின் மக்கள்



படிப்பகம்

www.padippakam.com



விரோத தலைவர்களின் இழிசெயல்களை கௌரவப்படுத்த வழங்கப்படும் ''அம்மான்'' என்ற அடையாளத்தை தக்கவைத்தபடி, அண்மையில் சிங்கள தொலைக் காட்சிக்கு வழங்கிய பேட்டியின் பின்னணியில் உள்ள கார்த்திகைப் பூ செடியும் எதைக்காட்டுகின்றது. கடந்தகால மக்கள் விரோத இயக்கத்தின் அடையாளங்களைக் கூட துறக்க மறுக்கின்ற, சுய தற்பெருமை பேர்வழிகளின் வக்கிரம் தான் பிரதிபலிக்கின்றது.

மக்கள் இயக்கம் வேறு, பாசிச இயக்கம் வேறு என்பதை பிரித்தறிய முடியாதவர்கள், ஒருபுறம் மக்கள் மேல் கும்மாளம் அடிக்கலாம். கருணா குறித்த பேட்டியில் குறிப்பிடும் போது, பாசிசத்துக்கு ஒரு ஒப்பீட்டைச் செய்தார். கம்பூச்சியாவின் பொல்பொட்டை பிரபாகரனுக்கு ஒப்பிட்டார். கடைந்தெடுத்த வலதுசாரிய பொறுக்கிகளின், பாசிச நாற்றங்கள்தான் இவை.

பாசிச படுகொலையையே ஜனநாயமாக கொண்ட வலதுசாரிகள், வரலாற்றில் இடதுசாரிகள் மீது சேறு அடிப்பதே அதன் அரசியலாகும். இன்றைய ஜனநாயக உலகில் வருடம் 10 கோடி பேர் மருந்தும், நீரும், உணவுமின்றி இது போன்ற காரணங்களால் கொல்லப்படுகின்றனர். எந்த பாசிட்டுகளால் இவை நடக்கின்றது. இப்படி வரலாறு இருக்க, இந்த அரசியல் பொறுக்கிகளுக்கு பொல்பொட் தேவைப்படுகின்றது.

கண்ணுக்கு முன்னால் நன்கு தெரிந்த சம்பவங்கள் உண்டு. சொந்த நாட்டில் அதாவது இலங்கையில் 1970க்கு பின் குறைந்தது 2 லட்சம் மக்களை இந்த சிங்கள அரசு இலங்கையிலேயே கொன்றுள்ளது. 1990க்கு பிந்தைய ஈராக்கில் அமெரிக்க தலைமையிலான நாடுகள் விதித்த பொருளாதாரத் தடையின் மூலம் 20 லட்சம் ஈராக்கிய குழந்தைகளை கொன்றுள்ளது. ஈராக்கில் ஆக்கிரமிப்பில் ஈடுபட்ட பின் குறைந்தபட்சம் 5 லட்சம் ஈராக்கியரின் மரணத்துக்கு காரணமாக இருந்துள்ளது. சமகாலத்தில் உங்கள் எஜமானர்களின் சொந்த இரத்தக் கறை படிந்த உதாரணங்கள் நிறைய இருக்க, அதை மூடிமறைத்த அவர்களின் வாரிசுகள் பொல்பொட்டை வாந்தி எடுக்கின்றனர்.

கடைந்தெடுத்த பொறுக்கிகள். மக்களுக்காக உண்மையில் போராடிய வர்கள் மீது சேறு அடிப்பதே, இந்த கயவாளிப் பயல்களின் அரசியல் நடத்தையாகும். நீ கொன்று குவித்த கிழக்கு மக்கள், முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை எத்தனை? யாருக்கு கதை சொல்லு கின்றீர்கள். கம்பூச்சியாவில் பொல் பொட் தலைமையிலான ஆட்சியில்



படிப்பகம்

www.padippakam.com



மனிதப்படுகொலைகள் நடந்தாக கூறுவது, அடிப்படையற்ற ஆதாரமற்ற ஒன்று. அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக நடந்த போரில் கொல்லப்பட்டவர்கள், அதன் பின்னர் அமெரிக்கா உள்ளிட்ட சோவியத் ஏகாதிபத்திய பொருளாதார தடையால் கொல்லப்பட்டவர்கள் (பார்க்க ஈராக்கை), பட்டியலை கூட்டியள்ளி பொல் பொட்டின் தலையில் அரைக்கின்றனர்.

உண்மையில் அந்த மக்களின் நலனுக்காக போராடியவர் பொல் பொட். தவறு இழைத்தாரா எனின், ஆம் பல தவறுகள் இழைத்தார். குறிப்பாகவும் முக்கியமாகவும் அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்பு நடந்த காலத்தில், கிராமங்கள் மீதான அமெரிக்காவின் கொடூரமான தாக்குதலுக்கு பயந்து, நகரங்களை நோக்கி குவிந்த இளைஞர்கள் விடையத்தில் தவறு இழைத்தார். கடுமையான பொருளாதாரத் தடை, யுத்தத்தில் இருந்து நாட்டை மீட்டு கட்டியெழுப்ப வேண்டிய நிலையில் பொல் பொட் பதவி ஏற்றார். இந்த நிலையில் உழைப்பே அறியாது அமெரிக்க இராணுவ பொருளாதாரத்தில் பொறுக்கி வாழ்ந்தபடி உதிரியாக சிதறிக் கிடந்த இளைஞர்களை, மறுஉழைப்புக்கு கொண்டு செல்வதில் கடுமையான தவறு நிகழ்ந்தது. உழைப்பவனுக்குத் தான் உணவு. அந்த வகையில் பொல்பொட் தலைமையிலான அரசு இந்த இளைஞர்களை கிராமங்களுக்கு திரும்பிச் செல்லவும், உழைப்பில் ஈடுபடவும் கோரியது. நகர்ப்புற உதிரிகள் தமது அராஜகத்தை அடிப்படையாக கொண்டு மறுத்தலித்து. உடல் உழைப்பையே அறியாது பொறுக்கி வாழ்வதையே வாழ்க்கையாக கொண்ட இந்த இளைஞர்களை, மீண்டும் உழைப்பில் ஈடுபடுத்த முனைந்த போது, அதை எதிர்த்து அவர்கள் கிராமங்களுக்குச் திரும்பிச் செல்ல மறுத்த போது, ஒடுக்குமுறை ஊடாக உழைப்பை பெற முனைந்தனர். இதன் போது பலர் கொல்லப்பட்டனர். இதை வைத்துத்தான், அமெரிக்க ஆக்கிரமிப்பாளன் நடத்திய கொலை எல்லாம் மூட்டை கட்டி, அதை பொல்பொட் தலையில் காறி துப்புவது கடைந்தெடுத்த வலதுசாரிய நாற்றமாகும். அக்காலத்தைய கம்பூச்சிய மக்கள் தொகைக் கணக்கெடுப்புகள் கூட, இந்தப் பொய் புனைவை மறுதலிக்கின்றது. கருணா அனைத்து குற்றத்தையும் பிரபாகரனின் தலைமையில் சுமத்தி தான் நடத்திய கொலையை மறுப்பது போல், ஏகாதிபத்திய சதிக் கதைகள் தான் இவை. இந்த நிலையில் அதை கருணா என்ற பாசிட், பொல்பொட்டை பிரபாகரனுக்கு ஒப்பிட்டு வக்கரிக்கின்றான். கிழக்கு தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் கொன்று அம்மான் என்ற கௌரவ அந்தஸ்துடன் பிரதேச தளபதியாகியவர், தன்னையும் தனது கடந்தகால கொலைகார வரலாற்றையும் சுயவிமர்சனம் செய்யவில்லை. மாறாக ஏகாதிபத்தியம்



படிப்பகம்

www.padippakam.com



அரைத்து வைத்த பொல்பொட் கதையை, பிரபாகரனுக்கு ஒப்பிட்டு, தனது கொலைகார முகத்தை மினுக்க முனைகின்றார். அன்று நீங்கள் செய்த கொலைகள், இன்றும் நாள் தோறும் தொடருகின்றது.

அண்மையில் அம்பாறையில் புலிகளின் முகாமில் இருந்து இராணுவம் கைப்பற்றிய கம்பியிலான சிறைகள் அனைத்தும் கருணா காலத்தவை கூட. இன்றும் சித்திரவதையையும், சிறைக் கூடத்தையும் கொண்டு வாழ்கின்றவர்களே நீங்கள், உங்களுக்கு எதிரான மக்களின் கண்ணீரையும் அவர்களின் அவலங்களையும் சதா கேட்கின்றோம்.

நீங்கள் எல்லாம் கிழக்கு மக்களின் வாழ்வுக்காக போராடுவதாக நடிப்பது, கடைந்தெடுத்த அயோக்கியத்தனம். இந்த வகையில் கிழக்கு மக்களின் பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாக கொண்ட கல்வி மற்றும் அவர்களின் அபிவிருத்திக்காக செயல்படப் போவதாக அதே பேட்டியில் கூறுகின்றார். எப்படி என்கின்றீர்களா? அவரே கூறுகின்றார், பேரினவாத சிங்கள அரசு இதற்காக நிதி ஒதுக்க வேண்டும் என்கின்றார். ஒரு கேள்வி. இடையில், நீ ஏன் இருக்கவேண்டும். அதில் ஒரு பகுதியை விழுங்கவா! சிங்கள அரசிடம் இவற்றைக் கோருவதே நகைப்புக்குரிய ஒரு வாதம். இங்கு இதுதான் கிழக்கு மக்களின் பிரச்சனையாக காட்ட முனைகின்றார். அவர் இதன் மூலம் கிழக்கு மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்கின்றார்.

இலங்கையில் கிழக்கின் நிலையில் தான் பெரும்பாலான மாவட்டங்கள் உள்ளன. இதில் வடக்கின் சிலபகுதிகள் முதல் தென்னிலங்கையின் பல பகுதிகள் இப்படித்தான் உள்ளது. இலங்கையின் மக்கள் விரோத அரசாங்கம் இரங்கி ஒதுக்கும் பணத்தில், கிழக்கை முன்னேற்ற முடியும் என்ற கருணாவின் அலட்டல், நகைப்புக்குரிய ஒன்று. சிங்கள பேரினவாத அரசு இனவாதத்துடன் சிங்களவனுக்கு அதிக சலுகையுடன் ஒதுக்கிய பணத்தில் கூட, சிங்கள மக்களின் கல்வி மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பதே, ஒப்பீட்டளவில் கிழக்கின் நிலையில் தான் காணப்படுகின்றது. அந்த மக்களின் பிரச்சனையை தீர்க்க முடியாது இருக்க, கிழக்குக்கு பணத்தை ஒதுக்கி இந்த பிரச்சனைகளை தீர்க்க முடியும் என்று கூறுவது, கேடுகெட்ட அரசியல் பிழைப்பாகும்.

பிரச்சனைக்கான தீர்வும் வழியும் வேறு எங்கோ இருக்க, அரசு ஒதுக்கும் நிதி உதவி தான் தீர்வு என்று கூறுவது மக்களின் அடிமைத்தனத்தில் சவாரி விடுவதாகும். ஏன் சிங்கள மாணவர்களின் கல்வியை, இந்த அரசு எந்தவிதத்தில் கிழக்குக்கு மாறாக பூர்த்தி செய்துள்ளது. நீங்கள் எப்படி மாற்றாக பூர்த்தி செய்வீர்கள். சிங்கள



படிப்பகம்

www.padippakam.com



மண்ணில் பொருளாதாரம் அந்த மக்களை வளப்படுத்தி உள்ளதா? இனங்களையும், பிரதேசங்களையும் பிளந்து அரசியல் செய்யும் வக்கிரம் பிடித்த கூட்டத்துக்கு, இவையெல்லாம் தமது பணப் பையை நிரப்பும் பொற்காசுகள் தான். மக்களுக்கு இவர்கள் கொடுப்பதோ அடக்குமுறையுடன் கூடிய மனித அவலத்தைத்தான்.

கிழக்கு மக்களின் கல்வி வளர்ச்சிக்காக உழைக்கப் போவதாக பீற்றி அலம்பும் கருணா, முழு இலங்கையிலும் அது முரணற்ற வகையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்ற அடிப்படைக் கேள்விக்கு பதிலளிக்க வேண்டும். அதை விடுத்து சினிமா பாணியில் கதாநாயகர் வேசம் போட்டு ஆடுவது அபத்தமாகும்.

இலங்கை வாழ் மாணவர்கள் அனைவருக்கும் அடிப்படைக் கல்வியையும், கல்விக்கான பொது சூழலையும் பூர்த்தி செய்கின்ற வகையிலான சமூக பொருளாதார அமைப்பை கோருவதன் மூலம் தான், குறைந்தபட்சம் கிழக்கு மக்களின் கல்வியை பூர்த்தி செய்யமுடியும். பல்கலைக்கழக அனுமதி பெற தகுதியான அனைத்து மாணவர்களுக்கும் கல்வியை வழங்கும் உரிமையை மறுக்கும் இந்த அரசு, அதை நியாயப்படுத்தும் தமிழ் குறுந்தேசிய மற்றும் பிரதேசவாத வக்கிரங்களே மாணவர்களுக்கு எதிராக அரங்கேறுகின்றது. இலங்கையில் அனைத்து பல்கலைக்கழக தகுதியுடைய மாணவர்களுக்கும் கல்வியை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏன் இவர்கள் உயர்த்த முடிவதில்லை. இதற்கு மாறாக தரப்படுத்தல், அதி திறமைக்கு மட்டும் கல்வி என்ற நிலைப்பாடும், அதை நியாயப்படுத்துதலும் உண்மையில் மக்கள் சார்ந்தவையா? எந்த வகையில்!

கிழக்கில் இது எப்படி கல்வியை, வேலை வாய்ப்பை மேம்படுத்தும். கிழக்கில் கல்வி வாய்ப்பை மேம்படுத்த வேண்டும் என்றால், அந்த மக்களின் பொருளாதார வாழ்வு மேம்பட வேண்டும். இதற்கான அவரின் வேலைத்திட்டம் என்ன? குறைந்தபட்சம் இந்த பிற்போக்கான மக்கள் விரோத உள்ளடக்கத்தில் கூட, எந்த வேலைத் திட்டமும் இந்த பாசிச கும்பலிடம் கிடையாது. இவர்கள் மக்கள் நலன் பற்றி நகைப்புக்குரிய வகையில் புலுடா விடுகின்றனர். கிழக்கு மக்களின் கல்வி பொருளாதார முன்னேற்றத்துக்கு உழைக்க அரசை நம்பி இருப்பதாக கூறுவதன் மூலம், இவர்களின் அரசியல் வேலைத் திட்டமும் இது தான்.

தாங்கள் ஜனநாயகத்துக்கு வந்துள்ள சட்டப்படியான கட்சி என்கின்றனர். சரி அந்த கட்சியின் அரசியல் வேலைத்திட்டம் என்ன?



படிப்பகம்

www.padippakam.com



எங்கே இவர்களால் வைக்க முடியுமா? வைக்க முடியாது. மக்கள் நலன் எதுவுமற்ற எந்த பாசிச கும்பலிடமும் எதுவும் இருப்பதில்லை. மாறாக இருப்பது பாசிசமும் மாபியாத்தனமும் தான். நெருக்கடிகளில் இருந்து தப்ப, வார்த்தை ஜாலங்களை அள்ளி எறிகின்றனர். புலிகளின் அதே பாசிசம் அதே உத்தி.

கருணா என்ற குழுவின் அரசியல் பேச்சாளர், தம் மீதான குற்றச்சாட்டுக்கு அடிக்கடி மறுப்பு விடுகின்றார். இதையே தான் தமிழ்ச்செல்வனும் செய்கின்றார். இருவருக்கும் இடையில் என்ன வேறுபாடு?

ஒரு மக்கள் இயக்கம் தனது அரசியல் வேலைத்திட்டத்தில் புலிகளை அரசியல் ரீதியாக விமர்சிக்க வேண்டும். அதை விடுத்து மேலெழுந்தவாரியாக பூசிமெழுகித் திரிவது, தமது பாசிச வழியை முன்வைப்பதாகும். கிழக்கு பிரிவினை பற்றி அப்பேட்டியில் கேட்டபோது, மகிந்த சொன்ன அதே வழிதான் தமது என்கின்றார்.

மகிந்த கிழக்கு மக்களின் விரும்பம்தான், தனது விருப்பம் என்கின்றார். இதுவே தனதுமென்கின்றார் கருணா. நீங்கள் ஒன்றாகி ஒரு கூலிக்குழுவாகிய பின் இப்படிச் சொல்வது ஆச்சரியமல்ல. கிழக்கு மக்களை பிரிப்பதில் யாழ் மேலாதிக்கத்துக்கு எந்தளவு முக்கிய பங்கு இருந்ததோ, அந்தளவுக்கு சிங்கள மேலாதிக்கத்துக்கும் முக்கிய பங்கு இருந்தது.

இந்த வகையில் இதை பிரதேச பிளவாக்கியதில் கருணாவின் பங்கு மிக முக்கியமானது. புலியில் இருந்தது முதல், அரசின் ஒரு கூலிக் குழுவாக வெளிவந்தது வரையிலான அவரின் பங்கு தனித்துவமானது. கிழக்கு மக்களுக்கு எதிராக கடந்த 15 வருட காலத்திய அனைத்து செயல்பாட்டிலும், கருணாவின் பங்கு தனித்துவமானது. இவை தான் இன்றைய பிளவுக்கு வழிகாட்டியது.

அதை அறுவடை செய்பவனும் அதே கயவாளிப்பயல்தான். இன்று அதை கிழக்கு மேலாதிக்கமாக்கி, பிளவை விதைப்பதில் கருணா கும்பலின் பங்கும் பணியும் முக்கியமானது. இவை அனைத்துக்கும் பின்னாலும், கிழக்கு மக்களின் நலனின் அடிப்படையில், இந்த கிழக்கு மக்களின் விருப்பம் எதையும் இந்த அரசியல் சூழ்ச்சிகள் கொண்டிருப்பதில்லை. மாறாக குறுகிய நலன்கள் முதன்மை பெற்று, தமிழ் இனத்தில் அழிப்பு என்ற பேரினவாத சதி இங்கு யாழ் மேலாதிக்கம் ஊடாக அரங்கேறுகின்றது. அதை கருணா சொன்னாலும் ஒன்று தான், மகிந்த சொன்னாலும் ஒன்றுதான்.



படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் இனப்பிரச்சனை முதன்மையான முரண்பாடு என்ற அடிப்படையில், இனங்களின் பிரச்சனையை தீர்ப்பதற்கு பதில், புதிய முரண்பாடுகளால் மக்கள் கூட்டத்தை பிளந்து வாழ நினைக்கும் கும்பல்களின் சதிகளே அரங்கேறுகின்றது. அவை தான் இன்றைய மொழியாக, கூக்குரலாக ஆதிக்கம் பெற்று நிற்கின்றது. எல்லா மக்கள் விரோத பிற்போக்கு வாதிகளும் இதைத் தான் செய்கின்றனர். கருணா குறித்த பேட்டியில் தாம் பேரினவாதத்தின் கூலிக் குழுவாக சேர்ந்து இயங்கவில்லை என்கின்றார். இந்தக் கூற்றே எவ்வளவு பெரிய பொய் என்பதை அனைவரும் அறிவர். இவர்களின் நேர்மையை இவைகள் மூலம் சாதாரணமாக உரசிப்பார்க்க முடியும்..

இதில் உள்ள முரண்பாடே, இந்த போலிகளின் கபட வேடத்தை தெளிவாக்குகின்றது. ஆயுதங்களுடன், பெரும் குண்டர் படையாக உள்ள இவர்களின் இருப்பை எப்படி இராணுவம் அனுமதிக்கின்றது. பேரினவாதத்துடன் கூட்டு, கூலித்தனமும் தெளிவானது. மக்களுக்காக போராடும் ஒரு இயக்கம், மக்களுக்கு எதிரான இராணுவத்துடன் இணங்கி செயல்படுவது என்பதும், பரஸ்பர இருப்பை அங்கீகரிப்பது என்பதுவும் எந்தவகையில் சாத்தியமானது!

எதிர்காலத்தில் இராணுவத்துடன் எலும்புக்கான சண்டையை கருணாதரப்பு நடத்தினால் கூட, அங்கு மோசடியும் சுயநலமும் தான் அடிப்படையாக இருக்கும். புலிகளின் அதே உத்தி தான். அமைதி சமாதானம் என்ற பெயரில் நடத்துகின்ற நரித்தனங்கள், சூழ்ச்சிகள் பரஸ்பரம் இணையானவை. மக்களை நேசிப்பதில் நேர்மையற்ற பொறுக்கித்தனம், மக்கள் அரசியலாகிவிடாது. மக்கள் எப்படி புலிகளை இன்று கிழக்கில் தோற்கடிக்கின்றனரோ, அப்படி கருணா கும்பலை தோற்கடிப்பர்.

*10.03.2007*



படிப்பகம்

www.padippakam.com



# அரசு சாராத அமைப்புகள் யுத்தத்துக்கு துணைபோகும் கிரிமினல்களே

அரசுசாராத அமைப்புக்கள் எப்படிப்பட்ட யுத்த கிரிமினல்கள் என்பதற்கு, இலங்கை யுத்தம் சிறப்பான எடுத்துக்காட்டாகி வருகின்றது. மனித விரோத யுத்தத்தை நடத்துபவன் மட்டுமல்ல, அதற்கு துணையாக அதன் பின்னணி தளத்தில் செயற்படுபவனும் குற்றவாளி தான்.

புலியொழிப்பு என்ற பெயரில் காட்டுமிராண்டித்தனமாக பேரினவாதம் தமிழ் மக்கள் மீதே யுத்தம் செய்கின்றது. இந்த யுத்தத்தின் பின்னணியில், தன்னார்வக் குழுக்கள் யுத்தத்துக்கு துணையாக செயலாற்றுகின்றன.

யுத்தம் செய்பவன் இழைக்கின்ற மனிதக் குற்றத்தை மூடிமறைக்கின்ற, அதை சாந்தப் படுத்துகின்ற நடவடிக்கைகள் தான், தன்னார்வக் குழுக்களின் செயல்பாடுகள். இது தான் அவர்களின் அரசியல் நோக்கம். இதன் மூலம் யுத்தத்தை மேலும் நடத்தவும், யுத்தம் நடத்துபவன் மக்களிடம் அம்பலமாகாது இருக்கவும், யுத்தப் பின்னணியை கழுவித் துடைக்கின்ற வேலையை இந்த அரசு சாராத தன்னார்வக் குழுக்கள் செய்கின்றன. யுத்தத்தின் விளைவை எதிர்கொள்ளும் மக்கள் கூட்டமும், அதைச் சுற்றியுள்ள மக்களும், இதை சுயமாக எதிர்கொள்ளும் ஆற்றலை நலமடிப்பதன் மூலம், ஒரு சமூகத்தின் சுய இருப்பை நலமடிப்பதே இதுவாகும்.

மனித துயரங்களையும், அவலங்களையும் போக்குதல் என்ற பெயரில், யுத்தத்துக்கு கைகொடுத்து உதவுகின்ற பணியைத்தான், இலங்கையில் அரசுசாராத நிறுவனங்கள் வெளிப்படையாகவே செய்கின்றன. பேரினவாத அரசு இயந்திரம் இராணுவ சர்வாதிகாரமாகி, அது நடத்துகின்ற இன அழித்தொழிப்பு, இன்று அனைத்து தரப்பாலும் என்றுமில்லாத வகையில் ஊக்கப்படுத்தப் படுகின்றது. இதற்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் ஏகாதிபத்திய



படிப்பகம்

www.padippakam.com



நிதியில் இயங்கும் இந்த தன்னார்வக் குழுக்கள் செய்கின்றன.

யுத்தத்தில் சம்பந்தப்பட்டவர்கள், யுத்தம் ஏற்படுத்தும் மனித அவலத்தை போக்க வேண்டிய உறுப்புகள் அல்ல என்பதே, தன்னார்வக் குழுக்களுக்கு பணம் வழங்கும் எகாதிபத்திய அரசியல் நோக்கமாகும். நிவாரணத்தை வழங்கும் தேவையில் இருந்து, அந்த பொறுப்பில் இருந்து, யுத்தம் செய்பவனை விடுவிப்பதன் மூலம், யுத்தத்தின் பின்னணி ஊக்குவிக்கப்படுகின்றது. உலகமயமாதல் அரசு இயந்திரம் என்பது, ஏகாதிபத்திய நலனை பாதுகாக்கும் ஒரு பொலிஸ் நிறுவனம் தான் என்பதை, இலங்கையின் யுத்த பின்னணி எடுப்பாக உலகுக்கு எடுத்துக்காட்டுகின்றது.

பேரினவாத சிங்கள இராணுவம் புலிகள் ஒழிப்பு என்ற பெயரில், தமிழ் மக்களை இராணுவ ரீதியாகவே ஒடுக்குகின்றது. இதற்கு துணையாக இதன் பின்தளத்தில், தன்னார்வக் குழுக்களின் கிரிமினல் செயல்பாடுகள் அமைந்துள்ளது.

தமிழ் மக்களை புலிகளின் உருவாக்கத்துக்கு முன்னமே, ஒரு இனம் என்ற ரீதியில் ஒடுக்கியவர்கள் இதே சிங்கள பேரினவாதிகள் தான். காலகாலமாக நடத்திய அதே ஒடுக்குமுறையைத்தான், இன்று புலிகளின் பெயரில் அவர்கள் மறுபடியும் தொடருகின்றனர்.

சமாதானத்தின் பெயரில் ஒப்பந்தங்கள், இனப்பிரச்சனைக்கு தீர்வை காணுதல் என்ற பெயரில் வகைவகையான குழுக்கள், கூட்டங்கள், உரைகளை நடத்துகின்ற பேரினவாத அரசு இயந்திரத்தின் நோக்கம், தமிழ் மக்களை அழிப்பதை இதன் மூலம் மூடிமறைப்பதுதான். அப்படிப்பட்ட நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கம் தான், தன்னார்வக் குழுக்களின் மனிதாபிமான செயல்பாடுகள்.

இனவழிப்பு யுத்தத்தில் பேச்சுவார்த்தை முதல் தன்னார்வக் குழுக்களின் செயல்பாடுகள் அனைத்தும் ஒன்றுபடுத்தப்பட்டுள்ளது. அனைத்தும் இராணுவ நடவடிக்கையுடன் ஒருங்குகிணைக்கப்பட்டு செயற்படுத்தப் படுகின்றது. இந்த நிகழ்ச்சி நிரல் இலங்கையில் அப்பட்டமாக காணப்படுகின்றது. இராணுவம் எங்கு யுத்தத்தை தொடங்குகின்றதோ, அங்கு இந்த தன்னார்வக் குழுக்கள் உடனடியாக பின்னணியில் செயலாற்றத் தொடங்குகின்றது.

இந்த அரசு சாராத தன்னார்வக் குழுக்களை உருவாக்கி அதன் செயல்பாட்டுக்குரிய நிதியையும் ஏகாதிபத்தியம் என்ற பிசாசே வழங்குகின்றது. ஏகாதிபத்திய நலன்களையும், ஏகாதிபத்திய நலன்



படிப்பகம்

www.padippakam.com



சார்ந்த அரசின் நலன்களையும் பாதுகாக்கின்ற, மக்களிடையே அது அம்பலமாகாது இருக்கின்ற அரசியல் தான், அரசுசாராத நிறுவனங்களின் நோக்கமாகும்.

உலகமயமாதல் பொருளாதார கட்டமைப்பை உருவாக்கி அதில் மிதக்கின்ற ஏகாதிபத்தியம், மனித குலத்தின் அழிவில் தான் இதைச் சாதிக்க முடிகின்றது. மனித அழிவும் அவலமும், சமூக ரீதியான எழுச்சியாக மாறக் கூடாது என்பதற்காக, அவன் உருவாக்கி அவன் கொடுக்கும் பணத்தில் இயங்குவது தான் இந்த அரசுசாராத தன்னார்வக் குழுக்கள்.

ஏகாதிபத்திய பணத்தில் அவனின் நலனை பூர்த்திசெய்வது தான், இதன் அடிப்படை அரசியல் நோக்கமாகும். ஏகாதிபத்தயத்தின் தயவில் இயங்கும் இலங்கை பேரினவாத இராணுவ ஆட்சியை, ஏகாதிபத்தியம் தக்கவைக்க முனைகின்றது. அதற்கு தன்னார்வக் குழுக்கள் உறுதுணையாக செயல்படுகின்றது. பேரினவாத இன ஆக்கிரமிப்புக்கு உறுதுணையாக, அதன் பின்னணி தளத்தில் செயல்படுகின்றது.

இனவழிப்பை நடத்தும் இராணுவ நடவடிக்கையின் விளைவுகள் ஏற்படுத்தும் மனித துயரங்கள், வெளி உலகும் உலக மக்களுக்கும் தெரியாது மூடிமறைக்கின்ற சதியை செய்வது யார் என்றால், இந்த தன்னார்வ ஏகாதிபத்திய குழுக்கள் தான். இந்த தன்னார்வக் குழுக்களின் நோக்கமும் கரிசனையும், அந்த மக்கள் இந்த அவலத்தின் விளைவை சுயமாக புரிந்து அவர்கள் செயல்படாது தடுப்பது தான். மக்கள் இதை சுயமாக எதிர் கொள்ளும் ஆற்றல் ஏற்படாத வண்ணம், அதை நலமடித்து வருகின்றனர். இதனால் தான் ஓடோடிச் சென்று உதவுதாக காட்டி, மக்களின் சமூக செயல்பாட்டை நலமடிப்பதே இதன் அரசியல் பணியாகும்.

மற்றவனை நம்பி இருக்க கூறும் ஒரு சமூக இருப்பை, சமூக இழிவை புகுத்துகின்ற ஏகாதிபத்திய கிரிமினல்கள்தான், அரசுசாராத தன்னார்வ நிறுவனங்கள். இப்படி இந்த நோக்கில் இக் குழுக்களின் செயல்பாடுகள் கிரிமினல் மயப்படுத்தப்பட்டுள்ளது. ஏகாதிபத்திய நோக்கத்தையும், பேரினவாத நோக்கத்தையும் ஒருங்கே பூர்த்தி செய்கின்ற பேரினவாத இனவழிப்பு யுத்தத்தின் பின்னணியை, அவன் கொடுக்கும் பணத்தில் சாந்தப்படுத்துகின்றவர்கள் கிரிமினல் மயப்படுத்தப்பட்ட போர் குற்றவாளிகள் தான்.

***05.09.2007***



படிப்பகம்

www.padippakam.com



# தேசியத்தை மறுப்பது என்பது சாராம்சத்தில் உலகமயமாதலை ஆதரிப்பதுதான்

புலியை தேசியமாக பார்ப்பவர்கள், தேசம் தேசியம் என்ற அடிப்படைக் கோட்பாட்டை காணமுடியாதவர்களாவே உள்ளனர். புலியெதிர்ப்புக்கு தேசிய மறுப்பு தத்துவம் வழங்க முனையும் ராகவனாக இருக்கலாம், ஸ்ராலினை மறுக்கும் திரோஸ்க்கியம் பேசுகின்றவர்களாக இருக்கலாம், சாராம்சத்தில் அவர்களின் அரசியல் ஒத்துப் போகின்றது.

தேசம், தேசியம் என்பது கற்பனையான பொருளற்ற வெறும் சிந்தனையல்ல. அதாவது கருத்துமுதல்வாதக் கற்பனையல்ல. மாறாக பொருள் வகைப்பட்ட ஒன்றின் மீதான சிந்தனை. இதை திரொஸ்கிகள் தேசிய மறுப்பின் ஊடாக மறுக்கின்றனர். ராகவன் கருத்துமுதல் வாதமாகவே பார்க்கின்ற அளவுக்கு, புலியெதிர்ப்புவாதம் அவரின் கண்ணை மூடிநிற்கின்றது.

தேசம் என்பது பொருள் வகைப்பட்டது என்ற எதார்த்தத்தை மறுக்கவே, ஸ்ராலினை மறுப்பது அவசியமாகின்றது. தேசத்தின் பொருள் வகைப்பட்ட எதார்த்தத்தின் குறைந்தபட்ச வரையறை இருப்பதை, புரட்சிக்கு தலைமை தாங்கி ஸ்ராலின் தான் முதன் முதலில் வரையறுத்துக் காட்டுகின்றார். இதனால் தத்தவமேதையான லெனின் அதை மிகச் சிறந்த மார்க்சிய வரையறையாக, உலகம் முன் அங்கீகரித்தார். வர்க்கப் போராட்டத்தை நடத்துவதில் இருந்து ஒரு சமூகப் பிரச்சனையை, ஸ்ராலின் மாக்கிச வரையறை நேராக்கிவிடுகின்றது. லெனின் - ஸ்ராலின் தேசம் பற்றி மாக்சிய அடிப்டையிலான இந்த நிலையை, திரோஸ்கி அன்று ஏற்றுக்கொண்டது கிடையாது. இன்றுவரை அது தான் அவர்களின் நிலை. லெனின் - ஸ்ராலின் தேசம் பற்றி மாக்சிய அடிப்டையில் தான், அங்கு வர்க்கப் புரட்சியே நடந்தது. திரோக்சிய வரையறையிலல்ல. சோவியத்துகளின் உள் உருவாக்கம் கூட, இதனடிப்படையில் தான் நடந்தது. இது போல் தான் சீனாவிலும் நடந்தது.



படிப்பகம்

www.padippakam.com



இதை வழிகாட்டிய ஸ்ராலின் வரையறை என்பது தெளிவானது. தேசம் என்பது தனக்கான ஒரு தேசிய பொருளாதார கட்டுமானத்தை, தனக்கான ஒரு மொழியையும், இதை கொண்டிருக்க கூடிய ஒரு பிரதேசத்தையும், இதனடிப்படையிலான ஒரு பண்பாட்டையும் கொண்ட மக்கள் கூட்டத்தைக் கொண்டதுதான் தேசம் என்றார். இதற்கு வெளியில் தேசம் என்பது பொருள் வகைப்பட்டதல்ல. தேசங்களாக இருக்கும் எந்த நாடும், குறைந்த பட்சம் இதைக் கொண்டிருக்க வேண்டும். இதுவல்லாத தேசம் எதார்த்தத்தில் கிடையாது, உருவாகவும் முடியாதது. பொருள் அல்லாத எதுவும், இருக்கவோ உருவாகவோ முடியாது.

குறைந்தபட்சமான இந்த நிபந்தனை என்பது அடிப்படையானது. இதற்கு மேல் பல பண்பாடுகள், பல மொழி கொண்டவை கூட ஒருங்கிணைந்த தேசமாக ஒன்றி இருக்க முடியும்.

இப்படி பொருள் வகைப்பட்ட ஒன்றை மறுப்பது, அதை தமது கற்பனையில் கற்பிதமாக காட்டுவது சுத்த அபத்தம். இதையே திரோஸ்க்கியம் முதல் புலியெதிர்ப்பு வரை செய்கின்றது. தமிழ்மக்கள் தேசிய இனமா இல்லையா என்ற விவாதத்துக்கு முன், தேசம் தேசியம் பற்றிய இவர்களின் பார்வையே குருட்டுத்தனமானது. இவர்கள் பார்வை உலகளவிலானதாக, பார்க்கவும் காட்டவும் முனைகின்றது. அது உலகத்தில் உள்ள தேசங்களை, தேசியத்தை எல்லாம் மறுக்கின்ற போது, எதார்த்தத்தில் உலகமயமாதலை ஆதரிக்கின்றது. இன்று நிலவும் தேசங்களையும், தேசியத்தையும் அழிப்பதே உலகமயமாதல் தத்துவம். அதாவது தேசங்கள் உள்ளான சுரண்டலுக்கு பதில், உலகளாவிய சுரண்டல்.

தேசம் இல்லாத தளத்தில், பாட்டாளி வர்க்க தலையீடு அல்லாத ஒரு தளத்தில், அதை பிரதி செய்வது உலகமயமாதல் தான். பாட்டாளி வர்க்கம் மட்டும் தேசியத்திலும் பிற்போக்கு நிலப்பிரபுத்துவ கூறுகளை மறுத்து, முற்போக்கு கூறுகளை உள்வாங்கி போராடுகின்றது. நிலபிரபுத்துவ கூறுகளை எதிர்க்கின்ற வர்க்கக் கூறுகளையும் அது ஆதரிக்கின்றது.

பாட்டாளி வர்க்கத்துக்கு தனக்கென்ற சர்வதேச பார்வை உண்டு. தேசத்தை ஆதரிப்பது, அதை முன்னெடுப்பதன் சாரம் என்பது, தேசம் பற்றிய அதன் சொந்த வரையறையில் கொண்டிருக்க கூடிய முற்போக்கு தன்மையைத் தான்.

தேசம் கொண்டுள்ள தேசிய பொருளாதாரத்தை அழிப்பதை, அதன்



படிப்பகம்

www.padippakam.com



மொழியை அழிப்பதை, அதன் நிலத் தொடரை இல்லாததாக்குவதை, அதன் பண்பாட்டை அழிப்பதை பாட்டாளி வர்க்கம் அனுமதிக்காது எதிர்த்துப் போராடுகின்றது. பிற்போக்கு ஏகாதிபத்தியம் இதை அழிப்பதை அனுமதிப்பதில்லை. இந்த வகையில் பாட்டாளி வர்க்கம் அதை எதிர்க்கின்றது.

உண்மையில் உலகமயமாதல் இவை அனைத்தையும் சுவடு கூடத் தெரியாது அழிக்கின்றது. பாட்டாளி வர்க்கம் செய்வது இது கொண்டுள்ள பிற்போக்கு நிலப்பிரபுத்துவ கூறுகளை மட்டும் தான், பாட்டாளி வர்க்கம் அழிக்க முனைகின்றது. அதன் முற்போக்கான சமூகக் கூறுகளையும் பாதுகாத்து, தேசத்தை தேசியத்தை உயர்த்துகின்றது. பல்வேறு வர்க்கங்கள் கொண்ட இந்த நாடுகளின், ஆக பிற்போக்கான வர்க்கத்தை எதிர்த்த போராட்டத்தை தேசியத்துக்கு ஊடாக பாட்டாளி வர்க்கம் முன்னிறுத்துகின்றது. அதாவது இன்று முதலாளித்துவ புரட்சி நடைபெறாத நாடுகளின் வர்க்கப் போராட்டம் என்பது, சாராம்சத்தில் தேசிய போராட்டத்தையும் உள்ளடக்கியது தான்.

தேசமும், தேசிய மக்களும் ஸ்ராலின் வரையறைக்குள் உள்ளாக அதைப் பாதுகாக்க நாளாந்தம் உலகமயமாதலுக்கு எதிராகப் போராடுகின்றனர். தேசத்தின் அறிவை, அதன் வளத்தையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. உதாரணமான பன்மையான விதைகள், பன்மையான உணவு வகைகள், பன்மையான உற்பத்தி முறைகள், தனி ஆற்றல் வாய்ந்த உற்பத்திகள், மரபு சார்ந்த சமூகக் கூறுகள், சமூக ஆற்றல்கள், உடல் சார்ந்த உயிரியில் எதிர்பாற்றல்கள், தான் பேசும் மொழியை, தனது சொத்தை, தனது உழைப்பை, தனது பொருளாதாரத்தை என்ற அனைத்தையும் தேசம் பாதுகாக்க வேண்டியுள்ளது.

இதற்கு மாறாக ஒரு தேசத்தின் அழிவில், தேசத்தின் சிதைவில் வித்திடப்படுவது எது.? இயற்கையான மனிதக் கூறுகள் தங்கியுள்ள இயற்கையின் அழிவுதான். தேசத்தை மறுப்பதும், தேசியத்தை மறுப்பதும், உள்ளடக்க ரீதியாக சந்தை பற்றிய பொருள் வகைப்பட்ட ஒன்று தான்.

தேசத்துக்கு பதிலாக பிரதியிடப்படுவதோ உலகமயமாதல். அது தனிமனித ஒண்டிக் கலாசாரத்தை, நுகர்வு கலாசாரத்தையும், அதை ஒட்டிய ஒற்றைப் பண்பாட்டையும், தனிமனித நலனில் இருந்து முன்னிறுத்துகின்றது. உதாரணமாக அரிசியை எடுத்தால் பாஸ்மதி மட்டும் தான் சந்தையில் இருக்கவேண்டும், ஒரு உருளைக்கிழங்கு



படிப்பகம்

www.padippakam.com



வகைதான் இருக்க வேண்டும். இப்படி ஒற்றைத் தன்மையில் மனித உணவே மாற்றப்படுகின்றது. புண்ணாக்கு உணவை உண்ண மக்டோனால் போகவேண்டும். கழிநீரைக் குடிக்க கொக்கோகோலா மட்டும் சார்ந்து இருக்க வேண்டும். இப்படி வகை தொகை தெரியாத தேசிய பொருளாதார அழித்தொழிப்பில் எஞ்சுவது, மிருகப் பண்ணைக்குரிய உலகமயமாதலின் நுகர்வு மரபு தான். தேச மக்களின் வாழ்வுக்கு எதிராக வைக்கப்படும் உலகமயமாதலின் எதார்த்தம் இதுதான்.

தேசத்தை அழித்து உருவாகும் பூமியில் பல லட்சக்கணக்கான நெல் இனங்கள், ஆயிரக்கணக்காக இருந்த உருளைக் கிழங்கு வகைள், கோதுமை வகைகள், மரக்கறி உணவு வகைகள் எல்லாம் இருந்த இடம் தெரியாது அழிக்கப்பட்டு வருகின்றது. இப்படி பற்பல. எங்கு தேசத்தின் உண்மையான குரல்கள் எழுகின்றதோ, அங்கு அவை பாதுகாக்கப்படுகின்றது. மறுபக்கத்தில் எல்லாம் ஒற்றைத்தன்மையாகி, அதுவே இயல்பான ஜனநாயக மறுப்பாகி, சுதந்திரமான மனித உழைப்பு மற்றும் மனித தேர்வுகள் எல்லாம் மறுக்கப்படுகின்றன. முற்போக்கான தேசமும் தேசியமும் தான், குறைந்த பட்சம் இதைப் பாதுகாக்க முனைகின்றது.

***29.11.2007***



படிப்பகம்

www.padippakam.com



# உலகமயமாதல் நலன்களும், இந்திய நலன்களும் முரணானவையா? புலிகளின் நலன்கள் இந்த முரண்பாட்டிலா நீடிக்கின்றது?

உலகமயமாதல் நலன்களும், இந்திய நலன்களும் ஒன்றோடொன்று முரணானவையா? சரி முரணானவை என்றால் எப்படி? எந்த வகையில்? எந்த வர்க்க நலன்களின் அடிப்படையில்? இந்தியாவில் போராடும் ஒடுக்கப்பட்ட மக்களினதும், தேசிய முதலாளினதும் நலன்கள், இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்களாக இருப்பதில்லை. எனவே அதை பற்றிய ஒரு விவாதமல்ல இது.

அண்மைக் காலமாக மேற்குக்கு எதிராக இந்தியா அல்லது தென்னாசிய நாடுகளின் பகை முரண்பாடுகள் பற்றி கற்பனையில் முன்னிலைப்படுத்தப் படுகின்றது. புலி, புலியல்லாத ஆய்வுகள் கூட இதற்குள் கட்டமைக்கப் படுகின்றது. இந்த வகையில் ஒரு அரசியல் தளம், உலகமயமாதல் எதார்த்தத்தை திரித்தே கட்டமைக்கப் படுகின்றது. இந்த வகையில் புலிகள் மட்டுமல்ல, புலிகளின் எதிர்தரப்பின் ஒரு பகுதியும் கூட இந்த வாதத்தை முன்வைக் கின்றனர். வாதங்கள் சகட்டு மேனியில் கண்மூடித்தனமாகவே நடத்தப்படுகின்றது. அரசியலற்ற வெற்றுத்தனங்கள், இப்படி வம்பளக்க வைக்கப்படுகின்றது.

இது போன்றே ஜே.வி.பி அரசியல் செயல்பாடுகள் இருப்பதாக நம்பப்படுகின்றது. தென்னாசிய சமூகத்தை சார்ந்து, குறிப்பாக இந்தியாவைச் சார்ந்து நின்று மேற்கை எதிர்ப்பது போன்ற ஒரு அரசியல் பிரமையை, நாடகத்தை, ஒரு மயக்கத்தை உருவாக்குகின்றனர். சிலர் புலி மேற்கைச் சார்ந்ததாக காட்டி, தென்னாசிய அரசியலை ஆதரிக்கும் வகையில் புலிகளை அழிக்க வேண்டும் என்கின்றனர். இப்படி முரண்நிலைத் தன்மையான



படிப்பகம்

www.padippakam.com



வாதங்கள். புலிகளை அரசியல் ரீதியாக விமர்சிக்கவும், தாங்கள் என்ன அரசியலைக் கொண்டுள்ளோம் என்ற அடிப்படையில் செயல்படத் தவறுகின்ற போதும் இது வீங்கி வெம்புகின்றது. கற்பனைப் புனைவுகளும், குதர்க்கமும், குழப்பமும் இதன் அரசியல் சாரமாகும்.

புலிகளின் அரசியல் நெருக்கடிகள் முதல் சமகால நிலமைகளை புரிந்து விளக்குதல் எப்படி என்ற கேள்வி விடையாகவே, இந்த மலிவான அரசியல் திரிபு புகுத்தப்படுகின்றது. இதன் பின்னணியில் புலியை மேற்கின் எடுபிடிகளாக செயல்படுவதாக சித்தரிப்பது முதல், இந்தியாவுக்கும் மேற்குக்கும் முரண்பாடுகள் உள்ளதாக காட்டி புலிகள் நீச்சல் அடிப்பது வரை, இந்த கற்பனை அரசியல் அரங்கம் கட்டமைக்கப்படுகின்றது.

உண்மையில் அரசியல் பொருளாதார அடிப்படையில் வாதிடத் தவறுகின்றனர். மேலோட்டமான நிகழ்ச்சிகள் மீது மேய்கின்ற ஒரு திசைவிலகலாகவே, இவை பொத்தாம் பொதுவில் அணுகப்படு கின்றது.

புலிகளின் விமானத் தாக்குதல் நடந்ததன் பின்பாக இந்த நடவடிக்கை தென்னாசியாவுக்கு ஆபத்து என்றும், இது மேற்கத்தைய சதி என்றும், இதுபோன்ற பல புலியல்லாத கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது. சர்வதேச ரீதியாக புலிகள் பற்றிய நிலைப்பாட்டுக்கு மாறானது. உலகமயமாதல் புலிகளை ஒரே வகையில் தான், ஒரு நேர்கோட்டில் தான் புரிந்து கொள்கின்றது. புலிகளைப் பற்றி அபத்தமான வகையில் மதிப்பிடுவது மட்டுமின்றி, தென்னாசிய சூழலையே தலைகீழாக்கி விடுகின்றனர். புலிகளை அனைத்துக்குமான மையப்புள்ளியாக வைத்து, தென்னாசிய மற்றும் மேற்கத்தைய நலன்களைப் பற்றிய ஆய்வுகள், முடிவுகளை அறிவிப்பது அபத்தமாகும்.

மேற்கில் புலிகளை ஒடுக்கும் நடிவடிக்கைகள் நடக்காத நிலையில், அதையிட்டும் புலம்பும் புலியெதிர்ப்பு, மேற்கு புலிக்கு ஆதரவாக இருப்பதாக காட்டுவது நிகழ்கின்றது. மேற்கு நடவடிக்கைகள் சட்டதிட்ட எல்லைக்குள் இருப்பதைக் காண்பதில்லை. புலிகளிடம் மட்டும் ஜனநாயகத்தைக் கோரும் ஜனநாயக விரோதிகளுக்கு, இது சூக்குமமாகி புரிய மறுக்கின்றது. மேற்கின் நிலைப்பாடுகள் இனப்பிரச்சனையை தீர்க்கின்ற எல்லைக்குள் தான், நடவடிக்கை களை மட்டுப்படுத்துகின்றது. இந்த வகையில் இலங்கை அரசின் தீர்வு நடவடிக்கையுடன் ஒருங்கிணைந்ததாகவே அமையும்.



படிப்பகம்

www.padippakam.com



முரண்பாடு பற்றிய கற்பனை ஆய்வுக்கு மையமாக இந்தியாவின் கொள்கை பற்றியும், அதன் மேற்கு விரோத நிலை பற்றியும் பற்பல எடுகோள்கள். உண்மையில் அரசியலை ஒரு இடை நீக்கல் வழியாக கற்பித்து, அதன் ஊடாக தேடுவது இதன் சாரமாகும்.

மேற்குடனான தென்னாசிய முரண்பாடு அதாவது இந்திய முரண்பாட்டின் சாரம் என்ன? அது எங்கிருந்து, எப்படி எந்த வழியில் உருவாகின்றது. இதற்கான அரசியல் அடிப்படை தான் என்ன? பொருளாதார அடிப்படைகள் தான் என்ன?

1. இந்தக் கேள்விகள் பற்றியும், இந்தியாவின் உள்ளார்ந்த புரட்சிகர பிரிவுகளின் மைய விவாதத்தில் இருந்து நாம் புரிந்து கொள்ளவேண்டியுள்ளது.

2. முரண்பாடு, முரண்பாட்டின் தன்மை என்பது அனைத்தும் தழுவியது. முரண்பாடுகள் இல்லாத உலகம் என்பது கற்பனையானது. ஒரு மனிதனுக்குள்ளும், அவனின் சிந்தனைக்குள்ளும் கூட முரண்பாடுகள் உண்டு. ஒரு முரண்பாடு அனைத்தும் தழுவியதாக, காணப்படும் போது, முரண்பாடுகளின் எதிர் நேர் முரண் தன்மையில் ஒன்று மேலோங்கி காணப்படும். சடப்பொருள் முதல் உயிர் உள்ளவற்றின் இயக்கமே அது சார்ந்தது தான்.

இந்த வகையில் மனிதனைச் சூறையாடும் இன்றைய உலகமயமாதல் என்ற சமூக அமைப்பில், இந்தியாவுக்கும் மேற்குக்கும் இடையில் முரண்பாடு உண்டா? இங்கு இவர்களுக்கு இடையில் அரசியல் பொருளாதார முரண்பாடுகள், எதிர்நிலைத் தன்மையிலா காணப்படுகின்றது? இல்லை, மாறாக முரண்பாடுகள் நட்பு முரண்பாடாக காணப்படுவதுடன், மேற்கின் நலன்கள்தான் இந்தியாவின் நலன்களாக உள்ளது. அதாவது மேற்கின் நலன்கள் என்பது, சுரண்டும் வர்க்கத்தின் சுரண்டும் நலன்கள். ஏகாதிபத்திய நலன்கள் என்பதும் இது சார்ந்ததே. இந்த வகையில் தான் இந்திய ஆளும் சுரண்டும் வர்க்கம், உலகமயமாதலை ஒருங்கமைத்துள்ளது. அனைத்து சுரண்டல் வடிவங்களும், அதை பாதுகாக்கும் சட்ட அமைப்புகளும், மேற்கின் (ஏகாதிபத்திய) சுரண்டல் நலன்களுடன் பின்னிப்பிணைந்ததாகவே உருவாக்கப்பட்டுள்ளது. இதில் உள்ள முரண்பாடுகள் படிப்படியாக களையப்படுகின்றது. அதாவது இந்தியாவின் உழைக்கும் மக்களுடன் உள்ள ஆளும் வர்க்கத்தின் முரண்பாடுகள், முத்தி ஒரு மோதலாக மாறாத வண்ணம் மிக அவதானமாக இருக்கும் போதுதான், மேற்குடனான முரண்பாடுகள்



படிப்பகம்

www.padippakam.com



இருப்பது போல் காட்சியளிக்கின்றது. கானல் நீராக உள்ள இந்த முரண்பாடு, படிப்படியாகவே அகற்றப்படுகின்றது. உழைக்கும் மக்களுடான முரண்பாட்டை அவர்களுக்கு இடையிலானதாக்கி, மேற்கு முரண்பாடுகள் களையப்படுகின்றது.

இப்படி இந்தியாவின் ஆளும் வர்க்க நலன்கள் என்பது, மேற்கத்தைய சுரண்டல் நலனுக்கு முரணாக இருப்பதில்லை. இந்தியாவின் சர்வதேசக் கொள்கை என்பது, மேற்குக்கு எதிரானதல்ல. அதாவது ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு எதிரானதல்ல.

இந்திய தரகுமுதலாளிகளின் நலன்கள் என்பது, இந்தியாவின் பரந்துபட்ட மக்களின் நலன்கள் அல்ல. இது ஆளும் வர்க்கத்தின் நலன்களாகும். இந்தியாவின் நலன்கள் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கு முன்பாகவே, ஏகாதிபத்திய சுரண்டலை அடிப்படையாக கொண்டே இருந்தது. இந்தியாவின் அன்றாடம் உருவாகும் தேசிய முதலாளிகளின் நலன்களை, இந்தியாவின் ஆளும் வர்க்கம் பிரதிபலிப்பதல்ல. இந்தியாவின் தேசிய முதலாளிகளின் நலன்கள், இந்தியாவின் போலிச் சுதந்திரத்தின் பின்பாக கூட பாதுகாக்கப்படவில்லை. அவையும் படிப்படியாக அன்றாடம் அழிக்கப்பட்டே வந்தன. இன்றைய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல் படி, அவை மேலும் வேகமாக திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. இப்படி இந்திய மக்கள் நலன் சார்ந்த எந்த வர்க்கக் கூறினதும் நலன்களை, இந்தியாவின் ஆளும் வர்க்கம் கொண்டிருப்பதில்லை. மாறாக அதற்கு எதிராக செயல்படுகின்றது. இதுவே தென்னாசிய நாடுகளின் நிலை கூட.

இந்த நிலையில் இலங்கை விவகாரத்தில் இந்திய நலன்கள் தனித்துவமாக செயல்படுதில்லை. அதாவது மேற்குக்கு எதிரான ஒரு வர்க்கத்தின் நலனுக்காக, இலங்கை விடயத்தில் இந்தியா முரண்படுவது கிடையாது. அப்படி ஒரு வர்க்கத்தை இந்தியா பிரதிபலிப்பதில்லை. இந்நிலையில் முரண்படுவதாக கூறுவது, எந்த வர்க்கத்தின் நலனை அடிப்படையாகக் கொண்டது?

வர்க்கங்களைக் கடந்தது இந்தியாவின் முரண்பாடு என்பது கற்பனை யானது. ஒரு சார்பு நிலை என்பது, எங்கும் எதிலும் வர்க்கம் சார்ந்தது. இந்தியாவின் ஆளும் வர்க்க நலன்கள், ஏகாதிபத்திய வர்க்க நலனுக்கு முரணானதல்ல. முரணானது என்பது எப்படி?

புலிகளின் வர்க்க நலன் இந்திய நலனுடன், அதாவது மேற்கத்தைய நலனுடன் முரண்பட்டதல்ல. அதனால் அந்த எல்லையில்,



படிப்பகம்

www.padippakam.com



புலிகளுடன் அவர்கள் முரண்படுவதில்லை. புலிகளுடனான முரண்பாடு என்பது, புலிகளின் நலன்சார் நடவடிக்கை அந்த நாடுகளின் சுரண்டல் வர்க்கத்தின் நலனுக்கு இசைவானதாக அதே திசையில் இருப்பதில்லை. குறிப்பாக புலிகளின் தனிமனித நலன்சார் நடவடிக்கைகள், உலகமயமாதல் பொது நடைமுறைக்கு எதிரான வகையில் குத்தும் முள்ளாகி முரண்படுகின்றது. சுரண்டும் வர்க்கங்களுக்கு இடையிலான முரண்பாடு, புலிகள் விடயத்தில் அதீதமான குழுவாதத்தால் பகைமுரண்பாடாக மாறிச் செல்லுகின்றது. இது உலகமயமாதல் பொருளாதார அமைப்புக்கு எதிராக அல்ல, மாறாக ஒரு மாபியாக் கும்பலுக்குரிய ஒரு பின்னணியில் இது ஏற்படுகின்றது.

மேற்கத்தைய மற்றும் இந்தியாவின் ஆளும் வர்க்கங்களுக்கு, புலிகள் பற்றிய அதன் வர்க்க உள்ளடக்கத்தில் முரண்பாடு கிடையாது. மாறாக அந்த நாடுகளின் சுரண்டும் வர்க்கம், சுதந்திரமாக சுரண்ட புலிகளின் மாபியா நடவடிக்கைகள் தடையாக இருக்கின்றது. இதனால் அதை அமைதியாக தீர்த்துக்கொள்ள, அந்த வர்க்கங்கள் தமக்குள் முனைப்புக் கொள்கின்றது.

சிலர் புலிகள் அதீதமாக மேற்கை சார்ந்ததாக நம்பவைக்க முனைகின்றனர். இந்தியாவுக்கு எதிரானதாக காட்ட முனைகின்றனர். சுரண்டும் வர்க்கத்தின் தரகுத்தன்மையின் குறிப்பான நிலையை, பொதுவானதுக்கு பொருத்த முனைவதாகும். எந்த சுரண்டும் வர்க்கத்தின் நலனுக்காக செயல்படுவது என்ற முரண்பாடாகும். ஏகாதிபத்திய முரண்பாடுகள், பிராந்திய முரண்பாடுகளின் அடிப்படையில் இது உள்ளது. இது பொதுவான இன்றைய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலில் நட்பு முரண்பாடாகவே உள்ளது. இதில் ஒன்றை சார்ந்து நிற்க முனைதல், சுரண்டும் தரகு முதலாளிகளின் இருத்தலாகும். இது இந்தியாவின் தரகு முதலாளிகளுக்குள்ளும் காணப்படுகின்றது. இது எங்கும் தழுவிய ஒரு முரண்பாடு. புலிகள் பொதுவான மேற்கத்தைய சார்பும், உள்ளார்ந்த அதனுடன் இந்திய சார்பு நிலையும் கூட காணப்படு கின்றது.

சுரண்டும் வர்க்கத்தின் குறிப்பான நலன்கள் சார்ந்த போக்காகும். இதுவே பகை முரண்பாடாக, ஆளும் வர்க்க மோதலாக மாறுவது உண்டு. இன்று இலங்கை விவகாரத்தில் இது பகை முரண்பாடாக செயல்படவில்லை. இந்தியாவின் ஆளும் வர்க்கம், ஏகாதிபத்திய நலன்களுடன் ஒன்று கலத்தலிலுள்ள சொந்த வர்க்க முரண்பாட்டை களைவதற்கான அதனுள்ள முரண்பாடு, புலிகள் விடயமாக



படிப்பகம்

www.padippakam.com



இருப்பதில்லை. இது மிகையான கற்பனை. ஆனால் அப்படி இருப்பதாக புலிகள், புலிகள் அல்லாத பலரும் நம்ப முனைகின்றனர். புலியை மையமாக வைத்து, சர்வதேச நிகழ்ச்சியை குருட்டுக் கண்ணால் புஞ்சிப் பார்ப்பதன் விளைவு இது.

குட்டிபூர்சுவா இயக்கமாக தொடங்கி தரகு முதலாளிய இயக்கமாக மாறிய புலிகள், மேற்கு சார்பு நிலையை மேற்கொள்கின்றது. இது எந்த விதத்திலும் இந்திய ஆளும் வர்க்க சுரண்டல் நலனுக்கு முரணானதல்ல. தரகு முதலாளியப் புலிகள் இந்த வர்க்க சார்புத் தன்மையை அரசியல் நடைமுறையாக்க முடியாது போன நிலையில், ஒரு மாபியாக் குழுவாக மாறிவிட்டது. அது தரகு முதலாளிய வர்க்க நலனையும் இன்று பிரதிபலிப்பதில்லை. தரகு முதலாளிய வர்க்க எல்லையைக் கடந்த அதன் மாபியாத்தனம், உலகமயமாதலுக்குள் எப்படி புகுந்து கொள்ளை அடிப்பது என்ற எல்லைக்குள் அது தானாக சீரழிந்துவிட்டது. அது மாபியாத்தனத்தை பாதுகாக்க, மக்களுக்கு எதிரான ஒரு தேசியத்தை அரசியல் கோரிக்கையாக வைத்து, பாசிசமாக தன்னை அலங்கரிக்கின்றது.

உலகமயமாதலின் சுரண்டும் வர்க்கங்கள் இந்த மாபியா குழுவைப் பயன்படுத்தி நீச்சலடிப்பதில்லை. அதேபோல் உலகமயமாதல் என்ற சுரண்டும் வர்க்கத்தை, புலிகள் தமக்கு தமது மாபியாத் தனத்துக்கும் பயன்படுத்த முடியாது. சுரண்டும் வர்க்கத்தின் உள்ளான முரண்பாடுகள் எங்கும் தழுவியது. இது சிறப்பாக இந்தியா மேற்கு என்று மட்டும் பிரிந்து காணப்படுவதில்லை.

இந்தியா பிராந்திய ஆதிக்க சக்தியாக இருத்தல் என்பது, உலகமயமாதல் நலனுக்கு முரணானதல்ல. உலகமயமாதலில் உள்ளார்ந்த வர்க்கத்தின் நலனை அடிப்படையாக கொண்டே, பிராந்திய ஆதிக்கத்தை செலுத்த முனைகின்றது. மற்றைய ஆதிக்க சக்திகளுடனான முரண்பாடு என்பது, இன்றைய உலகமயமாதலின் போக்கில் பகை முரண்பாடானதல்ல. மாறாக சுரண்டும் வர்க்கங்களிடையேயான நட்பு முரண்பாடுதான். இதில் புலிகள் விடயத்தில், புலிகளை கையாள்வதில் முரண்பாடுகள் உள்ளதாக காண்பதும் காட்டுவதும் சுத்த அபத்தம்.

இலங்கையில் எந்தளவில்? எப்படி? மேற்கத்தைய மற்றும் இந்திய ஆதிக்கம் நீடிப்பது என்பது, உலகமயமாதல் பொருளாதார நலனுக்கு முரணாக செயல்படுவதில்லை. அப்படி ஒரு முரண்பாடு ஏற்படும் போது, அதுவே இரண்டு நாடுகளுக்கு இடையேயான ஒரு யுத்தமாக மாறுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



சிலர் இலங்கையை பொருளாதார ரீதியாக சுரண்டுவதற்குரிய நாடல்ல என்கின்றனர். மாறாக இராணுவ தளம் சார்ந்தது என்கின்றனர். இதன் மூலம் ஏகாதிபத்திய இந்திய முரண்பாட்டை காட்ட முனைகின்றனர். இலங்கை இராணுவ ரீதியானதாக மட்டுமல்ல, பொருளாதார ரீதியாகவும் சுரண்டலுக்குரிய ஒரு நாடாகவே உள்ளது. இராணுவ ரீதியானதும், சர்வதேச கடல் போக்குவரத்து சார்ந்தும் இலங்கைக்கு உள்ள முக்கியத்துவம், என அனைத்தும் உலகமயமாதலின் பிரதான சுரண்டும் வர்க்கத்தின் பொது நலனுடன் பின்னிப்பிணைந்தது. இதை பகை முரண்பாடாக, உலகமயமாதலில் செயல்படும் சுரண்டும் வர்க்கங்கள் கையாள்வது கிடையாது.

அனைத்தும் தழுவிய முரண்பாடு எங்கும் எதிலும் உண்டு என்பதும், அதை பகை முரண்பாடாக மட்டும் பூதக்கண்ணாடி கொண்டு தேடிக் காட்டுவது அரசியல் அபத்தமாகும். பிராந்திய ரீதியான முரண்பாடுகளை முன்னிலைப்படுத்தி, பகையாக மட்டும் திரித்துக்காட்டுவது அதை விட அபத்தமாகும். முரண்பாடுகள் என்பது, தனித்து ஒன்றாக மட்டும், அது மட்டும், அதுவே முழித்துக் கொண்டிருப்பதில்லை அது பலவாக இருப்பதுடன், ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்ததாகவும் முன்னிலைக்குரிய இடத்துக்கு மாறிச் செல்லுகின்றது.

புலிகளின் பாத்திரம் என்பது, அதன் எஞ்சிய அரசியல் அடிப்படையை தகர்த்து வருகின்றது. வெறும் லும்பன் மாபியா அராஜக குழுவாக, அரசியல் ரீதியாக பாசிட்டுகளாக மாறிவிட்டனர். இதன் வர்க்க அடிப்படை என்பது குறுகி குட்டி இராணுவத் தளபதிகளின் நலன்களாகி சீரழிந்துவிட்டது. இது தன்னை தற்பாதுகாத்துக் கொள்ளும் இராணுவ மற்றும் அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றது. சினிமா பாணியிலான கதாநாயக நடவடிக்கையின் மூலம், தனது இருப்பை தக்கவைக்க முனைகின்றது. ஒரு வர்க்கத்தின் சுரண்டல் நலன் என்ற, அரசியல் அடிப்படையில் செயல்படுவது கிடையாது. அராஜகவாத லும்பன்தன சாகசத்தில், தனது இருப்பு சார்ந்த போராட்டத்தை நடத்துகின்றது. இந்தக் குழுவின் அராஜகவாத லும்பன் செயலை, மேற்குடன் அல்லது இந்தியாவுடன் இணைத்துக் காட்டுவது, புலிகளைப் போல் அரசியலற்ற வெற்றுத் தனமாகும்.

***14.4.2007***



படிப்பகம்

www.padippakam.com



# பிரான்சில் தொடரும் புலிக் கைதுகள், ஏகாதிபத்திய தன்மை வாய்ந்தவையா?

இந்தக் கைதுகளைத் தொடர்ந்து தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக கூறிக்கொண்டு கும்மியடித்த பலர், நாய் உண்ணிபோல் கழன்று ஒடுகின்றனர். பலர் தமது தலையை மண்ணுக்குள் குத்திக் கொண்டு, சம்பந்தமில்லாதவர்களாகி விட்டனர். இனம் தெரியாத ஒரு அச்சம் பீதி கலந்த மௌனம். எதுவும் நடவாத மாதிரி இருக்க முற்படுதல். எதுவும் தெரியாதவர் போன்று பிரமை. பலர் மௌனவிரதம். வசனம் பேசிய வீரர்கள், நடைப்பிணமாக நடமாட முனைகின்றனர்.

பாரிசில் புலிகள் மீதான பொலிசாரின் திடீர் பாய்ச்சலும், கைதுகளும் புலிகளுக்கு எதிராக ஐரோப்பாவின் முதல் சம்பவம். பிரான்சில் புலிகளுக்கு எதிரான முதல் சம்பவம். பிரான்சின் சட்டதிட்டங்களுக்கு அப்பால், நீண்டகாலமாக நீடித்த புலிகளின் சட்டதிட்டங்களுக்கு எதிரான முதல் சம்பவம். இதன் மீதான அதிர்வு, தமிழர் அதிகம் நடமாடும் பாரிஸ் வீதிகளில் இனம் தெரியாத புதிராகவே பிரதிபலிக்கின்றது. பிரஞ்சு சமூகம் எம்மை ஆச்சரியத்துடன் பார்க்கின்றது. அதுவும் அவர்களுக்கு புதிர்தான். புலிகளால் பாதிக்கப்பட்டவர் மீதான அனுதாபமா! அல்லது புலிகள் மீதான வெறுப்பா! இரண்டில் ஒன்றையாவது ஒவ்வொரு பிரஞ்சு மக்களும் பிரதிபலிக்கின்றனர். என்றுமில்லாத வகையில் எம்மை நோக்கி அவர்களின் கேள்விகள் வருகின்றது. செய்தி ஊடகங்கள் இந்த சம்பவத்தை சுற்றி வருகின்றன. தகவலை திரட்ட முடியாத ஒரு மாபியா உலகத்தில், அவர்களே அறியாத வண்ணம் வலம் வருகின்றனர்.

இவை எல்லாம் பல விடயத்தை எடுத்துக்காட்டுகின்றது. மக்கள் விரோத முடிவுக்கு வரும் போது, ஒட்டுண்ணிகள் செய்யும் துரோகம் மட்டுமல்ல, போலியான கட்டமைப்பு அதிர்ந்து பொடிப்பொடியாகும்



படிப்பகம்

www.padippakam.com



என்பதை பாரிஸ் நிகழ்வுகள் மறுபடியும் ஒரு வரலாறாகவே எடுத்துக்காட்டுகின்றது. மறுபக்கத்தில் இந்தக் கைதுகளை நாம் எப்படி புரிந்து கொள்வது என்பது மிகவும் சிக்கலான, ஆனால் அடிப்படையான கேள்வியாக எம்முன் தொங்கி நிற்கின்றது.

1. ஒருபுறம் பிரஞ்சு ஏகாதிபத்தியம். அது உலகம் தழுவிய வகையில் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களையும் ஒடுக்கும் கொடுவாளை கொண்டு இயங்குகின்றது. இந்த வகையில் சொந்த நாட்டிலும் அது செயல்படுகின்றது.

2. பிரஞ்சு ஏகாதிபத்தியம் சொந்த நாட்டு சட்டதிட்டத்துக்கு உட்பட்ட பிரச்னைகளுக்கு ஏற்ப செயல்படுகின்றது. அதாவது அந்த நாட்டின் வாழும் மக்களின் அன்றாட வாழ்வை கேள்விக்குள்ளாக்கும் சட்ட மீறலுக்கு எதிராக செயல்படுகின்றது.

இப்படி இரண்டு அம்சங்கள் உண்டு. இதில் வெளிநாட்டு போராட்ட இயக்கங்கள் மீது நடிவடிக்கையை எடுக்கின்ற போது, இவ்விரண்டு அம்சமும் அக்கபக்கமாகவே இயங்குகின்றது.

புலிகள் மீதான நடவடிக்கையை எந்த வகையில் நாம் புரிந்து கொள்வது? புலிகளால் பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரின் சார்பிலும் இதை புரிந்து கொள்ளத் தூண்டுகின்றது. அடுத்து புலிகள் ஒரு விடுதலை இயக்கமாக இருக்கின்றார்களா என்ற அடிப்படைக் கேள்வியும், புலிகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் எவை எவை முன்வைக்கப்படுகின்றது என்பதும் பதிலளிக்கின்றது.

புலிகள் இயக்கம் ஐரோப்பிய யூனியனால் தடைசெய்யப்பட்ட போது, அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் எவை? அவை மக்கள் நலன் சார்ந்த விடயங்களை முன்வைத்து தடை செய்யப்படவில்லை. மாறாக அனைத்தும் மக்கள் விரோத நடவடிக்கையை அடிப்படையாக கொண்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் தடை செய்யப்பட்டது. தடை ஏகாதிபத்திய தன்மை வாய்ந்ததாக இருந்த போதும் கூட, அந்தக் காரணத்தை மறுக்க முடியாத மனித உரிமை மீறலாகவே இருந்தது. இந்த மனித உரிமை மீறலை, புலிகள் நிவர்த்தி செய்யவே மறுத்தனர். இப்படி ஏகாதிபத்திய நடவடிக்கைகளுக்கு ஊக்கியாகவே செயலாற்றினர்.

புலிகள் தம்மைத் தாம் சுயவிமர்சனம் செய்யவும், மக்கள் நலனை முன்னிலைப்படுத்தவும் தவறினர். மாறாக இந்த தடையை எதிர்த்து, ஐரோப்பிய கண்காணிப்பாளர்களையே வெளியேற்றினர்.



படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்திய தன்மை வாய்ந்த தடை, இலங்கை அரசின் மனிதவுரிமை மீறல்களுக்கு எதிரானதாக இருக்கவில்லை என்பது உண்மை. ஒரு தலைப்பட்சமான அணுகுமுறையைக் கொண்ட, ஏகாதிபத்திய தன்மை வாய்ந்ததாக அமைந்தது என்பது உண்மை.

அதை அடிப்படையாக கொண்டு, இலங்கை அரசுடன் ஒப்பிட்டு தமிழ் மக்களை புலிகள் ஒடுக்குவதை நியாயப்படுத்துவதை நாம் அனுமதிக்க முடியாது. தமிழ் மக்களின் மனித உரிமைகளை அங்கீகரிப்பது, அதற்கான போராட்டத்தை முன்னெடுக்க மறுப்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. புலிகள் மனித உரிமை மீறலைச் செய்யும் உரிமையைக் கோரி, பிரஞ்சு ஏகாதிபத்தியத்துக்கு எதிராக நிறுத்துவதை நாம் எண்ணிப்பார்க்கவே முடியாது.

ஆனால் புலிகள் அப்படித்தான் கோரினர். ஐரோப்பிய தடையை அப்படித் தான் விளக்கினர். பாரிஸ் கைதை இலங்கை அரசின் தூண்டுதலாக விளக்குகின்றனர். இலங்கை அரசின் தூண்டுதல் பங்களிப்பு ஒருபுறம் இருந்தாலும், மறுபக்கம் கைதுக்கான அடிப்படை தமிழ் மக்கள் மீதான புலம்பெயர் அடாவடித்தனங்கள் மீது தான் நிகழ்ந்துள்ளது. இலங்கை அரசின் தூண்டுதல் என்பதை , இந்த நாட்டு சட்டம் அங்கீகரித்துச் செல்லாது. மாறாக இந்த குற்றச்சாட்டுகள் இங்குள்ள குற்றங்களை அடிப்படையாக கொண்டு செயலாற்றுகின்றது. மக்களுக்காக சட்டத்தை மீறியதால் அல்லது மனிதாபிமான செயல்களை செய்ததால் இக் கைதுகள் நடக்கவில்லை.

புலிகள் சட்டப்படி தடை செய்யப்பட்ட அமைப்பு. மறுபக்கத்தில் சட்டப்படியான வேறு அமைப்புகள் மூலம் தான் இயங்கியவர்கள். சட்டப்படியான அந்த பினாமி அமைப்பைச் சுற்றித் தான் கைதுகள் நிகழ்ந்துள்ளது. சட்டப்படியான அமைப்பு சட்டவிரோதமான அமைப்புடன் கொண்டிருக்கின்ற உறவும், சட்டபடியான அமைப்பு தமிழர் மீதான தனது சட்டவிரோத செயல்பாட்டை எப்படி செயற்படுத்தியது என்பதை நிறுவும் வரை, இவை சட்டப்படி இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த முரண்நிலை இலங்கை அரசின் தலையீட்டினால் இவை நிகழ்ந்தது என்ற கூற்றை மறுத்து அம்பலப்படுத்துகின்றது.

வெளிப்படையான சட்டப்படியான இந்தக் கைது தமிழ் மக்களின் எந்த உரிமையையும் கைவிடக் கோரியோ, தமிழ் மக்களின் மனிதாபிமான நடிவடிக்கையில் ஈடுபடக் கூடாது என்று கூறியோ நடக்கவில்லை. அதை ஏகாதிபத்தியம் கோருமளவுக்கு, அதை



படிப்பகம்

www.padippakam.com



ஒடுக்கும் அளவுக்கு புலிகள் இக்கூறுகள் எதையும் கொண்டிருக்க வில்லை. இவை வெளிப்டையான குற்றங்களை அடிப்படையாக கொண்ட கைதுகள்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் என எவ்வழிமுறைகளைத் தான் புலிகள் கொண்டுள்ளனர்? எந்த மனிதாபிமான செயல்களில் ஈடுபடுகின்றனர்? இந்தக் கேள்வி, இதன் எதிர்மறைத் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றது. பிரஞ்சு ஏகாதிபத்தியம் தமிழ் மக்களின் உரிமையை கைவிடக் கோருவதற்கு முன், புலிகள் அதற்காக எந்தவகையிலும் போராடவில்லை என்பதே உண்மை. மக்களின் நலன் சார்ந்த செயற்பாடுகளை கைவிடக் கோருவதற்கு, புலிகள் அவை போன்றவற்றில் ஈடுபவதில்லை என்பது உண்மை. பெயரளவில் அமைப்புகள் மட்டும் உண்டு.

இந்த உண்மை ஒருபுறம், மக்கள் உரிமைப் போரைக் கைவிடக் கோரி அல்லது அதனை ஒடுக்கும் அடிப்படையில் கைது நடந்தது என்பதை மறுதலிக்கின்றது. இல்லை அப்படியே தான் நடந்தது என்றால், கைதுக்கான காரணங்களை யார் உருவாக்கியது. ஐரோப்பிய தடைக்கான காரணத்தை யார் உருவாக்கியது புலிகள் தான். இந்த கைதுகளுக்கான காரணத்தை அன்றாடம் புலிகள் உற்பத்தி செய்தனர். இந்த வகையில் புலிகளின் செயற்பாடுகள் என்ன?

கட்டைப்பஞ்சாயத்து, அடிதடி, உருட்டல் மிரட்டல், பொறுக்கித் தின்னும் தமது அதிகாரத்துக்காக தமக்கு இடையிலான மோதல்கள், போராட்டத்தைச் சொல்லி வர்த்தகம், பணத்தை திரட்டுதல், இதுதான் அவர்களின் அன்றாட நடடிவடிக்கைகள். பண திரட்டுதலுக்காக சில பாடசாலைகள், கலாசார மையங்கள், விளையாட்டு சங்கங்கள், அதைச் சுற்றி நிகழ்ச்சிகள், அனைத்தையும் தழுவிய வர்த்தகம். இதைச் சுற்றி அடாவடித்தனமான மிரட்டல் கலந்த சமூக அதிகாரம். எங்கும் எதிலும் இதை நாம் காணமுடியும். எல்லா சமூக பொது வேலையிலும் இது பிரதிபலிக்கின்றது.

சபாலிங்கம் படுகொலை, நாதன் கஜன் படுகொலை, லட்சமி வீட்டில் ஆவணங்களைத் திருடியது, குகநாதனுக்கு எதிரான அவதூறு, சோபாசக்தி மீதான அவதூறு, லாச்சப்பலில் கம்பத்தில் துரோகியாக காட்டி கட்டியது முதலாக எத்தனையோ வெளிப்படையான சம்பவங்கள். இதற்கு வெளியில் இரகசியமான எத்தனையோ நிகழ்ச்சிகள். அரசியல் ரீதியாக இப்படி சமூகத்தை அச்சம் பீதியால் மிதக்கவிடப்பட்ட ஒரு சூழல். இதைவிட ரவுடிக் கும்பல்களைக்



படிப்பகம்

www.padippakam.com



கொண்ட அடிதடிகள் வரை எத்தனை சூக்குமான விதவிதமான நடைமுறைகள்.

புலம்பெயர் சமூகம் மத்தியில் ஆதிக்கம் வகிக்கும் ஒரே மொழி மிரட்டல், அச்சுறுத்தல் ஊடாக காரியங்களை சாதிக்கும் வன்முறை. இதுவே பொதுவான அதிகாரத்துக்கான குரலாக உள்ளது. இதற்குள் பணத்தை எப்படி எந்த வழியில் கறப்பது என்பதற்கு, சாம பேத என அனைத்து வழிகளும் கையாளப்படுகின்றது.

நீண்டகாலமாக அமைதியும் மவுனமுமாக நீடித்த புலம்பெயர் புலிக்கெடுபிடிக்கு எதிரான ஒன்றாகவே இக் கைது உள்ளது. இது விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான ஒரு ஏகாதிபத்திய நடவடிக்கைகளில் ஒன்றாக, நாம் இதை எந்த வகையிலும் பார்க்க முடியாமல் செய்துவிட்டது. அதை அவர்களே புலிகளே என்றோ இல்லாதாக்கிவிட்டனர்.

தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை கைவிட்டு அன்னியமாகிப்போன புலிகள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பிரஞ்சு மக்களின் நியாயமான ஆதரவை நினைத்துக் கூட பார்க்க முடியாது. சட்ட ஒழுங்குக்கு உட்பட்ட ஒரு பிரச்சனையாகவே இது இருப்பதை, அரசியல் ரீதியாக நாம் மறுக்கமுடியாது.

மீண்டும் நாம் கோருவது தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தை, மக்களின் அடிப்படை உரிமையை அங்கீரித்து போராடுவதன் மூலம் தான், தமிழ் மக்களையும் உலகத்தையும் நாம் வெல்லமுடியும்.

***06.4.2007***



படிப்பகம்

www.padippakam.com



# பெரும்பான்மை திட்டம் பேரினவாதமே என்பதை இனம் காண்பதும், மாற்றாக குறைந்தபட்ச ஜனநாயகத் தீர்வும்

(இந்த விமர்சனத்தை தீர்வை முன்வைக்கும் அனைத்து தரப்புக்கும், இதன் மீது அக்கறை உள்ள அனைத்து சமூகப் பிரிவுக்கும் முடிந்தளவுக்கு அனுப்பிவைக்கவும்)

கொடூரமான புலிப்பாசிசம் ஒருபுறம், பேரினவாத அரசு நடத்தும் சதிகள் சூழ்ச்சிகள் கூடிய பாசிசம் மறுபுறம். இரண்டும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பதால், அனைத்தையும் மோசடி செய்தல், ஏய்த்து ஏமாற்றுதல், சமூகங்களை இங்குமங்குமாக நம்பிக்கையூட்டி அலைக்கழித்தல், சமூகத்தையே சின்னாபின்னப்படுத்தி சிதைக்க காலத்தை இழுத்தடித்தல், அரசியல் பித்தலாட்ட மோசடிகளின் ஒட்டு மொத்த வடிவம் தான், இனப்பிரச்சனைக்கு தீர்வு என்ற பெயரில் இன்று அரங்கேறுகின்றது.

குறிக்கோளற்ற வகையில் காலத்தை இழுத்தடித்து பேச்சு வார்த்தைகள், சமாதானம் என்ற பெயரில் அர்த்தமற்ற வார்த்தைகள், அமைதி சமாதானம் என்ற பெயரில் கொலை வெறியாட்டங்கள், மக்களையே திண்டு செரிக்கும் சர்வ கட்சி கூட்டங்கள் என்ற பெயரில் வம்பளப்புகள், நிபுணர் குழுக்களின் ஆலோசனையின் பெயரில் பேரினவாத அரசியல் மோசடிகள், இப்படி பற்பல அன்றாடம் அரங்கேறுகின்றது.

தமிழர் பிரச்சனைக்கு தீர்வுகள் என்ற பெயரில் சிறிய கும்பல்கள், மக்களுக்கு விளங்காத மொழியில், மக்களை எட்டி மிதித்தபடி கட்சிகளையும், சந்திப்புகளையும் நடத்திக்காட்டுகின்றனர். இந்த வகையில் அமைக்கப்பட்ட நிபுணர் குழுக்களின் அறிக்கைகள்



படிப்பகம்

www.padippakam.com



எல்லாம், கடைந்தெடுத்த அரசியல் மோசடிகளை அடிப்படையாகக் கொண்டது. இந்த வகையில்தான் அரசால் நியமிக்கப்பட்ட புத்திஜீவிகள் குழுவின் பெரும்பான்மை அறிக்கை உள்ளது. இதன் தமிழ் ஆக்கத்தை ''நண்பர்கள் வட்டம் - பிரான்ஸ்'' வெளியிட்டுள்ள துடன், இதையொட்டிய ஒரு சந்திப்பை நடத்தவுள்ளனர்.

இது போன்ற அறிக்கைகள் மற்றும் தீர்மானங்களை முன்வைப்பவர்கள், தீர்வு வைக்கப்போவதாக விடும் சவால்கள் எல்லாம் வழமை போல் வெற்று கூச்சலாகவும், காலத்தை இழுத்தடிக்கும் ஒரு சதியாகவும், ஊரையும் உலகத்தையும் ஏமாற்றும் சூழ்ச்சியாகவும் அம்மணமாகி வருகின்றது. இந்த நிலையில் இந்த அறிக்கை மீதான கவனத்தை குறிப்பாக்கி, இந்த விடையங்கள் மீதான ஒரு தெளிவான சிந்தனைப் போக்கை கட்டமைப்பது அவசியமாகின்றது.

மறுபக்கத்தில் யுத்தத்தை விரும்பி வலிந்து தாக்கிய புலிகள் அதில் இருந்து மெதுவாக ஒதுங்கி விலக, யுத்தத்தை நோக்கி பேரினவாதம் வலிந்து கால் வைத்து முன்னேறுகின்றது. இருந்த போதும் தீர்வை நோக்கிய இந்த சூழ்ச்சிகள் பற்றி தெளிவு கொள்வது அவசியமானது.

1. 1.1 இல் ''உரிய அரச அதிகாரத்திற்கான பங்கு வழங்காமை யினாலேயே இன்றைய சிக்கலான சூழல் ஏற்பட்டுள்ளது.'' இவ்வாக்கியம் மூலம் இனப்பிரச்சனையை அடையாளம் கண்ட விதமே முற்றாக முழுமையாக தவறானது. அரசு மற்றும் அதிகாரம் என்ற எல்லைக்குள் தமிழ் மக்களின் பிரச்சனையை குறுக்கி விடுவதன் மூலம், பேரினவாதத்தை மூடிமறைக்கின்றது.

   தமிழ் மக்கள் இன ரீதியாக அடையாளம் காணப்பட்டு ஒடுக்கப்பட்டதன் விளைவுதான் இனப்பிரச்சனை. குறிப்பாக தமிழ் மொழி பேசும் மக்கள் எப்படி ஒடுக்கப்பட்டனர், ஒடுக்கப்பட்டுள்ளனர் என்ற விபரத்தை ஆதாரமாக தயாரிக்கமால், இதை ஒரு நாளும் சரியாக இனம் காணவோ, தீர்க்கவோ முடியாது.

2. 1.2 இல் ''இந் நிலமை காரணமாக சிறுபான்மையினர் ஓரம் கட்டப்பட்டதோடு, இலங்கை அரசிலிருந்தும் ஒதுக்கப்பட்டதால் ஏற்கெனவே அதிகாரப் பகிர்வு குறித்து மேற்கொள்ளப்பட்ட பொறிமுறைகள் தோல்வி அடைந்தன.'' இது அபத்தமானது. அதிகாரப் பகிர்வுகள் தோல்வி அடைந்தமைக்கு இவை காரணமல்ல. மாறாக பேரினவாத நிலையே காரணம். அந்த



படிப்பகம்

www.padippakam.com



வகையில் பேரினவாத நிலைமையை அடையாளம் காணவும், அதை சுட்டிக்காட்டவும் தவறுகின்ற அறிக்கை, தோல்விக்கான காரணத்தை மூடிமறைக்கின்றது. இதன் மூலம் அதிகாரப் பகிர்வின் உண்மைத் தன்மையையே மீளவும் கேள்விக்குரியதாக்குகின்றது.

3. 1.3 இல் ''வித்தியாசமான இனக் குழும, மத அடையாளங்களை இணைத்துச் செல்வதற்கான இலக்கு அரசியல் அமைப்பு ரீதியாக உருவாக்கப்பட்டு'', என்றும் 1.4 இல் ''வேறுபட்ட இனங்கள், மதப் பிரிவினரிடையே மிக அதிக அளவிலான உண்மையான அதிகார பகிர்வினை வழங்கும்'' என்றும் அரசியல் அமைப்பு திருத்தத்தை முன்வைக்கின்றது. மத அடையாளத்தை திணிப்பது, உருவாக்குவது இனப்பிரச்சனையில் புதியதொரு அரசியல் சூழ்ச்சி. மதத்துக்கு அதிக அதிகாரம் என்றால் என்ன? இன அடையாளத்தை குறிப்பிட்ட இந்த அறிக்கை, அதன் அடிப்படையில் தீர்க்க தவறுகின்றது. தவறாக இந்த பிரச்சனையை மத அடையாளமாக காட்டி, அதை வலிந்து முன்னிலைப்படுத்தி இதற்குள் திணிக்கின்றது. அரசு மதத்துக்கு வெளியில் இருக்க வேண்டிய ஒன்று என்பது கட்டாயமான ஒன்று.

4. 1.5 இல் ''இக் குழுவினரின் அணுகுமுறை இரு முனைகளைக் கொண்டது. அதாவது மாகாண சபைகளும், உள்ளூராட்சி சபைகளும் அரசின் நிறுவனங்களாகவும்,'' என்பதன் மூலம் இனங்கள் என்ற அடிப்படையில், மொழிகள் என்ற அடிப்படையில் பிரச்சனையை இனங்காணத்தவறி, அதை பேரினவாத நிலைக்குள் இதை சிறுமைப்படுத்தி ஒடுக்க முனைகின்றது.

5. 2.2 இல் ''ஒற்றையான, சமஷ்டியிலான, பிரதேசங்களின் அல்லது மாகாணங்களின் ஒன்றியம் என அழைக்கப்படும்'' என்பது உள்ளடக்கத்தில் தேசிய இனப்பிரச்சனையை முழு இலங்கைக்குமான ஒன்றாக கருத மறுக்கின்றது. மாகாணங்கள், மாகாண சபைகள் அனைத்தையும் இலங்கைக்கான ஒன்றாக கொண்டு வந்தவர்கள், இனப்பிரச்சனை தீர்வில் அதை தமிழருக்கு மட்டுமானதாக காட்டுவது, அதனடிப்படையில் பேரினவாதம் தான். தமிழ் மக்களை அது தனிமைப்படுத்தி இனவொடுக்குமுறையை ஆணையில் வைக்கின்றது.

6. 2.4:இல் ''மக்களுக்கு தமக்கான மொழியை உருவாக்கவும், வளர்க்கவும் அத்துடன் தமது கலாசாரத்தின் வரலாற்றினைப் பேணவும், வளர்க்கவும், அபிவிருத்தி செய்யவும் உரிமை உண்டு.



படிப்பகம்

www.padippakam.com



அத்துடன் இலங்கையர் என்ற பொதுவான அடையாளத்தினைப் பலவீனப்படுத்தாத வகையில் அரச அதிகாரத்தில் பகிர்வு கொள்ளவும், ஏனைய அரச கட்டுமானங்களில் பிரதிநிதித்துவம் பெறவும் உரிமை உண்டு. இவ் விளக்கமானது நாட்டின் எல்லைகளின் தன்மையை முழுமையாக அல்லது பகுதியாக பிரித்தல் அல்லது குடியரசின் அரசியல் ஐக்கியத்திற்கு பங்கமேற்படும் வகையிலான நடவடிக்கைகளுக்கு ஊக்கத்தினை வழங்குவதாக கருதுதல் ஆகாது.'' என்பது அபத்தமான விளக்கம். யாருக்கு யார்? ஏன்? இதை விளக்க முனைகின்றனர். நிச்சயமாக தமிழ் மக்களுக்கு அல்ல சிங்கள பேரினவாதிகளுக்கே. இந்த வகையில் இத் திட்டம் பேரினவாதிகளை திருப்தி செய்கின்ற வகையில், இதை விளக்கி தீர்வை இனம் காண முனைகின்றது. பொதுவான விளக்கம், அடையாளம் காணல், இவைகள் மட்டும்தான் உண்மையான நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும்.

7. 4.2இல் ''குடியரசின் மாகாணத்தினை அல்லது அதன் பாகத்தை பிரிப்பதற்காக நேரடியாக அல்லது மறைமுகமாக ஊக்கமளித்தல் அல்லது நியாயப்படுத்தல் அல்லது முயற்சிகளை மேற்கொள்ளல் என்பன மாகாண அரசினால் அல்லது மாகாண சட்ட சபையினால் மேற்கொள்ள முடியாது.'' என்ற விளக்கம் அபத்தமானது. ஒரு தீர்வுத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படும் போதும், முன்வைக்கப்படும் போதும் இப்படி இனம் காண்பது, விளக்குவது, யாரைத் திருப்தி செய்ய? நிச்சயமாக தமிழ் மக்களை அல்ல. சிங்கள பேரினவாதிகளைத்தான். இனப்பிரச்சனையை இவர்களால் வேறு எப்படிதான் இனம் காணமுடியும்.

8. 4.3இல் ''நாட்டின் இறைமைக்கு அல்லது எல்லைப் பாதுகாப்பிற்கு அல்லது ஐக்கியத்திற்கு பங்கம் ஏற்படும் வகையில் நிகழ்வு ஏற்படும்போது மாகாண நிர்வாகத்தின் அழைப்பின்பேரில் மத்திய ஆட்சி தலையிடமுடியும். அவை அரசியல் அமைப்பில் தெளிவாக வரையறுக்கப்படும்.'' பேரினவாதத்தை திருப்தி செய்கின்ற வாதங்கள். யாரால் ''நாட்டின் இறைமைக்கு அல்லது எல்லைப் பாதுகாப்பிற்கு அல்லது ஐக்கியத்திற்கு பங்கம் ஏற்படும்'' என்றால் அது தமிழரால் என்று மறைபொருளாகின்றது. அசட்டுத்தனமான ஒன்று. ஏன் மத்திய அரசால், சிங்களப் பிரிவால் நடக்காது.? இப்படி இனம்காணுதல், விளக்குவது என்று இந்த அத்தியாயம் முழுக்க பேரினவாதமாகவே கொட்டிக்கிடக்கின்றது.

9. 6:3இல் ''அதன் அடிப்படையில் அதிகார பரவலாக்கத்திற்கான பொருத்தமான அலகு மாகாணம் என குழு கருதுகிறது.'' இது



படிப்பகம்

www.padippakam.com



உண்மையில் இனங்களின் உரிமையினை மறுக்கின்றது. அதை வெறும் அதிகாரமாக விதந்துரைக்கின்றது. இலங்கையை இன மற்றும் மொழி பிரதேசங்களாக பிரிக்க மறுக்கின்ற பேரினவாத அரசியல் சூழச்சி, பிரச்சனையை தீர்க்க உண்மையில் விரும்பவில்லை.

6:4இல் ''.. தீர்மானங்களை மேற்கொள்ளும்போது இனக்குழுமம் மட்டும் தீர்மானிக்கும் காரணியாக அமையக்கூடாது என்பதும் கருத்தாக உள்ளது.'' ஏன் என இதற்கு பதிலளிக்கவில்லை. உண்மையில் சிங்கள பேரினவாதத்தையே தீர்வாக முன்மொழியும் போது, தனது அந்த எல்லைக்குள்தான் அது விதந்துரைக்கின்றது. பேரினவாதத்தை திருப்தி செய்கின்ற பல விளக்க உரைகளை வழங்க முனைகின்ற இந்த குழு, பிரச்சனையை இனங்காண்பதையே மறுக்கின்றது. சொல்லப்போனால் இந்த பிரச்சனையை அலசி ஆராயும் சுயாதீனமான குழுவாகக் கூட இதனால் இருக்க முடியவில்லை.

10. 6:5 இல் ''1978ஆம் ஆண்டின் அரசியல் அமைப்பும், 1987ஆம் ஆண்டின் மாகாண சபை சட்டத்தின் பிரிவு 42ஆம் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய இரண்டு அல்லது மூன்று மாகாணங்களின் இணைவு அதுவும் சட்டம் வழங்கிய அதிகாரத்தின் பிரகாரம் வாக்கெடுப்பு நடத்தி இணையுமாயின் பிரச்சனைகள் எதுவும் ஏற்படாது என குழு கருதுகிறது.'' இவை எல்லாம் ஏமாற்றுகின்ற, பிரச்சனைகளை சிக்கலாக்குகின்ற ஒரு அரசியல் ஏற்பாடு. உண்மையில் வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்க்கின்ற, அதேநேரம் ஏற்பது போல் நடித்து அதை வாக்கெடுப்புக்கு விட்டு இணைப்பது பற்றி சிங்கள பேரினவாதத்துக்கு காட்டுகின்ற ஒரு ஏற்பாடு. நேர்மையற்ற சதியை இப்படி முன்வைக்கின்றனர். இது மக்கள் கூட்டத்துக்கு இடையில் பிளவுகளையும், விரிசல்களையும் உருவாக்குகின்ற ஒரு தொடர்ச்சியான ஏற்பாடு. கூறப் போனால் இது பேரினவாதத்தின் சதி தான்.

11. 6:7 இல் ''இந்த அடிப்படையில் இலங்கைத் தமிழர்களின் பிரதான கவலைகள் பின்வருமாறு'' 6:7 (அ) ''தமிழ் மக்களைப் பாதிக்கும் பிரச்சனைகளிலும், அரசியல் அதிகாரத்திலும் ஒதுக்கப்பட்டுள்ளதாக காணப்படும் உணர்வு'' 6:7 (ஆ) ''முடிக்குரிய நிலங்களைப் பயன்படுத்தல்'' தமிழ் மக்களின் பிரச்சனையை மிகவும் குறுகிய எல்லையில் சுருக்கி, அதில் முடிக்குரிய காணியை முன்னிலைப்படுத்தி பேரினவாதத்தை



படிப்பகம்

www.padippakam.com



அதன் திட்டமிட்ட குடியேற்றத்தை பாதுகாக்க முனைகின்றனர். முடிக்குரிய காணி அல்லாதவை மீதான அழுத்தமான உரிமையை இனங்களுக்கு மறுக்கின்றது.

அதை 17.1 ''மத்திய அரசாங்கமும் அதன் ஸ்தாபனங்களும், யாப்பின் ஆரம்பத்தில் தேசிய அட்டவணையிலுள்ள விடயங்களின்படி கட்டுப்பாட்டில் அல்லது பாவனையில் வைத்திருக்கும் அரச காணிகளை எல்லாம் மத்தி பொறுப்பேற்கும்.'' என்கின்றது. இப்படி மையமான புள்ளியில் விட்டுக் கொடுக்க மறுக்கின்றது. மாகாணங்கள் காணி மீதான எந்த உரிமையையும் கொண்டிருக்காது.

இதைத்தான் முஸ்லிம் மக்கள் மீது 6:8 (இ) '' முடிக்குரிய நிலங்களைப் பயன்படுத்தல்.'' பற்றி பேச முனைகின்றது. 6:8 (அ) ''வடக்கு, கிழக்கில் காணப்படும் இனச் சுத்திகரிப்பு, அதனைத் தொடர்ந்து ஏற்படும் சொந்த சொத்துகளை இழத்தல் தொடர்பான பயம்.'' என்ற விடயத்திலும் தீர்வை குளறுபடியாக்கி மிரட்டுகின்றது. முஸ்லிம் மக்களின் தனித்துவத்தை அடையாளம் காண மறுக்கின்றது. இந்த அறிக்கை அவர்களுக்கான சரியான ஏற்பாட்டை முன்வைக்கவில்லை. எப்படி தமிழ் மக்களுக்கு வைக்கவில்லையோ, அப்படி முஸ்லிம் மக்களுக்கும் முன்வைக்கவில்லை. பின் 6:8 (ஆ) ''பாதுகாப்பு'' பற்றி பேசுகின்றது. இதுவே மற்றொரு கேள்வியை எழுப்புகின்றது. தமிழ் மக்களுக்கு பயம் ஏற்படாதோ? பாதுகாப்பு எப்படி உறுதி செய்யப்படும்!

6:9 இல் ''வடக்கு, கிழக்கில் உள்ள சிங்கள மக்களின் கவலைகள் என பின்வருவனவற்றை குழு அடையாளப்படுத்து கிறது. 6:9 (அ) ''பாதுகாப்பு'' 6:9 (ஆ) ''அதிகார பரவலாக்கத்தால் வாழ்வுக்கான வசதிகளை இழக்கக்கூடிய ஆபத்துக்கள் பற்றிய ஏக்கங்கள்.'' என்று இந்த தீர்மானம் சிங்கள மக்களின் பயம், ஏக்கம், ஆபத்து, இழப்பு என்று அலட்டுகின்றது. இது தமிழ் மக்களுக்கும் சிங்கள பகுதியில் பொருந்தும் தானே. அங்கு அது பற்றி அக்கறை கொள்ளவில்லை. தீர்வுகள், அதன் வரையறைகள் தவறாக உள்ள போதுதான், இவை பற்றி பிரச்சனைகளே உருவாகின்றது.

12. 6:10(அ) ''தனியான வடக்கு, கிழக்கில் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் கவலைகளைக் கருத்தில்கொண்டு இரண்டு சுயாட்சி அலகுகள் அதனுள்ளே அமைக்கப்படுகின்றன.'' என்று



படிப்பகம்

www.padippakam.com



கூறப்படுகின்றது. இதில் சிங்கள மக்கள் சுயாட்சி என்கின்றனர். எவ்வளவு இழிவாக தமிழ் முஸ்லீம் மக்களை காயடிக்க முடியுமோ, அப்படி இது காயடிக்கின்றது. நடத்தப்பட்டது திட்டமிட்ட சிங்கள குடியேற்றம். இந்த பேரினவாத செயலை கண்டிக்காது, அதற்கு அரசியல் அந்தஸ்து வழங்கும் ஒரு ஏற்பாடு. அப்படியாயின் இதே காரணங்களுக்காக, தமிழர்கள் செறிந்து வாழும் சிங்கள பகுதிகளில் சுயாட்சியை வழங்குவார்களா?

13. 6:10(ஆ)(2) ''சிங்கள பெரும்பான்மை பகுதிகளை அருகிலுள்ள மாகாணத்துடன் இணைத்தல்.'' என்ற வாதம் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தின் மீதான நியாயப்படுத்தல். சட்ட ரீதியான அந்தஸ்து வழங்கி, அதை தமிழ் பிரதேசங்கள் அல்லாததென வென்று பிரிக்கின்ற சூழ்ச்சி. இதனால் தமிழ், முஸ்லிம் என்று பிரிக்கின்றனர்.

14. 6:10 (இ) ''வடக்கு, கிழக்கிற்கென பொதுவான மாகாண சட்ட சபையும், அரசும் அமைதல் வேண்டுமெனவும், அதன் ஆயுள் 10 வருடகாலம் எனவும், அதன் பின்னர் கிழக்கில் வாக்கெடுப்பு நடத்தலாம்'' இது தமிழ் மக்களை பிளக்கின்ற சூழ்ச்சி. இணைப்பு, பிரிப்பு என்று, தமிழ் மக்கள் பிரச்சனையை அங்கீகரிக்க மறுக்கின்ற பேரினவாத அரசியல் நாடகத்தின் நீட்சி. இந்த பெரும்பான்மை பேரினவாதத்தை எப்படி அமுல்படுத்துவது என்று கூடி ஆராய்ந்து, முன்வைத்த அறிக்கை தான் இது.

இப்படி அறிக்கை முழுக்க பற்பல கூறுகள். சிலவற்றைத் தான் எடுத்துக் காட்டியுள்ளேன். மாறாக குறைந்த பட்ச அடிப்படையில் சில முன் மொழிவுகள்.

குறைந்தபட்ச ஜனநாயகத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஜனநாயகத் தீர்வு

இனப்பிரச்சனையில் குறைந்தபட்ச ஜனநாயகத்தை அடிப்படையாக கொண்ட, எமது கருத்து சார்ந்த முன்மொழிவு ஒன்றை எடுத்துக்காட்ட முனைகின்றோம். இதை அடிப்படையாகக் கொண்டு ஒரு தீர்வை, அனைத்து தரப்பையும் வலியுறுத்தி முன்வைக்க கோருகின்றோம். இதை நாம் தெளிவுபடுத்த முன், எமது நிலைப்பாடுகள் மீதான சில தெளிவுபடுத்தல் அவசியமானது.

1. எம்மைப் பொறுத்தவரையில் இலங்கையில் இனமுரண்பாட்டுக்கான தீர்வு சுயநிர்ணய அடிப்படையிலானதுதான். இது



படிப்பகம்

www.padippakam.com



அல்லாத அரசியல் அமைப்பில், இனப்பிரச்சனையை, அதன் சமூக பொருளாதார கூறுகளையும் முழுமையாக தீர்க்க முடியாது என்பது எமது தெளிவான நிலைப்பாடு. இதற்கு குறைந்த எந்தத் தீர்வும் இனங்களுக்கு இடையேயான பிரச்சனையையும், இனங்களுக்குள்ளான எந்த சமூக முரண்பாடுகளையும், மொத்த சமூக பிரச்சனைகளையும் தீர்க்காது. இது எமது அரசியல் ரீதியான தெளிவான துல்லியமான நிலைப்பாடு. உண்மையில் அசாத்தியமான இந்த உண்மையை எடுத்துச் சொல்வதற்கு அப்பால், இதை நிர்ணயம் செய்யக் கூடிய வகையில் சமூகம் மீதான செயல்தளத்தில் எந்த சமூக பலத்தையும் இக்கருத்து கொண்டிருக்கவில்லை. இதை அடைவதற்கு இடைக்கட்டத் தீர்வைக் கூட முன்வைக்கவும், அதில் இருந்து முன்னேறும் நிலையிலும் கூட இக்கருத்து சமூகம் சார்ந்த அமைப்பு வடிவத்தைக் கொண்டிருக்கவில்லை.

2. சுயநிர்ணயத்தை அடையும் வழியில், ஒரு இடைக்கால தீர்வுத் திட்டத்தை மக்கள் நலன் சார்ந்து முன்வைக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. இதுவும் கூட இன்றளவில் கருத்தாகத்தான் உள்ளது. மக்களின் குறைந்தபட்ச நலன்களை முன்னிறுத்தி, அதை அமுல்படுத்தக் கோரும் வகையில் இலங்கையில் யாருமில்லை. எந்த சக்தியும் இதற்கு தயாரற்று இதற்கு எதிராகவே உள்ளனர். இந்த கருத்துத் தளம் சார்ந்து, அரசியல் ரீதியாக மக்கள் திரள் அமைப்பைக் கொண்ட இயங்கு தளம் எதுவும் கிடையாது. சமூக இயக்கம் முழுவதும் பாசிசமயமாகி, குறுகிய அதிகார வெறிக்குள் சமூகத்தை அங்குமிங்குமாக பிய்தெறிந்து பொறுக்கித் தின்னும் கூட்டத்தின் எல்லைக்குள் முழு சமூகமும் மலடாக்கப்பட்டுள்ளது. இடைக்கால ஒரு சமூகநலத் தீர்வை முன்வைக்க முடியாத நிலை. (இதை பேச்சுவார்த்தை தொடங்கிய காலத்தில் நான் முன்பே வைத்துள்ளேன். பார்க்க இலங்கையில் மக்கள் சமாதானமாகவும், சந்தோசமாகவும் வாழ குறைந்த பட்சம் எவை தீர்க்கப்பட வேண்டும்)

இவ் இரண்டும் கருத்தளவில், மக்கள் சார்பு நிலையில் முன்வைப்பதாக மட்டும் உள்ளது. இந்த அவலமான ஒரு நிலையில், மூன்றாவது நிலையை ஒட்டிய குறைந்தபட்ச ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு நிலைக்கு நாங்களும் கீழ் இறங்கி, அதையே குறிப்பாக்கி தெளிவான ஒரு வழிகாட்டலை வழங்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



3. இலங்கை முழுவதுமான இன்றைய பாசிச சூழலில் இருந்து, தப்பித்துக் கொள்ள மக்கள் விரும்புகின்றனர். இதை கவனத்தில் கொண்டு, இந்த உணர்வுகள், நிகழ்வுப் போக்குகள் மீது செயலாற்றவும் கோருகின்றது. எமது கருத்துக்களை மீறியும், மக்களின் வாழ்வியல் நிலை, அவர்களின் உடனடித் தேவை மீதான ஒரு தீர்வை, அவர்களின் அவலங்கள் கோருகின்றது.

இது உள்ளடக்கத்தில் பாசிச யுத்த பிரிவுகளிடமிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளும் ஒரு முயற்சி. இந்த நிலையில், நாம் இந்த மக்களின் துயரங்களை துடைத்துக்கொள்ளவும், அதையொட்டி இணங்கிச்செல்வதும் காலத்தின் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதில் கூட நாம் ஆளுமை செலுத்தவோ அல்லது அதன் திசைவழியை ஒழுங்குபடுத்தும் சக்தியோ எம் முன் கிடையாது. ஆனால் குறைந்தபட்சம் அதை நோக்கி ஒரு சிந்தனை முறையை உருவாக்குவது, அவசியமானது. இந்த வகையில், மூன்றாவது நிலை மீதான ஒரு தீர்வுக்கான ஒரு சிந்தனைமுறையை தூண்டும் முயற்சி தான் இது.

எமது மூன்றாவது நிலை பெரும்பாலானவர்களின் அருபமான முதலாவது அரசியல் நிலையாகும். ஆனால் அதில் தெளிவற்ற ஒரு கதம்பம். இந்த வகையில் இந்த மூன்றாவது வகையான தீர்வு என்பது, சமூகத்தில் நிலவும் பல்வேறு சமூக முரண்பாடுகளை தீர்க்கமாட்டாது என்பதை முதலில் தெளிவாக புரிந்திருக்க வேண்டும். இந்த அரசியல் நிலையைத்தான் பெரும்பான்மையானவர்கள் கொண்டுள்ளனர். இதற்கு வெளியில் யாரும் பாசாங்கு செய்யத் தேவையில்லை.

இது நிலவுகின்ற இந்த பிற்போக்கான அரசியல் அமைப்புச் சட்டத்தில், சில சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றது. இன்று பேசப்படும் அரசியல் தீர்வு இதற்கு உட்பட்டதே. இந்த நிலையில் சமூகத்தின் ஏனைய சமூக முரண்பாடுகள் பற்றிய விவாதப் பொருளையே இது இயல்பாக தவிர்த்துக்கொள்கின்றது. இன்று அரசு கூற முனையும் கற்பனையாகவேயுள்ள அந்த தீர்வும் சரி, அதையொத்த தீர்வுகளும் சரி, இதற்குள்தான் இயங்குகின்றது.

இந்த வகையில்தான் அண்மையில் வெளியாகிய பெரும்பான்மை அறிக்கை. இதை எடுத்துக் கொண்டால், இது பெருமளவில் உப்புச்சப்பற்ற வெற்று அலட்டல். சாதாரண மக்கள் புரிந்து கொள்ளமுடியாத வகையில், வெளிப்படையாக பேச மறுக்கின்ற,



படிப்பகம்

www.padippakam.com



இனப்பிரச்சனையை தீர்க்கின்ற வகையில் புலமையெதுவுமற்ற ஒரு அறிக்கை. உண்மையில் பேரினவாதத்தை இறுக்குகின்ற, நியாயப்படுத்துகின்ற ஒரு தீர்வு. அதைத்தான் சுருக்கமாக மேலே பார்த்தோம். படுமோசமானதும், இலங்கையில் இன ஒடுக்குமுறையை கட்டமைத்த பேரினவாத நிலையை பேணுகின்ற வகையில், ஒரு தொடர்ச்சியான முன் முயற்சிதான் இது. இதையும் இந்த பேரினவாத அரசியல் மலம் துடைக்க பயன்படுத்துகின்றது என்பது வேறு விடயம்.

இந்த அறிக்கையும் சரி, இது போன்ற அறிக்கைகளும் சரி, இனப்பிரச்சனையை குறிப்பாக்கி அதற்கான தீர்வை முன்வைக்க தவறுகின்றன. எந்த மக்கள் அதை விளங்க வேண்டுமோ, அந்த மக்கள் புரியாத வகையில் இதை திணிக்க முனைகின்றது. உண்மையில் பார்த்தால் இதன் உள்ளடக்கம், அரசியல் அமைப்பில் ஓட்டைகளை உருவாக்கி அதற்குள் அங்குமிங்குமாக இனவாதத்தை மிதக்கவிட முனைகின்றது.

சமூக முரண்பாடுகளை தீர்க்க மறுக்கின்ற இந்த அரசியல் சட்ட அமைப்புக்குள், இதை ஆதரிக்கின்ற சக்திகள் இனப்பிரச்சனையை குறைந்தபட்ச வரையறையில் தீர்க்கமுடியும். இனமுரண்பாடு அபத்தங்களையும் கடந்து, இதை செய்யமுடியும். பெரும்பான்மையின் விருப்பத்தை பெறும் வகையில், அனைத்து அரசியல் கட்சிகளையும், அதன் குறுகிய குதர்க்கமான அரசியல் எல்லைகளை முடக்கும் வகையில், இதை முன்மொழிய முடியும்.

இதை நாம் வைப்பது எமது தொடர்ச்சியான அரசியல் நிலைக்கு முரணாகப்படலாம். மக்கள் விரும்புகின்ற உடனடியான அமைதியை, குறைந்தபட்ச ஜனநாயக கோரிக்கைக்குள் உள்ளடக்கி இதை நாம் முன்வைப்பது அவசியமாகின்றது.

இந்த வகையில் ஒவ்வொருவரின் சிந்தனை முறையையும், குறைந்தபட்ச ஜனநாயக கோரிக்கைக்குள் சிந்திக்க தூண்டுவது அவசிமானதாக உள்ளது.

இந்த வகையில் இனங்களுக்கு இடையில் மக்கள் கூட்டத்துக்குள் அதியுயர் ஐக்கியத்தை ஏற்படுத்தும் வகையில், மிக நுட்பமாக தீர்வுகளை இனம் காணவேண்டும்.

1. இலங்கையில் இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பதை வெறுமனே வடக்கு கிழக்கு மக்களுக்கானதாக காட்டி மட்டுப்படுத்துவது நிராகரிக்கப்பட வேண்டும். இது பிரச்சனையை தீர்க்காது. மாறாக



படிப்பகம்

www.padippakam.com



அலங்கோலமாக்கி சின்னா பின்னமாக்கும். உண்மையில் அரசியல் கட்சிகள், அரசியல் செய்யவே இது உதவுகின்றது.

2. இனப்பிரச்சனைக்கான தீர்வை இலங்கையின் இனங்கள் என்ற அடிப்படையிலான வரையறையிலும் செய்யப்பட வேண்டும். தீர்வு அனைத்து இனங்களுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். தீர்வு ஒரு பிரிவு மக்களுக்கு என்று சிறப்பானதாக, தனித்துவமானதாக இருக்கக் கூடாது. இவை பிரச்சனையை மேலும் கூர்மையாக்கும். வடக்குகிழக்கு மக்களின் பிரச்சனைக்கு தீர்வல்ல, இலங்கையில் உள்ள இனங்களுக்கான ஒரு தீர்வை இனம் காணவேண்டும்.

   இந்த வகையில் முதன்மையானதும் முக்கியமானதுமாக, சிங்கள மக்களுக்கு தனி அலகாகக் கொண்ட இன அடிப்படையிலான தீர்வை வழங்குவது அவசியமானது, நிபந்தனையானது. இலங்கையில் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்களின் தனித்துவமான அடையாளங்களை ஒருங்கிணைக்கும் அரசியல் தான், இதை குறைந்தபட்சம் ஜனநாயக பூர்வமாக தீர்க்கும். இந்த வகையில் அடையாளம் காணப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் என்ற அடிப்படையில், தீர்வுகளை இனம் காண முற்படவேண்டும்.

3. இன அடிப்படையிலான தனி அலகை இனம் காண்பது, இனரீதியான ஒடுக்குமுறையை தொடங்கி வைத்த 1948ஆம் ஆண்டு காலகட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, இதை நெகிழ்ச்சி கொண்ட வடிவில் அணுகுவது அவசியமானது. இயல்பான இடப்பெயர்வுகள், திட்டமிட்டு நடத்திய குடியேற்றங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய வகையில், இந்த வரையறை முன்வைக்கப்பட வேண்டும்.

4. இந்த வரையறைக்குள் உள்ளடங்கும் சகல மக்களினதும் தனித்துவத்தையும், அதற்கு எதிரான முரண்பாடுகளையும் களையும் வகையில், முரண்பாடாக இயங்க முடியாத வகையில் அவை பாதுகாக்கப்பட வேண்டும்.

5. மத்திய (இன மொழியல்லாத) அரசு, மாநில (இன மொழி) அரசு இந்த இணக்கப்பாடான உடன்பாட்டை மீறமுடியாத வகையில் அரசியல் அமைப்புச் சட்டம் அமைய வேண்டும். அந்த (இன மொழி வாரிப்) பகுதியில் வாழும் சிறுபான்மை இனப் பிரிவுகளின் ஆட்சேபனைகள், பெரும்பான்மை இனப் பிரிவுக்கு எதிராக



படிப்பகம்

www.padippakam.com



இருக்குமானால், அந்த பெரும்பான்மை எடுக்கும் இனச் சட்டங்கள் செல்லுபடியாகாத வகையில் சட்ட விதிகள் அவசியமானது. இனம் மற்றும் மொழிச் சட்டங்கள் சிறுபான்மையின் இணக்கமான அங்கீகாரத்துடன் மட்டும் தான் சட்ட அங்கீகாரத்தை பெறும். இது அந்தப் பகுதி சிறுபான்மை மக்களின் விருப்பை தெரிந்து கொள்ளும் நேரடி வாக்கெடுப்புக்கு (அரசியல் வாதிகள் விலை பேசப்படலாம்) உட்பட்ட வகையில் இது அமைதல் அவசியம். (இங்கு வாக்களிப்பை கோருவதற்கு, குறிப்பிட்ட அந்தப் பகுதி மக்கள் அதை கோருகின்றனர் என்பதை உறுதி செய்யும் ஜனநாயகமுறை சட்ட ரீதியாக அவசியமானது.)

6. இன ரீதியான ஒரு மாநிலம் ஒன்றில் காணப்படும் பிரதேச ரீதியான முரண்பாடுகள், பிரச்சனைகள், அதிகாரங்கள் அனைத்தும் ஒரு இணக்கப்பாடான வடிவத்தில் இணைந்து காணப்பட வேண்டும். குறிப்பாக பிரதேச ரீதியான ஒரு ஆட்சேபனைக்கு எதிராக, பொதுவான பெரும்பான்மை மூலமான சட்டத்தை நடைமுறையில் அமுல்படுத்த முடியாத வகையில் இருக்க வேண்டும். ஆட்சேபனையை சட்டமாக்க வேண்டும் என்றால், அந்த பிரதேச மக்களின் வாக்களிப்பு மூலம் மட்டும் தான் செய்ய கூடியவகையில் அரசியல் அமைப்பு கொண்டிருக்க வேண்டும். (இங்கு வாக்களிப்பை கோருவதற்கு, குறிப்பிட்ட அந்தப் பகுதி மக்கள் அதை கோருகின்றனரா என்பதை உறுதி செய்யும் ஜனநாயகமுறை சட்ட ரீதியாக அவசியமானது.)

7. தமிழ் மொழி பேசுகின்ற முஸ்லிம் மலையக மக்களை எடுத்துக் கொண்டால், அவை தனி அலகுகளாக இருக்கின்ற வகையிலும், அது சிங்கள தமிழ் மக்கள் உட்பட்ட இரு பிரதேசங்களினுள்ளும் அமையலாம், தனித்தும் இருக்கலாம். அவர்களின் செறிவை அடிப்படையாகக் கொண்டு, இது வரையறுக்கப்பட வேண்டும். மக்கள் சிதறி வாழ்கின்ற குறித்த பிரதேசங்களில் அடர்த்தியாக வாழ்கின்ற போது, அவர்களின் ஆட்சேபனைகளை உள்வாங்கவும், அதை அந்த சிறுபான்மை நிராகரிக்கும் பட்சத்தில் அதை அமுல்படுத்த முடியாததாகவும் இருக்க வேண்டும்.

8. இன மொழி ரீதியான அமைப்புக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை உள்ளடக்கிய வகையில், அவர்களை பெரும்பான்மை உறுப்பினராக கொண்ட ஒரு மத்திய அரசு உருவாக்கப்பட வேண்டும். ஒன்றையொன்று ஐக்கியப்பட்டு செயல்படவும், அதிகளவு பணம் நிர்வாக அலகுகளுக்கூடாக சிதைக்கப் படுவதையும் இது தடுக்கும்.



படிப்பகம்

www.padippakam.com



9. இந்த வகையில் இன ரீதியான அலகுகளின் அதிகாரங்கள் அனைத்தும் சர்வதேச மற்றும் உள்நாட்டு தொடர்புடைய வகையில் பிரிக்கப்பட வேண்டும். சர்வதேச தொடர்புடையவை மத்தியரசுடனும், உள்நாட்டுடன் தொடர்புடையவை மாநில அரசுகளுடனும் இருக்கும் வகையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். ஒரு பிரதேச பகுதிக்கான வரையறை, இயல்பாக அப்பிரதேச ரீதியான சட்டம், வாழ்வியல், பொருளாதாரம், கல்வி, காணி போன்ற பல துறைக்கு உட்பட்டதாக அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும்.

10. மத்திய, மாநில அரசு இரண்டும் மதத்தில் தலையிடாக் கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும். மதத்தை பாதுகாப்பது, அதற்கு நிதி ஒதுக்குவது முற்றாக தடை செய்ய வேண்டும். மதம் மக்களின் வழிபாட்டுமுறை என்றால், அதை பராமரிப்பது, அனுசரிப்பது மக்களின் உரிமையாக அவர்களிடமே விட்டுவிட வேண்டும். அரசு தலையிடவும், நீதி வழங்குவதும் தடைசெய்யப்பட வேண்டும்.

கல்வியில் அனைத்து மதக் கல்வியும் தடை செய்யப்பட வேண்டும். மொழிக் கல்வி முன்னிலைப்படுத்த வேண்டும்.

11. இனக்குரோதங்களை விதைத்தல் தடை செய்யப்பட வேண்டும். அவை என்ன என்பதை சட்ட வரையறை செய்வது அவசியம். குற்றம் இழைக்கும் பட்சத்தில் உறுப்புரிமையை இழக்கும் வகையில் சட்டம் உருவாக்கப்பட வேண்டும். அரசு உத்தியோகத்தர்கள் தமது பதவியை இழப்பர். அத்துடன் அனைவரும் தண்டனைக்கு உட்பட வேண்டும்.

12. கல்வி, வேலை வாய்ப்பு போன்ற விடயங்களில் இன அலகுகள் சுயாதீனமாக செயலாற்றும் வண்ணம் இருக்க வேண்டும். ஆனால் இலங்கை முழுவதுக்குமான கல்வி முறை, கூலி முறை, தொழிலாளார் சட்டங்கள் பொதுவானதாக இருக்கவேண்டும்.

13. நிதி வளங்களை பகிர்தல் என்பது, மாநில ரீதியான அலகு திரட்டக் கூடிய வகையிலும் இருக்க வேண்டும். மத்திய நிதியைப் பகிர்தல் என்பது, இன மொழி ரீதியான பிரதிநிதித்துவம் செய்யும் பிரதேசத்தைச் சேர்ந்த ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டும். இனங்களின் எந்த ஆட்சேபனையும், இதை தடுக்கும்



படிப்பகம்

www.padippakam.com



வகையில் இது உறுதி செய்யப்பட வேண்டும்.

14. மொழி மற்றும் பண்பாட்டு கலாசார கூறுகள், பரஸ்பர இணைப்புக் குள்ளாக்க வேண்டும். தாய் மொழி பிரதானமாக இருக்கும் அதேநேரம், இரண்டாவது தேசிய மொழி (இது தமிழ் அல்லது சிங்களம்) உயர்தர வகுப்பு வரை கட்டாய பாடமாக இருக்க வேண்டும். உயர் பரீட்சையில் இரண்டாவது மொழித் தேர்வு கட்டாயமாக இருக்க வேண்டும். இது ஒரு 10, 15 வருட கால இடைவெளியில் முழுமையாக அமுலுக்கு வரவேண்டும். அரசு சேவையில் உள்ளோர் குறிப்பிட்ட காலத்தின் பின்பும், மற்றும் புதிய நியமனங்களில் கட்டாயமாக இரண்டு மொழித் தேர்வும் சித்தி அடைந்து இருக்க வேண்டும். இரண்டு மொழி அறிவற்ற ஒருவரின் நியமனம் உரிமை அல்லது நியமனத்தில் இருந்து விலக்கும் உரிமை சட்ட ரீதியானது. இதை கால இடைவெளியில் அமுல்படுத்த வேண்டும். ஏற்கனவேயுள்ள முதியவர்களுக்கு சலுகையும், இரண்டாவது மொழியை பாவிக்கும் திறன் பெற்றவர்களுக்கு ஊக்கத் தொகையாக விசேட படியும் வழங்க வேண்டும். இரண்டாவது மொழியின் ஆற்றலை மூன்று வகையில், இதை நெகிழ்சி போக்காக கையாளவேண்டும் 1.இலக்கண ரீதியான முழுமையான மொழி அறிவு. 2. இரண்டாவது மொழி மூலம் பேசும் அறிவு. 3. எழுதவும் பேசவும் திறன் கொண்ட அறிவு. இந்த அடிப்படையில், சலுகை அடிப்படையில் இதை இனம் காண்பது அவசியம்

    இது மத்திய மாநில அரசின் அனைத்து அரச துறையிலும் இது கட்டாயம் கையாள வேண்டும்.

15. இன ரீதியான, மத ரீதியான இழிவாடல்கள், நடத்தைகள் அனைத்தும் சட்டத்தின் முன் குற்றமாக பிரகடனம் செய்து, தண்டனைச் சட்டம் உருவாக்கப்பட வேண்டும். சாதிய ரீதியான குற்றங்களைப் போன்று இவை அடையாளம் காணவேண்டும்

இவைகள் குறிப்பிடத்தக்க சில. இவைகளில் உள்ள தப்பபிராயங்களை களைய, கால அவகாசத்தை அடிப்படையாக கொண்டு நடைமுறைக்குரிய ஒன்றாக மாற்றுவதன் மூலம், குறைந்தபட்சம் இனங்களுக்கு இடையில் உயர்ந்த ஜனநாயக பன்முகத் தன்மையை உருவாக்க முடியும்.

இவைகளை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைக்கான அரசியல் அமைப்புச் சட்டத்தை புதிதாக வரைய வேண்டும். இது மட்டும்



படிப்பகம்

www.padippakam.com



தான், பிரச்சனையை குறைந்தபட்சம் தீர்க்கும. இல்லாத அனைத்தும் மறுபடியும் மறுபடியும், இதை முன்னுக்கு கொண்டுவரும்.

***24.2.2007***



படிப்பகம்

www.padippakam.com





படிப்பகம்

www.padippakam.com

# பி. இரயாகரன் - இரக்கமற்ற கொலைகளின் அரசியலும், மனித அவலங்களும்

## ஆசிரியரின் ஏனைய நூல்கள்












இணையத்தளம் :
www.tamilcircle.net

படிப்பகம்